2793

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXV NO: 1 and 2

April 10th and 11. 1984

(C)

D 1
V211, 31 N84
1.84.65.1&2;1
136254

D

V211,31 'N84

N84.65.1 ?2;31

136254

சென்னை-600 009.

உள்ளடக்கம்.

பக்கங்கள்

10—4—1984.

| | |
|---|---|
| (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i–iii |
| (ஆ) Personnel of the Government of Tamil Nadu. | V–Vi |
| (இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | Vii |
| (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் .. .. .. — .. | iX–XVi |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் ... ... .. | 1–32 |
| 2. தகவல் கோரல் — | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 33–34 |
| (ஆ) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்காமை .. .. .. | 34 |
| (இ) கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் .. | 35 |
| (ஈ) கும்பகோணத்தில் காலரா .. .. | 35–36 |
| 3. கவன ஈர்ப்பு — | |
| அம்பத்தூர் நகரியத்தில் உள்ள இடுகாடுகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பது .. .. | 36–39 |
| 4. அரசினர் தீர்மானங்கள் : | |
| (அ) தமிழ்நாடு நில மேம்பாடு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல் .. .. .. | 39–40 |
| (ஆ) விதி 31ஐத் தளர்த்தல் .. .. | |
| 5. அறிவிப்பு : | |
| தமிழ்நாடு நில மேம்பாடு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல் .. .. .. .. | 40 |
| 6. வரவு-செலவுத் திட்டம், 1984-85-வாக்கெடுப்பு: (தொடர்ச்சி) | |
| கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் .. .. .. .. | 41–119 |
| மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ... | 41,62,65, 118–119 |

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. ந. சிவஞானம் .. .. .. | 42–47 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன் .. .. | 47–52 |
| திரு. ஜே. எஸ். இராசு .. .. .. | 52–69 |
| திரு. வி. வி. சுவாமிநாதன் .. .. .. | 69–77 |
| திரு. எம். செல்லமுத்து .. .. .. | 77–83 |
| திரு. சி. கணேசன் .. .. .. | 83–89 |
| திரு. பொ. உத்திராபதி .. .. .. | 89–95 |
| திரு. செ. செம்மலை .. .. .. | 96–100 |
| திரு. ப. நெடுமாறன் .. .. .. | 100–110 |
| திரு. இல. பலராமன் .. .. .. | 110–118 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 120–121 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு–எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம். மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ் சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி குடிசை மாற்றுவாரியம் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு, (தொழில் துறை அமைச்சர்) — பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என் இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்,

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.



2793

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் வதுது, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister)-Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Developement Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education) Education, including Technical Education, Official Language

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) - Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) - Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S.RAGHAVANANDHAM(Minister for Labour) Labour, Housing Slum Clearance Board Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)- Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)- Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidas Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Polluion Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)- Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) Fisheries.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

**பேரவைத் துணைத் தலைவர்.**

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
2. திரு. மா. சின்னராசு
3. திருமதி. ம. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்கள்.**

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

**குழு அலுவலர்.**

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜீனால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.

**எஸ்டேட் அலுவலர்.**

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.**

திரு. பி. கோதண்டராமன்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன், பி.லிட்.

**தலைமை நிருபர்.**

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல்.பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. இ. | நாட்ராம்பள்ளி |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ |
| 18 | ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்–2 |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 | ஆலூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 25 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ வ. |
| 26 | இராசாராம், திரு. க | பனமரத்துப்பட்டி |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ) |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 30 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 33 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 34 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 39 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40 இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதா கிருஷ்ண நகர் |
| 41 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43 இளையபெருமாள், திரு. எல். | கீழும்பூர் (செ.வ.) |
| 44 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி செ.வ.) |
| 48 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 51 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 52 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 56 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57 கருப்பையா, திரு இரா. | குளித்தலை |
| 58 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 59 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 60 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62 கலைஅரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஜி. | காங்கேயம் |
| 65 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66 கிருட்டினமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிகுப்பம் |
| 68 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்–1 |
| 69 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 71 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 72 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73 குமரி அனந்தன், திரு | திருவொற்றியூர் |
| 74 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 81 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83 கோவைத்தம்பி திரு | பேரூர் |
| 8 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ. வ.) |
| 85 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 86 சட்டநாதகரையாளர், திரு. கி. | தென்காசி |
| 87 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 88 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டனம் |
| 93 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 98 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 | சுப்பிரமணியன், திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவ |
| 116 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 119 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 121 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 128 | சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 | சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா. |
| 142 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 | துரைராமசாமி, திரு. . | வெள்ளக்கோவில் |
| 147 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ வ.) |
| 148 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 150 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 | நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர்(செ.வ.) |
| 176 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184 | பெருமாள, திரு. ரா. கு. | விளாத்திகுளம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ). |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை(செ.வ. |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 214 | விஜயசாரதி, திரு. எம்.. | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்
7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984 ஏப்ரல் 10, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 28, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருவண்ணாமலைப் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம்.

*535—(*வினா எண் 17627)*—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலைப் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். தமிழ்நாட்டில் வட ஆற்காடு மாவட்டம் மின் இணைப்புப் பெற்று இறவைப் பாசனம் தரக்கூடிய ஒரு பெரிய மாவட்டம். அங்கு மின் இணைப்புப் பெறுவதற்கு 90 நாள் நோட்டீஸில் பல விவசாயிகள் மோட்டார்கள் வாங்கி வைத்து விட்டு 6, 7 ஆண்டு காலமாக திண்ணையில் மோட்டார்கள் இருக்கின்றன. அவைகளுக்கு உடனடியாக சர்வீஸ் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரியும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அப்பேர்ப்பட்ட 90 நாள் நோட்டீஸுக்கு நிலுவையில் உள்ள மோட்டார்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. சாதாரண நடவடிக்கைகளிலேயே அதிகமாக தட்டிக் கொண்டு போகின்ற திருவண்ணாமலை திட்டத்திற்கு துரிதமான நடவடிக்கை வேறு எதற்கு எடுப்பானேன் என்ற வகையில் துரிதமான நடவடிக்கை எதுவும் இல்லை என்று குறிப்பிட்டேன். இந்த ஆண்டு நாம் கொடுத்து இருக்கிற மின் இணைப்புகள் 17,489. இதில் 3,262 மின் இணைப்புகள் திருவண்ணாமலை மின் திட்டத்திற்கு வழங்கப் பட்டுள்ளன. அதாவது 31-3-1976க்கு முன் வரை தேங்கி யுள்ள மின் இணைப்புகளின் எண்ணிக்கை வெறும் 204 தான்.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர்-திருவண்ணாமலை சிஸ்டத்தில் அதிக அளவுக்கு மின் இணைப்புகள் கோரி மனுக்கள் தேங்கியுள்ளன. இதை நீக்குகின்ற வகையில் தமிழகம் முழுவதற்கும் ஆண்டுக்கு 50 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மின் திட்டத்திற்கு இப்போது இருக்கின்ற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 81,150. வேலூர் மின் திட்டத்திற்கு இப்போதிருக்கின்ற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 79,663 வேறு எந்த மாவட்டத்திலும் இந்த அளவுக்குக் கிடையாது. இந்த இரண்டு திட்டங்களைச் சேர்த்தாலே கிட்டத்தட்ட 1 லட்சத்து 60 ஆயிரம் பம்பு செட்டுகள் அங்குள்ளன. ஆண்டுக்கு 50 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கொடுப்பது பெரியது அல்ல. அந்த அளவுக்கு நீர் வளம் தமிழகத்தில் கிடையாது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு பெறுவதற்குரிய மேட்டீரியல்ஸ், உதிரி பாகங்கள் எல்லாம் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் தான் விரைவாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு இயலவில்லை என்று அந்தபகுதியில் உள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு தேவையான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் சொல்வதை எல்லாம் நம்ப வேண்டும் என்பது அல்ல. நான் சொல்வதை நம்பினால் போதும். திருவண்ணாமலை மின் திட்டத்திற்கு ஏற்கனவே ஏராளமாக வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதுதான் உண்மை.





திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-வேலூர் சிஸ்டத்தில் 1976-க்கு பிறகு மின் இணைப்புகள் கொடுக்காமல் இருப்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா ? சென்ற ஆண்டு வறட்சியை முன்னிட்டு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதா ? (குறுக்கீடு) வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை-வேலூர் சிஸ்டத்தில் தற்காலிகமாக மின் இணைப்புக் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ? 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் அந்தப் பகுதிகளில் இணைப்புகள் கோரியுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து துரிதமாக ஏழை, எளிய விவசாயிகளுக்குப் பலன் அளிக்கின்ற வகையில் மீண்டும் மின் இணைப்புத் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மின்னிணைப்பு கொடுப்பது இன்னும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பெறவில்லை. எந்த அளவிற்குத் தரப்பட வேண்டுமோ அந்த அளவிற்குத் தரப்பட்டுத்தான் வருகிறது. ஆனால், மனுக்களின் எண்ணிக்கை மலை போல் தேங்கிக்கிடக்கின்றன. அது தான் நிலைமை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுப்பதைப் பொறுத்த வரையிலே, வடஆற்காடு மாவட்டத்திற்கு மூவாயிரத்திற்கும் அதிகமாக சமீபத்தில் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்படி மின்னிணைப்பு கொடுப்பதற்கு எந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் ? முன்பெல்லாம், ஒவ்வொரு மாவட்டத்திலும் மனுக் கொடுத்தவர்களின் சீனியாரிட்டி அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது அதற்கு மாறாக வேறு ஏதாவது முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? மனுச் செய்திருப்பவர்களில் எந்த ஆண்டு வரையில் மனுச்செய்தவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது ? எந்த ஆண்டு வரையில் மனுச் செய்தவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது ? அந்தந்த மாவட்டத்திலேயும் மனுக் கொடுத்தவர்களின் சீனியாரிட்டி அடிப்படையில் வரிசையாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, 31-3-1976-க்கு முன் உள்ள மனுக்களுக்கு சீனியாரிட்டிபடி— முறைவைப்புப்படி மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுதான் பொதுவான கொள்கை. ஆனால், அதே நேரத்தில் கிலன்போட்டு தயாராக இருக்கின்ற மின் இணைப்புக்களுக்கு மின்சாரம் கொடுக்கும்படி சொன்னோம். அந்த வகையில்தான் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள்
ஏற்கனவே திருவண்ணாமலையில், 90 நாள் நோட்டீசிலே, மோட்
டார் வாங்கி வைத்திருப்பவர்களுக்குக் கொடுப்பதற்காகத் தனி
அதிகாரியை நியமித்திருப்பதாக இந்தப் பேரவையிலே ஒருமுறை
சொல்லியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் தற்போது எடுக்கப்
பட்டு விட்டார்களா ? மீயர் சர்வீஸ் கொடுக்கப்பட்டு வந்தது ?
அதை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிகிறது. அதைக் கொடுப்
பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, சிறப்பான தனி டிவிஷன் இன்னும் இயங்குகிறது,
நிறுத்தி வைக்கப்படவில்லை. மீயர் சர்வீஸ் கொடுப்பதில்
பல புகார்கள் வந்ததால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே,
நீர்வளம் இல்லாத காரணத்தினால் மின் பற்றாக்குறை இருப்
பதால் இணைப்பு தரப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு
அமைச்சரவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு
அடுத்தாற்போல் வடாற்காடு மாவட்டம்தான் நெல் உற்பத்தி
யைச் செய்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் பம்பு செட்டுகள்
மூலம் விவசாயிகள் நெல் உற்பத்தியைச் செய்கிறார்கள். அப்
படிப்பட்ட மாவட்டத்திற்கு, அனல் மின் நிலையங்களிலிருந்து
தனிச் சலுகை கொடுத்து அதிக மின்சாரத்தை வழங்குவதற்கு
அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

ம ண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
நான் குறிப்பிட்டது பொதுவான நிலைமை. அதாவது, தமிழகத்
திலே உள்ள நிலத்தடி நீரை வெளியே எடுத்து, இப்பொழுது
உள்ள எல்லா மனுக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றால்—
இப்பொழுது பத்து இலட்சம் பம்பு செட்டுகள் இயங்கிக்கொண்
டிருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்க வேண்டும்.—
நம்மிடத்தில் சுமார் 4 இலட்சம் மனுக்கள் இருக்கின்றன. அவை
எல்லாவற்றிற்கும் மின்னிணைப்பு கொடுப்பதற்காக நிலத்தடி
நீரை நாம் பயன்படுத்திவிட்டால் அடுத்த தலைமுறைக்கு நாம்
ஒரு பாலைவனத்தை விட்டுவிட்டுச் சென்றுவிடக் கூடாது.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை
சிஸ்டத்தில் சுமார் 81,000 பம்புசெட்டுகளுக்கும், வேலூர் சிஸ்டத்
தில் சுமார் 79,000 பம்பு செட்டுகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்
கின்ற நேரத்தில், வேலூர் சிஸ்டத்தைப் பொறுத்தவரைக்கும்
குடியாத்தம் பகுதியில் பல்லாயிரக் கணக்கான மனுக்கள்
தேங்கிக் கிடக்கின்றன. அந்த மனுதாரர்கள் நிலத்தடி நீர்
பற்றிய சான்றிதழ் பெறுவதில் ஏற்படுகின்ற சிக்கலால் இவ்வாறு
அந்த மனுக்கள் தேங்கியிருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட
சான்றிதழ் கேட்பதை நீக்கி உடனடியாக மின்சாரம் கொடுக்க ஏற்
பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, நிலத்தடி நீர் சம்பந்தமான நிபந்தனையை நீக்கினால்
என்னவாகும் என்று இப்பொழுதுதான் பதில் சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லு
கின்றபொழுது சுமார் 4 இலட்சம் மனுக்களுக்கு மின்னிணைப்பு
கொடுக்க வேண்டியிருப்பதாகச் சொன்னார்கள். நிலத்தடி நீரைப்
பற்றிய விஷயமெல்லாம் சிறு சிறு விவசாயிகளுக்குத் தெரியாத
காரணத்தினால் அவர்கள் மேலும் மேலும் மெஷின்களையும்,
இன்ஜின்களையும் வாங்கி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
அரசாங்கம்தான் தங்களுக்கு இன்னும் மின்னிணைப்பு கொடுக்க
வில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்
களுக்கு, நிலத்தடி நீர் கிடைக்காத காரணத்தால் நாங்கள் மின்
சாரம் கொடுக்க மாட்டோம் என்று உறுதியாகத் சொல்வதற்கு
யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இர.மச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, ஜனநாயகத்தில், எது எல்லாம் சரி என்று படுகிறதோ
அதையெல்லாம் நிறைவேற்ற எளிதில் முடிவதில்லை.

ஆந்திர மாநிலத்திலிருந்து மின்சாரம் பெறும் திட்டம்.

536— (*வினா எண் 18765) திரு. என். பழனிவேல் மற்றும்
திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:— மாண்புமிகு
மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) ஆந்திர மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற அரசிடம்
செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ)
ஆந்திர மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற அம் மாநிலத்தோடு
தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தின் மின்சாரப் பற்றாக்
குறையைச் சரிக்கட்டுவதற்காக, ஆந்திர மாநிலத்திலிருந்து அரசு
மின்சாரம் பெற முயற்சிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்
கள். அந்த முயற்சியின் மூலம் இதுவரையில் தமிழகத்திற்கு
எவ்வளவு மின்சாரம் பெறப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பாரா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்
கெனவே அவர்கள் சொந்த உற்பத்தியிலிருந்து கேட்டோம்.
ஆனால் இப்போது தென்னகத்திற்குப் பொதுவாக உள்ள

இராமகுண்டம் என்ற அந்த பேரனல் மின் நிலையம் உற்பத்தியைத் துவங்கி இருக்கின்றது. அந்தத் திட்டம் மார்ச் மாதத்திலிருந்து வணிக ரீதியில் இயங்கி வருகின்றது. அதில் எல்லா தென்னக மாநிலங்களுக்கும் பங்குண்டு. அந்த பங்கைத் தரவேண்டும் என்று கேட்கிறோம். மைய அரசுக்கும் இதுபற்றி கடிதம் எழுதி இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, இராமகுண்டம் ஸ்டேஷனைப் பொறுத்தவரையில் தென்னகத்தில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் பங்கு உண்டு என்று சொன்னார்கள். மத்திய அரசிடம் கேட்கப்பட்டது என்றும் சொன்னார்கள். அங்கிருந்து கொண்டுவருவதற்கு ஏதாவது தடங்கல் இருக்கின்றதா? மத்திய அரசிடமோ அல்லது ஆந்திர மாநில அரசிடமோ ஏதாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? அப்படி என்றால் அதனுடைய உண்மை என்ன? விவரம் என்ன? நம்முடைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோல இராமகுண்டத்தில் மின்சாரம் உற்பத்தி துவங்கப்பட்டு விட்டது. ஆனால் அதை மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு போவதைப் பொறுத்தவரையில் ட்ரான்ஸ்மிஷன் லைன்களை நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் இன்னும் போட்டு முடிக்கவில்லை. அதற்கு 2 வருஷங்கள் ஆகும் என்கிறார்கள். ஆந்திர மாநிலம் தன்னுடைய லைன் மூலம்தான் அந்த மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்கு தரவேண்டும். ஆனால் ஆந்திரா மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்களால் முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இக்கட்டான நிலையில்தான் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதி உரிய பங்கைப் பெற முயற்சி எடுத்து வருகிறோம்.

### கொல்லிமலையில் மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.

537—(*வினா எண். 21750) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் 20 K.V. மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இந்தத் திட்டம் மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.



(ஆ) இத் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப்பணிகள் மின் வாரியத்தால் மேற் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது. இது முடிந்தவுடன் விரிவான திட்ட அறிக்கை மைய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இரண்டாண்டுகளாக ஆய்வுப்பணியில் இருக்கின்றது. எனவே அதை விரைவாக மத்திய அரசுக்கு அனுப்பி அங்கே உள்ள மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியில் இந்தத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆய்வுப்பணிக்கான வேலைகளைச் செய்வதற்கு வன இலாக்கா இப்போதுதான் அனுமதி அளித்தது. ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இரண்டாண்டுகள் பிடிக்கும் அதற்குப் பிறகுதான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

### தமிழில் தீர்ப்பு எழுதும் விதியிலிருந்து விலக்களிக்கக் கோரியுள்ள நீதிபதிகள்.

413—(*வினா எண் 14766) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் தீர்ப்பு எழுதும் விதியிலிருந்து தங்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று சில நீதிபதிகள் கோரியுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். (ஆ) 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 39/1956) 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆட்சி மொழி (திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு) 4-பிரிவின் இரண்டாவது வரம்புரையின் கீழ், உரிமை வழக்குகளில் ஆங்கிலத்தில் தீர்ப்புகளை எழுதுவதற்கு 29 மாவட்ட நீதிபதிகளுக்கும், 39 சார்நிலை நீதிபதிகளுக்கும் 38 மாவட்ட முன்சிப்புகளுக்கும் அவர்களது வேண்டுகோள்களின் பேரில் சென்னை உயர்நீதிமன்றம் 31—12—1983 வரையிலும் அனுமதி வழங்கியிருக்கின்றது. இப்போது உரிமை வழக்குகளில் 31-12-1984 வரை அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும் 5 மாவட்ட நீதிபதிகளுக்கும், 6 சார்நிலை நீதிபதிகளுக்கும் மாவட்ட முன்சிப் பதவி நிலையிலுள்ள ஒரு பெருநகர்க் குற்றவியல் நடுவருக்கும், அவர்களது வேண்டுகோள்களின் பேரில், 31-7-1983 வரையிலும் அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இப்போது குற்ற வழக்குகளில் 1984 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்

பாயங்களைப் பொறுத்தவரையில் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் பணியாற்றுகின்ற 4 துறை உறுப்பினர்களுக்கு, மேற்சொன்ன வரம்புவரையின் கீழ் தீர்ப்புகளையும் சட்டங்களையும் ஆங்கிலத்தில் எழுதுவதற்கு 31—12—1983 வரையிலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருவாய்த்துறை நீதிமன்றங்களைப் பொறுத்த அளவில் இது குறித்து விலக்களிக்கக் கோரி; தலைமை வகிக்கின்ற அலுவலர்களிடமிருந்து வேண்டுகோள் எதுவும் வரப்பெறவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்புக்களைத் தமிழில் எழுதுவதற்கு வசதியாக மைய அரசினுடைய சட்டங்களையும் மற்ற மாநில அரசின் சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய பணியினைச் செய்ய வேண்டியதன் காரணத்தால் தான் காலதாமதம் ஆகின்றது என்று சொல்லப்படுகின்றது. இதுவரையில் எத்தனை மாநிலங்களின் சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகமாக வந்திருக்கின்றன? அதேபோல் மைய அரசின் சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டு எத்தனை புத்தகமாக வந்திருக்கின்றன? இதை விரைவுபடுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. மூலக் கேள்வி தமிழிலே தீர்ப்பு எழுதுகின்ற கால அவகாசத்தை நீட்டித் தர வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலே எத்தனை பேர் அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்பது பற்றியது. தமிழிலே வந்திருக்கிற சட்டப் புத்தகங்கள் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவரது கேள்விகள் முதலில் எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ வண்டி.

538—(*வினா எண் 15462) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவ வண்டி பல மாதங்களாகப் பழுதாகியுள்ளதை அரசு அறியுமா?



(ஆ) அதை உடனடியாக சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) சீர் செய்யப்பட்டு தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கும்பகோணம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள்பிரிவுக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

539—(*வினா எண். 17087)—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவுக்குப் புதிய கட்டிடம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ). தற்போது இருக்கும் அரசு மருத்துவமனை கட்டிடத்திலேயே தனியாக குழந்தைகள் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு, 1983 ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. எனவே இதற்கான தனிக் கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, எங்களுடைய ஊர் அரசு மருத்துவ மனைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடிய குழந்தைகள் பிரிவுக்கானகட்டிடம் எப்பொழுது ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டதோ அப்பொழுது கட்டப்பட்டது. மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அவர்களும் அது பற்றி ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, தேவை இல்லை என்று சொல்கின்ற பொழுது ஒரு தலைபட்சமாக, புறக்கணிக்கப்படுகின்றது என்று நான் கருதுகிறேன். அதற்காக நான் வருந்துகிறேன். ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து, 50 குழந்தைகளாவது படுக்கின்ற வகையில் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் குழந்தைகளுக்காக, 50 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக வெளியிடப்பட்ட அரசாணை பற்றிய விவரம் வருமாறு :

G.O, Ms. No, 1310, Health, dated 6-8-1983 Addtional staff, Assist‑nt surgeons 8, Head Nurses 8, Nurses 6, etc.

54 பேர்களைக் கொண்ட அடிஷனல் ஸ்டாப் நியமிக்க உத்தரவு போட்டிருக்கிறோம். அந்தக் கட்டிடத்திற்கு

Recurring xpenditure Rs. 3. 46 Lakhs Non recurring expend ture Rs. 2.16 Lakhs. அதற்கு நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்தத் தொகையை நாம் ஒதுக்கியிருக்கிறோம். இப்பொழுது 245 ஆகக் குழந்தைகள் மருத்துவப் படுக்கைகளை நாம் உயர்த்தியிருக்கிறோம்.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அரசு மருத்துவ மனையினுடைய இன்-பேஷன்ட்ஸ், அவுட்-பேஷன்ட்ஸ், 1,300 பேர்களுக்கு மேலாகும். 245 படுக்கை வசதி நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். இவ்வளவு இன்-பேஷன்ட்ஸ் மற்றும் அவுட்-பேஷன்ட்ஸ் இருந்தும் அந்தக் கட்டிடத்தை இன்னும் திறக்கவில்லை. ஆகவே, குழந்தைகள் பிரிவில் நாச்சுரல் கூல் ஏற்படுகிற வகையிலே, இருக்கிற வெப்பத்தை குறைக்க, ஏர்-கன்டிஷன் செய்து கொடுக்கக் கூடிய அளவு வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், வெகு விரைவில் நாம் திறக்க இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் பாராட்டியாக வேண்டும். நிறைய படுக்கைகளுக்கு எல்லாம் அங்கே நல்ல முறையிலே வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள் தன்னுடைய சொந்த மூயற்சியாலே. அதேமாதிரி, சொந்த முயற்சியிலே ஏர்-கண்டிஷன் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகையில் கும்பகோணத்தில் காலரா நோயினால் 10 குழந்தைகள் இறந்து இருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பக்கீர் முகமது கேட்ட கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது. 50 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படுமா என்று கேட்டார்கள். அதை விஸ்தரிப்பதன் மூலம் இப்படிப்பட்ட நிலைமையைச் சமாளிக்கச் சௌகரியமாக இருக்கும். காலராவை பொறுத்த வரையில் தண்ணீர் குழாய்க்குப் பக்கத்திலே "சோக்ட் வாட்டர்" இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடித்து வாந்தியும் பேதியும் ஆகியிருக்கிறது.



(முற்பகல் 9-20)

அதிலே எத்தனை கேசஸ் பாசிட்டிவ், எத்தனை கேசஸ் நெகட்டிவ் என்று நாம் பார்ப்பதற்காக உடனடியாக தண்ணீர் பரிசோதனைக்கு அனுப்பி இருக்கிறோம். உடனடியாக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசரை அனுப்பி இருக்கிறோம். நேற்றைக்கு இரவு கூட நம்முடைய மாண்புமிகு குடந்தை இராதா அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு இது பற்றி நாங்கள் விவாதித்து இருக்கிறோம். உயர் மட்ட அதிகாரிகளை அனுப்ப ஏற்பாடு செய்து இருக்கிறோம். இன்று காலையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பக்கீர் முகமது அவர்களும், என். எஸ். வி. சித்தன் அவர்களும் இது பற்றி என்னிடம் சொன்னார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாடு மருத்துவத் துறையில் சிவில் சர்ஜன் அந்தஸ்தில் பணி புரிபவர்கள் எண்ணிக்கை.**

**540—(* வினா எண் 17424)—திரு. க. பாரமலை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருத்துவத் துறையில் (மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள்) சிவில் சர்ஜன்ஸ் (SivilSurgeons அந்தஸ்தில் பணி புரிபவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்வர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) 567 பேர்கள்.

(ஆ) 24 பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர். ஒருவர் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது 567 பேர்கள் என்றும், 24 பேர்கள் என்றும் சொன்னார்கள். கிட்டத்தட்ட 90 பேர்களுக்கு மேலே கொடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தும் கொடுக்கப்படவில்லை. நேற்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு 18 சதவீதம் கிடைக்காவிட்டால், கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு ஆதி திராவிடர், மலைவாழ் மக்களில் பலர் டாக்டர்களாகி எம். டி., எம். எஸ்., படித்து வேலையற்று இருக்கிற நிலைமை இருக்கிறபோது ஏன் அவர்களுக்கு உடனடி

யாக உத்தியோகம் கொடுக்கப்படவில்லை? அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில் ரெக்ரூட்மென்ட் செய்கிறபோது சர்வீஸ் கமிஷன் மூலமாக 18 சதவீதம் திட்டவட்டமாக ஒதுக்கிவைத்து ரெக்ரூட்மென்ட் செய்துகொண்டு இருக்கிறோம். சிவில் சர்ஜன்ஸ் போஸ்ட்டை பொறுத்த வரையில் புரொமோஷன் போஸ்ட்டாக இருக்கிற காரணத்தால் அவர்கள் புரொமோஷனில் வர வேண்டியிருக்கிறது. அதிலே கூட நாம் ஒரு ஆணை இட்டிருக்கிறோம். Preference must be given to scheduled castes and scheduled Tribes. என்று நாம் சொல்லி இருக்கிறோம்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் நியமனம் செய்கிறபோது குறிப்பாக ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களில் தான் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்று ஒரு வதந்தியோ அல்லது உண்மை நிலையோ மக்கள் மத்தியில் இருக்கிறது. அப்படியானால் அதைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு நகர்ப்புறங்களில் தலைமை மருத்துவ மனைகளில் நியமனம் வழங்கி அங்கு அவர்கள் பணி புரிவதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தப் புகாருக்கு கொஞ்சம் கூட இடம் கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமானால் நல்ல திறமையான மருத்துவர்கள் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் முக்கியமான இடங்களில், பொறுப்புவாய்ந்த பதவிகளில் அமர்த்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் ஒரே நேரத்தில் இரண்டு டைரக்டர்கள் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆகவே உயர் மட்டப் பதவிகளில் எல்லாம் அவர்களை அமர்த்தி வந்திருக்கிறோம். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் பொறுத்தவரையில் எந்தவிதமான பாகுபாடும் நாம் காட்டவில்லை. எங்கெங்கே வாய்ப்பு கொடுக்க வேண்டுமோ அங்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் சந்தோஷமாக இருந்து வருகிறார்கள்.

**திரு. என். பழனிவேல்: :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் இருக்கிற தாலுக்கா மருத்துவ மனைகளில் எலும்பு முறிவு, குழந்தைகள் மருத்துவம், கண் போன்ற பிரிவுகளுக்கு ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். இதனால் அங்கே வரக்கூடிய நோயாளிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனை கண்டு



காணித்து அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு துறைக்கும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை இந்த ஆண்டில் நியமிப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாகவே மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்ட்ஸ் இல்லாமல் இருந்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நீண்டகாலமாகவே 40, 50 ஆண்டுகளாக இந்த நிலை இருந்துவருகிறது. 20–7–1983 அன்று GO. Ms. No. 1414, Health ஆணை பிறப்பித்து அந்த ஆணை மூலமாக The 45 upgraded posts of Civil Surgeons have been distributed to the 15 district Headquarters Hospitals at the rate of one post for each in the three specialities of Medicine, Surgery, Obstetrics and Gynaecology. என்கிற வகையில் நாம் அதற்காக புதிய உத்தரவை 40, 50 ஆண்டுகளுக்கு பிறகு போட்டிருக்கிறோம். அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். அவர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மா. சின்னராசு: :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் 18 சதவீதம் நிரப்புகிற அளவிற்கு ஆதி திராவிட மக்களிடையே மருத்துவ பட்டதாரிகள் இருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இப்போது இன்னொரு நல்ல செய்தி என்னவென்றால் போஸ்ட் க்ராஜுவேட்ஸ்-ஆக ஏராளமான ஆதிதிராவிட உடன் பிறப்புகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை நாம் நிரப்பிக்கொண்டிருக்கிறோம். அதை முழுமையாக நிரப்புகிற நிலைமை, அதன் நல்ல விளைவு, இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் நமக்குக் கிடைத்துவிடும்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பதில் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 18 சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்யப்படும் போதும் 18 சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இந்த சிவில் சர்ஜன்ஸ் வேலைக்கு தேர்வு பெற தகுதியான ஆண்கள் இல்லை என்ற காரணத்தால் நியமிக்கப்படவில்லையா? 95 பேர்கள் நிரப்பப்படவேண்டிய இடத்தில் 25 பேர்கள் தான் இன்றையதினம் இருக்கிறார்கள். மீதி 70 இடங்கள் அவர்களைக் கொண்டு நிரப்பப்படவுள்ளன. ஆக, இவ்வளவு அதிகப்படியான இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதற்கு விசேஷமான காரணங்கள் ஏதாவது உண்டா என்பதை அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவர் அவர்களே, சிவில் சர்ஜன்ஸ் போஸ்ட்டைப் பொறுத்தவரையில் அது ப்ரொமோஷன் போஸ்ட். அஸிஸ்டண்ட் சிவில் சர்ஜன் பதவியிலிருந்து சிவில் சர்ஜன் பதவிக்கு பதவி உயர்வு மூலம் வரவேண்டும். அதற்கு பி.ஜி. க்வாலிபிக்கேஷன் தேவைப்படுகிறது. சென்ற மூன்று, நான்கு ஆண்டுகளாக நாம் பார்க்கிறோம். பி.ஜி.-க்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். முன்பு ஆள்கள் இல்லாமல் இருந்து இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள். இதன் பலன் விரைவில் நமக்குக் கிட்டிவிடும் என்ற நம்பிக்கையிருக்கிறது. கூடிய விரைவில் வெகு வேகமாக இந்தக் காலியிடங்களில் அவர்களைப் போட்டு அதாவது அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கத் தனியாக இலாக்காவிடத்தில் சொல்லியிருக்கிறோம்.

**திரு. அன்பில் தர்மலிங்கம்** : தலைவர் அவர்களே, மாவட்ட தலைநகரங்களில் தனியார் மருத்துவ மனைகளில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிற காரணத்தால் மாவட்ட தலை நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் நியமிப்பதை விட அந்தந்த தாலுகா மருத்துவமனைகளில் எம்.எஸ்., எம்.டி. பட்டதாரிகளை, நல்ல பயிற்சி பெற்றவர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் சர்ஜிக்கல் பெஸிலிட்டீஸ் இருக்கிறது. இன்னொன்றை நாம் இப்போது நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக ட்ரான்ஸ்பர் ஆப் டெக்னாலஜி, மாவட்ட மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய சிறப்பு மருத்துவ நிபுணர்களை எல்லாம் தாலுகா மருத்துவ மனைகளுக்கு எங்கெங்கு ஆப்பரேஷன் தியேட்டர்கள் சரியாக இருக்கின்றனவோ அங்கெல்லாம் Sp cial operations are conducted here என்ற ஏற்பாட்டைச் செய்து இந்த அதிகாரிகளை அங்கே அனுப்பி அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை, நீண்ட நாட்களாக இல்லாத ஒன்றை பூர்த்தி செய்துகொண்டிருக்கிறோம். அடுத்த கட்டமாக, தாலுகா மருத்துவ மனைகளில் நியமிப்பது பரிசீலிக்கப்படும்.

**மறைமலை நகரில் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.**

541—(*வினா எண். 2162) **திரு. கா. கோபாலகிருஷ்ணன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா**—

(அ) செங்கைக்கு அருகில் உள்ள புதிய நகரமான மறைமலை நகரில் மருத்துவ மனை வசதி ஏற்படுத்தித் தரும் **உத்தேசம் அரசுக்கு உண்டா?**



**(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?**

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை

**திரு. கா. கோபாலகிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, காட்டாங்கொளத்தூர், காட்டுப்பாக்கம், பின்னைக்கரை, கிழக்கரணை, கடலூர் போன்ற கிராமங்களுக்கு மையமாக மறைமலை நகர் அமைந்திருப்பதாலும், தாம்பரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே உள்ள 32 கிலோ மீட்டர் தூரத்தில் வசதியான மருத்துவ மனை இல்லாததாலும் மறைமலை நகர் இப்போது தொழில் துறையில் வளர்ந்து வருவதால் அங்கே நல்ல வசதியானதொரு மருத்துவமனையை அமைக்க அரசாங்கம் முற்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவர் அவர்களே,. நமது பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் இதில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டுள்ளதற்காக என் பாராட்டுதல்கள். மறைமலை நகர் என்ற இடத்தில் ஐந்து க்ரவுண்ட்ஸ் இடம் நமக்காக சீப் அட்மினிஸ்ட்ரேட்டீஸ் ஆபீசர், மெட்ராஸ் மெட்ரோபாலீட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி கொடுக்கிறேன் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸைட் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒரு கட்டடம் கட்டி நம்மிடத்தில் கொடுக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கட்டடம் நமக்குக் கிடைத்த பின் அங்கு மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு முயற்சிக்கலாம்.

(முற்பகல் 9—30)

**திரு. கா. கோபாலகிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முழுமையான மருத்துவமனை ஒன்று அங்கே துவங்கும் வரை. செங்கற்பட்டு மருத்துவமனையின் கிளை மருத்துவமனை ஒன்றை அங்கே ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மருத்துவ மனைக்கும், இந்த இடத்திற்கும் இடையே 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. நந்திவரத்திற்கும் இதற்கும் இடையே 4½ கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆகவே, முழுமையான, நல்ல வகையிலே அங்கே ஒரு மருத்துவமனையை ஆரம்பிப்பது தான் பயனுள்ளதாக இருக்கும். இப்போது அங்கே ஒரு கிளை மருத்துவமனை ஆரம்பிப்பதாக இருந்தாலும், அதற்குக் கட்டிடம் தேவை, அங்குள்ள சீப் அட்மினிட்ரேடிவ் ஆபிசர் அவர்கள் இந்த இடத்திலே கட்டிடமாகத் கொடுப்பதற்கு முன் வந்துள்ள காரணத்தினால், அதை முழுமையாக நல்ல வகையிலே ஒரு மருத்துவ மனையாக அமைத்தால் நன்றாக இருக்கும்.

### ரேடியோ, டி. வி. ரிசீவர்கள் தொலைபேசி உதிரி பாகங்கள் முதலானவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டம்.

414 — (*வினா எண். 19002)திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ரேடியோ, டி. வி. ரிசீவர்கள், தொலைபேசி உதிரி பாகங்கள் சம்பந்தப்பட்ட பத்து தொழில்களை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(அ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அவை எங்கு ஆரம்பிக்கப்படும்?

(ஈ) அதன் மூலதனம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) முதல் (ஈ) வரை : தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்திற்கு பின் வரும் தொழில் திட்டங்களைச் செயற்படுத்த மத்திய அரசு அனுமதி கடிதங்களை (Letter of inteut) வழங்கியுள்ளது :—

| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவினம். (2) (ரூபாய் இலட்சத்தில்) | இடம். (3) |
|---|---|---|
| மின்னணுக் கைக்கடிகாரங்கள். | 19.00 | சென்னை. |
| அலுமினியம் எலக்ராலிட்டிக் கெப்பாசிட்டர்கள். | 181.55 | ஒசூர் (தர்மபுரி மாவட்டம்.) |
| மெட்டல்/கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள் | 55.00 | பொட்டப் பாளையம் (இராமநாத புரம் மாவட்டம்). |
| இருவழி வானொலி தொலைத் தொடர்பு சாதனங்கள். | 179.00 | சென்னை. |
| ஒலி பெருக்கி பாகங்கள் .. | 182.00 | சென்னை. |
| தொலை பேசி கருவிகள் .. | 600.00 | இடம் நிர்ண யிக்கப்பட வில்லை. |
| சிறு கணக்கிடு பொறிகள் மற்றும் டெர்மினல்கள். | 100.00 | ஷை |
| எக்ஸ்ரே கருவிகள் .. .. | 60.00 | ஷை |
| பிரிண்டட் சர்கியூட் போர்டு கள். | 155.00 | ஷை |





இவைகளில் மின்னணுக் கைக்கடிகாரங்கள், அலுமினிய எலக்ட்ராலிடிக் கெப்பாசிட்டர் மற்றும் பிலிம் ரெசிஸ்டர்கள் தயாரிப்பு தொழில் திட்டங்கள் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதர தொழில் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்நிறுவனம் எடுத்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன, எவ்வளவு முதலீடுகள் போடப்பட்டுள்ளது என்பதைப் பற்றி மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே சில தொழில்களுக்கு இன்னும் இடம் தேர்வு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில், தெற்குப் பகுதியில், போளூர், திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளில் எந்தவிதமான தொழில் களும் இல்லை. அந்தப் பகுதிகளில் இடம் தேர்வு செய்யப்பட்டு, தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவிலே ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழில்களுக்கு தான் இடம் குறிப்பி வில்லை! நிர்ணயிக்கப்பட்ட, குறிப்பிட்ட இந்த 4 தொழி களுக்கும் பொருத்தமான இடத்தை அந்த நிறுவனம் தேடி வரு கிறது. பொருத்தமான இடத்தை அரசு தேர்ந்தெடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அமைச், சர் அவர்களிடமிருந்து தெரிந்துக் கொள்ள விரும்புவது, வட ஆற்காடு மாவட்டத்தில், வடக்குப் பகுதியில் இராணிப்பேட்டை போன்ற பகுதியில் சில தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், தெற்குப் பகுதியிலுள்ள எல்லா தாலுக்காக்களிலும் தொழில்கள் இல்லாமல் இருக்கின்றன. இதைப்பற்றி நாங்கள் அமைச்சர் அவர்களிடத்திலே அடிக்கடி சொல்லும்போது போளூரில் சர்க்கரை ஆலையைத் துவங்க வேண்டுமென்றும் சொல்லியிருக் கிறோம். எனவே அப்படிப்பட்ட அந்த பின் தங்கிய பகுதிகளில், வேண்டுமானால் வேண்டிய இடங்களை அந்தப் பகுதிகளில் கொடுப்பதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளில் மனமுவந்து தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் என்னுடைய பதில் என்னவென்றால், பொருத்தமான இடத்தை அந்தநிறுவனம் தேடிக் கொண்டிருக்கிறது. அப்படி அந்த நிறுவனம், தமிழ்நாடு

எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் எந்த இடத்தை நிர்ணயிக்கின்கின்றதோ, அந்த இடத்தில் தொழில் துவங்கப்படும். இப்போது இந்த இடம் என்று உத்திரவாதமாகச் சொல்ல முடியாது.

**திரு. மி வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேடியோ, டி. வி. ரீசீவர்கள், தொலைபேசி உதிரி பாகங்கள் போன்ற நுண்ணிய பாகங்களைத் தயாரிப்பதோடு மட்டுமல்லாமல், மேலும் சிறப்புத் தேடித் தரும் வகையில் வெளி நாட்டினர் தமிழ்நாட்டில் இருந்து வாங்கிச் செல்லக்கூடிய முறையில், மாருதி கார் திட்டத்தைப் போல், ஜப்பான் கொலாபரேஷன் மூலம் தொழில்களைத் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி எலக்ட்ரானிக் சம்பந்தமான தொழில் துவங்குவதைப் பற்றியதாகும். இவர் கேட்பது இன்ஜினீயரிங் தொழில் சம்பந்தமானது.

**திரு. இல. பலராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தொழில்களைப் பரவலாக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு இருந்தாலும், தற்போது அரசு அறிவித்துள்ள புதிய மாவட்டங்களில், மிகவும்பின் தங்கிய நிலையில் உள்ள மாவட்டங்களில், தொழில்களைத் தொடங்க முன்னுரிமை அளிக்க கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு, அவைகளைத் தொடங்க முன்வருமா? அந்த முறையில் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அமைக்கப்படவிருக்கும் சம்புவராயர் மாவட்டத்தில் தொழில்களே இல்லாத காரணத்தால், அந்த குறையைப் போக்கும் வகையில, அந்த மாவட்டத்தில் புதிய தொழில்களைத் தொடங்க அரசு முன்வருமா? அந்த வகையில் போளூர் தாலுக்காவில் 300 ஏக்கர் நிலம் ரயில்வே லைனுக்கும், நெடுஞ்சாலைக்கும் மத்தியில் இருப்பதால், அந்தப் பகுதியில் இத்தகைய தொழில்களைத் துவங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான கொள்கை முடிவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் கேட்பதைப் போலவே, எல்லா உறுப்பினர்களுக்கும் தங்கள் தங்கள் தொகுதிகளிலே இது சம்பந்தமான தொழில் தொடங்கினால் நல்லது என்று எதிர்பார்ப்பார்கள், எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, இந்தக் கேள்விக்கும் நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த இடம் என்பது இப்போது சொல்ல முடியாது. எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் இடங்களைத் தேர்ந்தெடுக்கப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்குப் பின்னர்தான் அது பற்றி முடிவு செய்யப்படும்.







**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** துணைத் தலைவர் அவர்களே, இடத்தை கேரண்டியாகச் சொல்ல முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் பகுதியில் எந்தத் தொழிலும் கிடையாது. இங்கே இருக்கும் அத்தனை அமைச்சர்களுக்கும் அது தெரியும். ஆகவே, கும்பகோணத்தில் தொழில் தொடங்க ப்ரஃப்பெரன்ஸ் கொடுத்து, இப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, நான் முதலில் இரண்டு உறுப்பினர்களுக்கு அளித்த அந்த பதிலைத்தான் இந்த உறுப்பினரின் கேள்விக்கும் அளிக்க வேண்டும்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.**

415—(*வினா எண். 20019) **திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி உதவியுடன் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதற்கான தொழிற்சாலை புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இல்லை.

**திரு. த. மாரிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்படும் மக்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு வழியில்லை. வறட்சி காலத்திலும், விவசாயம் இல்லாத காலத்திலும், வேறு உபதொழில் செய்வதற்கு அந்த மாவட்டத்தில் வழியில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்பு பயிராகின்ற காரணத்தாலும், நமக்கு காகிதம் தேவைப்படுகிற காரணத்தாலும், அந்தத் தொழிற்சாலையை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு மீண்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உலக வங்கியின் உதவியோடு கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்று திருச்சி மாவட்டம் புகளூரில், சுமார் 200 கோடி ரூபாய் மூலதனத்தில் துவங்கப்பட்டு, இந்த ஆண்டு வருகிற செப்டம்பர் மாதத்தில் இருந்து அங்கே

காகித உற்பத்தி தொடங்க இருக்கிறது. அங்கே அமைக்கப்பட்டுள்ள அந்தத் தொழிற்சாலை இந்தியாவிலேயே பரிட்சார்த்தமான முறையில், ஏறக்குறைய 200 கோடி ரூபாய் மூலதனத்தில், 50,000 டன் செய்தித்தாளும், 40,000 டன் எழுது காகிதத்தாளும் தயாரிக்கும் திறன் கொண்டது. அந்தப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை விரைவில் காகித உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. இதைத் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் காகிதத்தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலிக்கிறபோது, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலிப்பது என்று பிரச்னை இல்லை. இப்போது தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கி காகிதத்தைக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் இப்போது அரசாங்கத்திற்கு இருக்கும் முக்கிய பிரச்னை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–40.)

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவரவர்களே, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை திருச்சி மாவட்டத்தில் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள். அதோடு வேறு எந்தத் தொழிலையும் தொடங்குகின்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அறிவித்தார்கள். தமிழ்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு காகிதம் உற்பத்தி செய்ய இன்னொரு தொழிற்சாலையை தமிழ்நாட்டில் தொடங்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று இந்தக் காகிதத் தொழிற்சாலை தவிர வேறு எந்தத் தொழிற்சாலைகளையும் அரசு ஆரம்பிப்பதாக இல்லை என்று நான் சொல்லவில்லை. கரும்புச் சக்கையை மூலப்பொருளாக கொண்டு புது டெக்னாலஜியில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏறத்தாழ 200 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டு, வருகின்ற செப்டம்பர் மாதத்தில் அது பணியைத் தொடங்க இருக்கிறது. அதைப்போன்ற இன்னொரு தொழிற்சாலையை ஆரம்பிக்கும் திட்டம் இப்போது இல்லை.



### சேலம் உருக்காலைக்கு அருகாமையில் நவீன நகரியம் அமைக்கும் திட்டம்.

416—(*வினா எண். 20500) திரு. சி. கணேசன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைக்கு அருகாமையில் நவீன நகரியம் அமைக்கும் பணி முடிவு பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) சேலம் உருக்காலையின் அருகாமையிலுள்ள நகரியமான மோகன் நகர் 750 குடியிருப்புகளைக் கொண்டுள்ளது. இந்நகரியம் நான்கு வகைப்பட்ட குடியிருப்புகளுடன் தேவையான வசதிகளோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ எல்லா வீடுகளும் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

### செய்யார் வட்டத்தைத் தொழில்துறையில் அபிவிருத்தி செய்யும் திட்டம்.

417—(*வினா எண். 21614) திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் செய்யார் வட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கி இருப்பதால், மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்ய அரசு திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

(ஆ) விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட செய்யார் வட்டத்தின் துரித வளர்ச்சிக்கு உதவுவதற்காக மாநில அரசு இப்பகுதியை பின்தங்கிய பகுதியாக 1979 டிசம்பரில் அறிவித்தது. இதனால் இங்கு துவங்கப்படும் சிறு தொழில்களுக்கு மாநில அரசே தன் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறது. இந்த மானியம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையின் நிரந்தர முதலீட்டில் 15 விழுக்காடு ஆகும். மேலும் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு வங்கிகள் நிதிவசதி செய்கின்றன.

[1984 ஏப்ரல் 10

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம் தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கு அரசு சலுகைகள் தரப்படும், என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்க இப்படி சலுகைகள் இருந்தாலும், அரசோ அல்லது தனியார்களோ அந்தப் பகுதிகளில் தொழில்களைத் தொடங்க ஆலோசனை செய்யப்படுமா? புதிய தொழில்களைத் தொடங்குவதில் அந்த பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? மேலும் செய்யாறு வட்டத்தில் பீங்கான் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. காவி மண், நீலக்கல், பச்சைக்கல், சிவப்புக் கல் போன்ற மூலப் பொருள்கள் நிறைய கிடைக்கின்றன. எனவே அங்கே பீங்கான் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா? தனியார்கள் தொழில் தொடங்குவதற்கு முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவரவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக மத்திய அரசு தமிழ்நாட்டில் 30 தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. அதைப்போன்று மாநில அரசு 34 தாலுக்காக்களை தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காகளாக 1977-க்குப் பின்னால் அறிவித்திருக்கிறது. இப்படி அறிவிக்கப்பட்ட 64 தாலுக்காக்களில் தொழில்களைத் தொடங்கும்போது 15 இட்சம் ரூபாய் வரையில் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு கோடி ரூபாய் வரையில் இன்ட்ரஸ்ட் ஃப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோன் அதாவது வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கப்படுகிறது. அதைப்போன்று தண்ணீர், மின்சாரம் போன்றவற்றிலும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிப்பது, அரசு அங்கே தொழில்களைத் தொடங்குவதற்கு என்று அர்த்தமல்ல. தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட இடங்களில் தனியார்கள் தொழில் தொடங்கும்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளை, ஏற்கனவே அறிவித்ததைப் போன்று, அரசு செய்யும். தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிக்கப்பட்டதில் செய்யாறும் இருக்கிறது என்று கருதுகிறேன். எனவே அங்கே தனியார் தொழில் தொடங்க முன் வந்தாலும் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட சலுகைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்தச் சலுகைகள் தனியார்களுக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். தனியார்கள் தொழில்களைத் தொடங்கும்போது நகரங்களில் தொடங்க அனுமதிக்காமல் பிற்பட்ட தாலுக்காக்களில் 



1984 ஏப்ரல் 10]

தொடங்கச் செய்வதுபற்றி அரசு ஆலோசனை செய்யுமா? தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களில் தொழில் தொடங்குகிறவர்களுக்குத்தான் முதல் சலுகை தரப்படும் என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவரவர்களே, பரவலாக தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் தொழில் துறையில் பின்தங்கிய பல தாலுக்காக்களைத் தேர்வு செய்து அரசு அறிவித்திருக்கிறது. அதனுடைய நோக்கமே அந்தப்பகுதிகளில் தொழில்களைத் தொடங்குகிறவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதுதான். அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டில் 64 தாலுகாக்களை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்களாக அறிவித்திருப்பதாகவும் அங்கே தொழில் தொடங்குகிறவர்களுக்கு பல சலுகைகள் அளித்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தச் சலுகைகள் எத்தனை ஆண்டுகளுக்கு வழங்கப்படும்? நான் சார்ந்திருக்கின்ற தாலுகா கூட தொழில் துறையில் பின்தங்கிய தாலுகா என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் ஒரு தொழில் கூட அங்கே ஆரம்பிக்கப்படவில்லை. அரசு அதிலே கவனம் செலுத்தி அங்கே உடனடியாகத் தொழில் தொடங்க முன்வருமா? தனியார்கள் அங்கே தொழில் தொடங்க முன்வந்தால் 50 சதவீதம் மானியம் வழங்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்த 64 தாலுகாக்களும், தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்களாக எந்த ஆண்டு வரை இருக்கும் என்று எந்தவிதமான கால நிர்ணயமும் கிடையாது. அங்கே அதிகமான தொழில்கள் வருகிற வரைக்கும் இந்த வசதிகள் தொடர்ந்து அளிக்கப்படும். அதே போல், பழனியும் அறிவிக்கப்பட்டிருந்தது. இன்னமும் தொழில் எதுவும் வரவில்லை என்கிறார்கள். இனிமேல் வரலாம். அந்தப் பகுதியிலே இருக்கிற தொழில் அதிபர்களை எல்லாம் அந்தப் பகுதியிலே தொழில்களைத் தொடங்குமாறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேன்வாஸ் செய்து தொழில்களைத் துவங்க முயற்சிக்கவேண்டுமென்றுநான்கேட்டுக்கொள்கிறேன். தனியார்கள் பின்தங்கிய பகுதிகளிலே கொடுக்கப்படுகின்ற சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த வகையிலே பின் தங்கிய தாலுகாக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர் மக்கள், அவர்களில் டெக்னோகிராட்ஸ் இருப்பார்களானால் அவர்களுக்கு 100 சதவீதம் கடன் வசதி அளிக்க — எந்தவிதமான ஷேர் காப்பிடலும் போடாமலேயே அவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது.

[1984 ஏப்ரல் 1

**திருமதி ஏ. ஏஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன
பதிலிலே இருந்து மத்திய அரசும் மாநில அரசும் பின்தங்கிய
பகுதிகளை அறிவித்து விடுகின்றன. அப்படி இரண்டும் பின்
தங்கிய பகுதிகளை அறிவித்து விடுகிறபோது அதிலே அரசேதான்
தொழிலைத் தொடங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை
என்று சொன்னார்கள். ஆனால் அரசு தொழிலைத் துவங்க
முடியாவிட்டாலும் கூட தனிப்பட்ட நபர்கள் தொழில்களைத்
துவங்க முன்வந்தால் அதிலே மத்திய அரசின் கடனுக்குக் குறைந்த
வட்டியும், மாநில அரசின் கடனுக்கு அதிகமான வட்டியும் இருப்
பதால் தொழில் அதிபர்கள் தொழிலைத் துவங்க முன் வராமல்
இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்த வட்டி விகி
தத்தைக் குறைத்துக் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மத்திய அரசு நேரடியாக எந்தக் கடனும்,
தொழில் துவங்குபவர்களுக்கு கொடுப்பதில்லை. ஐ.டி.பி.ஐ. என்
கிற தொழில் வளர்ச்சி வங்கியின் மூலமாக கடனை மறு நிதி
அல்லது மறு முதலீடு செய்கிற அந்தத் திட்டத்தின் வாயிலாகத்
தருகிறது. தமிழகத்தில் இருக்கிற டி.ஐ.ஐ.சி., சிப்காட் போன்ற
நிறுவனங்கள் மத்திய அரசு நிறுவனங்களிலிருந்து பணத்தைப்
பெற்று அவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். எனவே, இதிலே
வட்டி விகிதத்திலே வித்தியாசம் என்பதில்லை.

**திரு. கே. குப்புசாமி :** தலைவர் அவர்களே, தனியார்கள்
பின்தங்கிய பகுதியிலே தொழிலைத் துவங்க முன்வராத கார
ணத்தால் அந்தப் பகுதியில் அரசு ஏதேனும் பிரத்யேகமாக
தொழில் நிறுவ முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அரசு தொழில்களைத் துவங்குகின்ற
போது ஏற்கெனவே அறிவித்திருக்கின்ற அந்த 64 தாலுக்காக்
களுக்கு முன்னுரிமை கொடுத்து தான் துவங்குகின்றது. அதை
நான் ஏற்கெனவே சொன்னேன். நான் சொன்னதை மாண்புமிகு
உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் தவறாக எடுத்துக் கொண்
டார். நான் சொன்னது ஒரு தாலுக்காவை தொழிலில் பின்
தங்கிய தாலுக்கா என்று அறிவித்து உடனேயே அந்த தாலுக்
காவிலே எல்லா தொழில்களையும் உடனடியாக அரசாங்கமே
நிறுவப் போகிறது என்ற அடிப்படையிலே அந்தப் பொருளிலே
அதை அறிவிப்பதில்லை. தனியார்களை உற்சாகப்படுத்த, ஊக்
கப்படுத்த பல்வேறு சலுகைகளை, ஊக்கத்தை கொடுத்து அவர்
கள் தொழிலைத் துவங்க அரசு முயற்சிகளை மேற்கொள்கிறது.
அரசைப் பொறுத்தவரையிலும் அரசு நிறுவனங்களான எல்காட்,
டிட்கோ போன்ற இப்படிப்பட்ட நிறுவனங்கள் தொழிலைத்
துவங்குகின்றபோது இந்த 64 தாலுக்காக்களையும் மனதிலே
கொண்டு அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து துவங்க
ஏற்பாடுகள் செய்கிறது.



1984 ஏப்ரல் 10]

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, நமது
மாநிலத்திலே பல்வேறு வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக
அறிவித்து அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை கொடுப்பதாகச்
சொன்னார்கள். அப்படி குடியாத்தம் பகுதியையும் பின்தங்கிய
பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டபோது அந்தப் பகுதி
யில் ஒரு சில தொழில்கள் இருக்கிற காரணத்தால் பின்தங்கிய
பட்டியலில் அதனைச் சேர்க்க இயலாது என்று சொல்கிறார்கள்.
அந்த வட்டம், அதனால், முன்னேற முடியவில்லை. அந்த வட்
டத்திலே இரயில் போக்குவரத்து, ரோடு போக்குவரத்து, தண்
ணீர் வசதிகள் இருக்கின்ற காரணத்தால் இந்தச் சலுகைகளை
அரசு அறிவித்தால் பல தொழிலதிபர்கள் தொழில் துவங்க
முன்வருவார்கள். அரசு இந்தக் கோரிக்கையை பரிசீலித்து
குடியாத்தம் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க நட
வடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்
னதைப் போல ஏற்கெனவே தமிழ்நாடு அரசு தன்னுடைய
சொந்த நிதியிலேயிருந்து 33 தாலுக்காக்களிலே மானியம், கடன்
போன்ற மற்ற வசதிகளைச் செய்து வருகிறது. சென்ற ஆண்டு
ஏறக்குறைய 9 தாலுக்காக்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.
1979 இல் 24 தாலுக்காக்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.
இந்த ஆண்டு இப்போது உடனடியாக எந்தத் தாலுக்காவையும்
பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கிற திட்டம் இந்த அரசி
னுடைய பரிசீலனையில் உடனடியாக இல்லை.

**திரு. ஆர். தியாகராாசன் :** மரியாதைக்குரிய உதவி சபா
நாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிற்பட்ட
தாலுக்காக்களில் நூற்றுக்கு நூறு சதவீதம் அரிசன மக்களுக்கு
அரசு நிதி கொடுப்பதாகச் சொன்னார்கள். பிற்பட்ட பகுதிகளில்
வசதி படைத்தவர்கள் இருப்பது ரொம்பவும் குறைவு. அதனாலே
அங்கே வாழ்கின்ற மற்ற பின்தங்கிய மக்களுக்கும் நூற்றுக்கு
நூறு அவர்களுக்கும் கடன் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?
என் என்றால் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப்பட்ட
இடங்களில் அதிகமான வசதி படைத்தவர்கள் குறைவாக இருக்
கிறார்கள். எனவே அந்தத் தாலுக்காக்களிலே உள்ள மற்ற
பிற்பட்டவர்களுக்கும், தொழில் தொடங்க முதலீடு கொடுத்து
நூற்றுக்கு நூறு கடன் கொடுத்து, தொழில்களை ஊக்குவிக்க
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதியிலே
தொழில் துவங்குகிறபோது, யார் தொடங்கினாலும், 15 இலட்ச
ரூபாய் வரைக்கும் 15 perc nt Capital subsidy up to themaximum of
Rs. 15 lakhs. வழங்கப்படுகிறது. அதேபோல் Interest freesales loan

வட்டியில்லாத விற்பனைக் கடன் ஒரு கோடி ரூபாய் வரைக்கும், புதுத் தொழில்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எக்ஸ்டன்சன், அதாவது விரிவாக்கம் நடைபெறுகிறபோது, 50 இலட்சம் ரூபாய் வரைக்குழ் அவர்களுக்கு (Interest free sales laon) கொடுக் கப்படுகிறது. இதுதான் இப்போது நடைமுறையில் இருக்கிற திட்டம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் நூற்றுக்கு நூறு மானியம், கடன் கொடுத்து, எல்லோரும் தொழில் தொடங்குகிற திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை. மாநில அரசின் பரிசீலனையிலும் இல்லை.

திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் குறிப்பிடுகின்ற போது, தொழில் துவங்குவதற்காக பிற்பட்ட தாலுக்காக்கள் என்று 1979 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போது, அதிலே என்னுடைய நெல்லை மாவட்டத்தில் உள்ள விளாத்திக்குளமும் ஒரு பகுதியாகும். ஏறக்குறைய 4, 5 ஆண்டுக்காலம் ஆகியும், தனியார்கள் யாரும் இதுவரையில் தொழில் துவங்க அங்கே முன் வராமல் இருக்கிறார்கள். காரணம் அங்கே போதிய சாலை வசதிகள் இல்லை. அது கடற்கரை பகுதியாக இருக்கிற கார ணத்தால் யாரும் முன் வரவில்லை. எனவே அரசாங்கமே அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, ஒரு பெரிய தொழிலைத் துவங்கு வதற்கு ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல தனியார்கள் முன் வந்தாலும், வரவில்லை என்றாலும், பின் தங்கிய பகுதிகளைப் பொறுத்தவரைக்கும், அரசின் சார் பிலே இருக்கிற தொழில் துவங்குகிற கார்ப்பரேஷன்கள், அல்லது கழகங்கள், '' எல்காட், டிட்கோ, இன்னும் தமிழ்நாடு சிமென்ட் கார்ப்பரேஷன்'' போன்ற பல்வேறு நிறுவனங்கள் தொழில்கள் துவங்குகிறபோது, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தப் பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தொழில்களைத் துவங்குகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரைத் தடுக்கும் திட்டம்.

542—(*வினா எண். 22961)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவுநீர் தடுப்பது குறித்து தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடரப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனைத் தொழிற்சாலைகள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது ?



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒன்று.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு தொழிற்சாலை மீது வழக்கு தொடரப்பட்டு உள்ளது என்று சொல்கிறார்கள். அது எந்தத் தொழிற்சாலை? வழக்கு போடப் பட்டு, கோர்ட்டிலே கேஸ் இருக்கிறது. அப்படி கோர்ட்டில் தண்டனை கொடுக்கப்பட்டாலும், அந்தத் தண்டனையை மீறி மீண்டும் கழிவு நீர் விடுவதை அந்தத் தொழிற்சாலைகள் தடுக் காமல் இருந்தால், மேற்கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பாளையத்தில் உள்ள திருவாளர்கள் எஸ். சேஷசாயி பேப்பர் லிமிடெட் தங்கள் தொழிற்சாலை கழிவு நீரை போதிய அளவில் சுத்திகரிப்புச் செய்யாமல், காவிரி ஆற்றில் வெளியிடுகிறது. இதனால் காவிரி ஆறு மாசு அடைகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரி யத்தின் அலுவலர்கள் இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டு, அறிவுரைகள் வழங்கியும், அந்தத் தொழிற்சாலை, தன்னுடைய சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய வில்லை. ஆதலால் நீர், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட் டம் 1974, பிரிவு 33 இன் கீழ் இச்சட்டத்தின் காப்புரைகளை பின்பற்றாமைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந் நிறுவனத்தின் மேல் சட்டப்படி நடவடிக்கை தொடரவும், மேற் படி தொழிற்சாலை காவிரி ஆற்றில் மாசுபடுத்துவதை உடனே நிறுத்த கட்டளைகள் இடுமாறு நீதிமன்றத்தைக் கோரியுள்ளது. இவ்வழக்கு சங்ககிரியில் உள்ள நீதிமன்றத்தில் தொடர்ந்துநடை பெற்று வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தண்டனை பெற்ற பிறகும் கூட, மீண்டும் கழிவு நீரை சுத்திகரிக்காம லேயே தொடர்ந்து விட்டால், அவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசால் முடியுமா என்று கேட்டார்கள். மற்றச் சட்டத்தைப் போன்றது அல்ல இது. இது கன்டினியஸ் அஃபென்ஸ் என்ற வகையில் தொடர் குற்றமாகக் கருதப்படுகிற காரணத்தால் ஆரம்பத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளின் அதிபர்கள் மீது, கழிவு நீரை நன்னீராக மாற்றாத குற்றத்திற் காக, 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்படுகிறது. அந் தத் தண்டனையை அனுபவித்து மீண்டும் அப்படியே அந்தக் கழிவு நீரை மாற்றத் தவறி விட்டால், மீண்டும் தொடர்ச்சியாக அவர்கள் மீது பிராசிக்கியூஷன் செய்து, கன்டினிஷயஸ் அஃபென் ஸாக இருக்குமானால், 7 ஆண்டு வரை கடுங்காவல் தண்டனை கொடுக்கலாம் என்று சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கழிவு நீரை நன்னீராக மாற்றுவதன் தொடர்பாக, தொடர்ச்சியாக தொழில் அதிபர்கள் மீது கிரிமினல் வழக்கு இவ்வாரியத்தால் தொடரப்படும்.

[1984 ஏப்ரல் 10

**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்று மாசு படுத்தும் சட்டத்தின் கீழ் 31-31984-ஆம் தேதிக்குள் தொழிற்சாலைகள் பதிவு செய்துக் கொள்ள வேண்டும் என்று விதியிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். அந்த விதியின்கீழ் எத்தனை தொழிற்சாலைகள் பதிவு செய்துள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கழிவு நீர் பற்றியதாக இருந்தாலும், இரண்டாவது கேள்வியாக காற்று மாசு விதி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏர் பொல்லூயூஷன் சட்டம் அக்டோபர் மாதம் 1983 ஆம் ஆண்டு, நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அதிலிருந்து 6 மாத காலத்திற்குள், ஏர் பொல்லூயூட் செய்யக் கூடிய தொழிற்சாலைகளுக்கு, கால வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 31-3-1984லோடு அது முடிந்து விட்டது. இந்த கால வரம்பிற்குள், இந்த வாரியத்திலே பதிவு செய்த தொழிற்சாலைகள் மூலம் மூன்றே மூன்று தான். ஏறத்தாழ பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள், தமிழகத்திலே இருந்தும், இந்தச் சட்டத்தையும், பொது மக்களின் விழிப்புணர்ச்சியையும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக தாமாக முன்னுக்கு வந்து பதிவு செய்யாவிட்டால், பொது மக்களிடமிருந்து வருகிற மனுக்களின் மீது, காற்றை மாசு படுத்துகின்ற தொழிற்சாலைகள் எதுவாக இருந்தாலும், அவைகள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு அன்பில் தர்மலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சேஷ சாயி பேப்பர் ஆலையில் இருந்து வருகிற தூசுகள் காவிரியில் கலப்பதால் பல்வேறு கோளாறுக்ள் ஏற்படுகின்றன என்பதையும், அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் ஒரு ஆலையை பொன்னி சர்க்கரை ஆலை என்ற பெயரில் இன்றைய தினம் உரிமம் கொடுத்து திறந்து வைத்திருக்கிறீர்களே, இதனால் அந்தத் தொழிற்சாலையின் தண்ணீரும் இதிலே சேர்ந்தால் மேலும் அதிகமாக மாசு ஏற்படுமே, அந்த மாசைத் தடுப்பதற்கு உரிமம் வழங்குவதையாவது நிறுத்தி வைத்திருக்கலாம், அல்லது மேற்கொண்டு இவர்களுக்கே வழங்காமலாவது இருந்திருக்கலாம். தண்டனை என்ற பெயராலே அதையும் கொடுத்திருப்பது நியாயமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலையைப் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. அங்கே கழிவு நீர் இருக்குமானால், அதை நன்னீராக மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த வாரியம் எடுக்கும்



1984 ஏப்ரல் 10]

### கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்திற்கான உலக வங்கியின் உதவி

543— (*வினா எண். 17522)—**திரு. செ. செம்மலை** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமியக் கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு உலக வங்கியின் கடன் உதவி கேட்கவில்லை.

**திரு. செ. செம்மலை** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் உதவி கேட்கவில்லை என்றாலும், இந்த வீடு கட்டும் திட்டத்தை அரசே தனது சொந்த நிதியிலிருந்து செயல்படுத்தி வருவதாக அமைச்சருடைய பதில் மூலம் நான் ஊகிக்கிறேன். எனவே, இந்தத் திட்டத்திற்கு, இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கீடு, அரசு செய்துள்ளது என்ற அந்த விவரத்தையும், 1984—85 ஆம் ஆண்டுக்கு எத்தனை வீடுகள் கட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்ற அந்த விவரத்தையும், அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

**மாணபுமிகு திரு. எஸ். ஆர். இராதா** : துணைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசின் பங்காக 1,500 ரூபாயும் ஹட்கோவினுடைய பங்குகாக 3,000 ரூபாயும் மீதம் இருக்கிற 1,500 ரூபாயை வீடு கட்டுகிறவர்கள் உழைப்பைவைத்து கட்டுமானப் பொருட்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதை 5 ஆண்டுத் திட்டமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன.

**திரு. இரெ. இராசமாணிக்கம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு கிராமப்புற வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக 40 ஆயிரம் வீடுகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வீடுகள் கட்டப்படுவதற்காக வழங்கப்படுகிற மொத்தத் தொகை எவ்வளவு ? தற்போது வழங்கப்படுகிற தொகை விலைவாசிக்கேற்ப போதுமானதாக இல்லாத காரணத்தினால் அதை அதிகப்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு 6 ஆயிரம் ரூபாய் 3 ஆயிரம் ரூபாய் ஹட்கோ கடனாகவும் 1,500 ரூபாய் மாநில அரசின் பங்கு கடனாகவும் 1,500 ரூபாய் அவர்களுடைய உழைப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிறநிலை. அதே-நிலையில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் அந்தத் தொகையிலே மாநில அரசு இனாமாக வழங்குகிறது; ஆதி திராவிடர்கள் வசிக்கிற இடங்களில் ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்கள் போய் குடியிருந்து வீடு கட்டுவதற்கு அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் இனாமாக வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த 40 ஆயிரம் வீடுகட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுகள் இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஆசைபடுவதைப்போன்று தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றால் 40 ஆயிரம் வீடுகள் என்பது குறைந்துவிடும். ஆகவே, அது இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலில் 4,500 ரூபாய் தான் கொடுக்கிறோம் பாக்கியை அந்த பெனிபிசியரிஸ், அதனால் யார் யார் பயன் அடைகிறார்களோ அவர்களே போட்டுகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். என்.ஆர்.இ.பி. இல் செய்யக்கூடிய வேலைகளிலே அரிசனங்களுக்காக குறைந்த அளவிலே தான் ஒதுக்கப்பட்டு வந்தது. அதை எப்படி அதிகப்படுத்தியிருக்கிறார்களோ—6 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள்—அதைப்போன்று இதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். இப்போது பயன் அடைகிறவர்கள் 1,500 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள், அவர்களால் அதைக் கட்ட முடியாது. ஆகவே அரசாங்கமே ஏற்றுக்கொண்டு இந்த 40 ஆயிரம் வீடுகளுக்கு 60 ஆயிரம் ரூபாய்தான் கூடுதலாக ஆகும், ஆகவே அந்த 1,500 ரூபாயை கடனாக அவர்களுக்குக் கொடுத்து உதவ அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு அதிகமாக உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகளை வைக்கிற அடிப்படையில் அந்த நிலையை அரசு உணர்ந்து தான் அரசு ஆதி திராவிடர்களுக்கு அதிகமாகச் செய்ய வேண்டுமென்ற அடிப் படையில் அந்த ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால அவர்கள் 1,500 ரூபாய் கட்டவேண்டுமென்ற நிலையை மாற்றி அதையும் அரசு மானியமாகத் தரவேண்டுமென்ற அந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதுதான். ஆதி திராவிடர்கள் என்று சொல்கிற நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு திட்டங்கள் மூலமாக ஆதிதிராவிடர் களுக்கு உதவ வேண்டுமென்று உணர்வோடு இருக்கிற காரணத்தி னால் அதை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய முடியுமா என்பதை நான் பரிசீலிக்கச் சொல்கிறேன்.





**திரு. இரா. கருப்பையா** : துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புவீடு கட்டும் திட்டத்தை 1978 ஆம் ஆண்டிலிருந்து கைவிட்டுவிட்டது. கிராமப்புற கூட்டுறவு சங்கம் மூலமாக வீடுகள் கட்டப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாயாவது அந்த சங்கத்திற்கு ஒதுக்கி அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா** : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திட்டத்தைக் கைவிட்டதாகச் சொன்னார்கள். திட்டத்தைப் பொறுத்தவரையில் கைவிடவில்லை. திட்டத்தினுடைய நிலையை பல்வேறு வகையிலே மாற்றி ஆதிதிராவிடர்களுக்கு பணிகளைச் செய்கிற வகையிலே எந்த வகையிலும் குறைவு ஏற்படாத அளவுக்கு காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் அதிகமாக அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் எந்த எந்த வகையிலே செய்ய வேண்டுமோ அந்த அந்த வகையிலே நிச்சயமாகச் செய்வோம். அதிலே அவர்களுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை. இத்திட்டத்தில் அல்ல, எந்தத் திட்டமாக இருந்தாலும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் தரப்படும், எந்த வகையிலும் நிச்சயமாக நிறுத்தப்படமாட்டாது.

**திரு. தி. கா. நல்லய்யன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுப் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதி ஒதுக்குகிறதா? அது அல்லாமல் வீடு கட்டுவதற்கு பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக் களுக்கு விண்ணப்பிக்கின்றபோது அவர்கள் நிதி இல்லை என்று சொல்கிற ஒரு பிரச்சினை இருக்கிறது. ஆகவே வருகின்ற விண்ணப்பங்களுக்கு தகுந்தாற்போல் வீடு கட்டுவதற்கு உண்டான தொகையை ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இதிலே ஹட்கோ உதவியுடன் 3 ஆயிரம் ரூபாய் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றன. அப்படி விண்ணப்பங்கள் வருவதற்குக் காரணம் இந்த திட்டத்தில் வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடத்தில் அதிகமாகவே இருக்கிறது. அதை பயன்படுத்தி எந்த அளவுக்கு ஒவ்வொரு பகுதிக்கும் வழங்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்குகிறோம். ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் தான் என்ற நிலை இருக்கிற காரணமாக எல்லா மனுக்களையும் பரிசீலித்து உடனடியாக தர முடிவது இல்லை. ஹட்கோ மூலமாக 40 ஆயிரம் வீடுகள் என்று அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஹட்கோவை வற்புறுத்தி இன்னும் அதிகமாக வாங்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முயல்வார்களானால் நாங்களும் அதற்குத் துணையாக இருப்போம்.

**கதர்ப்பட்டு உற்பத்தியின் மேம்பாட்டுக்கான சிறப்புத்திட்டம்.**

**544—வினா எண். 20665—திரு சி. கணேசன்** : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983-84-ல் கதர்ப்பட்டு உற்பத்தியின் மேம்பாட்டுக்காக ஏதேனும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி. விசயலட்சுமி பழனிச்சாமி** (அ) ஆம்.
(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் பட்டு உற்பத்தி மேம்பாட்டுக்காக 1983–84 ஆம் ஆண்டிற்கான பெருந்திட்டம் ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றி வருகின்றது.

இதன்படி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் புதிய பட்டு உற்பத்தி பிரிவுகளைத் தொடங்கவும், புதிய கதர் விற்பனை அங்காடிகளைத் திறக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**திரு. சி. கணேசன்** : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1983–84 ஆம் ஆண்டிற்கான கதர் பட்டு உற்பத்தி மேம்பாட்டுக்காக பெருந்திட்டம் ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றி வருகின்றது என்று தெரிவித்தார்கள். நான் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த மேம்பாட்டுத் திட்டம் செய்து முடித்தப் பிறகு 1983–84 ஆம் ஆண்டில் இந்தத்துறைக்கு எந்த வகையில் செலவுகள் ஆனது ? எவ்வளவு அதிலே லாபம் கிடைத்தது என்ற குறிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் பட்டு விற்பனை கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. அதன் விவரம் பின் வருமாறு :

1979–80-ல் 84 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயும் 1980–81-ல் 127.10 இலட்சம் ரூபாயும், 1981–82-ல் 179.54 இலட்ச ரூபாயும், 1982–83–ல் 189.83 இலட்ச ரூபாயும், 1983–84—ல் 272.59 இலட்ச ரூபாய். கடந்த ஆண்டுகளில் கதர் பட்டு விற்பனை அதிகரித்துள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள் முடிவு உற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

**திரு. ரா. உமாநாத்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் இருக்கின்ற நெசவுத் தொழிலாளர்களுக்கு மாநில அரசு குறைந்தபட்ச கூலி நிர்ணயித்து ரொம்ப நாட்கள் ஆகின்றன. அரசாங்கத்தின் கீழ் நடத்தக் கூடிய கூட்டுறவுத் துறை சங்கங்களிலே இது அமுல் படுத்தப் படாமல் இருக்கிறது. அப்படி அமுல்படுத்தினால் நாங்கள் துணி வாங்க மாட்டோம் என்று ' கோ-ஆப்டெக்ஸ் சர்க்குலர் அனுப்பியிருக்கிறது. தங்களுக்கு குறைந்தபட்ச கூலி தரவேண்டும் என்று கூறி அவர்கள் திருச்சியில் போராட்டம் நடத்தி நேற்று 100 பெண்கள் உட்பட சுமார் 600 பேர்கள் கைது செய்யப்பட்டு நிலைமை மிகவும் சீரியஸாக இருக்கிறது. காலையில் அதற்காக ஒரு அட்ஜார்ன்மெண்டு மோஷன் கொடுத்து இருக்கிறேன். இதற்காக அவர்கள் ஸ்டடி பண்ண வேண்டிய அவசியம், தேவை இல்லை. இது தெரிந்த விஷயம் தான். இப்போதே எடுக்கலாம். இந்த அரசு நிர்ணயித்த கூலிக்காக இப்படி பெண்கள் சிறைக்கு போவது எல்லாம் நல்லது அல்ல. எப்படி இது இந்த அரசுக்கு நல்ல பெயரை உண்டாக்கும். ஆகவே இன்றே அந்த அட்ஜார்ன்மென்டு மோஷனை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் மற்றும் 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு பத்திரிகையின் மீது உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறோம். 31 ஆம் தேதியே இதைக் கொடுத்து இருக்கிறோம். சபை ஆரம்பித்து 2 நாட்கள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அது பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் டெல்லிக்குப் போயிருக்கிறார்கள்.

**திரு. நா. சுந்தரராஜ்** : அவர்கள் எப்பொழுது வருவார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : '' நைட் '' வருவார்கள். அல்லது நாளைக் காலையில் வந்துவிடுவார்கள்.

**திரு. நா. சுந்தரராஜ்** : நாளைக்காவது அது எடுத்துக் கொள்ளப் பெறுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எடுத்துக்கொள்வது பற்றித் தீர்மானிக்க வேண்டியவர் பேரவைத் தலைவர். அதை இந்த நாளில்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று' வற்புறுத்த இயலாது. அதுபற்றி அவர்தான் முடிவு

செய்ய வேண்டும். (குறுக்கீடு) பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பது பற்றிப் பேரவைத் தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும். பிரைமாபேஸி கேஸ் இருக்கிறது என்றால்தான் அதைக் கொண்டு வருவதற்கு அவர்கள் அனுமதிப்பார்கள். எனவே, பேரவைத் தலைவர் வந்தவுடன் அவரோடு பேசி முடிவெடுக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : நான் 31 ஆம் தேதியே கொடுத்து விட்டேன். இன்றைக்கு பத்தாம் தேதி ஆகிவிட்டது. அது பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தாங்கள் கொடுத்திருந்தாலும் அதை ஆய்வு செய்ய வேண்டாமா ; பரிசீலனை செய்ய வேண்டாமா ? எனவே, இதுகுறித்து நாளைக்குச் சொல்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த 4 மாத காலமாக கைத்தறித் தொழிலாளர்கள் அரசு நிர்ணயித்த கூலி கிடைக்க வில்லை என்பதற்காக நேற்றையதினம் திருச்சி உறையூர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுகுறித்து திரு. ஆர். உமாநாத் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுக்கும்பொழுது அந்த விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். இன்றைக்கு அதை எடுத்துக்கொள்வதாக இல்லை.

(ஆ) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்காமை

திரு. சு. பாலன்: பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, வட சென்னையில் இயங்கி வருகின்ற பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்கவில்லை; அதனுடைய உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னை பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இந்த அவை நடப்பதில் ஏதாவது ஒழுங்கு முறை தவறி இருந்தால் அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் வரும், மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வருகின்ற பிரச்சினையைப் பற்றி, குறுகிய கால கேள்வியின் மூலம் கொண்டு வரலாம் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம் அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம்.



(இ) கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம்

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் நேற்றையதினம் போலீஸ் நிலையத்தில் ஒருவர் இறந்து போனது பற்றி சர்வ கட்சியினர் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் மீதுதிடீரென்று போலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தி அத்தனை சர்வ கட்சித் தோழர்களையும் நேற்று' அழைத்துக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனிலே வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற அராஜகமான நிலை கும்பகோணத்தில் ஏற்பட்டிருக்கின்றது........ (குறுக்கீடு)......இது முக்கியமான ஒரு விஷயம் என்பதால் உடனடியாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கான நோட்டீஸை எழுதிக் கொடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, திரு. சு. பாலன் அவர்கள் அனல் மின் நிலையம் மூடப்படும் என்று சொல்லப்பட்டது குறித்து கேட்டார்கள். அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். சபை நடந்து கொண்டிருக்கின்றபோது ஏதாவது ஒரு பிரச்சினை கிளம்பினால் தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கிளப்பலாம் என்று கிறீர்கள.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. எனவே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கவேண்டாம் அமருங்கள்.

ஈ. கும்பகோணத்தில் காலரா

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே 20 பேர் காலரா நோயினால் இறந்து இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி இன்றைக்குக் காலை திரு. மு. அப்பாதுரை அவர்கள் கேட்டு அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் உள்ள மருத்துவமனையில் ஏற்பட்ட சாவுபற்றி ஏற்கெனவே நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.. எனவே தாங்கள் அருள்கூர்ந்து இதனை நாளை எடுத்துக்கொண்டால் மன்றத்திற்கும் விளக்கம் கிடைக்கும், மக்களுக்கும் விளக்கம் கிடைக்கும்.

[1984 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஆய்விலே இருக்கிறது. இன்றைக்கு காலையில்தான் அதுபற்றி என் னிடத்திலே சொல்லி இருக்கிறீர்கள். எனவே பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அதை எடுத்துக் கொள்வது பறிற் முடிவெடுக்கலாம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, நானும், கும்பகோணம் எம்.எல்.ஏ. அவர்களும் 55-வது விதியின் கீழ் நேற்றைய தினமே தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இது..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது ஆய்விலே இருக்கின்றது. எனவே அதுபற்றி பிறகு பார்க்கலாம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** இதைவிட முக்கியமானது வேறு என்ன இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது முக்கியமானது தான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினை களை விவர்திப்பதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். எனவே அமைச்சர் அவர்களிடம் கேட்டு, பிறகு இது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே ஏற்பட்ட காலரா நோய் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். அதுபற்றி அங்கே எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள்ளைப் பற்றி உடனடியாக இங்கே சொல்ல முடியும் என்றாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய முழு நிலைமை களையும் மற்றவைகளையும் விவரமாக நாளைக்கு எடுத்துச் சொல்வதாகச் சொல்லி இருப்பதால் நாளை எடுத்துக்கொள்ள லாம். மேலும் அமைச்சர் அவ்வாறு சொல்லியவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைந்து விட்டார்கள் என்பதால் நாளைக்கு இது எடுத்துக்கொள்ளப்படலாம் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### அம்பத்தூர் நகரியத்தில் உள்ள இடுகாடுகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பது

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அம்பத்தூர் நகரிய பராமரிப்பில் உள்ள சுடு காட்டில் பிணங்களை எரிக்க, அங்கீகாரம் பெறாதவர்கள், பொது மக்களிடமிருந்து அதிகக் கட்டணம் பெறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.



1984 ஏப்ரல் 10] [திரு. ப. குழந்தைவேலு]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகரியத்தின் பரப் பளவு சுமார் 38 சதுர கிலோ மீட்டராகும். இந்நகரிய எல்லைக் குள், பல்வேறு பகுதிகளில் தற்போது மொத்தம் 15 பொது சுடுகாடு மற்றும் இடுகாடுகள் உள்ளன. குறிப்பிட்ட வகுப்பினரு கென்று தனியாக சுடுகாடு-இடுகாடு ஏதும் இல்லை.

மேற்கண்ட சுடுகாடு—இடுகாடுகளில் பிணங்களை எரிப்பது அல்லது புதைப்பது போன்ற காரியங்களை ஆரம்ப காலத்தி லிருந்து இதுநாள் வரை தனி நபர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு எரிப்பதற்கும், புதைப்பதற்கும் கட்ட ணங்கள் தனி நபர்களால் மட்டுமே வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்நகரியத்தின் மூலம் கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவது கிடையாது. மேற்கண்ட பொது நபர்களால் நடத்தப்படும் இடுகாடு-சுடுகாடுகளை ஒழுங்குமுறை செய்து நகரியத்தின் ஒப்புதல் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது கட்டண விகிதங்களுக்கான நிபந்தனைகள் நிர்ணயம் செய்யப் படும்.

தற்போது இந்நகரிய எல்லைக்குட்பட்ட டன்லப் கம்பெனிக் கெதிரில் உள்ள இடுகாடு-சுடுகாட்டிற்கு நகரியத்தின் சார்பில் கூரை மற்றும் சுற்றுப்புறச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த இடுகாடு-சுடுகாடு நகரின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது இந்த இடத்தில்தான் பெரும்பாலான பிணங்கள் புதைக்கப் பட்டும் எரிக்கப்பட்டும் வருகின்றன.

இச்சுடுகாட்டுக்கென காவலாளி மற்றும் வெட்டியான் பதவிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப் பதவிகளை ஏற்படுத்தியபின் இடுகாடு-சுடுகாடுகளில் பிணங் களைப் புதைப்பதற்கும் எரிப்பதற்கும் உரிய கட்டணங்கள் இந்நகரியத்தால் நிர்ணயம் செய்யப்படும்.

(முற்பகல் 10-20)

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் நகரியத்தைப் பொறுத்த வரைக்கும் புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்ற பிறகுதான் எல்லா அடிப்படை வசதிகளும் இன்றைக்கு நிறைவேறி வருகின்றன என்பது பொது மக்கள் நன்றியோடு நினைக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் இந்தச் சுடுகாடு பிரச்னையில் வசதியோடு வாழ்ந்து விட்டு செத்து சுடுகாடு போகிறபொழுது அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளும் சீராக இருந்தால் நலமாக இருக்கும். பிணத்தை எரித்துவிட்டு, புதைத்துவிட்டு வீட்டுக்குப் போய் உட்கார்ந்து துக்கமாக இருக்கிற பொழுது இப்படி எரிக் கின்றவர்கள் வீட்டிற்கு வந்து பிணம் எழுந்து உட்கார்ந்துவிட் டது, சரியாக எரியவில்லை, கொளுத்துவதற்கு இன்னும் பணம் வேண்டும், கிருஷ்ணாயில் வாங்க வேண்டும் வரட்டி வாங்க வேண்

டும், கட்டைகள் வாங்க வேண்டும் என்று அதிகமான தொல்லை கொடுத்து வீட்டிற்கு வந்து பணத்தை வசூல் செய்துகொண்டு போகிறார்கள். இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்ப்ப தற்கு நகரியமே அதற்குரிய ஆட்களை நியமனம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

அதே போன்று இஸ்லாமிய சமுதாயத்தினர் நல்லடக்கம் செய் கிற கபர்ஸ்தான் இன்றைக்குப் பன்றிகள் மேய்கின்ற இடமாக, அதனுடைய புனிதத் தன்மை கெடுகின்ற விதத்திலே இருக்கிறது. அதற்கென்றும் தனியாக காம்பவுண்ட் வால் அமைக்கப்படுமா என்பதையும அறிய விரும்புகிறேன். இந்தப் பிரச்னையில் சென்னை மாநகராட்சியிலே இருக்கிற 32, 33 வட்டங்களில் உள்ள சுடுகாடுகள் இதே நிலைமையில் தான் இருக்கின்றன. இவை அனைத்தையும் ஒருசேர பார்த்துக் கொள்வதற்குத் தனி யாக உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சுடுகாடு, இடுகாடு போன்றவைகளைப் பொறுத்த வரையில், இன்று எல்லா நகராட்சிப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால், இனிமேல் நம்முடைய நகராட்சிப் பகுதிகளிலே இடம் இல்லையென்ற நிலைமை ஏற்பட்டு வரு கிறது. ஆகவேதான் இனி புதைப்பதைக் காட்டிலும் சுடுகாடு களாக மாற்றி, மின்சாரத்தைப் பயன்படுத்தி, அதன்மூலம் பிணத்தைச் சாம்பலாக்கலாம் அதற்கு நாம் மின்சாரத்தை தான் கையாள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படிச் செய்தால்தான் இருக்கின்ற நிலத்தை இன்னமும் 50 ஆண்டுகளுக்கு உபயோகிக்கின்ற நிலைமை ஏற்படும்.

அம்பத்தூர் நகரியத்தைப் பொறுத்த வரையில் 15 சுடு காடுகள், இடுகாடுகள் இருக்கின்றன. அங்கேயும் கூட தனிப் பட்ட நபர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற சுடுகாடுகள், இடுகாடுகளாகத்தான் இருந்து வருகின்றன. ஆனால், சமீபத் திலேதான் டன்லப் தொழிற்சாலைக்கு எதிரிலே இருக்கிற அந்தச் சுடுகாட்டுக்குக் காம்பவுண்ட் சுவர் மற்றும் உள்ள வசதி கள் எல்லாம் செய்து கொடுத்திருக்கின்றோம். ஆனாலும்கூட இனிமேல் அம்பத்தூர் நகரியத்தைப் பொறுத்த வரையில் மின்சாரத்தால் இயங்கக்கூடிய சுடுகாடு ஒன்றை அமைப்பதற் குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். வெட்டி யான் போன்றவர்களையும் அந்தந்தப் பகுதிகளுக்கு நியமிப் பதற்குரிய நிலைமைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

குறிப்பாகத் தனிப்பட்ட நபர்களுக்கென்றோ அல்லது தனிப் பட்ட இனத்திற்கென்றோ, வகுப்பிற்கென்றோ, சுடுகாடுகள் அம்பத்தூர் நகரியத்தில் இல்லை. ஆகவே, இருக்கிற நிலைமை கள் எல்லாம் செத்ததற்குப் பின்னாலே அவர் அந்த வகுப்பைச் சேர்ந்தவர் அல்லது அந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று எண் ணாமல் ஒரே இடத்திலே கொண்டு போய் அந்தப் பிணங்களை



எல்லாம் சுடுகின்ற நிலைமை ஏற்படுத்தினால் அது நல்லது, அது பகுத்தறிவுக் கொள்கைக்கும் கூட ஏற்றதாக இருக்கும் என்று என்னுடைய கருத்தாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். நகராட்சிகளைப் பொறுத்த வரையில் இடம் இல்லை யென்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், மின்சாரம் மூலம் பிணங்களை எரிக்கும் சுடுகாடுகள் தான் இனி மேல் அமைக்கப்படும் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட் டிருக்கிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவீன முறையில் 'மின்சாரம் மூலம் பிணங்களை எரிக்கும் இயந்திரங்கள் அம்பத்தூர் நக ரியத்திலே அமைக்கப்படும் என்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாக இருக்கிறது. அது எவ்வளவு விரைவிலே அமைக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும்? இப்பொழுது இப்படி எரிப்பதற்கு அதிகப் பணம் வாங்குகின்றவர்களைத் தடுத்து நிறுத்தி நகரியமே மேற் பார்வையிட தனியாக ஆட்கள் நியமிக்கப்படுவார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிகப் பணம் வாங்கக் கூடாது. கடைசியிலே பிணத்தைப் புதைப்பதற்கோ, சுடுவதற்கோ, என்று ரூ. 500, 1,000 கேட்கக் கூடிய நிலையும் ஒரு சில இடங்களில் ஏற்பட்டு விடுகிறது. அதன் காரணமாக, ஏழை, எளிய மக்கள், கஷ்டப் படுகிற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் தடுக்கும் வகையில் தான் நகரியத்தின் சார்பிலே இவை களை எல்லாம் எடுத்துச் கொள்ள வேண்டுமென்று தான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவுகள் போடப் பட்டிருக்கின்றன, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங் கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) எட் டாவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியின் கீழ் வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளிட்ட அரசாணை எண். 645-ன் படி திருத்தியமைக் கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர் கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

1. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்
2. திரு. இ. இராமலிங்கம்
3. திரு. கே. ஆர். கணபதி

[டாக்டர் கா. காளிமுத்து] [1984 ஏப்ரல் 10

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்,

மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (எப்) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (எ) பகுதியின்படி 23—3—1984 ஆம் நாளன்று முடிவடைந்து விட்டபடியாலும் ;

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியையொட்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்டமன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படுமாக''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நியமனத் தாள்களை 16—4—1984 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுபவர்கள் செயலாளரிடத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 17—4—1984 செவ்வாய்க் கிழமை 3.00 மணிக்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 18—4—1984 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 23—4—1984 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையில் சென்னை கோட்டையிலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



1984 ஏப்ரல் 10]

### கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,80,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss the need to hand over temple audit to the Audit Wing of Accountant-Ceneral office I move—

"That a sum of Rs. 2,80,13.000/- under Demane No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100/-"

**திரு. சு. பாலன்** : துணைத் தலைவர் அவர்களே, கோவில் நிர்வாக ஆணையர்கள் தாழ்த்தப்பட்டோரிடமிருந்து அதிக நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,80,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

**திரு எம். செல்லமுத்து** : துணைத் தலைவர் அவர்களே, கோவில் மட நிலங்களை குத்தகை சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்கு அரசே வாங்கிக் கொடுக்க வேண்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்-சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,80,13,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்''

**திரு. தி. கா. நல்லப்பன்** : துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறை வட்டம், அப்பச்சிமார் மடம் சோவிலை அறக்கட்டளையின்கீழ் கொண்டு வருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்-சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,80,13,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை ஒட்டி கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்று **அவையில் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை இன்று நான் அவையில் ஆற்றிய உரையாகக் கருதி குறிப்புகளில் பதிவு செய்து கொள்வதற்கு தாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கோருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை ஒட்டி ஏதாவது இறுதியாக விளக்கம் அளிக்க வேண்டுமென்றால் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய சார்ங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(முற்பகல் 10-30)

இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் ஆன்மீகத் துறையை வளர்ப்பதற்கு பல்வேறு மடங்கள். கோவில்கள் பண்டைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டன். அவற்றின் மூலமாக சமய, சன்மார்க்க சங்கத்தை எல்லாம் ஏற்படுத்தி மக்களிடத்தில் ஆன்மீக நெறிகளை பரப்பி வந்தார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் நன்றாகச் செயல்பட்டு வந்த அந்தத் துறையில்தான் இன்றைக்கு சமரசத்தை ஏற்படுத்த வேண்டிய ஆதீனங்கள். சன்மார்க்கத்தை வளர்க்க வேண்டிய ஆதீனங்கள், பக்தியைப் பரப்ப வேண்டிய ஆதீனங்கள், தெய்வீகத் தன்மையை பரப்பவேண்டிய ஆதீனங்கள், தமிழை வளர்க்க வேண்டிய ஆதீனங்கள் இவற்றையெல்லாம் செய்யாமல், மக்களுக்கு விரோதமாக வன்முறையைத் தூண்டுகிற அளவிற்குப் பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நாம் அறிந்திருக்கிற ஒன்றாகும். இந்த மாமன்றமும் அறியும். இதை நாம் வளர்க்க வேண்டும். சமயத்தை வளர்க்கவேண்டும். அதிலும் சமய மார்க்கத்தை வளர்க்க வேண்டும். ஆனால் இன்றைக்கு ஆதீனங்கள், மடங்கள் எல்லாம் இன்றைய தினம் வன்முறையிலே ஈடுபடுகிறார்கள். காவி உடை உடுத்தி, கழுத்தில் ருத்திராட்ச மாலை அணிந்து

** 153—142-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





இருப்பவர்கள், சமரசக் கொள்கையைப் பரப்ப வேண்டியவர்கள் இன்றைய தினம் கையிலே துப்பாக்கி ஏந்தி சாதாரண மக்களை மிரட்டும் அளவிற்குப் போய் இருக்கிறார்கள் என்றால், இதைத் தடுப்பதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியாகவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

குறிப்பாக மடங்கள் எல்லாவற்றையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இன்றைக்கு சட்டங்கள் போட்டு அவற்றின் மூலம் அந்த நிர்வாகத்தைக் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருந்தாலும், அதனால் பலன் ஒன்றும் இல்லை. அந்தக் கண்காணிப்புக் குறைகின்ற காரணத்தால்தான்—அது அரசியல் சட்டத்தின் காரணமாக இருந்தாலும்—இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அதை நல்ல முறையில் கண்காணிக்கப் போதிய நடவடிக்கைகளை இந்த மாமன்றம் வகுக்கவேண்டும். அதற்காகச் சரியான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். இந்த நிலைமையைப் போக்க சரியான பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குச் சாதாரண சாமியார்கள் எல்லாம் சமயங்களை பல்வேறு விதத்தில் வளர்த்து வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், எங்கள் கிராமத்திற்குப் பக்கத்திலே ஒரு சாமியார் இருக்கிறார். அவர் தன்னுடைய சொந்த நிலத்தை விற்று கோயில் கட்டியிருக்கிறார். அப்படி கோயில் கட்டியதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் கோயில்களையும் புதுப்பிப்பதற்கும் அதை வளர்ப்பதற்கும் தன்னால் இயன்ற பணிகளைச் செய்து வருகிறார். தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் அப்படி அவர் செய்து வருகிறார். வேறு பல மாவட்டங்களிலும் செய்து இருக்கிறார். காவி உடை அணியாமலேயே வெள்ளை உடையையே அணிந்துகொண்டு இப்படிப்பட்ட சமயசன்மார்க்கப் பணிகளை அவர் செய்து வருகிறார். அவர் தான் வாழைமரக் கோட்டை சாமியார். அவர் தன் சேவைக்காக எதையும் யாரிடத்திலும் எதிர்பார்க்கவில்லை. அவர் சமைப்பது கூட கிடையாது. அதற்கு அவருக்கு இடம்இல்லை. அந்த ஊரிலேஉள்ள ஒவ்வொருவரும் ஒரு நாள் உணவு கொடுத்து வருகிறார்கள். அந்த அளவிற்கு மிகவும் சாதாரணமாக இருந்துகொண்டு அந்தப் பகுதியில் நல்ல முறையில் சன்மார்க்க நெறிகளை வளர்த்து வருகிறார். ஆனால் இன்றைக்குப் பல கோடிக் கணக்கான ரூபாய்களை வைத்துக்கொண்டு இருக்கும் ஆதீனங்கள் மக்களைத் திசைத் திருப்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இவர்களின் போக்கை தடுத்து நிறுத்த ஒரு நல்ல ஏற்பாட்டை அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும். திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக தாழ்த்தப்பட்ட மக்களை நியமிக்கலாம் என்று சட்டம் போடப்பட்டது. ஆனால், கோர்ட்டிலே அது தடை செய்யப்பட்டு இருக்கிறது. அதனால் அது இன்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வருணாஸ்ரம முறை ஒழிக்கப்பட வேண்டும். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையின்படி சமுதாயத்தில் நிலைமைகளை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வருவதற்கான நடைமுறைகளை வழிவகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதிலே பல்வேறு ஓட்டைகள் இருக்கின்றன. அவற்றை அடைக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றங்கள், ஆங்காங்கு மக்களால் ஆரம்பிக்கப்பட்டு, அங்கே நல்ல முறையில் பூசைகள், விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் மூலமாக சமுதாயத்தில் நல்ல மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. அதைப் போலவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் அர்ச்சகர்களாக வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில்களுக்குச் சொந்தமாக 5 லட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எல்லோரும் குத்தகைக்கு அந்த நிலங்களை விட்டு இருக்கிறார்கள். கோயில் குத்தகை சரிவர வராவிட்டால் கோயில் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போய் விடுகிறது. குறிப்பாக இயற்கையின் சீற்றத்தால் பல்வேறு இடங்களில் குத்தகை சரியாகக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் கோயில்களுக்கு வரவேண்டிய வருமானத்தையும் நிச்சயமாகப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அரசுக்கு இருக்கிற, அறநிலையத்துறைக்குச் சொந்தமாக இருக்கிற பல்வேறு கோவில்களுக்குக் குத்தகை நிலங்கள் இருக்கின்றன; குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தவணை அடிப்படையில் அந்த நிலத்தை கிரயம் செய்து கொடுத்து தவணை முறையில் கிரயத்தைப் பெற்று, அந்தப் பணத்தை கோவில் பெயரில் 'ஃபிச்சட் டிபாசிட்' செய்தால் சிக்கல் இருக்காது, கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசியம் இருக்காது; கோவில் பணிகள் சிறப்பாக, ஒழுங்காக நடைபெறும். இதற்கு ஒரு நல்ல திட்டத்தைத் தீட்ட வேண்டும். ஒரு மாஸ்டர் பிளானைப் போட வேண்டும். உரிய முறையிலே அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, இந்தத் திருக்கோவில்களில் பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென் றால் பழனி தண்டாயுதபாணி திருக்கோவில் நிர்வாகத்தில் கல்லூரி இருக்கிறது, மேல் நிலைப் பள்ளி இருக்கிறது, உயர் நிலைப் பள்ளி இருக்கிறது, ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதைப் போன்று தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. அதோடு தொழில்துறை சம்பந்தப்பட்ட படிப்பையும் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருக்கோவில் ரிசர்வ் பண்டில் இருக்கிற பணத்தைக் கொண்டு அரசாங்கம் அறநிலையத் துறையின் மூலமாக பிற்பட்ட சமுதாய மக்கள் தொழில் கல்வி பெறுகின்ற வகையில் ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் போன்ற தொழில் படிப்புகளை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குப் பல திருக்கோவில்களில் நிர்வாக அதிகாரிகள் இடம் காலியாக இருக்கிறது. துரிதமாக எல்லா இடங்களையும் நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் 10, 15, திருக்கோவில்களுக்கு ஒரு நிர்வாக அதிகாரி இருக்கிறார். அவரால் கோவிலுக்கு வருகின்ற வருமானத்தைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. திருக்கோவில் களுக்கு அன்றாடம் என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை, அதனால் ஒவ்வொரு கோவிலுக்கும், அந்தக் கோவில் வருமானத்தைக் கணக்கில் கொண்டு, அந்த வருமானத்திற்கு உட்பட்டு, நிர்வாக அதிகாரி களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் பல நிர்வாக அதிகாரிகள் இடம் காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடங்களுக்கு உடனடியாக நிர்வாக அதிகாரிகளைப் போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல கோவில்களுக்கு ட்ரஸ்டீஸ் இல்லை. காரணம் என்னவென்று கேட்டால் சட்ட சிக்கல் இருக்கிறது, கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். திருக் கோவில் பணிகள் ஒழுங்காக, நல்ல முறையில் நடைபெற வேண்டு மென்றால் எல்லாத் திருக்கோவில்களிலும் ட்ரஸ்டிகள் நியமிக்கப் பட வேண்டும். ஆகவே, விரைவிலே எல்லாக் கோவில்களிலும் உரிய அடிப்படையில் ட்ரஸ்டிகளை நியமிக்க எற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டிரஸ்டிகளை நிய மிக்கும்போது ஏதோ ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமாக்காமல் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் கோவில் திருப்பணிகளை நல்ல முறையில் செய்கின்றவர்களைப் பார்த்துப் போட வேண் டும். இல்லாவிட்டால் கட்சிக்கு அப்பாற்பட்டிருக்கிற நல்லவர் களை, தெய்வ பக்தி உள்ளவர்களைப் பார்த்து ட்ரஸ்டிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு பிரச்சினை. கமிஷனர் ஆபீஸ் சென்னையில் இருக்கிறது. சென்னையிலிருந்து எல்லா இடங்களையும் கண்காணிப்பது சிரமமாக இருக்கும். ஆகவே, தஞ்சையில் ஒரு ரீஜினல் ஆபீசை ஏற்படுத்த வேண்டும். தஞ்சையில் ஏன் அமைக்க வேண்டுமென்றால், இன்றைக்கு தஞ்சையில்தான் அதிகமான திருக்கோவில்கள், மடங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகச் சிக்கல் இல்லாமல் இருக்க, திருப்பணிகள் செம்மையாக நடைபெற, அங்கே ரீஜினல் ஆபீசை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் ஏறத்தாழ 82,600 திருக்கோவில்களுக்கு அறநிலையத் துறையின் மூலமாக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள், அர்ச்சகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் அலுவலர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். திருக்கோவில் ஊழியர்களுக்கு ரிட்டயர் ஆன பிறகு பென்ஷன் கொடுக்க வேண்டும்; கிராஜுவட்டி கொடுக்க வேண்டும்; அதைப் போன்று அரசாங்க அலுவலர்களுக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் திருக்கோவில் ஊழியர்களுக்கும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குச் சாதாரணமாக எல்லோரும் பேசுகிறோம். ஜாதி, மத வித்தியாசம் இல்லை என்று சொல்கிறோம். அதுதான் நம்முடைய இலட்சியம். அதைக் காட்டுவதற்காக ஜனவரி 15 சமபந்தி போஜனம் என்று கொண்டாடப்பட்டது. எல்லாக் கோவில்களிலும் கொண்டாடப்பட்டது. குறிப்பாக அரசாங்க நிர்வாகத்திலுள்ள எல்லாக்கோவில்களிலும்கொண்டாடப்பட்டது. இருந்தாலும் அதிலே சில சிக்கல்கள் இருப்பதாக ஆதி திராவிட மக்கள் சொல்கிறார்கள். கோவிலுக்குள் சில இடங்களில் போக முடியவில்லை என்று சொல்கிறார்கள். எல்லா வகுப்பினரும், குறிப்பாக அதி திராவிட மக்களும் கோவிலுக்குள்ளே சென்று வழிபடுவதற்கு, கோவில் நிகழ்ச்சிகளிலே பங்கு கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அடுத்து, இந்த ஆண்டில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கம்பர் கோட்டம் கட்டுகின்ற புதிய ஏற்பாட்டை அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியவன் இராஜராஜன். தமிழகத்தினுடைய பண்டை நாகரிகத்தையும், கலை உணர்வையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில் இன்றைக்கு ஒரு சிகரமாக விளங்குகின்ற அந்தப் பெரிய கோவிலைக் கட்டியவன் இராஜராஜன். அந்த இராஜராஜன் தற்போது கோவிலின் வெளியே தனியாக நின்று கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவனுக்கு என்று தனியாக ஒரு கலைக்கூடத்தை ஏற்படுத்தி—எப்படி கலை நயத்தோடு பெரிய



கோவிலைக் கட்டினானோ அதேபோன்று கலை உணர்வுடன் நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த இராஜராஜன் சிலைக்கு ஒரு நல்ல கலைக் கூடத்தை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படிக் கம்பனுக்கு இன்றைக்கு கூடத்தை எழுப்ப இருக்கிறீர்களோ அதே போன்று இராஜராஜனுக்கும் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பல வெளிநாட்டுப் பயணிகளும், பல உள்நாட்டுப் பயணிகளும் வருகிறார்கள். அந்தக் கோயிலைச் சுற்றி உள்ள சுற்றுப்புற சூழ்நிலை சரியாக இல்லை. அதைச் சரிப்படுத்தி அந்தக் கோயிலைச் சுற்றி பூங்கா போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதிரே உள்ள மருத்துவ மனையில் நிறைய இடம் இருக்கிறது. அந்த இடம் சும்மா இருக்கிறது. அதை மருத்துவத்துறையிடம் இருந்து பெற்றுக் கொண்டு பல்வேறு கடைகளைக் கட்டி, குறிப்பாக எக்சிபிஷன் என்று சொல்லப்படுகிற பொருட்காட்சிகளை அந்த இடத்திலே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் காசினார் நாடு, கோனூர் நாடு, கீழ்வெளி நாடார் வர்கீஸ்வரர் கோயிலில் திருப்பணி வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலை நடைபெற அரசு மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழ்வெளிநாடார் வர்கீஸ்வரர் கோயில் திருப்பணிக்கு அறநிலையத்துறை மானியம் மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த மானியத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற மகாமக விழா தேசீய மட்டத்தில் நடைபெறும் மிகப் பெரிய இரண்டாவது விழாவாகும். அங்கே பல்வேறு சுகாதார வசதிக் குறைவுகள் ஏற்படுகின்றன. ரோடு வசதி மிகவும் குறைவு. மேலும் அது மடங்களும், கோயில்களும் அதிகமாக உள்ள ஒரு பகுதியாகும். ஆனால், அங்கே மக்களுக்கு தங்கும் விடுதிகள் அதிகமாகக் கிடையாது. அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கையும், இந்து சமயக் கொள்கையும் ஒன்றாக இணைக்கப்பட்ட ஒரே வண்டியில் இரண்டு மாடுகளைப் பூட்டி அழைத்துச் செல்வது எவ்வளவு சிரமம் என்பது எனக்குத் தெரியும். இரண்டையும் ஒருசேர அழைத்துச் செல்கிற மாண்புமிகு அமைச்சரைப் பாராட்டி விடை பெற்றுக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அறநிலையத் துறைக்கான மானியக்கோரிக்கையை இங்கே சமர்ப்பித்து அனுமதி வாங்குகின்ற இந்த நேரத்தில் அதை நான் ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே கோயில்கள் மூலமாக கலைச் செல்வங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே அறநிலையத்துறை பல்வேறு மாநிலங்களிலே செயல்பட்டாலும், தமிழகத்திலேதான் கலைச் செல்வங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் அறநிலையத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. சிலைத் திருட்டுகள் தமிழ்நாட்டிலே குறைக்கப் பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் ஆட்சியில் சிலைத் திருட்டுக்கள் குறைந்து கோயில்களிலே இருக்கிற சிலைகள் எல்லாம் ஆங்காங்கு மக்கள் விரும்புகிற அளவுக்கு, அவர்கள் எந்தெந்த வழிகளிலே வழிபட விரும்புகிறார்களோ அந்த அளவுக்கு ஸ்தலங்களையும், திருக்கோயில்களையும் பாதுகாத்து வருகிறார்கள்.

ஆனால், 1976-க்கு முன்பாக அறநிலையத்துறை எந்த அளவிற்குக் கவனிக்கப்படாமல் சீரழிக்கப்பட்டது என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. 1976-க்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கோவில்களிலே, சிலைகள், சாமிகள் எல்லாம் இருப்பதற்கு பயப்பட்டார்கள். ஏன் என்றால், சிலைத் திருட்டுக்கள் அப்போதுதான் சர்வசாதாரணமாக நடைபெற்றது. தமிழகத்திலேயிருந்த சிலைகள் எல்லாம் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்திற்கும் போய் இருக்கின்ற நிலைகள் ஏற்பட்டன. திருட்டுக் குற்றங்கள்எல்லாம் சிலைத் திருட்டுக்கள் எல்லாம் சர்வசாதாரணமாக நடைபெற்றன என்பதைத் தமிழ்நாடு அறிந்திருக்கிறது. ஆனால் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால், காவல்துறை மூலமாக உரிய நடவடிக்கைகளை எடுத்து, திருட்டுப் போன சிலைகள் எல்லாம் இன்றைக்குக்கொண்டுவரப்பட்டு, அவைகள் தமிழகத்திலே மீண்டும் உரிய இடங்களிலே வைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே புரட்சித்தலைவருடைய ஆட்சியிலே, இன்று கோவில் செல்வங்கள் எல்லாம் மிக அதிகமான அளவிலே பாதுகாக்கப்படுகின்றன என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இப்போது கோவில்களுக்கு உள்ளாகப் போய், அவர்கள் தாங்கள் விரும்புகிற நேரத்திலே கோவில்களிலே வழிபடலாம், கோவில்களில் உரிய வழிபாட்டை நடத்தலாம் என்ற அளவில் எல்லாவிதமான சகல சலுகைகளும் தேவையான சலுகைகள் எல்லாம் மக்களுக்குக் கிடைக்கின்ற விதத்திலே தமிழ்நாடு அரசு, புரட்சித் தலைவருடைய அரசு, அறநிலையத்துறை மிகச் சீரோடும் சிறப்போடும் நிர்வகித்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஆனால் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தத் துறையை எந்த அளவிற்கு மிகக் குறை சொல்லிப் பேசுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. இந்த அரசு கோவில்களை எந்த அளவிற்குப் பாதுகாக்கின்றதோ, அந்த அளவிற்கு அவர்கள் — எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்று இந்தத் துறையைப் பற்றிக் குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நடைபெறாத குற்றங்களை எல்லாம் நடைபெற்றதாக பத்திரிகையிலே காட்டுகிறார்கள். ஊர்வலம் போகிறார்கள். அதேபோல் நாங்கள் பாத யாத்திரை போகிறோம் என்று சொல்லி, பல்வேறு விதமான செயல்களைச் செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்களிடத்திலே எடுத்துச்சொன்னார்கள். ஆனால் அறநிலையத்துறையை நிர்வகித்து வருகின்ற ஒரு நல்ல துறை, புரட்சித் தலைவரின் ஆட்சியிலே தான் இருக்கிறது என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே நாட்டுமக்கள் புரட்சித் தலைவருக்கு ஆதரவாக தீர்ப்பைச் சொல்லியிருக்கிறார்கள்.

திருச்செந்தூர் தேர்தலிலே இந்த அரசுக்கு எதிராக அவிழ்த்து விடப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுக்கள் எல்லாம், தமிழக மக்கள் திருச்செந்தூர் மக்கள் அதை எல்லாம் தூக்கி தூர எறிந்து விட்டார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே அறநிலையத் துறை மிக அருமையாகச் செயல்படுகிறது என்று நல்ல அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கியிருக்கிறார்கள். என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்த ஆட்சியை குறை சொல்கின்றவர்கள் எல்லாம், தமிழகத்திலே கடவுள் பக்தர்கள் நாங்கள் தான் என்று சொல்லுகின்ற ஆதினங்களோடு சேர்ந்து கொண்டு சாமி இல்லை என்று சொல்பவர்களோடு இன்று கூட்டுவைத்துக்கொண்டு பல்வேறு குற்றச்சாட்டுக்களை இந்த, அரசுக்கு எதிராகப் பேசுகின்ற காட்சியை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் ஆகவே அந்த வழியிலே இந்த அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்றும், புரட்சித் தலைவர் ஆட்சிக்கு இழுக்கு தேடித் தரவேண்டும் என்றும், எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த முயற்சியிலே ஈடுபட்டாலும் தமிழக மக்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தமிழ்நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் அறநிலையத்துறை மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கோவில்கள் திருப்பணிகள் எல்லாம் செய்ய வேண்டும் என்று அந்த நேரத்திலே நாட்டு மக்கள் பல்வேறுவிதமான கோரிக்கைகளை எல்லாம் வைத்தார்கள். ஆனால் அந்த நேரத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு கவனித்ததா என்றால் கவனிக்க

வில்லை. கவனிப்பதே இல்லை என்பது மட்டுமல்ல. வேண்டுமென்றே புறக்கணித்தார்கள். கோவில்களுடைய திருப்பணிகளையெல்லாம் சரியாகச் செய்யாமல், அதற்கான நிதிகளை ஒதுக்காமல் அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல், அதைப் புறக்கணித்தார்கள் என்பதை நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–50)

ஆனால் இந்த அரசு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பதவி பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால் ஆண்டுதோறும் திருப்பணிகள் நடைபெறுகின்றன. பக்தர்களுடைய மனம், மக்களுடைய மனம் விரும்புகிற அளவிலே கோவில்களிலே இருக்கின்ற பணிகள் எல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. திருமண மண்டபங்கள் கட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே, புள்ளி விவரத்திலே மிக அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது சில முக்கிய திருப்பணிகள் நடைபெற்று வரும் கோவில்கள் என்று குறிப்பிட்டு, அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி திருக்கோவில், தென்காசியில் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறது. அந்தக் கோவிலை திருப்பணிச் செய்வதற்காக தேவையான நிதியை இந்த அரசு ஒதுக்கி, தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே, அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் திருவரங்கம், அதைப்போலவே அருள்மிகு வைகுண்டப் பெருமாள் மற்றும் காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு என்று, இப்படி இன்னும் பல்வேறு கோயில்களின் திருப்பணிகளைப் பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், சுசீந்திரத்திலே இருக்கிற தாணுமாலய பெருமாள் கோயிலில் 1880 ஆம் ஆண்டிலே திருப்பணி நடைபெற்றது. 1880 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 100 ஆண்டுகள் கழித்திருந்து. தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வரவேண்டும் என்று காத்திருந்து. அவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால், மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அதற்குப் பின்னால் அந்தக் கோவிலின் திருப்பணி நடைபெறுகிறது என்று சொன்னால், யாருடைய ஆட்சிக் காலத்திலே, திருக்கோயில்களின் திருப்பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன, கோவில்கள் சரிவர கவனிக்கப்படுகிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை, தானாகவே விளங்கும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அந்த அளவிற்கு மிகத் திறமையாக, மிகச் சிறப்பாக ஆட்சிப் பொறுப்பினை நடத்திச் செல்லும் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே, இந்த அரசு மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தெய்வங்களுக்கு மதிப்பு இல்லை. கோவில்கள் கவனிக்கப்படவேயில்லை. தமிழகத்தில் திருப்பணிகள் அப்போது நடைபெறவேஇல்லை. ஆனால், அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், தங்களுடைய தலையிலே கிரீடத்தைச் சூட்டிக் கொண்டார்கள். என்பதை வேதனையோடு குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அன்று முதலமைச்சராக இருந்தவர் தம்முடைய தலையிலே கிரீடத்தைச் சூட்டிக் கொண்ட காட்சியையெல்லாம் தமிழகம் பார்த்தது. ஆனால், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே, அவர்கள் வெள்ளி வாளை கோவிலுக்கு, கொடுக்கிறார்கள். வெள்ளித் தட்டை கோவிலுக்கு கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அதுவும் அப்படிக் கொடுக்கும் போது, புரட்சித் தலைவர் அவர்கள் மேடையிலேயே இதை நான் மாங்காடு கோவிலுக்கு அன்பளிப்பாக கொடுக்கிறேன்,, திருச்செந்தூர் கோவிலுக்கு அன்பளிப்பாக கொடுக்கிறேன் என்று அதே இடத்திலேயே சொல்லிவிடுகிறார்கள். அந்த அளவுக்கு இந்த ஆட்சிக்கும் அந்த ஆட்சிக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அன்றைய முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய தலையிலே கிரீடத்தை வைத்துக் கொண்டார்கள், ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புகளையெல்லாம் கோவில்களுக்கே சமர்ப்பித்து, அன்பளிப்பாக அளிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, கோவில் நிலங்களைப் பொறுத்த அளவிலே, கோவில் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்பதை என்னுடைய பணிவான கருத்தாகவும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமை பட்டிருக்கிறேன்.

கோவில் நிலங்களை குத்தகைக்காக வைத்திருப்பவர்கள் அந்த கோவிலுக்குரிய, குத்தகைத் தொகையை உரிய காலத்திலே செலுத்த வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை அரசு முனைப்பாக எடுக்க வேண்டும் என்றும் நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, கலப்புத் திருமணத்தை எடுத்துக் கொண் டால், இந்த ஆட்சியிலே கோவில்களின் மூலமாக, இந்து மதத் தைச் சேர்ந்த எல்லா சாதியைச் சேர்ந்தவர்களுக்கும் திருமணம் செய்து வைக்கிற ஒரு நல்ல நிலையெல்லாம் இருக்கிறது. 750 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை ஒவ்வொரு திரு மணத்திற்கும் கோவில் நிதியிலிருந்து செலவிடுகின்ற ஒரு நல்ல நிலைமைக்கும், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி யிலே அனுமதி. வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, கொடுக் கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையிலே, நடைபெற்ற திருமணங் கள் மொத்தம் 940 என்றும் அதிலே 605 திருமணங்கள் ஆதி திராவிட மக்களுக்காக நடத்தப்பட்டன என்றும் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆகவே, ஆதி திராவிட மக்களுக்கு, இந்து சமய அறநிலையத்துறை மூலமாக வும் மிகச் சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

கடைசியாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மதுரையிலே எப்படி ஒலி ஒளிக் காட்சி அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறதோ அது போல, தாணுமாலய சுவாமி இருக்கும் புகழ்பெற்ற சுசீந்திரம் கோவிலுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தருகிற மக்கள் எல்லாம் சுசீந்திரம் கோவிலுக்கும் சென்று தரிசனம் செய்கிற நிலைமையிலே மிகப் பெருமையொடு வரு கிறார்கள்.. ஆகவே அதனுடைய புராணங்களையும் வர லாறுகளையும் மிகத் தெளிவாக மக்கள் புரிந்து கொள்கிற விதத்திலே எடுத்துச் சொல்கிற வகையிலே சுசீந்திரம் கோயி லில் ஒலி—ஒளி காட்சி ஏற்பாட்டை தமிழக அரசு அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் என்னுடைய கோரிக்கையாகத் தெரிவித்து புரட்சித் தலைவர் ஆட்சியில் தமிழகத்திலே அறநிலையத் துறை மிடுக்கோடும் சீரோடும் மக்களுக்குச் செயல்படுகின்ற இந்த அரசை நான் வாழ்த்தி மானியக் கோரிக்கைகளை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்: நன்றி, வணக்கம். .

திரு ஜே. எஸ் இராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, அவை முன்வைக்கப்பட்டிருக்கிற அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் சார்பில் சில கருத்துக்ளைத் தெரிவிக்க முற்படுகிறேன். எனக்கு முன்னர் பேசிய ஆளுங்கட்சி உறுப் பினர் அருமை நண்பர் திரு முத்துக்கிருஷ்ணன் அவர்கள் தன் னுடைய முன்னுரையில் சில கருத்துக்களை வேகமாகத் தெரி வித்தார். அதிலே ஒன்று, கோயில்களில் நடைபெறுகின்ற அக் கிரமங்களை எதிர்த்து படுகொலை என்று சந்தேகப்படுகிற கொலை நிகழ்ச்சிகளைக் கண்டித்து அதற்கு நியாயம் வேண்டி ஊர்வலம் போவதைக் கிண்டல் செய்கிறவகையில் திரு முத்து. கிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். ஆளுங்கட்சியாக இன்றைக்கு இருக்கிற அ.தி.மு.க. மன்னிக்க வேண்டுசின் அ.இ.அ.தி.மு.க



எதிர்க்கட்சியாக சில மாதங்கள் இருந்ததை நீங்கள் உணர் வீர்கள். நீங்கள் கூட ஊர்வலம் போனீர்கள். நீங்கள் ஊர்வலம் போனது உங்களுக்கு எப்படி நியாயமோ அதைப்போல் வேறு ஒரு கட்சி தி.மு.க.வோ., தி.க.வோ. ஊர்வலம் போவதில் நீங்கள் குறை காணுவதில் பொருள் இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். பல்வேறு கட்சிகள் ஊர்வலம் போனாலும் அ.தி.மு.க. ஆட்சியை எதிர்த்து திருச்செந்தூர் கோயிலில் நடைபெறாத ஒரு குற்றத்திற்காக நீங்கள் ஊர்வலம் போனீர் கள். ஊர்வலம் போனதை தமிழ் மக்கள் புறக்கணித்து தி.மு.க.வின் சார்பிலே நடைபெற்ற ஊர்வலம் தவறு, புரட்சித் தலைவர் ஆட்சி செய்த நடைமுறை மிக மிகச் சரி என்று மக்களே தீர்ப்பளித்து விட்டார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றி. திருச்செந்தூர் கோயில் அதிகாரி கொலை செய்யப் பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் அனைத்துக் கட்சிகளும் ஊர்வலம் அன்றே நடத்தின, கடையடைப்புச் செய்தன, அ.தி.மு.க. உள்பட என்பதை திரு முத்துக்கிருஷ்ணன் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அ.தி.மு.க. உள்பட நடைபெற்றது. இல்லையென்றால் மறுங்கள், அது வேறு விஷயம்.

திரு. இரா. அமிர்தராஜ்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. உள்பட அங்கே அந்தக் கொலை குற்றத்திற்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் நடத்தியதாக ஒரு தவறான தகவலை இந்த அவைக்கு தருகிறார். அ.தி.மு.க. அதிலே சம்பந்தப்படவில்லை. நண்பர் திரு முத்துக்கிருஷ்ணன் அவர்கள் தெரிவித்ததைப் போல் தேர்தலில் நியாயமான தீர்ப்பை அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: எனக்கு விளக்கம் அளிப்பதற்கு மீண்டும் நீங்கள் வாய்ப்பை அளிக்கிறீர்கள். அ.தி.மு.க. வும் சேர்ந்து ஊர்வலம் போனது, தாலூகா ஆபிசில் மனு கொடுக்கப் பட்டிருக்கிறது. மனுக் கொடுத்தவர்களிலே அ.தி.மு.க. வினர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். கையெழுத்துப் போடா விட்டாலும் பரவாயில்லை, மனிதாபிமானத்தின் பேரிலே அவர்களும் அந்த ஆர்பாட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார் கள். நான் இன்னொரு பிரச்சினைக்கு வருகிறேன். தீர்ப்பு அளித்துவிட்டார்கள். திருச்செந்தூர் மக்கள் என்று நீங்கள்

சொல்கிறீர்கள். உண்மைதான். அதைநீங்கள் ஒத்துக்கொள்வதாக இருந்தால் பட்டதாரி தொகுதிகளிலும், ஆசிரியர் தொகுதிகளிலும் கூட டெபாசிட் போய்விட்டது. ஆகவே மக்கள் திசை மாறிவிட்டார்கள், ஆளுங்கட்சிக்கு அ.தி.மு.க. வுக்கு எதிராக வாக்குகளை அளிக்க முற்பட்டுவிட்டார்கள், காற்று மாறுகிறது திசை மாறுகிறது என்பதை உங்கள் வாதத்திலே நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டிவரும். ஆகவே நீங்கள் அடிக்கடி குறுக்கிட்டு நேரத்தை விணக்காதீர்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகள் தொகுதியைப் பொறுத்தவரை அ.தி.மு.க. அமைச்சரவையிலே பங்கு ஏற்றிருக்கிற மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் முதல் ரவுண்டிலேயே வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் தி.மு.க. வேட்பாளர் இரண்டாவது ரவுண்டிலே தட்டுத் தடு மாறுகின்ற மற்றவர்களுடைய வாக்குகளை எல்லாம் திரும்பத் திரும்ப எண்ணி கடைசியிலே 3 நாட்கள் கழித்து 56 மணி நேரம் எண்ணப்பட்டு அதற்குப் பிறகு தான் வெற்றி பெறுவதற்கான சிறிதான வாய்ப்பு பெற்றிருக்கிறார் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் அ.தி.மு.க. வுக்கு ஆதரவாக இருக் கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் நாட்டுமக்கள் புரிந்து கொண்டிருக்கிறார் கள் என்பதை நான் உணர்த்த விரும்புகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மேலும் எனக்கு வாய்ப்புக்களைத் தந்து கொண்டு போகிறீர்கள். தேர்தலில் தர்மராஜ் சந்தோஷம் டெபாசிட் காலியாகி இருக்கிறார். அதையும் நினை வில் வைத்துக்கொள்ளுங்கள் (குறுக்கிடுகள்) குமாரசாமி கூட அப்படித்தான் தோற்றிருக்கிறார். நான் பேசுவதிலே கருத்துக் களிலே கருத்து மாறுபாடு இருந்தால் கூறுங்கள் (குறுக்கீடுகள்) கிரீடம் வைத்ததுப்பற்றியும் மலர் வளையம் வைத்தது பற்றியும் தரக்குறைவாக இகழ்ச்சியாகப் பேசிய போது நாங்கள் பொறுத் துக்கொண்டு இருக்கவில்லையா? ஏன் உங்களுக்கு அந்த மனப் பான்மை இல்லை. திருச்செந்தூரிலே வெற்றி பெற்றுவிட் டோம், ஆகவே மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டார்கள், நீதிகோரி நெடிய பயணம் நடத்தியதாலே லாபம் இல்லை, மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று சொல்கிறீர்கள். உங்கள் வாதத்திற்கு ஒரு பதில் சொல்ல வைத்து விட்டீர்கள். திருசெந்தூர் தேர்தல் நடைபெற்ற அடுத்த நாளோ அதற்கு அடுத்த நாளோ அ.தி.மு.க.—அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளருடைய

(முற்பகல் 11-00).

மண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் சொல்லட்டும் ஆனால் எங்கள் கட்சியினுடைய பெயரை அ.இ.அ.தி.மு.க. என்று



சொல்லிக் கொண்டு இருப்பதனால் அண்ணாவை அழித்துவிட முடியாது. எப்படியும் அண்ணாவை காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும். அண்ணா என்ற பெயரைச் சொல் லுங்கள் அதில் ஒன்றும் கவலை இல்லை. அண்ணா அவர்கள் போய்விட மாட்டார்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணாவினுடைய கொள்கையை உலகத் தில் அழிப்பதற்கு இன்னும் எவனும் பிறக்கவில்லை. உங்களா லும் முடியாது, யாராலும் முடியாது. (குறுக்கீடு) அ.இ.அ.தி.மு.க. என்று இல்லை என்று சொல்கிறிர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்களே நேருக்கு நேர் பார்த்து விவாதம் நடத்த முடியாது. என்னைப் பார்த்து தான் பேச வேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் இந்த சபையில் இந்த மானியத்திற்கு சம்பந்தம் இல்லாத விஷயங்களை எல்லாம் முன்பு பேசியிருக்கி றார்கள். அதோடு திருச்செந்தூர் தேர்தல் முடிவுற்ற அடுத்த நாளோ அதற்கு அடுத்த நாளோ திரு. ப.வு.ச. அவர்கள் மகள் திருமணத்தில் கலந்து கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நீங்கள் படித்து இருக்கக் கூடும் அல்லது படித்து இருக்க வேண்டும், படித்து இருந்தால் ஞாபகத்தில் வைத்து இருக்க வேண்டும். மக்கள் நம்மை மறந்தாலும் மறந்து விடுவார்கள். எதிரிகளுக்குக் கூட துணை போகலாம். ஆகவே எச்சரிக்கையாக இருங்கள் என்று முதல்வர் அவர்கள் பேசினார்கள். அதற்கு என்ன அர்த் தம் ? மிகப் பெரிய வெற்றி பெற்ற அந்த மகிழ்ச்சியில் வந்த வார்த்தைகளா அது ? ஆகவே மக்கள் மாறக் கூடும் என்பதை முதல்வர் அவர்களே உணர்ந்து இருக்கிறார் என்கிறபோது நீங்கள் இதிலே பெரிதுபடுத்த வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, வேண்டாத வேலைகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கொள்கிறார்கள். நான் பேசாமல் உட்கார்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். என்னை இழுக்கிறீர்கள். நான் சொன் னதே உங்களுக்காகத்தான். நீங்களே யோசியுங்கள். வார்த்தை அது தான். (கைத் தட்டல்).

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய பேச்சை நான் கோட் செய்தேன். அதற்கு அவர் வேறு பொருள் கொடுப் பதற்கு நான் குறுக்கே நிற்க போவது இல்லை. இந்த மானிய கோரிக்கையின் மீது நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்பு கிறேன். கல்யாண மண்டபங்கள் கட்டுவதையோ, ஆலய

ஊழியர்களுக்கு ஏதோ நன்மைகள் செய்வதையோ நான் குறை
கூறவில்லை ; குறுக்கே நிற்கவில்லை. இது வழக்கமாக எல்லா
அரசுகளும் நடத்தி வருகிற காரியங்கள் தான். ஆனால் மிக
முக்கிய குறை இன்று அறங்காவலர்களை பல கோயில்களில்
இன்னும் நியமிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஒரு கால் லிஸ்ட்டை வாசிக்கக் கூடும். ஆனால் நான் சொல்வது
நியமிக்காத கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க வேண்
டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். சான்றாக மன்றாடி
யாருடைய குடும்பத்தார் நிர்வகித்து வந்த ஒரு கோவில் அந்தப்
பகுதியில் இன்றைக்கு நல்ல சொத்து சுகம் உள்ள ஒரு கோவிலாக
இருக்கிறது. அதற்கு கூட டிரஸ்டிகள் நியமிக்கவில்லை. அது
போல் ஈரோடு மாவட்டத்தில், கோயம்பத்தூர் மாவட்டத்தில்
வேறு பல இடங்களில் இருக்கின்றன. சீக்கிரம் நியமிக்க வேண்டும்.
நியமித்தால் தான் கொஞ்சமாவது ஒழுங்காக நடப்பதற்கு
முயற்சிகள் நடைபெறும், அது போல் தஞ்சை மாவட்டத்தில்
பல கோயில்கள் பாழ் மண்டபங்களாக வௌவால்கள் தொங்கும்
இடங்களாக மாறிவிட்டு இருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள்
வருகின்றன. தஞ்சை பகுதியில் நல்ல வருமானம் வரு
கிறது. தென்னந் தோப்பு, வீடு, நிலம் எல்லாம் இருக்கின்றன.
ஆனால் இவ்வளவு வந்தும் ஏன் கோயில்கள் ஷீணித்து போகின்
றன. பராமரிப்பு இல்லை என்பதையும் யார் அந்தக் கோயில்
பெருச்சாளிகள் என்பதையும் எல்லாம் கண்டுபிடித்து
நடவடிக்கை எடுக்க நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஏற்கனவே, இந்த மன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்
என்னுடைய மதிப்பிற்குரிய திரு. நெடுமாறன் அவர்கள், தமிழகத்
தில் உள்ள கோயில்களின் நகைகள் சொத்துக்கள் போன்றவை
களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்ற சந்தேகம் வருகிறது :
எனவே, இதுபற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டு
மென்றுதெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்
கிறோம். அது பற்றி இந்த அறிக்கையில் கூட சில விவரங்களை
நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் வேறு சில விவரங்கள்
சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர முக்கியமான பிரச்னை
யாகிய இந்தக் குழு அமைப்பதைப் பற்றிய விவரம் இல்லை.
எனவே, இது குறித்து பதில் சொல்லுவார்கள் என்று நான்
எதிர்பார்க்கிறேன் அப்படிப்பட்ட ஒரு குழுவை அமைக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதம் மாறினால் வேலையிழப்பு ஏற்படுகின்ற நிலைமை,
அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறினால்
வேலையிழப்பு என்று உத்தரவிட்டிருப்பதாக நாங்கள் அறி
கிறோம். அது உண்மை என்றால் அது எப்படி நியாயம் ஆகும்?
மதம் மாறுவது என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்
வொரு குடிமகனுக்கும் வழங்கியிருக்கின்ற அடிப்படை உரிமை
யாகும். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை இங்கே
வைத்திருக்கிறோம். ஆனால் அவருடைய கொள்கைகளைப் பின்



பற்ற முடியாமல் தவிக்கிறோம். இலட்சம் மக்களை அழைத்துக்
கொண்டு அவர் புத்த மதத்திற்குச் சென்றார். ஆனால் அப்
பொழுது கூட மைய அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்
கொண்டு வருவதற்குத் தயங்கியது. இப்படி மத்திய அரசுக்கு
இல்லாத துணிச்சல் தமிழக அரசுக்கு வந்திருப்பது தான் ஆச்சரிய
மாக இருக்கிறது. இதன் மூலம் இந்து மதத்திற்கு ஆதரவாக
நடக்கிறதோ, செக்கூலரிசத்தை விட்டு விட்டு எங்கோ செல்
கிறதோ, மதச் சார்பற்ற அரசாகக் கருதப்படுவது இந்த
அமைச்சரவைக்குப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் மக்கள்
மத்தியில் எழுகிறது.

மதம் மாறுவது என்பது அவரவர்களுக்கு உள்ள உரிமை.
ஒருவர் இந்துவாகவே இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.
ஒருவர் ஏன் இந்துவாகவே இருக்க வேண்டும்? அவர் மதம்
மாறலாம். அதைத் தடுப்பதற்கு உலகத்தில் இந்த அரசாங்
கத்திற்கு மட்டுமல்ல, எந்த அரசாங்கத்திற்குமே உரிமை கிடை
யாது. இராமநாதபுரம் மாவட்டத்திலும், திருநெல்வேலிக்குப்
பக்கத்திலும் காவலர்களின் துணை கொண்டு அந்த மக்களை
அடக்குவதாகச் சொல்கிறார்கள். அந்த மக்களுக்கு முஸ்லீம்கள்
உதவி செய்யக் கூடாது என்று சொல்வதும், முஸ்லீம்கள்
அரிசனங்களுக்கு உதவக் கூடாது என்பதும், மதம் மாறிய
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேறு இந்துக்கள் உதவி செய்யக்
கூடாது என்பதும் போன்ற நிகழ்ச்சிகள் நடப்பதாகப் பத்திரிகை
களில் செய்திகள் வருகின்றன. அகில இந்திய யூனியன் முஸ்லீம்லீகின்
நிர்வாகக் குழுவில் கூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.
இப்படித் தாமாகவே விரும்பி வந்து மத மாற்றம் பெற்றவர்களை,
அரசு போலீசாரின் துணையோடு கொடுமைப்படுத்துவதாகச்
சொல்கிறார்கள். இது உண்மை என்றால் அந்த அதிகாரிகளின்
மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அதிகாரிகளைத்
தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் மாண்புமிகு
அமைச்சரவர்கள் சொன்னார்கள். செக்கூலர் ஸ்டேட் ஆகி
விட்டது. மதத்தின் சின்னமான கோபுரத்தைத் தமிழக அரசின்
சிம்பலாக வைத்திருப்பது பற்றிய கேள்வி வந்தது என்று நினைக்
கிறேன். அது கலைக்காக வைக்கப்பட்டது என்று மாண்புமிகு
அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் கூட அந்தப்
பதிலில் எங்களைப் போன்றவர்களுக்கு முழுத் திருப்தி ஏற்பட
வில்லை. அப்படி என்றால், திராவிடக் கலையின் சின்னமாக
எத்தனையோ இருக்கின்றன, அவற்றின் ஒன்றை வைக்கலாம் ;
மகாபலிபுரத்தில் உள்ள சிற்பங்களில் ஒன்றை வைக்கலாம் ;
கோவிலை அல்ல, வேறு ஏதாவது ஒன்றை வைப்பதற்கு முயற்
சித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத
னால் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும், பௌத்தர்களும், ஜைனர்
களும் திருப்திப்படுவார்கள் ; நாம் ஒரு நல்ல செக்கூலர்
ஸ்டேட்டை நடத்துகிறோம் என்ற உணர்வு வரும்.

கருவறையில் பிற ஜாதியினர் நுழையக் கூடாது என்று சட்ட திட்டங்கள் அல்ல, முறையாக —கன்வென்ஷனாக வைத்திருக்கிறார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 17-வது விதியின் படி நாம் தீண்டாமை ஒழிப்புப்படி நடவடிக்கை எடுக்கலாம்; மத்திய அரசோ அல்லது மாநில அரசோ நடவடிக்கை எடுக்கலாம். கருவறைக்குள் சிலர் நுழையக் கூடாது; கோவில் பூசாரிகளாகவோ அர்ச்சகர்களாகவோ வேறு பல குலத்தவர் அல்லது அனைத்து ஜாதியினரும் வரக் கூடாது என்ற அந்தக் கருத்துக்களை வரவேற்கிறீர்களா ?

பெரியார் டிரஸ்டியாக இருந்த ஈரோடு பகுதியில், அவர்கள் அந்தந்தக் கோயிலுக்கு அந்தந்தக் கோயிலுள்ள வேறு பல ஜாதியினரைத் தர்மகர்த்தாவாக நியமித்ததாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாம் கவனித்து எல்லோரையும் அர்ச்சகராக ஆக்க வேண்டும் என்ற சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் —கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தோம். ஆனால் அதை உச்ச நீதிமன்றத்திற்கு சனாதினிகள் சென்று மாய்த்து விட்டார்கள். சட்ட திட்டங்கள் பற்றிய கருத்தரங்கம் ஒன்று டெல்லியிலே நடந்தது. அதில் ஆட்சியின் சார்பாக நானும், திரு. குலசேகரன் அவர்களும் சென்று கருத்துக்களைத் தெரிவித்தோம்.

''தேசப் பிதா மகாத்மா காந்தி, தாழ்த்தப்பட்டவர்களை, ''கடவுளின் பிள்ளைகள்'' (ஹரிஜன்) என்றார். இதில் வேடிக்கை என்னவென்றால் கடவுளின் பிள்ளைகள், தங்களது தந்தைக்கே பூஜாரியாக முடியவில்லை; உச்சநீதிமன்றம், இப்பிரச்னையை பழைய ஆகமங்களின் அடிப்படையில் அல்லாமல்-சமுதாய சமத்துவத்தின் அடிப்படையில் அணுகியிருந்தால், நான் நமது சட்டங்களின் உயர்வு கருதி பெருமைப்பட்டிருக்கலாம். எனவே, சமுதாய நீதிபற்றிய பிரச்னையிலேகூட, உச்சநீதிமன்றம், ஆகமங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை மானுட சமத்துவக் கொள்கைக்குக் கொடுக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம்; உச்ச நீதிமன்றத்தின் நீதிகளை நான் குறை கூறவில்லை. ஆனால் நமது அரசியல் நிர்ணய சட்டத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது தவறாகாதல்லவா? 234 பேரில் 200 மக்கள் பிரதிநிதிகளால் தமிழக சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட இச்சட்டம், விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரால் முடமாக்கப்பட்டிருக்கிறது என்பதை வேதனையுடன் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுதான் சமுதாய நீதியா'' என்று நான் அந்தக் கருத்தரங்கத்திலே பேசினேன்.

(முற்பகல் 11-10)

மனிதாபிமானத்தைவிட ஆகமம் என்ன பெரியது. ஆனால் இப்போது அரசாங்கத்தின்போக்கு எப்படி இருக்கின்றது என்றால் ஆகமமும், ஆச்சாரமும்தான் பெரியது என்பது மாதிரித் தெரிகின்றது. இங்கே திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் கூட சொன்னார்கள். ஆனால் நாவலர் அவர்கள் கூட கிரிடம் வாங்கி இருக்கிறார்கள். அது. திரு. முத்துக்கிருஷ்ணனுக்குத் தெரியாது.





நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் கிரிடத்தை வைத்துக் கொண்டாலும் பகுத்தறிவு இயக்கத்திலே வளர்ந்த எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்களும் மற்றவர்களும் சனாதனிகளின் காலில் போய் விழவில்லை. ஜாதியாக இருந்தாலும், மதமாக இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் தான். ஆனால் ஈக்குவல் ரைட்ஸ் என்பதை ஒத்துக்கொள்ளாமல் சட்டம் எல்லோருக்கும் சமம் என்பதை ஒத்துக் கொள்ளாமல் ஏதோ தெய்வீகம், தெய்வீக வணக்கம் என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கின்ற அப்படிப்பட்ட சனாதனிகளின் காலில் போய் விழுவதை விட யாராவது அன்பாக வைத்த மலர் கிரீடங்களை வாங்கிக்கொள்வதில் எந்த விதமான தவறும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக ஒரு பெரிய சர்ச்சை இருந்து வருகின்றது. உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது அண்ணா அவர்களின் கொள்கை. அதுதான் பொதுவுடைமைக் கட்சிகளின் கொள்கை. அது தந்தை பெரியார் அவர்களின் கொள்கை என்பதையும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். வீடு இல்லாதவர்கள் மாநாடு, நிலமற்றோர் மாநாடு, குடியிருக்க மனையற்றோர் மாநாடு போன்றவற்றை எல்லாம் நடத்தி, அவர்களுக்கெல்லாம் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற மிகப்பெரிய கொள்கைகளை எல்லாம் வலியுறுத்தியவர்களில் தந்தை பெரியார் அவர்களும் ஒருவர். இது எல்லாம் பழைய சமாச்சாரம். ஆனால் அந்தக் கொள்கைகளுக்கெல்லாம் மாறாக, அண்ணா அவர்களின் கொள்கைக்கும் மாறாக இப்போது கோயில் நிலங்களிலிருந்து வரவேண்டிய பாக்கி வரவில்லை. 25 பெர்சன்ட் கூட கலெக்ட் பண்ண முடியவில்லை என்றெல்லாம் கூறி இப்போது நீங்கள் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அதிலும் கூட ப்ரைவேட் ட்ரஸ்டி மற்றும் பல அறநிலையங்கள் பற்றி இல்லை. அரசாங்க சம்பந்தப்பட்ட, அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும்தான் எடுத்திருக்கிறீர்கள். ஆகவே பல விவசாயிகளும், மற்றவர்களும் பாதிக்கப்படுகின்ற வகையிலே, கொடுமைப்படுத்தப்படுகின்ற வகையிலே பழைய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நடந்ததைப் போன்ற நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இது 17, 18 ஆம் நூற்றாண்டுகளைத்தான் நினைவுப்படுத்துகின்றது. எனவே சாதாரண மக்கள் நெருக்கடியில் தள்ளப்பட்டால் அதன் காரணமாக மிகப்பெரிய புரட்சி வெடிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவிற்குச் செல்லும்போது திருவாரூரில் உள்ள அவருடைய குலதெய்வமான அங்காளபரமேஸ்வரி கோயிலுக்குப் போய் அந்த சாமி காலிலே போய் விழுந்து

கும்பிட்டது தெரியுமா? அதேபோல் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு வந்து கலைஞர் அவர்களின் பெயரில் அவருடைய துணைவியார் அர்ச்சனை செய்தது தெரியுமா?

**திரு. ஜே. எஸ். இராசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் பாயின்ட் ஆஃப் ஆர்டரிலேயா வருகின்றது. நான் இதற்கு பதில் சொல்ல?......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு எதிராகப் போய் விட்டதால் உடனே பாயின்ட் ஆஃப் ஆர்டரா என்று என்னிடத்திலே கேள்வி கேட்கிறீர்களே; நீங்கள் இதற்கு பதில் சொல்லுங்கள்.

**திரு. ஜே. எஸ். இராசு:** கலைஞர் கருணாநிதி அவர்கள் கோயிலுக்குப் போனார்கள், அர்ச்சனை செய்தார்கள் என்றெல்லாம் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தாராளமாக கற்பனையிலே மிதந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமானால் சத்தியம் பண்ணுகிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** நீங்கள் சத்தியம் பண்ணலாம், ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ, அல்லது தலைவருக்கோ அப்படி எங்கேயும் யாருடைய காலிலேயும் சென்று விழவேண்டும் என்ற அவசியம் என்றைக்குமே இருந்தது இல்லை.

அடுத்து கோயில் நிலங்களிலே இருந்து வருமானம் வரவில்லை என்று கூறிக்கொண்டு கோயில் நிலங்களிலே விவசாயம் செய்பவர்களையும் மற்றவர்களையும் அதிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். இந்து மத கோயில் பரிபாலன அமைப்புக்கள். "Hindus hail Government move to exempt temples from Tenancy Act."

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்சவரம்பு கொண்டுவந்து நிலத்தை எடுத்தோம். மிச்ச நிலம்தான் இவை எல்லாம். ஆகவே இந்த நிலங்களையும் கேரளாவிலே இருப்பது போல் உழுகின்ற விவசாயிகளுக்கு சொந்தம் என்ற தத்துவத்தின் பிரகாரம் 10 ஆண்டு, 15 ஆண்டு என்று நிலத்திலே வேலை செய்கின்ற விவசாயிகளுக்குக் கொடுப்பது தான் நியாயம். சத்துணவுத் திட்டத்திற்கென்று 200 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். இதற்காக ஒரு 34 கோடி ரூபாய் என்ற அளவிலே ரைட் ஆஃப் பண்ணலாம். அப்படிச் செய்து கேரளாவிலே இருப்பது போல் நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களும், கோயில் சொத்துக்களும் பொதுமக்களின் நன்மைக்காகத்தான் பயன்படவேண்டும். ஆனால்



அந்தச் சொத்துக்களில் இருக்கின்ற தனிப்பட்டவாகள் எது
வுமே கொடுக்காமல் ஏப்பம் விட்டுக்கொண்டிருப்பதைத் திரா
விட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆதரிக்கிறார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** ஏப்பம் விடுகிறவர்களை ஏப்பம்
விடுவதற்கு முன்பே பிடிக்க வேண்டும், விட்ட பிறகாவது பிடிக்க
வேண்டும். அதிலே நாம் ஒன்றும் குறை. சொல்லவில்லை.
ஆனால், மற்ற மதங்களுடைய சொத்து, டிரஸ்டிலே வருகின்ற
வருமானம் எல்லாம் பொதுச் சமுதாயத்திற்குப் பயன்படுகிறது.
நீங்கள் சொல்கிற அந்தக் கோவில் பாதுகாப்புக் குழு இருக்
கிறதே "Use of temple funds—Hindus make plea"

சேலத்திலே கூடி தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மதக்
காரியத்திற்கு, கோவிலுக்கு ஊழியம் பண்ணுவதற்குத்தான்
அந்தப் பணம் செலவழிக்க வேண்டும். மற்றபடி ஃனிதாபி
மான, கல்வி, மற்றும் பல்வேறு காரியங்களுக்கு இந்த ரிலிஜி
யஸ் பன்ட் செலவிடப்படக்கூடாது என்று தீர்மானம் போடு
கிறார்கள். நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ, இல்லையோ?
அப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது. ஆகவேதான் அத்தகைய
பணம் பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** இப்பொழுது கோவில் சொத்
திலிருந்து கல்யாணங்கள் நடக்கின்றன. கோவில் சொத்தி
லிருந்து பள்ளிக்கூடங்கள் கட்டுகிறார்கள். கோவில் சொத்தி
லிருந்து சமபந்தி போஜனங்கள் நடக்கின்றன. பொதுக் காரி
யத்திற்குப் பயன்படாமல் வெறும் மதக் காரியத்திற்கு மட்டுமா
பயன்படுகிறது? The concept must change because the Government has
changed now. இப்பொழுது உள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர்
ஆட்சியிலே இன்றைக்குப் பலவிதமான முன்னேற்றமான காரியங்
கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும்
ஒலி). ஆயிரம் அரிசனப் பெண்களுக்கு கருமாரியம்மன் கோவிலில்
தாலி வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள்; கல்யாணம் செய்து
கொடுத்திருக்கிறார்கள். அது பொதுச் சொத்து இல்லையா?
பொதுக் காரியத்திற்குப் பயன்படவில்லையா? அதற்கு எங்கே
யிருந்து பணம் வரும்? இந்த மாதிரி கோவில் நிலத்திலே இருப்
பவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் பணம் வருமா என்ன?

**திரு. ஜே. எஸ். இராசு:** துணைத் தலைவர் அவர்களே.
காரியங்கள் நடைபெறவில்லை என்று சொல்லவில்லை.
ஆனால், முழுக்க, முழுக்க, இன்னும் அதிகமாக, வேகமாக
காரியங்கள் நடைபெறவேண்டும். அது கூடாது என்றுதான்
இன்றைக்கு அந்தக் கோவில் பாதுகாப்புக் குழு—அந்த டெம்
பிள் டிரஸ்டுகள் தீர்மானம் போடுகிறார்கள். அது ஒன்றும்
வலிவில்லாமல் போடுகிற தீர்மானம் அல்ல.

ஒரே ஒரு விஷயம் சொல்லி முடித்துவிடுகிறேன்.
திருச்செந்தூரை நான் விட்டுவிட்டாலும்கூட **பற்றி நான்
சொல்லியாக வேண்டும். என்னுடைய மாவட்டம்—பக்கத்திலே
இருக்கிற ஊர்; **அவர் பெயரைப் பற்றி அக்கறை இல்லை. 7
ஆண்டுகளாக இருக்கிறார். ஏன் அவர் 7 வருஷமாக அங்கே இருக்க
வேண்டும்? 3. வருஷத்திலே மாற்றலாம். அல்லது 4 வருஷத்
திலே மாற்றலாம். தொடர்ந்து அவர் இருக்கிறார். சில பிரச்
சனைகள் வெளிப்பட்டபிறகும்கூட அவர் அங்கேயே இருக்கிறார்.
சந்தேகம் என்றால்கூட அவரை மாற்றி இருக்க வேண்டாமா?
ஏ. சி. கார் வைத்திருக்கிறார். அமைச்சர் வீரப்பனார் அவர்
களுக்கு ஒரு ஏ. சி. கார் இருந்தால் நான் உள்ளபடியே மகிழ்ச்சி
அடைவேன். ஆனால் உங்களுக்கு இல்லை. வைத்துக் கொள்ள
முடியவில்லை. *** ***

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய ஒரு அதிகாரியைப்
பற்றி பொறுப்புள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசு
கின்றபோது தயவு செய்து சான்றுகளோடு பேசவேண்டும்.
அவர்கள் இந்த அரசிலே இருக்கிற பொழுதும் பணியாற்று
வார்கள். முன்னாலே உங்கள் அரசு இருந்த பொழுதும் பணி
யாற்றினார்கள். இனிமேல், என்றைக்காவது மாண்புமிகு புரட்
சித் தலைவர் அவர்களே விரும்பி இந்தப் பொறுப்பு வேண்டாம்
என்று போனதற்குப் பிறகு யாராவது வந்தால் அந்த அரசிலேயும்
பணியாற்றுவார்கள். ஆகவே, மக்களுக்காகப் பணியாற்றுகின்ற
ஒரு அரசு அதிகாரியின் மீது இப்படிப்பட்ட ஒரு ஆற்றலை,
பழியை, ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளை, அவர் பதில்
அளிக்க முடியாத இந்த இடத்திலே, மாண்புமிகு உறுப்பினர்
தெரிவிப்பது அவ்வளவு முறை அல்ல. அவர் ஏதோ ஏ. சி. கார்
வைத்திருக்கிறார் என்று குறிப்பிடுகிறார். அதற்கு ஆதாரம்
இருக்கிறதா? ஏர் கண்டிஷன் கார் எங்கே இருக்கிறது? அது
ஆலயத்திற்குள்ள கார். அதை ஏர் கண்டிஷன் பண்ணச் சொன்
னதே நான்தான். அதை எங்களுக்காக அல்ல. அதிகாரிகளுக்காக
அல்ல. அந்த ஆலயத்திலே அந்தக் காரை வைத்து வருமானம்
திரட்டலாம் என்பதற்காக ஏர் கண்டிஷன் பண்ணச் சொன்னேன்.
அதனாலேதான் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் போன்ற
முக்கியஸ்தர்கள் அங்கே பயணம் செய்கின்றபோது அமைச்சர்கள்
போகின்றபொழுது, அதை கலெக்டர் அலுவலகத்திலே இருந்து
வாடகைக்கு எடுக்கிறார்கள். யார் பயணம் செய்தாலும் அதிலே
வாடகை வருகிறது. அந்தக் கார் அங்கே ஆலயத்திற்கென்று
ஒதுக்கப்பட்டு வருமானம் இல்லாமல் இருப்பதை வருமானம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.



உள்ளதாக மாற்றுவதற்காகத்தான் அந்த வசதி செய்யப்பட்டி
ருக்கின்றது. ஆகவே, அங்கேயிருக்கின்ற அந்த ஏ. சி. கார்
அந்த அதிகாரியினுடைய கார் என்று தவறாக எண்ணி இங்கே
குற்றம் சுமத்தக் கூடாது. அவர் 7 ஆண்டுகளாக அங்கே இருக்கி
றார். ஏன் அவரை மாற்றவில்லை என்று சொன்னார்.
அதற்கு அரசு விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால்
குற்றச்சாட்டை ஒரு அரசு அதிகாரியின் மீது மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இங்கே சுமத்துவது சரியல்ல என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே
சொல்லி இருக்கிறேன். குற்றச்சாட்டு ஏதாவது சொல்ல வேண்டு
மென்றால் உறுப்பினர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும்.
நேற்று கூட சொல்லப்பட்டது. அவையில் இல்லாதவர்களைப்
பற்றி பேசக் கூடாது என்று. (குறுக்கீடு) குற்றச்சாட்டுக்களை
முன்னாலே எழுதிக் கொடுக்க வேண்டும். அவையிலே இல்லாத
வர்களைப் பற்றி பேசக் கூடாது. ஏற்கெனவே ஒரு அதிகாரியைப்
பற்றி விவாதிப்பதற்காக இங்கே வந்தபொழுது அவைக் குறிப்பி
லிருந்து நீக்கியிருக்கிறேன். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டோடு
ஓர் அதிகாரியை இணைத்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து
நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்கள் பேசிக் கொண்
டிருக்கின்றார்கள். இந்தக் கட்சியினுடைய பொறுப்புமிக்க
தலைவர் அவர்கள் முன் வரிசையிலே இங்கே உட்கார்ந்து கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, எழுந்து ஏதாவது விளக்கம் பெற
வேண்டுமானால் தலைவருக்கு உரிமை இருக்கிறது. அந்தக்
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் எழுந்து—பேசுகிற
உறுப்பினரைத் தவிர, விளக்கத்தைக் கேட்பதற்கு மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கிறீர்களோ, எனக்குத்
தெரியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே
அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டு
இருக்கிறது. எந்தக் குற்றச்சாட்டைச் சொன்னாலும் எழுதிக்
கொடுக்க வேண்டும். திடீர் திடீர் என்று எழுந்து சொல்ல
முடியாது. அப்படியென்றால் யாருக்கும் பாதுகாப்பு இருக்காது.

(முற்பகல் 11-10)

திரு. அ. ரகுமான்கான்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்
காருங்கள். ஏற்கெனவே சொன்ன குற்றச்சாட்டு அவைக்குறிப்பில்
இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) எந்தக் குற்றச்சாட்டைச்
சொன்னாலும் முதலில் அதை எழுதிக் கொடுக்க வேண்டும்.
திடீரென்று எப்போது வேண்டுமானாலும் சொல்ல முடியாது.
அப்படிச் சொல்வதென்றால் இங்கே யாருக்கும் பாதுகாப்பு
இருக்காது.

திரு. அ. ரகுமான்கான்: : துணைத்தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பு குறித்து நான் வேறுபட்ட கருத்துச் சொல்லவில்லை. இந்த அவையின் உரிமைகள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பது உங்களுடைய கடமையாகும். சட்ட மன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளைப் பற்றிய குற்றச்சாட்டு சொல்கின்ற போது முன்கூட்டியே நோட்டீஸ் அறிவிப்பு தரவேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால் இங்கே நேற்றைக்கு கூட போலீஸ் மானியத்திலே பல்வேறு அதிகாரிகளைப்பற்றி குற்றச்சாட்டுக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதாரம் இல்லாமல் அதிகாரிகளைப் பற்றி குற்றச்சாட்டுக்கள் சொல்வது தவறாகும். ஆனால் குற்றச்சாட்டு சொல்கின்றபோது அதற்கும் ஒரு வாரம் முன்னால் எழுதிக் கொடுத்து, அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு பிறகு விவாதிக்க வேண்டுமானால் சபையிலே எந்தக் குற்றச்சாட்டும் சொல்ல முடியாமற் போய்விடும். எனவே இது உறுப்பினர்களின் உரிமைகளை பாதிக்கின்ற விஷயம். ஆகவே, ஆதாரத்தோடு பொறுப்போடு சொல்லவேண்டும் என்பது நியாயம்.

*    *    *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஏற்கனவே முடிந்த விஷயம், என்பதால் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். காவல் துறை மானியத்திலே பேசியவர்கள் ஏதோ சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லி இருக்கலாம். நான் ஏன் குறுக்கிடவில்லை, பொறுத்துக் கொண்டு இருந்தேன் என்றால், அவர்களுக்கு விளம்பரத்திற்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில், அவ்வப்போது ஏதாவது சொல்லிவிட்டு அவைகள் பத்திரிக்கையில் வரட்டும் என்ற முறை இருக்குமானால் அது அவர்களுக்கு இலாபமானால், போனால் போகட்டும் என்று தான் பேசாமல் இருந்தேன். (குறுக்கீடு) தயவு செய்து நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள். நாங்கள் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலே இருக்கிறோம். எந்தக் குற்றச்சாட்டைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டியது எங்களுடைய பொறுப்பிலே இருக்கின்ற பதவிக்குரிய கடமையாகும். அதற்குப் பிறகு விளக்கம் தரவேண்டியதும் எங்களுடைய கடமை. ஆகவே, உறுப்பினர்கள் தங்களுக்கு வந்திருக்கின்ற செய்திகளை வெளியிடலாம். அது உண்மையா, இல்லையா என்பதைத் தெரிந்துக் கொள்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகவே, குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால் தலைவருடைய அனுமதியைப் பெற்று சொல்வார்களானால், அது கிடைத்த உடனே அவர்கள் எங்களிடத்தில் கேட்பார்கள். அது எங்களுக்கு வரும். உண்மை நிலையை அறிந்து நாங்கள் பதிலைத் தயாரித்து வைத்துக் கொள்ளலாம். நாங்கள் பதில் சொல்வதற்கு அது

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



உதவியாக இருக்கும். முதலிலே சொல்ல வேண்டும் என்பது அதை சபையிலே வெளியிடலாமா என்பதைப் பற்றி தலைவர் அவர்கள் முடிவு செய்வதற்கு உரிமை இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் ; அதுதான் முதலில் தலைவரிடம் காண்பிக்க வேண்டும் என்று சொல்வதற்கு அடிப்படையான காரணமாகும்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நான் சொல்வது........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசிவிட்டீர்கள். ஆதாரம் இல்லாமல் எந்தக் குற்றச்சாட்டும் சொல்ல முடியாது. விவாதிக்க வேண்டும் என்பதற்காக குற்றச்சாட்டைச் சொல்வதற்கு இது இடமல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆதாரத்தோடு பேசலாம் இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆதாரம் இருந்தால் காண்பித்து விட்டு பேசுங்கள். ஆதாரம் இல்லாமல் பேச முடியாது. அப்படிப்பட்ட விவாதங்கள் நிச்சயமாக அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. ஜே. எஸ். இராசு :** துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு பேச வேண்டுமென்றால், ஆதாரத்தோடு தான் ஏ. சி. கார் இருக்கிறது என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஏ. சி. கார் வருமானத்தைப் பெருக்குவதற்கும், அமைச்சர்கள், முதலமைச்சர் போவதற்கும் என்றால் எனக்கு அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் அதற்கு மட்டும் தான் அது பயன்படுத்தப்படுகிறதா ? அந்தக் கோவில் அதிகாரி அதில் ஏறவில்லையா? குதிரைப்பந்தயத்திற்கு போட்டோ எடுத்ததைப் போல எல்லாவற்றிற்கும் செய்ய வேண்டுமென்றால் எங்களுக்கு அதுதான் வேலையா ? அந்த அதிகாரியால் பயன்படுத்தப்படுகிறது என்பது தான் எங்களுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில், பேசுகின்றபோது * * * என்று குற்றம் சாட்டினார்கள். * * * என்று சொல்கிறார்கள். ஆலயத்திற்கென்று ஒரு கார் இருக்கிறது. அது தேவையானால், அவசியப்படுகின்ற போது அந்த அதிகாரி அந்தக் காரில் தான் போவார்கள். நடந்து போக மாட்டார். ஏ. சி. கார் வைத்திருக்கிறது என்பதால் அதில் அதிகாரி ஏறக் கூடாது என்று எந்தச் சட்டமும் இல்லை ; விதியும் இல்லை.

** மாண்புமிக் பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஜே. எஸ். இராசு : கன்வென்ஷனை மாற்றினால் என்ன அர்த்தம்? ஒரு அதிகாரி என்றால் தங்கள் அலுவலகம் என்று கருதினால் அவருடைய ஆபீஸா? அந்தக் கோவிலுக்கு அவர் தான் அதிகாரி. அவருடைய கன்ட்ரோலில் தான் அந்தக் கார் இருக்கிறது. அவர் பயன்படுத்த மாட்டார் என்றால் என்ன அர்த்தம்?

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் ஏ.சி. கார் வைத்திருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு சொன்ன குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆலயங்களில் ஏ.சி. கார் வைத்திருப்பதால் வருமானம் பெருகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து வாடகை வருகிறது என்றும் சொன்னார்கள். அரசாங்கத்திலே ஒரு ஜி.ஓ. இருக்கிறது. ஏ.சி. கார் ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகிய இருவரைத் தவிர வேறு யாரும் உபயோகிக்கக்கூடாது என்று அந்த ஜி.ஓ. விலே சொல்லப் பட்டு இருக்கிறது. அப்படி இருந்தும், அந்த ஜி.ஓ.வை மீறி அமைச்சர்களும், நிர்வாக அதிகாரிகளும் உபயோகித்து இருக்கிறார்கள், என்பது தான் அவருடைய குற்றச்சாட்டு. இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். ஆலயங்களுக்கு எதற்காக ஏ.சி. கார்? ஆலயங்களில் இருக்கும் சாமிகள் அதை உபயோகிக்கப் போவது இல்லை. அமைச்சர்களும், நிர்வாக அதிகாரிகளும் தான் அதை உபயோகிப்பார்கள். ஆகவே, ஆலயங்களுக்கு எதற்காக ஏ.சி. கார் வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசின் உத்தரவு இருப்பதை எடுத்துக் காட்டியதற்கு நன்றி. அதிலே. குறிப்பிட்டு இருப்பதைச் சொன்னதற்கும் நன்றி. இது வாடகைக் காகப் பயன்படுத்தப்படுகிற கார். சுற்றுலாப் பயணிகளுக்காக இது போன்ற கார்களை வாங்கி வைத்து இருக்கிறார். அந்தப் பயணிகள் வருகிற போது ஏ.சி. கார் பயன்படுத்துகிறார்கள். அதோடு அதிகாரிகள் பயன்படுத்துகிறார்கள் என்றால் தவிர்க்க முடியாத நேரத்தில் பயன்படுத்துகிறார்கள். இதைத் தவறான முறையில் பயன்படுத்தினார்கள், தங்கள் அதிகாரத்தை மீறிய வகையில் பயன்படுத்தினார்கள் என்றால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

(திரு. ப. நெடுமாறன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நெடுமாறன் உட்கார வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எத்தனையோ பேர்களுக்கு குறுக்கிடுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். இவர் ஏதோ விளக்கம் கேட்க விரும்புகிறார். ஆகவே, அவரையும் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படித் தாங்கள் பேசினால், நான் இந்த இடத்தில் உங்களை உட்கார வைத்து விட்டு, அங்கே வந்து விட வேண்டும்.



திரு. அ. ரகுமான்கான் : அப்படி ஒரு காலம் வரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த இடம் யாருக்கும் சொந்தமான இடம் இல்லை. நீங்கள் எல்லாம் செய்வதைப் பார்க்கிற போது எனக்குக் கூட சில நேரங்களில் வேகம் வருகிறது. அப்படி நிலை வருமானால், உங்களை விட அதிகமாக நான் செய்வேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பலபேருக்கு பகல்கனவு காண்பது என்பது இயற்கை. இந்த இந்த நேரத்தில் அவர்கள் கனவு காண்கிறார்கள். ஆகவே, தாங்கள் கோபித்துக் கொள்ள வேண்டாம். இதையெல்லாம் முடிவு செய்ய வேண்டியது மக்கள், அதை நாம் மறந்து விடக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான்: ஜனநாயக நாட்டிலே யார் வேண்டுமானாலும் பதவிக்கு வரலாம். தற்குறிகள் கூட வரலாம்.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. முதலமைச்சர் அவர்களும், ஆளுநரும் மட்டுமே, ஏ.சி. கார் உபயோகிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தரவு. அதை தார்மீக ரீதியில் அமைச்சர் அவர்கள் பின்பற்ற வேண்டும். சொந்தமாக அவர்கள் ஏ.சி. கார் வைத்து கொண்டு செல்வதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் வாடகைக்கு ஏ.சி. காரில் அமைச்சர்கள் செல்ல வேண்டுமா? அதிகாரிகள் அதைப் பயன்படுத்தலாமா? இது எந்த வகையில் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அதை வாடகைக்கு மற்றவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்களே தவிர, வாடகைக்கு அமைச்சர்கள் பயன்படுத்தினார்கள் என்று சொல்லவில்லை. எந்த அமைச்சரும் வாடகைக்கு அந்தக் காரைப் பயன்படுத்தவில்லை. அரசாங்கப் பணத்தைக் கொடுத்து வாடகைக்கு உபயோகிக்க வில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏ.சி. கார் வேண்டுமானாலும், வாங்கட்டும், அல்லது ஹெலிகாப்டர் வேண்டுமானாலும் வாங்கட்டும். அதை மிஸ்யூஸ் செய்யக் கூடாது என்பது தான் எங்களுடைய எண்ணம். மிஸ்யூஸ் செய்யப்பட்டதாக தகவல் கிடைத்தது. ஆகவே, பதில் பெற வேண்டும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

அடுத்து எனக்கு ஒரு தகவல் தரப்பட்டு இருக்கிறது. அருள்மிகு இராவீஸ்வரர் ஆலயம், வியாசர்பாடி, கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை முன்னாள் அறங்காவலர் பி. தேசிஸ் மற்றும்

சரோஜா முயற்சியால் அந்தக் கோவிலில் நிர்வாக அதிகாரி விற்றுக் கொண்டு இருக்கிறார் என்றும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு அதை விற்று இருக்கிறார்கள் என்றும் தகவல் கிடைத்து இருக்கிறது. அந்த டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தப்பியோ, தவறியோ, அ.தி.மு.க. வாக இருக்கிறார் என்று சந்தேகம். இதற்குப் போய் நாங்கள் சான்று எங்கேயிருந்து கொண்டு வரமுடியும்? தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன். ''இட் ஈஸ் தி. டியுடி ஆப் தி. கவர்ன்மென்ட்டு என்கொயர்'' என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாக அதிகாரி இன்னும் ரெவின்யூ டிரெயினிங்கிற்கு அனுப்பப்படவில்லை அவரை அனுப்பவேண்டும் அவர் போகமாட்டேன் என்று சொல்கிறாராம். அவர் போய் விட்டால் அந்தக் கோவில் பணி நடக்காமல் போய்விடுமா? ஸ்ரீரங்க நாதர் தூங்கியவர் தூங்கியவர் தான், அவர் எழுந்து வரப்போவது இல்லை. ஆகவே, யார் வந்தாலும் அந்தக் கோவில் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும் அந்தச் சிறப்பு இருக்கும். ஆகவே அவரை உடனடியாக ரெவின்யூ டிரெயினிங்ற்கு அனுப்ப வேண்டும்.

(முற்பகல் 11-30)

வெங்கடாசலம் மரணம் கொலையா? தற்கொலையா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். என்குயரி கமிஷன் வைக்க வேண்டுமென்பதுதான் பிரச்சினை. ஆனால் மேலவையில் சொல்லியிருக்கிறார்கள். ''அரசாங்கம் என்குயரி கமிஷன் வைக்காது : ஆனால் என்குயரி கமிஷன் வைக்க வேண்டுமென்று வாதாடுகிறவர்கள், அவர் கொலை தான் செய்யப்பட்டார் என்று கருதினால், அதை நிருபிக்க கோர்ட்டுக்குப் போங்கள், கோர்ட்டுக்கு போனால் வழக்காடுவதற்காகும் செலவை அறநிலையத் துறை ஏற்றுக் கொள்ளும்'' என்று அதை ஏற்றுக் கொண்டு, திராவிடக் கழகத் தலைவர் பெரியாரின் பிள்ளை வீரமணி அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். சென்ற மாதம் 17-ந்தேதி எழுதியிருக்கிறார் என்று நினைக்கிறேன். நாங்கள் வாதாட தயார். வழக்கறிஞர்களை வைத்து கோர்ட்டுக்குப் போகத் தயார். அதற்கு நிதி உதவி தாருங்கள் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். கடிதம் எழுதி 2, 3 வாரங்கள் ஆகி விட்டன. அது உண்மை என்றால், கடிதம் எழுதியிருப்பது உண்மை, அமைச்சர் ரிசீவ் பண்ணியிருக்கிறார். இன்னும் விடுதலைப் பத்திரிகைக்கோ அல்லது வீரமணிக்கோ பதில் போகவில்லை. ஒரு வேளை இந்த அவையில் பதில் அளிப்பார் என்று நினைக்கிறேன். என்குயரி கமிஷன் வைக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். நீங்கள் ஏற்கெனவே பல என்குயரி கமிஷன்களை வைத்திருக்கிறீர்கள். இந்த மரணத்திலும் சந்தேகம்



இருப்பதால் ஏன் என்குயரி கமிஷன் வைக்கக் கூடாது ? கிச்சிலிப் பாளையம் மரணத்திற்கு என்குயரி கமிஷன் வைத்திருக்கிறீர்கள். இதற்கு ஏன் வைக்கக் கூடாது என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. வி. சுவாமிநாதன் : மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய கோவில்கள், மடங்கள், அறநிலையக் கட்டளைகள் ஆகிய மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமயக் கோவில்கள், அறநிலையக் கட்டளைகள், மடங்கள் மீது விமரிசனம் செய்வதற்குப் பதிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் குற்றம் கண்டு பிடிக்க முடியாத காரணத்தால் எடுத்தவுடனேயே மீண்டும் பால் கமிஷன் ரிப்போர்ட் பற்றி ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் பக்கம் வாலிபர் முத்துக்கிருஷ்ணன் அவர்கள் பால் கமிஷன் தீர்ப்பு சரியானதா இல்லையா என்பதை அரசியல் ரீதியில் திருச்செந்தூர் தொகுதியில் பொதுமக்கள் பதில் அளித்து விட்டார்கள் என்று சொன்னதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

நண்பர் இராசு அவர்கள் மக்கள் மாறக் கூடும் என்று சொன்னார்கள். திருச்செந்தூர் தொகுதி ஏற்கெனவே அண்ணா தி.மு.க. வசம் இருந்த தொகுதி. தேர்தல் வந்தபோது மீண்டும் அந்தத் தொகுதியை அண்ணா தி.மு.க. கைப்பற்றியிருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னதால் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு) பெயரைக் குறிப்பிட்டதாலேயே குறுக்கிட வேண்டுமென்று மனநோய் எனக்கு இல்லை. அதற்காக நான் விளக்கம் கூறவும் விரும்பவில்லை. என்னுடைய பாயின்ட் என்னவென்றால், ''மக்கள் எங்கே இருந்தாலும் மாறிவிடுவார்கள், ஆகவே எச்சரிக்கையாகவே இருக்க வேண்டுமென்று ப. உ. ச. வீட்டுத் திருமணத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்''. அதைத்தான் நான் 'கோட்' பண்ணினேன். வேண்டுமென்றால் லைப்ரரியில் போய் தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, மக்கள் மாறக்கூடும் தேர்தலிலே என்ற அடிப்படையில்தான் நான் அதைச் சொல்ல விரும்புகிறேன். திருச்செந்தூர் ஏற்கனவே அண்ணா தி.மு.க. வின் தொகுதியாக இருந்தது. மீண்டும் அந்த இடத்தில் அண்ணா தி. மு. க. வெற்றி பெற்று வந்திருப்பதால் எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் மாறக் கூடும் என்பது வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், மக்கள் மாறினார்கள். எங்கே என்றால் பெரியகுளம் தேர்தலில். பெரியகுளம் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த தொகுதி. அண்ணா தி.மு. கழகம் அந்தத் தொகுதியைப் பிடித்துவிட்டது என்பதை நான் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு நண்பர் அவர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இந்த அறநிலையத்துறையில் மாண்மிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் செய்திருக்கின்ற நல்ல காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திருக்கோவில்கள் வருமானத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு 17.72 கோடியாக இருந்தது இந்த ஆண்டில் 18.57 கோடியாக உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 1.85 கோடி ரூபாய் அதிகமாகியிருக்கின்றது. அதைப்போன்று நிலத்தின் மூலம் வருகின்ற குத்தகை இந்த ஆண்டு மட்டும் 72,000 ரூபாய் அதிகமாவும், முதன் முதலாக தரிசு நிலங்களை குத்தகைக்கு விட்டதன் மூலம் 27,942 ரூபாய் அதிக வருமானமும் கோவிலுக்குச் சொந்தமான கட்டிடங்கள், மனைகள் வாடகைக்கு விட்டதில் இந்த ஆண்டு மாத்திரம் 1½ லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் வந்திருக்கிறது. வருமானமே இல்லாத, நான் குடியிருக்கிற தில்லையில் உள்ள, நடராசர் கோயிலுக்கு ரூ. 42,000-க்கு மேல் வருமானம் வருமாறு செய்ததுடன், அந்தத் திருக் கோயில் திருப்பணிக்காக பல லட்ச ரூபாய்களை அறநிலையத் துறை கொடுத்திருக்கிறது. தமிழ்நாடு பூராவும் 5½ கோடி ரூபாய் செலவில் பல திருப்பணி வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

அதுமாத்திரம் அல்ல, திருமணத்திற்கு பெண்கள் கிடைக்கும், மாப்பிள்ளைகள் கிடைப்பார்கள். ஆனால் திருமண மண்டபம் கிடைக்காது என்று உள்ள இந்தக் காலத்தில் 71 லட்சத்தில் 33 திருமண மண்டபங்கள் கட்டுவதும், இதுபோன்ற பல்வேறு காரியங்களைச் செய்வதும் பாராட்டுக்குரியது.

அதுமாத்திரம் அல்ல, ஆலையங்களில் வழிபாடுகள் செய்ய வருகின்றவர்களுக்கு வசதியாக ஓய்வு விடுதிகள், குடில்கள் அறைகள் போன்றவைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சிவஞானம் அவர்கள் பேசுகிற போது கோயில்களின் பணங்களை, மடங்களின் பணங்களை பொதுக்காரியங்களுக்கு செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இந்தக் கொள்கைக் குறிப்பில் கோயில் சொத்துகள், அதிலே இருந்து வருகின்ற வருமானத்தில் 8 லட்ச ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 940 திருமணங்களை—அதிலே 55



சதவீதம் ஆதி திராவிட மக்கள் திருமணங்களை கோயில்களிலே நடத்துவதற்கு செலவழித்திருக்கிறார்கள். ரூ. 8 லட்சத்தை மகாபலிபுரத்தில் பல்வேறு காரியங்களுக்காக செலவு செய்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, நம்முடைய பணத்தில் இருந்து ஸ்ரீலங்கா நாட்டிலே உள்ள— இப்போது தமிழர்களைப் படு கொலை செய்துகொண்டிருக்கிறார்களே அந்த நாட்டிற்கு முருகன் பகைவனுக்கும் அருள்வான் என்று சொல்வார்கள் அந்த முறையில், அந்த நாட்டில் உள்ள— கோயிலுக்கு ரூ. 1½ லட்சம் தொடுக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரத்தில் அரசு கல்லூரி ஒன்றைத் துவக்குவதற்காக ரூ. 5 லட்சம் கருமாரியம்மன் கோயில் நிதியிலிருந்து கொடுத், திருக்கிறார்கள். பல்வேறு கல்லூரிகள், ஆடவர் கல்லூரி, மகளிர் கல்லூரி, மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, பல் தொழிற்கல்விக் கூடங்கள் போன்றவை கள் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. நோய்வாய்ப் பட்ட வயதானவர்கள் தங்குவதற்கான இடங்கள் போன்ற பல்வேறு ஏற்பாடுகளை இந்த அறநிலையத்துறை செய்து வருகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நான் ஆழ்வார்களைப் பார்த்ததில்லை. 63 நாயன் மார்கள் இருந்ததாக சொல்வார்கள். ஆனால், தில்லை நடராஜர் கோயிலிலே 5 தீட்சிதர்களுடைய அடிப்படை உரிமைகளை, அவர்கள் அர்ச்சனை செய்வதற்கான அடிப்படை உரிமைகளை பறித்துக்கொண்டு நிர்க்கதியாக விட்ட நேரத் தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களால் வசூலிக்கப்பட்ட பணத்தை ஒவ்வொரு வருக்கும் ரூ. 5,000 என்ற வகையில் ரூ. 25,000 கொடுத்தார் கள். அந்த நேரத்தில் மதுரை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் தமிழறிஞர் வ. சு. ப. மாணிக்கம் அவர்கள் இந்த அறநிலையத்துறை எவ்வளவு சிறப்பாக இயங்குகிறது என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லும்போது 63 நாயன்மார்களைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். படித்திருக்கிறேன். ஆனால், 64வது நாயன்மாரை, இப்போதுதான் பார்க்கிறேன், என்று தெரிவித்தார். எந்தக் கட்சியையும் சேராத, ஒரு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர், தமிழறிஞர் இவ்வாறு சொல்லும்போது, இதைக்கேட்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லையே என்று நான் வருத்தப்பட்டேன். 1967-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பலபேர் சொன்னார்கள், ''இந்த சு. ம.க்கள்— சு. ம.—க்கள் என்றாலே பகுத்தறிவு என்றாலே கடவுள்

இல்லை, சாமி இல்லை என்று தான் பொருள்''. என்ற விநோதமான எண்ணத்தில் அவர்கள் அண்ணா அவர்களைப் பார்த்து '' நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள், ஆனால், அறநிலையத்துறையை மட்டும் எங்களிடம் விட்டுவிடுங்கள்'' என்று சொன்னபோது அண்ணா அவர்கள் அதைப்புரிந்துகொண்டு சொன்னார். ''நாங்கள் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை உடையவர்கள். எனவே இதை நாங்கள் எப்படி செய்கிறோம் என்று மக்கள் புரிந்து கொள்வதற்கு எங்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும்'' என்று சொன்னார்கள். பின்னர் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையிலே ஒரு அமைச்சரை அறநிலையத் துறைக்கு நியமித்து நடத்திக் காட்டினார்கள். அந்த முறையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தால், அவருடைய கொள்கையை நிலை நாட்டுகிற தம்பி ஆ, எம். வி. அவர்களை 64-வது நாயன்மார் என்று போற்றியதை அவர்கள் மிகவும் பாராட்டி இருப்பார்கள். இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால். கொடுத்த வேலையை மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு கோவில் வருமானம் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. பல்வேறு கோவில் களில் திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கோயில் பணத்திலிருந்து பல்வேறு நல்ல காரியங்கள், பொதுக் காரியங்களுக்கு செலவு செய்யப்படுகின்றது. நம்முடைய முதல் வர் அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத்திட்டதிற்கு 69 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்ததை பற்றி சில பேர்கள் புகார் சொன்னார்கள். நண்பர் ராஜூ அவர்கள் சொன்னார்கள். ஏதோ ஒரு சமூகத்தினர், அல்லது சங்கத்தினர் எதிர்ப்பதாகச் சொன்னார்கள். எதிர்ப்பவர்கள் எதிர்த்துக்கொண்டு நான் இருப்பார்கள். இன்றையதினம் கூட நாம் பார்க்கலாம். உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு மிக ஆச்சரியமாக இருக்கும்— காஞ்சி சங்கராச்சாரி என்பவரே கிடையர்து, ஆதி சங்கராச்சாரி அமைத்த மடங்களே பீடங் களே நான்குதான் என்று சொல்லி, ஒரு விநோதமான வழக்கை சென்னை உயர்நீதி மன்றத்திலே போட்டிருக்கிறார் கள்.

(முற்பகல் 11-40).

அதுமாத்திரம் அல்ல. என்னுடைய ஊரிலே அரசு கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டபோது, 5 லட்ச ரூபாயை கொடுத்ததற்கு, எப்படி இந்தப் பணத்தை கொடுக்கலாம், பல்வேறு மதத்தினர், முஸ்லீம், கிருஸ்தவர்கள், இந்துக்கள் எல்லாம் படிக்கக்கூடிய கல்லூரிக்கு கொடுக்கலாம் என்று கூட ஆட்சேபனை எழுப்பினார்கள். அந்த ஆட்சேபனையை எல்லாம் அலட்சியப்படுத்தி பணத்தைக் கொடுத்திருக்கிறார் கள். அதற்காக நான் பாராட்டுகிறேன்.



கோயில் என்றாலே, நம்முடைய தமிழ்நாட்டிலே ஏதோ வழிபாடு மையம், வழிபடுகிற மண்டபம் என்று கருதாமல், தமிழ்நாட்டின் கலாச்சாரம், தமிழ்நாட்டின் நாகரீகம், தமிழ் நாட்டினுடைய கலை, தமிழ்நாட்டினுடைய சிற்பம், கட்டிடக் கலை, இவைகளை எல்லாம் பாதுகாக்கிற ஒரு பெரிய பெட்டகமாக, உலகத்திற்கே எடுத்துரைக்கிற ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டிலே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் கட்சி ஆரம்பித்து இருப்பது, என்னுடைய கட்சி ஆட்சிக்கு வரவேண்டும், தேர்தலிலே போட்டியிட நினைப்பது ஏதோ நான் முதலமைச்சராக வரவேண்டும், என்னைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக வரவேண்டும் என்பதற்காக அல்ல. தமிழ்நாட்டின் நாகரீகம், தமிழ்நாட்டின் கலாச்சாரம், தமிழ் நாட்டின் பண்பாடு ஆகியவைகள் நிலைத்திருக்க வேண்டும், அதற்காகத்தான் நான் வரவேண்டும் என்று ஆசைப் படுகிறேன் என்று சொன்னார்கள். அந்த முறையில் பார்த்தால், இன்றையதினம் தமிழ்நாட்டிலே உள்ள கோயில்களில் உள்ள சிற்பங்கள், கலை நுணுக்கங்கள், கட்டிட வேலைப்பாடுகள், அங்கே ஏற்கெனவே நடைபெற்ற இயல், இசை, நாடகங்கள், முத்தமிழையும் பரப்புகின்ற சொற்பொழிவுகள், அத்தனையும் நடந்த ஒரு நாலந்தாப் பல்கலைக் கழகம் போல விளங்கும் நிலையங்கள் அவைகளையெல்லாம் மூடிவிட்டால், தமிழ்நாட்டின் கலாச்சாரம் நாகரீகம் இருக்குமா என்றால், இருக்காது.

இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களில், உலகத்தில் சைவ சமயம், தமிழர்களுடையநாகரீகம், தமிழர்களுடையகலை, பண்பாடு எங்கே இருக்கிறது என்றால், இன்று வரையிலும் அழியாமல் இந்தக் கோயில்களில்தான் இருந்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான 5 இலட்சம் ஏக்கர் நிலத்திலேயிருந்து குத்தகை பாக்கி ரூபாய் 31.35 கோடி வரவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த ரூபாயை எப்படி வசூலிப்பது, இதற்காக சட்டத்திலே திருத்தம் கொடுக்கலாமா என்பதுதான் முக்கியமான பிரச்சினையாகும். நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். உழுபவர்கள், குத்தகைதாரர்களுடைய உரிமை, எங்கே பறிக்கிறது, சர்க்கார் கொண்டு வந்த கொள்கை, 75 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ள உழுபவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதிலே 75 சதவீதம் எவ்வளவு, 25 சதவீதம் எவ்வளவு என நிர்ணயம் செய்யவில்லை. மொத்தம் எவ்வளவு விளைகிறதோ, அதிலே 75 சதவீதம் உழுபவர்களும் 25 சதவீதம் நில உரிமையாளர்களும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது சட்டம். இவ்வளவு தான் விளையும் என்று யாரும் குறைந்த பட்சம் என்பதைக் கூட நிர்ணயிக்கவில்லை. இந்த நிலையில், இப்படியே தொடர்ந்து போனால் குத்தகை கொடுக்க வேண்டியவர்கள் பொறுப்பில்லாமல் தான் இருப்பார்கள்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1984 ஏப்ரல் 10

அதுமாத்திரம் அல்ல. 1978 லேயிருந்து நாளது
வரையில் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிதான் 31·35
கோடியே தவிர, ஏற்கெனவே 1972 ஆம் வருஷத்திற்கு முன்பு
கொடுக்கப்படவேண்டிய குத்தகை பாக்கி அனைத்தும் ரத்து
செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள்.

தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள
எல்லா நாடுகளிலேயும் கோயில், மதச் சம்பந்தமாக சாரிட்டபிள்
டிரஸ்ட் (Charitable Trust) தர்மச் சொத்துக்கள் என்பது
குழந்தைகள் போல், மைனராக பாவிக்கப்பட்டு, எந்த
நாட்டில் இந்தச் சொத்துக்கள் இருக்கின்றதோ, அங்கே அந்த
அரசாங்கம் கார்டியன்போல இந்தச் சொத்துக்களை நிர்வகிக்க
வேண்டுமே தவிர, நான் உங்களுக்கு கொடுக்கப் போகிறேன்,
உழுபவர்களுக்குக் கொடுக்கப் போகிறேன் என்று அந்த நிலங்கள்
பூராவையும் கொடுத்து விட்டால் அடையாளம் தெரியாமல்
போகுமே தவிர, நான் ஏற்கெனவே சொன்னதைப் பே ல தமிழ
கத்தினுடைய நாகரீகம், கலை, பண்பாடு ஆகியவை களை பேசும்
ஆலயங்கள் இல்லாமல் போய்விடும். இந்த நாட்டில் பண்பாடு
மறைந்துவிடும். இதிலே ஏன் சட்ட விதிவிலக்கு கொண்டு வரக்
கூடாது என்று சொல்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.
குத்தகைதாரர்கள் 75 சதவீதம் எடுத்துக் கொள்வதை ஊசி
முனை அளவு, எள் முனை அளவு கூட யாரும் தடுக்கவில்லை.
ஆனால் இந்த 75 சதவீதமே, ரூபாய் 31.35 கோடியாக இருந்
தால், 1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கொடுக்க வேண்டிய குத்தகை
அவ்வளவும் கொடுக்கப்படாமல் போய்விட்டது என்றுசொன்
னால்,—நம்முடைய நண்பர் நல்லப்பன் அவர்கள் கூட வெட்டுத்
தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆலயங்களில், மடங்
களில் வேலை செய்பவர்கள் சுமார் 1 இலட்சம் பேர்கள் இருக்
கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் சம்பளம் கொடுங்
கள், அதுவும் சாதாரணச் சம்பளம் அல்ல. அரசுப் பணியில்
வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளங்களைக்
கொடுங்கள் என்று சொல்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்
கடம் அவர்கள் திருவண்ணாமலை கோவிலிலே நடத்தப்படும்
தீப விழாவில், இரண்டு தடவை தீபம் அணைந்து விட்டது.
அணையாமல் இருப்பதற்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்
டும் என்ற வகையில் ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்திருக்
கிறார்கள். எதற்காக கொண்டு வந்திருக்கிறார்கள் ? இவை
களையெல்லாம் கொண்டு வருவதன் மூலமாக, ஆலயங்களுடைய
உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற காரணத்தால்தானே
தவிர வேறு அல்ல. நேற்று கூட தந்தி அடித்திருக்கிறார்கள்.
இந்த மடத்திலே சம்பளம் இல்லை. இந்தக் கோவிலிலே சம்பளம்
இல்லை, அர்ச்சகர்களுக்கு சாப்பாடு இல்லை. சம்பளம் இல்லை.
ஆகவே ஆலயங்களில் நைவேத்தியத்தையும், அர்ச்சனையையும்
செய்ய முடியவில்லை என கூக்குரல் கிளம்புகின்றன.



1984 ஏப்ரல் 10] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பருவமழை பொய்த்து, கோவிலிலே செய்யப்படுகின்ற
6 கால பூஜைகள் நிறுத்தப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்படுமாயின்
அதை நியாயமென எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதிகமாக
மழை பெய்து, வெள்ளம் ஏற்பட்டிருக்கிற காலத்திலே கூட,
அவர்கள் நாங்கள் குத்தகை கொடுக்க மாட்டோம் என்று சொன்
னால், அது என்ன நியாயம் என்று கேட்கத் தோன்றுகிறது.

அது மாத்திரம் அல்ல. 1801 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட
190 ஆண்டுகளுக்கு முன்பு, ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் சொந்தமாக
82 கிராமங்கள் இருந்திருக்கின்றன. அந்த 82 கிராமங்களில்
உள்ள நிலங்களின் மொத்த ஆண்டு வருமானம் 1¼
இலட்சம் கலம் நெல் ஆகும். இந்த 1¼ இலட்சம் கலம்
நெல்லை, முகம்மத்தியர் ஆட்சிக் காலத்தில், அவர்கள்
முகம்மதியர்களாக, வேறு மதத்தினராக இருந்தாலும் கூட, அந்த
ராஜாக்கள் கூட, மறுக்காமல், ஸ்ரீரங்கம் கோவிலுக்கு கொடுக்க
வேண்டிய அந்த 1¼ இலட்சம் கலம் நெல்லைக் கொடுக்கிறோம்
என்று சொன்னார்கள். அந்தக் காலத்திலே ஒரு கலம் நெல்லின்
விலை 4 அணா, இப்போதைய விலைப்படி 25 காசு. அப்படிப்
பார்த்தால் மொத்தம் சுமார் 32,000 ரூபாய்தான்வரும். இந்த1¼
இலட்சம் கலம் நெல்லை நான் அளிக்கிறேன் என்று செப்பேட்
டிலேயே முகம்மதிய சக்கரவர்த்தி எழுதிக் கொடுத்திருக்கிறார்
கள். அவர் அப்படி எழுதிக் கொடுத்ததற்குப் பிற்பாடு, ஆங்கி
லேய கிழக்கிந்திய கம்பினியார், இந்த நாட்டின் ஆட்சியைக்
கைப்பற்றிய பிறகு, அவர்களிடம் இந்த முகம்மதிய சக்கரவர்த்தி
கள், இந்த ஒப்பந்தத்தை மாற்றக் கூடாது என்று சொல்லி,
வெள்ளைக்காரர்களும், 32,000 ரூபாயை ஒவ்வொரு ஆண்டும்,
திருவரங்கம் கோவிலுக்கு கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.
நம்முடைய அரசும் கூட, இப்போதும் அதை மோகினை பணம்
என்ற வகையில் கொடுத்து வருகிறது.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், 5 இலட்சம் ஏக்கரை
எல்லோருக்கும் கொடுத்து விட வேண்டும் என்று சொல்லுகிறார்
களே, ஏற்கெனவே 82 கிராமங்களிலுள்ள நிலங்களும் முகம்மதிய
சக்கரவர்த்தி காலத்திலேயே எடுக்கப்பட்டு, கோவிலின் நிலம்
என்ற பெயரால் அன்றிலிருந்து இன்று வரை 32 ஆயிரம் ரூபாயை
மட்டும் கொடுத்து வருகிறோம். 1¼ இலட்சம் கலம் 1801
ஆம் ஆண்டு விளைந்தது என்றால், அதற்கு இப்போதைய விலை
என்ன ? இன்றையதினம் எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றங்
கள் விவசாயத்திலே ஏற்பட்டிருக்கின்றன. அதைப் பயன்படுத்தி,
விவசாயிகள் விஞ்ஞான ரீதியில் உற்பத்தியை பெருக்கிக் கொண்
டிருக்கிறார்கள். ஆகவே ஒன்றேகால் இலட்சம் கலம் என்றால்
அதன் மதிப்பு இப்போதைய விலைக்கு என்ன ஆகும் ? ஆனால்
அதன்படி இப்போது கொடுப்பதில்லை. அந்த 82 கிராம நிலங்கள்
அடையாளம் தெரியாமல் போய் விட்டன என்பதைச் சொல்ல
விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னபடி ஆலய சொத்துக்கள் மைனர் சொத்துக்களைப் போல பாதுகாக்கப்பட வேண்டிய சொத்தாகும். விவசாயிகள் விளைவதில் 75 சதவீதம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் கொடுக்கப்பட வேண்டிய குத்தகை தொகையை நிச்சயமாக கோவில்களுக்கு கொடுக்க வேண்டும். ஏற்கெனவே தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்கள் மூல அமைப்புக்களுக்கு விதிவிலக்கு கொடுக்கின்ற முறையில் இருந்து வருகின்றன.

Land Reforms Act 58 of 1961.
Section 2-Exemption Religious Institution and Religious Trust of Public Nature–க்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. அது போல, Tamil Nadu Building Lease and Rent Control Act, 1960 Section 29— G.O.Ms.NO. 200-Government can exempt any building owned by a public trust. Our High Court has held the order valid.

அவர்கள் இந்த 29 ஆவது செக்ஷன் பிரகாரம் தமிழக அரசு போட்ட இந்த உத்திரவு செல்லும் என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல.'

Madras Urban Land Tax Act, 1966–ல். ,

Section 29-Not applicable to land owned by State or Central Governmen Corporation of Madras Municipal Council, Any urban land set apart for public worship, charitable purpose, etc.

Any land used for preservation of ancient monument, deaf, dumb schools, fallen woment etc. இதுமாதிரி விதிவிலக்குஅளித்திருக்கிறது.

நம்முடைய தமிழ்நாடு அரசு, மத்தியப் பேரரசு, கார்ப்பரேஷன், உள்ளாட்சித்துறை, பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன் ஆகியவைகளையெல்லாம் ஒரு தட்டிலே வைத்து எக்ஸெம்ஷன் கொடுத்து விட்டு, இந்தக் கோவில்களையெல்லாம் இன்னொரு தட்டிலே சமமாக வைக்காமல், நாம் அதனைக் குறைத்திருக்கிறோம்.

Equally not placed. temples are not placed on equal par, with State, local bodies, etc

இவைகளுக்கெல்லாம் நாம் விதிவிலக்குக் கொடுக்கிறோம். ஏன் கோவில் நிலங்களுக்கு விதி விலக்குக் கொடுக்கக்கூடாது. அப்படி யாராவது இந்தச் சட்டத்தை அரசியல் சாசனத்தின்படி ஆட்சேபம் செய்வார்கள் என்றால், இதை நாம் 9 ஆவது ஷெட்டியூலுக்கு கொண்டு போகலாம். ஏற்கெனவே,
Tamil Nadu Cultivating Tenants Protection from Eviction Act; Tamil Nadu Cultivationg Tenants Fair Rent Fixation Act.

போன்ற இவைகள் எல்லாம் 9 ஆவது ஷெட்டியூலுக்கு தான் பாதுகாப்பாக இருக்கின்றன. 9 ஆவது ஷெட்டியூலுக்குக் கொண்டு போய்விட்டால், இந்தச் சட்டத்தை யாரும் கோர்ட்டுக்குக் கொண்டு போய் பரிசோதித்துப் பார்க்க முடியாது.



(முற்பகல் 11-50)

மேலும் ஒரு சட்டம் இருக்கிறது. தமிழ்நாடு Debt Relief Act 13 of 1980 Section 12 என்பதன் கீழ் Not applicable to State Co-operative Bank. இந்த Debt Relief Act Section 12 இன் கீழ் செக்ஷன் 12–ன் கீழ்கூட்டுறவு சொசைடி, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், அப்புறம் any amount recoverable cs arrears of land revenue any revenue tax or cess payable to the Central Government. any tax or cess payable to local authorities debt due to State Government.

இந்தச் சூழ்நிலையில் 31.5 கோடி என்பதுமிக கணிசமான தொகை ஆகும். இவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு இருக்கிறபோது ஏன் இந்தக்கோவில் நிலங்களுக்கு செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் தில்லை நடராசர் கோயில்பற்றி வழக்கு மன்றத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். வழக்கு மன்றத்திலே இருந்தாலும் என்னுடைய பணிவான சமர்ப்பணம் என்னவென்றால் பரம்பரை தர்மகர்த்தாக்களை நாம் ஒழித்தோம். Denomination Temple.

என்று எதிர்சைடிலே யாருமே வாதாடாமல் எக்ஸ்பார்ட்டி தீர்ப்பைப்போல் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு யாருக்குமே தெரியாமல் டி.சி.யினிடத்திலே மனுக் கொடுத்து டினாமினேஷன் டெம்பிள் என்று டெக்ளரேஷன் செய்து இருக்கிறார்கள். அது தவறு. பல வருஷங்களுக்கு முன்பு எக்ஸ்பார்ட்டியாக அப்படி டெக்ளரேஷன் வாங்கிய அத்தனைத் தீர்ப்புக்களையும் தயவு செய்து அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே 99 வருடம் கோயில்நிலங்களை குத்தகைக்கு பல பேர்களுக்கு விட்டு இருக்கிறார்கள். அந்த நிலங்களைக் குறைந்த கேவலமான வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்பதற்குப் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும், திருவண்ணாமலையில் உள்ள ஆலயத்திற்குச் சொந்தமான இடம் அடையாறிலே விலைமதிக்கமுடியாத இடம் இருக்கிறது. மிக கேவலமான குறைந்த குத்தகைக்குப்போய் இருக்கிறது. 99 வருஷத்திற்கு விட்டதை நிச்சயமாக ஜனநாயக காலத்திலே இந்த சர்க்கார் மாற்ற புனராலோசனை செய்ய நல்ல காரணங்களோடு மாற்றியமைக்கச் சட்டம் கொண்டுவர சட்டத்தில் இடம் இருக்கிறது. 99 வருடம் என்று சொல்லி ஏமாற்றுகிறவர்களுக்கு சாவுமணியடிக்க ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இப்படி அருமையான மானியத்தைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மானியத்தை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை அமைச்சர்
அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக்கோரிக்கை மீது மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களை
கூற விரும்புகிறேன். இந்து சமய நிறுவனங்கள், மற்றும்
அறக்கட்டளைகளை தொடர்ந்து அவை நிறுவப்பட்ட காலத்தில்
இருந்தஉள்ள நிலையில் பேணிப் பாதுகாக்க இவ்வரசு உறுதி பூண்
டுள்ளது என்றுகொள்கைக்குறிப்பிலே கடைசியாககூறியிருக்கிறார்
கள். அதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது இருக்கவும்
கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கோயில்
சொத்துக்களைச் சில பெரிய மனிதர்கள் அபகரித்து வருவதைத்
தடுக்கும் முறையில் முறைகேடு இல்லாத வகையில் பாகுபாடு
காட்டாத வகையில் ஊழல் இல்லாத அரசியல்வாதி தலையீடும்
இல்லாத வகையில் கோயில் கொடியவர்களின் கூடாரமாக இல்
லாத வகையில் நல்ல பக்திமான்களைக் கொண்டு நடத்தக்கூடிய
முறையில் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்மைபயக்கக்
கூடிய வகையில் நல்ல சீர்திருத்தங்களைச் செய்வதில் யாருக்கும்
ஆட்சேபணை இருக்க முடியாது. அந்த வகையில் இந்த அற
நிலையங்களும் அறக்கட்டளைகளும் சீராக சரியாக செம்மையாக
நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கைகள் எடுத்
துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

ஆனால், இப்போதுஅமைச்சர்அவர்கள்கொள்கைக்குறிப்பிலே
கூறியிருக்கிறார்கள். இவைகளை உன்னதப்படுத்த வேண்டுமென்
றால், உழுகிறவர்கள் குத்தகை பாக்கி இருக்கிற காரணத்தினால்
உன்னதப்படுத்த முடியாதுஎன்ற நோக்கத்தில் குத்தகை விவசாயி
களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற இருக்கக்கூடிய
சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அதன்மூலம்
அவர்களை நிலவெளியேற்றம் செய்து கோயிலைப் பாதுகாக்க
வேண்டுமென்ற கொள்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடிய
வில்லை. எனவே, குத்தகை விவசாயிகளை வெளியேற்றக்கூடிய
சட்டத் திருத்தம் கொண்டு வருவதை அமைச்சர் அவர்கள்
பரிசீலித்து அதைத் திரும்பப் பெறவேண்டுமென்று நான் இந்தச்
சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை
எப்படி இருக்கிறது என்று சொன்னால் உழுபவனுக்கே நிலம்
சொந்தம் என்ற கொள்கைக்கு மாறாக குத்தகை விவசாயிகளை
வெளியேற்றும் சூழ்நிலை உருவாகி கோயில் நிலங்களையும் அறக்
கட்டளை நிலங்களையும் காலங்காலமாக அனுபவித்து அதை
உழுது ஓட்டாண்டியாகக்கூடிய அந்த விவசாயிகளை ஏழை விவ
சாயிகளை வெளியேற்றிவிட்டு உள்ள நிலையை எய்துவதை,
மார்க்கிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின்சார்பில் கடுமையாக ஆட்சேபிக்
கிறேன். கோயில் நிலங்கள் 5இலட்சம்ஏக்கர்இருப்பதாகவும்அதிலே
31.5 கோடி ரூபாய் குத்தகை பாக்கி இருப்பதாகவும் அமைச்சர்
அவர்கள் கூறுகிறார்கள். அந்த குத்தகை பாக்கி ஏதோ குத்
தகை விவசாயிகள் கோயில்களுக்கு அளிக்கக்கூடாது என்ற ஒரு
கெட்ட நோக்கத்தோடு செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்
களும் அரசும்கூட கருதக்கூடும். எங்களைப் பொறுத்தவரையில்
சில பெரிய மனிதர்கள் அரசியல் காரணங்களால் அவற்றைச்
செய்யலாம். இலட்சக்கணக்கானவர்கள் 5 இலட்சம் ஏக்கரிலே





குத்தகைச் சாகுபடி செய்யக்கூடிய அத்தனை விவசாயிகளும்,
அப்படிச் செய்யவில்லை. இந்த குத்தகை பாக்கி எப்படி ஏற்
பட்டது. இயற்கையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டன.
வறட்சி, வெள்ளம் சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே
ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயம் பாதிக்கப்
பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டும்அதுபோல
வெள்ளம் வந்து பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. இயற்கை
யின் பாதிப்பால் குத்தகை விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கி
றார்கள். செயற்கையின் பாதிப்பால் பாதிக்கப்பட்டு இருக்கி
றார்கள் ; கர்நாடகத்திலிருந்து காலத்தில் ஒப்பந்தம் பேசப்பட்டு
காவேரியில் தண்ணீர் வராததால் குறிப்பாகதஞ்சைமாவட்டத்தில்
இந்த கோயில் நிலங்களில் அதிகமாக சாகுபடி செய்து
கொண்டு இருக்கக்கூடிய விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கி
றார்கள். ஆக காவேரியிலும் தண்ணீர் வராததால் பாதிக்கப்
பட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் சொல்லக்கூடிய ஆலோசனை
அடிப்படையில் குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்து பாதிக்
கப்பட்டு இருக்கிறார்கள். இராஜராஜன் நடுங்கள் என்றுச்
சொன்னார்கள். அதிலே குளை நோய் வந்து விவசாயிகள் பாதிக்
கப்பட்டு இருக்கிறார்கள். ஐ.ஆர். 50-ஐ நடுங்கள் என்று சொன்
னார்கள். அதையும் நட்டார்கள். அதிலே இயற்கையின்
பாதிப்புகள் வந்து பூச்சி தொல்லைகள் வந்து அதுவும் பாதிக்கப்
பட்டு விட்டன. இப்படி இயற்கையின் காரணமாகவும், பூச்சி
யின் காரணமாகவும் இன்னும் செயற்கையின் காரணமாகவும்
குத்தகை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு மிகப் பெரிய
தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, 75-க்கு 25 வாரம் என்ற
சட்டம் வந்த உடனேயே அந்தச் சட்டத்தை அமுல்
நடத்துகின்ற வகையில் செய்யாமல் கோவில்களுக்கு உத்திரவு
வரவில்லை என்று சொல்லி இந்த 75க்கு 25 வாரத்தை
வாங்காத காரணத்தாலும், 75க்கு 25 வாரம் நெல்லை எடுத்துக்
கொள்ளுங்கள் என்று சொன்னால் அதற்கு கோவில் அதிகாரிகள்
அதை வாங்க மறுத்து பழைய குத்தகைப்படி தான் குத்தகை
கொடுக்க வேண்டும் அப்படிக் கொடுத்தால் தான் நாங்கள்
நெல்லை எடுத்துக்கொள்வோம் என்று சொல்லி காலத்தில்
நெல்லை வாங்காத நிர்வாகக் கோளாறு காரணமாக இந்தக்
குத்தகை பாதிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மா
வட்டத்தில் உள்ள குடவாசல் தாலுக்காவில் உள்ள திருக்கன்ன
மங்கை கோவிலுக்கு குத்தகை விவசாயிகள் பேசி 75—25 வரை
அடிப்படையில் நெல்லை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியும்
அந்தக் கோயில் அதிகாரிகள் 75—25 அடிப்படையில்
நெல்லை வாங்க மாட்டோம் என்று திருப்பிவிட்டார்கள்.
அந்தக் கோவில் ஊழியர்கள், அதிகாரிகள் குத்தகை
நெல்லைக் களத்து மேட்டில் போய் வாங்குவது இல்லை. இத
னால் குத்தகை பாக்கிப்பட்டு இருக்கிறதே தவிர, ஏதோ வேண்டும்
என்றே கோவிலுக்கு கொடுக்கக்கூடிய குத்தகைக்கு அளக்க மறுத்
ததன் காரணமாக குத்தகை பாக்கி இல்லை. எனவே, இயற்கை
பாதிப்பால்குத்தகை விவசாயிகள்பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஏறத்தாழ 300 கோடி ரூபாய் அளவுக்கு குத்தகை விவசாயிகள் நஷ்டம் அடைந்து இருப்பார்கள். கடன் வாங்கி அவர்கள் விவசாயம் செய்து அது கைக்கு வரக்கூடிய நேரத்தில் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் அந்தக் குத்தகை பாக்கிகள் இருக்கக்கூடிய ஒரு சில குத்தகை விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளித்து அவைகளை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்தால் குத்தகை விவசாயிகள் நஷ்டம் ஆகிவிடுவார்கள். இது நீண்ட நெடும் காலமாகப் போராடிப் பெற்ற அந்த உரிமைக்கு வேட்டு வைக்கக் கூடிய முறையில் இது அமைந்து இருக்கிறது. எனவே, அந்த குத்தகை விவசாயிகள் மேலும் மேலும் இந்த அரசுக்கு எதிராக போகாமல் அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிற உரிமையை பாதுகாக்கக்கூடிய வகையில் இந்த குத்தகை பாக்கிகளை எல்லாம் ரத்து செய்து அடுத்த ஆண்டிலிருந்து நீங்கள் நிர்ணயித்த 75க்கு 25 என்ற வாரத்தை களத்து மேட்டிலிருந்து நீங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குத்தகை விவசாயிகள் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள். பல கோயில்களில் எந்த இடத்தில் உள்ள குத்தகை விவசாயிகளும், கோயில் நிர்வாகமும் தொடர்ந்து ஒன்றிய முறையில் செயல்படுகிறதோ அங்கே குத்தகை கிடைக்கிறது. சில இடங்களில் குத்தகை கொடுத்தாலும் அதை அதிகாரிகள் வாங்காததால் சில தவறுகள் நேரிடுகின்றன. எனவே, நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். நீங்கள் 75க்கு 25 வாரம் என்ற அந்த அடிப்படையில் களத்து மேட்டில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை பாதிப்பால், அவர்கள் உழுது விதைத்து பயிரிட்டு விளைச்சல் கைக்கு வருகிறபோது பாதிப்பு ஏற்பட்டக் காரணத்தால் இந்த ஆண்டு குத்தகை பாக்கி 35 கோடி என்பதை நீங்கள் பெரிதுபடுத்தாமல் அவை அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதுதான் நீண்ட காலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய கொள்கை. இந்தக் கோவில் நிலங்களாக ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த 5 இலட்சம் ஏக்கர்களையும் அவர்களுக்கே உரிமையாகக் கொடுத்து அவைகள் மூலம் வரக்கூடிய பணத்தைப் பாங்கில் டெபாசிட் செய்து கோவில்களை சரியாக, சீராக, செம்மையாக நடத்துவதற்கு வழி வகை உண்டு.

(நண்பகல் 12-00)

அதேபோன்று கேரளாவில் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய அமைச்சரவர்களும் செய்து, குத்தகை சாகுபடி செய்பவர்களை அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆக்கி, அந்த நிலத்திலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு கோயில் விவகாரங்களையும், அறக்கட்டளைகளின் விவகாரங்களையும் செம்மையாக நடத்த முடியும். எனவே, அந்த வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



கோயில்களுக்கு இருக்கின்ற நிலங்களை, அறக்கட்டளைகளுக்கு இருக்கின்ற நிலங்களை எடுத்துவிட்டால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர் சொன்னார். நான் சொல்கிறேன், இன்றைக்கு மனித வளத்திற்காக சத்துணவிற்கு 200 கோடி ரூபாய் செலவு செய்கின்ற அரசு, நம்முடைய தமிழகத்தின் பிரதானக் கலை, பண்பாடு இவைகளைப் பேணிக் காப்பதற்காக் அரசாங்கமே நிதியை ஒதுக்கிச் செம்மையாகவும், சீராகவும் ஆலயங்களை வளத்தோடு நடத்துவதற்கு முடியாதா? ஆகவே, அந்த நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கி, அரசாங்கமே பராமரிக்கின்ற காரியங்களைச் செய்ய வேண்டுமே தவிர, உழைப்பவனை வஞ்சித்து செய்யக்கூடாது. ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்பொழுது, இன்னொரு தீமையைச் செய்துவிடக்கூடாது. நல்லதைச் செய்ய வேண்டுமென்ற கொள்கையைப்பற்றித் தயவு செய்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, உழைப்பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக ஆக்குகின்ற காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊழியர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அரசாங்கத்தில் உள்ள பல துறைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு இருக்கின்ற சலுகைகளை அவர்களுக்கும் வழங்க வேண்டும். அந்தச் சலுகைகளை இன்றைக்கு வருமானம் வரும் கோயில்களில் இருக்கின்ற ஊழியர்களுக்கு—குறிப்பாக பழனியிலே இருக்கின்ற கோயில் நிர்வாக அதிகாரிக்கும், ஊழியர்களுக்கும் அநேகமாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களும், படிகளும் வழங்கப்படுவதாகவும், பல கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அப்படிக் கிடைக்கவில்லை என்றும் அமைச்சரவர்கள் குறிப்பிலே கூறுகிறார்கள்.

இந்தக் கோயில் நிர்வாகம் முழுவதையும் நடத்துவதற்கு அரசு அதற்கான பணத்தை ஒதுக்கி அதில் பணி செய்யும் ஊழியர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் செய்யும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வருமானம் உள்ள கோயிகள், வருமானம் அல்லாத கோயில்கள் என்று பார்க்காமல் வருமானம் வருகின்ற கோயில்களில் உள்ள பணத்தைக் கொண்டு இந்த ஊழியர்களுக்குச் சலுகைகளைச் செய்து தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களில் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படுவதாக அறிகிறோம். குறிப்பாக வாசுதேவநல்லூர், புளியங்குடி போன்ற இடங்களில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம் நடக்கிறது என்று கேள்விப்படுகிறோம். கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்று நாம் நம்புகிறோம். சமூக வாழ்வில் மிகப் பெரிய அராஜகத்தை உருவாக்கக்கூடிய அந்த அமைப்புகளுக்கு இடம் கொடுக்காமல் இந்த ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்து மதக் கோயில்களைப் பற்றி இங்கே விவாதம் நடக்கிறது. இதைப்போன்று வக்ப் போர்டு குறித்தும் இந்தச் சட்டமன்றத்தில் விவாதிக்கின்ற முறையில் ஏற்பாடுகளை அமைச்சர்கள் செய்ய வேண்டும். சென்ற ஆண்டுகூட அவைகளைப் பற்றிய விவாதங்களைச் சட்டசபையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த ஏற்பாடு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். அந்த வகையில் வக்ப் போர்டு பற்றியும் இந்த அவையில் விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்கள் அர்ச்சகர்களாக வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் கமலாலயத் திருக்குளம் என்பது மிகப் பெரிய குளமாகும். பல பக்தர்களின் புனித குளமாக கருதப்படக்கூடியது அது. ஆனால் அதற்குரிய வடிகால் வசதி அங்கே இல்லை. இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் பலமுறை நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன். இந்தக் குளத்தில் தண்ணீர் பச்சையாக மாறி அந்தக் குளமே நாறுகிறது அந்த நகரத்தில் உள்ள அத்தனை மக்களுக்கும் அந்தக் குளம் நாறுகிறது. நாற்றத்தைப் போக்க அரசாங்கம் அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். அதற்கு உடனடியாக வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருமானம் உள்ள கோயில்களின் வருமானத்தை வைத்துக் கொண்டு, வருமானம் இல்லாத பாழடைந்து இருக்கின்ற கோயில்களின் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூர் வட்டம் கீவளூரில் பெரிய கோயில் இருக்கிறது. அங்கு ஒரு திருமண மண்டபம் அமைக்க வேண்டும். கீவளூர் கோவிலில் திருமண மண்டபம் அமைக்க வேண்டுமென்று கோருகிறார்கள். இப்படித் தஞ்சை மாவட்டம் முழுவதும் இருக்கின்ற கோயில்களுக்கு, கிராமப்புறங்களில் உள்ள கோயில்களுக்குத் திருமண மண்டபங்கள் அமைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனி தேவஸ்தானத்திற்கு 500 படுக்கைகள் கொண்ட ஒரு தங்கும் விடுதியைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, கட்டி, அங்கு வருகின்ற பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் குடியிருப்பு மனைகள் என்று சொல்லும் பொழுது, கோயில் நிலங்களில் குடியிருப்பவர்கள் பட்டா கேட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதை எழுதினால், இந்த அறநிலையத் துறை பர்மிஷன் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். நீண்-



நெடுங்காலமாகத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கோயில் களின் நிலங்களில்தான் அதிகமான விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எழுதிக் கொடுத்து விட்டு அதற்கான பணமும் கட்டி முடிந்துவிட்டது ; எனவே அவற்றை எல்லாம் திரும்பப் பரிசீலித்து எடுத்துக்கொள்வதற்கான சூழ்நிலை இருப்பதாகக் குறிப்பிலே பார்த்தேன். பெரிய மனிதர்கள் குறைந்த வாடகையைச் சென்னை போன்ற நகரங்களிலே கொடுத் துக்கொண்டிருப்பதாகக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோன்ற இடங்களில் வாடகையை உயர்த்துவது பற்றியோ அல்லது அவற்றை எடுத்துக்கொள்வது பற்றியோ ஆட்சேபணை இல்லை. ஆனால் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான கிராமப்புற மக்கள் இந்தக் கோயில் நிலங் களிலே அப்படி எழுதிக் கொடுத்து விட்டு இருப்பவர்களை எல் லாம் காலி செய்யக்கூடாது. அவ்வாறு கோயில் நிலங்களிலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வசதி, ஆஸ்பத்திரி வசதி போன்ற பல வசதிகளை இந்தக் கோயில் பணத்திலிருந்து செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயில் திருப்பணிகளைப் பொறுத்தவரையில் அவற்றிலே ஏராளமான முறைகேடுகள் நடப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் கோயில் திருப்பணியில் சில முறைகேடுகள் நடந்திருப் பதாகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து கோயில் திருப்பணிகளிலே நடைபெறுகின்ற ஊழல் களையும், முறைகேடுகளையும் அகற்றி அவற்றைச் செம்மைப்படுத்துவதோடு கோயில் நிலங்களில் குடியிருப்பவர் களையும், உழுது பயிரிடுபவர்களையும் பாதுகாக்கக்கூடிய முறை யில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அறநிலையத்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே மட்டுமல் லாது, பல்வேறு மாநிலங்களிலும் இந்தத் துறை இயங்கி வருவ தன் நோக்கம் இந்த ஆன்மீகத்தைக் கட்டிக்காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், அவற்றை நாம் மறந்துவிடக்கூடாது என்பதற் காகவும்தான். இன்றைக்கு ஆன்மீகம் என்பது இந்து சமயத்தில் சைவமாகவும், வைணவமாகவும் பிரிந்து பல்வேறு முறைகளி

செயல்ப்ட்டு வருகின்றது. இவ்வாறு வைணவமும், சைவமும்
பல்வேறு வகைகளில் செயல்பட்டு வந்தாலும் கூட அவை மக்க
ளுக்குப் பயன்படக்கூடிய வகையிலே நிறைய சொத்துக்
களை வைத்துக்கொண்டு எந்த அளவிலே செயல்படுகின்றது
என்பதை எல்லாம் கண்காணிக்கத்தான் இந்தத் துறை நிர்
மாணிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், அதே நேரத்தில் இதுவரையிலும் இந்தத்துறை எப்படி
இயங்கி வந்தது என்பதும், இந்தத் துறையிலே இப்போது எப்ப
டிப்பட்ட புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்
பட்டு வருகின்றன என்பதும் பற்றி இங்கே எனக்கு முன்னாலே
பேசிய என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த அருமைச் சகோதரர்
வழக்கறிஞர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தெளிவாகச் சொன்
னார்கள். இவ்வளவு பெரிய முக்கியமான இந்த நிர்வாகத்தை
—இதனை இவன்கண் ஆய்ந்துவிடல், தெரிந்து விடல் என்பது
மாதிரி—அதற்கான தகுதியான பாங்குமிக்க அமைச்சர் அவர்களி
டத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்படைத்து அதன்
காரணமாக இன்றைக்கு மற்றவர்களாலும் கூட புகழப்படக்கூடிய
முறையில் இந்தத் துறை செயல்படுகின்றது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். காலாகாலங்களில் செயல்பட வேண்டியகாரி
யங்களைச் செய்வது, சமயங்களைச் சேர்ந்த பலருக்கும் ஆதரவுக்
கரங்களை நீட்டுவது போன்றவற்றைப் பொறுத்தவரையில்
எந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு
இதுவரையில் இல்லாத அளவுக்குக் காரியங்களை இந்தத் துறை
இன்றைக்குச் செய்து கொண்டு வருகின்றது.

(பிற்பகல் 12-10)

ஆனால், அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அரசியல் என்பதும், ஆன்மீகம்
என்பதும் வெவ்வேறாகத்தான் நாம் காண்கிறோம். ஆனால்,
பெருமதிப்பிற்குரிய மகாத்மா காந்தி அவர்கள் ஆன்மீகமும்
அரசியலும் என்றைக்கு ஒன்றாகச் சேர்ந்து போகின்றதோ
அன்றைக்குத்தான் நாட்டிலே செம்மையும், செழிப்பும் ஏற்படும்
என்பதை அழுத்தந்திருத்தமாக அந்தப் பெரியவர் சொல்லிச்
சென்றார். அந்த முறையினை இந்தக் காலத்தில்தான், புரட்சித்
தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நாம் பார்க்
கிறோம். அதனால்தானோ என்னவோ அவர்களை நாம்
இதய தெய்வமாகக் கருதி அழைக்கும் போதெல்லாம் தெய்வத்
திற்குச் சமமாகவே அழைக்கிறோம். அரசியலிலே நமக்குச்
சுதந்திரம் வேண்டும் என்று நாம் அத்தனை பேரும்
போராடினோம். நம்மிலே எவ்வளவோ பேர் காராகிரகத்தை
சந்தித்திருக்கிறோம். இதனுடைய ஆற்றல்தான் இன்றைக்குச்
சுதந்திரம்கிடைத்திருக்கிறது. ஆனால், அதே சுதந்திரம் ஆன்மீகத்
துறையிலேகிடைக்கிறதா இவ்வளவு நாட்களாக ஆன்மீகத்துறையிலே



சுதந்திரத்தை அடைந்தார்களா என்று எண்ணிப் பார்க்கக்கூட,
விமர்சனம் செய்யக்கூட, இதுவரையிலே நாதி இல்லாமல் இந்தத்
துறை கிடந்தது. அந்தத் துறையிலே ஒட்டிக் கொண்டிருக்கக்
கூடிய அழுக்குகளை எல்லாம், அப்பிக் கொண்டிருக்கிற ஒட்டடை
களை எல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் அடித்து,
சுத்தமாக்கி, அங்கேயும் சுதந்திரம் கிடைத்தது என்பதை நான்
மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசியல்
சுதந்திரம் கிடைத்தது என்று சொன்னாலும், சுதந்திரம் கிடைத்த
உடன் அமைச்சர்கள் வந்தார்கள். ஆனால் ஆள்வதற்கு என்று
ஒருதனி வர்க்கம் என்று இருக்கிறது. தமக்கும் அதற்கும் சம்பந்தம்
இல்லை என்று கடைகோடியிலே வாழ்ந்து கொண்டிருந்த
வனும், ரிக்‌ஷா வண்டி ஓட்டுகிறவனும் ஆட்சிக்கும் நமக்கும்
சம்பந்தம் இல்லை, அமைச்சருக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை
என்ற காலம் இருந்தது. அந்த ரிக்‌ஷா வண்டி ஓட்டுகிறவனைச்
சுதந்திரம் அடைந்தவனாக ஒத்துக் கொள்ள முடியாது. அவன்
ஏற்றுக்கொள்ள முடியாது. சுதந்திரம் வாங்கிப் புண்ணியம்
இல்லை யென்றுதான் பெரியார் கூட சுதந்தர நாளைத் துக்க
தினமாகக் கொண்டாட வேண்டுமென்ற கருத்தைச் சொன்
னார்கள். ஆனால், இந்தக் காலத்திலே—அன்றைக்கு மகாத்மா
காந்தி சுதந்திரம் வாங்கினாலும், அந்தச் சுதந்திரம் உள்ளபடியே
பயனுள்ளதாக, ரிக்‌ஷா வண்டி ஓட்டுகிறவன் கூட, புரட்சித்
தலைவர் காலத்திலே, தன்னைத்தான் முதல் மந்திரி என்று
எண்ணிக் கொண்டு, முழு திருப்தியோடு கூலிக்காரர்கள் கூட
வேலை செய்கிறார்கள். ஆகவே முழு சுதந்திரம் அரசியலிலும்
இன்றைக்குத்தான் கிடைத்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஆன்மீகத்திலே சுதந்திரம் தேவை என்று
நாம் பாடு பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. தானாகவே
வந்து கொண்டிருக்கிறது. ஆன்மீகத்திலே சுதந்திரம்—அடித்
தளத்திலே இருப்பவன் எல்லாம் ஆன்மீகத்திற்குச் சம்பந்தம்
இல்லாதவன்—ஒரு குறிப்பிட்டவர்கள்தான் ஆன்மீகத்திலே
இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்டவர்கள் தான் ஆண்டவனிடத்
திலே பேச வேண்டும், ஒரு குறிப்பிட்டவர்களுக்கும் ஆண்ட
வனுக்கும் தான் உறவு உண்டு, நமக்கும் இதற்கும் என்ன
இருக்கிறது என்று பாட்டாளி வர்க்கமும், தொழிலாளி வர்க்கமும்
அவரவர்களுடைய வேலையைக் கவனித்துக் கொண்டிருந்
தார்கள். இன்றைக்குப் பாட்டாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி
வர்க்கத்திற்கும் ஆன்மீகத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது, அந்தச்
சக்தியை நீங்கள் கட்டிக் காப்பாற்ற வேண்டும், இறைமையை
நீங்கள் காப்பற்ற வேண்டும், ஒழுங்கைக் கடைபிடிக்கவேண்டும்,
பண்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும், ஆலயம் என்பது முதலீடு
என்று சொன்னால், ஒழுக்கமும் பண்பாடும், நல்ல தேச ஒற்றுமை
யும் நல்ல உணர்வும் அந்த ஆலயத்திலிருந்து, நல்ல முதலீட்டி
லிருந்து கிடைக்கக்கூடிய அறுவடை என்பதை நான் சொல்வேன்.
ஆனால், அந்தப் பண்பாடுகள் எல்லாம் நமக்கு எப்படி கிடைக்
கின்றது. இப்படிக் கிடைக்கின்ற மூலதனமாக சில மடங்கள்
இருக்கின்றன. ஆனால், மடங்கள் சத்தியத்தையும் சம்பிரதாயமாக

வைத்துக்கொண்டிருக்கிற தர்மத்தை சத்தியமாகவைத்துக்கொண்
டிருக்கிற மடங்கள் எல்லாம் இன்றைக்குக் கையிலே கத்தியும்
துப்பாக்கியுமாக ஏந்தி வருகிறார்கள் என்பதனை இந்த மாமன்றம்
மறந்துவிட முடியாது. கத்தி எதற்கு? துப்பாக்கி எதற்கு? தைரிய
மாக தர்மத்தையும் சத்தியத்தையும் தலையிலே தூக்கி வைத்துக்
கொண்டு, தெருவிலே நடமாடி, சுற்றிச் சுற்றி, ஆன்மீகத்தை
விலைபேசி விற்று அதைப் பரப்ப வேண்டிய கட்டத்திலே இருக்கக்
கூடியவர்கள் இங்கே துப்பாக்கியையும் கத்தியையும் வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். காரணம், அவர்கள் கையிலே சொத்து
இருக்கிறது. காரணம் அவர்கள் கையிலே பொன் இருக்கிறது.
காரணம் அவர்கள் கையிலே கட்டுக்கு மீறிய பொருள்கள்
இருக்கின்றன. அந்தப் பொருள்களையும் பொன்னையும் காப்
பாற்றத்தான் இப்படித் துப்பாக்கியையும் மற்ற ஆயுதத்தையும்
கையில் ஏந்துகிறார்கள். நான் இந்த அரசுக்கு நினைவுபடுத்த
விரும்புகிறேன். இந்த மடங்களிலே கொட்டிக் குவித்துக்
கொண்டிருக்கிற இந்தப் பொன்னையும் மணியையும் இந்த
அரசு கண்காணிக்க வேண்டும். இவ்வளவு பெரிய மடாதிபதி
களுக்கு பொன்னையும் பொருளையும் காப்பாற்ற வேண்டிய
சுமை தேவை இல்லை. அந்தச் சுமையை நாம் எடுத்துக்கொள்ள
லாம். ஆனால் அதே நேரத்திலே அவர்களுடைய வழிபாட்டிலோ
மதத்திலோ, அவர்களுடைய முறைகளிலோ நாம் குறுக்கிட
வேண்டுமென்று சொல்லவில்லை.

அபரிமிதமாக சேர்த்து வைத்திருக்கிற பணம், எனக்கு
முன்னாலே பேசியவர்கள் கூட சொன்னார்கள், ஆலயத்திலே
இருக்கிற பணம் அதற்காகத்தான் செலவிடப்பட
வேண்டுமென்று. அது ஒரு காலம். ஆனால், ஆலயம்
என்று சொன்னாலும் தர்மம் அங்கே இருக்கிறது. சத்தியம்
அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறது. தர்மத்தைப் பார்க்க
முடியாத, சத்தியத்தை நோக்க முடியாத, சத்தியமும் தர்மமு
மாகவும் வாழ்ந்து மறைந்த தலைவர்கள் இருக்கிறார்கள். அந்தத்
தலைவர்கள் காலிலே, சத்தியத்தின் காலிலே விழுந்து வணங்கி
ஆசீர்வாதம் பெறுவதிலே என்ன தவறு இருக்கிறது? சத்திய
மாகவே, தர்மமாகவே வாழ்ந்து வளர்ப்பவன், வாழ வைப்பவன்
அதற்கு வழி வகுப்பதுதான் இந்த அறநிலையத் துறை என்பதை
யாராலும் மறந்து விட முடியாது. ஆனால், நம்முடைய உள்ளத்
திலே தெய்வம் இருக்கிறது, நம்முடைய உள்ளத்திலே சுதந்திரம்
இருக்கிறது. நம்முடைய உள்ளத்திலே நல்ல தன்மைகள் வரும்
போது அதைத் தெய்வம் என்று சொல்கிறோம்; ஒருவனை கெடுக்க
வேண்டுமென்ற எண்ணம் வரும்போது அதைப் பிசாசு என்று
சொல்கின்றோம். ஆகவே, முழுக்க முழுக்க தெய்வ எண்ணம்
படைத்தவனை வணங்குவதிலே என்ன தவறு இருக்கிறது. தந்தை
பெரியாரும் இல்லை; இந்த இரண்டு பேரையும் சுமந்து கொண்டு
உங்களுடைய கொள்கைகளை பரப்பிக் கொண்டு தன்னைத்தானே
கங்கணம் கட்டிக்கொண்டு இன்றைக்கு புரட்சித் தலைவர் இருக்
கிறார்கள். சில பேர்களுடைய பேச்சுக்கள் அவருடைய நெஞ்சை
நெகிழ வைக்கிறது; சில பேர்களுடைய பேச்சுக்கள் அவருடைய
நெஞ்சை புண்ணாக்கிக் கொண்டிருக்கிறது. பெரியார், அண்ண





ஆகியோர்களின் பாரம்பரியத்திலே வளர்ந்த ஒரு நண்பர்
இந்த மன்றத்திலே பேசுகிறபோது, அவர் ஒரு கருத்தைச் சொல்லி
விட்டார் என்பதற்காக இந்த சபையின் தலைவர் மன்னிப்பு
கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ரெயிலிலே பிரயாணம்
செய்தால் கூட எவனோ ஒருவனுடைய காலிலே நம் கால் பட்டு
விட்டது என்றால் அவனை அறியாமலேயே தொட்டு கன்னத்
திலே போட்டுக் கொள்கிற தன்மை படைத்தது தமிழ்நாடு.
ஆனால், பெரியார் பாரம்பரியத்திலே வளந்தவர் என்று பெருமை
பேசுகிறவர், அண்ணா பாரம்பரியத்திலே வளர்ந்தவர் என்று
பெருமை பேசுகிறவர், தலைவர் மன்னிப்பு கேட்க வேண்டு
மென்று சொன்னால், மன்னிப்பா என்று ஏளன சிரிப்பு சிரித்தது
மட்டுமல்லாமல், நான் என்ன ஜாதியிலே பிறந்தேன் தெரியுமா;
அப்படிப்பட்ட ஜாதியிலே பிறந்த நானா மன்னிப்பு கேட்பது
என்கிறார். நான் சத்தியமாகச் சொல்கிறேன்; இது சபைக்
குறிப்புகளில் இருக்கிறது. இல்லையென்று சொல்லமுடியாது.
தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா இருந்தால் உங்க
களுடைய நடவடிக்கைகளைப் பார்த்து கண்ணீர் விடாமல்
என்ன செய்வார்கள் ? அந்தக் கண்ணீரை இன்றைக்கு புரட்சித்
தலைவர் அவர்கள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கோவிலைப் பற்றி சில தத்துவங்களைச் சொல்வார்கள்.
தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று.
இதெல்லாம் ஆன்மீகவார்த்தைகள் தான்; சும்மா உட்காராதீர்கள்,
தெருவிற்கு வாருங்கள், ஆலயத்திற்குச் செல்லுங்கள், வழிபடுங்
கள். தெய்வமே எனக்குச் செய் என்று சொல்லுங்கள். கொடுக்கும்
தட்டுங்கள், கேளுங்கள் என்ற நெறிமுறைகளைத் தாண்டி இந்த
ஆட்சி முன்னால போய்க் கொண்டிருக்கிறது என்பதை பெரு
மையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு, மூன்று
நாட்களுக்கு முன்னால் பேசிய பெரியவர் இளையபெருமாள்
அவர்கள் சொன்னார்கள். காஷ்மீரத்தில் இருக்கக்கூடிய தாழ்
த்தப்பட்டவன், கன்னியாகுமரியில் இருந்தாலும், வங்காளத்தில்
இருந்தாலும், குஜராத்தில் இருந்தாலும் அவர்களுக்கு உரிமை
வாங்கிக் கொடுத்தது அம்பேத்கார் தான். அதைக் கொடுக்
கிறேன் என்று ஒப்புக்கொண்டது சத்தியத்தின் மொத்த
உருவமான மகாத்மா காந்தி தான். ஆகவே, சத்தியமும், இவரும்
இரண்டு பேர்களும் இல்லையென்றால் இந்த உரிமை அவர்
களுக்கு இல்லை என்று சொன்னார்கள். நான் இன்றைக்குச்
சொல்கிறேன். அது இவர்களுக்கு கிடைத்தது தேடியதால்
தானே, கேட்டதால் தானே; ஆனால், புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சியில் தேடாமலே, கேட்காமலே எல்லா உரிமை
களும் கிடைக்கின்றன. 18 பெர்சென்ட் பஞ்சாயத்து தேர்தல்
களில் ரிசர்வேஷன் செய்தது யார்? பெண்கள் இட ஒதுக்கீடு
வேண்டுமென்று கேட்டு கொடி தூக்கினார்களா? ஜாலியன்
வாலாபாத்தை சந்தித்தார்களா? எந்த வட்ட மேஜை
மாநாட்டைச் சந்தித்தார்கள்? அவர்களுடைய உள்ள உணர்வு
களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு அந்த உரிமை வேண்டு
மென்று ரிசர்வேஷன் செய்தது யார்? எந்த வட்ட மேஜை
மாநாடு? ஆகவே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்

கப்படும் என்று சொல்லும் வரையில் தமிழகத்தில் புரட்சித்
தலைவர் ஆட்சி காத்துக் கொண்டிருக்காது. அதற்கு முன்னாலே
அவர்களாகவே இந்த சலுகைகளை எல்லாம் செய்து கொண்டி
ருக்கிறார்கள். ஆகவே தேடிக் கொடுக்கக் கூடிய அம்பேத்காரும்,
கேட்டுக்கொடுக்கக்கூடியமகாத்மா காந்தியும் போல, சத்தியத்தை
யும், தர்மத்தையும் தன்னிடத்தில் கொண்டு அரசாங்கம்
தமிழகத்தில் நடந்துக் கொண்டிருக்கிறது என்பது நான் சொல்ல
மலே விளங்குகிறது.

(பிற்பகல் 12.20)

நான் இந்த அரசிற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாம்
ஆலயங்களை கண்காணிக்க வேண்டும். இந்த ஆலயங்களில்
அமைச்சர் அவர்களின் தலையீட்டினால் தான் சமுதாயப் பணி
களை செய்வதற்கு முன் வந்திருக்கிறார்கள். அந்த சமுதாயப்
பணிகளை நாம் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதே
நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். வான
வெளியில் போய் நிலாவிலே மனிதன் இறங்கி விட்டான். விஞ்
ஞானத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானியும், வானவெளியில் போகிற
கப்பலைக் கண்டுபிடித்த விஞ்ஞானியும், அந்தக் கப்பலில் போ
வதற்கு முன்னாலே சர்ச்சிற்குப் போய் விட்டுத் தான் அந்த
இடத்திற்குப் போகிறான். ஆகவே ஆன்மீகம் அந்த அளவிற்கு
உயர்த்திருக்கிறது. அந்த ஆன்மீகத்தை நாம் அடைய வேண்டு
மென்றால் அதற்குரிய ஆணி வேராக சத்தியம் இருக்க வேண்டும்,
தர்மம் இருக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே மேல்
மருவத்தூர் என்ற இடத்தில் ஒரு ஆலயம் இருக்கிறது. அந்த
ஆலயம் உலகத்திலே இருக்கிற அத்தனை ஆன்மீகவாதிகளுக்கும்
வழிகாட்டியாக இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். எளிமையை ஒருவன் கிடையாது என்றால் அவன்
அந்த மண்ணை மிதிக்க முடியாது. ஆணவமும், அகங்காரமும்
இருக்கிறதென்றால் அவன் அந்த மண்ணை மிதிக்க முடியாது.
குதிரைகளை கட்டுங்கள், மலர் கிரீடங்கள் கொண்டு வாருங்கள்,
நான் ஊர்வலம் வருகிறேன் என்று சொல்லக் கூடிய ஆணவப்
போக்குகளுக்கு எல்லாம் அங்கே இடம் கிடையாது. காரணம்
பதவி உயர உயர ஆணவம் ஒழிய வேண்டும்; அக்கிரமம் ஒழிய
வேண்டும்; உங்களுடைய நெஞ்சத்திலிருந்து இவைகளை ஒழிந்
தால்தான் அங்கே உங்களுக்கு இடம் கிடைக்கும்.
தொண்டுக்கும் கடமைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு தாய்
தன் குழந்தைக்குச் சோறு ஊட்டினால் அது கடமை. ஆனால்,
அதே தாய் மூன்றாம் வீட்டுக் குழந்தைக்குச் சோறு ஊட்டி
னால் அது தொண்டு. ஆதரவற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்,
பிற்படுத்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், பெண்கள் கூட
அந்த மேல்மருவத்தூர் கோவிலுக்குள்ளே சென்று, பூசை
செய்ய முடியும். அந்த மேல்மருவத்தூரிலே இருக்கின்ற
முறையைப் போல் எல்லாக் கோயில்களிலும் செயல்முறைக்கு
வரவேண்டும் என்கிற என்னுடைய . அபிப்பிராயத்தை
தெரிவித்துக் கொள்கிறேன்.



யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொல்கிறோம். எல்
லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்று சொல்கிறோம்.
இந்த நடைமுறை மேல்மருவத்தூர் கோயிலில் இன்றைக்குப்
பின்பற்றப்பட்டு வருகிறது. மற்ற கோயில்களிலும் இது நடை
முறைப்படுத்தப்பட வேண்டும்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். அது
சட்டத்திற்கு விரோதமாக இருக்கலாம். அப்படியிருந்தால்
அதை மாற்ற வேண்டும். எல்லோரும் ஓர் குலம் என்று சொல்
கிறோம். ஆனால் இந்து கோயில்களில் முஸ்லீம்கள் வரக்
கூடாது, கிருஸ்தவர்கள் வரக்கூடாது என்று சொல்கிறோம்.
மற்றவர்கள் எப்படியிருந்தாலும், நாம் எல்லோருக்கும் முன்
னோடியாக இருந்து, இந்துவாக இருந்தாலும், முஸ்லீம்களாக
இருந்தாலும், கிருஸ்தவர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லாம்
நம் சகோதரர்கள் என்ற முறையில் அவர்கள் விரும்பினால் நம்
கோவிலுக்கும் வந்து வழிபட வழிவகை செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். இந்த இந்து அறநிலையத்துறை மானியக்
கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்
உரையை முடிக்கிறேன். ஆமென், அசலாம்மேலே-கும்
ஓம் சக்தி, வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே,
இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கைமீது இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைத் தெரி
வித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் வைத்துள்ள
கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு தகவல்களைத் தந்து
இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறை
யைப் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, தமிழகத்தில் மூடிக்
கிடந்த கோயில்கள் எல்லாம் திறக்கப்பட்டு இருக்கின்றன.
சாய்ந்து கிடந்த சிலைகள் எல்லாம் நிமிர்த்தி வைக்கப்பட்டு
இருக்கின்றன. விழாக்கள் எடுக்காத கோயில்களில் எல்லாம்
விழாக்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் துறைக்கு
அவற்றைச் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. ஆகவே,
அது செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

தமிழகத்தில் உள்ள கோயில்களில் உள்ள சிலைகள், எவ்வளவு
சிலைகள் வெளி நாட்டிற்கு கடத்தப்பட்டு இருக்கின்றன. உள்
நாட்டிலே எவ்வளவு உருக்கி விற்கப்பட்டு இருக்கிறது என்பதை
எல்லாம் எந்த அளவிற்கு இத்தத் துறை கண்டுபிடித்து இருக்கிறது
என்பதைப் பார்த்தால், அது மிகக் குறைவாக இருக்கிறது
என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத்தில்
மார்ச் 22-ஆம் தேதி ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் மத்திய
அமைச்சர் பி. கே. தக்கார் ஒரு பதிலைத் தந்து இருக்கிறார்கள்.
1982 ஆம் ஆண்டில் பஞ்சலோகச் சிலைகள் 113 திருடப்பட்டு
இருப்பதாகவும், 1981-ல் 114-ம், 1980—ல் 106-ம், 1979ல்
101-ம் திருடப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அந்தத் திருடர்கள் எங்கே கொண்டு போய் வைத்து இருக்கிறார்கள். அந்தத் திருட்டுகள் எல்லாம் எப்போது கண்டுபிடிக்கப்படும், அவைகள் எவ்வாறு திருடப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன போன்றவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூர்மையாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிலைகளைக் கடத்தி பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு அதை விற்று, இன்றைக்கு பலர் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். இவையெல்லாம் தமிழ்நாட்டின் சொத்து. ஆகவே, அதிகாரிகள் விழிப்போடு இருந்து இதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூரில் திரு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் மரணம் கொலையா, தற்கொலையா என்று ஆய்வதற்காக பால் கமிஷன் போடப்பட்டது. அந்தப் பால் கமிஷன் அறிக்கை கொடுப்பதற்கு முன்பே அங்கே ஒரு சுகாதாரத் தொழிலாளி காணாமல் போய்விட்டார். அவர் ஒருவர் தான் தொங்குவதைப் பார்த்தவர். அந்தப் பால் கமிஷன் ரிப்போர்ட் என்ன சொல்லியிருக்கிறது என்றால் அது தற்கொலை அல்ல என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தற்கொலை இல்லை என்று சொன்னால், அது கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்க இடம் இருக்கிறது. அந்த அறிக்கைமீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யாது? அது சம்பந்தமாக எதுவும் நடவடிக்கை எடுத்ததாக இதுவரையிலும் தெரியவில்லை. அதை ஒட்டி என்ன வருகிறது? ஸ்ரீரங்கம் கோவில் அதிகாரி வெங்கிடாசலம் மரணம். கொலையா தற்கொலையா? தற்கொலை என்று சொல்லப்படுகிறது. அவருடைய பெற்றோர்கள் கொலை என்று சொல்கிறார்கள். அதைக் கண்டறிய வேண்டும் என்பதற்காக வன்னிய அடிகளும் பெற்றோர்களும் உண்ணாவிரதம் இந்த மாதம் 20-ந் தேதி இருக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் எதைக் காட்டுகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று, நிர்வாக அதிகாரி வேலுச்சாமி என்பவர் 6, 7 வருஷமாக அங்கேயே இருந்து கொண்டிருக்கிறார். சாதாரணமாக ஒரு நிர்வாக அதிகாரியை 2, 3 வருஷத்தில் வேறு இடத்திற்கு மாற்றிவிடுவார்கள். ஆனால் இவர் தொடர்ச்சியாக 6, 7 வருஷமாக அங்கேயே இருக்கிற மர்மம் என்ன? இப்படி தமிழ்நாட்டில் நிர்வாக அதிகாரிகள் அல்லது அங்கே தணிக்கை செய்வதற்காக அனுப்பப்படுகின்ற, ஊழலைக் கண்டுபிடிக்க அனுப்பப்படுகிற தணிக்கை அதிகாரிகள் தங்களுடைய பணியை ஒழுங்காகச் செய்வதற்கு அஞ்சக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. வெங்கடாசலத்தின் மரணம் கொலையா தற்கொலையா என்று இரண்டு விதமான விவாதம் வந்திருக்கிறது. கொலையா, தற்கொலையா என்பதை அறிந்துகொள்ள தமிழக மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். என்ன முடிவு என்பதை எதிர்பார்க்கிறார்கள் மக்கள். எனவே, உடனடியாக ஒரு கமிஷன் வையுங்கள்



உண்மையைக் கண்டுபிடித்து, இனிமேல் தமிழ்நாட்டில் இப்படிபட்ட பணிகளுக்கு வருகின்ற அதிகாரிகள் அஞ்சக் கூடிய நிலை இல்லாமல், துணிவாக நிர்வாகத்தை மேற்கொள்ள அமைச்சரவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு அமைச்சரவர்கள் 31 கோடி ரூபாய் குத்தகைப் பாக்கி இருக்கிறது, அதனால் தமிழ்நாட்டில் இருக்கிற கோவில் நிர்வாகம் பாதிக்கப்பட்டிருக்கிறது, குத்தகை விவசாயிகள் நெல் அளிக்க மறுக்கிறார்கள், ஆகவே, குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லி வருகிறார்கள். முதலமைச்சரும் அனுமதி அளித்துவிட்டார் என்று சட்ட மன்றத்திலும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் குத்தகை விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். இந்த குத்தகைப் பாதுகாப்புச் சட்டம் என்பது இதற்கு முன்னால் ஆட்சி நடத்தியவர்கள் கருணை கூர்ந்து, விவசாயிகள் மனு போட்டதால் சட்டம் கொண்டுவரவில்லை. 1952 ஆம் ஆண்டு முதல் தஞ்சை மாவட்டத்தில் குத்தகை விவசாயிகள் நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். குத்தகைப் பாதுகாப்புச் சட்டம் வருவதற்கு பலர் உயிர் விட்டிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதும், குத்தகைப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதும் நீண்ட நெடிய போராட்டம் நடைபெற்றதற்குப் பின்னால்தான். பெரிய போராட்டம் நடத்தி, சிவராமன் களப்பால் குப்பு கோட்டூர் நாசு, இரணியன், ஆறுமுகம் போன்றவர்கள் அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களின் துப்பாக்கித் தோட்டாக்களுக்குப் பலியான பின்னால்தான் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் எல்லாம் வந்திருக்கின்றன. அப்பேர்ப்பட்ட சட்டங்களைப் பெற்ற விவசாயிகள், பாதுகாப்பு பெற்ற விவசாயிகள், இந்த நிலத்தை நம்பி இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள். கோவிலுக்கு நெல் அளக்கிறார்கள், மடங்களுக்கு நெல் அளக்கிறார்கள், முறைப்படி அளக்கிறார்கள். இப்போது ஏன் இந்த குத்தகைப் பாக்கி ஏற்பட்டது? 1977 ஆம் ஆண்டு புயல், 1979 ஆம் ஆண்டு வறட்சி, 1982-83 ஆம் ஆண்டு கடுமையான வறட்சி, 1983-84 ஆம் ஆண்டு இதுவரையில் கண்டிராத அளவுக்கு மழை பெய் வெள்ளம் கரைபுரண்டோடியது. அதனால் விவசாய நிலங்கள் எல்லாம் பாழடிக்கப்பட்டன. இப்படிப்பட்ட நிலைமையில் விவசாயிகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப் போகிறேன், அதன் மூலம் கோவில் நிலங்களைப் பாதுகாக்கப் போகிறேன், கோவிலைப் பாதுகாக்கப் போகிறேன் என்று சொல்லுவது எந்த வகையில் பொருத்தமாகும் என்று தெரியவில்லை. அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். காங்கிரஸ் ஆட்சியானாலும், சரி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் போராடிப் பெற்ற

உரிமையைப் பறிக்கக்கூடாது. அப்படி பறித்தால் விவசாயிகள் போராடி முறியடிப்பார்கள். இப்படி நான் சொல்லும்போது, கோவில் நிர்வாகத்தை நீங்கள் பாழ்படுத்திவிடுகிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்கள். அது சரியல்ல. கோவில் நிர்வாகத்தை திறமையாக நடத்துங்கள், வருமானத்தை பெருக்குங்கள். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

(பிற்பகல் 12-30)

கேரளத்தில் விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கி, கோவில் நிர்வாகத்தை மேற்கொண்டார்கள். கோவிலுக்கு அருமையான கிச்சிலி அரிசி கொடுக்கிறார்கள். கோவில் அதிகாரிகள், அர்ச்சகர்கள், நிர்வாக அதிகாரிகள் எல்லோருக்கும் அரசாங்கம் நேரடியாகச் சம்பளம் கொடுக்கிறது. அதைப் போல நீங்களும் செய்யுங்கள். சம்பளம் பஞ்சப்படி கொடுங்கள். நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். ஆனால், நீண்ட நெடியப் போராட்டத்திற்குப் பின்னால் குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் பெற்ற நன்மையை, அவர்களுடைய பாதுகாப்பில் இருக்கிற நிலத்தை எடுப்பதற்கு நீங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது முறையல்ல ; சரியல்ல. அப்படிக் கொண்டு வருவது என்றால் உண்மையிலேயே தந்தை பெரியார் எந்த இலட்சியத்திற்காக, எந்தக் கொள்கைக்காக இந்த திராவிட இயக்கத்தை உருவாக்கினார்களோ அதற்கு மாறான நடவடிக்கையாக அது இருக்கும். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அந்த குத்தகை விவசாயிகளை வீணாக ரோட்டிலே அலைய விடாதீர்கள். அப்படி விடுவதற்கு ஆட்சியாளர்கள் மெஜாரிட்டி சட்டமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கிறோம் என்று சொல்லி சட்டம் இயற்றினால், நிச்சயமாக நீண்ட காலம் போராடி சட்டத்தைப் பாதுகாத்த, சட்டத்தை இயற்றவைத்த அந்த விவசாயிகள் நிச்சயமாக அந்தச் சட்டத்தை முறியடிப்பார்கள், பெரியதொரு போராட்டத்தை இந்த சர்க்கார் சந்திக்க நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவசாயிகளை பாதுகாக்கிற குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தருகின்றோம் என்று சொல்லி இதுவரையில் ஏற்பட்ட குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்து அந்த நிலத்தை —பினாமிகளுக்காக நான் வாதாடவில்லை—உண்மையிலேயே அனுபவிக்கிற குத்தகை விவசாயிகளுக்கு, அந்த நிலத்தையே நம்பி வாழ்கின்ற அந்த விவசாயிகளுக்கு, பாதுகாப்பு செய்து அந்த நிலத்தை அவர்களுக்கு சொந்தமாக்க இந்த சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குடியிருப்பு மனை. கோயில் நிலங்களில் குடியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு, ஏழைகளுக்கு மனைப் பட்டா கொடுக்க மறுக்கிறார்கள். அப்படி மறுப்பதன் மூலமாக, இந்த ஏழைகளுக்கு சர்க்கார் கூட்டுறவு அமைப்புகளின்





மூலமாகவும், பல்வேறு இலாக்காக்களின் மூலமாகவும், வீடு
கட்டுவதற்கு வழங்கப்படும் கடன் கிடைப்பதில்லை. அப்படிப்
பட்ட கடன்களை பட்டா இருந்தால்தான் கொடுக்கிறார்கள்.
ஆகவே கோவில் மனையில் குடியிருக்கும் இலட்சக்கணக்கான
ஏழை எளிய மக்களுக்கு, அவர்களில் பெரும்பகுதியாக உள்ள
ஹரிஜன மக்களுக்கு அறநிலையத் துறை மூலம் மனைப்பட்டா
வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய நிலை குறிப்
பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. நான் குறிப்பாகச்
சொல்கிறேன். மன்னார்குடி தாலுகா கோட்டூரில் உள்ள
தேனம்விளை கோயிலுக்கு சொந்தமான இடத்தை 5 ஏக்கர்
நிலத்தை ஆதிதிராவிட நலத்துறை மூலமாக நிலமற்ற விவசாயி
களுக்கு கொடுப்பதற்கு 1967 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்தார்கள்.
அன்றைக்கு இருந்த அந்தக் கோயில் நிர்வாக அதிகாரி இதை
எதிர்த்து வழக்குத் தொடர்ந்து இன்றைய வரையிலும் அந்த
வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு
என்ன நடக்கிறது என்றால், தனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம்
பகுதிக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்
களை கேட்டுக் கொள்வது, 1967லிருந்து இன்றைக்கு வரையிலும்
வழக்கு மூலமாகத் தடுத்து வைத்திருக்கக்கூடிய அந்த வழக்கை
வாபஸ் பெற்று குடிமனை இல்லாத ஹரிஜன விவசாயிகளுக்கு
குடிமனை வழங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல, திருத்துறைப்பூண்டி நகரம், அமைச்சர் அவர்
களுக்குத் தெரியும். அந்த ஊரின் மையத்தில் இராம மடத்தைச்
சேர்ந்த குளம் ஒன்று 1 ஏக்கர் 7 சென்டில் இருக்கிறது. அந்தக்
குளம் திருத்துறைப்பூண்டி நகரத்தை, நரகமாக ஆக்கிக்
கொண்டிருக்கிறது. அந்த குளத்திலே உள்ள தண்ணீர் ஜனங்
களுக்கும் தேவைப்படுதில்லை, மாடு கன்றுகளும் குடிக்
காது. நகரத்தில் வருகின்ற கழிவு நீர்களை நடுமையமாகத்
தேக்கி நிற்கிறது இந்தக் குளம். அந்தப் பேரூராட்சி அந்தக்
குளத்தைக் கேட்கிறது. அதற்குப் பதிலாக தேன்குளம் என்ற
பேரூராட்சிக்குச் சொந்தமான குளத்தைத் தருவதாகச் சொல்
கிறார்கள். ஆனால் அறநிலையத் துறை அதிகாரிகள் கொடுக்க
மறுக்கிறார்கள். அப்படிக் கொடுக்காவிட்டால் அந்த இராம
மடம் குளத்தைத் தூர்த்துவிட்டு, அங்கே ஒரு பூங்காவை
வையுங்கள். பொது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அந்த
நகரத்தில் வேறு இடமே இல்லை. இந்தக் குளம் மக்களுக்குத்
தேவையில்லாத ஒரு குளமாக இருக்கிற காரணத்தால் இதை
அறநிலையத் துறை செய்தாலும் சரி, அல்லது பேரூராட்சி மூலம்
செய்தாலும் சரி, திருத்துறைப்பூண்டி நகரத்தை நரகமாக
ஆக்காமல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கல்யாண மண்டபம் உண்மையிலேயே தேவை,
கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் கல்யாணம்
செய்ய வேண்டும் என்றால் பந்தல் போட மூங்கில் தேவைப்படு
கிறது. கீத்து தேவைப்படுகிறது. இதற்கு முன்பாக மலிவாகக்

கிடைத்தது. இப்போது கீத்து ரூ. 80 ஆகவும் மூங்கில் ரூ. 15 ஆகவும் விற்கப்படுகிறது. அதுவும் கிடைப்பதில்லை. இதனால் ஏழை எளிய மக்கள் திருமணம் செய்வதற்கு மிகவும் அவஸ்தைப் படுகிறார்கள். எனவே, திருத்துறைப்பூண்டியில் கல்யாண மண்டபம் உள்ளது. கோவினூர், இடும்பவனம் கோவிலில் கோயில்பத்திலும் கல்யாண மண்டபங்களைக் கட்டி குறைந்த வாடகைக்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோட்டூரில் தேனமா கோவிலுக்குச் சொந்தமாக ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது. அந்தக் கல்யாண மண்டபம் நெல் வைக்கும் குடோன் போல் இருக்கிறது. அதனுள்ளேயே சமையல் செய்ய வேண்டியிருக்கிறது. கல்யாணம் நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு இடம் போதவில்லை. தயவு செய்து அந்தக் கோயிலுக்கு நிதி ஒதுக்கி கல்யாண மண்டபத்தை விஸ்தீரணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இன்று இந்து முன்னணி என்ற பெயரால் எங்கே பார்த்தாலும் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்து என்ற பெயரால், இந்து முன்னணி அமைத்துக்கொண்டு, பிரச்சாரங்கள் செய்கிறார்கள். அந்தப் பிரச்சாரம் எப்படி அமைகிறது. இந்து மதத்தைப் பெருக்கட்டும். இந்து மதத்திலிருந்து மற்ற மதத்திற்கு போகாமல் இருப்பதற்கு அதைத் தடுப்பதற்கான பிரச்சாரத்தைச் செய்யட்டும். அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் என்ன பிரச்சாரம் செய்கிறார்கள். மேடை போட்டதற்குப் பிறகு, இந்து முன்னணி என்று அமைத்துக் கொண்டு, மற்ற முஸ்லீம் மக்கள் அல்லது மற்ற சமய மக்களை பற்றிப் பேசுகிறார்கள். இப்போது கூட திருச்சியிலே பெரிய விவகாரங்கள், கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. அதுபோன்று என்னுடைய தொகுதியில் உள்ள முத்துப் பேட்டையிலே இந்து முன்னணி என்று சொல்லி, முஸ்லீம் பெண்களைத் தவறாகப் பேசி, அதனால், இப்போது, இந்து முஸ்லீம் கலகம் உருவாகி, அதிகாரிகளும், கலெக்டரும் தலையிட்டு அதை தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. இப்படி இந்து மதம் என்ற பெயரால், இந்து முன்னணி என்று உருவாக்குவதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இடம் தரக்கூடாது. அதனால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் உருவாகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி கோவிலில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இன்றைக்கு பல்வேறு வகையாக பிரிக்கப்பட்டு இருப்பதாக இந்த கொள்கை விளக்க நூலில் இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, சில கோயில்களுக்கு வருமானம் இருக்கிறது. திருச்செந்தூர் கோயில், பழனி கோயில் இதற்கெல்லாம் நிறைய வருமானம் வருகிற்து. ஆனால் திருவாரூர், கோவினூர் திருத்துறைப்பூண்டி கோயில் போன்ற கோயில்களுக்கு வருமானம் குறைவாக் வருகிறது. ஆகவே குறைவாக வருமானம் வரக்கூடிய கோயில்களில் இருக்கக்கூடிய அர்ச்சகர்கள் அல்லது





நிர்வாக அதிகாரிகளுக்கு குறைந்த சம்பளம், படி கொடுக்கப்படுகிறது. இந்த பாரபட்சம் இல்லாமல், தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தனை கோவில்களிலும் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் ஒரே சம்பளம், ஒரே பஞ்சப்படி கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. இந்து ஆலயங்களில் இப்போது சமய சொற்பொழிவு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சமய சொற்பொழிவு நடத்தக்கூடிய அந்த நிகழ்ச்சியில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமான அளவில் பயிற்சி பெறாமல் இருக்கலாம். அவர்கள் மனு போடுகிறார்கள் இந்தச் சொற்பொழிவை வழங்குவதற்காக. ஆனால் அவர்கள் மனுபோட்டாலும் அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்களிடத்திலே இருந்து குறைபாடுகள் வருகின்றன. எனவே அந்தக் குறைபாடுகள் வராமல் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், அறங்காவலர்கள் போடுகிறார்கள். அல்லது அரசு கோயில்களுக்கு அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த எற்பாட்டில் ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதம் தரப்படுவதில்லை. எனவே ஆதி திராவிடர்கள் அந்த அரசு ஊழியர்கள் அல்லது அர்ச்சகர்கள் மற்ற நிர்வாகத்திலேயிருந்து வரக்கூடிய மக்கள் மத்தியிலே பெரிய மனக்கசப்பு இருக்கின்றது. அப்பேர்ப்பட்ட மனக்கசப்பை போக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் அமைச்சர் அவர்களை இறுதியாகக் கேட்டுக்கொள்வது, இந்தக் குத்தகை விவசாயிகளுக்கு விதி விலக்கு என்ற அந்தச் சொற்களை அறவே அமைச்சர் அவர்கள் சொல்லாமல், அந்த நிலத்தை நம்பி வாழக்கூடிய லட்சக்கணக்கான விவசாயிகளை பாதுகாக்கவேண்டும். போராடிப் பெற்ற அந்தச் சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும். போராட்டிப் பெற்ற சட்டத்தை நிலைநிறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் அதை பாதுகாப்பதற்கு இந்தச் சட்டமன்றத்திலே, இந்த மானியக் கோரிக்கையிலேயே வாக்குறுதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தை பினாமியாக மறைத்து வைத்து, பினாமியாக மோசடி செய்து வைத்து, பினாமியாக 99 வருஷம் லீசுக்கு எடுத்து, இன்றைக்கு அதிகத் தொகைக்கு விற்று கொள்ளை அடிக்கக்கூடிய அந்த நபர்களை கண்டுபிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு நாங்கள் எங்களுடைய ஆதரவை அளிப்போம். மண்ணை நம்பி வாழ்கின்ற லட்சக்கணக்கான அந்த குத்தகை விவசாயிகளை நீங்கள் பாதுகாப்பதற்கு மேலும் அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும்என்று சொல்லி, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற வணிக வரி மற்றும் அறநிலையத்துறை பற்றி மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் என் தொகுதி மக்கள் சார்பிலே நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே சிறந்த சிற்பக் கலைக்கு பெயர் பெற்ற தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தில் கடந்த 23 ஆண்டுக்காலமாக ஓட்டப்படாத, ஓடாத திருத்தேரை தன்னுடைய திருக்கையால்தொட்டு, வடம் பிடித்து, இழுத்து அந்தப் பகுதி மக்களுடைய ஆசையை நிறைவேற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–40)

அதேபோல 17 ஆம் நூற்றாண்டில் கெட்டிமுதலி என்ற சிற்றரசரால் கட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திரு ஆலயத்தினுடைய முன் மண்டபம், அந்தச் சிற்றரசரால் கட்டி முடிக்கப்படாத நிலையில், அங்கே மண்ணிலே புதைந்துகிடந்தது. அந்தச் சிற்பக் கல் தூண்களையெல்லாம் தோண்டி எடுத்து, முன் மண்டபம் கட்டுவதற்கு நிதி உதவி அளித்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிற, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு என்னுடைய தொகுதியிலே இன்னொரு விட்ட குறையாக, மேச்சேரி என்ற இடத்திலே உள்ள அருள்மிகு பத்ரகாளி அம்மன் கோவிலிலே கட்டப்பட்ட கோபுர திருப்பணி பாதியிலேயே நிறுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தம்முடைய திருக்கரத்தாலே தொட்டு, அந்த திருப்பணியையும் முடித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு திருப்பணிகள் யாவும் நாள்தோறும் நடந்து வருகிற, அந்தப் பாங்கினை நாட்டு மக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 3 நாட்களுக்கு ஒரு ஆலைய குடமுழுக்கு என்ற அளவிலே கடந்த ஆண்டு மட்டும் 108 கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன என்ற அந்தச் செய்தியை பார்க்கிறபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த ஆலய திருப்பணிகள் எந்த அளவுக்கு சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற்று வருகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சிகளே சான்றாக



அமைகின்றன. ஆகவே, இந்தத் துறையை சமயப் பெரியவர்கள், ஆன்மிகத் தலைவர்கள், மக்கள் யாவருமே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்து சமயமே உயிர்த்தெழுந்து துடிப்புடன் செயல்படுகிறது என்பதற்கு இந்த திருப்பணிகள் எல்லாம் இன்றைக்கு உதாரணமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன.

அதேபோல 1978–79 ஆம் ஆண்டு அறநிலைய மொத்த நிதி இருப்பு சுமார் 4 கோடி ரூபாய் என்ற அளவிலே இருந்த நிலை மாறி இன்றைக்கு 28 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நிதி இருப்பு உயர்ந்திருக்கிறது என்ற அந்தச் சான்றே, தமிழகத்தில் கோயில்கள் எந்த அளவுக்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன என்பதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத் திறத்திற்கும் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை செய்வதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும், இன்றைக்கு இருக்கிற இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம், அதற்கு இடையூறாகவும், முட்டுக் கட்டையாகவும் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே சில உதாரணம் மூலம் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் சமூகக் கோவில்கள் என்று சொல்லப்படுகிற டினாமினேஷன் டெம்பிள்ஸ்களுக்கும் பொருந்தும் என்று சொன்னாலும், அந்தச்சமூக கோவில்களுக்காக இந்தச் சட்டவிதிகளில் தரப்பட்டிருக்கும் விவரங்கள் தெளிவாக இல்லை. எனவே, இந்தச் சட்டத்தை அங்கே அமல் படுத்துகிற நேரத்தில், பல்வேறு வழிகளை உருவாக்கிக்கொண்டு, நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள். எனவே இந்த சட்டத்தினுடைய ஷரத்துக்கள், அந்தக் கோவில்களுக்கும் செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஞாபகப் படுத்த விரும்புவதெல்லாம், இப்படிப்பட்ட சட்டத்தினுடைய ஷரத்துக்கள், அந்த சமூக கோவில்களுக்கு பொருந்தவேண்டும் என்ற அந்த அடிப்படையில், அந்த ஷரத்துக்கள் எந்த கோவில்களுக்கும் பொருந்துகின்ற அளவிலே சட்டத்திலே மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்திலே உள்ள 51-வது விதியின் படி, அந்தக் குறிப்பிட்ட சமூகத்திலே இருப்பவர்களுக்கு நிர்வாக உரிமை அளிக்க வேண்டும் என்ற அந்த ஒரு உரிமையைத் தவிர மற்ற எல்லா ஷரத்துக்களும், மற்ற கோவில்களுக்கு எப்படி பொருந்துகிறதோ, அதேபோல இந்த கோவில்களுக்கும் பொருந்தும் அளவில் சட்டத்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நாம் கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கிறோம். அறங்காவலர்களை நியமித்து அவர்களை பொறுப்பேற்றுக் கொள்ளச் செய்கிறோம். இருக்கிற சட்டத்தின்படி, அதிலுள்ள 101-வது பிரிவின் படி, அந்தப் பொறுப்புகளை ஏற்று கொள்வதற்கு அவர்கள் சட்ட ரீதியாகத்தான் அணுக வேண்டும். நியமிக்கப்பட் அறங்காவலர்கள் 101-வது பிரிவின் படி, துணை ஆணையாளரிடம் சான்றிதழ்கள் பெற்று, முதல் வகுப்பு மெஜிஸ்ட்ரேட் அவர்களிடம், அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதற்கான மனுவைச் செய்ய வேண்டும். இதனால் கோர்ட்டுக்கு செல்ல வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது.

இன்றைக்கு இருக்கிற சட்டத்திலேயே சொல்லப்பட்டிருப்பது, அஸ்ஸியூம் செய்த தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பொறுப்பிலே இருக்கலாம் என்றிருக்கிறது. ஆனால் அஸ்ஸியூம் செய்வதே 101-வது சட்டவிதியின்படிதான் செய்ய வேண்டும். வேறு எந்த வகையில் அஸ்ஸியூம் செய்தாலும் சட்டப்படி செல்லாது. எனவே, வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட அறங்காவலர்களுக்கு அந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த சட்டத்தினுடைய 101-வது ஷரத்தை, விரைவு படுத்தி திருத்தி அமைக்கின்ற வகையில் மாற்றியாக வேண்டும். அவசர நிலை பிரகடனம் செய்த நேரத்தில், செக்ஷன் 24 ஆப் 76 ஆம் ஆண்டு ஆக்டின் ஒரு முறையை கொண்டு வந்தார்கள். உடனடியாகப் பொறுப்பிலே உள்ளவர்கள் அந்தப் பொறுப்பிற்கு வருகிறவர்களுக்குக் கொடுக்கவேண்டும், அதுவும் காவல் துறை உதவியோடு கொடுக்கவேண்டுமென்ற அந்தச் சட்டம் அப்போது கொண்டுவரப்பட்டது. ஆனால் அவசரகாலச் சட்டம் இப்போது இல்லையென்றாலும் அதுபோன்ற சட்டத்தை அல்லது சட்டப்பிரிவை 101 பிரிவுக்கு உட்படுத்தப்பட்ட அந்த 101-ஐ துரிதப்படுத்துகிற அளவிலே நியமிக்கப்படுகிற அறங்காவலர்கள் அந்தப் பொறுப்பை சீக்கிரமாக எடுத்துக்கொண்டு கோயில்களை நிர்வகிக்கிற வகையிலே முறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இருக்கிற சட்டத்திலே கூட 78, 79 ஆகிய பிரிவுகள் கோயில் இடங்களை ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களை துணை ஆணையாளர் காவல்துறை மூலமாக உடனடியாக அகற்றலாம் என்ற முறையில் இருக்கிறது. எனவே நியமிக்கப்படுகின்ற அறங்காவலர்களும் அந்தப் பொறுப்பை எடுப்பதற்கு அந்தச் சட்டத்திலே விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இன்னொரு கருத்தைக் கொண்டுவருகிறேன். இன்றைக்குக் கோயில்களுடைய பெரும்பாலான நிலங்கள் தனியார்கள் தன்னுடைய பெயருக்கு பட்டா செய்துகொண்டிருக்கிற ஒரு நிலைமை



இருக்கிறது. 1971 ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு ரயத்துவாரி பட்டா கொடுக்கப்பட்ட நேரத்திலே செட்டில்மெண்ட் நோட்டீஸ் கொடுத்த நேரத்திலே அந்தக் கோயில் நிலங்களை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் தாங்கள் சர்வீஸ் செய்து கொண்டிருக்கிறோம் அல்லது அந்தக் கோயில்களுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி சர்வீஸ் மானியத்தை தங்களுடைய பெயருக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். காலப்போக்கிலே கோயில் நிலம் என்பதை மறைத்து சொந்த நிலமாகக் கருதி பல்வேறு வகையிலே விற்றுப் பராதீனம் செய்து கொண்டிருக்கிறார்கள், அந்தச் சொத்துக்களைக் கண்டுபிடித்து மீண்டும் அந்தக் கோயில்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்ற கருத்தை அமைச்சர் பெருமானுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் கடவுளுடைய பெயரை தாங்கள் வைத்துக் கொண்டு அல்லது தங்களுடைய பிள்ளைக்கு வைத்துக்கொண்டதற்காக சாமி பெயரில் உள்ள அந்தப் பட்டாவை சாமியினுடைய பெயரை மறைத்து சாமியின் பெயரை தான் வைத்துக் கொண்டதற்காக அந்த பட்டா தன்னுடைய பெயருக்கு இருக்கிறது, தனக்கு சொந்தமான நிலம் என்று உரிமை கொண்டாடி பல்வேறு வழக்குகள் கோர்ட்டிலே இருக்கின்ற நிலையில் நிர்வாகத்திற்கு எதிராக தனிப்பட்டவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கிற நிலைமை இருக்கிறது. எனவே சாமியின் பெயரில் பட்டா இருந்ததை சாமியின் பெயரை தான் வைத்ததற்காக அதன்மீது உரிமை கொண்டாடுகிற அப்படிப்பட்ட நிலைமையை மாற்றியமைக்கிற வகையிலே அந்தக் கோயில் நிலங்களைக் கண்டுபிடித்து அந்தக் கோயில்களின் நிர்வாகத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கணிப்பு சரியாக இருக்குமானால் கிராமத்திற்கு சாதாரண கோயிலாக இருந்தாலும்கூட 50 முதல் 60 ஏக்கர் நிலம் சொந்தமாகயிருக்கிறது.

அந்த நிலங்களிலிருந்து வருகிற வருமானம் அந்தக் கோயில்களைப் பராமரிப்பதற்கும் அந்தக் கோயில்களில் திருவிழாக்களை நடத்துவதற்கும் பூசைகள் செய்வதற்கும் போக மீதம் உள்ள தொகையை கூட இன்றைக்கு மக்களுக்கு வரி விதிக்காமல் மக்களுக்குப் பாரம் இல்லாமல் ஆலய நிதியின் மூலமாக அந்தக் கிராமத்தினுடைய வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்காக அந்த நிதி போதுமானதாக இருக்கும். அப்படிப்பட்ட நிலங்களைக் கண்டுபிடித்து அந்தக் கோயில் சொத்துக்களை வெளிக்கொணர்ந்து வருமானத்தைப் பெருக்குகிற வகையிலே அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தினை அமல் படுத்தியிருக்கிறார்கள். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்ற நிலையில் குழந்தைகளுக்குச் செய்கிற சத்துணவுத் திட்டம் ஒரு கடவுளின் சேவை என்று கருதப்படுகிறது. அன்னை தெரசா அவர்கள் கூட இந்தத் திட்டத்தைப் பாராட்டி குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பது

கடவுளுக்குச் செய்கிற சேவை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஆலய வருமானத்தைப் பெருக்கி திருக்கோயில்களின் வருமானத்தைப் பெருக்குவதன் மூலமாக இந்தச் சத்துணவு திட்டத்தை அமல்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்க வேண்டுமென்ற முறையிலே ஆலோசனையை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திரு. சிவஞானம் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கோயில் நிலங்கள் அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு யார் நிலத்தில் பயிர் செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கே விற்றுவிட்டு விற்ற தொகையை அரசாங்கம் தவணை முறையில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக அந்தக் கோயில் நிர்வாகத்திற்கு அந்தத் தொகைக்கு ஈடாக அரசு கடன் பத்திரங்களை வழங்க லாம். அப்படி செய்கிற நேரத்தில் நிலம் உழுபவனுக்கு சொந்த மாகி விடும். தவணை முறையில் வசூல் செய்கின்ற அந்தப் பணம் கோவிலுக்கு நிரந்தரமான வருமானமாக பிக்ஸ்டு டெபா ஸிட்டில் போடப்பட்டால் அந்த வருமானத்தைக் கொண்டு கோவில் நிர்வாகத்தை கவனிக்க முடியும். மீதம் உள்ள தொகையை நான் முன்பு சொன்ன மாதிரி அரசு வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்பதை மாண்புமிகு அமைச் சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து ஒரே ஒரு கோரிக் கையை மட்டும் வைக்கிறேன். இப்போது சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி, பெரியார் போன்ற அனைத்து மாவட்டங்களுக் கும் ஒரே ஒரு துணை ஆணையாளர் அலுவலகம் கோவையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அது பரந்த நிலப்பரப் பாக இருக்கிறது. எனவே ஒரு ஆணையாளர் அத்தனை மாவட்டங்களின் பணிகளையும் சரியாக நிறைவேற்ற முடிய வில்லை. எனவே சேலத்திற்கும் தர்மபுரிக்கும் என்று ஒரு துணை ஆணையாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான்வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைப்பெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-50)

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு யாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானிய கோரிக்கையின் மீது சில கருத்துக்களை வைப்பதற்கு நான் இங்கே முன் வந்து இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக் கையில் நிர்வாக அமைப்புப் பற்றி விரிவாக சொல்லியிருக்கிறார் கள். இதிலே இந்து அறநிலையத் துறைக்கு ஆணையர் ஒரு வரின் கீழே மற்ற அதிகாரிகள் எல்லாம் செயல்படுகிற வகையில் அந்த நிர்வாக அமைப்பு இருக்கின்றது. இதிலே ஒரு யோச னையை நம்முடைய அரசுக்கு நான் வழங்க விரும்புகிறேன். இந்த அறநிலையத் துறை என்பது 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று அதனுடைய அலுவல்கள், பணிகள் அதிகமாகி இருக்கின்றன. ஆணையரின் பொறுப்புகளும் அதிக



136254

மாகி இருக்கின்றன. இந்த நிலைமையில் இந்தத் துறையை இன்னும் சீராகவும், செம்மையாகவும் செயல்படுத்துவதற்கு ஆணையருக்குத் துணையாக ஜாயிண்டு கமிஷனர் ஒருவரையோ இரண்டு பேரையோ, அரசு நியமிக்கும் யோசனையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும். ஏன் என்று சொன்னால் 20 ஆண்டு களுக்கு முன்பு இருந்ததை விட இன்றைக்கு அவர்களின் வேலை பளுவும், பொறுப்புகளும் அதிகமாகி இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து இந்த யோசனையை அரசு பரிசீலனைச் செய்ய வேண்டும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த ஆணையர் நியமன விஷயத்தில், மத்திய அரசு நியமித்த சர் சி. பி. இராமசாமி ஐயர் கமிஷன் என்ன ஆலோசனை வழங்கியிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்கு. கொண்டு வர விரும்புகிறேன். ஆணையரை அரசாங்கம் நியமிக்கிறது. இதிலே அரசியல் குறுக்கீடுகள் வந்து விடுகின்றன. சமய நிறுவனங்கள் என்பது அரசியலுக்கு அப்பாற் பட்டு இயங்க வேண்டும். ஆணையர் என்பவர் அரசால் நிய மிக்கப்படுபவர். பல்வேறு சங்கடங்களுக்கு அவர் ஆளாக்கப் படுகிறார் என்பதை அனுபவ ரீதியாக நாம் பார்க்கிறோம். ஆகவே சர் சி. பி. இராமசாமி ஐயர் கமிஷன் இன்றைக்கு— ஒரு பரிகாரம் சொல்லியிருக்கிறது.

"The appointment of Commissioners in the State should be made by the Governor of the State in his individual capacity after such consultations as he deems necessary, with the religious and secular interests concerned." என்று அவர் சொல்லியிருக்கிறார். இதிலே இந்த அறநிலையம் மட்டும் அல்ல. வக்ஃபோர்டு போன்றவற்றிற் கும் நியமிக்கிறீர்கள். ஆளுநர் அவர்கள் இந்து மதத்தில் இருக்கக் கூடிய முக்கியமான மடாதிபதிகள் மற்றவர்களையும் கலந்து ஆலோசித்தும், அதேபோல் வக்ஃப் போர்டுக்கு அதிகாரிகளை நியமிக்கும்போது, இஸ்லாமிய மதத்தில் இருக்கக்கூடிய முக்கிய மானவர்களை கலந்து ஆலோசித்தும் ஆளுநர் அவர்கள் நியமிக்கலாம் என்று இருக்கிறது. இன்றைக்கு பல்வேறு பல் கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் போது அரசு கொடுக்கிற பேனலில் இருந்து யாராவது ஒருவரை ஆளுநர் அவர்கள் நியமிக்கிற முறை இருக்கிறது. ஆகவே அவர்கள் முழு ஆதிக்க உரிமையோடு செயல்படுகிறார்கள், செயல் பட வேண்டும் என்பதை அர்த்தமாக நாம் வைத்து இருக்கி றோம். அதைப்போல இந்து அறநிலையத் துறை ஆணையர் அவர்களும் முழு ஆதிக்க உரிமையோடு செயல்படுவதற்கு வழியாக சர் சி. பி. இராமசாமி ஐயர் கமிஷன் சொல்லியிருக்கக் கூடிய இந்த யோசனையை பரிசீலனைச் செய்ய வேண்டும் என்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர் கள் பேசும்போது ஏ. சி. கார் பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார் கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். ஸ்ரீரங்கம்

கோயிலில் மட்டும் அல்ல வேறு சில கோயில்களிலும் இதை போல ஏ. சி. கார் வாங்கப்பட்டு இருக்கின்றது. என்னுடைய கேள்வி எல்லாம் ஏ. சி. கார் அவசியம் தானா ? அதை யார் உபயோகப்படுத்துகிறார்கள், அவர்களிடம் இருந்து அதற்குரிய வாட்கை பெற்றுக் கொள்கிறோம் என்று அரசு தரப்பில் பதில் சொல்லலாம். அது சரியான பதில் அல்ல. இந்து அற நிலையத் துறைக்கு ஏ. சி. கார் தேவையா ? அரசாங்கமே ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களும், ஆளுநர் அவர்களும் தவிர வேறு அமைச்சர்கள் உள்பட வேறு யாரும் ஏ.சி கார் உபயோகப்படுத்தக் கூடாது. இது அரசு போட்டு இரு... ஜி.ஓ. இதன் அடிப்படை என்ன சிக்கனம் தான். சிக்கன நடவடிக்கை இருக்க வேண்டும் என்பதற்காக அரசு ஒரு உத்திரவு போடும் போது அதை ஆலயங்களில் செயல்படுத்தப்படாமல் ஏ. சி. கார் வாங்கி வைத்துக்கொண்டு அதை மாண்புமிகு அமைச்சர்களும், அதிகாரிகளும் உபயோகப்படுத்துகிற நிலை இருக்கும் ஆனால் அரசு போட்டு இருக்கிற உத்தரவின் அடிப்படை நோக்கமே சிதைந்து போகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை உங்களால் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது. அது நியாயமும் அல்ல. ஆலயங்களுக்கு எது எது இருக்க வேண்டுமோ அது அதுதான் இருக்க வேண்டுமே தவிர, ஆலயங்களுக்கு ஏ.சி. கார் எதற்கு ? சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு என்று சொல்லலாம் அப்படியென்றால் சுற்றுலா வாரியத்தின் சார்பாக அதை வாங்கி விடுங்கள் ; அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. சுற்றுலா வாரியத்தின் மூலம் வாடகைக்கு விடுங்கள். ஆலயத்தின் சார்பில் வாங்கி அதை அமைச்சர்களும், மற்றவர்களும் பயன்படுத்துவது என்பது வருந்தத் தக்கது, கண்டிக்கத் தக்கது என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே, விலை மதிப்புள்ள திருவுருவச் சிலைகளைப் பாதுகாப்பதற்காக அரசு எடுத்து இருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞான முறைப்படி அவற்றைப் பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இப்படிப்பட்ட ,நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவ்சியமே எதனாலே வந்தது ? கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சிலைகள் திருட்டுப் போகின்றன ; வெளிநாடுகளில் அவைகளுக்குப் கிராக்கி இருப்பதால் சமூக விரோத சக்திகள் அதைத் திருடி வெளிநாடுகளுக்கு அதிக விலைக்கு விற்கிறார்கள். இதன் காரணமாக ஆலயங்களில் திருட்டு அதிகமாக ஆகிறது. இதைத் தடுப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது. அது பாராட்டுதற்குரியது.





இருப்பதைப் போலவே கோயில்
விக்கிரகங்கள்
களில் உள்ள நகைகளும், வாகனங்களும் முக்கியமானவையாகும்.
விக்கிரகங்களுக்கு என்ன மதிப்பு உள்ளதோ அதே மதிப்பு
கோயில்களில் உள்ள நகைகளுக்கும், வாகனங்களுக்கும் உண்டு.
விக்கிரகங்களுக்கு வழிபாடு நடத்துகின்றபொழுதுஅதைஅமர்த்தி
வைக்கின்ற வாகனங்களுக்கும், போட்டிருக்கின்ற நகைகளுக்கும்
சேர்த்துத்தான் வழிபாட்டு நிகழ்ச்சிகளும் நடக்கும். எனவே,
நகைகளும் வாகனங்களும் கோயில் விக்கிரகங்களின் 'Part
and parcel' இணை பிரிக்கப்படாதவை. இவைகளுக்குச் செய்
திருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் கோயில் நகைகளுக்கும்,
வாகனங்களுக்கும் செய்யப்பட வேண்டும். எனவே, இதைப்
பற்றி விரிவாகச் சில யோசனைகளை அரசாங்கத்திற்கு நான்
வழங்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகம் பூராவும் எல்லா ஆலயங்களிலும்
மன்னர்கள் காலத்திலிருந்து இன்று வரையில் பக்தர்களால்
அளிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத நகைகள் ஏராளமாக இருக்
கின்றன. இந்த நகைகள் இன்றைக்குப் பத்திரமாக இருக்
கிறதா இல்லையா என்ற சந்தேகம் அண்மையில் நடந்த பல்வேறு
நிகழ்ச்சிகளின் காரணமாக ஏற்பட்டு இருக்கிறது. திருச்செந்
தூர், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களில் ஆலய அதிகாரிகள் மர்ம
மான முறையில் இறந்து போனதால் இந்தச் சந்தேகம் ஏற்
பட்டிருக்கிறது அந்தச் சந்தேகத்தைப் போக்க வேண்டிய
கடமை அரசாங்கத்திற்கு உண்டு. அந்த வகையிலே ஆலயங்
களிலே உள்ள சகல நகைகளையும் மதிப்பீடு செய்து ரிக்கார்டு
செய்வதற்காக நகை மதிப்பீட்டுக் குழு ஒன்றை அரசாங்கம்
நியமிக்க வேண்டும். அதைப் போலவே, இன்றைக்குக் கோயில்
களுக்குப் புதிதாக யாரேனும் நகைகள் கொடுப்பார்களேயானால்
அந்த நகைகளையும் இந்த மதிப்பீட்டுக் குழு பரிசீலனை செய்து
உடனடியாக ரிக்கார்டு செய்ய வேண்டும். இது போன்ற நட
வடிக்கைகளின் மூலம் நாம் இவைகளைப் பாதுகாக்க முடியும்.

அதே நேரத்தில் கோயில் நகைகள், வாகனங்கள், விக்கிரகங்
கள் ஆகியவற்றை இன்றைக்கு எக்ஸ்பிஷன்களுக்கெல்
லாம் கொண்டு போகும் நிலைமையிருக்கிறது. இது தவறு.
கோயில் நகைகளும், வாகனங்களும் கண்காட்சிக்கு வைக்கப்படு
கின்ற பொருட்கள் அல்ல.

பிரிட்டிஷார் இந்த தேசத்தை ஆண்ட காலத்தில், விக்டோரியா
மகாராணியாரின் பட்டத்து இளவரசர்—வேல்ஸ் இளவரசர்
மதுரைக்கு வந்து, மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றார்.
அங்குள்ள விலை மதிக்க முடியாத பதக்கத்தைப் பார்த்தார்.
அதை விக்டோரியா மகாராணியாருக்குக் காட்டுவதற்கு
விரும்பி, அதை எடுத்துச் சென்று திரும்பவும் பத்திரமாக அனுப்பி
வைக்கிறேன் என்று சொன்னார். அவ்வாறு சொல்லியும் கூட
அந்தக் கோயில் அதிகாரிகள் அதை எடுத்துச் செல்வதற்கு அனு
மதி அளிக்க மறுத்து விட்டார்கள். அன்றைக்குப் பிரிட்டிஷார்
இராஜ்யம் நடக்கிறது ; விக்டோரியா மகாராணியார் தான்
ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அவர் பார்க்கக் கூட
அதை எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிக்கவில்லை.

ஆனால், இன்றைக்குப் பல்வேறு கண்காட்சிகளில் கோயில் நகைகளை வைப்பதற்காக எடுத்துச் செல்வது என்பது தவ றான அணுகு முறை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கோயில் நகைகள், வாகனங்கள், விக்கிரகங்கள் சம்பந்தமாக இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யக் கூடாது என்பதற்குத் தெளிவான விதிமுறைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

Dos and Don'ts

இந்த நகைகளை இன்னது தான் செய்ய வேண்டும், இன்னது செய்யக் கூடாது என்பதற்குத் திட்டவட்டமான விதிமுறை களை அரசாங்கம் வகுத்தாக வேண்டும். அந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டு, கோயில் விக்கிரகங்கள், நகைகள், வாகனங்கள் ஆகியவை சம்பந்தமாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டும். அந்த. Dos and Don'ts ஐ மீறி எந்த அதிகாரியாவது ஏதாவது செய் தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00.)

அதே போல் இன்றைக்கு பல்வேறு கோயில்களில் நம்முடைய அமைச்சர் அவர்களின் முயற்சியால் தங்க ரதங்கள் செய்யப்படு கின்றன. அதை நான் வரவேற்கிறேன். தங்க ரதங்கள் செய்யப் பட வேண்டியது தான். ஆனால் இந்தத் தங்க ரதங்களைச் செய்வதற்கு கோயில்களிலே இருக்கக் கூடிய பழைய தங்க நகை கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. இது தவறான ஒன்றாகும். கோயில்களிலே உள்ள நகைகள் எல்லாம் முன் காலத்தில்—மன்னர் கள் காலத்தில்............

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடு மாறன் அவர்களுக்கு ஒரு விளக்கம் அளித்து விட்டால் அவர்கள் தவறான அடிப்படையில் மேலும் தன்னுடைய விவாதத்தைத் தொடராமல் இருக்க உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். முன்னாலே நடைபெற்றது பற்றி இந்த அரசுக்குத் தெரியாது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தங்க ரதங்கள் செய்யப்படுவது என்பதைப் பொறுத்த வரையில் தங்கமாக இருந்தால் அதை வைத்துச் செய்யலாம் அல்லது தங்க ரதத் திற்கு என்று நிதி வசூலித்து அதன் மூலமாகத் தங்கம் வாங்கிச் செய்யலாம் ; ஆனால் கோயிலிலே இருக்கின்ற நகைகளை மாற்றி தங்க ரதமாகச் செய்யக் கூடாது என்று திட்டவட்டமாக இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. அதன்படிதான் செய்யப்பட்டும் வருகின்றது. ஆகவே கோயில் நகைகளை மாற்றி தங்க ரதம் செய்யப்படுகின்றது என்ற தவறான அடிப்படையின் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாதத்தை எழுப்ப வேண்டாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, கோயிலிலே தங்கக் கட்டிகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தக் கட்டி கள் எப்படி வந்தன ? யார் காலத்தில் அவை உருக்கப்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டும். அதை விடுத்து டெக்னிக்கல்லாகப் பதில் சொல்வதில் பயன் இல்லை. இந்தப் பிரச்சினையிலே உங்களுக்கு என்ன அக்கறை இருக்கிறதோ அதே போல் எங்களுக்கும் அக்கறை இருக்கின்றது; மக்களுக்கும் அக்கறை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மிகுந்த அக்கறை இருக் கின்றது என்பது நன்றாக விளங்குகின்றது. தங்கக் கட்டிகள் எப்போது உருக்கப்பட்டன என்று கேட்கிறார்கள். அது காங் கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலே கூட உருக்கப்பட்டிருக்கும். திரு. நெடுமாறன் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத் திலே காங்கிரஸ் கட்சியிலே இருந்தாரே. அப்போது கூட உருக்கப் பட்டிருக்காலம். எனவே அதற்கெல்லாம் இப்போது அரசு பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, தங்கக் கட்டி கள் எப்போது உருக்கப்பட்டன என்று கேட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் பதில் சொல்கிறார். அதே நேரத்தில்............

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, நான் தனிப்பட்ட முறையில் பதில் சொல்ல வரவில்லை. அவர்கள் பேசுகின்ற போது ஒரு கருத்தை அடிப்படையாக வைத்து விவாதத்தைத் தொடங்கினார்கள். அந்தக் கருத்துக் கள் தவறு என்பதைச் சுட்டிக் காட்டி அதற்கான விளக்கத்தை அரசின் சார்பிலே சொல்கிறேன். அமைச்சருக்கு இருக்கின்ற அந்தப் பொறுப்பும் ஆர்வமும் எங்களுக்கும் இருக்கின்றது என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதனால்தான் இந்த விவாதமே அவர்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது, அக்கறை வளர்கின்றது. இருக்கின்றது என்றெல்லாம் வந்த காரணத்தால் அதிகமாக இந்த விவாதமே வந்து கொண்டிருக்கின்றது. நானும் தான் அதைத்தான் எடுத்துக் காட்டினேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலே கூட உருக்கப் பட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும் கூட அவை எல்லாம் கோயில்களிலே பத்திரமாகத்தான் இருந்தன என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கே ஆரம்பிப்பார் கள் என்று தெரிந்துதான் பல தகவல்களோடு நான் வந்திருக் கிறேன். நான் பதில் சொல்லப்போவது திராவிட முன்னேற்றக்

கழகத்திற்கு அல்ல. மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் வெளியிலே என்னென்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள்; இங்கே என்ன பேசுவார்கள் என்பதை எல்லாம் தெரிந்துதான் நானும் வந்திருக்கிறேன். கும்பகோணத்தில் உள்ள ஒரு ஆலயத்திலிருந்து தகவல் பெறப்பட்டிருக்கின்றது. அது எப்போது என்றால் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைக் கலைத்த உடனே தமிழ் நாட்டு ஆலயங்களிலே உள்ள அறங்காவலர் குழுவை எல்லாம் ஓரே உத்தரவிலே கலைத்து விட்டு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு விசாரிக்கச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி விசாரித்து பல குற்றச்சாட்டுக்களைத் தமிழ்நாட்டு ஆலயங்களில் உள்ள நிர்வாகங்களின் மீது கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து ஒரு குற்றச்சாட்டு; கும்பகோணத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் உள்ள வெள்ளி வாகனத்தையே சுரண்டி எடுத்திருக்கிறார்கள். அது மூன்று இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ளதாகும். அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்ததாகக் கூட இல்லை. அதற்கு முன்னாலேயே நடந்திருக்கின்றது. அதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சிதான் இருந்ததாக நினைவு.

**திரு. ப. நெடுமாறன்:** யார் ஆட்சிக் காலத்திலே என்ன தவறுகள் நடந்திருந்தாலும் இன்றைக்கு நீங்கள் அதிகாரத்திலே இருக்கிறீர்கள். எடுக்க வேண்டியவர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிகாரத்திலே வந்து தான் தோண்டிக் கொண்டிருக்கிறோம். எலும்புக் கூடுகள் மேலே வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே தான் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் இவ்வளவு அதிகாரத்தோடு, நல்ல உரிமையோடு இன்றைக்கு இங்கே எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே தான் அறநிலையத் துறை தோண்டப்படுகிறது, அங்கே புடம் போட்டு பத்தரை மாற்றுத் தங்கமாக மாற்றப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) —

**திரு. ப. நெடுமாறன்:** எடுக்க வேண்டியவர்கள் மீது நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதிலே இந்த அவையிலே உள்ள எந்தத் தரப்பினருக்கும் ஆட்சேபனை கிடையாது. நீங்கள் எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய குறையே தவிர வேறல்ல என்பதை நான் திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றத்தின் மீது, எதைக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டிய குற்றத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்தால் அது அரசுக்கும் உதவியாக இருக்கும், இந்த மன்றத்திற்கும் உதவியாக இருக்கும், நாட்டு மக்களும் புரிந்து கொள்ள முடியும்.



**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலே அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேச வேண்டியதைப் பேசினார். எனக்காகவே பதிலோடு வந்திருக்கிறேன் என்று சொன்னார். நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை முன் கூட்டியே அறியக் கூடிய ஆற்றல் அவருக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இல்லை, இல்லை, மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் சமீப காலத்திலே வெளியிலே எந்த அடிப்படையிலே பிரச்சாரம் செய்கிறார்கள், எந்த உணர்விலே கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள், அதுவும் குறிப்பாக அவர்கள் வைத்திருக்கிற குறி, அறநிலையத் துறை என்பதும் எனக்குத் தெரியும். அதனாலே அவர்கள் வெளியிலே தெரிவிக்கிற கருத்துக்கள் எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன பத்திரிகைகளிலே. அதற்குத்தான் பாதுகாப்பு ஆயுதங்களோடு பக்காவாக இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ப. நெடுமாறன்:** அமைச்சர் அவர்கள் ஆயுதங்களோடு வந்திருப்பதற்கு ரொம்ப நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொன்னதை நீங்கள் 5 நிமிஷத்திற்குள்ளே மாற்றுகிறீர்கள், ஆயுதங்களோடு யாரும் உள்ளே வரமுடியாது. (குறுக்கீடுகள்) அவர் சொன்ன அர்த்தம் வேறு. பாதுகாப்பு ஆயுதம் என்றால் விவாதத்திற்குரிய ஆயுதம்—கருத்துக்கள்—என்று பொருள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆயுதம் என்றால் அன்பு சகோதரர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. ஆயுதம் என்றால் ஆதாரங்கள்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவையற்ற நகைகளை அழிக்கக் கூடாது. அதே போல் மன்னர்களாலும், மக்களாலும் அளிக்கப்படுகிற இந்த நகைகளுக்கு ஆன்ட்டிக் வால்யூ உண்டு. ஆகவே, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தனியாக தங்க ரதங்கள் செய்வதற்காக வசூல் செய்து தங்க ரதங்கள் செய்ய வேண்டுமே தவிர, கோவிலுக்குள்ளே இருக்கக்கூடிய நகைகளையோ, தங்கக் கட்டிகளையோ எடுத்து தங்க ரதம் செய்வதற்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும், அமைச்சர் அவர்கள் வைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதே போல் இங்கே அறநிலையத் துறையின் சார்பிலே நடத்தப்படுகிற பள்ளிகள், கல்லூரிகள் பற்றியெல்லாம் அமைச்சர் விரிவாகப் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டு ஆலயங்களிலே நல்ல வருவாயுள்ள ஆலயங்கள் நிறைய இருக்கின்றன. இந்தப் பட்டியலிலே இருப்பது மிகக் குறைவு

பழனி போன்ற இடத்திலே பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவு
வதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும்.
அதற்கான வாய்ப்பு இருக்கிறது. வசதி இருக்கிறது அங்கே.
அதைச் செய்ய வேண்டுமென்பதை நான் வற்புறுத்த விரும்பு
கிறேன்.

அடுத்து,நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி
அவர்கள் பேசுகிற பொழுது ஆலய நிர்வாகத்திலே அரிசன
மக்களுக்கு 18 சதவீதம் அவர்களுக்கு இருக்கக்கூடிய அந்த நியாய
மான உரிமையை அளிக்க வேண்டுமென்று சொன்னார். என்னைப்
பொறுத்தவரையில் நான் ஒரு கருத்தினை வலியுறுத்த விரும்பு
கிறேன். அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இந்து
சமுதாயத்தின் பெருமைமிகு அங்கம் என்பதை அவர்கள் உணர்கிற
வகையிலே 18 சதவீதம் என்பது வேண்டியதில்லை, பொதுவாக
அதை விட இரண்டு மடங்கு, 3 மடங்கு அதிகமாகக்கூட
அறங்காவலர்கள், அதிகாரிகள், அர்ச்சகர்கள் போன்றவற்றில்
அதிகமாக அவர்களைப் பங்கு பெற வைப்பதன் மூலம் இந்து
மக்களிலே அவர்களும் ஒரு அங்கம் என்ற உணர்வு அரிசன
சமுதாயத்திற்கு வரும், அதை உணர்ந்து அரசாங்கம் அதைச்
செய்ய வேண்டும். 'ய சென்ஸ் ஆப் பார்ட்டிசிபேஷன்' அவர்
களும் பொறுப்பேற்கிற வகையிலே செய்யவேண்டுமென்பதை
நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அதே நேரத்தில் சமபந்தி போஜனம் என்று அரசாங்கத்தின்
சார்பிலே ஆலயங்களில் நடத்தப்படுகிறது. அதிலே ஒரு
திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன். அருமை நண்பர் உத்தி
ராபதி அவர்கள் சொன்ன யோசனைக்கு நன்றி. ஆழ்வார்களில்,
நாயன்மார்களில் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்
நிறைய உண்டு. அவர்களில் ஒருவர் பெயரால்—இப்போது
சிவன் கோவில்களில் சமபந்தி போஜனம் என்று சொன்னால்,
நந்தனார் பிறந்த நாளன்று எல்லா சிவன் கோவில்களிலும்
சமபந்தி போஜனம் அளியுங்கள் ; அதைப்போலவே திருப்
பாணாழ்வார் பிறந்த நாளன்று எல்லா வைஷ்ணவ ஆலயங்
களிலும் சமபந்தி போஜனம் அளியுங்கள். அரிசன சமுதாயத்
தைச் சேர்ந்த ஒரு ஆழ்வார், நாயன்மார் பெயரில் இந்த விருந்
துகள், திருவிழாக்கள் நடக்குமேயானால் இதிலே அரிசன
சமுதாயத்தினருக்கு ஒரு சென்ஸ் ஆப் பார்ட்டிசிபேஷன் இருக்கும்.
அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த
விரும்புகிறேன்.

அதைப்போல தமிழ்நாட்டிலே உள்ள எல்லா ஆலயங்களையும்
பற்றிய குறிப்புகள் அடங்கிய 'டைரக்டரி ஆப் டெம்
பிள்ஸ்' ஒன்று வேண்டும். இதுவரையில் நம்முடைய தமிழ்
நாட்டில் இருக்கிற ஆலயங்களைப் பற்றி அப்படி ஒரு டைரக்டரி



இல்லை. அரசாங்கம் அதை உடனடியாக வெளியிடுவதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். யாத்ரீகர்களுக்கு பயனுள்ள வகை
யில், அவர்கள் தங்குவதற்கு இடங்கள் மற்றவைகளைக் கூட
அதிலே குறிப்பிட வேண்டும். இதை மிகக் குறைந்த விலையில்
அரசாங்கம் விற்பதற்கு முன் வரவேண்டும்.

உங்களுக்குத் தெரியும். நம்முடைய மதுரை மாவட்டத்தைச்
சேர்ந்த எல்லைக்குள் உள்ள கண்ணகி கோவில் பிரச்னை பல
தடவைகள் இந்த அவையிலே எழுப்பப்பட்டு, அரசாங்கத்தின்
சார்பிலே இந்த உணர்வோடு தாங்களும் இணைந்து நிற்பதாக
பலதடவைகள் சொல்லப்பட்டு, இன்றைக்கு அவைகள் எல்லாம்
எந்தப் பயனும் இல்லாமல், கண்ணகி கோவிலில் இருக்கிற சரித்
திரச் சான்றுகளை கேரள அரசாங்கம் அழித்துக் கொண்டிருப்ப
தாக நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதைப் பாது
காப்பதற்கும் இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்து அறநிலையத் துறை 'அட்டானமஸ் பாடியாக'
இருக்க வேண்டும் என்பதை நான் பலதடவைகள் இந்த
மன்றத்தில் வலியுறுத்தி வந்திருக்கிறேன். அது ஒரு 'அட்டான
மஸ் பாடியாக' இயங்கினால் தான் இதுபோன்ற சர்ச்சை
களுக்கு இடம் இல்லாமல் இருக்கும். இந்து அறநிலையத் துறை
'அட்டானமஸ் பாடியாகவும்' ஆணையாளர் ஆளுநரால்
நியமிக்கப்படுபவராகவும், இதிலே ஏற்படுகிற சர்ச்சைகள்
அதற்கென்று அமைக்கப்பட்ட ட்ரிபியூனலின் மூலம் விசாரிக்கப்
படுபனவாகவும் இருக்க வேண்டும். இந்த மூன்று அம்சங்களையும்
உள்ளடக்கி இந்த அறநிலையத் துறையை முற்றிலுமாக திருத்தி
யமைப்பதற்கு சகல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க
வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டின் ஆலயங்களில் வசதி படைத்த
ஆலயங்களில் அவர்களுக்கு போதுமான பணவசதி இருக்கிற கார
ணத்தால் அங்கே வழிபாடுகள், திருவிழாக்கள் எல்லாம் ஒரள
விற்கு முறையாக நடக்கின்றன. ஆனால் பல்லாயிரக்கணக்கான
ஆலயங்களில் அந்த வசதிகள் இல்லாத காரணத்தால் கோவில்
பூஜைகள் சரிவர நடைபெறுவதில்லை ; அர்ச்சகர்களுக்கு போது
மான சம்பளம் கிடைப்பதில்லை. அதுபோன்ற ஆலயங்கள்
இன்றைக்கு நசிந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்
நிலையைப் போக்குவதற்கு 'காமன் குட் பண்ட்' (Common
Good Fu'd ) என்று நீங்கள் வைத்திருப்பதிலிருந்து
முறைப்படி விநியோகித்து, சிறு கோவில்களில் கூட நல்ல
முறையில் வழிபாடுகள் நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இன்னொரு கருத்தைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் ஆலயங்
களின் நிலங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆலயங்களின்
நிலங்கள் என்று சொன்னால் அவற்றிலிருந்து கிடைக்கிற

வருமானத்தை வைத்து தான் ஆலயங்களில் வழிபாடுகள், மற்ற வைகள் நடைபெற வேண்டியிருக்கிறது. அந்த நிலத்தில் பல் லாண்டு காலமாக பாடுபட்ட ஏழை விவசாயிகள் இன்றைக்கு என்ன நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு மாற்று வழி என்பது ஆலயங் களுக்குச் சொந்தமான நிலங்களில் எல்லாம் அரசாங்கம் யார் உண்மையான குத்தகை விவசாயிகள் என்பதைப் பார்த்து அவர் கள் பெயருக்குக் கொடுத்து விட்டு, அவர்களிடமிருந்து, ஒரு விலையை நிர்ணயித்து பகுதிப் பகுதியாக, 'இன்ஸ்டால்மெண்ட் பேசிசில்' அரசாங்கத்திற்கு அவர்கள் கட்ட வேண்டுமென்று சொல்ல வேண்டும். அரசாங்கம் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட ஆலயங்களுக்கும், மடங் களுக்கும்—மொத்தமாக அந்தப் பணத்தை அரசாங்கத்தால் கொடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்; நிதி வசதி இல்லை; அதற்குப் பதிலாக—பாண்டுகளாக அரசாங்கம் கொடுக்கலாம். அதை அவர்கள் வங்கிகளில் வைத்து அதிலி ருந்து பணம் பெற முடியும்; இதன் மூலம் இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு வழி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி நான் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் மானியக் கோரிக்கை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்து சமய அறநிலையத் துறை என்பது ஒரு தனிப்பட்ட ஒரு மதத்தின் சார்பாக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் காரணமாக அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக அது இன்றைக்கு இயங்கிக்கொண்டு இருக்கிறது. இந்திய அரசாங்கம், சுதந்திரத்திற்குப் பின்னர், நம்முடைய நாடு மத சார்பற்ற நாடு என்று அறிவித்து இருந்தாலும், ஏற்கனவே இருந்த அரசர்களால், மற்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறக் கட்டளைகள் அனைத்தும் செயல்படவேண்டும் என்பதற் காகவும், அவற்றிலே பல்வேறு தவறுகள் இருக்கின்றன என்ற காரணத்தாலும், அன்றைய தினம் பதவியில் இருந்த காங்கிரஸ் கட்சி இந்தச் சட்டத்தை ஏற்படுத்தியது. அந்த நிறுவனங்கள் அறக்கட்டளைகள் செம்மையாக நடைபெறவேண்டுமானால் அதற்கு ஒரு சட்டம் தேவை என்று கொண்டு வரப்பட்டது. அதிலே பல தவறுகள் நடைபெறாமல் இருந்தால் தான், தர்மத் திற்காக ஏற்படுத்தப்பட்ட அந்த அறநிலையங்கள், ராஜாக் களால் ஏற்படுத்தப்பட்ட அந்த அறக்கட்டளைகள் சரியாக சிறப்பாகச் செயல்படும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இன்றைக்கு அவைகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பற்றி இந்த அவையிலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைப் பொறுப் பேற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, இந்த் சில ஆண்டுகளிலே, நல்ல காரியங்களைச் செய்து வந்தாலும், மேலும் சிறப்பாக இந்தத் துறை இருக்கவேண்டும் என்ற ஆதங்கத்தின் காரணமாக இன்றைக்கு பலர் கடுமையான முறையில் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். இங்கே எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களை, வாதங்களை தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்ளாமல், பொது நோக்கத்தோடு தெரிவிக்கப்பட்டது என் கிற அடிப்படையில் அரசு எடுத்துக் கொண்டு, நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய அபிலாட்சையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இந்து சமயம், ஆன்மீக நெறியோடு இருக்க வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆன் மீகம் மனித சமுதாயத்திற்கு மிகவும் தேவையானது என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதாகும். அவைகள் தொடர்ந்து மக்களுக்கு பயன் தர வேண்டும் என்ற அடிப்படையில்தான் கோயில்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றிற்கு அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன என்பதையும் நாம் அறிவோம். அந்த நோக்கத்திற்கு எதிராக இன்றைக்கு பலர் எதிர் கோஷங்கள் எழுப்பலாம். ஆண்டவன் இல்லை என்ற கோஷம் எழுப்பலாம். மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து இந்த கோஷம் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். ஆனால் விஞ்ஞானம் எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்தாலும், இந்த ஆன்மீகநெறி கடைப்பிடிக்கப்பட்டு வந்தால்தான் ஒழுக்கம் கடைப் பிடிக்கப்பட முடியும், நல்ல, நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியும் என்கிற எண்ணத்தில் நாம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் பெரும் பகுதி மக்கள் இந்துக்கள். இந்துக்களால் ஏற்படுத்தப்பட்ட பல கோயில் கள், பல அறக்கட்டளைகள் இன்றைக்கு இருக்கின்றன. அவற்றையெல்லாம் நல்ல முறையில் நடைபெறச் செய்து மனிதன் நல்ல முறையில் ஒழுங்கான முறையில், ஒழுக்கத்தோடு கூடிய முறையில் வாழ வழி செய்வதற்கு அரசு உறு துணையாக இருக்க வேண்டும். அப்போது தான் அதனால் மக்கள் பயன்பெற முடி யும். அதற்கு வழிகாட்டுவதற்கு பல்வேறு உபதேசங்கள் இருக் கின்றன. அந்த நிலைகளை அரசாங்கம் நல்ல முறையில் பொறுப் பேற்றுக் கொண்டு நிறைவேற்றினால்தான், தர்மம், சத்தியம், ஒழுக் கம் மக்கள் மனதிலே நிலைபெறச் செய்ய முடியும். அந்தப் பொறுப்பை ஏற்று, அதை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தீவிரம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்து சமய நிர்வாகத்தில் இருக்க கூடிய சொத்துக் கள், திருக்கோவில்கள் ஓரளவுக்கு நல்லமுறையில் பராமரிக்கப் பட்டாலும் மேலும் நல்ல முறையில் ஒழுக்கமாக நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம்.

(பிற்பகல் 1-20.)

இராஜாக்கள் மட்டுமல்லாமல் தனிப்பட்டவர்கள் கூட தங்கள் நிலத்தை தானமாகக் கோவிலுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை எழுதி வைத்திருக் கிறார்கள். அந்த நிலங்கள் இன்றைக்கு பயன்படவில்லை. 31 கோடி ரூபாய் குத்தகைப் பாக்கி வரவேண்டுமென்று அமைச்ச ரவர்கள் அறிக்கையில் கூறி யிருக்கிறார்கள். இந்தக் கால நிலைக்கேற்ப நிலவுடைமை ஆசை மக்களிடம் இருக்கிறது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற போக்கு இருக்கிறது. அதற்காக சட்டம் இயற்றி இருந்தாலும் அவர்களிடம் நிலத்தை விற்றுவிட்டு, அதற்கான பணத்தைப் பெற்று, வங்கியில் டிபாசிட் செய்து, அதன் மூலம் வருமானத்தை உருவாக்கி, கோயில்களைப் பாதுகாப்பது அரசின் கடமையாக இருக்க வேண்டும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சில இடங்களில் இதைப் போன்ற நிலைமையை ஏன் ஏற்படுத்தக்கூடாது என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலைமைக்கு இன்னும் ஆளாகவில்லை, அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் நிலங்களை குத்தகைக்கு வைத்திருக்கிறவர்கள் எல் லாம் ஏதோ சாதாரண விவசாயிகள் என்று கூற முடியாது. வசதி படைத்தவர்கள் எல்லாம் கூட நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்ற கணக்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிறது. ஆகவே, இது பற்றி மறுபரிசீலனை செய்து, அந்த நிலங்களை எல்லாம் சாதாரண விவசாயிகளுக்கு நிலமற்ற விவசாயிகளுக்கு தந்து விட்டு, அதற்காகப் பெறுகின்ற பணத்தை வங்கியில் டிபாசிட் செய்து, வருமானத்தைத் தேடி, கோவில் நிர்வாகத்தைச் செம்மை யாகச் செய்வது கால வளர்ச்சிக்கேற்ற சாத்தியமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவில் நிலங்களிலிருந்து வரவேண்டிய 31 கோடி ரூபாய் வருமானத்தை வறட்சி, வெள்ளத்தின் காரணமாக தள்ளி வைத் திருக்கிறோம். ஏழை எளிய விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயி களுக்கு ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து, அவர் களுக்குக் கொடுத்து விட்டால், இப்படி தள்ளி வைக்கின்ற நிலைமை எல்லாம் வராது, ஆகவே, அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, விக்கிரகங்கள் திருட்டு என்பது இன்றைக்கு சிறிய கோவில்களில் கூட சர்வசாதாரணமாகிவிட்டது. ஐம்பொன் சிலைகள் எல்லாம் அயல் நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன என்ற புகார் வருகிறது. சிலைத் திருட்டுக்களைத் தடுக்க கோவில் நிர்வாகத்தை தனியாகப் பிரித்தால் கூட நல்லது என்று அபிப் பிராயம் கூறினார்கள். அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ வசதி வாய்ப்பு உள்ளவர்கள் எல்லாம் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று மேலும் ஒன்றைச் சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. அரசியல் தலைவர்கள் கூட இதன் பின்னணியில் இருக் கிறார்கள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு சிலைத் திருட்டு இருக்கிறது. ஐம்பொன் சிலைகள் விலை மதிக்க முடியாதவை, அப்படிப்பட்ட சிலைகள் வெளிநாடுகளுக்கு கள்ளத்தனமாகவும் திருட்டுத்தனமாகவும் எடுத்துச்செல்லப்படுவதற்கு உறுதுணையாக இருப்பது யார் என்று விரைவிலே கண்டு பிடிக்க வேண்டும். பல கோடி ரூபாய் மதிப்புள்ள சிலைகள் எல்லாம் வெளிநாடு களுக்குக் கடத்தப்படுகின்றன என்று தினந்தோறும் செய்தி வந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்க அரசு தனியாக ஒரு காவல் பிரிவை ஏற்படுத்தினால் கூட, நல்லது என்று கருது கிறேன்.

அது மட்டுமல்ல, எங்கள் மாவட்டத்தில் திருவண்ணாமலை கோவில் திருட்டுப்பற்றி எங்கள் மாவட்ட சட்ட மன்ற உறுப் பினர்கள் ஒரு பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள். திரு வண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இரதத்திலுள்ள சில சிலைகள் திருட்டுப்போய் பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்தத் திருட்டைக் கண்டு பிடிக்கவில்லை. இது போன்ற திருட்டுக்களைக் கண்டு பிடிப்பதில் காவலர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை எங்களால் ஊகிக்க முடிய வில்லை. இத்தகைய திருட்டுக்களைத் தடுப்பதற்கு இந்தத் துறையில் படங்களை எடுத்து வைத்து, பாதுகாக்க முடியும் என்று சொல்கிறார்கள். படங்களை எடுத்து வைப்பதால் மட்டும் சிலைகளைப் பாதுகாத்துவிட முடியுமா? அல்லது வேறு எந்தவகையிலாவது பாதுகாக்க முடியுமா என்பதைத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

நம்முடைய கலாச்சாரம், பண்பாடு, நடைமுறைகள் எல்லா வற்றுக்கும் ஆதாரமாக இருப்பது கோவில்கள்தான்; கோவில் களில் இருக்கின்ற சிற்பங்கள் தான். மனித சமுதாயத்திற்கு அந்த சிற்பங்கள், தெய்வச் சிலைகள் ஒழுக்கத்தையும் கற்பிக்கின்றன. அத்தகைய சிற்பங்களை, சிலைகளை, விக்கிரகங்களை பல நூற்றாண்டுகளானாலும் இப்படி துல்லியமாகச் செய்ய முடியாது. அந்த அளவுக்கு அரிய வேலைப்பாடுகள் அமைந்தவையாக இருக்கின்றன. ஆகவே, இந்த திருட்டைக் கட்டுப்படுத்த அர சாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விலை மதிக்க முடியாத பல ஆபரணங்கள் மற்றும் பல பொருள்கள் பல கோவில்களில் இருக்கின்றன. அவை எல்லாம் ஒரு சில கோவில்களில் அர்ச்சகர்கள், எக்சிகியூட்டிவ் ஆபீசர் என்று சொல்லப்படுகின்ற நிர்வாக அதிகாரிகள் ஆகிய இரண்டு பேர்களுடைய கஸ்டடியில் இருக்கின்றன. சில ஆபரணங்கள் அர்ச்சகர்களிடமே இருக்கின்றன. அதை யார் பாதுகாப்பது? எங்கே பாதுகாப்பது? என்ற வழிமுறை இல்லாமல் இருக்கின்றது. அவைகள் இன்றைக்கு கடத்தப்படுகின்றன. வேறு அதே போன்று ஆபரணங்களை செய்து வைத்து விட்டு, மூலமாக இருந்த விலை மதிக்கமுடியாத பொருள்களை எடுத்து விட்டார்கள் என்ற நிலை மக்களை மத்தியிலே பரவுகின்றது. விக்கிரகங்களுக்கும்; அதே போன்று ஆபரணங்களுக்கும் இது போன்ற நிலை ஏற்படுவது இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு நிலை. இந்த ஐயப்பாட்டை விளக்குவதற்கு இதை எப்படி நிர்வகித்தால் சரியாக இருக்குமென்று ஆலோசிக்க வேண்டியது அரசினுடைய பொறுப்பு என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். இதுபோன்ற ஆபரணங்களை பாதுகாப்பது நம்முடைய பணி என்ற முறையில் நீங்கள் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மடாதிபதிகள் தவறுகளைச் செய்கிறார்கள். அவர்களை நீக்க வேண்டுமென்று வேகமாக கூட அமைச்சர் அவர்கள் வெளியிலே பேசினார்கள். அது ஒரு பக்கம் நியாயமாக இருக்கலாம். நான் கூட பத்திரிகையின் வாயிலாகப் பார்த்தேன். மடாதிபதிகள் என்றால் அவர்கள் சில ஒழுக்க கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தர்மத்தின், நியாயத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பவர்கள் தான் மடாதிபதிகளாக இருக்க முடியும் என்பதை எல்லாம் நாங்கள் மதிக்கிறோம். இந்த கட்டுப்பாடுகளை, விதி முறைகளுக்கு மீறி கூட சில மடாதிபதிகள் நடந்து கொண்டதாகக் கூட நாங்கள் பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்கிறோம். இது போன்ற மடாதிபதிகளின் மீது நடவடிக்கை எடுப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அந்த மடாதிபதிகள் தாங்கள் செய்ய கூடிய மூல காரியங்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்களா என்பதை கண்காணிப்பதில் அரசு பின்வாங்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்துகி றேன். அவர்கள் செய்ய வேண்டிய மதக் காரியங்களை செய்கிறார்களா? அவர்கள் எந்த ஒரு காரியத்திற்காக நியமிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து கடமை ஆற்றுகிறார்களா என்று பார்க்கும்போது ஒரு பக்கம் இந்து மதங்களிலே இருக்கக்கூடிய மடாதிபதிகள் தங்களுடைய கடமையிலிருந்து தவறுகிறார்கள் என்று தான் நாங்கள் கூற முடியும். அவர்கள் பல புத்தகங்களை வெளியிடுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்தப் புத்தகங்கள் மலிவான விலையில் மக்களுக்கு கிடைக்கிறதா? மதபோதனைகள் கிடைக்கிறதா? அல்லது பகவத் கீதை அங்கே வைக்கிறார்களா? அல்லது திருக்குறள் போன்ற நீதி நூல்களை வைத்கிறார்களா என்று பார்க்கும்போது இல்லை என்று தான் கூற முடியும். அது போன்ற நீதி





நூல்களை, பகவத் கீதை அல்லது தமிழ் நூல்களை மக்கள் மத்தியிலே பரப்புவதற்கு செம்மையாக செயல்பட வேண்டு மென்று அரசு தூண்டுதலாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு மடம், அதிலே விருந்து சாப்பிட்டு செல்வோம் என்று சொல்லக் கூடிய ஒரு துறையாக மாறாமல் அது மக்களுக்கு தொண்டாற்றுகின்ற தூய்மையான மடமாக ஆக்கப்பட வேண்டும். அரசும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறது. ஆனால் அவர்கள் கூறுகிறார்கள். அரசிற்கு ஆலோசனை கூறுவதற்கு மடாதிபதிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. நாங்கள் ஆலோசனை கூறுவோம் என்று ஆலோசனை மட்டும் கூறிவிட்டு செல்லக்கூடாது. சில மடங்கள் நல்லமுறையில் நடக்கலாம். ஆனால் ஒன்றைக் கூற முடியும். எல்லா மடங்களையும் குறை கூறவில்லை என்றாலும் மற்ற மடங்கள் தூய்மையாக நல்ல முறையில் நடப்பதற்கான நிலையை உருவாக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கோவில் நிலங்கள் பல கோடி ரூபாய் அளவிற்கு பாக்கியாக இருக்கிறது. வசூலிக்கக்கூட முடியவில்லை. அரசு விதிக்கக்கூடிய சட்டங்களின் காரணமாக நாங்கள் வசூலிக்க முடியவில்லை என்றெல்லாம் குறை கூறினார்கள். அவர்கள் கூட அந்த நிலங்களை விற்பதற்கு அனுமதி வழங்கவேண்டு மென்று அரசை கூட கோரியிருப்பதாக ஒரு சில மடங்களி லிருந்து கோரிக்கை வந்திருப்பதாக அறிகிறேன். அவர்களுக் கெல்லாம் இன்றைய காலப்போக்கின் காரணமாக உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற ரீதியில், உழுபவனுக்கே நிலத்தை விற்று அவர்களும் வங்கியிலே பணத்தை போட்டு அதன் மூலமாக சில நல்ல காரியங்களை செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குச் சிறிய கிராமங்களில் கூட இந்தத் துறையின் மூலமாக கோவில்களை நிர்வகிக்கக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஏற்கனவே வழிவழியாக, சிறிய கிராமமாக இருந்தால்கூட, 400 ரூபாய் 500 ரூபாய் அளவிற்கு வருமானம் உள்ள நிலங்கள் அல்லது வேறு தோப்புகள் இருக்கக் கூடிய கோவில்கள் எல்லாம் இன்றைக்கு நீங்கள் துறையின் மூலமாக எடுத்துக் கொள்கிறீர்கள். அதற்கு ஈ. ஓ. வருகிறார். நியமன தக்கார் என்ற ரீதியில் நீங்கள் தக்காரை நியமிக்கிறீர்கள். அப்படி தக்காரை நியமிக்கும்போது அரசியல் கண்ணோட்டம் இருக்கக் கூடாது என்று பல நிலைகளில் சொன்னாலும், ஆளும் பொறுப்பில் இருக்கிற தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிப்பது என்பது கடந்த காலத்தினுடைய வாடிக்கை. அது எப்போது ஏற்பட்டது என்பதற்குள்ளே செல்லவில்லை என்றாலும் அது ஒரு நிலையாக ஆகிவிட்டது. ஆன்மீக ரீதியில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் அதிலே ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருப்பவர்களை நியமிக்கவேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தாலும் இன்றைக்கு பெரும் பகுதி நியமிக்கப்படுற ஆட்களை பார்க்கும்போது மிகவும் வருத்தமாகக் கூட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின்
முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

**திரு. இல. பலராமன் :** எனவே அந்த நிலையில் தக்காரை
நியமிப்பதிலோ, அல்லது அறங்காவலர்களை நியமிப்பதிலோ,
ஒழுக்கம் உள்ளவர்களாக, கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல்
நியமிப்பதற்கு அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும்
உறுதுணையாக இருப்பார்கள்; அந்த நிலையை ஏற்றுக்கொள்
வார்கள் என்று நான் நம்புகிறேன்; அதே நிலையில் சிறு
கோயில்களை எடுத்துக்கொள்வதில், நீங்கள் அதை எடுத்துக்
கொண்டாலும், அதைப் பாதுகாப்பதற்கான சூழ்நிலைகளை
வைக்க முடியுமா என்று பார்த்தால் பல கோயில்களில்,
அறநிலையத்துறை எடுத்துக்கொண்ட பல கோயில்களில்
விளக்கேற்றாத நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்
டிருக்கிறது. இப்படி எல்லாம் இல்லாமல், அந்தச் சிறிய
கோயில்களை எல்லாம் கிராமங்களில் உள்ள நாட்டாண்மைக்
காரர்களோ, அல்லது பெருந்தனக்காரர்களோ, மற்றும் இது
போன்று உள்ளவர்களிடத்திலே விட்டு, அவைகளை நிர்வகிக்கக்
கூடிய நிலைமையை ஏற்படுத்துவது சாத்தியமாக இருக்கும்
என்பதை நான் ஒரு ஆலோசனையாகக்கூற விரும்புகிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்தில் உள்ள கோவில்களில்
திருமணக்கூடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற
வைகளை எல்லாம் நிர்வகிப்பது ஒரு கோவிலினுடைய
நிலையாக இருந்தாலும், அதை ஊக்குவிப்பது என்பது
அரசினுடைய கடமையாக இருக்கவேண்டும். அதுபோன்று
அறநிலையத் துறைகள் நல்லமுறையில் பல பள்ளிகளை
நிர்வகித்துக்கொண்டு வருகிறது. அதை மேலும் ஊக்குவித்து,
பல பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு, மருத்துமனைகள் ஆரம்பிப்
பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும் என்று இந்த
நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய படவேடு
என்ற ஊரில் உள்ள ரேணுகாதேவி அம்மன் ஆலையம் ஒரு
சிறப்புமிக்க ஆலயமாக, புராதீனமான ஆலையமாக இருக்
கின்றது. அந்த ஆலயங்களுக்கு என வரலாறு இல்லை.
நாம் இப்போது 35 தமிழ் ஆசிரியர்களை நியமித்து இருக்
கிறோம். அவர்களை வைத்து கோவில்களுடைய வரலாறு
களை ஆராய்ச்சி செய்வதற்கு, கல்வெட்டுக்களை பதிவு
செய்வதற்கு, நாங்கள் நியமித்து இருக்கிறோம் என்று
சொல்கிறார்கள். ஆனால்எல்லாக் கோவில்களுக்கும், மாண்பு
மிகு நெடுமாறன் அவர்கள் கூறியதுபோல், அதனுடைய
வரலாறுகள், அந்தக் கோவில்களுடைய நிலைகள், அது
எப்போது கட்டப்பட்டது போன்ற நிலைகளை உருவாக்கு
வதற்கும் அதற்கான புத்தகங்களை வெளியிடுவதும்
போன்ற பணிகள் அரசினுடைய பணிகளாக இருக்கவேண்டும்.
அந்த வளர்ப்பதற்கான சூழ்நிலைகளை அரசு மேற்கொள்ள
வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.



பல வரலாறுகள் உள்ள கோயில்களுக்குக்கூட இடைப்பட்ட
காலத்தில் அதனுடைய ஸ்தல வரலாறே விடுப்பட்டிருக்கிறது.
அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். எங்கே
எதேச்சையாக அதனுடைய உண்மை வரலாறு தெரிந்தால்,
தன்னுடைய ஆதிக்கம் செல்லுபடியாகாது என்று நிலையில்
ஸ்தல புராணத்தைக்கூட மறைக்கக்கூடிய சூழ்நிலைகள்
இடைக்காலத்தில் ஏற்பட்டன. எனவே ஒவ்வொரு கோவில்
களுடைய ஸ்தல புராணங்களை தூய்மையாக வெளியிடுவதற்
கான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும். அந்தப் புராதன
மான கோவில்களில் இருக்கக்கூடிய அந்தக் குறைபாடுகளை
ஆராய்வதற்கான முறையில், நீங்கள் இந்தத் துறையை
எப்படி நியமித்தால் நலமாக இருக்கும் என்பதை ஆலோசித்து
அரசே அதை தொல்பொருள் மூலமாக விடுவதோ, அல்லது
வேறு நிலையிலோ நீங்கள் ஊக்குவிப்பது நலமாக இருக்கும்
என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அதை ஆராயும்போது,
நம்முடைய பழைய பண்பாடு, பழைய வரலாறுகள் எல்லாம்
புலப்படுவதொடுமட்டும் அல்லாமல், அதனுடைய நெறிமுறை
களும், சில மருத்துவ முறைகளும் கூட அதன்மூலமாக
தெரியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

அதுபோன்று கோவில்களுடைய கல்வெட்டுக்களை ஆராய்வது
என்பது அரசினுடைய கடமையாக இருக்க வேண்டும். இதற்
காக தொல்பொருள் ஆராய்ச்சித்துறை கூட ஏற்படுத்துவது
ஒரு நியதியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள படவேடு ரேணுகாதேவி
அம்மன் ஆலயம் ஒரு புராதனமான ஆலயம். அங்கே ஒரு
திருமண மண்டபம் இன்றைக்கு கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.
மேலும் பல வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். இந்தத்துறையை பொறுப்பெற்றுக் கொண்
டிருக்கிற பொறுப்பாளர்கள் அதற்கான உதவியாக இருந்தாலும்
மேலும் பல நன்மைகளைச் செய்யவேண்டும் என்று இந்த
நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில், மைய தொல்பொருள்
ஆராய்ச்சி துறையின் மூலமாக இருந்த ஜலகண்டேஸ்வரர்
கோவிலை இன்றைக்கு ஒரு தனிப்பட்ட நிர்வாகம் ஏற்றுக்
கொண்டு இருந்தாலும், அது பழைய புராதனமான ஒரு
கோவிலாக, ஒரு கோட்டை அமைந்த கோவிலாக அது
இருப்பதால் ஒரு சுற்றுலா மையமாக அதை ஆக்குவதற்கான
சூழ்நிலை இருக்கின்றது, என்பதை வலியுறுத்தி, அந்தக்
கோட்டையும் கோவிலையும் நல்லமுறையில் நிர்வகிப்பதற்கு
உண்டான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

50 சிற்பங்கள் மட்டுமல்லாமல், கோவிலிலே இருக்கக்கூடிய சிற்பங்களை நல்லமுறையில் நிர்வகிப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கவேண்டும். ஏதோ கோவில்களில் இன்றைக்கு கும்பாபிசேஷங்கள் போன்றவைகளைச் செய்தாலும், கோவிலில் இருக்கக்கூடிய கலை நுட்பம் பொருந்திய கற்சிலைகளை பாதுகாப்பதில் அரசு கவனக் குறைவாக இருக்கின்றது. அதை பாதுகாப்பதற்கு அரசு நல்லதொரு நடவடிக்கை எடுத்துக்கொண்டு, இது போன்ற துறை நல்ல முறையில் விளங்க, இந்தத் துறையில் இருப்பவர்கள் நல்ல முறையில் பணியாற்ற, அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, இந்தத் துறை மேலும் வளர வாழ்த்துக்கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டக் காரணத்தினால், அவையிலே உள்ள எதிர்க்கட்சி தலைவர்களுடைய ஒப்புதலோடும், தங்களுடைய அனுமதியோடும் என்னுடைய பதிலை நாளைக் காலையிலே வைத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஒரு அறிவிப்பை மாத்திரம் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்ட, இந்தக் கண்ணகி கோவில் விழா சம்பந்தமான ஒரு செய்தி. காரணம் 15 ஆம் தேதி அங்கு விழா நடைபெற இருக்கிற காரணத்தால், கடந்த ஆண்டு அந்த விழா நடத்துவதிலே கொஞ்சம் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதால், இந்தச் செய்தியை சொல்கிறேன்.

வழக்கமாக ஆண்டுதோறும் நம்முடைய தமிழ்நாட்டுப்பகுதியிலேயிருந்து கண்ணகி கோவிலுக்கு, சித்ரா பௌர்ணமி, முழு நிலவு விழாக் கொண்டாட செல்பவர்களுக்கு சென்ற ஆண்டு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. அதனாலே அங்கே ஒரு பதட்ட நிலை நிலவியது. கேரள அரசினுடைய அதிகாரிகளால் அவர்கள் தடுக்கப்பெற்றார்கள். அதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி, அன்றைக்கு நடைபெறுகிற திருவிழாவிற்கு வழக்கம் போல் தமிழ் நாட்டு மக்கள் செல்வதற்கு வசதி அளிக்க வேண்டும் என்றும், தேவையான பாதுகாப்பு வசதிகளை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும், நமக்கும் அவர்களுக்கும் நடைபெற்று வருகிற, இந்தக் கண்ணகி கோவிலினுடைய உரிமை பற்றிய தாவாதில், எந்த முடிவுக்கும் நாம் இன்றைக்கு முடிவு செய்ய முடியாத சூழ்நிலை இருந்தாலும், வழக்கமாக நடைபெற்று வருகிற அந்த விழா நிகழ்ச்சிகள் அமைதியாக, நடைபெற வேண்டும், உறவு முறையோடு நடைபெற வேண்டும் என்ற அந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், கேரள மாநில முதல்வருக்கு எழுதினார்கள்.



கேரள மாநில முதல்வர் அவர்களும், உடனடியாக அவர்களுடைய அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவித்து, நம்முடைய மதுரை மாவட்ட அதிகாரிகளையும், தமிழக அரசினுடைய சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளையும், கேரள மாநிலத்தினுடைய அதிகாரிகளையும் உடனடியாகக் கூட்டி, பேசி, தேவையான வசதிகளை, அந்த விழாவினை நடத்த வருகின்ற நம்முடைய தமிழ்நாட்டு பக்தர்களுக்கு அங்கே எல்லா வசதிகளும் செய்து தர வேண்டும் என்று கேரள மாநில முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்கிற தகவலை இந்த நேரத்திலே தெரிவித்து, என்னுடைய உரையை நாளைக் காலை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** நாளைக் காலை கேள்வி நேரத்தை ஒத்திவைக்கும் தீர்மானத்தை அமைச்சர் முன் மொழியலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டாம். கேள்வி நேரம் முடிந்த பிறகு, இன்றைக்கான பதில் தொடரட்டும், பிறகு மற்றைய விஷயங்களைப் தொடர்ந்து நடத்திச் செல்லலாம்...................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கவில்லை என்றால், அடுத்த டிமாண்ட் நேரம் பாதிக்கப்பட்டு, இப்படி மேலும் தள்ளிக் கொண்டே போகும்.

**திரு. சோ. அழகர்சாமி :** வினாக்களை ஏற்கெனவே குறைத்துவிட்டீர்கள். 4 பக்கம் அச்சடித்து கொடுப்பீர்கள். இரண்டு பக்கமாக அது வந்துவிட்டது. அதிகமாகக் கேள்வி கேட்கவும் அனுமதிப்பதில்லை. இந்த நிலையில் கேள்வி நேரத்தை ஒத்திப்போடுவது சரியல்ல..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு ஒதுக்கப்பட்ட கேள்விகள் எல்லாம் எடுக்கப்பட்டு விட்டன. முதல் கேள்விக்கு கையை தூக்கியவர்களுக்கெல்லாம் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. எல்லோருக்கும் தொடர்ந்து வாய்ப்பும் அளித்து வரப்படுகிறது.

(பிற்பகல் 1-40)

அத்தோடு நாளைக்கு கும்பகோணம் காலரா குறித்து அட்ஜேர்ன்மென்ட் மோஷன் வேறு எடுத்துக்கொள்ளப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, கேள்வி நேரத்தினை நாளைக்கு ஒத்திவைத்து, மறுநாள் எடுத்துக்கொள்ளலாம். எல்லோரும் சொன்னீர்கள் என்றால் மாற்றிக் கொள்ளலாம் எல்லோரும் ஒத்துக்கொண்டால் சரி.

## 4 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 31ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31 தளர்த்தப்பெற்று, நாளை, 11—4—1984 அன்று மானியக் கோரிக்கை மீது விவாதம் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 11—4—1984, காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

158. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 7—2—1984 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54(3) பிரிவின் கீழ்ப் பேரவை முன் வைக்கப்பெற்றது].

159. அனைத்து வடிவிலான வாழைப் பழங்களை வேளாண் விளைபொருளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3—1—1984 ஆம் நாளிட்ட 15-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

160. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 8—2—1984 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



161. உரிமை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீன்வளத்துறையின் 28—1—1980-ஆம் நாளிட்ட 93 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V /1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

115. கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

(42)-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

மானிய கோரிக்கை எண் 12.

*1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளையில சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

1. சமய நிறுவனங்கள்.

மாநிலத்திலுள்ள சமய நிறுவனங்கள் பற்றிய விபரம்.

இந்து சமய அறநிலைய நிருவாகத் துறையின் பொறுப்பில் 34,167 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,130, திருமடங்கள் 55, திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திருக்கோயில்கள் 55, குறிப்பிட்ட அறக்கட்டளைகள் 1,721, சமண சமய நிறுவனங்கள் 71 மற்றும் அறக்கட்டளைகள் 189. இந்நிறுவனங்களில் 25,887 நிறுவனங்கள் உதவித்தொகை விதிக்கத்தக்க வருமானமுடையனவாகும். இந்நிறுவனங்களுக்கு உதவித் தொகை விதிக்கத்தக்க ஆண்டு வருமானம் சுமார் ரூ. 18.57 கோடி என மதிப்பிடப்படுகிறது. இத்தொகை சென்ற ஆண்டு ரூ. 17.72 கோடியாக இருந்தது.

2. நிர்வாக அமைப்பு.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு, பொது நிர்வாகத்திற்காக, ஆணையாளர் ஒருவரும், அவருக்குக் கீழ் எட்டு துணை ஆணையாளர்களும், 17 உதவி ஆணையாளர்களும், 481 செயல் அலுவலர்களும் உள்ளனர். ஆணையாளர், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் இச்சட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு சட்டத்தின்படி அமைந்த அதிகாரிகளாவர்.

இம்மாநிலத்தில் சில திருமடங்கள் செயல்படுவதில் நிருவாக குறைபாடுகள், சீர்கேடுகள் காணப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து தனிப்பட்ட புலனாய்வு நடத்தும் பொருட்டு, ஒரு துணை ஆணையாளரும் அவருக்குரிய தனிப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும், மற்றும் விலை உயர்ந்த பொருட்களையும் ஆய்வுசெய்து மதிப்பிடும் பணியை கவனிக்க உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் எட்டு நகை சரிபார்க்கும் அதிகாரிகள், அவர்களுக்குரிய துணைப் பணியாளர்களுடன் உள்ளனர்.



அறநிலையத்துறையில் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்தைச் சார்ந்த கணக்கு அலுவலர் தரத்தில் உள்ள தலைமை தணிக்கை அதிகாரி ஒருவரின் கீழ் அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள், பணியாளர்களுடன் சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஒரு தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மேற்பார்வை பொறியாளர் ஒருவரின் தலைமையில், கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான தொழில் நுட்ப மற்றும் மாவட்டப் பணியாளர்களும், சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளைத் தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும் இதர கட்டட வேலைகளையும் மேற்பார்வையிட்டும் கவனித்து வருகின்றனர்.

மாவட்டங்களில் துணை ஆணையாளர்களிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல்நிலுவையில் இருந்துவரும் வழக்குகளை விசாரித்து, விரைவில் முடிப்பதற்காக துணை ஆணையாளர் (நீதி) ஒருவர் நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார். தலைமை அலுவலகத்தில் துறையின் அனைத்து வரவு-செலவுக் கணக்குகளில் ஆணையாளருக்கு உதவும் பொருட்டு ஒரு உதவி கணக்கு அலுவலர் உள்ளார்.

ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும், தனி வட்டாட்சியர் நான்கு பேரும் அடங்கிய வருவாய் தனிப் பிரிவு ஒன்று, திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், அடிப்படைப் பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

3. செயல் அலுவலர்கள்.

தற்பொழுது 481 செயல் அலுவலர்கள் கீழே விவரிக்கப்பட்டவாறு 1,743 திருக்கோயில்களின் பொறுப்பில் இருந்து வருகின்றனர். 1—1—1982 அன்று 1,567 திருக்கோயில்களில் மட்டுமே செயல் அலுவலர்கள் பணியாற்றி வந்துள்ளனர்.

| செயல் அலுவலர் நிலை. | செயல் அலுவலர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| நிலை 1 .. .. .. .. | 54 |
| நிலை 2 .. .. .. .. | 117 |
| நிலை 3 .. .. .. .. | 172 |
| நிலை 4 .. .. .. .. | 138 |

செயல் அலுவலர்கள் இல்லாத திருக்கோயில்களில், குறிப்பாக பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் திருக்கோயில்களில், நிருவாகக் குறைபாடுகள் அதிகமாக காணப்பட்டு வருகின்றன. சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி,

பரம்பரை அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டுவரும் திருக்கோயில்களுக்கு இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 45(1)-ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்வதற்கு முன்னர், பரம்பரை அறங்காவலருக்கு அறிவிப்பு அனுப்பி, விசாரணை செய்து முடிவெடுக்க வேண்டியுள்ளது.

1983 ஆம் ஆண்டில் 57 திருக்கோயில்களுக்கு அறநிலையச் சட்டப் பிரிவு 45(1)-ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 6 திருக்கோயில்கள் பரம்பரை அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டவையாகும். கடந்த மூன்று ஆண்டுகளில், 259 திருக்கோயில்களுக்கு அறநிலையச் சட்டத்தின் பிரிவு 45(1)-ன் கீழ் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

1—1—1977-லிருந்து இதுநாள் வரை (31—1—1984) அறநிலையச் சட்டப் பிரிவு 45(1) கீழ் மேற்கொள்ளப்பட்ட செயல் அலுவலர்கள் நியமனத்தை எதிர்த்து சட்டப்பிரிவு 114-ன் கீழ் அரசு முன்பு 41 சீராய்வு மனுக்களும், சென்னை உயர்நீதி மன்றத்தில் 32 ரிட் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, அவைகள் நிலுவையிலுள்ளன. மேற்படி 41 சீராய்வு மனுக்களில் 35 மனுக்கள் பரம்பரை அறங்காவலர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர் நியமனம் செய்தல்.

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களின் நிருவாகத்தைப் பற்றிய புகார்களை கருத்தில் கொண்டு, சட்டத்தின் விதிமுறைகளின்படி அவ்வகை திருக்கோயில்களின் நிருவாகத்தினை மேம்படுத்தவும், அறங்காவலருக்கு உதவி புரியவும், செயல் அலுவலர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தருமபுரம், திருவாவடுதுறை மற்றும் குன்றக்குடி ஆதீனங்களின் மடாதிபதிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தடை ஆணை பெற்றுள்ளார்கள்.

உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரை விசாரணையினை விரைவில் நடத்தி முடிக்கக் கேட்டு, உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யும்படி பணித்துக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## 4. தணிக்கை.

தணிக்கை செய்வதில் நல்ல முன்னேற்றமும் திறமையும் ஏற்பட முன்பு உபயோகத்தில் இருந்த தணிக்கை அறிக்கையுடன் இணைக்கப்பட்டும் தணிக்கை அட்டவணைகள், தணிக்கை வினாப் பட்டியல் இவைகள் தற்சமயம் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தணிக்கை முறைகளும், தணிக்கை மேலாய்வு முறைகளும் மிகையாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இதுபோலவே திருப்பணி கணக்கு



தணிக்கை மற்றும் பெரிய மடங்கள் அவற்றுடன் சார்ந்துள்ள திருக்கோயில்கள் மற்றும் இதர திருக்கோயில்களின் கணக்கின் மீதான தணிக்கை ஆகியவற்றிலும் விரைவான முன்னேற்றம் ஏற்பட தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த வருவாய் உள்ள (ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் கீழ் உள்ள) திருக்கோயில்களில் கணக்குகளின் தணிக்கைக்கு தனி கவனம் அளிக்கப்பட்டுள்ளது. கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்ய தணிக்கை அலுவலகத்திற்குக் கொண்டு வருதலில் கோயில் பொறுப்பானவர்களிடையே தயக்கம் உள்ளது கண்டு, இதனைத் தவிர்ப்பதற்காக தணிக்கையாளர்கள் மேற்படி கோயில்களுக்குச் சென்று தணிக்கை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. தணிக்கையில் தற்சமயம் வெகு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ் நாடு முழுவதும் உள்ள கோயில்களின் கணக்குகளை ஆய்வு செய்தலினால் ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு, கோயில் கணக்குகளை மேலும் செம்மைப்படுத்திடவும், திருத்தவும் உறுதுணையாக் தற்சமயம் தணிக்கை மேம்பாடு அடைந்துள்ளது. தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைகளை அவ்வப்போது களைதலிலும், மற்றும் ஏற்பட்ட பண இழப்புகளைப் பொறுப்பாளர்களிடமிருந்து ஈடு செய்தலிலும், விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தற்சமயம் சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்திலிருந்து ஒரே சீரான 1½ சதவிகிதம் தணிக்கை கட்டணமாக அறநிலைய சட்டப் பிரிவு 92(2)-ன் கீழ் வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டண விகிதம் 1951 ம் ஆண்டு முதல் அமுலில் இருக்கிறது. தணிக்கை பிரிவிற்கு ஆகும் செலவு தணிக்கைக் கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம், அரசு ஊழியர்களாகிய தணிக்கைப் பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் படிகள் மற்ற எல்லா அரசு ஊழியர்களைப் போல அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகின்றன. இச்செலவைச் சரிக்கட்டும் பொருட்டு தணிக்கைக் கட்டணத்தை சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் உயர் அளவாக 4 (நான்கு) சதவிகிதம்வரை உயர்த்துவதற்கு சட்டத்திருத்தத்திற்கான குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 5. ஆலயப் பணியாளர்கள்.

இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் உட்பட சுமார் 82,600 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

1—4—1981 முதல் இவர்களுடைய சம்பளம் மற்றும் படிகள் திருக்கோயில் வருவாயில் உயர்ந்தபட்சம் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் என உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் பணியாளர்களுக்கு, அநேகமாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களும், படிகளும் வழங்கப்படுகிறது. திருவாத [illegible]

[1984 ஏப்ரல் 10

காரிகளாக உள்ள துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்
களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயங்களில் பணியாற்றும்
ஆலயப் பணியாளர்களுக்கு ரூ. 650 வரை சம்பளம் பெறுபவர்
களுக்குச் சம்பளத் தொகையில் 47.5 சதவீதம் அகவிலைப்படி
யாகவும் ரூ. 650-க்கு அதிகமாகச் சம்பளம் பெறுபவர்களுக்கு
35.625 சதவீதம் அகவிலைப்படியாகவும் வழங்கப்படுகிறது.
இதரத் திருக்கோயிலில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ. 400
வரை சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 115 அகவிலைப்படியும்,
ரூ. 400-க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 180 அகவிலைப்
படியும் வழங்கப்படுகிறது.

சென்னை, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன்
திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்
கோயிலில் பணியாற்றும் ஆலயப் பணியாளர்களில் ரூ. 400-க்கு
குறைவாக ஊதியம் பெறுவோருக்கு ரூ. 45 மற்றும் ரூ. 25
முறையே வீட்டு வாடகைப்படியாகவும், நகர ஈட்டுப்படியாகவும்
அளிக்கப்படுகிறது. ரூ. 400-க்கு மேல் ஊதியம் பெறுவோருக்கு
ரூ. 75 மற்றும் ரூ. 40 முறையே வீட்டு வாடகைப்படியாகவும்,
நகர ஈட்டுப்படியாகவும் வழங்கப்படுகிறது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம்
மூலம் (LIC) 1—7—1982 முதல் க்ருப் இன்சூரன்ஸ் திட்டம்
அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படி ரூ. 100-க்குமேல்
சம்பளம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் குறைந்தபட்ச
பிரிமியம் செலுத்த வேண்டும். ரூ. 100-க்குக் கீழ் சம்பளம்
பெறும் பணியாளர்கள் எவ்வித பிரிமியமும் செலுத்த வேண்டிய
தில்லை. இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்பு மரணமடைந்
துள்ள 32 திருக்கோயில் பணியாளர்களின் குடும்பங்களுக்கு
தலா ரூ. 5,000 விதம் இன்சூரன்ஸ் தொகை பெற்று வழங்கப்
பட்டு உள்ளது.

ஏதேனும் ஒரு திருக்கோயில் பணியாளர் பணியிலிருக்கும்
போது மரணம் அடைந்தால். அப்பணியாளரின் சேமநல நிதிக்
கணக்கிலிருந்து ஈமச் சடங்கிற்காக ரூ. 250 அளிக்கப்படுகிறது.

ரூ. 500 அல்லது இரண்டு மாத அடிப்படைச் சம்பளம் இதில்
எது குறைவோ அதனை திருக்கோயில் பணியாளர்களுக்கும்
பண்டிகை முன்பணமாக கொடுக்கப்பட்டு, அதனை 10 தவணை
களில் (அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போல்) பிடித்
தம் செய்யப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு உள்ள ஈட்டிய விடுப்பை சரண் செய்
யும் சலுகை ஆலய ஊழியர்களுக்கு இல்லாத காரணத்தால் பெரிய
திருக்கோயிலில் விழாக் காலங்களில் அதிகப்படியாக கூடுதல்
நேரப் பணிபுரியும் ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு மாத சம்பளத்
திற்கு நிகரான தொகை சிறப்பு ஊதியமாக வழங்கப்படுகிறது.



1984 ஏப்ரல் 10]

ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும்
ஆலயங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆலயமும் பணி
யாளர்களும் வைப்பு நிதிக்கு தொகை செலுத்தும் வருங்கால
வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருவாய் பெறும்
ஆலயங்களில் 10 ஆண்டுகள் பணியாற்றிய அலுவலகப் பணி
யாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் அவர் பணியாற்றிய ஒவ்
வொரு முழு ஆண்டுக்கும் ½ திங்கள் சம்பளம் வீதம் 15 மாத
அடிப்படைச் சம்பளத்திற்கு மிகைப்படாமல் பணிக்கொடை வழங்
கப்படுகிறது.

திருக்கோயில் பணியாளர்கள் தற்காலிகப் பதவி நீக்கத்தில்
இருக்கும்போது அவர்களுக்குப் பிழைப்பூதியம் வழங்க உதவி
ஆணையாளர்/செயல் அலுவலர் தரத்தில் உள்ளவர்களுக்கு அறி
வுரை வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு
வழங்கப்படுவது போல் ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு வீடு
கட்ட கடன் உதவி, திருமணக் கடன் போன்ற சலுகைகள்
வழங்கும் வகையில் அந்தந்த பணி விதிகளை திருத்தம் செய்வது
பரிசீலனையில் உள்ளது.

6. விலை மதிப்புள்ள திருவுருவச் சிலைகள் பாதுகாப்பு.

தமிழ்நாட்டிற்குத் தனிப் பெரும் புகழும், பெருமையும் அளிக்
கும் விலை மதிக்க முடியாத கலைப் பொருட்களான சிலைகளைப்
பாதுகாக்க இவ்வரசு சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து வரு
கின்றது.

அனைத்திற்கும் மேலாக ஒவ்வொரு செப்புத் திருவுலாத் திரு
மேனியினையும் விஞ்ஞான முறைப்படி உலோக ஆராய்ச்சிக்
கூடங்களில் "ரேடியோ கிராபி" மற்றும் "ஹோலோ கிராபி"
முறையில் ஆய்வு செய்து ஒவ்வொரு திருமேனிக்கும் தனித்
தனியாகக் குறிப்பு தொகுப்புத் தயாரிக்க திட்டமிடப்பட்டு
வருகிறது.

260 அறநிலையங்களுக்குச் சொந்தமான 1,766 திருவுலாத்
திருமேனிகள் போதிய பாதுகாப்புடன் பாதுகாப்பான அறை
களில் வைக்கப்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டின் தொல்
பொருள் மற்றும் கலை பொக்கிஷ சட்டம் (மத்திய அரசுச்
சட்டம் 52/1972) இன் விதி 12-ன் கீழ் தொன்மை வாய்ந்த
திருவுலாத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையினரின்
பதிவு அதிகாரிகள் அலுவலகங்களில் புகைப்படங்கள் தொகுப்பு
எடுத்துக் கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. இது
வரை 5,152 அறநிலையங்களுக்குச் சொந்தமான 29,733 திரு
வுலாத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பதிவு
அதிகாரிகளிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன. செப்புத் திருவுலாத்

திருமேனிகள் ஒவ்வொன்றும் நான்கு கோணங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டு, புகைப்படத் தொகுப்பு தயாரிக்கப்பட்டு பெறப்படுகின்றன. இதுவரை 4,502 அறநிலையங்களுக்குச் சொந்தமான திருவுலாத் திருமேனிகளின் புகைப்படத் தொகுப்புகள் பெறப்பட்டுள்ளன.

திருவுலாத் திருமேனிகள் மற்றும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களைக் களவு போவதினின்றும் தடுத்து பாதுகாக்க தேவையானத்தக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) அரசாணை (பல்வகை) எண் 759 (வ.வ. மற்றும் அ.நி.) நாள் 11—7—1983-ன்படி பாதுகாக்க வேண்டிய புராதன சின்னங்கள் உள்ள கோயில்கள் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட "கிராம விழிப்புக் கமிட்டிகளை" அமைக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பணிக்கப்பட்டுள்ளனர் ;—

(i) அந்த கிராமத்தில் உள்ளூர் மக்களால் மதிக்கப்படும் 3 கிராம வாசிகள் ;

(ii) அந்தக் கிராமத்தில் வசிக்கும் முன்னாள் ராணுவ வீரர் முன்னாள் காவல் துறையினர் மற்றும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்—3 நபர்கள் ;

(iii) ஸ்டேஷன் ஹவுஸ் அலுவலர் ;

(iv) பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மற்றும்

(v) இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இன்ஸ்பெக்டர்.

(2) புராதன திருமேனிகள் மற்றும் உலோகச் சிலைகள் களவுகளைத் தவிர்க்க அரசாணை (பல்வகை) எண் 2098, உள் துறை (காவல் iv) நாள் 7—10—1983-ன்படி ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு டி.எஸ்.பி., 4 இன்ஸ்பெக்டர்கள், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல நிலைக்காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு தனி ஸ்குவாட் அமைக்கப்பட்டுள்ளது.

(3) களவுபோன செப்புத் திருமேனிகள் மற்றும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்கள் பற்றித் துப்பு அளிப்பவருக்குத் தகுந்த சன்மானம் அளித்தல், அரசு ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை உதவித் தொகை வழங்க ஆணையாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(4) அஞ்சலகத் துறை மற்றும் புகைவண்டித் துறை ஆகியவற்றிற்குச் சொந்தமான பொருட்கள் தனியார் வசம் இருத்தல் எப்படி சட்ட விதிகளுக்குப் புறம்பானதும் குற்றமானதும் ஆகும் என்று கருதப்படுகிறதோ, அதேபோன்று திருவுலாத் திருமேனிகள் தனியார்கள் உடைமையில் இருத்தல் குற்றமானது என்றும் சட்ட விதிகளில் திருத்தம் செய்தல்.



(5) ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அனுப்பப்படும் திருவுருவச் சிலைகளின் மதிப்பினையும், தொன்மையையும் அறியும் பொருட்டு சுங்கவரி இலாகா அலுவலர்களுக்கு அறநிலையத் துறையினரால் தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் ஒத்துழைப்போடு பயிற்சி அளித்தல்.

(6) திருக்கோயில்களின் காவல் பணியாளர்களுக்கு காவல் துறையினரின் உதவியுடன் போதிய தற்காப்புப் பயிற்சி அளித்தல்.

(7) தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும், தனியார் கலைக்கூடங்களைத் திடீர் சோதனை மற்றும் ஆய்வு நடத்தித் திருக்கோயில்களின் செப்புத் திருமேனிகள் ஏதும் கடத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளனவா என்று கண்டு அறிந்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

சிலைகளைத் திருடுவதிலும், வெளி நாடுகளுக்கு கடத்துவதிலும் பழக்கப்பட்ட கைதேர்ந்த நபர்களை முன் எச்சரிக்கையாக கைது செய்து விசாரணையின்றி ஓராண்டுக்காலம் சிறையில் வைக்கத்தனிச் சட்டம் கொண்டு வருதல் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இது தவிர திருக்கோயில் வழிப்பாட்டில் இல்லாத பஞ்சலோக சிலைகளை பாதுகாக்க திருவாரூர், தஞ்சாவூர், மதுரை, ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் சிலைகளின் காட்சியகம் மைய அரசின் உதவியோடு அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த சமய அறநிலைய ஆட்சித் துறையில் இச் சிலைகளை நிழற்படமெடுக்க தனி நிழற்படப் பிரிவு ஏற்படுத்தவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 7. கோயில் நிலங்கள்.

இம் மாநிலத்தில், இந்து சமய அறநிலையங்களுக்குச்சொந்தமான சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. பசலி 1392 வரை இந்நிலங்களிலிருந்து பெறப்பட வேண்டிய குத்தகை வாடகை பாக்கி சுமார் ரூ. 31.35 கோடி ஆகும். குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற நடவடிக்கையிலிருந்து விதிவிலக்கு அளித்து பாதுகாப்பு கொடுக்கும் பல சட்டங்கள் காரணமாக, மேற்படி நிலுவைகளை வசூலிக்கப்பட முடியவில்லை. இதனால் கோயில்களின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக சில கோயில்களில் தினப்படி பூசைகள் செய்வதும் வேலையாட்களின் ஊதியம் கொடுப்பதும் இயலாததாக உள்ளது. எனவே சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள 25 விகித விளைச்சலையாவது முறையாக வசூல் செய்வதற்கு வசதியாக தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தில் இல்லாத அறநிலைய நிலங்களுக்கு மேற்கூறிய சட்ட விதிகளிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

நிலங்களின் குத்தகை வாடகை அதிகரித்தல்.

1983 ஆம் ஆண்டில் 1,312 ஏக்கர் நிலங்களுக்கான ஆண்டு குத்தகை வருமானம் ரூ. 72.037 அளவிற்கு அதிகப்படுத்தப் பட்டுள்ளது.

தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது.

முதல்முறையாக 89.06 ஏக்கர் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு ரூ. 27,942 கூடுதல் வருமானம் அறநிலையங்களுக்கு டைத்தது.

ஆக்கிரமிப்பில் இருந்த 72.58 ஏக்கர் நிலங்கள் அற நிலையங் களால் திரும்பப் பெறப்பட்டு, குத்தகைக்கு விடப்பட்டதில், கூடுதல் குத்தகை வருமானம் ரூ. 24,500 கிடைத்தது.

8. வருவாய்த் துறை சிறப்புப்பிரிவு மேற்கொண்ட விசாரணை:

கோயில் நிலங்களைப்பற்றி ஆய்வு செய்து, அவைகளைப்பற்றிய ஆவணங்கள் தயார் செய்தல், அறநிலையங்களுக்கு பயனளிக்கக் கூடியதாகும். ஆக்கிரமிப்பிலிருந்து திரும்பப் பெறப்பட்டு, திருப்பி எடுக்கப்பட்ட பெருமளவிலான நிலங்கள், அறநிலையங் களுக்குச் சொந்தமான பல வீட்டு மனைகள் மற்றும் வீடுகள் மூலம் இப்போது கூடுதல் வருவாய் பெறப்படுகிறது.

குறிப்பாக சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயி லுக்கு தொடர்புள்ள 115 குறிப்பிட்ட அறக்கட்டளைகள் ஆய்வு செய்யப்பட்டு, அவைகள் இந்து சமய அற நிலையத்துறையின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு, அவைகளுக்குக்காக பசலி 1393-க்கான உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்கு வருட வருவாய் ரூ. 42,248 அடிப் படையில் பசலி 1393-க்கு உதவித் தொகை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

9. கட்டிடங்களும், மனைகளும்.

கட்டிடங்கள்.

1983 ஆம் ஆண்டில் சமய நிறுவனத்தைச் சார்ந்த 4,936 கட்டிடங்களுக்கும் மற்றும் இடங்களுக்கும் வாடகை உயர்த்தப் பட்டது. அதன் விளைவாக ரூ. 14,50,000 கூடுதல் வருமானம் கிடைக்கிறது.



மனைகள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அதிகவிலை மதிப்புள்ள காலி மனைகள், சென்னை போன்ற மாநகரங்களில் குறைந்த குத்தகை விகிதத்திற்கு 99 வருடம் போன்ற நெடுங்கால குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இது காலப்போக்கில் அத் திருக்கோயில்களின் நலனுக்கு இடையூறாக இருக்கிறது. உதாரணமாக சென்னை அருள்மிகு காபாலீஸ்வரர், அருள்மிகு பார்த்தசாரதி, அருள்மிகு கச்சாலீஸ்வரர் திருக்கோயில்கள், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் ஆகியவைகளுக்குச் சொந்தமான சுமார் 290 மனைகள் முதலில் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு அதன் பிறகு அவரவர்களால் உள் குத்தகைக்கு பல்வேறு நபர்களுக்கு விடப்பட்டுள்ளன. உள் குத்தகைதாரர்கள் மேற்படி மனைகளில் நிலையான கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு நிலையாக இருந்து வருகிறார்கள். அப்போது நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகை மிகவும் குறைவு. உதாரணமாக மயிலையில் உள்ள லஸ் சர்ச் ரோட்டில் உள்ள 14 மனைகளுக்கான மாத வாடகை ரூ. 53.25. அதே போன்று பெரியார் ஈ. வே. ரா. நெடுஞ்சாலையில் டெய்லர்ஸ் ரோடு ஹால்ஸ் ரோடுக்கு சமீபமுள்ள 46 மனைகளுக்கான வருட வாடகை ரூ.46.14. அவ்வாறுள்ள சில முக்கிய நிலங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் மிக முக்கியமான இடங்களான லஸ் சர்ச் சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி போன்ற இடங்களில் வாடகை இவ்வளவு மிக மிக குறைவாக இருப்பது மிகவும் ஆச்சரியமானதே. இதனால் திருக்கோயில்களுக்கு அதிக அளவில் இழப்பு ஏற்படுகிறது.

கோயில் நிலங்களை நீண்ட காலமாகிய 99 ஆண்டுகுத்தகைக்கு விடுவது கோயில்களின் நலனுக்கு உகந்ததல்ல. ஏனெனில் தற்கால விலைவாசி நிலையையும், மற்ற வாழ்க்கைச் செலவுத் தன்மையையும் நோக்கும்போது பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்ட மிக சொற்ப குத்தகை ஏற்றதல்ல. மேலும் ஒரு குறிப்பிட்ட காலமாகிய 3 ஆண்டுகளுக்கு மாத்திரம் குத்தகை இருத்தல் அவசியம். கோவில் சொத்துக்களை மைனர் சொத்துக்களைப்போல் அல்லாமல் ஒரு குழுவினால் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது. மைனர் சொத்து அந்த நபர் மேஜர் ஆனதும் அவர் நிர்வாகத்திற்குப் போகும். ஆனால் கோயில் சொத்து எப்பொழுதும் பிறர் பொறுப்பில் இருக்க வேண்டியுள்ளதால் இது தனி நிலையுடையதாக இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி குத்தகை நிலங்களை மீட்கவோ அல்லது தகுந்தளவு குத்தகை வருமானம் பெறுவதற்கோ அல்லது அந்த சொத்தை தற்பொழுது உபயோகப்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல நியாயமான விலைக்கு விற்கவோ தக்க சட்டம் இயற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

சென்னை நகரில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அதிக விஸ்திரணமுள்ள நிலங்கள் 99 ஆண்டு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டுள்ள விவரம்—

| புல எண். | விஸ்திரணம். | அமைந்துள்ள இடமும் தற்போதுள்ள அனுபவமும். | மாத வாடகை. | குத்தகைக்கு விடப்பட்ட நாள். | எந்த திருக்கோவிலுக்குச் சொந்தமானது. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. பை. | | |
| 3333 | 42 கிரவுண்ட் | மயிலை கிளப், லஸ் சர்ச் சாலை மயிலை. | 157.50 | 27-7-1901 | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலை, சென்னை-4. |
| 3333 | 14 கிரவுண்ட் | அமிர்தாஞ்சன் லிமிடெட், லஸ் சர்ச் சாலை, மயிலை. | 53.25 | 28-7-1901 | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலை, சென்னை-4. |
| 229/2 | 46 கிரவுண்ட் | டெய்லர்ஸ் ரோடு ஹால்ஸ் ரோடு பக்கத்தில் உள்ள கட்டிடங்கள், பூந்தமல்லி நெடுஞ்சாலை. | 46.14 (ஆண்டு வாடகை). | 18-11-1898 | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். |

## 10. திருக்கோயில்கள் செப்பனிடுதலும், திருப்பணிகளும்.

1—1—1983 முதல் 31—12—1983 முடிய உள்ள காலத்தில் ரூ. 4,37,46,534 மதிப்பீட்டில் 140 திருப்பணி மற்றும் 64 இதர கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 12,08,300 மதிப்புடைய 44 திருப்பணிகளும் மற்றும் ரூ. 7,61,000 மதிப்புடைய 13 இதர கட்டுமானப் பணிகள் மேற்குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது. ரூ. 5,57,15,311 மதிப்புள்ள 294 இனங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.



### திருமண மண்டபங்கள்.

தற்பொழுது ரூ. 71.32 இலட்சம் மதிப்பீட்டில் 33 திருமண மண்டபங்கள் கட்டுமான வேலை நடைபெற்று வருகின்றன.

ரூ. 74,03,500 செலவில் கட்டப்பட்ட 103 திருமண மண்டபங்கள், தற்பொழுது திருக்கோயில்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது நடைபெற்று வரும் சில முக்கிய திருப்பணிகள் விபரங்கள்.

### 1. அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள பொறியியல் நிபுணர் குழுவினர் ஆய்வுகள் முடிக்கப்பட்ட பின்னர், மேற்படி திருக்கோயிலின் கல்காரத்தின் மீது கோபுரம் எழுப்பும் பணி தற்போது தொடங்கப் பெற்றுள்ளது.

### 2. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

இத் திருக்கோயிலில் ஏற்கனவே ரூபாய் ஒரு கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்ட இராஜ கோபுர திருப்பணியில் 10 நிலைகள் கட்டி முடிக்கப்பட்டு, 11-வது நிலை கட்டும் திருப்பணி முழுமையடையும் நிலையில் உள்ளது.

### 3. அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் (நடராஜர் திருக்கோவில்), சிதம்பரம், தென் ஆற்காடு மாவட்டம்.

மேற்கண்ட திருக்கோயிலில் ரூ. 38 இலட்சம் மதிப்புள்ள திருப்பணி வேலைகள் நல்ல முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றன.

### 4. அருள்மிகு வைகுண்டபெருமாள் மற்றும் காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, செங்கற்பட்டு மாவட்டம்.

ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள இராஜகோபுரம் ஒன்று மேற்கண்ட திருக்கோயிலில் கட்டப்பட்டு வருகிறது.

### 5. அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம் :

ரூ. 17 இலட்சம் மதிப்புள்ள இராஜகோபுரத் திருப்பணி நல்ல முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகிறது.

6. அருள்மிகு அன்னபரணீஸ்வரர் திருக்கோயில், (இணைப்பு) அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், பெரியார் மாவட்டம் :

ரூ. 11.25 இலட்சம் மதிப்புள்ள மகா மண்டபம், பிரகார மண்டபம் கட்டும் திருப்பணி வேலைகள்நடைபெற்று வருகின்றன.

7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன் மலை, பெரியார் மாவட்டம் :

மேற்கண்ட திருக்கோயில் அமைந்துள்ள மலையில், மலை வழிப்பாதை ரூ. 7.50 இலட்சம் மதிப்பில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

8. ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் திருப்பணி வேலைகள் நடைபெறும் திருக்கோயில்கள் பட்டியல் :—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி (கிழக்குப் பிரகாரம் விரிவு படுத்தல்) .. .. .. .. | 5,40,000 |
| 2. | அருள்மிகு வைகுண்டபெருமாள் திருக்கோயில், மாங்காடு (இராஜகோபுரம் கட்டுதல்) | 8,00,000 |
| 3. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் (ஜெயந்திநாதர் விடுதியின்மேல் இரண்டாவது மாடி கட்டுதல்) | 18,35,000 |
| 4. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம் நகர் (இராஜகோபுரம் கட்டுதல்) .. .. .. .. | 17,00,000 |
| 5. | அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம் (திருப்பணி வேலைகள்) .. | 38,45,000 |
| 6. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி (தெற்கு வெளிப் பிரகாரம் விரிவுபடுத்தல்) .. .. | 7,50,000 |
| 7. | அருள்மிகு நாகராசா திருக்கோயில், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம் (கல்யாண மண்டபம் கட்டுதல்) .. | 7,00,000 |
| 8. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர் (அருள்மிகு அன்னபரணீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி வேலைகள்) .. .. .. | 6,37,50 |



| | | ரூபாய். |
|---|---|---|
| 9. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை(வியாபாரக் கடைகள்கட்டுதல்) | 8,10,000 |
| 10. | அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர் (திருப்பணியும் பழுது பார்த்தலும்) .. .. .. | 6,00,000 |
| 11. | அருள்மிகு நாராயணப்பெருமாள் திருக்கோயில், பாரியூர் (காம்பவுண்டு சுவர் மற்றும் மண்டபம் கட்டுதல்) .. .. | 5,00,000 |
| 12. | அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், உத்திரகோசமங்கை (சுவாமி சந்நிதியின் மூன்று பக்கமும் முதல் பிரகாரம் கட்டுதல்) | 9,50,000 |
| 13. | அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் (இராஜகோபுரம் கட்டுதல்) .. | 1,00,00,000 |
| 14. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருப்பரங்குன்றம் (24 அறைகள் கொண்ட ஓய்வு விடுதி கட்டுதல்) .. .. | 5,30,000 |
| 15. | அருள்மிகு பிர்லா விஷ்ரம், மதுரை (9 அறைகள் கொண்ட ஓய்வுவிடுதி கட்டுதல்) | 6,50,000 |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருச்செந்தூர் (ஆறுமுக விலாஸ் குடில் மீது முதல்மாடி கட்டிடம் கட்டுதல்) | 6,30,000 |
| 17. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் (26 கடைகள் கட்டுதல்) .. .. .. .. .. | 5,15,000 |
| 18. | அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில், பாரியூர் (மகாமண்டபம், பிரகாரம் மண்டபம் கட்டுதல்) .. .. .. | 11,25,000 |
| 19. | அருள்மிகு பழநியாண்டவர் மெட்ரிக்குலேஷன் பள்ளி கட்டுதல் .. .. .. | 5,60,00 |
| 20. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் மயிலம் (முகப்பு மண்டபம் கட்டுதல்) | 5,00,000 |
| 21. | அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், தென்காசி (9நிலை இராஜகோபுரம் கட்டுதல்) .. .. .. .. .. | 90,00,000 |

| | | ரூபாய் |
|---|---|---|
| 22. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை (மலைப்பாதை அமைத்தல்) | 7,50,000 |
| 23. | அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை (வடக்கு இராஜகோபுர திருப்பணி வேலைகள்) .. | 7,00,000 |
| 24. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பழநி (இராஜகோபுரம் கட்டுதல்) .. .. | 8,50,000 |
| 25. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை (மேல்நிலைப்பள்ளி, கூடுதல் கட்டிடம் கட்டுதல்). .. .. | 5,00,000 |
| 26. | அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி மலைக் கோயில், துறையூர் (பெருமாள் மலை அடிவாரத்திலிருந்து மலைப்பாதை அமைத்தல்) .. .. .. .. .. | 5,00,000 |

11. ஆலயங்கள் சார்பில் வழிபடுவோர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் :

| | |
|---|---|
| ஓய்வு விடுதிகள் .. .. .. | 58 |
| குடில்கள் .. .. .. .. | 231 |
| அறைகள் .. .. .. .. | 936 |
| திருமண மண்டபங்கள் .. .. .. | 103 |

12. திருக்கோயில்களில் பழுது பார்த்தல் மற்றும் திருப்பணி வேலைகளுக்கு அரசு மானியம் வழங்குதல் :

1983-84 ஆம் நிதியாண்டிற்கு திருக்கோயில்களைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும் திருக்கோயில்களைச் சார்ந்த திருக்குளங்களைச் சீரமைத்தல் மற்றும் மராமத்து வேலைகளுக்கு ரூ. 13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ரூ. 13,00,000 பெறுவதற்கு தகுதி வாய்ந்த 29 திருக்கோயில்களின் பட்டியல் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

1—1—1983 முதல் 31—12—1983 முடிய ள்ள காலத்தில் 6 ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு, ரூ. 46,000 திட்டத்தில் புதுப்பிப்பதற்காக அரசு பமானியம்வ ழங்கப்பட்டுள்ளது.



13. சிறிய ஆலயங்களுக்கு நிதியுதவி :

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூ. 1 கோடிக்கு காப்புத் தொகை ஏற்படுத்தி அதனை நீண்டகால வைப்பு நிதியில் முதலீடு செய்து அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து உதவி தேவைப்படும் கிராமப்புற சிறிய ஆலயங்களுக்கு நிதியுதவி கொடுப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

14. ஆலய குடமுழுக்கு :

இந்த பசலி ஆண்டில் திருக்குட நன்னீராட்டு விழா 108 திருக்கோயில்களில் நடைபெற்றுள்ளது.

15. சமுதாய நலப்பணிகள் :

ஒரு சமூக நலத் திட்டமாக, மாநிலம் முழுவதிலும் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மாநில நிதியில் கணிசமாக செலவு செய்து, உணவு வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. இதற்குப் பல சமய நிறுவனங்கள் தாராளமாக நன்கொடை வழங்க தாமாகவே முன்வந்தன. ஆலயங்களின் பெயரில் நிரந்தரமான 148 உணவுக் கூடங்கள் கட்டுவதற்காக 64 ஆலயங்கள் சேர்ந்து ரூ. 59,20,000 நன்கொடை வழங்கப்பட்டது.

16. இந்து ஆதிதிராவிடர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள்.

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும் அரசின் கொள்கைக்கிணங்க, நிதிவசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750-லிருந்து ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது. 15—8—1981-லிருந்து சுமார் ரூ. 7,90,953.13 செலவில் இதுவரை 940 திருமணங்கள் நடத்தப்பட்டன. இதில் 605 திருமணங்கள் ஆதி திராவிட மக்களுக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களாகும்.

17. பொருட்காட்சி.

மாவட்டத் தலைமையிடங்களில் ஏற்பாடு செய்யப்படும் பொருட்காட்சிகளிலும், சென்னையில் நடைபெற்ற சுற்றுலா தொழில் பொருட்காட்சிகளிலும் சிறந்த முறையில் அரங்குகளை அமைத்து இந்து சமய அறநிலைய நிருவாகத்துறை பல பரிசுகள் பெற்றுள்ளது. இதன் விவரம் வருமாறு:—

[1984 ஏப்ரல் 10

| | |
|---|---|
| அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி, சென்னை. | 1983 ஜனவரி, மூன்றாவது பரிசு. |
| ஷை | 1984 மார்ச், முதல் பரிசு. |
| அரசினர் பொருட்காட்சி, சேலம். | 1983 ஆகஸ்ட், செப்டம்பர் மூன்றாவது பரிசு. |

18. திருக்கோயில்:

தமிழில் வெளியிடப்படும் 'திருக்கோயில்' என்ற மாத இதழ் சிறந்த முறையில் வெளியிடப்பட்டு இந்தியாவிலும், மற்றும் வெளிநாடுகளிலும் விரும்பிப் படிக்கப்படுகிறது.

19. பழநி நுண்கலை கல்லூரி:

நுண்கலைகளில் பட்டப் படிப்பைப் பெறுவதற்கும், கலைகளை ஆய்வு செய்வதற்கும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் சார்பில் நுண்கலைக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கான கோரிக்கையை அரசு ஏற்று நுண்கலைக் கல்லூரி அமைவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து கூறுவதற்கு புகழ் பெற்ற கல்வி, கலை வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

20. பள்ளிகளும், கல்லூரிகளும்:

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூக நலம் ஆகியவை பற்றிய கல்வி நிலையங்கள், பல சமய நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. அவை விபரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கலைக் கல்லூரிகள் (ஆடவர்) .. .. | 2 |
| 2. | கலைக் கல்லூரிகள் (மகளிர்) .. .. | 3 |
| 3. | பல்தொழிற்பயிற்சி பள்ளி (ஆடவர்) .. | 1 |
| 4. | பல்தொழில் பயிற்சிப் பள்ளி (மகளிர்) .. | 1 |
| 5. | மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 5 |
| 6. | உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. | 15 |
| 7. | நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5 |
| 8. | தொடக்கப் பள்ளிகள் .. .. | 3 |
| 9. | மெட்ரிகுலேஷன் பள்ளி .. .. | 1 |
| 10. | வேத ஆகம பாட சாலைகள் .. .. | 6 |
| 11. | தேவாரப் பாடசாலைகள் .. .. | 7 |
| 12. | தவில், நாதஸ்வரப் பள்ளி .. .. | 3 |



1984 ஏப்ரல் 10]

| | | |
|---|---|---|
| 13. | காது கேளாதோர், ஊமையர் பள்ளி .. | 1 |
| 14. | முதியோர் இல்லம் (அன்பு இல்லம்) .. | 3 |
| 15. | நூலகங்கள் .. .. .. .. | 202 |
| 16. | சித்த மருத்துவமனைகள் .. .. | 20 |
| 17. | ஆங்கில மருத்துவமனைகள் .. | 2 |
| 18. | முற்றிலும் திருக்கோயில் நிதியிலிருந்து நடத்தப்படும் அன்பு இல்லங்கள் .. | 7 |
| 19. | இருபத்தைந்து சதவீதம் அரசு மான்யத்துடன் நிர்வகிக்கப்படும் அன்பு இல்லங்கள் .. .. .. .. | 30 |

21. 25 சதவீத அரசு மானியத்தைக் கொண்டு அன்பு இல்லங்களைப் பராமரித்தல்:

கோயில்களின் ஆதரவில் 1,351 சிறார்களைக் கொண்ட (1,197 சிறுவர்கள் 154 சிறுமிகள்), 30 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர் இனச் செலவில் 75 சதவீதத்தை கோயில்கள் ஏற்றுக்கொள்கின்றன. எஞ்சிய 25 சதவீதத்தை அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1982–83-ஆம் ஆண்டில் 9.40 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

22. தமிழிசை வளர்ச்சி:

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், நாதஸ்வரத்திலும், தவிலிலும் ஒவ்வொரு துறையிலும் ஐந்து மாணவர்களுக்கு, நாதஸ்வரத்தில் மேற்பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 வீதமும், தவிலில் மேற்பயிற்சி பெறுவதற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும், மூன்று வேலையில்லாத தேவாரப் பயிற்சி பெற்ற ஓதுவார்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதமும் உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் ஒன்றினை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 1978-ஆம் ஆண்டில் ஒரு நாதஸ்வர மாணவரும், ஒரு தவில் மாணவரும், 1979ஆம் ஆண்டில் இரு நாதஸ்வர மாணவர்களும், மற்றும் இரு தவில் மாணவர்களும் மற்றும் 1980-ஆம் ஆண்டில் இரு நாதஸ்வர மாணவர்களும், இரு தவில் மாணவர்களும் ஆக, நாதஸ்வர மாணவர்கள் ஐந்து நபர்களும், தவில் மாணவர்கள் ஐந்து நபர்களும், இத்திட்டத்தின்கீழ் மேற்பயிற்சி பெற்று உதவித் தொகை பெற்று வந்தனர்.

இதில் ஒரு தவில் மாணவர் பயிற்சிக் சாலம் முடிவடைந்து விட்டதால், தற்பொழுது நான்கு மாணவர்கள் தவில் பயிற்சியிலும், ஐந்து மாணவர்கள் நாதஸ்வரப் பயிற்சியிலும் பயிற்சி பெற்று உதவித் தொகைகளும் பெற்று வருகின்றார்கள்.

இவை தவிர, தேவாரப் பயிற்சி பெற்று வேலையில்லாமல் உள்ள மூன்று ஓதுவார்கள் 1980–81-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவித் தொகையும் வழங்கப்பட்டு வந்தது. இதில் ஒரு தேவாரப் பயிற்சி பெற்ற ஓதுவார் பணியில் அமர்ந்துள்ளதால் தற்பொழுது இரண்டு ஓதுவார்களுக்கு மட்டும் உதவித் தொகை பெற்று அளிக்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகைகள் மேற்படியார்கள் வேலைக்கு அமரும் வரையில் தொடர்ந்து அளிக்கப்படும்.

## 23. திருக்கோயில்களில் தமிழ்ப் புலவர்கள் நியமனம் :

தற்பொழுது திருக்கோயில்களில் 41 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டு, தல வரலாறு தயாரித்தல், இந்து சமய சம்மந்தப்பட்ட சொற்பொழிவாற்றுதல் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்குப் பணி புரிந்து வருகின்றனர்.

## 24. சாதி பாகுபாடற்ற ஆகம பயிற்சிப்பள்ளி ஆரம்பித்தல்.

திருக்கோயில் அர்ச்சகராக பயிற்சி பெற விரும்புகிறவர்கட்கு, இந்த ஆண்டு சாதி பாகுபாடின்றி பயிற்சி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இது சம்மந்தமாக கல்விப் பயிற்சி, செயல்முறைப் பயிற்சி அளிப்பது, பயிற்சிக்கான சேர்க்கை விதிகள், பயிற்சிப் பாடத் திட்டம், தேர்வுத் திட்டம், பாடப் புத்தகங்கள் முதலியவற்றை வகுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அறிவுரைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

## 25. திருமடங்கள் நிருவாகத்தை சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

இம் மாநிலத்தில் உள்ள சில திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகள் குறித்து பொது மக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதால், திருமடங்களின் அலுவல்களை இந்து சமய அறநிலைய நிருவாகத்துறை ஆணையாளர், செவ்விய முறையில் மேற்பார்வையிட்டு கண்காணிக்க இயலும் வகையில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் சில விதித்துறைகளை திருத்த தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1981-ல் அரசு சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டு வந்தது. இச் சட்ட முன்வடிவின் (சட்ட முன்வடிவு எண் 64/81) நோக்கங்கள் வருமாறு :—

(1) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959), 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (13) பகுதியின்படி, '' மடம் '' என்பது சொத்துக்கள் உடையதாயிருப்பதும், தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருவதுமான இந்து சமய 'அறநிலையம் என்று பொருள்



படும். இப்பொருள் விளக்கத்தை மேலும் தெளிவுபடுத்த வேண்டி '' மடம் '' என்ற பொருள் விளக்கத்தில் ,,'' சொத்துக்கள் உடைய'' என்பதற்கு பதிலாக '' சொத்துக்கள் உடையதாயுள்ள அல்லது இல்லாமலுள்ள '' என்பதையும் தேவையான பிற வரைவுத் திருத்தங்களையும் அமைத்துக் கொள்வதன் மூலம் அப்பொருள் விளக்கத்தை விரிவு படுத்துவதெனக் கருதப்பட்டுள்ளது.

(2) தற்போதுள்ளவாறு, இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் வரம்பிற்குள் மடங்களும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிடத் தக்க அறநிலையங்களும் சேர்க்கப்படவில்லை. இப்பிரிவின் வரம்பிற்குள் மடங்களையும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க அறநிலையங்களையும் சேர்ப்பதற்கு மேற்சொன்ன பிரிவைத் தக்கவாறு திருத்துவதென கருதப்பட்டுள்ளது.

(3) ஒரு சமய அறநிலையத்திற்கு, குறிப்பிட்டதொரு நோக்கத்திற்காக ஒதுக்கக் கருதியுள்ள நிதி மொத்தத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படும் நேர்விலும் மற்றும் குறிப்பிட்ட செயல் நோக்கத்திற்காக ஒரே நேரத்தில் ஒதுக்கக் கருதியுள்ள நிதி இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மேம்படும் போதும் அதற்கு ஆணையாளர், அரசிடம் முன்னதாக இசைவு பெற வேண்டும் என்று வகை செய்யும் புதிய விதித்துறையைச் சட்டத்தின் தற்போதுள்ள 36 ஆம் பிரிவில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

(4) இம் மாநிலத்திலுள்ள மடங்களில் நிருவாகத்தைத் திறமையாக மேற்பார்வை செய்ய இந்து சமய அறநிலைய நிருவாகத் துறை ஆணையாளருக்கு அதிக அதிகாரங்களை அளிக்கும் பொருட்டு, சட்டத்தின் தற்போதுள்ள 59 ஆம் பிரிவுக்குப் பதிலாக 59, 59-ஏ என்னும் புதிய பிரிவுகளையும் 60-ஏ என்னும் புதிய பிரிவையும் அமைத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதன் விளைவாக இச்சட்டத்தின் 60 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பப்பட்டது. இது குறித்து தமிழ்நாட்டிலிருந்து சிலர் ஆட்சேபணை மனுக்கள் மத்திய அரசிற்கு நேராக அனுப்பினர். அவைகள்மீது மாநில அரசின் விளக்கங்களை மத்திய அரசு கோரியது. தமிழக அரசின் விளக்கங்கள் மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்திற்கு குடியரசுத் தலவரின் ஒப்புதல் வர வேண்டியிருக்கிறது.

இது தொடர்பாக, மத்திய அரசு குஜராத் மாநில உயர் நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பினைச் சுட்டிக் காண்பித்து மேலும் சில விவரங்களைக் கோரியுள்ளது. அவ்விவரங்கள் விரைவில் சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

26. அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம்.

சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் இந்தியாவிலேயே மிகப் பழமையான புகழ்வாய்ந்த கோயிலாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறையின் கட்டுப் பாட்டின்கீழ் உள்ளது. 1393-ஆம் விளைச்சல் ஆண்டில் இக் கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 42,248 என்று மதிப்பிடப் பட்டதின்பேரில் இக்கோயில் அறநிலையத்துறைக்கு உதவித் தொகையும், தணிக்கைக் கட்டணமும் செலுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது.

பொது தீட்சிதர்கள் கோயில், சொத்துக்களைத் தொடர்ந்து நிருவகித்து வந்ததன் காரணமாக, கோயில் நிருவாகத்திலுள்ள பல்வேறு முறைகேடுகளைச் சுட்டிக்காட்டியும் இந்து சமய அற நிலையச் சட்டத்தின் 45-ஆம் பிரிவின் கீழ் நிருவாக அதிகாரியை நியமிக்குமாறு ஆணையிட்டும் ஆணையாளர் பொது தீட்சிதர் களின் செயலாளருக்கு அறிவிப்பு அனுப்பினார்.

பொது தீட்சிதர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். உயர்நீதிமன்றம் ஆணை யாளரின் நடவடிக்கைக்குத் தடையாணை விதித்துள்ளது.

மேற்படி ஆலய நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு அதற்குத்தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக தக்க பரிந்துரைகள் செய்ய ஒரு குழு அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

27. தேரழுந்தூரில் கம்பர் கோட்டம் :

1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்து முன்னாள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் ஆற்றிய உரையில், கம்பர், வள்ளலார், போன்ற தமிழின சான்றோர்களுக்கு நினைவுச் சின்னம் சென்னையில் அமைக்கும் அரசின் முடிவினை அறிவித்தார். கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரில் நினைவா லயம் அமைக்க, 29 ஆண்டுகளுக்கு முன் முன்னாள் ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா 10—10—1954-ல் அடிக்கல் நாட்டி அதே நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லாது நின்றுவிட்ட திட்டத்தைப்புதுப்பித்து அவர் நினைவைப் போற்றும் வகையில் கோட்டம் அமைக்க அரசு முடிவுசெய்து முன்னாள் ஆளுநர் அடிக்கல் நாட்டிய அதே இடத்தில் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான 1 ஏக்கர் 10 சென்ட் நிலத்தில் ரூ. 20 லட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமான கழகத்தின் மூலமாக இந்தப் பணியை முடிக்கக் கருதி 18-3-1984 அன்று பணி துவக்கப்பட்டது.

இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளை தொடர்ந்து அவை நிறுவப்பட்ட காலத்தில் இருந்த உன்னத நிலையில் பேணிப்பாதுகாக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2793

வெளியீடு 16-11-84] [Issued 16-11-84

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
- 6 MAR 1985
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 11, 1984 - தொகுதி LXV எண் 2

Wednesday, the 11th April 1984 - Volume LXV No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

உள்ளடக்கம்

11—4—1984.


பக்கங்கள்

1. ஒத்திவைப்புத் தீர்மானம் :
தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டத்தில் காலரா பரவுவதைத் தடுப்பது .. .. .. .. .. 143—153

2. தகவல் கோரல் :
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 153—156

3. வரவு-செலவுத் திட்டம் (1984-85) வாக்கெடுப்பு—தொடர்ச்சி:
(அ) கோரிக்கை எண் 12 — தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் — சட்ட நிர்வாகம்—(தொடர்ச்சி) .. .. .. .. 156—209

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. 156—206

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். 165—167, 171—178, 189—194, 206—205

(ஆ) கோரிக்கை எண் 35 — நுகர்பொருள் வழங்கல் .. .. .. .. 210—226, 231—255

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்... .. .. .. 210—211, 237—255

திருமதி டி. யசோதா. .. .. .. 211—217

திரு. ஏ. எம். சேதுராமன் .. .. .. 217—222

திரு. பி. முகமது இஸ்மாயில் .. .. 222—226

திரு. என். எஸ். வி. சித்தன். .. .. 231—237

4. அறிக்கை அளித்தல் :
106-வது விதியின்கீழ் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத அலுவலர்கள் ஆகியோரது கோரிக்கைகள் குறித்த அறிக்கை. 226—231

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 257—259

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1984, ஏப்ரல் 11, புதன்கிழமை**
**பங்குனி 29, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

'' பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை ''

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அற நூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் காலரா பரவுவதைத் தடுப்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் செ. இராமலிங்கம், இரெ. இராசமாணிக்கம், இ. எஸ். எம். பக்கீர் முகமது, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. அப்பாதுரை, செ. சிவசாமி, டி. மணி, எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், சோ. அழகர்சாமி, தி.கா. நல்லப்பன், இரா. கருப்பையா பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், ப. பொன்னுரங்கம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியோர், '' திருவிடைமருதூர் வட்டம் தேப்பெருமாநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த அம்பாசமுத்திரம், கரிக்குளத் தெரு, ஐந்து தலைப்பு வாய்க்கால் தெருவில் காலரா நோய் பரவி 7–4–1984 அன்று குடந்தை மருத்துவ மனையில் 2 பேர் இறந்து விட்டது பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது குடந்தை பகுதியில் குறிப்பாக கும்பகோணம், திருவிடைமருதூர் தொகுதியில் ஏராளமானவர்களுக்கு காலரா நோய் கண்டு 20-க்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளதாகச் செய்திகள் வந்து இருக்கின்றன. நேற்றைய தகவல்படி 200-க்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பல கிராமங்களில் தொடர்ந்து காலரா நோய் பரவிக் கொண்டிருக்கிறது என்று அங்கிருந்து செய்திகள் மூலமாக தகவல்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இந்த நேரத்தில் இதை மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகளாக தமிழகத்தில் காலரா நோய் ஒழிக்கப்பட்டது என்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் ஒரே நேரத்தில் பல கிராமங்களில் காலரா நோய் காணக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணம், தேப்பெருமாநல்லூர், மேலபுளியம்பாடி, ஆடுதுறை, திருப்புவனம், திருவிடைமருதூர், அம்பாசத்திரம், சுந்தரபெருமாள் கோவில், நீரத்தநல்லூர், தாராசுரம் ஆகிய பகுதிகளிலும் அதனுடைய சுற்றுப் பகுதிகளிலும் காலராநோய் கண்டு இருப்பதாக பலர் செய்திகள் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். இப்படி ஒரே நேரத்தில் இவ்வளவு கிராமங்களில் காலரா நோய் கண்டு இருப்பதற்கு என்ன காரணம் என்று நாம் எண்ணிப் பார்க்கும் போது சமீபத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட கிராமங்களில் சுகாதாரப் பணி சரியாக நடைபெறவில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பெரு மழை பெய்தபோது ஏராளமான குடிசைகள், குடிநீர் ஆதாரங்கள் உள்ள குளங்களும் இந்த பெரு மழையினால் பாதிக்கப்பட்டன. அந்த நேரத்தில் தற்காப்பு நடவடிக்கைகள் முறையாக எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமையாகும்.

அதோடு மட்டும் அல்லாமல் சில தினங்களுக்கு முன்னால் கும்பகோணம் அருகில் உள்ள சுவாமிமலை முருகனுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடைபெற்ற அன்றைய தினம் ஏராளமான மக்கள் அங்கு குழுமி இருந்தார்கள். கும்பாபிஷேக தினத்தன்று சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக செய்யப்படவில்லை என்று பொது மக்கள் சார்பில் சொல்லப்படுகிறது. அப்படி சுகாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்குமானால் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்திலிருந்து அங்கே காலரா நோய் காணுவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இருக்காது என்பது தான் என்னுடைய கருத்தாகும். அன்றைய தினம் காலரா நோய் தடுப்பு ஊசி போடுவது, அதற்கான



நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது போன்ற சுகாதார நடவடிக்கைகள் சரியாக எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு சென்று இருந்தார்கள். அன்றையதினம் முறையாக சுகாதார நடவடிக்கைகள் அரசின் சார்பில் எடுக்கப்பட்டு இருக்குமானால் இப்படி அதனுடைய சுற்றுப்புறப் பகுதிகளில் அன்றிலிருந்து உடனடியாக இப்படிப்பட்ட காலரா நோய் காணுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்து இருக்கும். ஆகையினாலே, சுகாதார நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்ததற்கான காரணங்களை அமைச்சரவர்கள் அறிந்து, முறையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறப் பகுதிகளில் சுகாதாரக் குறைவின் காரணமாக ஏராளமான நோய்கள் தற்போது பரவிக்கொண்டு இருக்கின்றன.

அடுத்து, கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற விஷயத்தைப்பற்றி மட்டும் பேசி முடிக்க வேண்டும். ஏற்கனவே கேள்வி நேரத்தையேகூட ஒத்திவைத்திருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை. பல ஆண்டுகளாகக் கொசு மருந்து அடிக்கப்படவில்லை. நோய் வந்தபிறகு நடவடிக்கை எடுப்பதைவிட, வருமுன் காப்பது என்ற முறையில், பொது மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு தருவது முக்கியம் என்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சுகாதாரக் குறைவு ஏற்பட்டு, இப்படிப்பட்ட பயங்கரமான காலரா நோய் போன்ற தொத்து நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி, அதுகுறித்து இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும் விவாதிக்கும் வகையில் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, குடந்தை நகரத்திலும், அதன் சுற்றுப் புறத்திலுள்ள கிராமப்புறங்களிலேயும் காலரா என்ற கொடிய

நோய் பரவி, அதனால் மக்கள் அவதிப்பட்டு, சிலபேர் இறந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அமைச்சர்கூட, நேற்று கேள்வி நேரத்திலே பதில் சொல்லும்பொழுது மூன்று மணி நேரம் குடந்தை சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளோடு தொலைபேசி மூலம் கேட்டறிந்திருக்கிறேன் என்றும் பதில் சொன்னார்கள்.

இருந்தாலும், சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையின் காரணமாக விஷக் கிருமிகள் உற்பத்தியாகி இருக்குமோ என்ற அச்சம் பொதுமக்களிடத்திலே இருக்கிறது. குடந்தை நகரத்தில் பரவியிருக்கின்ற இந்த நோய், குடந்தைக்குப் பக்கத்தில் இருக்கின்ற பகுதிகளுக்கும் குறிப்பாக திருவிடைமருதூர் பக்கத்தில் இருக்கின்ற ஊர்களுக்கும் வரக்கூடிய அபாய அறிகுறி இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குடந்தைப் பகுதியில் தோன்றியிருக்கின்ற பரபரப்பான நிலைமையைத் தவிர்ப்பதற்காக டாக்டர்கள் அடங்கிய குழு ஒன்றை உடனடியாக அந்தப் பகுதிக்கு அனுப்பி வைத்து, அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தை அரசினர் மருத்துவமனையில் இதற்காகத் தனியிடம் ஒதுக்கி, நல்ல டாக்டர்களை அமைத்துத் தந்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது முக்கியமான பிரச்னை என்பது டாக்டராக இருக்கிற அமைச்சரவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதைப் போல, கொசுத் தொல்லை ஏராளமாக இருக்கின்றது. கொசுக்களை ஒழிப்பதற்காக அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட, இன்னும் அதிகமான அளவிற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கும்பகோணம் வட்டாரத்தில் ஏற்பட்டிருக்கின்ற காலரா நோயை தடுத்து நிறுத்துவது குறித்து விவாதிப்பதற்காக அவையின் இன்றைய அலுவல்களை ஏன் ஒத்தி வைக்க வேண்டும் என்பது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





கும்பகோணத்தை ஒட்டியுள்ள பகுதிகளிலே மட்டும் இந்த காலரா நோய் பரவியிருக்கின்றது என்று சொல்வது சரியாக இருக்கமுடியாது. ஏனென்றால், முதலிலே கும்பகோணத்திலே ஆரம்பித்து, பிறகு அதையொட்டி உள்ள மற்றப் பகுதிகளுக்கும் பரவுகின்ற அபாயம் இருக்கின்றது. இந்த வியாதி ஒரு தொற்று நோய் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். ஏனென்றால், அவர்கள் ஒரு டாக்டர். எனவே, அவர்களுக்கு இதுபற்றி தெரியும்.

இந்தத் தொற்று நோய் ஆனது, கும்பகோணத்தில் ஆரம்பித்து அண்ணல் அக்ரசாரம் போய், தாராசுரம் போய், நீலநல்லூர் போய், சுந்தரப்பெருமாள் கோவில் போய், அம்மா சமுத்திரம் திருவிடைமருதூர், திருபுவனம், ஆடுதுறை மேல் புளியம்பட்டி, தேப்பெருமாநல்லூர் ஆகிய இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் போய்— அப்படி இந்தக் கிராமங்களுக்குப் போனதோடு நிற்கவில்லை— இன்னும் பல கிராமங்களுக்கும் பரவியிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நேற்றைக்குக் கிடைத்த செய்தியின்படி இன்னும் பரவுகின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்று தெரிகிறது.

கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்கிறேன். அது குறித்து, கும்பகோணத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. கும்பகோணம் ஏற்கனவே கொசுவிற்குப் பெயர் பெற்ற இடம். இந்தக் கொசுக்களின் காரணமாக இந்த நோய் வருவதற்குப் பல்வேறு ஆரம்ப நிலைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். இந்த நிலைமையைக் காலாகாலத்தில் தடுத்து நிறுத்தாவிட்டால், இந்த நோய் தற்பொழுது பரவியிருக்கின்ற இந்தக் கிராமப்புறங்களோடு மட்டும் நிற்காமல் தஞ்சை மாவட்டம் பூராவும் பரவுகின்ற அபாயம் இருக்கிறது. இதை காலாகாலத்தில் தடுத்து நிறுத்தாவிட்டால் தஞ்சை மாவட்டத்தோடு மட்டும் நிற்காமல் தமிழ்நாடு முழுவதும் பரவுகின்ற அச்ச நிலைமை இருக்கிறது. எனவே, இதில் முன் ஜாக்கிரதையுடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். தை மாதப் பேதியில் தப்பாமல் சாவாய் என்று சொல்லுவார்கள். ஏனென்று சொன்னால், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் அடைமழை பெய்யும். அதற்குப் பிறகு இந்த நோய் பரவுவதற்கான அறிகுறிகள் ஏற்படும்.

ஏற்கெனவே, தஞ்சை மாவட்டத்தில் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. பிறகு மற்ற மாவட்டங்களுக்கும் அது பரவியது. எனவே, இந்த வெள்ளச் சேதத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் காலாகாலத்தில் தடுத்து நிறுத்தாத நிலைமை ஏற்பட்டால், இந்த நோய் மற்ற மாவட்டங்களுக்கும் பரவுகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் உயிர்ச் சேதமும் ஏற்படும். எனவே இப்படிப்பட்ட உயிர்ச் சேதம் ஏற்படுகின்ற செயலைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் இருப்பதால், இதுகுறித்து விவாதிப்பதற்காக அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–10)

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதி திருவிடைமருதூர் பகுதி போன்ற இடங்களில் காலரா நோய் பரவி சுமார் 20-க்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கின்றது. இந்த காலரா நோய் தமிழகம் முழுவதும் பரவி விடாமல் தடுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

முன்பெல்லாம் காலரா நோயினுடைய அறிகுறி தென்பட்டவுடனேயே அந்தந்த ஊரிலே உள்ள தலையாரி மற்றும் கிராம அதிகாரிகள் உடனே சம்பந்தப்பட்ட ஹெல்த் இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுத்து, அந்த நோய் பரவாமல் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ தலையாரிகளும், கிராம அதிகாரிகளும் என்ன வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதே புரியவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதிகளிலே உள்ள கிராம அதிகாரிக்குத்தான் பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கின்றது. அவர்கள் கொடுக்கின்ற தகவலின் பேரில்தான் காலரா போன்ற நோய்களைத் தடுக்கக்கூடிய முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் பரவுவதற்குக் காரணம் இன்றைக்குக் கிராமப்புறங்களிலே சுகாதாரக் கேடு அதிகமாக நிலவுவதுதான். சாக்கடைத் தண்ணீர் போவதற்கு இடம் இல்லாமல் தெருக்களிலே தேங்கி அவற்றிலே ஏராளமான கொசுக்கள் உற்பத்தியாகி அவற்றின் மூலமாக காலரா நோய் பரவுகின்றது என்று பரவலாகச் சொல்லுகிறார்கள்.



எனவே, கிராமப் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் அதன் மூலம் காலரா போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் உரிய வழிவகைகள் பற்றி ஆராய்வதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் பகுதியில் 200 பேர் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு 10 பேர் இறந்திருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக கும்பகோணத்தில் திருவிழாக் காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் வருவார்கள் என்று தெரிந்து முன்கூட்டியேகாலரா தடுப்பு நடவடிக்கைகளை முன்பெல்லாம் எடுத்து இருக்கிறார்கள். அப்படி உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் உயிர்ச் சேதங்களைத் தடுத்திருக்க முடியும்.

தஞ்சை மாவட்டத்திலே பெய்த மழை காரணமாக மாடுகள் இறந்து, மற்றும் பல்வேறு உயிர்கள் இறந்து அந்தக் கழிவுகள் எல்லாம் குளத்திலே தேங்கிவிட்டன. நான் கூட சென்ற வாரத்தில் என்னுடைய தொகுதிக்குப் போயிருந்தபோது திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் சின்னக் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு வந்ததாகக் கொண்டு வந்திருந்ததைப் பார்த்தேன். அப்போது காலரா என்று, தெரியவில்லை. கொசுக்களும் பரவலாக அதிகமாக ஏற்பட்டு அதன் காரணமாகவும் காலரா நோய் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது கும்பகோணம் என்ற அளவிலே மட்டும் நின்றுவிடாமல் மன்னார்குடி, குமாரசாமி கோயில் போன்ற பகுதிகளுக்கும் பரவி விடுகின்ற அபாயம் இருக்கின்றது. ஏனென்றால், அங்கெல்லாம் கடந்த 4 தினங்களாக பெரிய திருவிழா நடந்து கொண்டிருக்கின்றது. அங்கேயும் இலட்சக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த காலரா நோய் தஞ்சை மாவட்டம் முழுவதும் பரவாமல் தடுக்கவும், உயிர்களைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேபோன்று அம்மை நோயும் தஞ்சை மாவட்டத்தில் மிகப் பலமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. முன்பெல்லாம் இப்படி காலரா, அம்மை நோய் போன்றவை வரக்கூடிய காலங்கள் பற்றி முன்கூட்டியே அறிந்து அதைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் சுகாதார அதிகாரிகளும், மருத்துவர்களும் வேகமாக இறங்குவார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படிப்பட்ட வேகமான நடவடிக்கைகள் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது கும்பகோணத்தில் ஏற்பட்ட காலரா

நோய் காரணமாக 10 பேர் இறந்து உயிர்ப்பலி ஏற்பட்டிருக்கின்றது. எனவே இந்த நோய் மேலும் தஞ்சை மாவட்டம் முழுவதும் பரவாமல் தடுக்கின்ற வகையிலும், மக்களின் சுகாதாரத்தைப் பேணுகின்ற வகையிலும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருப்பது பற்றிய மேலும் பல விவரங்களைப் பேச வேண்டி இருப்பதால் இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு **டாக்டர் எச். வி. ஹண்டே**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடல் அழர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 4-4-1984 முதல் 10-4-1984 வரை 177 பேர்கள் கும்பகோணம் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 3 பேர்கள் இறந்துவிட்டார்கள். இந்த 177 பேர்களில் 136 பேர்கள் கும்பகோணம் நகராட்சி எல்லைக்குள் இருந்தும் 41 பேர்கள் நகராட்சி எல்லைக்கு அப்பாலிருந்தும் வந்திருக்கிறார்கள்.

7-4-1984 அன்று தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் பெருமாநல்லூர் கிராமத்தில் காலரா நோய் பரவுவதைப் பற்றி தகவல் கிடைக்கப் பெற்றதும், சுகாதார ஆய்வாளர் ஒருவர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 7-4-1984 அன்றே நிலைமையைத் தெரிந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டார். அன்றே சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை இயக்குநர், தஞ்சாவூர் மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களுக்குப் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு தந்தி மூலம் அறிவுரை அனுப்பியுள்ளார். குழாய்களுக்கு அடியிலுள்ள குழிகளில் 'சோக் பிட்' பைப் பக்கத்திலே குழிகளில் சேகரிக்கப்பட்டு இருக்கக்கூடிய தண்ணீரை, அங்கே இருக்கக்கூடிய பகுதி மக்கள் தெரியாமல் உபயோகப் படுத்தி இருப்பது இந்த நோய் பரவுவதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. அங்கே தண்ணீர் இருந்திருந்தாலும்கூட, "சோக்" தண்ணீரைத் தெரியாமல் குடித்து விட்டார்கள். கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இந்தப் பகுதிகளில் எடுக்கப்பட்டு உள்ளன :—

9-4-1984 வரை 4,500 நபர்களுக்கு இந்தப் பகுதிகளில் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மருத்துவ மனையிலிருந்து 12 மருத்துவர்கள் கொண்ட ஒரு குழு பாதிக்கப் பட்ட நபர்களுக்கு இன்ட்ரா வீனஸ் புளுயிட் குளுக்கோஸ் கொடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். வயிற்றுப் போக்கு மற்றும் காலரா போன்ற நோய்களால் ஏற்படும் நீர் இழப்பைச் சரிக்கட்டுவதற்காக உப்பு கலந்த கரைசலை தயாரிக்கும்





பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மருத்துவமனை களுக்குள் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தனியாக இடம் போடப் பட்டது. பாதிக்கப்பட்ட இடங்களில் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டது. அந்த இடங்களுக்கு பாது காக்கப்பட்ட குடிநீர் வண்டிகளின் மூலம் விநியோகிக்கப் படுகிறது. கடலூரில் முகாமிட்டிருந்த துணை இயக்குநர்— அந்த மண்டலத்திற்கு அவர்தான் தலைவர் டி. பி. எச்.-க்கு அடுத்து—ஒருவர் உடனடியாக அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டு தொத்துநோய் தடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறார். மற்றொரு துணை இயக்குநர் எல்லாவிதமான தடுப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு, அன்றாட நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கு அந்த இடத்திலேயே அவர் ஸ்டேஷன் செய்யப் பட்டிருக்கிறார்.

9-4-1984 அன்று கடலூரிலிருந்து கும்பகோணத்திற்கு 5 நபர்கள் கொண்ட ஒரு குழு போதிய மருந்துகளுடனும் தடுப்பு ஊசிகளுடனும் அனுப்பப்பட்டது. மேலும் திருவாரூர் மாவட்ட சுகாதார அதிகாரி (Health Unit District) அவர் களை, 5 சுகாதார ஆய்வாளர்களைக் கொண்ட ஒரு குழு வினைக் கும்பகோணத்திற்கு அனுப்பும்படி தந்திமூலம் அறி வுரை அனுப்பப்பட்டது. தஞ்சாவூர். மற்றும் திருவாரூர் மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்குச் சுற்றுவட்டாரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள 15 மருத்துவர்களை காலரா தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்காக கும்பகோணத் திற்கு அனுப்பும்படி தந்திமூலம் அறிவுரை வழங்கப்பட்டுள் ளது. கும்பகோணம் நகராட்சி எல்லைக்குள் காலரா தடுப்பு ஊசி போடுவதற்கு 6 குழுக்களும் புறநகர் பகுதிகளில் உள்ளவர் களுக்குத் தடுப்பு ஊசி போடுவதற்கு 2 குழுக்களும் நிறுவப் பட்டுள்ளன. 60,000 பேர்களுக்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தலைமை நீர் பகுப்பு ஆய்வாளர் தலைமையில் ஒரு குழு வேண் டிய கருவிகளுடன் தண்ணீரை அதே இடத்தில் பரிசோதனை செய்து நல்ல குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய முறைகளை எடுத்துரைப்பதற்கு கும்பகோணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் முன் கூட்டியே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று குறை பட்டுக் கொண்டார்கள். நாம் என்ன செய்திருக்கிறோம் என்ற முழு குறிப்புகளும் என்னிடத்திலே இருக்கின்றன. மழை பெய் வதற்கு முன்பாகவே ஒரு கிராஃப் போடுகிறோம். மழை எப் பொழுது பெய்யக் கூடும் என்று டி. பி. எச். துறை ஒரு கிராஃப் போடுகிறது. எந்த, எந்த ஆண்டு எப்படி மழை பெய்கிறது

என்று கிராஃப் போட்டு, ஆன்ட்டிசிபேட்டரி மெஷர்ஸ் என்று முன்கூட்டியே நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதனுடைய விளைவாக இன்றைய தினம் பயங்கரமான ஆபத்துக்கள் பல்வேறு இடங்களிலே தடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவில்களிலே நடைபெறுகிற கும்பாபிஷேகத்திற்கு வந்திருக்கக்கூடிய மக்களுடைய நெரிசலால் ஏற்பட்டது என்று குறைபட்டுக் கொண்டார்கள்.

(முற்பகல் 9–20)

அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நான் உங்களுக்கு ஆதாரபூர்வமாக சொல்ல முடியும். இப்படிக் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன என்றால் உடனடியாக ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை அனுப்பி இனாகுலேஷன் மெஷர்ஸ் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். சில ஆண்டுகளாகவே பார்த்தால் எந்த உற்சவத்தின் போதும், திருவிழாவின் போதும் எந்த இடத்திலும் காலரா கேசோ மற்ற எந்த கேசோ எதுவுமே வரவில்லை. இந்த இடத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் அங்கே சோக்-பிட் பகுதியில் இருக்கக்கூடிய தண்ணீரை தெரியாமல் குடித்து விட்டார்கள். அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்தக் கூடாது என்று திட்டவட்டமாக நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கூட தெரியாமல் அப்படியே குடித்து விட்டு இருக்கிறார்கள். அதனால் ஏற்பட்டிருக்கிற Gastro-enterities இதை காலரா என்று கூட சொல்வதற்கில்லை. Acute Gastro-enterities அதற்கு A. G. E. என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் 3 பேர்கள் இறந்து இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு குடந்தை ராதா அவர்களும், நம்முடைய குடந்தை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் உடனடியாக என்னிடத்தில் தொடர்பு கொண்டார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய நேரத்தில் அந்தப் பகுதியினுடைய நிலைமைகளை புரிந்து கொண்டு மிக நல்ல வகையில் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். இன்னமும் கூட நான் சொல்ல விரும்புகிறேன். பேதி வந்த உடனே தண்ணீர் குடித்து விட்டால் தண்ணீர் தாகமே போய் விடும்; அப்படியே தண்ணீராக போய் விடும் என்று பொது மக்களிடத்தில் ஒரு பயம் இருக்கிறது. அந்தத் தவறான பயம் இருக்கிறதால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த மூன்று பேர்கள் கூட இறந்திருக்கத் தேவையில்லை. எவ்வளவோ பிரச்சாரம் நாம் செய்து கொண்டிருக்கிறோம். 'ஓரல் ரீஹைட்ரேஷன்' என்று; அதைப் பிரச்சாரம் செய்தாலும் கூட இன்னும் பிரச்சாரம் மக்களிடத்திலே



போய் முழுமையாக எட்டவில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது. தண்ணீரைக் குடிக்காமல் பயந்து கொண்டு இருந்தார்கள். அதனால் 'ரீஹைட்ரேஷன்' வந்தது. உடனடியாக எல்லோருக்கும் Oral-re-hydration கொடுத்தது மட்டுமல்லாமல் Parental injection மூலமாக re-hydration கொடுத்திருக்கிறோம். எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். தினமும் நான் சொல்கிறேன். அகில இந்தியா மட்டுமல்லாமல் Third World என்று சொல்லக்கூடிய பிற்பட்ட நாடுகளுடைய நிலைமையை டபிள்யூ எச். ஓ. பார்த்துக் கொண்டிருக்கிறது. டபிள்யூ. எச். ஓ. நம்முடைய பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மென்டின் பணிகளைப் பற்றி தெளிவாக எடுத்து பாராட்டிய கடிதங்களை எல்லாம் மானியக் கோரிக்கை வருகிறபோது நான் படித்துக் காட்டுகிறேன். ஆகவே முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று கற்பனை செய்து சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இருந்தாலும் கூட உங்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எல்லாவிதமான நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு தடுப்பு ஊசி போடுவதற்கு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே துணைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் மற்ற ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களும் 'மன்ற முரசு' என்ற பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை கொடுத்திருந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;** அது ஆய்விலே இருக்கிறது. அதற்கு நான் இன்னும் கன்சன்ட் கொடுக்கவில்லை.

You can take a chance to-morrow

திரு. நா. சுந்தரராஜ் : 31 ஆம் தேதியே கொடுத்தோம் நேற்றைக்கு இதுபற்றி கேட்டோம். நாளைக்கு அதாவது இன்றைக்குச் சொல்வதாகச் சொன்னீர்கள். சாதாரணப் பிரச்னையாக இருந்தால் இவ்வளவு பிரஸ் செய்ய மாட்டேன். அது முக்கியமான பிரச்னை. அதனால் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்னை பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. பேரவைத் தலைவரின் அனுமதி கிடைத்தபின்தான் அதை நீங்கள் அவையில் எழுப்ப முடியும்

திரு. நா. சுந்தரராஜ் : ஓர் உறுப்பினர் ஒரு உரிமை மீறல் பிரசனையைக் கொடுத்தால் அதை ஒரு மிக முக்கிய பிரச்சினை யாகக் கருதி அவையில் அதற்கு முன் உரிமை கொடுத்து விவா தத்திற்கு எடுத்துக்கொள்வது என்பது ஒரு மரபு. 31 ஆம் தேதி அன்றே நான் கொடுத்துவிட்டேன். இன்று தேதி 11. இவ்வளவு நாட்களுக்குப் பின்னால்கூட இன்னும் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னால் அது என் உரிமையை மட்டு மல்ல........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளைக் காலையில் அவை ஆரம்பிக்கும்போது, அது பற்றி உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : இன்றைக்கு எடுத்துக் கொள்ள முடி யுமா, முடியாதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் கன்செண்ட் கொடுத்த பிறகுதான் எதையும் இங்கே எழுப்ப முடியும். இதுபற்றிய முழு விவரங்களும் பேரவைத் தலைவர் அவர்களுக்குத்தான் தெரியும். பேரவைத் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பிறகு அவர்களது முடிவிற்கேற்ப அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதை பார்த்துத்தான் இதுபற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும். எடுத்துக் கொண்டே தீர வேண்டும் என ஓர் உறுப்பினர் அவைக்கு தலைமை தாங்கு பவரை வற்புறுத்த இயலாது. இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்வதா வேண்டாமா என்பது பேரவைத் தலைவர் அவர்கள்





தீர்ப்பு அளிப்பதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே வந்து இதுபற்றி முடிவு எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொன்ன கருத்தைத் தான் அவை முன்னவர் அவர்களும் சொல்லி இருக்கி றார்கள். பேரவைத் தலைவர் கன்சன்ட் கொடுத்த பிறகு தான் அவையில் அதை ' ரெயிஸ் ' செய்யலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்கள் வெளி ஊர் போயிருப்பதால் இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று கூற முடியாது. பேரவைத் துணைத் தலைவர் அவர் களுக்கு இதுபற்றி தெரியாது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் இருக்கி றார், துணைத் தலைவருக்குத்தான் முழுப் பொறுப்பு. செயலகம் செயலாற்றிக் கொண்டுதானிருக்கிறது. அந்த முறையில்தான் அவை நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே பேரவைத் தலைவர் அவர்கள் இருந்தாலும் சரி அல்லது துணைத் தலைவர் அவர்கள் இருந்தாலும் சரி, அல்லது மாற்றுத் தலைவர் இருந்தாலும் சரி அந்த முறை பின்பற்றப்படுவதுதான் மரபு. ஆகவே இந்தப் பிரச்னையை இப்போது எழுப்பக் கூடாது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவர் கன்செண்ட் கொடுத்த பிறகுதான் ரெயிஸ் செய்ய முடியும்.

திரு. நா. சுந்தரராஜ் : கன்செண்ட் கொடுக்கப்படுமா, இல் லையா என்பதை இப்பொழுதே சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி வற்புறுத்தாதீர்கள். You cannot compel the Chair.

திரு. நா. சுந்தரராஜ் : எங்கள் உரிமை பறிக்கப்படுகிறது என்பதைத்தான் சொல்கிறேன். நாங்கள் * * வர வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடு கிறேன். Let us follow some procedure. After Adjournment motion you cannot raise this issue. There is a procedure, there is a convention We cannot violate it.

1984 ஏப்ரல் 11]

Thiru N. SUNDARARAJ: There is convention, we have go precedents also.

MR. DEPUTY SPEAKER: You cannot raise it in the House. it is against the procdure.

Thiru N. SUNDARARAJ: What is the basis on which I can aise it now?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவரின் அறையில் அவரைச் சந்தித்து எழுப்புவதற்கு அனுமதி கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் இதற்கு என்ன முடிவு? நான் ஏற்கனவே சொல்லி விட்டேன்; இப்போதும் சொல்கிறேன். இன்று எடுக்க முடியாது. கன்சன்ட் கொடுக்க வில்லை. கன்சன்ட் கொடுத்த பிறகு அவையில் எழுப்பலாம் என்று சொல்லி விட்டேன். அதற்குப் பிறகும் அதை வற்புறுத்து வது சரியல்ல.

திரு. நா. சுந்தரராஜ்: எங்களுடைய உரிமை மறுக்கப் படுகிற காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாருடைய உரிமையும் மறுக்கப்படவில்லை. எந்தப் பிரச்னையானாலும் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகே அவையில் எழுப்ப முடியும் என்றுதான் தெரிவித்தேன்.

(முற்பகல் 9-30.)

3. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்—தொடர்ச்சி.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே அறநிலையத் துறையின் சார்பில் வைக்கப்பட்டிருக்கிற மானிய

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1984 ஏப்ரல் 11] திரு. ஆர். எம். வீரப்பன்]

கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கட்சி களைச் சார்ந்தவர்கள், 10 பேர்கள் இங்கே தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். பொதுவாக அறநிலையத் துறை என்பது கடந்த காலத்திலே கவனிக்கப்படாத ஒரு துறையாகவும், இருள் கப்பிய ஒரு துறை யாகவும் இருந்த சூழ்நிலை மாறி, இன்றைக்கு எல்லோருடைய கவனத்தையும் அது கவருகின்ற வகையில், சர்க்கின்ற வகையில், மன்றத்திலே சூடாகவும், சுவையாகவும் விவாதம் நடைபெறு கின்ற வகையில் இந்தத் துறை தன்னுடைய பணிகளை மக்கள் மன்றத்திலே இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது என்பது ஒன்றே மாண்புமிகு முதலவர் டாக்டர் புரட்சித் தலை வர் அவர்கள் அரசினுடைய நிர்வாகத்திற்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள், குறிப்பாக எதிர்கட்சிகளைச் சார்ந்தவர்கள் எடுத்துவைத்த கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால், 5, 6 தலைப்புகளிலே அதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்கிற வகையில் நான் சுருக்கமாகவும், அதே நேரத்திலே இந்த மன்றமும், நாட்டு மக்களும் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் சில விளக்கங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர் களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்களும் குறிப்பிடுகிறபோது அறங்காவலர்கள் நியமனங்களைப் பற்றி கோடிட்டுக் காட்டினார்கள். அறங்காவலர் நியமனம் என்பது தொடர்ந்து முறையாக நடைபெற்று வந்த சூழ்நிலையில் கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பாக சில அறங்காவலர்கள் உயர்நீதி மன் றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். அதிலே அரசு அல்லது ஆணையர் அந்த உத்தரவைப் பிறப்பிக்கின்ற நேரத்தில், உத் திரவு பிறப்பித்த நாளிலிருந்து 3 ஆண்டு காலமா அல்லது அவர் கள் பதவி பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற காலத்திலிருந்து 3 ஆண்டு காலமா என்ற ஒரு பிரச்னை உயர்நீதி மன்றத்திலே எழுப்பப்பட்டு, அதன்மீது உயர்நீதி மன்றம் இறுதியாக தன் னுடைய தீர்ப்பை, அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் என்று தீர்மானிக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக அறங்காவலர்கள் நியமனத்தில் சுணக்கம் ஏற்பட்டது. இனிமேல் நாம் அந்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு அரசின் சார்பில் செய்ய இருக்கிறோம். என்றா

லும், இப்போது உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப் படையில் இந்த நியமனங்களைச்செய்ய வேண்டிய ஒரு அவசியம், சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி குறிப்பிடுகிறபோது, நம்முடைய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஏதோ ஒரு குறிப்பிட்ட [illegible]க்கார குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் பொறுப்பிலே இருந்தார்கள் என்றும், ஆகவே, அந்த ஆலையங்களில் . அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை என்பது போல் சொன்னார்கள். அப்படி பரம்பரை அறங்காவலர்கள் எல்லாம் பல ஆலையங்களிலே தமிழகத்திலே இருந்து வந்தவர்கள் அந்த நிர்வாகத்தைப் பற்றிய உண்மைகள் வெளியிலே நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில், முறையில் இருந்துவந்த அந்த குடும்ப விவகார நிலைமையை மாற்றி, அது நாட்டுமக்கள் தெரிந்து கொள்கின்ற நிர்வாகமாக மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிலக் குத்தகைகளைப் பற்றி மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் இங்கே பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அதைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறபோது, இந்த நில குத்தகை விவகாரத்தில் ஏழை எளிய விவசாயிகளை, அந்த குத்தகைதாரர்கள், அவர்கள் குத்தகையைச் செலுத்தவில்லை என்ற காரணத்தைக் காட்டி, வெளியேற்றுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடக் கூடாது, அறநிலையத் துறை ஈடுபடக் கூடாது, குறிப்பாக அமைச்சர் ஈடுபடக் கூடாது என்று அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த முடிவு எடுத்தாலும் அது அரசின் முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆணையைப் பெற்று அல்லது அமைச்சரவையின் முடிவைப் பெற்றுத் தான் நிறைவேற்றப்படுகிறதே தவிர, ஒரு அமைச்சரின் தனியான உணர்வுகளுக்கு ஏற்ப முடிவுகள் நிறைவேற்றப்படுவது இல்லை என்பதை மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், ஏழை எளிய விவசாயிகள் என்ற பெயரிலே நாட்டிலே தரகர்களாக இருப்பவர்களை எல்லாம் விவசாயிகள் என்று இந்த அரசு ஏற்றுக்கொள்ளத்



தயாராக இல்லை. உழுபவன், நிலத்திலே இறங்கி வேலை செய்பவர்கள், அன்றாடம் அந்த ஏர் கலப்பையைப் பிடித்து உழுதால்தான், நாற்று நட்டால்தான், களை எடுத்தால்தான், விதை விதைத்துப் பயிரிட்டால்தான் அவனுடைய வாழ்க்கை நடக்கும் என்று இருக்கிறார்களே, அந்த நிலத்தையே நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களே, அந்த ஏழை எளிய பாடுபடுகிற விவசாயிகளை இந்த அரசு என்றுமே பாதுகாக்கும். அப்படிப்பட்ட மிகத் தெளிவான லட்சியத்தை உடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில்தான், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில்தான், இந்த அரசு அப்படிப்பட்ட விவசாயிகளைப் பாதுகாக்கப் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் யார்? அப்படியானால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற பட்டியலில் யார் வருகிறார்கள் என்பதை அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு குத்தகைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி குத்தகைக்கு வைத்துக் கொண்டு இருப்பவர்களிலே வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, வசதி படைத்தவர்கள் விவசாயிகள் என்ற பெயரால், பல பெயர்களிலே, கருப்பன், சுப்பன், முனியன், என்ற பெயர்களிலே— ஒரு காலத்திலே கிராமங்களில் கணக்குப் பிள்ளைகள் இருந்தார்களே, அவர்களிடத்தில் சொல்லி, கருப்பன், சுப்பன், முனியன் என்று கணக்குப் புத்தகங்களில் எழுதி வாங்கி வைத்துக் கொண்டு நிலங்களை அவர்களே கையிலே வைத்துக் கொண்டு, ஆனால் பல பெயர்களிலே, 15 ஏக்கர், 20 ஏக்கர் 30 ஏக்கர் என்று வைத்துக் கொண்டு, அதிலே வருகின்ற விளைச்சல்களை எல்லாம் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். மழை வந்து விட்டது, வறட்சி வந்து விட்டது என்று சொன்னால் நாம் குத்தகையைத் தள்ளுபடி செய்து விடுகிறோம். ஆனால் நன்றாக விளைந்த நேரத்தில் குத்தகையைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா? ஆனால் இவர்கள் ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக நாம் கொண்டு வரும் சட்டங்களில் உள்ள பலன்களை எல்லாம் அனுபவித்து விட்டு, அந்தச் சலுகைகளை எல்லாம் பெற்றுக்கொண்ட பிறகும், மிச்சம் மீதி காலங்களில் 75/25 என்று சட்டத்தின் அடிப்படையிலே அவர்கள் குத்தகையைச் செலுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்த மாமன்றம் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது ஆலயமாக இருக்கட்டும், தனியாராக இருக்கட்டும்,
மடங்களின் நிலமாக இருக்கட்டும், அரசு நிலமாக இருக்கட்டும்,
அரசு நிலங்களாக இருந்தால் விதி விலக்கு அளித்து இருக்கி
றோம், கல்வி நிறுவனங்களுக்கு விதி விலக்கு அளித்து இருக்கி
றோம், மத்திய அரசுக்கு விதிவிலக்கு அளித்து இருக்கிறோம்.
இப்படிப்பட்ட விதிவிலக்கு அளிக்கிறபோது, அவர்களுடைய
உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும், நியாயங்கள் நிலை
நிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே தான் கொடுக்
கிறோம். ஆனால் இப்படி விதிவிலக்கு கொடுப்பதில் விதிவிலக்கு
அளிக்க வேண்டும் என்று அரசும், அறநிலையத் துறையும்
கேட்கிறபோது, அந்த எண்ணம் மேலோங்குகிறபோது, ஏதோ
ஏழை எளிய விவசாயிகளை அந்த நிலங்களில் இருந்து வெளி
யேற்ற முயற்சிக்கிறோம் என்ற கற்பனைச் செய்தியை தயவு
செய்து பரப்ப வேண்டாம் என்று அவர்களை நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்த மாமன்றத்திலே, மாண்புமிகு துணைத்தலைவர்
அவர்களே, உங்கள் மூலம், ஒரு உறுதியை அளிக்க விரும்பு
கிறேன். காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
கொண்டுள்ள இலட்சியத்தின் அடிப்படையில் இந்த உறுதி
வழங்கப்படுகிறது. ஏழை எளிய விவசாயிகள் அந்த நிலத்திலே
உழைத்து, பயிர் செய்து வாழ்க்கை நடத்துகிறவர்கள், அதிலே
ஏதேனும் கஷ்டப்பட்டு தங்களுடைய குத்தகை பாக்கிகளை
கொடுக்க முடியவில்லை என்று சொல்வார்களானால், அதை
ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு. எந்த விதமான பாதிப்பும்
வராமல் அரசாங்கமும், அறநிலையத் துறையும் பாதுகாப்புக்
கொடுக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களின் சார்பிலும், அறநிலையத் துறையின் சார்
பிலும் நான் இந்த உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

ஆனால் ஒரு உறுதி மொழியை நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர்கள் குறிப்பாக விவசாயிகள் என்ற பெயரிலே திமிங்கல
மாகஇருக்கிறவர்களுக்கு இடைத்தரகர்களாக இருக்கிறவர்களுக்கு
தெரிந்தோ, தெரியாமலோ வாதாடுகின்ற பொறுப்பை ஏற்றுக்
கொள்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு, அற
நிலையத் துறைக்குத் தருவார்களா என்று கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலத்திலே இறங்கி வேலை செய்கிறவர்கள்,
இந்த நிலத்திலே குத்தகை சாகுபடி செய்கிறவர்கள் விளைகிற
விளைச்சலிலே அரசாங்கம் கொடுக்கிற சலுகைகளை எல்லாம்



அனுபவித்து விட்டு, கடைசியாக மிஞ்சுகிற 25 சதவீதத்தையும்
கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களை
வெளியேற்ற நீங்கள் துணை நிற்பீர்களா? அப்படிக் கொடுக்
காதது மட்டுமல்ல ; இந்த நிலங்களை எல்லாம் கைமாற்றி,
ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்களே,
அதைத் தடுப்பதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தருவீர்களா ? இந்த
உறுதி மொழியை மட்டும், அறநிலையத் துறையின் சார்பிலும்
ஆலயங்களின் சார்பிலேயும் ஆலயங்களுக்குப் பாதுகாப்புத் தருகிற
பொறுப்பை ஏற்றிருக்கிற அதே நேரத்தில் ஏழை எளிய மக்களை
யும் காப்பாற்றும் தலையாயப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்
டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலேயும்,
தருவீர்களா. என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
ஆகவே ஏதோ விதிவிலக்கு கேட்கிறார்கள் என்பதற்காக ஏதோ
ஒரு பூச்சாண்டி காட்ட தயவு செய்து பிரச்சினையைத் திசை
திருப்ப வேண்டாம். எங்கே தவறு நடக்கிறது என்பதை
எடுத்துக் காட்ட நான் தயார். இன்னும் தெளிவாகச் சொல்லப்
போனால் எத்தனையோ அரசியல் கட்சித் தலைவர்கள் இந்த
ஆலய நிலங்களை கையடக்கம் செய்து, முறைப்படி குத்தகையைத்
தராமல் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல முடியும்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவரவர்களே, நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்
கள் இந்த இடைத்தரகர்களைப் பாதுகாப்பதற்கான முறையில்
வாதாடுவதற்கு வராமல், உண்மையிலேயே உழுது பயிர் செய்யக்
கூடிய விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு
ஆதரவு அளிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்கான உறுதி
மொழியைத் தருவார்களா என்று கேட்டார்கள். எந்தக் காலத்
திலும் எங்களைப் பொறுத்த வரையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும்
சரி—இடைத் தரகர்கள் இருக்கக் கூடாது என்பது எங்களுடைய
திட்டவட்டமான கொள்கை. அந்த இடைத்தரகர்கள் கையில்
இருக்கிற நிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் ; நேரடியாக
நிலத்திலே உழுது பயிர் செய்யக் கூடிய விவசாயிகளுக்கு அந்த
நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்க
ளுடைய குறிக்கோள். திமிங்கலங்களாக இருக்கிறவர்களை,
இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும், அவர்கள் இருக்கக்கூடாது
என்பதற்காக இறுதி வரையில் நின்று கம்யூனிஸ்ட் கட்சி
போராடும். அரசாங்கம் எடுக்கின்ற அப்படிப்பட்ட நடவடிக்கை
களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும் என்ற உறுதியை
நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திரு. சோ. அழகசாமி :** துணைத் தலைவரவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இந்த நிலத்
திமிங்கலங்களாக, இடைத்தரகர்களாக இருந்து கொண்டு குத்த

கைத்தராமல், கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை ஏமாற்றி
அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
எங்களைப் பொறுத்த வரையில், கம்யூனிஸ்ட் கட்சி இடைத்
தரகர்களை எந்தக் காலத்திலும் ஆதரிக்கவில்லை.

அது மட்டுமல்ல. குத்தகை தராமல், 25 சதவீதம் கூட
கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
கொடுக்காமல் இருந்தால் அவர்களை வெளியேற்றுவதற்கு அப்படிக்
தகை சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தில் இடம் குத்
அப்படி இருக்கும்போது கோவில் நிலங்களில் இருக்கிறது.
செய்கிற விவசாயிகளை வெளியேற்ற குத்தகைச் சாகுபடி
விதிவிலக்கு அளிக்க வேண்டும்; அதற்கு மாண்புமிகு வேண்டும், சட்டத்தில்
அனுமதி அளித்து விட்டார்கள் என்று முதலமைச்சர்
கொள்கையை அமைச்சரவர்கள் அறிவித்த சொல்லக் கூடிய ஒரு
இலட்சக்கணக்கான ஏழை எளிய விவசாயிகள் காரணத்தால் பல
வார்கள். அதனால்தான் நாங்கள் பாதிப்புக்கு உள்ளா
இருக்கிற சட்டத்திலேயே, குத்தகை எதிர்க்கிறோம். இன்றைக்கு
சட்டத்திலேயே குத்தகை சாகுபடியாளர் பாதுகாப்பு
யேற்றலாம் என்று விதி கொடுக்கவில்லை என்றால் வெளி
எடுக்கப்பட்டு வருகிறது. இருக்கிறது. அதன்படி நடவடிக்கையும்
பெற்ற இந்த உரிமையைப் ஆகவே இவ்வளவு நாள் போராடிப்
விதிவிலக்கு வேண்டுமென்று பறிப்பதற்கு இந்தச் சட்டத்தில்
கேட்கிறேன். கேட்பது நியாயம் தானா என்று

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட்
கட்சியினுடைய தலைவர்கள் தந்த வாக்குறுதிக்கு நான்
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த வாக்
குறுதிகளை நிறைவேற்றுவது எப்படி என்பதற்காகத்தான் இந்தச்
சட்டத்தை நாங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். நான் இதை
சொல்வதற்கு காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்
னதைப் போல பல சட்டங்கள் நம்முடைய வேளாண்மைத்
தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் பாதுகாப்பிற்கா
கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் எல்லா
சட்டத்தையும் ஒன்றாக இணைத்துப் பார்த்து தயவு செய்து
பொதுவாக பேசக் கூடாது. குத்தகைதாரர்கள் பாதுகாப்புச்
சட்டம் என்பது ஒரு பொது சட்டமாக இருந்து கொண்டே
இருக்கிறது. அதற்கு விதிவிலக்கு கேட்கவே இல்லை. தயவு
செய்து நீங்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
Cultivating Tenants Protection Act. என்று அவ்வப்
போது அவர்கள் இந்த குத்தகையை கொடுக்காமல் இருப்பத
னாலே வெளியேற்றக் கூடாது என்று ஆண்டுக்கு ஒரு முறை நாம்
ஒரு சட்டத்தை இயற்றிக் கொண்டு வருகிறோம். இடைக்கால





சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அதற்காகத்
தான் நாம் விதிவிலக்கு கேட்டுக் கொண்டுடிருக்கிறோம். அதற்கு
காரணம் கஷ்டப்படுகிற ஏழை எளிய விவசாயிகளுக்கு பாதிப்பை
ஏற்படுத்துவதற்காக அல்ல.

நான் இங்கே ஒரு சான்றை சொல்வதற்கு மாண்புமிகு
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சியின் தலைவர்
நம்முடைய அன்புக்குரிய மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம்
அவர்கள் என்னை பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். சான்று தான். நான் குற்றச்
சாட்டாக சொல்லவில்லை. நம்முடைய முன்னாள்
அமைச்சர் திரு. சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் காஞ்சீ
புரத்திலே மிகுந்த முக்கியமான இடத்திலே இன்றைக்கு பல்லா
யிரக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள ஒரு நிலத்தை அவர்கள்
விளை நிலமாக ஒரு காலத்திலே குத்தகைக்கு அவருடைய பிள்
ளைகள் பெயரிலே எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய பெய
ருக்கு எடுத்துக்கொள்ளவில்லை. சட்டம் தெரிந்த காரணத்தி
னாலே. அவர்களுடைய பிள்ளைகள் பெயருக்கு எடுத்து
குத்தகை காலம் முடிவு அடைகிறது. மூன்று ஆண்டுகளாவது,
ஐந்து ஆண்டுகளாவது ஆனால் முடிந்ததற்கு பிறகு, இன்
றைக்கு அறநிலையத் துறை சட்டத்தின்படி மீண்டும் குத்தகைக்கு
விடவேண்டும். ஒருவர் வசமே இருக்கக்கூடாது. ஆனால்
அவர்கள் அதை விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள்: உயர்நீதி
மன்றத்திற்கு போயிருக்கிறார்கள். தடை வாங்கிக்கொண்
டிருக்கிறார்கள். இதில் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அற
நிலையத் துறையினுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன.
இன்றைக்கு அதற்கு வருகின்ற குத்தகை என்னவென்றால் ரூ. 500,
ரூ. 800, ரூ. 1,000. ஆனால் அதனுடைய பெருமானம்,
மதிப்பு என்னவென்றால் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான
ரூபாய்கள். அது ஒரு காலத்திலே விளை நிலமாக இருந்தது.
இன்றைக்குக்கூட இவ்வளவு பெரிய சென்னை நகரத்திற்குள்
ளேயே விளை நிலங்கள் இருக்கின்றன. பல பேருக்குத் தெரி
யாது. ஏனென்றால், அவைகள் எல்லாம் அந்த விளை நிலங்கள்
என்ற அந்த கேரக்டருக்குள்ளே வைத்துக்கொண்டிருந்தால் தான்,
இந்த அர்பன் லேண்டு சீலிங் ஆக்ட்டியிருந்து தப்ப முடியும்.
அப்படியும் விளை நிலங்கள் நம்முடைய சென்னை நகரத்திற்
குள்ளேயே இருக்கின்றன. அதைப்போல காஞ்சீபுரம் நகரத்
திற்குள்ளேயே விளை நிலங்களாக இன்றைக்கு பம்ப் செட்டுகள்,
கிணறுகள், மோட்டார்கள் எல்லாம் வைத்து ஒரு பெரிய மிராசு
தார்கள் போல நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்
அரசாங்கம், அறநிலையத் துறை கோர்ட்டுக்கே போகமுடியாது.
காரணம் அந்த சட்டம் தடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே,
இப்படி ஏதாவது சில குறிப்பிட்ட வழக்குகளை கோர்ட்டுக்கு
போவதற்கு நீதிமன்றத்திலே இந்த வழக்கை எடுத்துக்கொள்

வதற்கு விதி.விலக்கு வேண்டுமென்றுதான் கேட்கிறோமே தவிர ஏழை எளிய விவசாயிகளை வெளியேற்றுவதற்கு அல்ல. நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலேயும், ஆலயங்கள் சார் பிலேயும், அறநிலையத்துறை அப்படி எங்கேயாவது எந்த ஆலயமாவது ஏழைகளை வெளியேற்ற முன்வந்தால் அந்த இடத் தில் நானே வேண்டுமானால் மறியல் செய்யத் தயாராக இருக் கிறேன். தயவு செய்து இந்த வாக்குறுதியை நீங்கள் ஏற்றுக் கொண்டு ஆகவேண்டும். ஆனால் ஒரு சட்டம் இல்லையானால் தவறிழைப்பவர்களை, ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களை, சமு தாயத்திற்கு மோசடி செய்துகொண்டிருப்பவர்களை தடுக்க முடியாது. அதைத்தான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதைத்தவிர எங்களுக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு, அவர்கள் வயிற்றிலே அடிக்கவேண்டுமென்பதல்ல.

இதைத் தவிரவும் அறநிலையத் துறை ஒரு திட்டத்தை அரசினிடத்தில் கொடுத்திருக்கிறது. நான் அதை இப்போது சொல்ல முடியாது. அரசினுடைய நிதிநிலையை ஒட்டி பரிசீலிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கி றோம். ஆகவே இந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தம் கொண்டு வரும்போது உழைத்துக் கொண்டு இருக் கிறவன் கையிலே இருந்து நிலத்தைப் பறித்துக் கொள்ள வேண்டும் என்கிற அந்த உணர்வின் மீது நானாகட்டும், அற நிலையத் துறையாகட்டும், நடவடிக்கை எடுக்காது, எடுக்க முடியாது. காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுகின்ற தொண்டர்கள் நாங்கள். ஆகவே அந்த முறையிலே சொல்கிறேன். ஏழை யாகவே வாழ்ந்து, ஏழையாகவே உயர்ந்து கொண்டு இருக் கின்ற நான் ஏழைகளுக்கு எதிராக எந்தப் பிரச்சினையையும் கொண்டு வருவதற்கு விரும்பமாட்டேன். அதையும் உங் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ பேசுகிறபோதே இந்த அறநிலையத் துறை அமைச்சர் விவசாயிகளுக்கு விரோதி யாக இருக்கிறார் என்பதுபோல படம்பிடித்துக் காட்டுகிற முயற்சியில் அருள்கூர்ந்து ஈடுபடவேண்டாம். அதிலே ஈடுபடுப வர்கள் தோல்வி அடைவார்கள் என்பதை நான் இங்கே தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9–50)

திரு. ரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் மீது நோக்கம் கற்பிக்கக்கூடிய முறையில் அல்ல. அந்தமாதிரி பேச்சுக்கள் இதுவரைக்கும் வந்தது, ஒரு பக்கத்திலே பிரஸ்சிலே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்த விதிவிலக்கு கட்டாயமாக செய்து கொண்டு வருவோம் என்று சொல்வதும், மறு பக்கத் திலே நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அந்தமாதிரி கட்டாய



மாக பாதுகாப்பு கொடுத்தே தீருவோம் என்ற அந்த முறை யிலே, இப்படி அறிக்கைகள் வருவதன் மூலம், இப்படி 2, 3 தரம் வந்தது. அதை நானும் பார்த்தேன். அதனால்தான் இந்த பேச்சுக்கே இடம் வந்திருக்கிறது என்பதை நான் சொல் லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதாகையால் மாண்புமிகு உமாநாத் அவர் களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயி களுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்கு பாதுகாப்புத் தரவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். ஆனால் ஒரு காரணத்திற் காக, காரியத்திற்காக ஒரு கொள்கையை நிறைவேற்றுவதற் காக அமைக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமாக ஒரு அமைப்புக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலங்கள், இது போன்றவைகள் எல்லாம், தனிப்பட்டவர்கள் ஏமாற்றி எடுத் துக்கொள்வதற்கு வழி இருக்கக்கூடாது என்பதுதான் நோக்கம். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்வது பொதுக் கருத்து, அது இலாக்காவினுடைய கருத்து. இதற்கு மேலே இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கொள்கையை நாங்கள் சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயி களுக்கு உதவி செய்யவேண்டும் என்று சொன்னால், ஏழை எளியவர்கள் இப்போது உள்ள சாகுபடிச் செலவு மற்றதின் காரணமாக, வாரமும் கொடுத்து, தன்னுடைய குடும்பத்தையும் நடத்த, முடியாமல் இருப்பதன் காரணமாக, அந்த நிலம் தனக் குச் சொந்தமாக இருக்கவேண்டும் என்பதுதான் நாடு பூராவும் உள்ள விவசாயிகளுடைய கோரிக்கை. அண்டையிலே உள்ள கேரளத்தில் கூட அறநிலையங்களைச் சேர்ந்த நிலங்கள் எல் லாம் உழுபவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டு, கோயில்களுக்கு நஷ்ட ஈடாக பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரியாக வாரமும் கொடுத்து, தானும் வாழ்க்கை நடத்த முடியாமல் இருப்பதன் காரணமாக நிலத்தை உழுபவர்களுக்கே சொந்த மாக்கக்கூடிய முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற மாதிரி, ஏழை எளியவர்களுக்கு, உழுபவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்தக் கொள்கை, நோக்கம் நிறைவேற வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு நிலத்தைச் சொந்த மாக்க வேண்டிய கொள்கையை அறிவிக்க வேண்டியதானே நியாயமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்கு நான் நன்றி கூறுகிறேன். அப்படிப்பட்ட

நோக்கத்தை எல்லா வகையிலும் நிறைவேற்ற முடியும்' என்ற நிலைமை இருக்குமானால் '75–25-க்கு இடமே இல்லை ஆகவே 25 கொடுத்ததே அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றுதான். அது தொடரும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இறுதி முடிவு எடுக்கின்றவரை அமைச்சர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம் என்ற வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் தெரிவித்தார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதே பிரச்சனை ஏற்கனவே இந்த மன்றத்திலே வந்தபோது, கவர்னர் உரையின் மீது பேசுகிற போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன். குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு அளிக்கக்கூடிய இந்தப் பிரச்சனையில் கோவில் நிலங்களும் சம்பந்தப்பட்டதா? அல்லவா? அதற்கும் உண்டா, இல்லையா என்று கேட்டேன். அதற்கும் உண்டு என்று 'எம்ஃபாட்டிக்காக' வெளியிலே அல்ல, இந்த மன்றத்திலே, "Assurance given in the House" என்ற வகையில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரெக்கார்டிலே இருக்கிறது. ஆகவே, வெளியிலே பேசுவதைப் பற்றி நாங்கள் பொருட்படுத்தவில்லை. வெளியிலே அமைச்சர் அவர்களிடம் திராவிடக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் மனுவைத் தந்தபோது, அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். நான் அதைப்பற்றிக் கூட சொல்லவில்லை. இந்த ஹவுசிலே, இந்த மன்றத்திலே, எலக்டட் பாடி இருக்கின்ற இந்த மன்றத்திலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் சொல்லி இருக்கும்போது அது நிச்சயமாக அமைச்சரவையினுடைய முடிவாக இருக்கும் என்றுதான் என்னைப் போன்ற சாதாரண அறிவு உள்ளவர்கள் நினைத்துக் கொள்ளக்கூடும். அப்படி இருக்கும்போது, மாண்புமிகு முதல் அமைச்சர் சொல்வதற்கும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தருகின்ற விளக்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சாதாரண அறிவு உள்ளவர்களே திறமையாகப் பேசும்போது, விசேஷமாக பொறுப்போடு இருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையாகத்தான் பேசுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியது கொள்கை நடைமுறைக்கு எது சரி என்று வரும்போது, சிக்





கல்கள் ஏற்படும்போது, அதை மாற்ற வேண்டியது எங்களுடைய பொறுப்பு. ஆகவே கொள்கை ஒன்று இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லும் போதுதான் நாம் விரும்பாத சில பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. எல்லோருக்கும் நிலம் வேண்டும் என்று சொல்கிறோம். அது இன்றல்ல, நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக, பல தலைமுறையாக சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுக்க முடியுமா? என்பது கேள்வி. அத்தனை பேர்களுக்கும் நிலம் கொடுக்க நிலம் இருக்கிறதா என்பது கேள்வி. அப்படியானால் வீடு கட்டுவது, சாதாரணமாக தனியாகக் கட்டாமல், அடுக்கு மாடியாக வீடுகள் கட்டவேண்டும் என்று சொல்வது ஜனப் பெருக்கத்தின் காரணமாக. ஆகவே இந்தப் பிரச்சினையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது கொள்கை. அதைப் பற்றி முடிவு எடுப்போம் என்பது அவருடைய நம்பிக்கை. ஆனால் சிக்கல்கள் வரும் போது அமைச்சரவை முடிவு எடுக்கும்போது அது மாற்றப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஸ்பெசிபிக்காக கேட்டகேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொன்னதற்குப் பிறகு, மீண்டும் ஸ்பெசிபிக்காக கேட்பது என்பது வரவே வராது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு, அதுதான் எங்கள் அனைவருடைய கொள்கையும், இந்த அரசினுடைய கொள்கையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தைப் பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இங்கே சில கருத்துக்களைச் சொன்னார்கள். மன்னிக்க வேண்டும். சில ஆலோசனைகளை வழங்கினார்கள். அப்படிப்பட்ட ஆலோசனைகளை இந்த அரசு தீவிரமாக பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

ஆனால், அவர்கள் இப்பொழுது இந்த ஆணையரை நியமிக்கும் போது சர். சி. பி. இராமசாமி ஐயர் குழுவிலே தெரிவித்திருப்பதைப் போல, மேதகு ஆளுநர் அவர்களே, அவர்களை நியமிக்கலாமே, அப்படி நியமித்தால்தான் சரியாக இருக்கும் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அடுத்து ஜாயின்ட் கமிஷனரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தையும் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு, அறநிலையத் துறை நிர்வாகத்தை ஒரு தனி நிர்வாகத்திற்கு மாற்றி, அதை அட்டானமஸ் பாடியாக ஏற்படுத்தி, அதை நிர்வகிக்க வேண்டும் என்கிற 3 கருத்துக்களை நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் முக்கியக் கருத்துக்களாக சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 ஏப்ரல் 11]

நான் இங்கே ஒன்றைச் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அறநிலையத் துறை சட்டம் என்பது ஏறத்தாழ 150 ஆண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு சட்டம். இது வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்துதான் ஆராய்ந்து—மத பிரச்னைகளுக்குள்ளே தலையிடுவதில்லை என்றிருந்த வெள்ளைக்காரர்கள் இங்கே நடைபெற்ற நிர்வாகச் சீர்கேடுகளைப் பார்த்ததற்குப் பிறகு, ஒரு அரசாங்கம் அதிகாரம் பெற்ற அரசாங்கம், இதன் நிர்வாகத்திற்குள்ளே ஈடுபட்டேயாக வேண்டும் என்ற முடிவை எடுத்து ஈடுபட ஆரம்பித்தார்கள்.

அதைத் தொடர்ந்து நான் பல சட்டங்கள் இயற்றப் பெற்று வந்திருக்கின்றன. கடைசியாக நம்மிடத்திலே இருப்பது 1959ஆம் ஆண்டு சட்டம். ஆகவே இந்தச் சட்டம் என்பது திடீர் என்று வந்துவிட்ட ஒன்றல்ல. பல சட்டங்கள், பல சட்ட முன்வடிவுகள் நம்முடைய மக்களுடைய பிரதிநிதிகள் என்று ஆட்சிச் செய்தவர்கள் காலத்திலேயும் சரி, வெள்ளைக்காரனுடைய பிரதி நிதிகளாக ஆட்சி செய்தவர்கள் காலத்திலேயும் சரி, இங்கே நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அப்படி நிறைவேற்றப் பெற்றுவந்த சட்டங்களுடைய அடிப்படையிலேதான், இன்றைக்கு ஆணையர் நம்முடைய அரசால், ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி என்ற வகையிலோ, அல்லது நீதிமன்றத்திலேயிருந்து வருகின்றவர்கள் என்ற முறையிலோ கூட நியமிக்கலாம் என்ற வகையில் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

இன்றைக்கு ஆளுநரிடம் இருக்கின்ற அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று சில இடங்களிலே, சில மாநிலங்களிலே சில அரசியல் கட்சிகள் சொல்லி வருகிற நேரத்தில், ஆளுநரே தேவையில்லை என்று சொல்கிற காலத்திலே வாழ்ந்துக் கொண்டிருக்கின்றபோது, அதிலும் அந்தக் கட்சிகளையெல்லாம் உள்ளடக்கிய 18 கட்சிகளினுடைய தலைவராக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், நெடுமாறன் அவர்கள், விளங்கிக் கொண்டிருக்கிறபோது, இதை மீண்டும் கொண்டு போய், ஆளுநரிடத்திலேயே, அந்த அதிகாரத்தை கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆளுநரிடத்திலே அதிகாரத்தைக் கொடுப்பதிலே வேறு எந்தவிதமான கவலையும் எங்களுக்குக் கிடையாது. அல்லது அதனால் பெரிய பிரச்னைகள் வந்துவிடும் என்பதும் அல்ல. ஆனால் ஒரு தேர்ந்தெடுக்கப்பெற்ற ஆட்சி இருக்கிற போது, அப்படிப்பட்ட ஆட்சியின் சார்பிலே ஒரு அதிகாரியை நியமிப்பதை விட்டு விட்டு....(குறுக்கீடு).

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் கமிஷனரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தினை சர். சி. பி. ராமசாமி ஐயர் கமிஷன் வற்புறுத்தியிருக்கிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன்



1984 ஏப்ரல் 11] [திரு. ப. நெடுமாறன்]

சொன்ன ஒரு யோசனையைத்தான் நான் இங்கே வைத்து அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அதன்படி செய்தால் நன்றாக இருக்கும் என்றும் சொன்னேன்.

இந்த அரசாங்கம் ஏற்கெனவே நடைமுறையில் பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும்போது, இந்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் ஒரு பேனலை அனுப்புகிறது. அதிலிருந்து ஒருவரை ஆளுநர் நியமிக்கிறாரே தவிர, அரசாங்கம் சொல்பவரை நியமிப்பதில்லை. மதுரை காமராசர் பல்கலைக் கழக துணை வேந்தரை நியமிப்பதில் கூட, ஆளுநர் அரசாங்கத்தினுடைய ஆலோசனையை மீறி நியமித்த போது அரசாங்கம் அதை எதிர்த்து எதுவும் செய்யவில்லை. ஆளுநர் வேண்டுமா வேண்டாமா என்பது அது வேறு பிரச்னை. இந்த அரசாங்கத்திற்கு என்ன கொள்கை இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், அதே நேரத்தில் ஆளுநர், ஆணையரை நியமிக்க வேண்டும் என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அந்தக் கமிஷனர், அதாவது ஆணையர் அவர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவராக இல்லாமல், சுய ஆதிக்கம் பெற்ற அதிகாரியாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்து அறநிலையம் என்பது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டிய ஒன்றல்ல. மதக் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டிய ஒரு ஸ்தாபனம். முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் போன்ற பல மத ஸ்தாபனங்களுக்கு இப்படி பல நிலைமைகள். இங்கே இருக்கிற போது, இந்து சமயத்தை சார்ந்தவர்களுக்கும், அந்த உரிமை வேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான், அதை வற்புறுத்தி நான் சொன்னேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் அறிக்கை கொடுக்கவேண்டுமென்று நியமித்தது மத்திய அரசு. 1960-லிருந்து 1962 வரையிலே இரண்டாண்டுக் காலம் அவர்கள் இந்தியா முழுவதும் ஆய்வு செய்து அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே சொல்லப்பட்ட பரிந்துரைகளிலே அதுவும் ஒன்று. எனக்கு நினைவு சரியாக இருக்குமானால் 1960, 1962 ஆண்டுகளிலே எல்லாம் மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே தான் இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். 1960, 1962-லே எல்லாம் காங்கிரஸ் கட்சி தான் இந்த மாநிலத்தை ஆண்டது என்று கருதுகிறேன். இன்றைக்கும் காங்கிரஸ்தான் மத்திய அரசில் ஆளுகிற கட்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே இன்றைக்கு இந்து சமய அறநிலையங்கள்

இப்போது கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கிறது. மத்திய அரசும்,
மாநில அரசும் சேர்ந்து சட்டம் நிறைவேற்றுகிற பொறுப்பிலே
இருக்கிற ஒரு சட்டம். ஆகவே மத்திய அரசு விரும்பியிருந்தால்
அப்போதே நிறைவேற்றியிருக்கலாம். நான் நேற்றுக்கூட சொன்ன
போது மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்களுக்கு கொஞ்சம்
கோபம் வந்துவிட்டது. நான் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.
உண்மைகளைச் சொல்லவில்லையென்றால் இந்த ஊருக்கு உண்
மைகள் தெரியாமல் போய்விடுகிறது. அதனால் சொல்கிறேன்.
ஒன்றரை ஆண்டுக்காலம் இந்த மாநிலம் குடியரசுத் தலைவர்
ஆட்சியிலே இருந்தபோது—ஆளுநர் ஆட்சியிலே இருந்தபோது
அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே மிக முக்கிய பொறுப்பை
வைத்துக் கொண்டிருந்த—அப்படிச் சொல்கிறேன், ஏனென்றால்
அதிகாரம் இல்லாத பொறுப்பு இல்லாத அமைச்சர் என்று சொன்ன
போது நேற்று அவர்களுக்குக் கோபம் வந்தது, அப்படிச் சொல்ல
மாட்டேன்—அவர்கள் முக்கிய பொறுப்பிலே இருந்தபோது—
அன்றைக்கு போலீஸ் காவல் எல்லாம் காங்கிரஸ் தலைவர்களுக்கு
இருந்தது. முதலமைச்சருக்கு போலீஸ் காவல் இருப்பதைப்
பார்க்கிறோம், ஆனால் அன்றைக்கு காங்கிரஸ் தலைவர்களுக்கு
எல்லாம்கூட இருந்ததை நாம் பார்த்தோம்—ஆகவே அந்தச்
சூழ்நிலையில் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் மிகுந்த முக்கிய
முள்ள தலைவராக இருந்தபோது நிறைவேற்றியிருக்கலாமே.
அப்படி நிறைவேற்றியிருந்தால் நாங்கள் அதை மாற்றுகிற முயற்சி
யிலே ஈடுபட்டிருக்க மாட்டோம். ஏனென்றால் பல்கலைக் கழகத்
தினுடைய துணை வேந்தரை நியமிப்பதற்கு ஆளுநர் அவர்களுக்கு
பொறுப்பு இருக்கிறதே, நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா என்று
கேட்கிறீர்கள். அது நாங்கள் வந்ததற்குப் பிறகு மாத்திரம்
கொண்டுவரவில்லை, அது முன்னாலே இருந்த எல்லா அரசுகளும்
ஏற்றுக் கொண்டிருக்கிற சட்டமாகும்.

கன்கரன்ட் லிஸ்டிற்கு கல்வித் துறை போனதற்குப் பிறகும்
அது இன்றைக்கு மிகுந்த சிக்கலாகவும் மாற்றப்பட்டிருக்கிறது.
மேற்கு வங்கத்திலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
என்பதை இந்தியா முழுவதும் கவனித்துக் கொண்டிருக்கிறது.
ஆகவே முன்னாலே அவர்கள் ஒருவேளை நடைமுறைப்படுத்தி
யிருந்தால் இன்றைக்கு இவ்வளவு அக்கறை வருகிறதே, அற
நிலையத் துறை பற்றி இவ்வளவு கவலைப்படுகிறீர்களே, இந்த
அக்கறை ஏன் அன்றைக்கு வரவில்லை? அன்றைக்குக் கண்டும்
காணாமல் இருந்து விட்டீர்களா அல்லது தவறுகள் நடந்தால்
நடந்துவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிட்டீர்களா? இன்
றைக்குத் தவறுகளைத் தோண்டிக் கண்டுபிடித்து, தேடிக் கண்டு
பிடித்து இந்த நாட்டு மக்களுக்கு தெரிவிக்கின்ற ஒரு அரசு
மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகிற ஆட்சி
என்ற காரணத்தால் உங்களுக்கெல்லாம் கொஞ்சம் தைரியம்
வருகிறதா? அதையும் தயவுசெய்து சொல்லுங்கள். மாண்பு





மிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசியபோது இந்து அற
நிலையத் துறையின் நிர்வாகத்தை அவர்கள் பாராட்டினார்கள்.
பாராட்டிவிட்டு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள்
சில வேண்டுகோள்களையும் வைத்தார்கள். குறைகளைத் தெரி
வித்தார்கள்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
இங்கு குடியரசுத் தலைவரின் ஆட்சி இருந்த காலத்திலே அதிகா
ரம் மிக்க ஒரு பொறுப்பிலே இருந்த நெடுமாறன் இதைச் செய்
திருக்கலாமே என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பழைய
பைல்களை எடுத்துப் பார்க்கும்படி நான் வேண்டிக்கொள்கிறேன்.
அன்றைக்கு ஆலோசகராக திரு. ஆர். வி. சுப்பிரமணியம்
அவர்கள் இருந்தார்கள். அன்றைக்கு நான் சொல்லி இருக்
கிறேன். அத்தனை யோசனைகளையும் எழுத்து வடிவிலே
என்னுடைய கையெழுத்துப் போட்டு ஆர். வி. சுப்பிரமணியம்
அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். இந்து அறநிலையத் துறை
என்பது அட்டானமஸ் பாடியாக இருக்கவேண்டும் என்பது. அது
மட்டுமல்ல, இந்த யோசனையை நான் தெரிவிப்பதற்கு முன்
னால் அமைச்சர் அவர்கள் யார்மீது ரொம்ப பக்திகொண்டிருக்
கிறாரோ அந்த மதிப்பிற்குரிய வணக்கத்திற்குரிய சங்கராச்சாரிய
சுவாமிகளைச் சந்தித்து என்னுடைய ஆலோசனைகளை அவர்
களிடம் கூறி, அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, ஆர். வி. சுப்
பிரமணியம் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். என்
னுடைய யோசனைகளை நான் வற்புறுத்தியிருக்கிறேன். ரெக்
கார்டிலே அவ்வளவும் இருக்கிறது. அரசாங்க ரெக்கார்டிலே
வேண்டுமானால் எடுத்துப் பார்த்துக் கொள்ளலாம். இதுபோன்ற
நிலைமையில் அமைச்சர் அவர்கள் நான் சொன்ன யோசனை
களை இந்த அரசாங்கம் ஏற்கிறதா இல்லையா என்பதற்கு பதில்
சொல்லவேண்டுமே தவிர, முன்னாலே அப்படி நடந்தது, ஏன்
செய்யவில்லை என்று சொன்னால் இன்றைக்கு காங்கிரஸ் ஆட்சி
செய்யாதவைகளையெல்லாம் இன்றைக்கு உங்கள் ஆட்சியிலா
வது செய்யுங்கள் என்று வற்புறுத்த ஒவ்வொருவருக்கும் உரிமை
இருக்கிறது. அதைவிட்டு விட்டு ஏதோ அவருக்குப்பேசுவதற்கு
அதிக உரிமை இருக்கிற காரணத்தினாலே எதை வேண்டுமானாலும்
பேசலாம் இந்த அவையில் என்ற ஒரு முறை சரியானதல்ல என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்பு
மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட
வேண்டாம் என்று கருதுகின்றேன். இருந்தாலும் மாண்புமிகு
நெடுமாறன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்
போது வெளியே அவசரமாக போய் இருந்தேன். ஆளுநர் இருப்

பது பற்றியோ, அவருடைய பதவி பற்றியோ இந்த அரசுக்கு என்ன கொள்கை இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும் என்று எல்லாம் சொன்னார்கள். அதில் எனக்கு ஒரு சந்தேகம். ஆளுநர் இருக்கக்கூடாது என்று இப்போது மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் கருதுகிறாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

நம்முடைய நோக்கம் எல்லாம் மாநில அரசுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதுதான். ஆளுநருக்கு இருக்கின்ற அதிகாரங்கள் கூட (திரு. ரகுமான்கான் எழுந்தார்) தயவுசெய்து உட்காரச் சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்து கொண்டே பேசுவது இந்த அவையை அவமதிப்பதாக நான் கருதுகிறேன். நான உட்கார்ந்த உடனே எழுந்து பேசட்டும். உட்கார்ந்து கொண்டே பேசுவது மரியாதைக்குரியது அல்ல.

நான் மாண்புமிகு நெடுமாறன் அவர்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தேவை என்ற கோரிக்கையில் அவர்கள் பின்வாங்க மாட்டார்கள், பின் வாங்கவும் முடியாது. அவர்கள் கொள்கை இப்போது அப்படித்தான் இருக்கிறது என்று நான் கருதுகின்றேன். ஆனால் நான் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் ஆளுநர் ஒரு மாநிலத்திற்கு தேவையா இல்லையா என்பதைப் பற்றி உங்கள் கருத்து என்ன ? இப்போது ஆளுநருக்கு இருக்கின்ற அதிகாரம் முழுவதும் அல்லது பெரும்பான்மையும் மாநில அரசுக்கு கிடைத்து ஆக வேண்டும் என்று சொல்வதில் உங்களுடைய கொள்கை என்ன ? கருத்து என்ன ? நாங்கள் அதிகாரத்தில் இருக்கிறோம், இல்லை அதிகார ஆசையில் இருக்கிறோம், வாய்ப்பு கிடைக்கிறது பேசுவதற்கு பேசிக்கொண்டு இருக்கிறோம் என்ற குறையைச் சொல்லாமல் அதைப்பற்றியும் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் நலமாய் இருக்கும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் 'விலாங்கு வேண்டாம் குட்டையை மாற்றலாம்', என்கிறீர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு அரசினுடைய பிரதிநிதி நியமிப்பது தவறு, நம்பிக்கை இல்லை, ஆனால் மத்திய அரசாங்கத்தால் நியமனம்செய்யப்பட்டு இருக்கிற அதிகாரியிடம் இதை ஒப்படையுங்கள் என்கிறீர்கள். இது என்ன ஜனநாயகம் என்பதை தயவுசெய்து தெளிவாக சொல்லவேண்டும்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பதவி என்பது வேண்டுமா வேண்டாமா ? அதைப் பற்றி திட்டவட்டமாக எங்கள் கட்சியின் கருத்து என்ன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையிலே ஆளுநர் பதவி தேவை இல்லாத ஒரு பதவி என்பது எங்களுடைய தெளிவான கருத்து





ஒன்று. இரண்டாவது இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகள் பேசுகிற தேசிய இனங்கள் வாழ்கிற இந்த நாடு தனித் தனி குடியரசுகளாக சோவியத் நாட்டில் இருப்பதைப் போல பரி பூரண உரிமைப் பெற்ற சுதந்திர குடியரசுகளைக் கொண்டு ஒரு ஒன்றியமாக இந்த நாடு இருக்க வேண்டும் என்பதிலே நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அப்படி வருகிற காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தனித் தனி குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார், மக்கள் பிரதிநிதி வந்து விடுகிறார் அங்கே. இது தான் எங்களுடைய கட்சியின் அதிகார பூர்வமான கருத்து என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கே வந்த பிரச்சினை என்ன ? மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் சொன்னது போல் நான் இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தான் இந்தப் பிரச்சினையை எழுப்பி ஆளுநர் பற்றி விவாதத்தை தொடங்கினார்கள். நான் சொன்னது என்ன, அவர் சொல்வது என்ன என்பதை நம்முடைய மாண்புமிகு முத லமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்காக மீண்டும் அதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அறநிலை யத்துறை இஸ்லாமிய, கிருத்துவத் துறைகளுக்கு இருப்பதைப் போல சுய ஆதிக்கம் உள்ள ஒரு அமைப்பான பொறுப்பில் விடப் படவேண்டும் என்பது எங்களுடைய கருத்து காரணம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய மற்ற சமயங்களுக்கு அளிக்கப் பட்டு இருக்கிற உரிமை அறநிலையத் துறைக்கு வரவேண்டும். அறநிலையத் துறை அரசாங்க கட்டுப்பாட்டுக்குள் இருக்கக் கூடாது. இஸ்லாமிய சமயத்துக்கு உள்ள வக்ஃப் போர்டு அல்லது கிருத்துவ தேவ ஆலயங்களுக்கு அது எத்தனை மிஷன்களாக இருந்தாலும் அத்தனையும் சுய ஆதிக்க அமைப்பு உடையனவாக இயங்கிக்கொண்டு இருக்கின்றன. இந்தப் பிரச்சினையில் அற நிலையத் துறை சுய ஆதிக்க அமைப்பு உடையனவாக இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார் என்பதை.....

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல சர்ச்சை இங்கே ஆரம்பம் ஆகியிருக்கிறது. ஆகவே பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வக்ஃப் போர்டு சுய ஆதிக்கம் உள்ளது என்கிறார்கள். நியமிப்பது நாங்கள்தான் என்பதை தயவுசெய்து தெரிந்து கொள்ள வேண் டும். அந்த அமைப்புக்கு யார் அதிகாரியாக பதவியில் இருப்பது என்பதை நியமிக்கும் அதிகாரம் இந்த அரசிடம் இருக்கிறது. கிருத்துவ அமைப்புகளில் அது இல்லை. அவர்களே நியமித்துக் கொள்கிறார்கள். அங்கே ஒரு தேவை ஏற்பட்டு, இப்போது சர்ச்சையில் இருக்கிறது. அதையும் இந்த அறநிலையத்துறை

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 ஏப்ரல் 11

போல மாற்ற வேண்டுமா என்கிற பிரச்சினை மீது அங்கே கொஞ்சம் சலசலப்பு எல்லாம் ஏற்பட்டு வேறு வகை எல்லாம் நடந்தது என்ற செய்திகள் அவர்களுக்குத் தெரியும். இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த வக்ஃப் போர்டு என்பது அவர்கள் தன்னிச்சையாக காரியங்கள் செய்தாலும் அதைக் கட்டுப்படுத்தி அவர்கள் தவறு செய்தால் நீக்குவதற்கு இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது.

(முற்பகல் 10–10).

என்னுடைய வருத்தமெல்லாம் — மகிழ்ச்சியோடு கலந்த ஒரு வருத்தம், ஆளுநர் தேவையில்லை, தனிக் குடியரசு ஆட்சி வேண்டுமென்பதெல்லாம் அவருடைய கொள்கைக்கு, சுதந்திரத்திற்கு உரித்தானதாக இருக்கலாம்.

அவ்வளவு பெரிய கொள்கையைத் தன் கையில் வைத்துக் கொண்டு, இப்பொழுது இருக்கின்ற ஆட்சியிடம், சட்டத்திற்கு உட்பட்டு இருக்கின்ற ஆட்சியிடம் இருக்கின்ற அதிகாரத்தை ஆளுநரிடம் கொண்டுபோய் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள் என்பதை அவருடைய நோக்கத்திலிருந்து நான் தெரிந்துகொண்டேன். அதற்காக அவர்கள் சொல்ல வரவில்லை, வாதத்திற்காக, சொல்லியிருக்கிறார்கள் என்று இப்பொழுது புரிந்துகொண்டேன். ஆகவே இந்தப் பிரச்னை முடிவடைந்து விடுகிறது.

தனி வாரியம் போல அமைக்கலாமா என்று கேட்கிறார்கள். தெய்வீகப் பேரவை என்ன ஆயிற்று என்பது தெரியும். ஆகவே அந்தப் பிரச்னைகளையெல்லாம் திருப்பி இங்கே விவாதமாக ஆக்கி, அது மக்களுடைய மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒற்றுமை தேவை.

மதத் தலைவர்கள், மடங்களின் தலைவர்கள், இவர்களெல்லாம் ஒன்றாகச் சேர வேண்டும். இவர்களெல்லாம் ஒன்றுபட்டு, தெய்வீகம் என்கிற நம்பிக்கை இருக்குமானால், அதற்கு அவர்கள் சேவை செய்ய முன்வருவார்களேயானால், அதிகாரிகள் தலையிடுவது குறைந்து போகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இது சுயாதிக்க அமைப்பாக இருக்க வேண்டுமென்ற ஆலோசனை சிறந்தது என்று அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 11] (திரு. ப. நெடுமாறன்)

வக்ஃப் போர்டை உதாரணத்திற்குச் சொன்னார்கள்.

இந்த அறநிலையத்துறை ஆணையாளர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளவர்; ஆனால் வக்ஃப் போர்டில் உள்ள அதிகாரிகள் வக்ஃப் போர்டு கட்டுப்பாட்டில் உள்ளவர்கள். எனவே, இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அறநிலையத் துறை ஆணையாளர் விரும்பினால் அறங்காவலர்களை நீக்கவும், மடாதிபதிகளை நீக்கவும் அதிகாரம் பெற்றவர். ஆனால் வக்ஃப் போர்டு அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் கிடையாது. எனவே, இரண்டையும் ஒன்றாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறநிலையத்துறையை சுயாதிக்கம் பெற்ற ஒரு அமைப்பாக இருக்கவேண்டுமென்ற ஆலோசனை சிறந்தது என ஒத்துக் கொண்டார்கள் என்ற தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஒத்துக்கொண்டு இங்கே தெரிவிக்கவில்லை.

மேலும் திரு. நெடுமாறன் பேசும்போது வஃப்போர்டு தனியாக இயங்குகின்றது என்று குறிப்பிட்டார்களே, அப்படி இல்லை; அதையும் அரசாங்கம்தான் நியமிக்கின்றது. அது மாத்திரம் அல்ல. அதற்கான அமைச்சர் பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இங்கே அதற்காக செயல்ாளர், துணைச்செயலாளர் ஆகியோர் இருக்கிறார்கள். இவர்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டுத்தான் வக்ஃ போர்டு செயல்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல ஆணையாளர் அவர்கள் அரசாங்கத்தாலே நியமிக்கப்பெற்றாலும் அவர்கள் தன்னாட்சி பெற்ற ஒரு அதிகாரிதான். ஜுடிசியல் அதிகாரமும் பெற்றவர் அவர். இன்னும் சொல்லப்போனால் ஆலயங்களின் நிர்வாக அமைப்புக்கள் தனித்தனி உரிமை பெற்றவை. ஒரு ஆலயத்திற்கு அறங்காவலரை நியமிக்க ஆணையருக்கு அதிகாரம் உண்டு; அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் நீ இப்படித்தான் செய்யவேண்டும்; இதற்காக இவ்வளவு நிதி கொடுக்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப் படுத்தவோ அல்லது அவர்களை வற்புறுத்தவோ அரசுக்கு அதிகாரம் இல்லை. அவர்களே முடிவெடுத்துத்தான் ஒரு காரியத்தை நிறைவேற்ற வேண்டும். ஆகவே ஆலயங்கள் அனைத்துமே தன்னாட்சி உரிமை பெற்றவைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

இங்கே ஆணையாளரை ஆளுநர் அவர்கள் நியமிப்பது பற்றித் தெரிவித்தார்கள். அந்த விவாதம் முடிவுறுவதற்கு மூன்னாலேயே அவர்கள் தன்னாட்சி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நேற்று அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். அந்த சி. பி. இராமசாமி ஐயர் எந்த இடத்திலும் தன்னாட்சி உரிமை வழங்க வேண்டும் என்று குறிப்பிடவேயில்லை. அந்தக் குழு அப்படிக் குறிப்பிடவே இல்லை. மிக விரிவாக அந்தக் குழு இதுபற்றி விவாதித்திருக்கின்றது. இறுதியாக அரசாங்கத்தின் மேலாதிக்கம் வேண்டும் என்ற முடிவுக்குத்தான் அவர்களும் வந்திருக்கிறார்கள். அதோடு மற்ற சமய நிறுவனங்களிலும் அரசாங்கத்தினுடைய அதிகாரம் வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது இந்த உணர்வுகளை எல்லாம் தெரிவித்தார்கள் என்று இங்கே சொன்னார்கள். நான் சொன்னதற்குச் சான்றாகவே சொன்னார்கள். 76-லே சொன்னார்கள். நான் கேட்பது 62-லேயே இந்தக் கமிஷன் அறிக்கை வந்திருக்கின்றது. 16 ஆண்டுக்காலம் கழித்துத்தானே இவர்களுக்கே வருகின்றது. 76-லே உள்ள சூழ்நிலை என்ன? அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது குற்றச்சாட்டுக்களைச் சாட்டியதற்குப் பிறகு அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே தீவிரமாக இருந்த நம்முடைய திரு. நெடுமாறன் அவர்களுக்கு அக்கறை பிறந்திருக்கின்றது. அதுவரையில் இது ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாக வேண்டுமென்றோ அல்லது மேதகு ஆளுநர் தான் ஆணையாளரை நியமிக்க வேண்டும் என்றோ 67 வரையில் வரவில்லை; 76 வரையிலும் வரவில்லை. 76-லே ப்ரெசிடென்ட் ரூல் நடைபெறுகின்றபோதுதான் அவர்களுக்கு வருகின்றது. அதை மாத்திரம் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதை ஒன்றும் குற்றச்சாட்டாக நான் செர்ல்லவில்லை.

ஆனால் சி.பி. இராமசாமி ஐயர் கமிஷன் மிகத் தீவிரமாக இதைப்பற்றி ஆராய்ந்து தன்னாட்சி நிறுவனம் எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் பலபேர் சொல்லி, அதைப்பற்றியும் கருத்துச் சொல்லியிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரின் பக்திக்குரியவர் என்று வணக்கத்திற்குரிய சங்கராச்சாரியார் அவர்களைப் பற்றி சொன்னார்கள். அது பக்தியா மரியாதையா என்பது வேறு விஷயம். பக்திக்கும், மரியாதைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கின்றது. அது வேறு விஷயம். எங்களுக்கு மரியாதை காட்டவும் தெரியும்; பக்தி காட்டவும் தெரியும். பக்தி காட்ட வேண்டிய இடத்திலே





பக்தியைக் காட்டுவோம்; மரியாதை காட்ட வேண்டிய இடத்திலே மரியாதையைக் காட்டுவோம்; வணக்கம் செலுத்தவேண்டிய இடத்திலே வணக்கம் செலுத்துவோம். ஆனால் இதிலே இருந்து ஒன்று தெரிகின்றது. வணக்கத்திற்குரிய சங்கராச்சாரியார் அவர்களிடத்திலே மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்குப் பக்தி இல்லை என்பதை என்னாலே தெரிந்துகொள்ள முடிகின்றது. அதைத் தெரிவித்ததற்கு நன்றி. ஆனால் திரு. சி. பி. இராமசாமி ஐயர் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு). என்னாலே இப்போது பேச்சை நிறுத்த முடியாது. அவர் ஏதேனும் சொல்வதாக இருந்தால் கடைசியாகச் சொல்லட்டும்.

அவர்கள் எவ்வளவு தூரம் பொடி வைத்துப் பேசுகிறார்களோ அதைவிட அதிகமாகப் பொடி வைத்துப் பேசுகின்ற பழக்கத்தை பொடி வைப்பதிலே மிகுந்த புகழ்மிக்க பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே கற்றுக்கொண்ட கடைசி மாணவன் நான். அதை அவர்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும். சர் சி. பி. இராமசாமி ஐயர் குழு என்ன சொல்லி இருக்கின்றது என்பதைப் பற்றி ஒரு நான்கைந்து வரிகளை மாத்திரம் நான் அவர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஏதோ தன்னாட்சி வேண்டும் ; இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற ஆட்சியினுடைய அதிகாரத்திற்குள்ளே வரக்கூடாது; ஆணையாளரை நியமிக்கக்கூடாது; அறங்காவலர்களாக வருபவர்கள் எல்லாம் பல கட்சிகளின் பிரதிநிதிகள்தான்; அவர்கள் வந்து நிர்வாகம் நடத்துகிறார்கள்; இவர்கள் எல்லாம் இந்த நாட்டையே குட்டிச்சுவராக ஆக்குகிறார்கள்; என்றெல்லாம் சொல்வதுபோல் ஒரு புதிய தத்துவத்தையே புதிதாகச் சொல்ல வந்த புத்தராக விளங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் இதைச் சொல்கிறேன்; ஒரு பகுதியிலே சொல்கிறார்—இந்த நிர்வாகங்கள் எல்லாம் அரசினுடைய மேலாதிக்கத்திலே இருக்க வேண்டுமா, வேண்டாமா; இது யாருடைய பொறுப்பிலே இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பலபேர் பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்கும் இந்த அவைக்கும், நாட்டுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதால் சொல்கிறேன்.

"In many cases the heads of mutts have become essentially worldly and in some cases have been found by courts to be corrupt and immoral. Many are not even versed in the first principles of Hindu religion not to speak of the fact that they really make little attempt to propagate or promote the religious knowledge. The need for remedying this state of affairs is a matter of real urgency

இதுதான் டாக்டர் இராமசாமி குழுவினுடைய கருத்து. இங்கே யார் பொறுப்பிலோ இந்த நிர்வாகத்தை, தன்னாட்சி நிர்வாகத்தை விட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு நமக்கு உபதேசங்களாக இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதைப்பற்றி டாக்டர் இராமசாமி குழு—அவருக்குப் பிடித்தமான குழு—சொல்லியிருக்கிறது. அதையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

இன்றைக்கு நிர்வாகங்களில் ஜாயின்ட் கமிஷனர் போன்ற பதவிகளை ஏற்படுத்துவதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. இன்றைக்கு மிகப் பெரிய அளவிலே நிர்வாகம் வளர்ந்து விட்டது. அதை ஒட்டி இருக்கிற நிர்வாகிகள் போதவில்லை. அதை ஒட்டித்தான் இங்கே நகைகள் பாதுகாப்புப் பிரச்னைகள் எல்லாம் கூட வருகின்றன. இன்றைக்கு நகைகள் பாதுகாப்புப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு குழு போட வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு நகைகளைப் பாதுகாப்பதற்கு 8 அதிகாரிகள் தான் மாநிலம் முழுவதும் இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஆலயங்கள் இன்றைக்கு இந்த நகைகள், சொத்துக்கள் உள்ளடக்கிய நிர்வாகங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வெரிபிகேஷன் ஆபீசர் என்று சொல்லப்படுகிற உதவி ஆணையாளர் என்ற தரத்திலே இருக்கிற அதிகாரிகள் 8 என்று நான் கருதுகிறேன். இந்த 8 பேர்கள் தான்—அவர்களுக்குத் துணையாக சில அதிகாரிகள் இருக்கிறார்கள்— ஜெம்ஸ் ஸ்பெஷலிஸ்ட்ஸ் போன்ற அதிகாரிகள் தான் போய் இந்த நகைகளை எல்லாம் பரிசோதிக்கின்றனர்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நகைகளை பற்றி மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் கவலைப்படுவதிலே எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி. ஆனால் இந்தக் கவலை எப்பொழுது வந்தது என்பதிலே எனக்கு ஒரு சந்தேகம்.

ஒருவன் பேசுகிறான், திமிர் பிடித்துப் போய், கொழுப்பு எடுத்துப் போய், ஒரு பொதுக் கூட்டத்திலே பேசுகிறான். ஸ்ரீரங்கத்திலே இருக்கிற நகைகளைத் திருடி அமைச்சரும் முதலமைச்சரும் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்து விட்டார்கள் என்று பேசுகிறான். ஒரு தருதலையாக, கொழுப்பு பிடித்தவன் ஒருவன், திமிர் பிடித்துப் போய் பேசுகிற அந்தப் பேச்சு பத்திரிகையிலே வந்த உடனேயே, நமக்கு உபதேசம் செய்திருக்கிற மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் "ஆகா இப்படியா, உடனே இதற்கெல்லாம் ஒரு குழு போட வேண்டும்,





இந்த நகைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும், இப்பொழுது நகைகள் எல்லாம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டும் அது தங்கமாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்தை பத்திரிகையிலே தெரிவித்தார்கள். அதை இங்கேயும் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவிப்பார்கள் என்று தான் நான் எதிர்பார்த்தேன். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இந்த அறநிலையத் துறை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியின் கீழே, நிர்வாகத்தின் கீழே, எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நல்லவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசியல் வாதிகள் சிலருக்குப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் பாராட்ட மனம் வரவில்லை. தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது என்பார்கள். ஆனால், இது அரசியலுக்கு இப்பொழுது புறம்பானதாகப் போய்விட்டது. தட்டிக் கேட்க வேண்டும்; அதாவது கொஞ்சம் அதட்டி வேலை வாங்கலாம். அதுவும் இப்பொழுது நாகரீகம் அற்றதாகப் போய்விட்டது. இன்றைக்கு எப்படி வேலை வாங்குவது என்பதும் மாறி விட்டது. ஆனால் பழி போட்டு தலை வாங்குவது என்கிற இலக்கணத்தை அரசியலிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அறநிலையத் துறையிலே அதிகமாக அதை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒருவன் போக்கிரித்தனமாக பேசுகிறான். அதைத்தொடர்ந்து நம்முடைய மாண்புமிகுஉபதேசம்செய்கிறஉறுப்பினர் அவர்கள்இதற்கு எல்லாம் ஒரு குழு போட்டுவிட வேண்டுமென்று சொன்னவுடனே நான் உண்மையிலே பதறித்தான் போனேன். ஓ, நல்லவர்களுக்கெல்லாம் இப்படி புத்தி வந்திருக்கிறதே? அந்த அயோக்கியனைக் கண்டிக்க வேண்டாமா? அதற்குப் பதில், அதற்குத் துணை நிற்பது போல், ஆமாம், ஆமாம், குழு போடவேண்டியது தான் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். எத்தனை ஆண்டுகளாக இந்த நகைகள் எல்லாம் கணக்கிடப்படாமல் இருந்தது என்பதை அருள் கூர்ந்து நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். முதன் முதலில் ஆலயங்களிலே இருக்கிற நகைகளை எல்லாம் கணக்கிட வேண்டுமென்று கொண்டு வந்தவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள். அப்பொழுது பல எதிர்ப்புகள் எல்லாம் வந்தன. இப்பொழுது தன்னாட்சி என்று யாரிடத்திலோ ஒப்படைக்க வேண்டுமென்கிறார்களே, அவர்கள் எல்லாம் சேர்ந்து கூட எதிர்த்தார்கள். அது எப்படி பார்க்கலாம். அது எப்படி முடியும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் என்ன நிலைமை, நீண்ட காலமாக இருக்கிறது என்றால், நகைகள் விலை உயர்ந்த பெரு மதிப்புள்ள பொருள்கள் இருக்கிற ஆலயங்கள் 25,497; மதிப்பீடு செய்த திருக்கோயில்கள் எண்ணிக்கை 4,904. இதெல்லாம் எத்தனை ஆண்டு காலத்திற்கு முன்னாலே? 1949 ஆம் ஆண்டிலே மதிப்பீடு செய்யப்பட்டது?

அதற்குப் பிறகு அவ்வப்போது சேர்த்துக் கொண்டே வருகிறார்கள். சேர்த்த ஆலயங்களுடைய எண்ணிக்கை 1,257. இப்போது புனர் மதிப்பீடு செய்ய வேண்டுமென்று இந்த அரசு வந்ததற்குப் பிறகு சொல்லி இன்றைக்கு முடித்திருக்கிற ஆலயங்கள் 120. இன்னும் பாக்கி இருக்கிற ஆலயங்கள் 20,593. இந்த 120 ஆலயங்கள் என்னவென்றால் மிக முக்கியமான ஆலயங்கள். ஏ. சி. தரத்திலே இருக்கிற ஆலயங்கள். பல்லாயிரக் கணக்கான பல இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான அந்த நகைகள் இருக்கிற ஆலயங்கள் முதலில் பார்க்க வேண்டுமென்று நாம் ஆணை பிறப்பித்தோம். இருக்கிற அதிகாரிகளை வைத்துக் கொண்டு அவர்கள் பார்த்தார்கள். ஆனால் இன்றைக்கு விவாதத்தில் சிக்கி மாட்டிக் கொண்டு இருக்கிற இந்தத் திருவரங்கத்தை நான் சொல்கிறேன். நாம் இதிலே எவ்வளவு நுட்பமாக உள்ளே நுழைந்து பிரச்சனைகளை தீர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே இருக்கிற இந்தப்புத்தகம் திருவரங்கத்தின் நகைமதிப்பீடு புத்தகம். இது எல்லா நகைகளுக்குமான மதிப்பீட்டுப் புத்தகம் அல்ல. தங்கநகைகளின் மதிப்பீட்டுப் புத்தகம். அதைப் போல வெள்ளிக்கு இருக்கிறது, மற்ற வைரங்கள், கற்களுக்கு எல்லாம் இருக்கிறது. இது எப்போது கணக்கிடப்பட்டது தெரியுமா ? இத் திருக்கோவிலுக்கும் இதன் நிர்வாகத்திற்கு கட்டுப்பட்ட கோவில்களுக்கும் சொந்தமான நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளின் முதல் மதிப்பீடு அப்போதிருந்த நகை சரி பார்ப்பு அதிகாரியால் 1949 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவங்கப்பட்டு 1-6-1949 முடியவும், பின்னர் மீண்டும் 15-7-1951 துவங்கப்பட்டு 25-9-1951 முடிக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. அப்போதே ஆறு மாதங்கள் ஆகியுள்ளன. மீண்டும் 1983 ஆம் ஆண்டு மறு மதிப்பீடு செய்ய ஆணையாளர் உத்தரவிட்டு 26-5-1983-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு 30-6-1983 முடிய, பசலி 1392 முடிய வரப்பெற்ற நகைகள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு இவைகள் பரிசோதிக்கப்பட வேண்டுமென்றுச் சொல்லி, விவரமாக பரிசோதிக்க வேண்டுமென்று சொல்லி 1983-ல் ஏதோ இப்போது நகைகள் எல்லாம் திருடிவிட்டார்கள் ; உலகத் தமிழ் மாநாட்டிற்கு கொண்டு போய் அப்படியே மாற்றி விட்டார்கள் ; எல்லாவற்றையும் மாற்றிவிட்டார்கள் ; வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டார்கள் என்று வாயில் வந்ததை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்களே, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசுகிற அந்த கயவர்களுக்கு நான் இதை காணிக்கையாக்க விரும்புகிறேன். இதை எல்லாம் சொல்லப்படுவதற்கு முன்னாலே, சென்ற ஆண்டிலே, 30 ஆண்டுகளுக்குப் பிறகு, 35 ஆண்டுகளுக்குப் பிறகு இதை கணக்கிட வேண்டுமென்றுச் சொல்லி இங்கே கணக்கு





எடுக்கப்பட்டிருக்கிறது. இது முடிவதற்கு நான்கு மாதங்கள் ஆகி இருக்கிறது. நான்கு மாதங்கள் என்றால் இதற்கு ஏறத்தாழ நான்கு வெரிபிகேஷன் ஆபீசர்ஸ் இதிலே ஈடுபட்டார்கள். அவர்களுக்கு துணையாக நான்கு ஆய்வாளர்கள், ஜெம் ஸ்பெஷலிஸ்ட்ஸ் மற்றும் 8 பேர், 10 பேர் ஈடுபட்டு அவர்கள் இந்தக் கணக்கைத் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு இதனுடைய மதிப்பு, தங்க நகைகளுடைய மதிப்பு மாத்திரம் ஆறு கோடியே 57 இலட்சத்து 2 ஆயிரத்து 950 ரூபாய். இப்போதைய தற்கால மதிப்பு. இதற்கு முன்னாலேஎடுத்த மதிப்பு ரூ. 59,65,734.36 சரி, இந்த நகைகளை திருடுகிறார்கள், திருடுகிறார்கள் என்கிறார்களே, தயவுசெய்து நேரம் ஆனாலும் இந்த மன்றம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

திருவரங்கத்திலே இருக்கிற நகைகள் அமைப்பைச் சொல்கிறேன். இது எப்படி இருக்கிறது என்றால், யாராவது ஒருவர் போய் திறந்துவிட முடியாது. இந்த நகைகளைப் பாதுகாப்பதற்காக நான்கு பேர்களிடம் சாவி இருக்கிறது. இதைத் தவிர 3 பேர்களிடம் சீல் இருக்கிறது. இந்த ஏழு பேர்களும் போய்ச் சேர்ந்தால் தான் அந்தப் பூட்டைத் திறந்து நகையை எடுக்க முடியும். அறங்காவல் குழுத் தலைவர், உதவி ஆணையர் செயல் அலுவலர், ஸ்ரீரங்கம் நாராயண ஜீயர்—தற்காலிகமாக பதவி நீக்கத்தில் இருக்கிறார் — அந்த ஜீயர் அல்லது அவருடைய வாரிசு அல்லது அவர்கள் அனுப்புகிற ஆள், மைனர் ஆறுமுகம் முதலியார் குடும்பத்தில் ஒருவர், ஆக நான்கு பேர்களிடம் சாவி இருக்கிறது. இந்த நான்கு சாவிகளையும் போட்டுத் திறந்தால் தான் திறக்க முடியும். இந்தப் பூட்டை திறப்பதற்கு முன்னாலே ஏழு சீல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு பேர்களுடைய சீல், இதைத் தவிர சீல் வைப்பதற்கென்று மூன்று பேர்கள் இருக்கிறார்கள். கோவில் கந்தாடை வாதூல தேசிகர் அண்ணங்கார் அல்லது கோவில் கந்தாடை வாதூல தேசிகர் ரங்காச்சாரி அவருடைய சீல், சிங்கப்பெருமாள் உத்தமநம்பி அய்யங்கார் அவருடைய சீல், அர்ச்சகர் எஸ். நரசிங்கப்பட்டர் அவருடைய சீல், இப்படி ஏழு பேர் பாதுகாப்பாக வைத்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதைப் எங்கேயோ நகை போய்விட்டது ; எங்கேயோ திருட்டு போய் விட்டது ; எங்கோயோ மாற்றியரிகிவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லவில்லை என்றாலும், யாரோ அயோக்கியன் சொல்வதற்கு அவர்கள் துணை போவதைப் போல இங்கே பேசினார்கள் என்பதை வருத்தத்தோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 ஏப்ரல் 11

(முற்பகல் 10-30)

ஒரு மூன்றாண்டுகளுக்கு முன்னால் அழகர்மகாயில் நகைகள் ரிஜிஸ்ட்டரைப் பார்த்தேன். அப்போதுதான் சில புதிய விவரங்களை நான் தெரிந்து கொண்டேன். அதிலே என்ன எழுதியிருக்கின்றார்கள் என்றால், வைரம் எத்தனை காரட், அதற்கு எவ்வளவு மதிப்பு என்றுதான் எழுதி வைத்திருக்கிறார்கள். இத்தனை காரட், இத்தனை மதிப்பு என்று மாத்திரம் எழுதி வைத்திருந்தால் அதிலே தவறு நடக்க இடம் இருக்கிறது. 4 காரட் வைரம் ஒரே கல்லாக இருந்தால் அதன் மதிப்பு மிக அதிகம். ஆனால், அதே 4 காரட் 50 சிறிய கற்களாக இருந்தால் அதனுடைய மதிப்பு வேறு. சிறு சிறு கற்களாக பொடிப் பொடிக் கற்களாக இருந்தால் அதனுடைய மதிப்பு வேறு. அதற்குப் பிறகுதான் அந்த நகைகளை ஒரு ஜெம் ஸ்பெஷலிஸ்ட் மூலமாக அதிலேயே தேர்ச்சி பெற்ற ஒருவரைக் கொண்டு கணக்கெல்லாம் எடுக்கச் சொல்லியிருக்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கத் தேரைப் பற்றிச் சொன்னார்கள். அந்த தங்கத் தேர் எப்படிச் செய்கிறோம் என்றால் இருக்கின்ற நகைகளை உருக்கி தங்கத் தேர் செய்வதில்லை. அதற்காக பொது மக்களிடமிருந்து தேர்த் திருப்பணிக்கென்று தனியாக வசூலித்து, அல்லது கட்டித் தங்கமாக அவர்கள் வைத்திருந்தால் அதைக் கொண்டுதான் செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்போதுதான் அதைச் செய்வதற்கே அனுமதி அளிக்கிறோம். இப்படி ஒவ்வொரு தேர் செய்கிற போதும் ஏற்படுகின்ற அனுபவங்களை வைத்து சிலவற்றை கடைப்பிடிக்க வேண்டுமென்று நானே சொல்லியிருக்கிறேன். தங்கத்தேர் செய்கிறபோது மணலிலே கட்டிவைத்து அதை ஷேப் கொடுக்கிறபோது ஒத்தி எடுக்கிறார்கள். அப்படி செய்வதால், அந்த மணலைக்கூட கட்டி வைத்து ஏலம் போடவேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன்.

இன்னும் சொல்கிறேன், தங்கத் தேர் செய்வதற்கு முறையாக நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இப்போது திருவேற்காடு கோயிலுக்கு தேர் செய்வதற்காக ஒரு குழு போட்டோம். கோடம்பாக்கம் கோயிலுக்கு தங்கத் தேர் செய்வதற்கும் ஒரு குழு போட்டு இருக்கிறோம். அதிலே, நல்லி கந்தசாமி செட்டி, கே. பத்ரிநாராயணன், பொன்னுசாமி, எ. வீராசாமி, ரமணி, உம்மிடி பங்காரு செட்டியைச் சார்ந்த எத்திராஜ், அவர் இந்தத் தொழிலிலே ஸ்பெஷலிஸ்ட், அவர் அந்தத் தொழிலிலேயே இருக்கிறவர். ஆகவே, இதற்கும்



1984 ஏப்ரல் 11] [திரு. ஆர்..எம். வீரப்பன்]

மேலே அதிகாரிகள் இருக்கிறார்கள், வெரிபிகேஷன் ஆபிசர்கள்
இருக்கிறார்கள். டெபுடி கமிஷனர் இவர்கள் எல்லாம் அதிலே
மேற்பார்வை செய்கிறார்கள். இவ்வளவு கணக்குப்
போட்டு இந்த அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டு இருக்கிற
காரணத்தால்தான் எங்களுக்கு கொஞ்சம் சந்தேகம் வருகிறது
என்று மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்
வார்களேயானால், அதை என்ன அர்த்தத்திலே எடுத்துக்
கொள்வது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.
ஆகவே, நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கத் தேர் ஆகட்டும், நகைகள் ஆகட்டும், எந்த அள
விற்குப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதைப் பற்றி நீங்கள்
ஆலோசனை வழங்குங்கள்; தவறு என்று நான் சொல்லவில்லை.
ஆனால் ஒரு அயோக்கியன் சொல்கிற, புழுதி வாரி தூற்றுகிற
அந்தக் குற்றச்சாட்டின் மீது, அதற்கு அடிக்கல் அமைத்துத்
தருவதுபோல் இங்கே வந்து நீங்கள் கருத்துத் தெரிவிக்கிற
போது தான் உங்களுடைய நல்ல நோக்கத்திற்கு உள்நோக்கம்
இருக்குமோ என்று ஐயப்படுகிற அளவிற்கு, தங்ககட்டி போன்ற
உங்களையே சந்கேப்படுகிற சூழ்நிலைக்கு நீங்கள் எங்களைக்
கொண்டு வந்து நிறுத்துகிறீர்கள்.

இன்னும் ஒன்று சொல்கிறேன். அந்தத் தங்கத்தைத் திருட
முடியுமா என்று கூட நான் கேட்டேன். அதற்கு அந்தத்துறை
யிலே எக்ஸ்பர்ட் தந்தபதில், "24 காரட் தங்கமாக இருந்
தால்தான் அந்த ரேக்கையே செய்ய முடியும்" என்பதுதான்.
இல்லையானால் ரேக்கே செய்ய முடியாது. ஆகையால் அந்த
தங்கத்தை மாற்றி மாற்றுக்குறைக்க முடியாது என்பதை அவர்
தெரிவித்தார். ஆகவே இந்த அளவுக்கு இந்த நகைகளை
பாதுகாத்து, தங்கத்தேர் செய்வது போன்ற பிரச்சனை
களில் இந்த அரசு மிகுந்த கவனமாக ஈடுபட்டுக் கொண்டிருக்
கிறது.

ஆலோசனைகளை வழங்கினால் ஏற்றுக்கொள்கிறோம்.
ஆனால் எங்களுடைய தூய்மையை, நேர்மையை, தங்க உள்
ளம் படைத்த, நம்முடைய திருமுருக கிருபானந்த வாரியார்
பொன்மனச் செம்மல் என்று பாராட்டிப் புகழ்ந்த, புரட்சித்
தலைவருடைய உள்ளத்தை யாராவது சந்தேகப்பட்டால்,
அவர்கள் நம்பினால் ஆண்டவன் தண்டனை வழங்கட்டும்.
இல்லையென்றால் இந்த நாட்டு மக்கள் தண்டனை வழங்கு
வார்கள். இதுதான் என்னுடைய முடிவான கருத்து.

சிலைத் திருட்டைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.
சிலைத் திருட்டு இப்போதுதான் அதிகமாகிவிட்டது என்று

நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பலராமன் அவர்கள்
இங்கே ஒரு புள்ளி விவரத்தைத் தெரிவித்தார்கள். ஒன்றை
உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். சிலைத் திருட்டு இப்
பொதுதான் வெளியிலே கொண்டு வரப்படுகிறது. அதுதான்
உண்மை. சிலைத் திருட்டு எப்படி நடந்து கொண்டிருந்தது.
எப்படியெல்லாம் மறைக்கப்பட்டது என்பதைப் பற்றி என்
னிடத்திலே ஒரு கோப்பே இருக்கிறது. 1972 ஆம் ஆண்டு
திண்டுக்கல் பகுதியிலே சிலை திருடப்பட்டது. 46 சிலைகளைப்
போலீஸ் பிடித்தது. வழக்கு மன்றத்திற்கு போனது. (குறுக்
கீடு) அது எந்தக் கட்சி ஆட்சியில் என்று நான் பெயர் குறிப்
பிடவில்லை. நான் நேற்றே சொல்லிவிட்டேன். மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று அவையிலே இல்லை.
அவர்களுடைய ஆட்சியிலே வாகனத்தைச் சுரண்டிய கதையை
நான் நேற்றே சொல்லிவிட்டேன்.

ஆகவே இந்த சுரண்டுகிறவனும் கொள்ளையிடுகிறவனும்
எப்போது இருந்தான் என்பது பிரச்சனை அல்ல. ஆனால்
யார் அதற்காக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கிறார்களோ
அவர்களை நீங்கள் சந்தேகப்பட்டு கேவலப்படுத்துகின்ற அள
வுக்கு வருகிறீர்கள் என்பதைத்தான் அறநிலையத் துறையின்
சார்பிலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1972-லே 46 சிலைகள் பிடிக்கிறார்கள். சிலைகளைப்
பிடித்து கோர்ட்டிலே கொண்டுபோய் நிறுத்துகிறார்கள்.
இதற்கு கிரிமினல் அஃபன்ஸ் செக்ஷன் கிடையாது. சிட்டி
போலீஸ் ஆக்டிலே போடுகிறார்கள். அன்றைக்கே தீர்ப்பு
வழங்கப்படுகிறது. 100 ரூபாய் அவருக்கு அபராதம். 46
சிலைகள் திருடியவருக்கு 100 ரூபாய் அபராதம் போடுகிறார்
கள். அவர் பெயர் பால்பாண்டி என்று இந்த கோப்பிலே
இருக்கிறது. அதற்குப் பிறகு பல வழக்குகளிலே ஈடுபட்டிருக்
கிறார். முன்னாலே தண்டனைப் பெற்றவர், புகழ்பெற்ற
பழைய கேடி. அவருக்கு 46 சிலைகள் திருடியதற்கு கோர்ட்டிலே
100 ரூபாய் அபராதம் விதித்து, அன்றைக்கு தீர்ப்பு வழங்கு
கிறார்கள் அதற்குப் பிறகு அப்பீலுக்குப் போகிறார், அதற்குப்
பிறகு ஹைகோர்ட்டுக்குப் போகிறார்.

இரண்டு ஆண்டுகள் அந்தச் சிலைகள் காவல் நிலையத்தில்
இருக்கின்றன. மீண்டும் ஒப்படைக்கப்படுகிறது. கடந்த 4,
5 மாதங்களுக்கு முன்னால் சட்டமன்ற மேலவையிலே ஒரு
உறுப்பினர் கேள்வி கேட்டார். அதற்குப் பிறகு தான் இந்த
ஆராயவே ஆரம்பித்தோம். அதைத்தான் நேற்றைக்கு நான்
சொன்னேன். குழியைத் தோண்டி பார்த்துக் கொண்டிருக்
கிறோம். எலும்புக் கூடுகள் வந்து கொண்டிருக்கின்றன
என்று சொன்னேன். எலும்புக் கூடுகளை வைத்து இன்றைக்கு





உருவங்களைக் கண்டுபிடிக்கிற ஆராய்ச்சிக் காலத்திலே நாம்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தக் குற்றவாளிகள்
பிடிபடாமல் தப்ப முடியாது. எப்படி 100 ரூபாய் அபராதம்
போட்டார்கள்? இன்றைக்கு 46 சிலைகள் மாற்றப்பட்டிருப்
பது அரசுக்குத் தெரியுமா என்று சட்டமன்ற மேலவையில் ஒரு
கேள்வி கேட்கப்பட்டது. நானே பதறிப்போய் அதை எல்லாம்
எடுத்துப் பார்த்தால், பேரவைத் துணைத் தலைவரவர்களே,
நான் உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கும் நாட்டுக்கும் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலே மிகப்பெரிய, 4
அடி, 5 அடி உள்ள நடராஜர் சிலைகள் எல்லாம் இருக்கின்
றன. அந்தச் சிலைகளை தொல்பொருள் ஆய்வுத் துறை
யின் மூலம் ஆய்வு செய்யச் சொன்னால் சமீபத்தில் 500
ரூபாய்க்குச் செய்யப்பட்ட பித்தளை, வெண்கலச் சிலைகள்
என்று சொல்கிறார்கள்.

இன்றைக்கு நடராஜர் சிலை உலகத்தில் எத்தனை இலட்
சம், எத்தனை கோடி ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்பது
உங்களுக்குத் தெரியும். ஆனால் இரண்டு ஆண்டுகள் காவல்
துறையில் அந்தச் சிலைகள் இருந்திருக்கின்றன. இதிலே
என்ன கஷ்டம், ஏன் கிரிமினல் ப்ரொசீஜருக்குப் போகவில்லை
என்று கேட்டால் இதற்கு கிரைம் இல்லை, இதை யார்
திருட்டு கொடுத்தவர் என்று சொல்லவில்லை. அதனால் சிட்டி
போலீஸ் ஆக்டில் போட்டோம் என்கிறார்கள். கிரைம்
இருக்கிறதா, இல்லையா ஆய்வு செய்து பாருங்கள், இதை
ரீஓப்பன் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

இன்றைக்கு அந்தச் சிலைகளை மாற்றியிருக்கிறார்கள்.
சட்டமன்ற மேலவையிலே கேட்ட பிறகுதான் இந்த அரசி
னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நானே
போய் அங்கே கட்டி வைக்கப்பட்டிருக்கிற சிலைகளை எல்லாம்
எடுத்துவைத்துப் பார்த்தேன். முடியை கோருவோமே,
அதெல்லாம் அதிலே இருக்கிறது சின்ன என்கிற கணக்கிலே.
இதையா திருடுவான்? இந்த 500 ரூபாய் சிலைகளையாத்
திருடியிருப்பான்? அதிலே அடையாளம் எல்லாம் இருக்கிறது.
எந்த இடத்திலே மாற்றப்பட்டது என்பதற்கும் அடையாளம்
இருக்கிறது. அதை இப்போது நான் இங்கே சொல்ல விரும்ப
வில்லை. வழக்கு மன்றத்திலே குற்றவாளி வருகிறபோது தெரி
யும். இன்றைக்கும் அவர்கள் உலாவிக்கொண்டிருக்கிறார்கள்.
அதனால்தான் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி
யிருக்கிறோம். அவர்களை டிஃபன்ஸ் ஆக்டிலே பிடித்து உள்ளே
போடுவதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு முயற்சி
செய்துகொண்டிருக்கிறது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 ஏப்ரல் 11

இன்றைக்கு சிலை திருட்டு சிலை திருட்டு என்கிறீர்களே! இன்
றைக்கு அந்தச் சிலைகளைக் கண்டுபிடிக்கிறோம். அந்த
சிலைகள் அமெரிக்காவுக்குப் போனாலும் அல்லது இலண்டனுக்
குப் போனாலும் விடாமல் கண்டு பிடிக்கிறோம்.
அதைத்தான் காவல் துறை மானியத்தில் மிகத் தெளி
வாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் ஒன்றை
மட்டும் நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன. திடுட்டு, திருட்டு என்கிறீர்களே, திருட்டு உணர்வை
இந்தச் சமுதாயத்தில் யாராக இருந்தாலும் வளர்க்கக் கூடாது
சில ஒரு பெண்ணைத் தாயாகவும் பார்க்கிறோம், தாரமாகவும்
பார்க்கிறோம், தங்கையாகவும் பார்க்கிறோம், தமக்கையாகவும்
பார்க்றோம் இவைகளுக்கு எல்லாம் வித்தியாசம் தருவது மனித
னுடைய சிந்தனை அறிவு. ஆனால் எல்லாம் பெண் தானே என்று
அறிவுவளர்ச்சியின் அடிப்படையிலே, உலகச் சுதந்திரத்தின் அடிப்
படையில் சொல்ல ஆரம்பித்து விட்டால் மிருகத்தைவிட கேவல
மாகமனிதன் மாறுகிறான். ஆகவே வணங்கப்பட வேண்டியது
எது, மதிக்கப்பட வேண்டியது எது, பாது காக்கப்பட வேண்டியது
எது என்ற உணர்வை சமுதாயத்திலே இருந்து அழித்து விட்டால்
யாரையும் கொல்லலாம், யாரையும் கற்பழிக்கலாம், எதையும்
திருடலாம் என்ற எண்ணத்தை நாம் அறியாமலே வளர்த்துக்
கொண்டு வருகிறோம் ; வளர்த்து விடுவோம் என்பதை மாத்
திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா தலைமை).

இப்படிப்பட்ட சிந்தனை வளர்ச்சிக்கு இன்றைக்கு யாராக
இருந்தாலும் மாறக்கூடாது இந்த அடிப்படையிலேதான், இங்கே
என்னுடைய நண்பர் நெடுமாறன் அவர்கள் ஏதோ மிகுந்த
குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொல்லுவார் என்ற நிறைய விவ
ரங்களை நான் சேகரித்து வைத்திருக்கிறேன் என்று கூட
சொன்னேன். அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்
பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ராஜீ
அவர்கள் கூட ஏதாவது பெரிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லு
வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் கடைசியில்
மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது என்பார்கள் ; அப்படி
எலியைக் கூட பிடிக்காமல் ஏதோ எறும்பைப் பிடித்து
வைத்துக் கொண்டு, பார்த்திர்களா எறும்பை என்றுசொன்
னார்கள்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ஒரு ஏ.சி. கார் பற்றி
சொன்னார். அதற்குக் கடைசியில் வருகிறேன். ஏதோ
வியாசர்பாடியிலே அவர்கள் ஏதோ அரை குறையாக அவர்களுக்கு



1984 ஏப்ரல் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கொடுத்தத் தகவலை வைத்துக் கொண்டு அங்கே ஒரு பெண்.
ஈ.ஓ வாக இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஈ.ஓ. அங்கே
இல்லை. ஒரு அம்மையார் நீண்டகாலமாக அந்த ஆலய
நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
யாருக்கோ பகுதியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற
தகவல் வந்த உடனேயே அறநிலையத் துறை நடவடிக்கை எடுத்
திருக்கிறது அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.

City Tenant Prctection Actலே அவர்கள் பாதுகாப்பு பெற்றிருக்
கிறார்கள். எப்படியாவது நாங்கள் விலைக்கு வாங்கிக் கொண்
டிருக்கிறோம் என்றல்லாம் அவர்கள் சொல்லி இருக்
கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள்
அவர்கள் சொன்னபோது-அவர் சொல்லித் தீர வேண்
டும் என்பதற்காக சொன்னார்கள்-திரு ராஜீ அவர்கள் அப்படிப்
பழக்கப்பட்டவர்கள் அல்ல. மிகுந்த கண்ணியத்தோடு எந்த
விவாதத்தையும் எடுத்து வைக்கிறவர். ஆனால் அவர் சொல்லு
கிற போது பால கிருஷ்ணன் என்ற பெயரைச் சொல்லி அவர்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சார்ந்தவர் என்று சொன்னார். அவர் எந்தக் கழகத்தைச்
சார்ந்தவர் என்று தெரியாது. ஆனால் இந்தத் தவறு நடை
பெறுகிறது என்று நம்முடைய அரசுக்கும் ஆணையர்க்கும் தெரி
வித்தவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தினர்கள்தான். எம்.ஜி.ஆர் மன்றத்தைச் சேர்ந்தவர்
கள். அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் நடவடிக்கையே எடுக்
கப்பட்டிருக்கிறது, அதை மாத்திரம் இந்த நேரத்திலே உங்களுக்
குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரைத்
துணைத் தலைவர் அவர்களே அந்த ஆலயத்திலே பணியாற்றிய
எக்ஸ்சிகியூட்டிவ் ஆபிசருடைய பெயரை நான் மாற்றி சொன்ன
தற்கு வருத்தப்படுகிறேன். ஆனால் அதுவல்ல பிரச்சினை. நான்
தெரிந்து கொள்ள விரும்புவது அந்த குறிப்பிட்ட நிலத்தில் நீண்ட
காலமாக இருந்து வருகின்ற கண்ணம்மா என்பவர் தன்னுடைய
மகளுக்கு அந்த ஆலய நிலத்தை-வளர்ப்பு மகள் மல்லிகா என்ப
வருக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார்கள். அது தவறா இல்
லையா என்ற விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால்
உயில் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது
அந்த அறங்காவலர் தலைவராக இருந்த தேசிங்கு என்பவர்
கள்ள நோட்டு இராமசாமி என்பருடைய மனைவி சரோஜாவை
அந்த இடத்திலே குடி வைத்து, சரோஜா என்பவர் கண்ணம்மா
என்பவருக்கு மகள் என்று காட்டி, பத்திரப் பதிவு செய்து
உள்ளார். அது தான் டாக்டர் கிருஷ்ணமூர்த்திக்கு விற்கப்பட்டது
என்பதற்கு அமைச்சர் என்ன சொல்கிறார். அதோடு நடவடிக்கை
எடுத்திருக்கிறோம் என்கிறார்கள். என்ன நடவடிக்கை
டுக்கப்பட்டி ருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் இங்கே சொல்லிக் கொண்டே இருக்கிறேன் அவர் திரும்பத் திரும்ப நான் முன்னாலே சொன்னதைப் போல மலையைக் கெல்லி எறும்பை பிடித்தது போல சொல்லிக் கொண்டு இருக்கிறார். இந்தத் தவறு நடந்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னவர்களே எங்களுடைய கட்சிக் காரர்கள் தான். அங்கே யார் அரங்காவலர்கள் குழு தலைவராக இருந்தார்—இல்லை என்பதல்ல. அந்த நிர்வாக அதிகாரி தவறு இழைத்திருக்கிறார் என்று தெரிந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறோம். வழக்கு நீதிமன்றத் திலே இருக்கிறது. City Tenants Protection Act. லே பாதுகாப்பு பெற்றுக்கொண்டு எங்களை வெளியேற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே சம்பந்தப் பட்டவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள், அதிலே எந்தவிதமான தயவு தாட்சண்யமும் கிடையாது. அது அறங்காவலராக இருந் யாலும் சரி, தலைவராக இருந்தாலும் சரி. அதிகாரியாக இருந் தாலும் சரி.

இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ஒரு பிரச்சினையை கிளப்பி ஏ.சி. கார், ஏ.சி. கார் என்று குறிப்பிட்டார்கள் நான் அவர்களுக்கு பதிலைச் சொன்னேன். மாண்புமிகு திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர் அந்தக் திருவரங்கம் நிர்வாக அதிகாரி, ஏ.சி. கார், வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல ஆரம்பித்தார். நான் தவறான தகவலை தராதீர்கள். ஆதாரத்தோடு பேசுங்கள். அது ஆலயத்தினுடைய கார் என்று நான் விளக்கமளித்தேன். விளக்கம் அளித்த உடனே நம்முடைய நெடுமாறன் அவர்கள் எழுந்து அது ஆலயத்தினுடைய காராக இருந்தாலும் எப்படி வைத்துக் கொள்ளலாம், தமிழகத்திலே ஆல யத்திற்கு ஏ.சி. கார் எதற்கு? ஆண்டவனா அதிலே பயணம் செய்கிறான்? என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவசரத்திலே, ஆத்திர ரத்திலே தவறான தகவலை பொதுக் கூட்டத்திலே பேசுவது போல் சட்டமன்றத்திலே பேசக்கூடாது. தமிழகத்திலே வேறு எந்த ஆலயத்திற்கும் ஏ.சி. கார்கள் கிடையாது. அதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படியானால் இந்த திருவரங்கத்திற்கு மாத்திரம் ஏ.சி. கார் ஏன் வந்தது? அந்தச் சூழ்நிலையை தயவு செய்து விளக்கிவிடுகிறேன்.

திருச்சி என்பது தமிழக அரசை சேர்ந்த அமைச்சர்கள் மத்திய அமைச்சர்கள், வெளி மாநில அமைச்சர்கள் முக்கிய பிர முகர்கள் வந்து இறங்குகின்ற முக்கியமானபகுதி. அங்கே இறங்கித் தான் தஞ்சைக்கும் போகிறார்கள். புதுக்கோட்டைக்கு போகி





றார்கள். மற்ற பகுதிகளுக்கு எல்லாம் போகிறார்கள். அவர் களுக்கு எல்லாம் வாகன வசதி செய்ய வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிறது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், பல நேரங்களிலே பிரமுகர்கள் எண் ணிக்கை அதிகமாக வந்து விட்டால், அவர்கள் கார்கள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். அப்போது வாடகைக்கு பல கார்களை எடுக்கிறார்கள். அந்த வாடகைக் கார்கள் ஒழுங்கானவையாக இருக்கிறதா, அதை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் சரியானவர்களாக இருக்கிறார்களா, அவர்கள் எல்லாம் கெட்ட பழக்கங்களுக்கு உட்படாமல் இருக்கிறார்களா என்று தெரியாது. அவர்கள் எல்லாம் அமைச்சருக்கு வண்டிகளை ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். அப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்ட போது நான், அங்கே போனபோது எனக்கே வண்டி கிடைக்க வில்லை. ஒரு டாக்சியை யாரோ ஒருவர் கொண்டு வந்து நிறுத்தினார். ஒரு சம்பந்தம் இல்லாத, தெரியாத, முன் பின்அறியாத ஒருவருடைய வண்டியிலே ஏறுவது எனக்கு அவ்வளவு விருப்பமாகப் படவில்லை. நான் அப்போதுதான் பக்கத்திலே திருவரங்கம் ஆலயத்திலே கார் இருக்கிறதா? என்று கேட்டேன், இருக்கிறது என்று கொடுத்தார்கள். அந்த கார் சரியான கண்டி சனிலே இல்லை. காரணம் அவர்கள் லோக்கல் சவாரிக்கு வைத்திருக்கிறார்கள். அந்த அளவிலேதான் பராமரிப்பு செய்யப் படுகிறது. நாம் நீண்டதூரம் பயணம் செய்கிறோம். கடந்த 21 ஆம் தேதி காலை கோவையிலே இறங்கி, இரவு 10– மணிக்கு நான் கோயம்புத்தூருக்கு திரும்பி வந்து, 12 மணிக்கு ரயில் ஏறி, திருச்சிக்கு வந்து, மேதகு ஆளுநருடைய நிகழ்ச்சியிலே புதுக்கோட்டையிலே கலந்து கொண்டேன். அந்த ஒரு நாளிலே இந்த கொளுத்துகிற வெய்யிலிலே 250 மைல் தூரத்தை ஒரு காரிலே தான், உதகமண்டலம் மலையைத் தாண்டி, கீழே இறங்கி ஒரு தேயிலைத் தொழிற்சாலையைத் திறப்பதற்காக சென்று விட்டு வந்தேன். அரை மணி நேரம் கூட ஓய்வு இல்லாமல், ஏதோ அமைச்சராகப் பிறந்து விட்டால், ஏதோ தண்டனை பெற வந்திருக்கிறார்கள் * * *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சு அவைக் குறிப்பில் இடம் பெறாமல் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புகுமி பேரவைத் துணைத்தலைவர் :** அந்த வார்த்தை கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[1984 ஏப்ரல் 11

திரு. அன்பில் தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, * * என்று சொல்வது சட்டசபைக்கு மரபு அல்ல. நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னதுபோல அது நீக்கப்பட வேண்டியதே. இனிமேலாவது, அவர்கள் அறநிலையத்துறை அமைச்சர், ஆண்டவனைப் பற்றிப் பேசவேண்டியவர் அந்த மாதிரி வார்த்தைகள் பேசாமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நீக்கியதற்கு நன்றி.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, யார் யாரை எப்படி அழைக்கவேண்டுமோ, அப்படி அழைக்கிற நிலையில் வந்தது. பக்தனை, பதிதன் என்றும் அழைக்கிறோம். அது எல்லாம் இலக்கணத்திலே இருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது போல் அதை நீக்கிவிடலாம். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.

ஆனால் ஏ.சி. காரிலே போவது ஏதோ பாவம், என்பதைப் போலவும், ஏதோ பாதகம் என்பதைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படிப் போகலாம், ஆணை இருக்கிற போது என்று சொன்னார்கள். அன்றைக்கு அப்போதுதான் அந்த கார் சரியாக இல்லை. நான் உடனே சொன்னேன். உங்களுக்கு எத்தனை கார் இருக்கிறது. 2 கார் இருக்கிறது. அப்படியானால் ஒரு காரை நன்றாக ரிப்பேர் பார்த்து, ஏ. சி. செய்து வைத்துக்கொள்ளுங்கள். அவசரத்திற்கு மாத்திரம் அந்தக் காரை உங்களுக்குப் பயன்படுத்துங்கள். மற்ற நேரத்திலே திருச்சியிலே கலெக்டர் அலுவலகத்திலேயிருந்து கேட்டால் வாடகை வாங்கிக்கொண்டு அதைப் பயன்படுத்துங்கள். எப்போதும் நம்முடைய மாநில அரசிலே ஒரு வழக்கம் இருக்கிறது. எந்த எந்தத் துறை அமைச்சர்கள் செல்லுகிறார்களோ, அந்த அந்தத்துறை சம்மந்தப்பட்ட கார்கள், அவர்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இன்றைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் என்றால், அந்தக் கார்ப் பேரகுனிலிருந்து கார் வருகிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் என்றால், முதல் முன்னுரிமை அந்தத் துறையிலேயிருந்து வருகிறது. ரெவின்யூ துறை என்றால் ரெவின்யூவிலே யிருந்து வருகிறது. அவர்களுக்கு எல்லாம் மேலாக வருகிற அமைச்சர்களுக்கு, மற்ற மாநிலத்திலேயிருந்து வருகிறவர்களுக்கு, மத்திய அமைச்சர்களுக்கு, கலெக்டர் கார் வசதி செய்தாகவேண்டும். அப்படி வருகிறபோதுதான் வாடகை காரைக்கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். வாடகைக் காரிலே யார் யார் எப்படி வருகிறார்கள். என்றே தெரியவில்லை.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 ஏப்ரல் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

ஆகவேதான் அன்றைக்குத்தான் அதை அவர்களுக்கு சொன்னேன். இந்தக் கார் வாங்கியது 12-7-1977-லே. அப்போதுதான் நம்முடைய அரசாங்கம் பதவி ஏற்றுக்கொண்டது. நம்முடைய ஆணையின் மீது வாங்கப்படவில்லை. நான் முன்னாலே சொன்னதைப் போல ஆலயங்களிலே எல்லாம் எதையாவது வாங்கவேண்டும் என்றால், அரசினிடத்திலே கேட்டுத்தான் வாங்கவேண்டும் என்பதில்லை. அவர்களே முடிவு எடுத்து, ஆணையாளருடைய அனுமதியைப் பெற்றே வாங்கலாம். இதிலே இதை யார் வாங்கியது என்றால், காலம்சென்ற, டி. எம். நாராயணசாமி பிள்ளை, அவர்கள் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்தார். அவர்கள் பயன்படுத்துவதற்காக ஸ்ரீரங்கம் காரை பயன்படுத்திக்கொண்டு, சமயபுரத்திற்கு என்று ஒரு காரை 12-7-1977-லே வாங்கினார்கள். அன்றைக்கு 31,850 ரூபாய்க்கு வாங்கப்பட்டது அந்தக் கார். நான் இந்தக் கார் பிரச்சினை வந்து, திருச்சியிலே கலெக்டர் அலுவலகத்திலே இந்தக் கார் கிடைக்காமல், திண்டாடுகிறார்கள். வாடகைக்கு கார் எடுத்து, அங்கே வாடகையைத் தருகிறார்கள், வாடகைக்காரிலே வருபவர்கள், யார் வருகிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆகவே ஒரு துறையினுடைய பிரிவான காராக வந்தால் சரியாக இருக்கும் என்று சொல்லி, இதை ரிப்பேர் செய்யச் சொன்னேன். அப்போதுதான் இதற்கு ஏ. சி. பொருத்தப்பட்டது. ஏ. சி. பொருத்தப்பட்டதற்குப் பிறகு இந்தக் கார் வாடகை மூலம் 29,619. ரூபாய் 65 காசு சம்பாதித்து இருக்கிறது. அதற்கு பெட்ரோலுக்கான செலவு 14,848 ரூபாய் 54 பைசா ஆகும்.

(முற்பகல் 10-50).

ஒரு 14 ஆயிரத்துச் சொச்சம் ரூபாய் அந்த ஆலயத்திற்கு வந்திருக்கிறது. அதை யார் யார் பயன்படுத்தினார்கள் என்றால், மத்திய அமைச்சர்களுக்காக வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். வேறு அமைச்சர்களுக்காவும், மாநில அமைச்சர்களுக்காகவும் வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். நான் பயணம் செய்தாலும். அரசினுடைய துறையிலேயிருந்து அந்தக் கட்டணத்தை வாங்குகிறார்கள். காரணம் அந்த ஆலயம் இந்த அரசினுடைய துறையில் வருவதில்லை. அது தன்னாட்சிப் பெற்றது. அதை மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். ஆகவே, நான் பயணம் செய்தாலும் வாடகை வாங்குகிறார்கள். நான் அதை சரியாக வைக்கச் சொன்னதன் பலன் எனக்கு எப்போது கிடைத்தது என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளச் சேதத்தை பார்வையிடச் சென்றபோது, அந்தக்

காரிலேதான் போனார்கள் என்ற செய்தியைக் கேள்வி பட்டதும் கிடைத்தது. ஆனால், அதற்காவும் வாடகை வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏ. சி. கார் வாடகை. நாங்கள் எல்லாம் பயணம் செய்தால் நான்-ஏ. சி. கார்தான் வாடகை. அவ்வளவு கணக்கோடு இருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நான் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டேன். இந்தக் கார் மிக நன்றாக இருக்கிறது. இதையே திரும்பவும் பயன்படுத்துங்கள் என்று சொன்னதாக சொன்னார்கள். இல்லை என்றால் மதுரையிலேயிருந்து வரவேண்டும்; சென்னையிலேயிருந்து வரவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இது மாற்றியது. மத்திய அமைச்சர்கள் எல்லாம் இதிபல பயணம் செய்கிறார்கள். சில ஆலயங்களிலே வி. ஐ. பி. என்கிற மிகவும் முக்கியஸ்தர்கள் வருகிறபோது பயன்படுத்துவதற்காக இப்படிப்பட்ட கார்களை வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஆலயத்திலே இதுவும் ஒன்று. அதைத்தவிர, சமீபத்திலே அவர்கள் தஞ்சை பல்கலைக் கழகத்திற்கு போகிற சமயத்திலேகூட, இந்தக் கார் தான் ஓதுக்கி வைக்கப்பட்டது.

ஆகவே எந்த அள்விற்கு அது பயன்படுகிறது என்பதற்காக இதைச் சொல்கிறேன். ஆனால் இதிலே ஒரு கருத்தைச் சொல்கிறேன். அரசு ஆணை இருக்கிறதே, நீ எப்படிச் செல்லலாம் என்பது போல பேசினார்கள். நீ என்று என்னைச் சொல்லவில்லை, அமைச்சர்கள் என்ற வகையில் எப்படிப் போகலாம் என்று சொன்னார்கள். உடனே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் போகவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் போனேன், ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் அது ஏ. சி. கார் ஆயிற்றே என்று, ஏ. சி. யிலே போகவேண்டும் என்பதற்காகப் போகவில்லை. ஒரு மணி நேரம் ஏ. சி. யிலே போனால் ஒரு நாள் முழுவதும் நான் கஷ்டப்பட வேண்டும். ஆனால் நான் ஏ. சி. காரையே பார்க்காதவன் அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய கருணையினாலே ஒரு ஏ. சி. காரையும் வைத்திருக்கிறேன், ஏ. சி. பொருத்திய வீட்டையும் வைத்திருக்கிறேன், அமைச்சராக வருவதற்கு முன்னாலேயே வைத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவே, அமைச்சர் ஆதனாலேதான் ஏ. சி. காரிலே ஏற வேண்டும் என்பது அல்ல. ஏ. சி. காரிலே ஏறினால் அமைச்சர்கள் தண்டனைக்கு உரியவர்களும் அல்லர் இந்த அரசு ஆணை ஏன் என்பதை அவர்களுக்குச் சொல்லி



றேன். ஏனென்றால் அரசு ஆணை பிறப்பிப்பதே எங்களுக்குத்தான் அதன் விதிகள் முதலிலே வருகிறதே தவிர, அதற்கு பிறகுதான், மாண்புமிகு உறுப்பினர்களுககுப் போகிறது இந்த அரசு ஆணை ஏன் போடப்பட்டது என்றால், இதே திருச்சியிலேதான் அந்தப் பிரச்னை எழுந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாடகைக்கு கார்களை எடுக்கிறபோது எத்தனை ஏ. சி. கார்களை எடுப்பது என்று கேட்கும்போது, ஒரு ஏ. சி. கார் ஒரு கிலோ மீட்டருக்கு 4.20 காசு ஆகிறது. அப்படியானால் அதை யார் யாருக்கு வழங்குவது என்ற பிரச்னையை எழுப்பி, அதை அவர்கள் தலைமைச் செயலரிடத்திலே கேட்டார்கள். அதற்கு ஒரு விளக்கத்தை கொடுத்தார்கள். அதாவது புரோவைட்டட்தி ஏ. சி. கார், என்று, ஆகவே இருக்கின்ற ஏ. சி. காரிலே எந்த அமைச்சராவது ஏறினால் தலையை வெட்டி விட வேண்டும் என்று அரசு ஆணை இல்லை.

இன்றைக்கும் மதுரையிலே ஏ. சி. கார் இருக்கிறது. கோவையிலே இருக்கிறது. இன்னும் சில இடங்களில் பழுது பட்டுப்போய் இருக்கிறது. அதைத்தான் எங்கள் தலையிலே கட்டி விடுகிறார்கள். அது ஊட்டிக்குப் போய் சேருவதற்குள், 3 இடங்களிலே நின்று விடுகிறது. அது வேறு பிரச்சனை. ஆனால் ஏ. சி. காரிலே அமைச்சர்கள் ஏறுவதே கூடாது என்பது அரசு ஆணை அல்ல. வாடகைக்கு எடுத்து புரோவைட் பண்ணுவது, அல்லது அரசாங்கத்திலே அதற்கு செலவிடுவது அதை அமைச்சர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர்களுக்கும் வாடகைக்கு புரொவைட் பண்ணுவது என்ற வகையிலே போட்டிருக்கிறார்களே தவிர, ஏதோ ஏ. சி. யிலே ஏறுவதற்கு இவர்களெல்லாம் தகுதியற்றவர்கள் என்று அல்ல.

ஏன் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களே கூட நாளைக்கு வரலாம். அவர்கள் ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆசைப்படுபவர்கள் வரவேணடும் என்று நான் வாழ்த்துகிறேன். அது வேறு விஷயம். ஆனால் இப்படி இந்த அமைச்சர்களை, சட்டமன்ற உறுப்பினர்களே கேவலப் படுத்துகின்ற முறையிலே, எப்படி ஏ. சி. காரிலே போகலாம் என்று கேட்பது சரியல்ல. ஏ. சி. காரிலே இவர்கள் எல்லாம் போக வேண்டும் என்பதற்காக அல்ல, அந்த ஆலயத்தின் நிர்வாக வசதிக்காக அது எற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆயிரத்து சொச்சம் ரூபாயை அது சம்பாதித்து இருக்கிறது இந்த ஒன்றிரண்டு வருடங்களிலே. இதற்கு பெட்ரோலுக்காக செலவு பண்ணியிருப்பது 14,848 தான். ஆகவே, இந்தப் பிரச்சினையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் தெளிவு அடைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

[மாண்புமிகு திரு. ஆர். எம்.வீரப்பன்] [1984 ஏப்ரல் 11

திருவரங்கத்திலே ஏற்பட்டுவிட்ட மரணத்தைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை மிகத் தெளிவாக காவல் துறையினர் ஆய்வு செய்து அறிக்கை தந்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்கோ அவர் தங்கியிருந்த இடத்திலே யாரோ தூக்குப் போட்டுக் கொண்டால், அதை மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அது போல, அவர் ஏதோ ஆலயத்திலிருந்து நகைகளை சரி பார்த்தார். அங்கே திருடு போய்விட்டது. அதைக் கண்டு பிடித்து விட்டார் என்றெல்லாம் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இல்லை. எந்த தவறுக்கும் அங்கே எந்தவித காரணமும் இல்லை. எந்தத் தவறுக்கும் அடிப்படையே இல்லை. ஆலைய நகைகள் அங்கேயே இருக்கின்றன. நமது மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்கு சொல்கிறேன். அவர் எந்த ஆலயத்திலே போய், அந்த ஆலய நகைகளை பார்வையிட வேண்டும் என்றாலும், எந்த ஸ்பெஷலிஸ்ட்டை அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றாலும், அழைத்துக் கொண்டு, எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம்.

தவறு நடந்திருக்கிறது என்று தெரிவித்தால் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்பொழுதுதான் தெரிகிறது. நடைபெற்ற அந்தத் தவறுகள் எப்பொழுது நடைபெற்றன என்று. எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அல்ல. கும்பகோணத்திலே வாகனத்திற்குரிய வெள்ளியைத் திருடியவர்கள் எப்போது திருடினார்கள். அதற்குப் பிறகும் இங்கே சொல்லப்பட்ட பல குற்றச்சாட்டுகள் எப்பொழுது நடந்தன ? மதில் சுவரையே இடித்துக் கடை கட்டியது எப்போது ? கோர்ட்டிற்குப் போய்விட மாட்டேன் என்று சொன்னது எப்போது ? அது எல்லாம் வரும் ? தோண்டினால் எலும்புக் கூடுகள் தான் வரும். அதற்கு நாங்கள் என்ன செய்வது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்தன்மையோடு அவைகளையெல்லாம் விட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் அவர்கள் விட விட மேலே ஏறி சவாரி செய்வோம் என்பது போல் வருகிறார்கள். ஆகவே அங்கே எந்தவிதமான தவறும் நிகழவில்லை. ஆலயத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லை. அது சட்டம்ஒழுங்குப் பிரச்சினை. அதைக் காவல் துறை மிகுந்த தீவிரமாகஆய்ந்து முடிவு எடுத்திருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினையிலே எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடுகளும் கிடையாது.

**திரு. ஜே. எஸ். இராசு :** என்ன முடிவு எடுத்தது என் எங்களுக்குத் தெரியவில்லை.



1984 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் :** அது தற்கொலைதான் என்று மிகத் தெளிவாக ஆய்வு செய்து காவல் துறை அறிக்கை அனுப்பி இருக்கிறது.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு காவல் துறையினர் ஆராய்ந்து அது தற்கொலைதான் என்று அறிக்கை தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் சி.பி.ஐ. புலன் விசாரணை செய்ய வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாயத்தேவர் உள் துறை அமைச்சர் திரு. சேத்திக்கு எழுதி நாங்கள் அப்படிப்பட்ட ஒரு விசாரணை வைக்கிறோம், கவனிக்கிறோம் அதைப்பற்றி மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று திரு. மாயத்தேவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விசாரணை மத்திய அரசால் வைக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இப்போது நம்முடைய தி.மு.க. வினருக்கு மத்திய பாராளுமன்றத்திலே மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. அது நமக்குத் தெரியும். ஆகவே எடுத்ததற்கெல்லாம் அவர்கள் மத்திய அரசினிடத்திலே கேட்பார்கள், விசாரணை கேட்பார்கள், நாடாளுமன்றத்திலே பேசுவார்கள். உடனே அங்கே இருக்கிற அமைச்சர் பதில் சொல்வார். அது அங்கே கேட்க வேண்டிய கேள்வி. அதற்கும் மாநில அரசுக்கும் சட்டமன்றத்திற்கும் தொடர்பு இல்லை. அப்படி சி.பி.ஐ. விசாரணைக்கு வந்தால் அவர்கள் ஆதாரம் கிடைத்தால் அந்தச் சாட்சிகள் அவர்களுக்குக் கிடைத்தால் தைரியமுள்ளவர்கள் நாணயமுள்ளவர்கள் சாட்சிகளைக் கொண்டு போய் நிறுத்தினால் அந்த சி.பி.ஐ. சட்டம் இருந்து சட்டம் அனுமதி தந்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்தால் நடக்கட்டும்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சி.பி.ஐ. விசாரணை என்பது மாநில அரசிடம் கேட்டு மத்திய அரசு நியமிப்பது. அது மாநில அரசிடம் கேட்கவில்லை. நாங்கள் அனுமதிக்கவும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதித்து இருக்கிற காரணத்தினால் நான் போலீசினுடைய அறிக்கையை படித்து விடுகிறேன். வெங்கிடாசலம், தகப்பனார் பெயர் பெருமாள் கவுண்டர், காட்டு நாயக்கன்பட்டி, ஜலகண்டபுரம், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீரங்கம் 113 மாணிக்கம் பிள்ளைத் தெருவில் குடியிருந்தவர். 18 மற்றும் 19-12-1983 இல் இறந்து போனது குறித்து

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 ஏப்ரல் 11

ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண் 1036/83 பிரிவு 174, சி.ஆர்.பி.சி.யின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. 19-12-1983 ஆம் தேதி 11-30 மணிக்கு சின்னப்பொண்ணு கணவர் பெயர் ராமகிருஷ்ணன், ஸ்ரீரங்கம் 113, மாணிக்கம் பிள்ளைத் தெருவில் குடியிருப்பவர் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் ஆஜராகி தனக்குச் சொந்மான வீட்டில் மேல் மாடியில் வாடகைக்குத் தங்கியிருந்த வெங்கடாசலம் தகப்பனார் பெயர் பெருமாள் கவுண்டர் என்பவர் இறந்து போனது குறித்து வாக்கு மூலம் கொடுத்ததை ஸ்ரீரங்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. பேடிச்சாமி பதிவு செய்து ஸ்ரீரங்கம் காவல் நிலைய குற்ற எண் 1036/83 பிரிவு 174 சி.ஆர்.பி.சி.படி வழக்குப் பதிவு செய்து இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்திருக்கிறார். ஸ்ரீரங்கம் உதவி ஆய்வாளர் 11-45 மணிக்கு சம்பவ இடம் சென்று ஸ்ரீரங்கம் கிராம நிர்வாக அதிகாரி கிருஷ்ணசாமி, உதவி ஆடிட் அலுவலர் மருதவாணன் மற்றும் பஞ்சாயத்தார்கள் சாட்சிகள் முன்பாக விசாரணை ஆரம்பித்திருக்கிறார்.

(முற்பகல் 11-00)

ஸ்ரீரங்கம் உதவி ஆய்வாளர் உட்புறமாக பூட்டியிருந்த அறையின் கதவை கிராம நிர்வாக அதிகாரியின் முன்னிலையில் உடைத்து உள்ளே சென்று பார்க்க, வெங்கடாசலம் அறையின் மேல் கூரையில் உள்ள மரச்சட்டத்திலிருந்து 12 அடி நீளம் உள்ள முறுக்கிய நூல் கயிறு கொண்டு தூக்கில் இட்டு இறந்து தொங்கிக் கொண்டு இருந்து இருக்கிறார். முடிச்சானது வெங்கடாசலத்தின் கழுத்தின் இடது புறம் இருந்திருக்கிறது. பிரேதத்தின் கீழே தரையில் மலம் சொட்டு கிடந்து இருக்கிறது. பிரேதத்தின் வாயில் இருந்து நாக்கு நீட்டிய வண்ணம் வெளியே வந்து பற்களுக்கு இடையே தடித்த வண்ணம் இருந்துக் கொண்டிருக்கிறது. கண்கள் திறந்த வண்ணம் இருந்திருக்கின்றது. இறந்து போன வெங்கடாசலத்தின் பிரேதத்தின் மீது பச்சை நிற சட்டை, லுங்கி, கால் சட்டைக் காணப்படுகிறது. ஸ்ரீரங்கம் உதவி ஆய்வாளர் முடிச்சை அவிழ்த்து இறந்து போன வெங்கடாசலத்தின் பிரேதத்தை கீழே தரையில் கிடத்தி பார்வை மகஜர் தயார் செய்திருக்கிறார். பிரேத பரிசோதனை பகல் 12 மணி முதல் 16 மணி வரை செய்தும் பஞ்சாயத்துதாரர்கள் இறந்து போன வெங்கடாசலம், தானே தூக்கில் இட்டுக் கொண்டு இறந்து போனதாக அபிப்பிராயப்படுகிறார்கள். பிரேதத்தை காவலர் 1584 அந்தோணிசாமி என்பவர் மூலம் பிரேதப்பரிசோதனைக்காக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது உதவி ஆய்வாளர் சம்பவ ஜாகையில் இருந்து 16-15 மணிக்கு.



1984 ஏப்ரல் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தூக்கில் தொங்க பயன்படுத்தப்பட்ட கயிற்றை கைப்பற்றி இருக்கிறார். ஸ்ரீரங்கம் மருத்துவ அதிகாரி சுரேந்திரபாபு, எம்.டி. பரிசோதனை 16-15 மணி முதல் 17-30 மணி வரை செய்து இருக்கிறார். பிரேத பரிசோதனைச் செய்த மருத்துவ அதிகாரி சுரேந்திரபாபு கீழ்க்கண்டவை தந்துள்ளார். கயிறு அழுந்திய அடையாளம் 3 எம்.எம். பருமன் உடையது. கழுத்தில் காணப்படுகிறது. கண்கள் திறந்தும், வாய்திறந்தும், நாக்கு வெளியே நீட்டிய வண்ணம் பற்கள் இடையே காணப்படுகிறது. வாயிலிருந்து உமிழ்நீர் மார்பில் வழிந்து இருக்கிறது. பற்கள் அனைத்தும் உள்ளன. இதயம் 250 கிராம். இதயத்தின் வலது வெண்டிரிகள் உறைந்து இரத்தம் காணப்படுகிறது. சுவாச உறுப்பு 200 கிராம். Thyroid bone உடைந்து உள்ளது. இரைப்பையில் 30 எம்.எல். திரவ உணவு காணப்படுகிறது. ஈரல் 1,400 கிராம், கிட்னி எடை 150 கிராம். மூளை எடை 1,400 கிராம். பிரேதப் பரிசோதனை முடிந்த நேரம் மாலை 5-30 மணி. தேதி 19-12-1983. குடல் பகுதியும் Thyroid bone எடுக்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டுள்ளது. வெங்கடாசலம் பிரேதத்தை பிரேத பரிசோதனைச் செய்த மருத்துவ அதிகாரி இறப்பின் தன்மையை குடல் பகுதி T yroid obne இரசாயன பரிசோதனைக்குப் பிறகு தான் அபிப்பிராயம் தெரிவிக்க இயலும் என்றும், இருப்பினும் இறந்து போன வெங்டாகசலம் தூக்கில் இட்டுக் கொண்டதன் காரணமாக மூச்சு திணறி இறந்து இருக்கக் கூடும் என்றும் அபிப்பிராயப்பட்டுள்ளார். இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்பாக 12 மணி முதல் 16 மணி நேரத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடும் என்றும் மருத்துவ அதிகாரி அபிப்பிராயப்பட்டு இருக்கிறார்கள். பிரேத பரிசோதனைக்குப் பின்பு வெங்கடாசலம் பிரேதமானது அவருடைய சகோதரர்களான ஐயன்பெருமாள், முருகன் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு உதவி தணிக்கை அதிகாரி அவர்கள் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். பிரேத பரிசோதனைக்குப் பிறகு காவலர் 1584 அந்தோணிசாமி 19-12,1983 இரவு 20-45 மணிக்கு வெங்கடாசலம் அணிந்து இருந்த துணிகளை ஆஜர் செய்துள்ளார். விசாரணையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிகின்றன. வெங்கடார்சலம் சேலம் மாவட்டம், ஜலகண்டபுரம் பாப்பநாயக்கன் பட்டியைச் சேர்ந்தவர். எம்.ஏ. தமிழ் பட்டம் பெற்றவர். இவர் 26-10-1983 ஆம் தேதி முதல் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஸ்வாமி கோயிலில் உதவி தணிக்கை அலுவலகத்தில் தணிக்கை ஆய்வாளர் பயிற்சியாளராக சேர்ந்து பயிற்சி பெற்று வந்து இருக்கிறார். இவர் கோயிலில் சேர்ந்து பயிற்சி பெறவில்லை. இங்கே அறநிலையத் துறை ஆணையாளர் இடத்தில் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ச்சிப் பெற்று அங்கே அந்த இடத்தில் இருக்கிற ஆடிட் அலுவலகத்தில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டவர். இவர் ஆலய ஊழியர் அல்ல. அலுவலகத்தில் தணிக்கை ஆய்வாளராக பயிற்சிப் பெற்று வந்திருக்கிறார்.

இந்தப் பயிற்சி சுமார் 3 மாதங்கள் நடைபெறும். இவர் மாணிக்
கம் பிள்ளைத் தெருவில், 113 எண் உள்ள இல்லத்தின் மாடியில்
ரூபாய் 50 வாடகைக்கு கலியபெருமாள் 27/83 தகப்பனார்
பெயர் மாரியப்பன், திருமழிசையைச் சேர்ந்தவர் உடனும்,
தணிக்கை அதிகாரி சுந்தரம், தகப்பனார் பெயர் கோவிந்தராஜன்
உடனும் தங்கியிருந்து இருக்கிறார். சாட்சிகள் விசாரணையில்
இவரது நடைமுறை, பழக்க வழக்கங்கள் சாதாரண மனிதனை
விட மாறுபட்டு இருந்து இருப்பதாக தெரிவித்து இருக்கிறார்.
இவர் எழுதியிருந்த 2 கடிதங்கள் 22-12-1983 இல் கைப்பற்ற
பட்டுள்ளது. இதில் ஒரு கடிதம் யாருக்கு என்று முகவரி எழுதப்
படாமல் ஒரு கடிதம் அவரது சகோதரருக்கு இருந்து இருக்கிறது.
மேலும் இவர் தன் சொந்த ஊருக்கு 26-11-1983 அன்று போய்
28-11-1983 இல் ஸ்ரீரங்கம் திரும்பி இருக்கிறார். இவர் விடுப்
பில் தன் சொந்த ஊருக்குப் போகும் முன்பாக உதவி தணிக்கை
அதிகாரி, ஸ்ரீரங்கம், என்பவருக்கு மன நிலை சரியில்லாத கார
ணத்தால் தன்னை 25-11-1983 முதல் விடுவிக்கக் கோரி விண்
ணப்பித்துள்ளார். இவர் அந்த விண்ணப்பத்தில் இவர் வேலை
யில் தொடர்ந்து பணியாற்ற விருப்பம் இல்லாமையை தெரிவித்
துள்ளார். இதைக் கண்டு அவருடன் வேலை செய்யும் நண்பர்கள்
கடிதத்தை 28-11-1983 ஆம் தேதி கிழித்து எறிந்து இருக்கிறார்
கள். கிழித்து எறியப்பட்ட அந்தக் கடிதத்தின் துண்டுகள்,
--1984 மகஜரில் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த தடயம்
அறிவியல் ஆய்வு அகத்திற்கு வெங்கடாசலம் கையெழுத்துதானா
என்று கண்டு அறியப் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை இந்த
வழக்கில் 77 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், 5-1-1984 முதல்
உறையூர் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் இந்த வழக்கை விசாரணை
செய்து வருகிறார். குடல் பகுதி பரிசோதனையிலும் விஷப்
பொருட்கள் எதுவும் காணப்படவில்லை. ராஜினாமா கடிதம்
இறந்து போன வெங்கடாசலத்தால் எழுதப்பட்டதா இவரது
மாதிரி கையெழுத்துடன் Handwriting expert க்கு அனுப்
பப்படும்.

Thyroid bone இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்
பட்டது. இன்னும் அபிப்பிராயம் கிடைக்கப் பெறாமல் இருக்
கிறது. மருத்துவ அதிகாரியுடைய பிரேத பரிசோதனை அபிப்
பிராயம் இன்னும் கிடைக்கப்பெற வில்லை. வழக்கு விசாரணை
தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆகவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
அதற்கு தொடர்ந்து காவல் துறை பொறுத்த வரை இது அவர்கள்
தூக்கிலிட்டு கொண்ட தற்கொலை என்று முடிவு செய்து தெரி
வித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு வேறு சான்றுகள் எதுவும்
கிடைக்கவில்லை. ஆனாலும் வழக்குப் பதிவு செய்து விசாரணை





செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து இங்கே அறநிலையத் துறை பொறுத்தவரை எல்லா நிர்வாகங்களையும் எந்த அளவுக்கு சீர் செய்ய முடியுமோ அதை நாங்கள் சீர் செய்து கொண்டிருக்கிறோம்.

அந்த அதிகாரியைப் பற்றிக் குறிப்பிட்டு, ஏதோ அவர் ஏன் அங்கேயே இருக்கிறார், அங்கேயே இருக்கிறார் என்று கேட்டார்கள். நாங்கள் எந்த அதிகாரி மீதும், அவருக்குப் பாரபட்சம் காட்டியோ அல்லது ஆதரவு காட்டியோ இருக்க வேண்டும் என்பதில்லை.

இந்த ஆலய நிர்வாகத்திலே ஒரு சிக்கல் இருக்கிறது; மற்ற நிர்வாகத்தைப் போல இல்லை. கோயில் பெருச்சாளிகள் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அது எதனால் வந்தது என்று தெரியவில்லை. ஆனால், இருக்கின்ற கஷ்டமெல்லாம், இந்தக் கோயில்களில் இருக்கின்ற கணக்குப் பிள்ளை, அந்த மேனேஜர்-அவன் தான் இந்த எல்லாச் சொத்து விவரங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறான். இந்த ஈ.ஓ.க்களுக்குக்கூட அது தெரியாது. இதிலே சில ஈ.ஒ.க்கள்தான் அந்தக் கணக்கு வழக்குகளையெல்லாம் கண்டுபிடித்து இந்த நிர்வாகங்களை ஒழுங்காக நடத்துகிறார்கள்.

ஸ்ரீரங்கம் ஆலயத்தைப் பொறுத்தவரையில், இந்த ஸ்ரீரங்கம் என்பதே லிட்டிகேஷன்ஸ்—அதாவது இந்த வில்லங்கங்களுக்குப் பெயர்போன ஒரு ஆலயமாக இருந்து கொண்டு வருகிறது. ஆகவே, அங்கே எந்த அதிகாரி போனாலும் உள்ளே நுழைந்து இருட்குகைக்குள் மாட்டிக்கொண்டு திண்டாட வேண்டும்.

அங்கே ஒரு திருப்பணி, நடைபெற்றது. - நம்முடைய திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை தலைமையிலே தொடங்கிய திருப்பணி; கும்பாபிஷேகம் நடந்து முடிகிற வரையில் ஸ்டே ஆர்டர் வருமா என்று பயந்து கொண்டிருந்தார்கள், அவ்வளவு பேர்கள் அங்கே இருந்தும், அத்தகைய ஒரு லிட்டிகேஷன் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; பல சிக்கல்கள் இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய புகழும், பெருமையும் எப்படி வானளாவ வளர்ந்து கொண்டிருக்கிறதோ அதைப்போல உயர்ந்து கொண்டிருக்கின்ற 226' அடி கோபுரத்தினை அங்கே எழுப்பவிடாமல் தடைப்படுத்துவதற்கும் முயற்சிகள் நடைபெற்றன;

இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், இனிமேல் தடுக்க முடியாது ; 215 அடியைத் தாண்டிவிட்டது. 13-வது நிலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு காசுகூட ஆலயப் பணத்திலேயிருந்து செலவழிக்கப்படவில்லை.

வணக்கத்திற்குரிய ஜீயர் அவர்கள் 87-வது வயதிலே அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசாங்கத்தை நான்கு முறை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், தயவுசெய்து இந்த அலுவலரை மாற்றி விடாதீர்கள். எங்களுடைய கோபுரப் பணி முடிந்ததற்குப் பிறகு அவரை மாற்றுங்கள் ; அவர் இல்லையானால் கோபுரப் பணியை நான் தொடர்ந்து நடத்த முடியாது என்று.

அவர் வடகலையைச் சார்ந்தவர். எப்படி இங்கே வடகலைக்காரர் வந்து கோபுரம் கட்டுகிறார் என்றுகூட அங்கே பலர் வழக்குகளுக்குப் போட முயற்சித்தார்கள். அதற்காகவே அவர் இப்பொழுது அந்தக் கோபுரத்திலேயே தென்கலை நாமத்தையே போட்டு வைத்துவிட்டார்கள் பெரிதாக. என்னை நீங்கள் சந்தேகப்படாதீர்கள், உங்களுக்காக நான் கோபுரத்தைக் கட்டித் தந்துவிடுகிறேன் என்று.

இன்னும் சொல்லப் போனால், நீண்டகாலமாகப் பிரிக்கப்பட முடியாமல் இருந்த நிர்வாகத்தை, சமயபுரத்தையும், திருவரங்கத்தையும் வழக்குமன்றத்திற்குப்போய் அங்கே வழக்கை நடத்தி, அங்கே இந்த லிட்டிகேஷன் ஆட்களையெல்லாம் சந்தித்து சமாதானப்படுத்தி இன்றைக்கு நிர்வாகத்தைப் பிரித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சித் தலைவர் நம்முடைய அன்பிற்குரிய அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கு எல்லா விஷயமும் நன்றாகத் தெரியும். அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்கின்ற உணர்வோடுதான் சொல்கிறேன். ஆகவே, இந்த ஆலயத்திலே அங்கே என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றால் பலபேர் பரம்பரை பரம்பரையாகச் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிராசு என்று பெயர். அவர்கள் இந்தக் கோயிலுக்கே வருவதில்லை. அவன் யாரையோ இங்கே பதிலுக்கு அனுப்பிவிட்டு, அவர் எங்கேயோ இலட்சக்கணக்கிலே சம்பாதித்துக் கொண்டிருக்கிறார், அவர் வீட்டிலே ஏதாவதொரு காரியம் நடந்தால், இந்த ஆலயத்திலேயிருந்து 150 வடை, 150 சர்க்கரைப் பொங்கல் என்று இப்படியெல்லாம் போய்ச் சேருகிறது. அவர் இந்த ஆலயத்திற்கும் வருவதில்லை, ஆலயத்திலேயும் பணியாற்றுவதில்லை. இவர்களெல்லாம் எங்கேயோ இலட்சாதிபதிகளாக இருக்கிறார்கள். ஆனால், யாரோ ஒரு ஆளை அனுப்பிவிடுகிறார்கள்.





இதையெல்லாம் இந்த அலுவலர் தடுத்து நிறுத்தினார். இன்றைக்கு இங்கே நிரந்தரமாக இருக்கிற ஒரு ஜீயர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார். அவர்தான் இவ்வளவு வில்லங்கத்திற்கும் காரணமாக இருக்கிறார். அந்த ஜீயரைப் பற்றி நான் சொல்ல வேண்டாம். புகழ் பெற்ற எழுத்தாளர் சாண்டில்யன் கண்ணீர் வடித்து மனுக் கொடுத்திருக்கிறார் அரசாங்கத்தினிடத்திலே. அவருடைய சம்பந்தி—அவர் பெற்றெடுத்த பெண்ணை அந்த ஜீயருடைய மகனுக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுத்து என்ன கதிக்கு ஆளாக்கி, வாழாவெட்டியாகக் கொண்டு வந்து வைத்திருக்கிறார் என்பதைச் சாண்டில்யன், இவரெல்லாம் ஜீயராக இருப்பதற்கே லாயக்கில்லை என்று அந்த ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஒரு ஜீயர்—ஜீயர் ஜீயர் என்றால் அகோபில மடம் ஜீயரை நினைத்துக்கொள்ளப் போகிறீர்கள்—இந்த ஸ்ரீரங்கத்திலே இவ்வளவு விஷமத் தனத்திற்கும் காரணமாக இருந்து, இன்றைக்கு ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த ஸ்தலத்துனுடைய ஜீயர்—அவர்தான் இவ்வளவுக்கும் காரணம் ; அவர்தான் இவ்வளவு மோசடியான குற்றச்சாட்டுக்களுக்கும் காரணம். அவர்களெல்லாம் இன்றைக்கு அரசியல் வாதிகளாக மாறி, அரசியல் மேடைகளுக்குத் துணை நின்று, யாரெல்லாம் மாறுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும்.

ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையில் அந்த நிர்வாக அதிகாரி அந்த ஆலயத்தினுடைய நிர்வாக நலனைக் கருதி, அவர் விசேடத் தன்மையில் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்.

ஏனென்றால், என்னை நீங்கள் குறி வைக்கிறீர்கள். ஒரு முடிவு வந்தவுடனே இந்த அறநிலையத்துறை அமைச்சரை நீக்க வேண்டுமென்று ஏன் கேட்கிறீர்கள்? அதே போலத்தான், "கொதிக்கிற உலையை அடக்க வேண்டுமானால் எரிகிற கொள்ளியை இழுத்துவிடு" என்பது பழமொழி. அந்தத் திருவரங்கத்தினுடைய நிர்வாகத்தைச் சீரழிக்க வேண்டுமானால், அங்கே விவரம் தெரிந்த ஒரு நிர்வாக அதிகாரி இருக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறது.

ஆனால், குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்தால் தயவு செய்து ஆதாரத்தோடு கொடுங்கள். அடுத்த வினாடி, அவர் யாராக இருந்தாலும், "ஒரு தவறு செய்தால், அறிந்தத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சியில், அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 ஏப்ரல் 11

(முற்பகல் 11-10)

இங்கே நான் இறுதியாக, முடிப்பதற்கு முன்னால் மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, சில அறிவிப்புக்களையும், திட்டங்களையும், இந்த அறநிலையத்துறை சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எப்படி இந்த அரசு இந்தத் துறையை நிர்வகித்து வருகின்றது என்பதற்கு ஒரு சான்றாக இதைச் நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அளவிலே இதைப் புரிந்து கொள்ள முடியும். முன்பு எப்படி எல்லாம் மைனர் ஆட்டம் ஆடி கலைத்தார்கள் என்பதும் தெரியும். இப்போது 33 கோடி ரூபாய் குத்தகை பாக்கி வரவேண்டி இருந்தாலும், இந்த ஆலயங்கள் எப்படி நிதியினைச் சேர்த்திருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

30—6—1978 வரையில் தமிழக ஆலயங்களின் சார்பிலே வைப்புத் தொகையாக இருந்த தொகை 4,69,38,224 ரூபாய் 88 காசு. கடந்த ஆண்டு 31—12—1983 முடிய—இன்றைக்கு இருக்கின்ற தொகை—இன்றைக்கு வைப்புத் தொகையாக இருக்கின்ற தொகை 26,87,87,174 ரூபாய் 79 காசு. இப்படி 22 கோடி ரூபாயை நாம் உயர்த்தி இருக்கிறோம். அதே போன்று வசூலையும் உயர்த்தி இருக்கிறோம். அது வேறு பிரச்சினை. இவ்வளவு கடுமையான நிலைமை இன்றைக்கு இருந்தாலு கூட, அதாவது குத்தகை பாக்கிகள் எல்லாம் 33 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வராமல் இன்றைக்கு இருந்தாலும்கூட, வைப்புத் தொகைகளை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு நாம் சும்மா இருக்கவில்லை; பல நல்ல சமூகத் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

அவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், நீங்கள் இந்த ஆலயங்களைப் பாதுகாக்க என்ன செய்கிறீர்கள் என்று. கொள்கை விளக்கக் குறிப்பிலே நாங்கள் தெரிவித்திருக்கிறோம் என்னென்ன செய்திருக்கிறோம் என்று. அதைத் தவிர சில நிரந்தரத் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது சேமித்து வைத்திருக்கின்ற இந்த நிதியிலிருந்து 5 கோடி ரூபாயை ஒரு நிரந்தர வைப்புத் தொகையாக ஒதுக்கி வைத்து வட்டி தருகிற அரசு நிறுவனங்களிலே அவற்றை முதலீடு செய்து அதன்படி வட்டித் தொகை ஆண்டுக்கு 60 இலட்சமோ அல்லது 65 இலட்சமோ வரும். ஆக, அந்த 5 கோடியிலே கையை வைக்காமல் அதிலிருந்து வருகின்ற வட்டித் தொகையைக் கொண்டு கிராமங்களிலே



1984 ஏப்ரல் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வறுமை காரணமாக ஒருவேளை பூசை கூட செய்யப்படாமல், விளக்கு கூட எரியாமல் இருக்கின்ற ஆலயங்களின் பராமரிப்புக்காகச் செலவிடப்படும். அந்த வகையிலே அந்த வருமானம் பயன்படுத்தப்படும்.

அடுத்து பழனி ஆலயத்திலே இருந்து ஒரு கோடி ரூபாயைத் தனியாக ஒதுக்கி அதை நீண்ட கால வைப்புத் தொகையிலே போட்டு அதிலே இருந்து வருகின்ற வட்டித் தொகையை வைத்து —அதாவது கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு ஆண்டு ஒன்றுக்கு வரக்கூடும்—அந்தத் தொகையை வைத்து கிராமக் கோயில்களுக்காகச் செலவிடப்படும். அதாவது ஏழை எளிய மக்களால் திருப்பணி செய்ய முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்ற ஆலயங்களுக்கு நிதியுதவி செய்வதற்காக அந்த ஒரு கோடி ரூபாய் நீண்டகால வைப்புத் தொகையின் வட்டியிலே இருந்து, அதாவது பழனி ஆலயத்திலே இருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

அடுத்து இன்னும் ஒரு கோடி ரூபாயை ஆலயங்களின் உபரி நிதியிலே இருந்து சேர்த்து நீண்டகால வைப்புத் தொகையிலே வைத்து அதன் மூலமாக 100 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கின்ற பரிதாபத்திற்குரிய ஏழை ஓதுவார்கள், நாதஸ்வரம் வாசிப்பவர்கள், அர்ச்சகர்கள் போன்ற இப்படிப்பட்ட அந்த ஆலய அலுவலர்களுக்கு அவர்கள் வேண்டுகின்ற போது உதவி மற்ற வசதிகள், கடன், அல்லது எப்போதுமே சன்மானம் போன்ற குறைந்தபட்ச ஊதியங்களை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த நிதி பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பழனியைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக, அதாவது 20 ஆண்டு காலமாக மூலவரை எப்படிப் பாதுகாப்பது என்பதற்கான முயற்சிகள் ஒவ்வொரு அரசின் காலத்திலேயும் மேற்கொள்ளப்பட்டு, தள்ளிப் போடப்பட்டு வருகின்றது. இப்போது அங்கே இருக்கின்ற அர்ச்சகர்களிடத்திலே, விசாரித்ததிலே இனிமேலும் எங்களால் முடியாது, எங்களுக்குப் பொறுப்பில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதாவது வெளியிலே இருந்து கொண்டுபோய்த் தருகின்ற அபிசேகப் பொருட்களால் அதாவது கலப்படமான பால், தேன் மற்றும் பலவிதமான பொருட்களால், அப்படிப்பட்ட பொருட்களைக் கொண்டுபோய் ஊற்றுவதால் மூலவர் தேய்ந்து, குறைந்து

கொண்டே வருகிறார் என்கின்ற ஒரு முக்கியமான, நாம் எல்லாம் வருந்துவதற்குரிய சூழ்நிலை 20 ஆண்டுக்காலமாகவே வளர்ந்து வருகின்றது. இப்போது நாம் அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே 6 காலம் நடைபெறுகின்ற அபிஷேகம் மட்டும் மூலவருக்கு நடைபெறட்டும், பாக்கி மக்கள் தருகின்ற பல்லாயிரக் கணக்கான அந்த கலப்படப் பொருட்களை எல்லாம் வைத்து உற்சவ மூர்த்திக்கு அபிஷேகம் நடக்கட்டும் என்று தற்காலிகமாக ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதற்காக ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் ஒரு குழுவை அமைக்கிறோம் என்று நாங்கள் ஏற்கெனவே வாக்குறுதி அளித்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. செங்கோட்டுவேலன் அவர்கள் தலைமையில் தமிழகத்திலே உள்ள சைவ சமயத்தைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களையும், ஆகம விதிகளைத் தெரிந்தவர்களையும் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட இருக்கின்றது. அவர்கள் சமயத் தலைவர்களைச் சந்தித்து நிரந்தப்பரிகாரம் காணுகின்ற வகையில் தங்கள் முடிவுகளைத் தெரிவிப்பார்கள். அந்த முடிவை அமல்படுத்துவதற்கு அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கும்.

கடைசியாக, மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் பெருமைபட்டுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் சொன்னதற்குப் பிறகு அல்ல. முன்னாலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பற்றி தீவிரமாக ஒரு கோப்பிலே எழுதி இருந்தார்கள். அதற்குப் பிறகு திருத்தணி சம்பவம் ஒன்றில் நம்முடைய திரு. நடராஜன் —அன்றைய வருவாய் வாரிய உறுப்பினர்—அவர்களை ஒரு கமிஷனராக நியமித்து விசாரணை செய்து தீர்ப்பு வழங்கச் சொல்லிக் கேட்டோம். அவர்கள் தந்த அறிக்கையிலேயும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதை ஒட்டி இப்பொழுது நகைகளை எல்லாம் பாதுகாப்பதற்கும் தேவையான பொழுது, சந்தேகம் வருகிறபொழுது போய் ஆய்வு செய்வதற்கும் மாநில அளவிலே ஒரு உயர் மட்டக் குழு இருக்க வேண்டும். ஏனென்றால் அடிக்கடி போய் யாரும் பார்க்க முடியாது. 4 மாதம், 5 மாதம் போய் யாரும் செலவு செய்ய முடியாது. இன்றைக்கு அறநிலையத் துறைக்கு அந்த அளவுக்கு அதிகாரிகளும் இல்லை. ஆனால் எங்கேயாவது ஐயம் வருகிற பொழுது, சந்தேகம் வருகிறபொழுது, போய் உடனே பார்ப்பதற்கு மாண்புமிகு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு வல்லுநர் குழு— தங்கத்திலே, வைரத்திலே மற்ற கற்களை எல்லாம் பார்த்து தேர்ந்தெடுக்கக்கூடியவர்களை —அப்படிப்பட்டவர்களை —, இந்த சமயத் துறையிலே மிகுந்த பொறுப்பு வாய்ந்த பெரியவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்க இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே



சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலே இந்த அறநிலையத்துறை மிகச் சிறந்த சிறப்பைப் பெற்றுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்லி முடிப்பதற்கு முன்னால், பெயரை எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் யார் காலிலோ போய் விழுந்தோம் என்றெல்லாம் சொன்னார்கள். காலிலே விழுவதும் அல்லது வணங்குவதும் அது அவரவர்களுக்குள்ள பழக்கத்தைப் பொறுத்தது. நான் யார் காலிலேயும் விழவில்லை. அதை முதலிலே மறுத்துவிடுகிறேன். ஆனால் காலிலே விழுவது என்பதே மிகப் பெரிய குற்றம் என்று சொன்னாலும் அதை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. வணங்குவது என்பது, காலில் விழுந்து வணங்குவது என்பது, இவையெல்லாம் நம்முடைய தமிழ்ச் சமுதாயத்திலே வழக்கிலே இருந்து வருகிற ஒன்று. ஆகவே, யார், யார் எப்பொழுது, எப்படி வணங்குகிறார்கள் என்பது சர்ச்சைக்குரிய விஷயம் அல்ல. பெரியவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு. அந்த அடிப்படையிலே நாம் இன்றைக்கு நடந்து கொள்கிறோமா என்பதுதான். நான் யார் காலிலும் போய் விழவில்லை. நான் விடிகிற பொழுதிலே போகவில்லை. விடிகிற பொழுதிலே போன கதை இருக்கிறது. அதைத் தேவையான பொழுது சொல்கிறேன். 1971 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னால் காஞ்சீபுரத்திற்குப் போய் வணக்கத்திற்குரிய காஞ்சிப் பெரியவர், நம்முடைய நடமாடும் தெய்வம் என்று புகழப்படுகிற அவரை சந்திப்பதற்காக, போய் அவரை சந்திக்க முடியாமல், கதிரவன் வந்துவிட்டான், வெளிச்சம் வந்துவிட்டது, இருட்டுப் போய்விட்டது, திருட்டுத்தனம் வெளியே வந்துவிடும் என்று ஓடி வந்தவர்கள் கதை எல்லாம் எங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இருட்டிலே நடைபெற்றதே தவிர, நான் இருட்டிலே போகவில்லை. இந்தியா முழுவதும் பாராட்டுகிற ஒரு துறவி, அவர் எந்த மடத்திற்கும் அதிபதி அல்ல, எந்த மடத்திற்கும் அவர் ஆச்சாரியார் அல்ல. இன்றைக்கு உலகம் முழுவதும் காணமுடியாத தன்னுடைய வாழ்க்கையை இந்த நாட்டு மக்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு துறவி. 90 வயது நிரம்பிய அந்த மாபெரும் மனிதரை, வள்ளுவர் சொல்லுகின்றாரே,

> ' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும் '

என்று

அப்படி எல்லோராலும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிற ஒருவரை, ஒரு அரசின் சார்பிலே, நாம் அந்த மக்களுக்கு எல்லாம் மரியாதை செலுத்தி, நன்றி செலுத்தி, அவர்களைப் பாராட்டு

கிற வகையில், அவர்களைப் போய் நான் வரவேற்று வணங்கினேன், அதுதான் நடந்தது. என்ன நடந்தது என்பது அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தெரியும். ஆகவே நீங்கள் எங்கேயோ போய் எதையோ நினைத்துக் கொண்டு அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்துக்கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைக்கு, அதுவும் மாண்புமிகு நெடுமாறன் அவர்களுடைய உபதேசத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திருவரங்கம் கோவிலிலிருந்து சமயபுரம் . கோவிலைப் பிரித்ததைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். திருவரங்கம் கோவிலிலிருந்து, சமயப்புரத்தைப் பிரிக்க வேண்டுமென்று முதலிலே நடவடிக்கை எடுத்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதையும் அதற்கு முக்கிய காரணமாக இருந்தவன் நான் என்பதையும் தெரிவித்துக் கொண்டு இப்பொழுது அவர்கள் பிரித்தமைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திருவரங்கம் கோவில் சம்பந்தப்பட்டதையெல்லாம் இங்கே விவரமாக எடுத்துக் காட்டினார்கள். ஆனால், ஏற்கனவே திருச்செந்தூர் கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி சொல்லி, அதற்காக பால் கமிஷன் நியமிக்கப்பட்டு அந்த பால் கமிஷன் அறிக்கையை 6 மாதத்திற்குப் பிறகும் வெளியிடாத காரணத்தாலே, எதிர்க்கட்சித் த்லைவராக இருந்த கலைஞர் அவர்கள் அதை வெளியிட்டு . . . . .

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வழக்கிலே இருக்கிறது. அந்தப் பிரச்சினைப் பற்றி, அரசு வெளியிடாததால் என்பது போன்ற பிரச்சினை வெளியிடுவது, வழக்கிற்குள்ளே செல்வதாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அன்பில் தர்மலிங்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குக்குள்ளே நான் போகவில்லை. இதே சட்டமன்றத்தில் அந்தப் பிரச்சினைப் பற்றி உரிமைப் பிரச்னைக் கொண்டு வரப்பட்டு, எதிர்க்கட்சிகள் அத்தனையும் தெரிவித்த கருத்தை ஏற்று இந்த அவை அன்றைக்கு அதை



கைவிட்டிருக்கிறது. அவையிலே கைவிடப்பட்ட ஒன்றை வெளியே வழக்கு போடுவது சரியா என்பதை நீங்களே யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படி வெளியிடுவது ஒன்றும் புதியதல்ல. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்திலே இருந்தவர்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முந்திரா ஊழல் வ்ழக்கை அப்போது வெளியிட்டது மாண்புமிகு மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களுடைய கணவர் பெரோஸ் காந்தி என்பது நன்றாகத் தெரியும். அதைப்போலவே நம்முடைய பாண்டிச்சேரியில் பட்ஜெட்டை அப்போதிருந்த பரூக் மரைக்காயர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே, இது ஒன்றும் புதியது அல்ல. அதைப் போலவே பட்நாயக் ஊழல் பற்றி அந்த புகார்கள் சட்டமன்றத்திலே சொல்லப்பட்டது . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சர் தெரிவித்த கருத்து பற்றி ஏதாவது முக்கியமாக இருந்தால் சொல்லுங்கள். அடுத்த சொற்பொழிவிற்கு பீடிகை போடாதீர்கள். (குறுக்கீடு)

**திரு. அன்பில் தர்மலிங்கம்** : வெளியிடுவது தவறில்லை என்று தான் சொல்கிறேன். என்குயரி கமிஷன் ஆக்ட்படி ஆறு மாதத்திற்குள் அதை வைத்திருக்க வேண்டும்; ஆனால் வைக்கவில்லை. இப்போது அந்தச் சட்டத்தை மதித்து இப்போது வந்த இராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கையை உடனே வைத்திருக்கிறீர்கள். ஏன் ஆறு மாதக் காலத்தில் அந்த அறிக்கையை வைக்கவில்லை என்பதைத் தான் கேட்கிறோமே தவிர வேறல்ல.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலைய பாதுகாப்பு என்று சொன்னாலும் சரி, அறநிலையத் துறை என்று சொன்னாலும் சரி, அறத்தைப் பாதுகாக்கிற துறை என்று சொன்னாலும் சரி, மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களுடைய மானியக் கோரிக்கைக்கும், இந்த பால் கமிஷனிற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. பால் கமிஷன் அறிக்கை எப்படி வெளிவந்தது என்பதைப் பற்றித் தான் அங்கே வழக்கே தவிர பால் கமிஷனுடைய தீர்ப்பு சரியா, இல்லையா என்பதைப் பற்றிய வழக்கு இல்லை. நீங்கள் வேண்டுமானால் இங்கே இருக்கிற அத்தனை பேரும் அந்த பால் கமிஷன் மீதுள்ள பிரச்னையை விட்டுவிடவேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டால் அதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு தயார். அது எப்படி வெளியிடப்பட்டது என்ற பிரச்னையை இங்கேதான் கேட்டார்கள். திராணி இல்லை, தகுதி இல்லை இந்த அரசுக்கு ; அது

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 ஏப்ரல் 11

விட்டது : அதைக் கண்டு பிடிக்க இவர்களுக்கு சக்தி இல்லை ; வெளி வந்து இவர்கள் ஆட்சியில் இருக்க வேண்டுமா என்றெல்லாம். அதைக் கண்டு பிடிக்கத்தான், உண்மை என்னவென்று தெரிந்துக் கொள்ளத்தான் வழக்குமன்றத்திற்கு போய் இருக்கிறது. அரசுக்கு திராணி இருக்கிறது, இதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னால் நாங்கள் அதைப் பற்றி பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். பால் கமிஷனுடைய அறிக்கையைத் தந்த ஆறு மாதங்களுக்குள்ளே இந்த அவையில் வைக்கப்பட்டது. ஆறு மாதம் கடந்து வைக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அன்பில் தர்மலிங்கம் சொல்வது உண்மைக்குப் புறம்பானது. அது ஆறு மாதங்களுக்குள்ளே தான் வைக்கப்பட்டது.. அதற்கு முன்னால் வெளியே வெளியிடப்பட்டு விட்டது. முந்த்ரா அறிக்கைகைப்பற்றி பாராளுமன்றத்திலே வைத்தார்களே தவிர வெளியே வைக்கவில்லை. பாண்டிச்சேரியில் பரூக் மரைக்காயர் அவர்கள் பட்ஜெட்டைப் படிக்கிறபோது கூட சட்டமன்றத்திலே படித்தார்களே தவிர வெளியே இல்லை. ஆகவே அதற்கும், இதற்கும் வேறுபாடு உண்டு என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு இரண்டு பக்கத்திலிருந்தும் தெரிய வேண்டியது ஒன்றுதான். இதற்கும், அற நிலையத் துறைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்கு இதில் என்ன சம்பந்தம் என்று நான் கேட்க விரும்புகிறேன். இப்போது அந்தப் பிரச்னை இல்லை. அது வழக்குமன்றத்திற்குப் போய்விட்டது. ஆகவே, இங்கே சம்பந்தம் இல்லை. இங்கே பிரச்னையைப் பேசவேண்டுமானால் பால் கமிஷனை விட்டு விட்டு கேள்வி கேளுங்கள். ஆனால் பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டதற்காக வழக்கு தொடர்ந்து இருக்கிறோம் என்றால், அது எப்படி வெளியாயிற்று என்பது மக்களுக்குத் தெரியவேண்டும். இது நீங்கள் கேட்டதற்குப் பதில். ஆகவே இதிலே, பிரச்னை இல்லை.

திரு. அன்பில் தர்மலிங்கம்: இந்த வழக்கு** எங்கள் தலைவர் மீது போடப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.



1984 ஏப்ரல் 11]

[திரு அன்பில் தர்மலிங்கம் மட்டும் வெளிநடப்புச் செய்தார ]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று ஆணை யிடுகிறேன்.

[முற்பகல் 11,30]

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீதானவிவாதம் முடிவுற்றது : இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் என்.எஸ். வி. சித்தன் : சு. பாலன், எமீ. செல்லமுத்து, இ.கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின்அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி '' மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,80,13000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று. கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைக் கடுமையாக்காதீர்கள். (கூச்சல்—குழப்பம்).

(தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்னால் கீழே அமர்ந்துகொண்டு தொடர்ந்து கோஷங்களைப் போட்டனர்).

(முற்பகல் 11.40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் தங்கள் தங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு பேரவைத் தலைவர்] [1984 ஏப்ரல் 11

That is entirly different. You have no right to say like that I have told my decision. That has to be accepted by the House.

தர்ணா எல்லாம் பண்ணக் கூடாது. அவரவர்கள் இடத்திற்குப் போக வேண்டும்.

* * *

இதுவரை நடந்த விவாதங்கள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென ஆணையிடுகிறேன்.

* * * *

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

* * *

[கம்யூனிஸ்டு கட்சி (மார்க்கிஸ்ட்) உறுப்பினர்கள், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளிநடப்புச் செய்தனர்.]

* * * *

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷம் இட்டுக் கொண்டே வெளிநடப்புச் செய்தனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவையை விட்டு வெளியேறும் போது எழுப்பப்பட்ட முழக்கங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. பத்திரிகைக்காரர்களும் நடந்த சம்பவங்களை விவரித்து வேண்டுமானால் எழுதலாமே தவிர நான் அவைக் குறிப்பிலிருந்து எடுத்த வார்த்தைக்குப் பிறகு இதுவரை கூறப்பட்ட வாசகங்கள் எதையும் வெளியிடுதல் கூடாது. அவை அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**(ஆ) கோரிக்கை எண் 35 நுகர்பொருள் வழங்கல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 35— நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,04,89,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

(முற்பகல் 11—50)

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*முற்பகல் 11-27 முதல் 11-53 வரையிலான பகுதிகள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன



1984 ஏப்ரல் 11] [திரு. என்.எஸ்.வி. சித்தன்]

To discuss policy, I move—
that the allotment of Rs· 98,04,89,000 under
Demand No. 35- Civil Supplies be reduced by
Rs. 100/-"

**திரு. டி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நுகர்பொருள் வழங்கல் அட்டை விநியோகிக்க நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 98,04,89,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, இங்கே உணவுப் பிரச்னை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அவை முன் வைக்கப்பட்டு இருப்பதன் காரணமாக அதை பேரவை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு நடவடிக்கைக் குறிப்பிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்ததற்குப் பிறகு இறுதியாக என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

**திருமதி டி. யசோதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை என்ற மானியக் கோரிக்கை எண் 35-ன் மீது நான் சார்ந்து இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை அவை முன் வைக்கவிரும்புகிறேன். முன்னுரையில் கடந்த இரண்டு ஆண்டு களா வறட்சி, பருவ மழை தவறியது, காலம் கடந்து மழை பெய்தது என்ற வேதனை சூழ்நிலையில் நமது உணவு நிலைமை தமிழக மக்கள் எப்படி கடுமையான சூழ்நிலையிலிருந்து தப்பி இருக்கிறார்கள் என்பது தெள்ளத்தெளிவாகச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்தப் பருவ மழை பொய்த்த நிலை காரணமாகவும், 2 ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியின் காரணமாகவும் மத்திய அரசினுடைய கணிசமான

117 159ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது,

உதவி நம்முடைய மாநிலத்திற்குக் கிடைத்து இருக்கிறது என்பதை நினைவு கூறுகிறபோது உண்மையிலேயே பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

(நண்பகல் 12-00)

குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசாங்கம் தற்போது ரூபாய் பத்து உயர்த்தி இருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பு நூலிலிருந்து தெரிகிறது. ஆனால் அது விவசாயிகளுக்கு நிறைவுதரக் கூடியதா என்றால், நிச்சயமாக நிறைவை ஏற்படுத்த முடியாது. இருப்பினும்கூட, நெல்லுக்கு கொள்முதல் விலையை மத்திய அரசாங்கம் அகில இந்திய அளவிலே நிர்ணயிக்க வேண்டிய ஒன்றாக இருப்பதால், அதற்கு விவசாய விளை பொருள்கள் விலைகள் ஆணைக் குழு என்ற குழு அகில இந்திய அளவிலே, மற்ற மாநிலங்களும் நாம் பரிந்துரை செய்தபடி நெல்லுக்கு விலை கொடுக்கலாமா என்று பரிசீலித்து, கொடுக்கக் கூடாது என்ற பரிந்துரையை அவர்கள் தந்திருப்பினும் கூட மத்திய அரசாங்கம் பத்து ரூபாய் உயர்த்திக் கொடுக்கலாம் என்று சொல்லியதை நிறைவாக, முற்றுப்பெற்ற ஒன்றாக ஏற்றுக் கொள்ளாமல், மீண்டும் மீண்டும் நெல்லுக்கு அதிகமான விலையைக் கொடுக்கின்ற சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்று 'வற்புறுத்தினால் நிச்சயமாக நமக்குத் தருவதாற்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய தொகுப்பிலிருந்து வறட்சி, வெள்ளம், பருவமழை தவறிய சூழ்நிலைகளில் நமக்குக் கிட்டத்தட்ட 3,20,000 மெட்ரிக் டன் அரிசியை மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது. என்பதை நான் கொள்கை விளக்கக் குறிப்பு நூலிலிருந்து பார்த்தேன். அதே போன்று, கோதுமை 2.11 இலட்சம் மெட்ரிக் டன் தந்திருக்கிறது என்று சொல்லும்போது மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்ற அந்தக் கடமை உணர்ச்சியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

50 சதவீதம் 'லெவி குறைந்தால் விவசாயிகளின் பாதிப்பு குறையும். நெல் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதால்தான் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ரேஷன் கடைகளைப் பற்றி நான் இந்த மன்றத்தில் பல நேரங்களில் சுட்டிக் காட்டி இருக்கிறேன். ஆனால் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பு நூலில் நம்முடைய அமைச்சரவர்கள் பல கமிட்டிகளைப் பற்றிச் சொல்கிறார்கள். அத்தனை கமிட்டி



களும் பரிசீலிக்கின்றன; பார்வையிடுகின்றன; போலீஸ் இருக்கிறது. இப்படிக் கண்டுபிடிப்பதற்கு என்னென்னவோ இருக்கின்றன. ஆனால் நான் சொல்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இத்தனை குழுக்களும் இருக்கின்றன. அத்தனை இருந்தும் இன்றைக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடைபெறுகின்ற நியாயவிலைக் கடைகளில் ஏற்படுகின்ற தவறுகளைத் திருத்த முடிந்திருக்கிறதா என்றால் இல்லை என்று நான் பட்டவர்த்தனமாகச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்த நியாய விலைக் கடைகளை அதிகமாக நம்பியிருப்பவர்கள் அடித்தளத்திலே உள்ள மக்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களும்தான். அதுமட்டுமல்லாமல், அதற்கடுத்தற்போல், இரண்டாம் நிலையிலே இருப்பவர்கள் இந்த நியாய விலைக் கடைகளைப் பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பயன்படுத்துகிற பொழுது அந்த நியாய விலைக் கடைகளின் மூலமாகக் கிடைக்கின்ற பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்காத ஒன்றாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், குதிரைக் கொம்பாக இருக்கிறது என்று சொன்னால் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை அந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. 18,000 ரேஷன் கடைகளைத் திறந்திருக்கிறோம் என்று கூறுகிறீர்கள். அதற்குப் பதிலாக 30,000 கடைகளை வேண்டுமானாலும் திறந்தாலும் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. அது தேவைக்கேற்ப அமைகின்ற ஒன்றாக இருக்கும். ஆனால் இந்த 18,000 ரேஷன் கடைகள் இருக்கின்றனவே. இந்த 18,000 கடைகளில் அரிசி, சர்க்கரை, பாமாலின், மண்ணெண்ணெய் ஆகியவைகளைப் பொதுமக்கள் வாங்குவதற்கான தேதியை நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

1-ஆம் தேதி ரேஷன் கடைக்குச் சென்று, கூட்டத்தில் நின்று, தவமிருந்து செய்பவர்களுக்கு நல்ல அரிசி கிடைக்கிறது. அதற்குப் பிறகு போகின்றவர்களுக்கு நல்ல அரிசி கிடைப்பதில்லை. ஐந்தாம் தேதி வரையில் அந்த நிலைமைகள் ரேஷன் கடைகளில் இருக்கின்றன. ஐந்தாம் தேதிக்குப் பிறகு சென்றால், அரிசி இருந்தால் பாமாலின் இல்லை. பாமாலின் இருந்தால் மண்ணெண்ணெய் இல்லை; மண்ணெண்ணெய் இருந்தால் சர்க்கரை இல்லை என்று இப்படி இல்லை இல்லை என்றும் சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. ஏழை மக்களுக்கு எப்பொழுது காசுகிடைத்தாலும்போய்வாங்குகின்ற அளவிற்கு அரசாங்கத்தின்

அந்தரேஷன்கடைகள்— நியாய விலைக்கடைகள் இருக்கவேண்டும். அப்படி இல்லை என்றால் அது நிச்சயமாக ஏழை மக்களுக்கு உரிய காலத்தில் பயன்படக்கூடிய ஒன்றாக இருக்க முடியாது. அரசாங்கம் இவ்வளவு செலவு செய்து இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொண்டு கடைகளை நடத்துவதே ஏழை எளிய மக்களுக்காகத்தான். எனவே, அந்த மக்களுக்கு எப்போது காசு கிடைக்கின்றதோ அப்போது போய் அவர்கள் ரேஷன் வாங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒன்றாம் தேதி ஒரு திங்கட்கிழமை என்று சொன்னால், திங்கட்கிழமை சென்று ரேஷன் வாங்கவேண்டும் என்று சொன்னால், அவ்வாறு திங்கட்கிழமை வாங்க முடியாமல் போய்விடுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அதை விட்டால் அடுத்த திங்கட்கிழமைதான் வாங்கியாக வேண்டும். அப்படி இரண்டு திங்கட்கிழமைகளிலேயும் அவர்கள் போய் வாங்காமல் விட்டு விட்டால் பிறகு அந்த மாதத்திலேலே எந்தத் திங்கட்கிழமையிலேயும் போய் அதனை வாங்க முடியாது. எனவே, அவர்களுக்கு ரேஷன் பொருட்களே கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை. அப்படி அவர்களால் வாங்கப்படாத அந்தப் பொருட்கள் எல்லாம் எங்கே போகின்றன என்பதை கவனிக்கவேண்டும்.

மேலும் 10 லிட்டர் மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு வீட்டில் போய் அளந்து பார்த்தால் 9 லிட்டர்தான் இருக்கின்றது; அதேபோல் ஒரு கிலோ சர்க்கரை வாங்கிக் கொண்டு போய் வீட்டிலே அளந்து பார்த்தால் அதிலேயும் 100 கிராம் குறைகின்றது. இப்படி மண்ணெண்ணெயிலே மட்டுமல்ல ; சர்க்கரையிலே மட்டுமல்ல. பாமாலின் எண்ணெயைப் பற்றி மிகச் சிறப்பாக எழுதி இருக்கிறார்கள். இவ்வளவு தேவை இருக்கின்றது ; இவ்வளவு கொடுக்கிறார்கள் ; இன்னும் இவ்வளவு அதிகமாகக் கேட்கிறோம் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். பாமாலின் எண்ணெய்க்குப் பதிலாக சோயாபீன்ஸ் எண்ணெய் கொடுக்கிறார்கள் 'என்றெல்லாம் சொல்கிறார்கள். அவை அத்தனையும் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கின்றதா என்பதைப் பார்ப்பதற்காக விழிப்புப் பணிக் குழுக்களை நாங்கள் நியமித்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால், எத்தனை விழிப்புப் பணிக் குழுக்களை அமைத்து கண்காணித்தாலும் அந்த விழிப்புப் பணிக் குழுக்களின் கண்களிலே மண்ணைத் தூவி விட்டு அவர்கள் அவர்களுடைய தொழிலை சிறப்பாகச் செய்து வருகின்ற காட்சியைத் தான் பார்க்கிறோம். இன்னும் ஒரு படி மேலே போய் சொல்கிறார்கள். 10 லிட்டர் மண்ணெண்ணெய் மாநகராட்சிப் பகுதிகளிலே இருப்பவர்களுக்கும், 6 லிட்டர் எண்ணெய் நகராட்சிப் பகுதிகளிலே இருப்பவர்களுக்கும், 5 லிட்டர் எண்ணெய் பஞ்சாயத்துக்களிலே இருப்பவர்களுக்கும் 3 லிட்டர் எண்ணெய் கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். விழிப்புப் பணிக் குழு ரேஷன் கடைகளுக்கெல்லாம் சென்று பில்களைச் செக் பண்ணுவது பற்றியும் மற்றவைகளையும் பார்க்கின்றது என்றெல்லாம் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன்.



இந்த ரேஷன் கார்டுகளை எத்தனை ஏழை எளிய மக்கள் தங்களிடத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா ? அந்த ரேஷன் கார்டுகள் எல்லாம் இன்றைக்கு அடமானப் பொருள்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தன்னுடைய வறுமை நிலைமை காரணமாக ரேஷன் கார்டுகளை அடமானம் வைக்கக்கூடிய நிலைமையில் இன்றைக்கு அவர்களிடத்திலே கார்டு களே இல்லாத நிலைமை இருக்கின்றது. இதுபற்றி நான் ஒரு கட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கூறினேன். அவர்களும் அதைப்பற்றிய நடவடிக்கையை நான் எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதன்படி எடுத்தார்கள். அதைப் போல போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் சொன்னார்கள். சென்னை நகரத்திலே 27 ஆயிரம் போலிக் கார்டுகள், கிராமப் புறங்களில் 29 ஆயிரம் போலிக் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்று சொன்னால், நீங்கள் போலிக் கார்டுகளைக் கண்டு பிடித்ததாகச் சொல்லி நல்ல கார்டுகளையும் ரத்து செய்திருக்கிறீர்கள். அதா வது பணம் இல்லாததன் காரணத்தால் நிர்ணயித்த கிழமை களிலே வாங்க முடியாது போன காரணத்தால், குறிப்பிட்ட தேதி களில் அரிசி, மண்ணெண்ணை, சர்க்கரை, பாமாலின் எண்ணை ஆகியவற்றை வாங்காத காரணத்தால் அவர்கள் ஊரிலேயே இல்லை என்று நினைத்து அவர்களுடைய கார்டுகளை நீக்கி இருக்கிறீர்கள். அப்படிச் செய்ததன் காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகமான வேலை ஏற்பட்டிருக்கின்றது. எங்கே பார்த்தாலும், நாங்கள் ஊருக்குப் போய் இருந்தோம்; அந்த நேரத்திலே ரேஷன் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள், வந்து பார்த்து நாங்கள் அந்த இடங்களிலே இல்லை என்று நினைத்து எங்களுடைய கார்டுகளை எல்லாம் நீக்கிவிட்டார்கள்; கடையிலே போய் கேட்டால் நீங்கள் ரேஷன் ஆபீஸுக்குச் செல் லுங்கள், அங்கு போய்ப் பாருங்கள் என்று சொல்கிறார்கள்; அங்கே போனால் அதிகாரி இல்லை ; அவர் வந்ததற்குப் பிறகு பாருங்கள் என்று சொல்கிறார்கள். என்றெல்லாம் மக்கள் எங்க ளிடத்திலே வந்து சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலைமையைத்

தான் காண்கிறோம். ஆகவே, அவர்கள் வைத்திருப்பது எல்லாம் உண்மையான ரேஷன் கார்டுகள் தான் ; எனவே, அவர்களுடைய கார்டுகளை ரத்து செய்தது சரியில்லை ; அவர்களுக்கு அந்தக் கார்டுகளைக் கொடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதைத்தான் நான் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்தாற்போல் சொல்ல வேண்டுமென்றால், சங்கங்களுக்கு பொது நிறுவனங்களுக்கு எல்லாம் நம்முடைய உணவுப் பங்கீட்டுத் துறையின் மூலமாக அரிசி விநியோகம் செய்வதாகக் கூறுகிறார்கள். நான் ஒரு சாதாரண ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே குன்றத்தூர் ஒன்றியம் பரணிபுத்தூர் ஜோதி நகர் காலனியில் ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்கிறது. அந்தக் குழந்தைகள் காப்பகத்திற்குச் சென்ற ஆண்டு ஒரு ரேஷன் கார்டு கொடுத்தார்கள் மார்ச் மாதம் வரையில் என்று. அதற்கு பிறகு அதைப் புதுப்பிப்பதற்காகச் சென்றால், அந்த மாவட்ட விநியோக அதிகாரி அவர்கள் தாசில்தாருடைய சர்ட்டிபிகேட் இருக்க வேண்டுமென்று சொல்கிறார். முதலில் கொடுக்கின்ற பொழுது தாசில்தார் சர்ட்டிபிகேட் கேட்கவில்லை என்பதோடு மட்டுமல்ல. அந்த நாலுசாவிலே இருக்கிற உணவுப் பங்கீட்டுத் துறையினுடைய ஆலோசனைக் குழுவிலே நான் உறுப்பினராக இருக்கிறேன். ஆலோசனைக் குழு உறுப்பினராக இருக்கிற நான் சொல்கின்றேன். அங்கே ஒரு அமைப்பு நடந்துகொண்டிருக்கிறது. குழந்தைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள் தேவை. அதை நியாய விலைக் கடை மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று முதலிலே சிபாரிசு செய்ததே நான்தான். ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்ததற்கு, மாதாமாதம் வாங்கியதற்குக் கணக்கு இருக்கிறது, அவர்களுக்குத் தெரியும். அதற்குப் பிறகு இந்த ஆண்டு புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டால், தாசில்தார் சர்ட்டிபிகேட் கொடுத்தால்தான் கொடுப்போம் என்று ஒரு நேரத்திற்கு ஒரு விதமாகப் பேசுகின்ற நிலைமையிருக்கிறது என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

நியாய விலைக் கடைகளிலிருந்து ஏதோ பொருள்கள் திருடு போவதாகப் பல இடங்களிலே குறிப்பாகச் சொல்கிறார்கள். நாம் நிறைய போலீஸ் அதிகாரிகளை வைத்திருக்கின்றோம். கண்காணிப்பதற்கென்று குழுக்களை வைத்திருக்கின்றோம். ஆனால் அவர்கள் பிடிப்பதைவிடப் பொதுமக்கள் அதிகமான அளவுக்குப் பிடித்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட





விரும்புகிறேன். சைதாப்பேட்டையிலே இருக்கிற சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிலே இருந்த அரிசியை லாரிகளிலே கடத்திச் செல்லும்போது அங்கே இருக்கிற பொதுமக்கள் வழிமறித்துப் பிடித்து போலீசிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றோம். அதுபோன்று நல்ல காரியங்களை செய்கின்றவர்களைக் குழுவிற்கு அப்பாற்பட்டிருந்தாலும் அதிகாரிகளாக இல்லாத பொதுமக்கள் அதைச் செய்கின்ற பொழுது அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு, அதைப் பாராட்டுவதற்கு அவர்களுக்குரிய சிறப்பினை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு ஒட்டுமொத்தமாக ரேஷன் கடைகளின் மூலமாக ஏழை, எளிய மக்களுக்கு அதிகமான பலன் கிடைக்க வேண்டிய நிலைமை இருக்கும்போது, அது ஏழை, எளிய மக்களுக்குக் கிட்டாத ஒன்றாக இருக்கக்கூடாது என்பதை மட்டும் கூறி, எல்லா நாட்களிலும் அவர்களுக்கு ரேஷன் கிடைக்கக்கூடிய, அவர்களுடைய தகுதியினுடைய அடிப்படையிலே எப்பொழுது பணம் கிடைக்கிறதோ அப்பொழுது ரேஷன் கடைக்குப் போனால் ரேஷன் வாங்கலாம் என்ற நிலைமையிலே நீங்கள் ரேஷன் கடைகளுக்கு உத்தரவு பிறப்பிப்பதோடு மட்டுமல்லாமல் அதன் காரணமாக நெரிசல் அதிகமாக இருக்கும் என்று சொன்னால், அதிகமான ரேஷன் கடைகளைத் தோற்றுவித்து இந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நுகர்பொருள் வழங்கல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு 1982-ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சிக் காலங்களில் கூட, தமிழகத்தில் கிராமத்திலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கானாலும், நகரங்களிலே இருக்கிற கூலி ஆட்களுக்கானாலும் அல்லது கூலி வேலை செய்து அன்றாடம் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்குக் குறைந்த விலையில் சுமார் 18,000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலம் நியாயமான விலையில், அரிசி, மற்ற உணவு பொருள்கள் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியையும் நிர்வாகத்தையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டபோது கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் வேலையின்மை இல்லை என்ற நிலைமை இருந்தாலும் அன்றாடம் கூலி வேலை செய்கிறவர்கள் நியாய விலையில் பொருள்களை வாங்கி தங்களுடைய வயிற்றை நிரப்புவதற்கு, பசியைப் போக்கிக் கொள்வதற்கு, வாழ்க்கை நடத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு

உணவு அமைச்சர் அவர்களும், நுகர் பொருள் வாணிபக் கழகமும் வெளிச்சந்தையில் அரிசியை ரூபாய் 50 கோடி அளவிற்கு வாங்கி அன்றாட உணவுப் பிரச்னையை தீர்த்து வைத்தார்கள் என்பதை உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மாநில அரசு மத்திய அரசை அணுகி நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் வேண்டுமென்று கோரி இருக்கிறது. மாநிலத்தின் சார்பில் முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும் வேண்டுகோள் விடுத்ததிற்கிணங்க இப்போது மத்திய அரசு அதை மறு பரிசீலனை செய்வதாக எண்ணி இருப்பதற்கு மாநில அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் பயிருக்கு ஏர் கூலி, நாற்று நடவு கூலி, உர வகைகள் விலை உயர்வு காரணமாக பயிர் செலவு அதிகமாகிறபடியால் குவிண்டால் நெல்லுக்கு குறைந்தது ரூபாய் 150 கொடுக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்த வேண்டும். இந்த ஆண்டு இந்தியாவில் மொத்த நெல் மற்றும் கோதுமை உற்பத்தி 14 கோடி டன்கள் என்று மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. இது முந்தைய ஆண்டுகளை விட இரண்டு கோடி டன்கள் அதிகமாகும். இப்படி சென்ற ஆண்டுகளை விட அதிகமாக விளையக் கூடிய வாய்ப்பு தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய முழுவதிலும் இருக்கிறது என்பதை அறிந்து மகிழ்கிறோம். நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வரும் அரிசி, கோதுமை, மைதா, ரவை, சர்க்கரை, ஆகிய அத்தியாவசிய பொருட்களை ஒதுக்கப்பட்ட அளவிற்கு குடும்பக் கார்டுகளுக்கு விநியோகிக்கிற போது, இப்போது பொருள்களை எடை போட்டு பார்த்தால் 100 கிராம், 200 கிராம் எடை குறைகிறது என்ற நிலைமை இருக்கிறதால்; பாலிதீன் பைகளில் அவர்களுக்கு தேவையான அளவுகளில் 2 கிலோ, 5 கிலோ என்று எடை போட்டு கொடுக்கவேண்டும். இந்த முறை தமிழகத்தில் ஏற்படுத்தப்படுமானால் இடையில் தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது. இப்போது சென்னையில் மட்டும் அது போன்ற முறையை கடைபிடித்து வருகிறோம். அது சிறிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாய விலைக் கடைகளுக்கு என்று நியமிக்கப்பட்ட ' விழிப்புக் குழுக்கள் ' சரியான முறையில் செயல்படவில்லை என்று சொன்னார்கள். நியாய விலைக் கடைகளை கண்காணிக்க, விழிப்புக் குழுக்கள் இருந்தாலும் கூட மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒவ்வொரு மாதமும் அது கூட்டப்பட வேண்டும். அல்லது மாவட்ட விநியோக அதிகாரி அவர்களால் கூட்டப்பட் பொதுமக்களுடைய பிரச்னைகள் அல்லது குறைபாடுகள் என்



என்பதை கேட்க நிச்சயமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழிவகைகள் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல கிராமங்களுக்கு நியாய விலைக் கடைகள் கொடுக்கப்படுகிறபோது ரெவின்யூ கிராமங்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டும் ; மதுரா கிராமங்களுக்கு கொடுக்கக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. சட்டத்தில் பார்க்கிறபோது நியாய விலைக் கடைகள் மதுரா கிராமங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும் அதிகாரிகள் தங்களுக்கு சிரமத்தை ஏன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இருக்கிறார்கள். தயவுசெய்து மதுரா கிராமங்களுக்கும் 2, 3, 4 கிலோ மீட்டர் வரையில் அந்த நியாய விலைக் கடைகள் அல்லது நியாய விலை பார்ட் டைம் கடைகளையாவது கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரே வர்த்தகக் கட்டுப்பாடு ஆணையின்படி நெல், அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், நிலக் கடலை, நிலக் கடலைப் பொருட்கள், மைதா, ரவை அனைத்துக்கும் வியாபாரம் செய்ய ஒரே உரிமம் இவ்வாண்டு வழங்கப்பட்டிருப்பதைக் கண்டு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் வர்த்தகர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதம் ஏப்ரல் மாதத்திலிருந்து அந்த உரிமம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் பழைய உரிமம் பெற்றிருக்கிற வணிகர்கள் மற்ற எல்லாப் பொருள்களையும் வர்த்தகம் செய்வதற்கு அவர்கள் விரும்பினால் அனைவருக்கும் ஒரே வர்த்தக கட்டுப்பாடு ஆணையின்கீழ், அந்த விதியின்கீழ் உரிமம் வழங்க சிபாரிசு செய்ய வேண்டும். அது உடனடியாக வழங்கப்பட்டு வணிகர்களுக்கு அனுகூலமாக, அனுசரணையாக ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி ஆலைகளை நவீனமாக்குவது இந்திய சர்க்காரால், ஆணையிடப்பட்டிருக்கிற ஒன்று. 450 அரிசி ஆலைகளுக்கு மட்டும் மானியம் வழங்க நவீன மயமாக்கும் திட்டத்தில் 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-20).

வடாற்காடு மாவட்டத்தில் இரண்டு மாதத்திற்கு முன்பு ஒரு செமினார் நடந்தபோது டாக்டர் நாவலர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூட அங்கே அந்த நிகழ்ச்சிக்கு வந்தபோது சொன்னார்கள். அரிசி ஆலைகளை நவீனமயமாக்குதலுக்காக

450 அரிசி ஆலைகளுக்கு மானியம் வழங்க நவீனமயமாக்கும் திட்டத்திற்கு 22 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 450 ஆலைகளுக்கு என்று மட்டும் இல்லாமல் தமிழகத்தில் உள்ள எல்லா அரிசி ஆலைகளுக்கும் நவீனமயமாக்கும் திட்டத்திற்காக நிதி உதவி தரவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்த வகையில் தமிழகத்திலுள்ள உள்ள 17,005 ஆலைகளுக்கும் எல்லா அரிசி மில்களுக்கும் ரூபாய் 5 ஆயிரம் வீதம் மானியம் கொடுக்க வேண்டும். இதற்கு மத்திய அரசுக்கு எழுதி இந்தச் சலுகையை மாநில அரசு பெற்றுத் தரவேண்டும். நிச்சயமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அதிகாரிகளைச் சந்தித்து இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நவீனமயமாக்கும் இத்திட்டத்தின் அடிப்படையில் நவீனமயமாக்க விரும்பும் அந்த மில்களுக்கு தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மூலமாக கடன் வசதி செய்து கொடுக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஏற்கனவே அங்கே மில் இருந்தாலும் அதிலே பல வசதி செய்யவேண்டியிருக்கும். குறிப்பாக கட்டிடம் கட்ட வேண்டியிருக்கும், மெஷினரி மற்றும் மற்ற பொருள்கள் வாங்கவேண்டியிருக்கும். ஆகவே, அவற்றிற்கு எல்லாம் உதவிகரமாக இருக்கும் வகையில் வங்கிக்கடன்கள் கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள சிறிய மில்களும் நவீனமயமாக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நவீனமயமாக்கும் ஆலைகளுக்கு மத்திய மாநில உதவி 50 சதவீதம் அளிக்கிறது. அது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இது வரவேற்கத் தக்கது, பாராட்டத்தக்கது. மீதம் இருக்கும் 50 சதவீதம் தொகைக்கும் டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தின் மூலம் உதவி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீனமயமாக்கும் திட்டத்திலே பெரிய, சிறிய மில்கள் இருக்கின்றன. அவற்றை ஏ. பி. சி. என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அவற்றின் தகுதிக்கு ஏற்ப பிரித்து, ஏ பிரிவை 1984 ஆம் ஆண்டிலும், பி பிரிவு ஆலைகளை 1985-ஆம் ஆண்டிலும் சி பிரிவு ஆலைகளை 1986-ஆம் ஆண்டிலும் நவீனப்படுத்த மத்திய அரசுக்கு ஆலோசனை கூறி மறுபரிசீலனை செய்ய மாநில அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நவீனப்படுத்துவதற்கு அதிக மின்சக்தி திறன் தேவைப்படுகிறது. ஆகவே, அவர்கள் மீண்டும் மாவட்ட சுகாதார அதிகாரியின் மறுஅனுமதியைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் ஏற்கனவே அந்த ஆலைகள் அனுமதி வாங்கி இருக்



கின்றன. இப்போது கூடுதல் மின்சாரம்தான் அவர்கள் கேட்க வேண்டியிருப்பதால், அந்த வகையில் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுக்கு இந்த நவீனமயமாக்குவதற்காக இட வசதி கட்டிட வசதி ஆகியவற்றைச் செய்து கொள்வதற்கும் டி.ஐ.ஐ.சி. மூலம் கடன் உதவி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்தில் செமினார் நடந்தபோது இந்தக் கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதைச் செய்து தர முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை சம்பா பட்டத்தில் 1984 ஆம் ஆண்டில் 3 லட்சம் டன் அரிசிக்கு ஈடான நெல்லை கொள்முதல் செய்துள்ளது. 1983 ஆம் ஆண்டு 3 லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை மத்திய அரசிடமிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் பெற்று வினியோகம் செய்துள்ளது. 1983 மார்ச் மாதம் முதல் பஞ்சாப், அரியானா ஆந்திரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், டெல்லி, போன்ற மாநிலங்களிலிருந்து 1.52 லட்சம் டன் அரிசி வாங்க 50 கோடி ரூபாய் மாநில அரசு செலவிட்டுள்ளது. தமிழக அரசு இந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து நுகர்பொருள் துறைக்கு வழங்கியது பாராட்டத்தக்கது. இப்படிப்பட்ட சிரமங்கள் இருந்தபோதிலும் நுகர்பொருள் வாணிபக் கழகம் மக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து மக்களின் குறையைப் போக்க நடவடிக்கை எடுத்ததற்காக அந்த நிர்வாகத்தை நான் பாராட்டுகிறேன்.

ஹல்லிங் ஏஜென்ட்ஸ் சில சலுகைகளைக் கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலும் செயலாளர் அவர்களிடத்திலும் மாநிலம் தழுவிய ஒரு குழு அணுகியிருக்கிறது. நெல் அறவைக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 10 அல்லது ரூ. 15 நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். சுமார் ரூ. 10 நிர்ணயித்தால் கூட போதும் என்று நான் கருதுகிறேன். அதேபோல், 68 சதவீதத்திற்கு பதிலாக 66 சதவீதம் மில்காரர்கள் அரசுக்கு அரைத்துக்கொடுக்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். ஆலைக்காரர்களின் சிரமத்தினை கவனத்தில் கொண்டு 66 சதவீதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஈரப்பதம் அரிசிக்கு 15 சதவீதம் அல்லது 16 சதவீதம் இருந்தாலும் அதைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1984 ஏப்ரல் 11

ஹல்லிங் ஏஜென்டுகள் வைப்புத் தொகையாக 25,000 ரூபாய் செலுத்த வேண்டும் என்பதை 10,000 ரூபாயாகக் குறைக்க வேண்டும். அதனால் அதிகமான நெல் அரவையாளர்கள் முன் வருவார்கள்.

வைப்புத் தொகைக்கு இப்போது 7½ சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள். அதை 10½ சதவீதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

வணிகர்களிடம் நெல்லுக்காக லெவி 50 சதவீதம் வாங்குவதில் தற்போது மில் உள்ள வியாபாரிகளாக இருந்தால் நெல்லுக்குப் பதில் அரிசியாகவே கொடுக்க வேண்டுமென்ற புது உத்தரவை சமீபத்தில் அரசு பிறப்பித்திருக்கிறது. தயவுசெய்து நம்முடைய அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மில் உள்ள வியாபாரிகளாக இருந்தாலும் அல்லது மற்ற வியாபாரிகளாக இருந்தாலும் நெல்லாகக் கொடுத்தால் போதும் என்று உத்தரவினை பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 200 இலட்சம் ரூபாய்ச் செலவில் நவீன அரிசி ஆலையைக் கட்டி வருவது பாராட்டக் கூடிய ஒன்று. அதைப்போன்று நிறைய நெல் விளையக்கூடிய மாவட்டங்களில் மேலும் சில ஆலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பங்கு மிக அதிகமாகத் தேவைப்பட்டிருக்கிறது. நுகர் பொருள் வாணிபக் கழகத்தினர் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதால்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நிறைவேற்றிவர முடிந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சத்துணவுத் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றியது மட்டுமல்லாமல் பொது மக்களுக்கும் நல்ல முறையில் உணவுப் பொருள்களை விநியோகம் செய்ய முடிந்தது. எனவே அவர்களுடைய சேவையை இந்த நேரத்தில் பாராட்டி, இந்த மானியத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பீ. முகமது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த உணவுத் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க நான் ஆசைப்படுகிறேன்.



1984 ஏப்ரல் 11] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

உணவுத் துறையைப் பொறுத்தவரையில் வயது வந்தவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோவும், சிறுவர்களுக்கு அரை கிலோவும் என்ற அளவில் அரிசி வழங்குவது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு இந்த அரசு செயல்படுகிறது. சென்ற இரண்டாண்டு காலமாக ஏற்பட்ட வறட்சியின் காரணமாகவும் வெள்ளத்தின் காரணமாகவும் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில் உணவு பங்கீட்டு முறையும் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் உணவுப் பங்கீட்டு முறையில் ஏற்கனவே இந்த அரசு அளித்துவந்த பங்கீட்டைக் குறைக்கின்ற அளவுக்கு இந்த அரசு தள்ளப்பட்டதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சென்ற 1-6-1983-லிருந்து வாரத்திற்கு ஒரு கிலோ என்றிருந்ததை குறைத்து, சென்னை, மதுரை, கோவை நகரங்கள் தவிர மற்ற பகுதிகள் அனைத்துக்கும் மாதம் ஒன்றுக்கு 6 கிலோ அரிசி மட்டும் வழங்கப்பட்டு வருவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இப்போது உணவு நிலைமை அபிவிருத்தி அடைந்து வருகிற காரணத்தாலும் உணவை தேக்கி வைத்திருக்கிற அளவு அதிகமாகி இருக்கிற காரணத்தாலும் ஏற்கனவே நாம் அளித்து வந்த அளவுக்கு உணவுப்பொருள்களை வழங்குகின்ற முடிவினை ஏற்று, அதன் அடிப்படையில் அரிசி விநியோகம் செய்ய தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக இன்னும் சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். முன்னால் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு பகுதி, கோவை மாவட்டத்தில் கேரளத்தோடு ஒட்டியிருக்கின்ற பகுதி ஆகிய இடங்களில் மாதம் 30 கிலோ அரிசி வழங்கப்பட்டது. இன்றையதினம் 6 கிலோ தான் வழங்கப்படுகிறது. இன்று மாறியிருக்கிற இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே முன்னால் வழங்கப்பட்டு வந்த அரிசி அளவுக்கு விநியோகம் செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1-2-1983-லிருந்து வருவாய் நிர்ணயம் செய்து, ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களுக்கு மட்டும் நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் 5,48,000 என்று கொள்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாம் அரிசி வழங்கி வருகிற குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை ஏறக்

குறைய 119 இலட்சம் என்று இருக்கிறது. அதோடு இந்த 5,48,000 குடும்பங்களுக்கும் அரிசி வழங்குவதினால், அரிசி விநியோகம் செய்வதாக இருந்தால் அதனால், அரசுக்கு அதிகமான நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. ஏற்கெனவே நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி விநியோகத்தின் மூலமாக 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த 5,48,000 குடும்பங்களுக்கும் அதோடு சேர்த்து ரேஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் கூடுதலாக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் மட்டுமே இழப்பு ஏற்படும். இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 158 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது: நியாயவிலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்குவதின் மூலம் 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கூடுதலாக ஏற்படுகின்ற இந்த 5 கோடி ரூபாய் பெரிய இழப்பு என்று நான் கூறமாட்டேன்.

[பிற்பகல் 12-30]

எனவே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுவது 1,050 ரூபாய் வருமானம் உடையவர்கள், 1100 ரூபாய் வருமானம் உடையவர்கள் இந்தச் சலுகைகளைப் பெறமுடியாமல் இன்றையதினம் ஏங்கித் தவித்துக் கொண்டு இருக்கின்ற நிலையில் உள்ளார்கள். குடும்பக் கார்டு வைத்துக் கொண்டிருப்பவர்கள் வசதி படைத்தவர்கள் அல்ல என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். வசதி படைத்தவர்கள் தங்களுடைய தேவைகளை வேறு வழியில் பூர்த்தி செய்துகொள்வார்கள். ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் குடும்பக் கார்டை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அத்தகைய இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சலுகை கிடைக்காத சூழ்நிலையை மாற்றி அவர்களுக்கும் தொடர்ந்து ஏனைய பகுதியினருக்கு வழங்குகின்றதைப்போல 1000 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு அளிப்பதைப் போல இவர்களுக்கும் குறைந்த விலையில் ரேஷன் அளிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு முன்வந்து செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நியாய விலை கடைகள் ஏறத்தாழ 18 ஆயிரத்துக்கும் அதிகமாக இருந்தும் எல்லா கடைகளும் ஒழுங்காக செயல்படுவதாகத் தெரியவில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் இதைச் சுட்டிக்காட்டினார்கள். இந்தக் கடைகள் சில தினங்களுக்கு மட்டும்தான் திறந்திருக்கின்றன. நான் அரசைக் கேட்டுக் கொள்வது, எல்லா தினங்களிலும் கடை





களை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும். நலிந்தவர்கள், வருவாய் குறைந்தவர்கள், தங்கள் கரங்களிலே எப்போது பணம் வருகிறதோ அன்றைய தினம் தான் ரேஷன் கடைகளுக்குச் சென்று தங்களுடைய தேவைகளை வாங்குகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே கடைகளை சில குறிப்பிட்ட தினங்களுக்கு மட்டும் திறந்து வைப்பது என்றிருந்தால் அவர்களுக்கு பணம் இல்லாத நிலையில் தங்களுக்கு உரித்தான ரேஷன் வாங்குவதற்கு வழி வகை இல்லாமல் போய்விடும் என்பதைக் கருத்தில் கொண்டு எல்லா தினங்களிலும் நியாயவிலைக் கடைகளைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா தினங்களிலும் நியாயவிலைக் கடைகளை திறந்து வைக்காமல் இருப்பதற்குத் காரணம் அங்கே பொருப்பிலே இருக்கின்ற விற்பனையாளர்களுக்கு இந்த அரசு தருகின்ற, நிர்ணயித்திருக்கின்ற சம்பளம் 100 ரூபாயிலிருந்து இன்றைக்கு ரூ. 150 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். ஏறத்தாழ தினந்தோறும் 8 மணி நேரம் அவர்கள் அங்கே வேலை செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கின்றது. எனவே அவர்களுக்கு தரப்படுகிற ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் கடைகளை தினந்தோறும் திறப்பதற்கு அவர்கள் தயாராக வருவதில்லை. அது மட்டுமல்லாமல் நடைபெறுகிற ஒழுங்கீனங்களுக்கு இது வித்திடுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தினால் மக்களுக்கு வழங்கப்படுவதற்காக அளிக்கப்படுகிற உணவு தானியங்கள் வேறு சில தவறான வழிக்கு சென்றுவிடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது அதைத் தவிர்ப்பதற்காக அங்கே பணியாற்றுகின்றவர்களுடைய சம்பளத்தை இப்போதுள்ள ரூ. 150லிருந்து சற்று அதிகமாக கூட்டித் தந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றுஇந்த் அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரவை மில்கள் ஏறத்தாழ 40 இருப்பதாக இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இங்கே அரவை செய்கின்ற மாவு தரமாக இருக்கிறதா என்று சோதனை செய்து பார்ப்பதற்காக இன்றைய தினம் டெல்லிக்கு அனுப்பும் நிலை இருக்கிறது. அதை மாற்றி நமது மாநிலத்திலே மதுரையிலோ அல்லது சென்னையிலோ இதைப்போன்ற பரிசோதனை கூடங்கள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் தொடர்பாக அரசாங்கத்தை நான் வலியுறுத்த ஆசைப்படுவது உணவுத் துறையில் உணவு கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கான சட்டத்தை இங்கே அமுலாக்கி இருக்கிறோம். இந்தச் சட்டத்தில் இருக்கின்ற சில குறைகளை இதற்கு முன் இந்த மன்றத்தில் பலமுறை நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன். உணவுப் பொருட்கள்

கலப்படம் செய்கின்றவர்கள் அநேகமாக இந்த சட்டத்தி லிருந்து தப்பித்துவிடுகிறார்கள். உணவுத் துறையில் கலப் படம் ஏற்படுவது உற்பத்தி கட்டத்தில் தான் ஏற்படும். உற்பத்தி யாளர்கள் இந்தச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விடுகிறார் கள். அதே நேரத்தில் சிறிய வியாபாரிகள் அந்த உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை வாங்கி விற்பனை செய்கின்ற வர்களை இந்தச் சட்டம் தாக்குகிறது. இந்த நிலையிலிருந்து யார் உண்மையான குற்றவாளியோ, கலப்படம் செய்வதற்கு யார் காரணமாக இருக்கிறார்கள் அவர்களை அந்த மூல இடத்தில், அது கலப்படம் செய்யப்படுகின்ற போதே கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற முறையில், ஏற்கெனவே அமுலாக்கியிருக்கின்ற சட்டத்தை திருத்தியமைப் பதற்கு—ஒருவேளை இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லாமல் இருந்தால் கூட்டாட்சிய அரசுக்கு இந்த அரசு அதைப் பரிந்துரை செய்து தேவையான சட்ட மாற்றங்களை செய்யவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

உணவு வழங்கு துறையில் வேலை பார்க்கின்ற சில பணியாளர் கள் 1975ஆம் ஆண்டிலிருந்து வேலை பார்த்து வந்தும் அவர் களுடைய வேலை இன்று வரையில் நிரந்தரயாக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 8 ஆண்டுகளாக வேலை பார்த்த பிறகும் அவர்கள் வேலையிலிருந்து பிரித்துவிடப்பட்டதாக செய்தி கள் வந்திருக்கின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக் கின்ற சில நிறுவனங்களில் 8 ஆண்டுகளாக பணி புரிந்தவர்களை நீக்கிவிட்டு புதியதாக தேர்வு செய்யப்பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள் என்ற செய்திகள் வந்திருக்கின்றன. இவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து இப்படி சில தவறுகளை நீக்குவதற்கு தாங்கள் முன் வர வேண்டு மென்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.

106 ஆவது விதியின்கீழ் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்கள் ஆகியோரது கோரிக்கைகள் குறித்த அறிக்கை.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவும், தமிழ்நாடு தனியார் கல்லூரி ஆசிரியரல்லாத அலுவலர் கள் சங்கமும் இணைந்து சில கோரிக்கைகளை அரசின் முன்





வைத்து இப்பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காணுமாறும் இல்லாவிடில் பல்கலைக் கழகத் தேர்வுப்பணிகளை 11—4—1984 முதல் புறக்கணிப்பது என்றும் அறிவித்திருந்தனர். இந்தப் பிரச்சினைப் பற்றி சட்டமன்றத்தில் 31—3—1984 அன்று ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் பேரில் பதிலளிக்கும்போது இச்சங்கங் களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வு காண முயற்சி எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக்குழு மற்றும் தமிழ்நாடு தனியார் கல்லூரி ஆசிரியரல்லாத அலுவலர்கள் சங்கப் பிரதிநிதிகள் கல்வி அமைச்சர் முன்னிலையில் கல்வித் துறை அதிகாரிகளுடன் ஏப்ரல், 4, 5, 10 தேதிகளில் பேச்சு வார்த்தை நடத்தினர். இப்பேச்சு வார்த்தையின் முடிவில் பல பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இதையொட்டி, பேச்சு வார்த்தைகள் கலந்து கொண்ட சங்கப் பிரதிநிதிகள் தங்களுடைய போராட் டத்தை கைவிட்டு பல்கலைக் கழகத் தேர்வுகள் நடத்துவதற்கு ஒத்துழைப்பதாக அறிவித்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக் கிறேன். பேச்சு வார்த்தையில் போது சில முக்கியமான கோரிக்கைகள் பற்றிய முடிவுகள் பின்வருமாறு :

(1) கல்லூரி ஆசிரியர்களுக்கு இடைக்கால நிவாரணம் பற்றிய கல்லூரி ஆசிரியர்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கோரிக்கை மனுவை தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும்.

(2) 26—2—1979க்குப் பிறகு தனியார் கல்லூரியில் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் போதிய கல்வித் தகுதி இருந்து கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஒப்புதலும் இருந்தால் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிந்ததும் பணி நிரந்தரப்படுத்தப்படு வார்கள்.

(3) அரசு கல்லூரிகளில் 26—2—1979லிருந்து இன்றுவரை பணியாற்றும் 10ஏ(1) ஆசிரியர்களுக்கு சிறப்புத் தேர்வு நடந்துவது பற்றி தேர்வாணைக்குழுவுடன் கலந்து ஆலோசித்து அவர்களை பணி வரன் முறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

(4) ஊதிய வெட்டு/ஆண்டு உயர் ஊதிய வெட்டு/தற் காலிக பணி நீக்கம் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்ளு வதற்கு முன்னால் முன் அனுமதியை நிர்வாகங்கள் பெறக் கோரு மாறு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தின் 19-ஆம் பிரிவை திருத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 எப்ரல் 11

(5) சிறுபான்மை கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் மேல்முறையீடு செய்வதற்கு தற்போதுள்ள தடையை நீக்கும் வகையில் பிரிவு24(3)-ஐ அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை குறித்து மேல் நடவடிக்கையை அரசு சட்ட ரீதியாக பரிசீலிக்கும்.

(6) முதுநிலைப் பட்டம் பெறாத இரண்டாம் நிலை நூலகர்கள் அவர்களுடைய பதவி மேம்பாடு குறித்து அரசு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து முதல் நிலை நூலகர்களாக பதவி மேம்படுத்தப்படுவர். அவர்கள் அந்த தேதியிலிருந்து 8 ஆண்டுகளுக்குள் முதுநிலைப் பட்டம் பெறவேண்டும்.

(7) 18—3—1983 தேதியிட்ட அரசு ஆணை எண்524-ன்படி உடற்பயிற்சி இயக்குநர்கள்/நெறியாளர்கள் ஊதிய விகிதம் உடனடியாக அமுல்படுத்தப்படும். நூலகர்கள், உடற்பயிற்சி இயக்குநர்கள், பணி, ஊதிய நிலைகளில் உதவிப் பேராசிரியர்களுக்கு இணையாக கருதப்படுவர்.

(8) பயிற்றுநர்/விளக்குநர்களாக பணிபுரிந்து உதவிப் பேராசிரியர்களாக பதவி மேம்படுத்தப்பட்டவர்களுக்கு அவர்கள் பயிற்றுநர்/விளக்குநர்களாக பணிபுரிந்த மொத்தப் பணிக்காலத்தை அவர்கள் பேராசிரியர்களாக பதவி மேம்படுத்தப்படும்போது கணக்கில் எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும். 2 ஆண்டுகள் பயிற்றுநர்/விளக்குநர் பணிக்காலத்தை 1 ஆண்டு உதவிப் பேராசிரியர் பணிக்காலமாக எடுத்துக்கொள்வது என்பதும் பரிசீலனை செய்யப்படும்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுடைய யு. ஜி. சி. ஊதிய முரண்பாடுகளை அகற்றிட கல்லூரி ஆவணங்கள் (பணிச்சான்றிதழ்) அடிப்படையில் பணிக்காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு அந்த ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி. ஊதியம் நிர்ணயிக்கப்படும். தனியார் மற்றும் அரசு கல்லூரிகளில் பதவி மேம்படுத்தப்பட்ட பேராசிரியர்களுக்கும் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட அல்லது பதவி உயர்வு பெற்ற பேராசிரியர்களுக்கும் பணி நிலைகளில் எந்தவித வேறுபாடும் இருக்கக் கூடாது என்ற இயக்குநரின் செயல்முறைகள் அனுப்பப்படும்.

10. பதவி மேம்படுத்தும்போது ஆசிரியர்களின் பணிமுறிவு காலம் எவ்வளவு ஆண்டுகள் இருப்பினும் அவர்களது துண்டு துண்டான பணிக்காலம் அனைத்தும் (காலியிடம் உட்பட அனைத்து ரகப் பணிகளும்) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது பற்றி பரிசீலிக்கப்படும்.



1984 ஏப்ரல் 11] [திரு. செ அரங்கநாயகம்]

11. அரசு கல்லூரிகளில் துணைப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாக பதவி மேம்படுத்தப்பட்டபோது கொடுத்தது போல் பயிற்றுனர்/விளக்குநர்களாக பணி புரிந்து பதவி மேம்படுத்தப்பட்ட சி பிளஸ் தகுதியுடைய துணைப் பேராசிரியர்களுக்கு அவர்கள் பதவி மேம்பாடு அடைந்த தேதியிலிருந்து தகுதி தளர்த்தப்பட்ட தேதி வரை நிலுவை தொகை கொடுக்கப்படுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

12. அரசு கல்லூரிகளில் 10 (ஏ) (1) பணிக்காலத்தில் முன் தேதியிட்டு பணி வரன்முறை படுத்தும் ஆணை 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதியிட்ட ஆணை எண். 1920 உடனடியாக அமுல்படுத்துவது பரிசீலிக்கப்படும். தகுதி தளர்த்தல் பெற்றவர்களுக்கும் இந்த ஆணையை அமுல்படுத்துவது தொடர்பாக பி அன்ட் ஏ ஆர் துறையுடன் கலந்து ஆலோசிக்கபடும். பணி மூப்பு நிலை (சீனியாரிட்டி) பாதிக்காத வகையில் தமிழ்நாடு தேர்வாணைக்குழுவுடன் கலந்தாலோசித்து தற்காலிக பணிக்காலத்தை பதவி மேம்பாட்டிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(பிற்பகல் 12-40.)

13. பணியிட மாற்றுதிட்டம் (Re-deploymentScheme) தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு உடன் நிறுத்தப்படும். முன்னரே பணியிட மாற்றம் செய்யப்பட்டிருப்பவர்கள் மாற்றப்பட்டிருக்கும் கல்லூரியில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும்போது அந்த நிர்வாகம் சம்மதித்தால் அது அனுமதிக்கப்படும். எஞ்சியுள்ளவர்கள் தாய்க் கல்லூரிகளுக்கே வேலைப்பளு இருப்பதால் மாற்றப்படுவர்.

14. அரசு கல்லூரிகளில் 5-7-78-க்குப் பின்னர் பணியில் சேர்ந்த துணைப் பேராசிரியர்கள் 2 ஆண்டுகளுக்குள் அலுவலர்க்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவது பற்றிய கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும். இதே நேரத்தில் 23-3-1981 தேதியிட்ட அரசு ஆணை எண். 510 தினால் ஆண்டு உயர்வு ஊதிய பிடித்தத்திற்குள்ளான துணைப் பேராசிரியர்களுக்கு பிடித்தம் செய்வது நிறுத்தி வைக்கப்படும்.

15. அரசு கல்லூரி ஆசிரியர் அலுவலர்களுக்குக் கொடுக்கப்படும் விடுப்பு பயணச் சலுகை, மருத்துவச் சலுகை, ஓய்வு பெறும்போது ரூ. 10,000 வழங்குதல் பண்டிகை முன்பணம், வீடு கட்ட கடன் முதலியவைகளைத் தனியார் கல்லூரி ஆசிரியர் அலுவலர்களுக்கும் விரிவு படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 ஏப்ரல் 11

16. வேலை நாட்களுக்கு ஏற்றபடி பள்ளி ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு அளிப்பது பற்றி நான்காவது ஊதியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக ஊதியக் குழுவின் முடிவின் படி பள்ளி ஆசிரியர்களுக்கு அமல்படுத்தப்படும் கொள்கை கல்லூரி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

17. சில தனியார் கல்லூரிகளில் பணி நீக்கம், தற்காலிகப் பணி நீக்கம் உயர்வூதிய வெட்டு போன்ற பல பழி வாங்கும் நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இதைப்பற்றி அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

18. தனியார் கல்லூரி நிர்வாகக் குழுவின் அமைப்பு (College Committee) ஆசிரியர், அலுவலர், பல்கலைக் கழகப் பிரதிநிதி, அரசு பிரதிநிதி, நிர்வாகப் பிரதிநிதிகளை சம எண்ணிக்கையில் உள்ளடக்கியதாக மாற்றப்படுவதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலிக்கும். இது குறித்து ஜே. ஏ. சி. யின் பரிந்துரைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

19. ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கு 29-5-1982 தேதியிட்ட அலகு திருத்தி அமைக்கும் குழுவின் பரிந்துரையை 1984-85 கல்வியாண்டு முதல் படிப்படியாக அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

20. கல்லூரி வருகைப் பதிவேட்டின் படி 26-2-1979 அன்று பணியிலிருந்து உபரியாக இருந்த/அலகிற்கப்பாற்பட்ட அலுவலர்கள் (Out of Norms) உட்பட அனைவருக்கும் பணிப்பாதுகாப்பு வழங்கப்படும். அவர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டு ஊதியம் பெறுவர். புதிய அலகின் அடிப்படையில் அவர்கள் பணியில் உட்கொணரப்படுவார்கள்.

21. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு மார்க்கர் வீதம் அரசு ஒப்புதல் அளித்து அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர்.

22. சில்லரைச் செலவினைப் பணியாளர்கள் (Contingency Staff) பணிக் காலம் முழுவதும் கணக்கில் எடுத்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.



அறிக்கை அளித்தல்

1984 ஏப்ரல் 11] [திரு. செ. அரங்கநாயகம்]

23. கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யும் கோரிக்கை. யு. ஜி. சி. யின், பார்வைக்கு அனுப்பப்படும். மற்றும் பல கோரிக்கைகளைப் பற்றி அரசு பரிசீலித்து விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முடிவுகள் கல்லூரி ஆசிரியப் பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி, நாம் ஏற்றுக் கொண்ட முடிவுகள் ஆகும் என்பதையும், அதை அரசு நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களும் தேர்வுகளை நடத்துவதற்கான ஒத்துழைப்பைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய போராட்டத்தை கைவிட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தேர்வுகள் ஆசிரியர்களுடைய முழு ஒத்துழைப்போடு குறிப்பிட்ட தேதியில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வரவு-செலவுத் திட்டம் 1984-85— வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 35 — நுகர்பொருள் வழங்குதல் — தொடர்ச்சி.

திரு. என். எஸ் வி. சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற நுகர் பொருள் வழங்குதல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசிய கருத்துக்களையும் ஆதரித்து, என்னுடைய ஒரு சில கருத்துக்களை உங்கள் முன்னால் சொல்ல விரும்புகிறேன்.

ஏறத்தாழ 98 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வரவு-செலவைக் கொண்டிருக்கிற துறையாக இந்தத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்த காலத்திலே உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தாலே, சிவில் சப்ளைஸ் என்ற பெயரில், ராணுவமும், போலீஸும் அல்லாத மக்களுக்கு வழங்குவதற்காக என்றே ஆரம்பிக்கப்பட்ட அந்த துறையினுடைய பெயர் இன்றளவிற்கும் இருந்து கொண்டு, இன்றைக்கு மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்குகின்ற ஒரு துறையாக இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே நமக்கு அளித்
திருக்கிற தமிழகத்தில் உணவு நிலைமை என்ற அந்தக்
குறிப்புகளை நான் முற்றிலுமாகப் படித்துப் பார்த்தேன். ஆனால்
சமீபத்திலே நடந்து வருகின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது.
உணவுத் துறையைப் பொறுத்தவரையில், அமைச்சரவையிலே
ஒரு இணக்கமான சூழ்நிலை இல்லையோ என்று நான் சந்தேகப்
படக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று நான்
கருதுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில வாரங்களுக்கு முன்
னாலே டெல்லிக்குப் போயிருந்த நேரத்திலே மத்திய தொகுப்
புக்கு 1 லட்சம் டன் அரிசியைக் கொடுப்பதாக, அதுவும் இப்போது
வருகிற அறுவடையிலிருந்து கொடுப்பதாக அறிவித்திருப்பதைக்
கேள்வி பட்டு நான் மகிழ்ந்தேன். இது ஒரு நல்ல அணுகுமுறை.
பல்லாண்டுக் காலமாக நாம் மத்திய தொகுப்புக்கு உணவுப்
பொருள்களைக் கொடுக்காத காரணத்தாலேதான், நமக்கு
இடர்பாடு வருகிற காலத்திலே எல்லாம் நம்மால் உரிமைக் குர
லோடு கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. ஆனால்
இப்போது சொல்லியிருப்பது ஒரு வரவேற்கத் தக்க முறை.

ஆனால் இதே அவையிலே நம்முடைய மாண்புமிகு உணவு
அமைச்சர் அவர்கள் சில வாரங்களுக்கு முன்னாலே இந்த மாமன்
றத்திலே பேசுகிற நேரத்திலே, தமிழகத்தினுடைய உணவு
நிலைமை மிக மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. மத்திய
அரசு கொடுக்காவிட்டால் ரேஷன் கடைகள் கூட மூடப்
படக்கூடிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்ற ஒரு அபாயக
குரலை அவர்கள் கொடுத்தார்கள்.

ஆக முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு டெல்லியிலே
சொல்லியிருக்கிற கருத்துக்கும், உணவு அமைச்சர் அவர்கள்
இங்கே சொல்லியிருக்கிற கருத்துக்கும் மாறுபாடு இருப்பதாக
நான் உணர்கிறேன். எப்படி 1 லட்சம் டன்னை நம்மால்
கொடுத்துவிட முடியும்? புராண காலத்திலே கதையிலே சொல்
வார்களே, நந்தனார் சிதம்பரத்திற்கு போகிறேன் என்று சொன்ன
தும், வேதியர் உடனடியாக நாற்று நட்டு, களை எடுத்து அறு
வடை செய்துவிட்டு போ என்று சொன்னாராம். இரவோடு
இரவாக உணவு தானியம் விளைவித்து அறுவடை செய்தார்கள்.
என்று சொல்வார்கள். அப்படி ஏதாவது நடக்கப் போகிறதா
என்று எனக்குத் தெரியவில்லை. ஆக, அமைச்சரவைக்குள்ளேயே
ஒரு இணக்கமான கருத்து, ஒருமித்த அளவிலே இருக்க வேண்டும்
என்பதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன்.



அடுத்தபடியாக நம்முடைய அவை முன்னவர் அவர்கள், சில
நாட்களுக்கு முன்னாலே 1 லட்சம் டன் அரிசியை வெளி
மாநிலத்திலேயிருந்து கொள்முதல் செய்வதற்கு, மத்திய
அரசாங்கத்திடம் அனுமதிகோரப் போகிறோம் என்று சொன்
னார்கள். பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நான்
உங்கள் மூலமாக அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்கி
றேன். அந்த நிகழ்ச்சி என்னவாயிற்று? மத்திய அரசாங்கத்தி
டம் நாம் நம்முடைய கோரிக்கையை முன் வைத்தோமா? மத்
திய அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டதா? ஏனென்றால்
இப்போதிருக்கிற நிலைமையிலே நிச்சயமாக உணவு தானி
யத்தை நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமையிலேதான்
இருந்து கொண்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன்.
எனக்குத் தெரிந்த விவரப்படி.

அப்படியானால் பக்கத்திலேயிருக்கிற வெளிநாடுகளிலே
யிருந்தும் கூட, அதாவது பர்மா, தாய்லாந்து போன்ற நாடு
களிலேயிருந்தும் கூட, நாம் இறக்குமதி செய்வதற்கு மத்திய
அரசாங்கத்தினுடைய அனுமதி நமக்குத் தேவைப்படுகிறது.
நிச்சயமாக நம்முடைய நியாயமான கோரிக்கைகளுக்கு மத்திய
அரசாங்கம் இணங்கும். நாம் கேட்கிற அளவுக்கு உணவு
தானியங்களை கொடுக்கும் என்பதை அண்மைக் கால வர
லாறுகள் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஏறத்தாழ 3
ஆயிரம் டன்னிலிருந்து 16 ஆயிரம் டன் கோதுமையைக் கூட
மத்திய அரசாங்கம் தமிழகத்திலே இருக்கிற மக்களுடைய உண
வுப் பிரச்னையைப் போக்குவதற்காக அனுப்பிக் கொண்டிருக்கி
றார்கள். ஆனால், வெளி மாநிலத்திலேயிருந்து இறக்குமதி
செய்வதற்கு இந்த அரசு என்ன தொடர் நடவடிக்கை எடுத்தி
ருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே
எல்லா உணவுத் தானியங்களின் விலையும், எல்லா அத்தியாவசி
யப் பண்டங்களின் விலையும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து
கொண்டே வந்திருப்பதை ஒவ்வொரு ஆண்டும் பார்க்கிறோம்.
இந்த 4, 5 ஆண்டுக் காலத்திலே விலைவாசியைக் குறைப்பதற்
காக என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது
என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
ஏனென்று சொன்னால், பெரும்பாலும் ஏழை, மற்றும் நடுத்தர
மக்கள் பயன்படுத்துகிற சமையல் சாமான்களின் விலை
எல்லாம் நாள்தோறும் உயர்ந்து கொண்டேயிருக்கும் இந்தச்
சூழ்நிலையில், அந்தத் தானியங்களின் உற்பத்தியை அதிகரிப்ப
தற்கு அரசாங்கம் என்ன முனைப்பான நடவடிக்கையை எடுத்தி
ருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1984 ஏப்ரல் 11

பொதுவாக தமிழகத்திலே இன்று கடலை எண்ணெய்
விலை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டேயிருக்கிறது.
இந்தக் கடலையின் உற்பத்தியை அதிகரிப்பது பற்றி அரசாங்கம்
என்ன அக்கறை காட்டியிருக்கிறது என்பது நமக்குத் தெரிய
வில்லை. ஆகவே, விலைவாசியைக் குறைப்பதற்கு ஒரு புறம்
உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், ஒரு புறம் சரியான முறை
யிலே மக்களுக்குப் பொருள்கள் கிடைப்பதற்கான முயற்சியிலே
அரசாங்கம் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்
பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அரசாங்
கத்தினுடைய முயற்சி விலைவாசியைக் குறைப்பதிலே ஊக்க
மாக இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
அடுத்தபடியாகச் சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய
நகரங்களிலெல்லாம் பெரிய ஓட்டல்கள் இருக்கின்றன. நிறைய
மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நகரங்களிலே

.......... (குறுக்கீடு.)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்
களே, விலைவாசி ஏற்றம், இறக்கம் இவைகளைப் பொறுத்த
வரையில் மாநில அரசாங்கத்திற்குச் சம்பந்தம் இல்லை; மத்திய
அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையிலே ......

திரு. என். எஸ். வி. சித்தன் : சரி, இந்தக் கருத்தை அர
சாங்கத்தின் கருத்தாக ஏற்றுக் கொள்ளலாமா ? மாண்புமிகு
உறுப்பினர் இராமலிங்கத்தின் கருத்தை அவை முன்னவர்
அவர்கள் ஏற்றுக் கொண்டால் எனக்கு வேறுபாடு கிடையாது.
ஆனால் ஏற்றுக் கொள்வாரா என்பது சந்தேகம். ஆனால்,
சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களில் இருக்
கிற ஓட்டல்களிலே சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை மிக
அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அது போக அந்தப்
பெரிய நகரங்களுக்கு வந்து போகிறவர்களின் எண்ணிக்கை ஆயிரக்
கணக்காக இருக்கிற காரணத்தினால் இன்றைக்கு ஓட்டல் பண்டங்
களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்திருக்கின்றன என்று சொன்
னால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஓட்டல்
அதிபர்கள் வருகிறார்கள், சத்துணவுத் திட்டத்திற்கு நிதி கொடுக்
கிறார்கள் அல்லது முதலமைச்சருடைய நிவாரண நிதிக்குப் பணம்
கொடுக்கிறார்கள் என்ற காரணத்தினாலே ஓட்டல் அதிபர்கள்
மீது நடவடிக்கை எடுக்காது விலைவாசிகள் கூடிக் கொண்டே
போகிற காரணத்தினால் ஏழை எளிய மக்கள் நடுத்தர மக்கள்
குறிப்பிட்ட ஊதிய ஊதியம் என்ற கட்டுப்பாட்டிற்குள் இருக்
கிறவர்கள் எந்த அளவுக்குத் தொல்லைப் படுகிறார்கள் என்பதை



1984 ஏப்ரல் 11] [திரு. என். எஸ். வி. சித்தன்

நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஓட்டல் பண்டங்
களினுடைய விலைவாசிகளைக் குறைப்பதற்காக அரசாங்கம்
இது வரைக்கும் என்ன முறையான முனைப்பான நடவடிக்கை
களை எடுத்திருக்கிறது ? அரசாங்கம் ஏற்றுக் கொண்ட நட
வடிக்கைகளால் எவ்வளவு விலையைக் குறைத்திருக்கிறார்கள்
என்ற பட்டியலை அவை முன்னவர் அவர்கள் அளிப்பார்களா
னால் நமக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, ஒரு பக்கம் விலை வாசிகள் உயர்ந்திருக்
கின்றன, இன்னொரு பக்கம் உணவுப் பண்டங்களிலே கலப்படம்.
இன்றைக்கு வியாதிகள், விஞ்ஞான முறைகளுக்குள் மருத்துவர்
களுடைய கட்டுப்பாட்டிற்குள் வராத அளவுக்கு நோய்கள் வந்
திருக்கிற காரணத்தினால் கலப்படத்தைத் தீவிரமாகத் தடுப்பதற்கு
என்ன முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்
கிறது ? அரசாங்கத்திலே ஒரு செல் இருக்கிறது என்று சொல்
வார்கள், திடீரென்று போய்ப் பார்க்கிறோம் என்று சொல்வார்
கள், அது வழக்கமான பதில். அது போதுமானதாக இல்லை.
சாதாரணமாக சென்னையில் இருக்கிற ஓட்டல் பண்டங்களி
னுடைய விலைகளைப் பொறுத்த வரையில் சென்ற முறை நான்
பேசுகின்ற நேரத்திலே அவை முன்னவர் அவர்களை அழைத்து
வாருங்கள், நீங்களும் நாமும் போய் சென்னையிலேயே உள்ள
ஒரு ஓட்டலுக்குப் போய் மதிய உணவு சாப்பிடுவோமே என்று
கூடச் சொன்னேன். இங்கே இருக்கிற உணவினுடைய தரம் மிக
மோசமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி
யிலேயே அப்படி இருக்கிறது என்றால் சாதாரண மக்கள் சாப்பிடு
கிற சென்னை, மதுரை போன்ற இடங்களிலேயும் மற்ற இடங்
களிலேயும் எப்படி இருக்கும் என்று எனக்கு வியப்பாக இருக்கிறது.
இவ்வளவு மோசமாக விலைவாசி உயர்ந்திருக்கிறது என்றாலும்
கூட கலப்படம் மிக அதிகமாக இருக்கிறது. கலப்படத்தைத்
தடுப்பதிலே அரசாங்கம் மிகத் தீவிரமாக இருக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு மனித சமுதாயத்திற்காகச்
செய்கிற தொண்டாக இன்னும் கொஞ்சம் கடுமையாகக் கருதி
அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்தபடியாக 18 ஆயிரம் நியாய விலைக் கடைகள் இருப்ப
தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற புள்ளி
விவரம் இங்கே சொல்கிறது. எனக்கு முன்னால் எங்களுடைய
கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா
அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு நியாய விலைக் கடை
களுக்கு போய் பொருள்களை வாங்குவதிலே உள்ள சிரமங்களைப்

பற்றி எல்லாம் சொன்னார்கள். வேறு வேறு தேதிகளில்.
10 தேதிக்கு மேல் போய் வாங்கமுடியாத அளவுக்கு 10ம் தேதி
20ம் தேதி என்று போடுகிற காரணத்தால் மக்களிடம் பணம்
இல்லை என்று சொன்னார்கள். இதே நிலைமை எங்கள் கிராமப்
புற தொகுதிகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. இங்கே
இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அதை ஒத்துக்
கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அங்கே சிறப்பு
அங்காடிகள் மூலமாக உணவுப் பொருட்கள் விநியோகம் செய்
கிறார்கள். எல்லாப் பொருட்களையும் அவர்களால் விநியோகம்
செய்ய முடியவில்லை பல்வேறு காரணங்களால். ஆனால்
அதே நேரத்தில் 2, 3 கிராமங்களுக்கு ஒரு கடை என்று இருக்கிற
காரணத்தால் குறிப்பிட்ட தேதிகளில் அல்லது குறிப்பிட்ட நேரத்
தில் போய் மற்ற கிராமங்களில் உள்ளவர்கள் போய் வாங்க
முடியவில்லை. இந்தச் சிறப்பு அங்காடிகளுக்கு அவர்கள் செல்
கின்ற நேரத்தில் பகல் நேரங்களில் கூலி வேலைக்குப் போகிறவர்
கள் எல்லாம் அந்த வேலையை விட்டு விட்டுப் போய் பொருட்கள்
வாங்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்
பட்டவர்களுக்கு நாங்கள் பல்வேறு இடங்களில் சொல்கிறோம்
ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் இந்த சிறப்பு அங்காடிகளிலி
ருந்து உணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என்று கிராமத்தில்
உள்ளவர்கள் வேலையை விட்டு விட்டு அங்கே போய் வாங்குவது
என்பது முடியாத காரியம். ஆனால் அதே நேரத்தில் அந்த
சம்பந்தப்பட்ட கிராமத்தில் இருக்கிறவர்கள் கூட போக்குவரத்து
கான செலவை ஏற்றுக் கொள்வார்கள். அப்படி நிலை இருக்கிற
நேரத்தில் அந்த அந்த கிராமங்களுக்குப் போய் வழங்குகின்ற
முறை இருந்தால் தான் நாம் கொடுக்கின்ற இந்த நியாயமான
பொருள்கள் ஏழை எளிய மக்களின் கையில் போய் சேரும்.
அரசு அதில் கொஞ்சம் சற்று கவனம் எடுத்துக் கொள்ள வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரேஷன் கடைகளில் போடும்
எடை பற்றி பல்வேறு நேரங்களில் சொல்லியிருக்கிறோம்.
உணவு தரம் ஒரு புறம் இருந்தாலும் எடை சரியாக இல்லை.
அவைகளை எல்லாம் சரி பார்ப்பதற்கு முயற்சியை அரசு
தொடர்ந்து எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள
கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு நம்முடைய நியாய விலைக்
கடைகளிலிருந்து சோயா பீன்ஸ் எண்ணெய் என்று
நான் நினைக்கிறேன் அதை வழங்குகிறார்கள் என்று
நினைக்கிறேன். இன்றைக்கு என்னுடைய நண்பர்
ஒருவர் இன்று காலையில் சொன்னார்கள் அந்த எண்ணெய் மீன்
வாடை அடிக்கிறது என்று. எங்களால் உபயோகப்படுத்த
முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆக இந்த மாதிரியான
குறைகளை நியாயமான முறையில் மாற்றுவதற்கு ஏதாவது நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது



சமையலுக்கு பயன்படுகிற முறையில் செய்ய வேண்டும். இந்தத்
துறையில் உள்ள அதிகாரிகள் இதில் கவனம் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேறு ஒரு செய்தி.
இன்றைக்கு ஆதம்பாக்கத்தில் தனிப்பட்ட ஒருவர் சங்கம்
என்ற பெயர் வைத்துக் கொண்டு 3 கடைகள் அங்கே இருக்கிற
தாம். அந்த 3 கடைகளிலும் பொருட்கள் சரியாக கிடைக்க
வில்லை என்று புகார் செய்து செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு
சங்கம் 15 நாட்களுக்கு முன்பாக அங்கே ஒரு கடை துவக்கி
அதன் மூலமாக பொருட்கள் வழங்குகின்ற இந்த நேரத்தில்
அதையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று முயற்சி
நடைபெற்று வருவதாக எனக்குச் செய்திகள் வரப் பெற்று
இருக்கின்றன. எனக்கு கிடைத்த செய்தி சரியான செய்தி
என்று நினைக்கிறேன். தவறு இருந்தால் நான் திருத்திக்கொள்ள
தயாராக இருக்கிறேன். அப்படி இருக்குமானால் அந்த செங்கற்
பட்டு மாவட்ட கூட்டுறவுச்சங்கமே அந்தப் பகுதியில் ஒன்றுஅல்லது
2 கடைகளை திறந்து—இப்போது திறந்து இருக்கும் கடை
தொடர்ந்து இருக்கட்டும்-நடத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப்
பகுதியில் உள்ள நிலமங்கை நகர் குடியிருப்புச் சங்கம் கூட
இதற்கான ஒரு கோரிக்கையை அரசுக்கு, அந்தத் துறைக்கு
அனுப்பி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் போலவே
சென்னையில் இருப்பவர்கள் தங்களுடைய குடியிருக்கும் இடங்
களை மாற்றுவார்களானால் அப்படி அவர்கள் மாற்றுகிற நேரத்
தில் ஒரு ரூபாய் பணம் கொடுத்து அந்த பத்திரங்கள் வாங்க
வேண்டும் என்ற ஒரு முறை இருக்கிறது. காலை 10½ மணியி
லிருந்து 1 மணிக்குள் போக வேண்டும் என்ற குறைபாடுகளைச்
சிலர் சொல்கிறார்கள். எந்த நேரம் போனாலும் எந்த விதமான
கட்டணமும் இல்லாமல் தங்களுடைய கடிதத் தலைப்பில் எழுதிக்
கொடுத்து மாற்றுகின்ற அளவுக்கு அந்த முறையை எளிதாக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்
றைக்கு நிறைய சொல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும்
கூட மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதை
விரைவாக முடிக்க வேண்டும் என்று சொல்கின்ற காரணத்தினால்
இந்தத் துறையை இன்னும் சிறப்பாகப் பணி ஆற்றச் செய்து
இங்கே தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய, நடுத்தர மக்க
ளுக்கு இதனுடைய நன்மைகள் போய்ச் சேருகிற அளவுக்கு நல்ல
முறையில் இதில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு இந்த
அளவில் என்னுடைய உரையை நிறைவு ஆக்குகிறேன். நன்றி,
வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, உணவுப் பிரச்
சினை பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுகின்ற இந்த

நாளிலாவது மாண்புமிகு உறுப்பினர்கள் குறித்த நேரத்திற்கு உணவுக்கு அனுப்புவது தான் பொருத்தமாக இருக்கும் என்று கருதி இந்த மன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னோடு பெரிதும் ஒத்துழைத்ததற்கு எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே பெரும்பாலான உறுப்பினர்களுக்கு மிகவும் திருப்தி ஏற்பட்டிருப்பதன் காரணமாக, பொறுக்கு மணிகளாக நான்கு பேர்கள் மட்டுமே பேசினால் போதும் என்ற அளவிற்கு வந்து. நான்கு உறுப்பினர்கள் மட்டுமே தங்கள் மேலான கருத்துக்களையும் நிலைமைகளையும் இந்த உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் விளக்கியிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவு நிலைமையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அவையினருக்கு அளிக்கப்பட்டிருப்பதிலேயிருந்து நிலைமைகளையெல்லாம் மிகவும் தெளிவாகக் கண்டு கொள்வதற்கான நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பேரவை உறுப்பினர்கள் அவ்வப்பொழுது வினாக்களை எழுப்புவதன் மூலமாக உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் அவ்வப்பொழுது தக்க விளக்கங்களைத் தந்திருப்பதன் காரணமாக தமிழகத்தின் நிலைமைகள் ஓரளவுக்குத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

பல்வேறு வகைகளிலேயும் இந்த உணவு வழங்கும் துறையானது மக்களுடைய நலன் கருதியும், உணவுப் பண்டங்களின் விலைவாசி கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேயும்தான் பல ஆண்டுக் காலத்திற்கு முன்னதாகவே இந்தப் பொது விநியோக முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, அது ஆண்டுக்காண்டு விரிவு பெறத் தக்க அளவிற்கு வளர்க்கப்பட்டு வரும் பாங்கினை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதற்கான முயற்சிகளை ஆண்டுக்காண்டு நாம் எடுத்து வருகிறோம். ஆண்டுக்காண்டு சிறப்புற்று விளங்கி வருகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிலபல குறைபாடுகள் இருக்கின்றன என்றாலும், இவற்றை நீக்குவதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். என்றாலும், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களைப் பார்க்கின்றபொழுது, இந்த உணவு வழங்குகின்ற பிரச்





னையிலே நாம் ஓரளவிற்கு மக்களுடைய பாராட்டையும், அவர்
களுடைய திருப்தியையும் பெறத் தக்க அளவிற்கு நிறைவேற்றி
வருகிறோம் என்பதை யாரும் மறுக்க இயலாது.

22 மாநிலங்களில், முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, சீர்ப்
படுத்தி, செம்மைப்படுத்தி வழங்கி வருபவர்களில் தமிழகம்
முன்னணியில்தான் இருக்கிறது. பொது விநியோக முறையைப்
பிற மாநிலங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வகையிலே
வரும்பொழுதுகூட, உணவுத் துறைச் செயலாளர்களின் கூட்
டத்தை மத்திய அரசு கூட்டியிருந்தபொழுதுகூட தமிழகத்தில்
பின்பற்றப்பட்டு வருகின்ற பல்வேறு செயல்முறைகளைப் பிற
மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்
கின்றது.

உணவுத் துறை அமைச்சர்களின் மாநாட்டிலே தமிழகத்
தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற முயற்சிகளைப்
பற்றிச் சொல்லும்பொழுது மத்திய உணவு அமைச்சரவர்கள்
பிற மாநிலங்கள் இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டாகக்
கொண்டு பின்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

பொது விநியோக முறை எப்படிச் சீராகவும் சிறப்பாக
வும் நடைபெற வேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையில்
செய்தி விளக்கப் படம் ஒன்றை டாகுமென்டரி ஃபிலிம் எடுத்து
தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற முறைகளை விளக்கமாக
இந்தியாவின் பிற மாநிலங்களில் காண்பிப்பதன் மூலம் அதைப்
பிற மாநிலங்கள் பின்பற்றக் கூடும் என்ற முறையில் யோச
னைகள் தெரிவிக்கப்பட்டு, அந்தச் செய்தி விளக்கப்படம் தமி
ழகத்திலே எடுக்கப்பட்டு மத்திய அரசிடம் பல திங்கள்களுக்கு
முன்னால் ஒப்படைக்கப்பட்டு இந்தியாவின் பிற மாநிலங்களுக்
குச் செல்லுகின்ற அளவிற்கு, ஏற்பட்டு, இந்த வகையில் முயற்சி
களைச் செய்து வருகிறோம்.

இதிலே நம்முடைய பணி முடிந்துவிட்டது. முழுத் திருப்தி
யோடு இருக்கிறோம் என்று சொல்லவில்லை. இன்னும் செய்
யப்பட வேண்டிய பணிகள் பல இருக்கின்றன. பலருடைய
ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும், ஊக்கத்தின், ஆக்கத்
தின் அடிப்படையிலேயும் அதை நாம் நிறைவேற்ற வேண்டிய
வர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிடு
கின்றபொழுது, இந்த உணவுக் கொள்கையைப் பொறுத்த
வரையில் அமைச்சரவையில் வேறுபாடு இருக்கிறதோ என்ற
ஐயப்பாடு தோன்றியிருப்பதாகச் சொன்னார்கள். இங்கே நான்
விளக்குவதிலிருந்து இருக்கின்ற நிலைமைகள் தெரியும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 ஏப்ரல் 11

நாம் சாதாரண காலத்தில் உச்சவரம்பு கட்டும்பொழுது ஆள் ஒருவருக்கு வாரம் ஒரு கிலோ என்றும் சிறுவர்களுக்கு அரைக் கிலோ என்றும், ஆகவே, ஒரு திங்களுக்கு ஒரு குடும்பத் திற்கு இருபது கிலோவிற்கு மிகாமல் கொடுக்கப்படும் என்ற முறையை வைத்திருந்தோம். உணவு நமக்குக் கிடைக்கும் அள வை வைத்து இருபது கிலோ கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அதைக் குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுதுகூட, திங்கள் ஒன்றுக்கு 80,000 டன் அரிசி இருந்த நேரத்தில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங் களில் 12 கிலோ அரிசியாகவும், மிகுதியை 5 கிலோ, 12 கிலோ 15 கிலோ என்பது போன்று கோதுமையாகவும் வழங்குகிறோம். 20 கிலோ கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அரிசியை யும், கோதுமையையும் இணைத்துக் கொடுக்கிறோமே தவிர அரிசியே 20 கிலோ வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

(பிற்பகல் 1-00)

பிற இடங்களில் 6 கிலோ என்று கொடுக்கப்படுகின்றது. இந்த அளவுக்குக் கொடுத்துக்கொண்டு வருகின்றபோதே ஒரு கோடியே 18 இலட்சம் குடும்ப அட்டைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 80 ஆயிரம் டன் அரிசி ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகின்றது.

ஆகவே மாண்புமிகு உறுப்பினர் பலரும் வலியுறுத்தியது போல் இதை மிக அதிகமாக ஆக்கவேண்டும் என்றால் அதற் காக அதிகமான அளவுக்கு நாம் ஒதுக்கித் தீரவேண்டிய ஒரு அவசியம் வருகின்றது. அப்படி ஒதுக்கவேண்டும் என்றால் இன்னும் பல இலட்சக்கணக்கான டன்கள் கிடைத்தால்தான் முடியும். அந்த வகையிலே மத்திய அரசு 40 ஆயிரம் டன் கொடுத்தது; இப்போது 25 ஆயிரம் டன் அளவுக்குத்தான் தரு கிறார்கள் என்றாலும் மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் செல வழிகின்றது. ஆகவே 25 ஆயிரம் டன் போக மீதியுள்ள 55 ஆயிரம் டன்களைப் பொறுத்தவரையில் நாம் கொள்முதல் செய்து வைத்திருக்கின்ற நம்முடைய இருப்பிலே இருந்து அதனை ஈடுகட்டிக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று இருக் கின்ற ஒரு கோடியே 18 இலட்சம் கார்டுகளுக்கும் 20 கிலோ அரிசியைக் கொடுக்கவேண்டும் என்ற முறையைக் கடைப்பிடித் தால் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கே இன்னும் 2 முதல் 2½ இலட்சம் டன்கள் அரிசி தேவைப்படும். அப்படி ஒரு மாதத்தின் அதிகப்படியான தேவையே அவ்வளவு என்றால் இன்னும்



1984 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கின்ற ஏழெட்டு மாதங்களுக்கு எவ்வளவு டன் அதிகப்படி யாகத் தேவை என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியும். ஆனால் இப்போது இருக்கின்ற அரிசியோ இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் வராது. மத்திய அரசு 25 ஆயிரம் டன்தான் தருகிறார்கள்; மீதி 55 ஆயிரம் டன் நம்முடைய இருப்பிலே இருந்து......

திரு. என்.எஸ்.வி சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மத்திய அரசு 25 ஆயிரம் டன் கொடுத்தாகச் சொன்னார்கள். நவம்பர், டிசம் பர், மற்றும் ஜனவரி ஆகிய மாதங்களில் 40 ஆயிரம் டன் அரிசி யும், பிப்ரவரி மார்ச் மாதத்தில் 35 ஆயிரம் டன் அரிசியும் தந்த தாகப் போடப்பட்டிருக்கின்றது. அப்படியானால் இந்த மாதம் குறைவாக வந்திருக்கிறதா? இந்த மாதத்திற்கான குறியீடு வந்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, முதலிலே ஐயாயிரத்திலே ஆரம்பித்து 40 ஆயிரம் டன்னாக ஆகி, 35 ஆயிரம் டன்னுக்கு வந்து பிறகு 25 ஆயிரம் டன் என்ற அளவுக்கு வந்து இருக்கின்றது. ஆகவே நாம் இப்போது கையிலே வைத்திருப்பது 4½ இலட்சம் டன். அதைக் கொள்முதல் செய்து வைத்திருக்கிறோம். இனிமேல் அறுவடை ஆகி வருவதற்கான வழி இல்லை. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இனிமேல் அறுவடையாகி வருவதற்கு, வழி இல்லை. ஆகவே இனிமேல் கொடுப்பதற்கு மத்திய அர சின் இருப்பிலே இருந்துதான் நாம் பெறவேண்டும். ஆகவே இப்போது நம்மிடத்திலே 4½ இலட்சம் டன் இருந்தாலும் கூட மத்திய அரசு போதுமான அளவுக்குக் கூடுதலாகக் கொடுத் தால்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதுபோன்று கூடுத லாக ஆக்க முடியும். அப்படிக் கூடுதலாக ஆக்கிவிட்டால் நம் மிடத்திலே அரிசியே இருக்காது. பிறகு மத்திய அரசும் கொடுக்க வில்லை என்றால் நியாய விலைக் கடைகளை எல்லாம் சாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். அவ்வாறு சாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்படும் என்று சொல்வது சாற்றுவோம் என்ற அடிப்படையில் அல்ல; புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தான் எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து இப்போது கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லிவிட்டு வந்தது நம்மிடத்திலே உபரியாக இருப்பதால் அதைக் கொடுக்கிறோம் என்ற பொருளிலே சொல்லிவிட்டு வரவில்லை. ஆந்திரா மாநிலம் அதிகமான அரிசியை மத்திய அரசின் இருப்புக்குக் கொடுத்துவிட்டு பிறகு தங்களுக்குத் தேவையானபோது திரும்ப வாங்கிக்கொள்கிறார்கள். ஆகவே அதுபோல் இப்போது நம்மிடத்தில் 4½ இலட்சம் டன் இருப்பதன்

காரணத்தால் அதிலே இருந்து ஓரளவுக்குக் கொடுங்கள்; பிறகு உங்களுக்குத் தேவைப்படுகின்றபோது நாங்கள் தருகிறோம் என்று மத்திய அமைச்சர் சொன்னதன் காரணத்தால் தான் அகில இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் கடைபிடிக்கின்ற முறையை நாமும் கடைப்பிடிக்கவேண்டும் என்ற காரணத்தால் தான்—இப்போது நம்மிடத்திலே இருப்பது முழுவதையும் கொடுத்துவிட்டால் பிறகு ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் மாதங்களுக்கான முழு அளவினையும் அவர்களிடத்திலே இருந்துதான் நாம் எதிர்பார்க்கவேண்டிய நிலைமை வரும் என்று கருதி ஒரு இலட்சம் டன் கொடுப்பது என்ற வகையிலே, ஒரு கொள்கையின் அடிப்படையிலே, அதாவது ஆந்திரா மாநிலமும் அவ்வாறு கொடுத்து, வாங்குகின்றது என்ற நிலை இருப்பதன் காரணத்தால், தமிழகமும் தன்னால் ஆனதைக் கொடுத்துத் தேவையானபோது வாங்கிக்கொள்ளலாம் என்று மத்திய உணவு அமைச்சரும் வாக்குறுதி தந்திருப்பதால், நம்மிடம் இப்போது $4\frac{1}{2}$ இலட்சம் டன் இருப்பதில் ஒரு இலட்சம் டன் தருவதிலே சங்கடம் ஒன்றும் இல்லை என்பதால், நமக்குத் தேவைப்படுகின்ற போது அவர்கள் கொடுக்கவேண்டும் என்ற அந்தத் தன்மையின் அடிப்படையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவ்வாறு சொல்லிவிட்டு வந்தார்கள். எனவே நம்முடைய தேவையை எல்லாம் மிஞ்சி உபரியாக இருக்கின்றது. ஆகவே தருகிறோம் என்ற பொருளிலே அதை எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில் 18,009 என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. அடிக்கடி பலபேர் சொல்லுகின்ற வகையிலே சிலபல இடங்களில் தேவைகளுக்கேற்ப, அந்தப் பகுதிகள் ஆறுகளாலோ மற்றவைகளாலோ துண்டிக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகள் இருந்தால், நடமாட்டம் இல்லாதஅளவுக்கு நிலைமைகள் இருந்தால், அங்கே குறைந்தது 300 கார்டுகளாவது இருக்கக்கூடிய நிலைமை இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் மேலும் கடைகளை வைப்பது பற்றி அரசு சிந்திக்கும் என்பதை எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகின்ற பொழுது கூட சிலபல இடங்களிலே கடைகள் ஏற்படுத்துவதைப் பற்றி சொன்னார்கள். அதைப் பற்றித் தனியாக விசா



ரித்து அதிகாரிகளைக் கொண்டு நியாயத்தின் அடிப்படையில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம். எந்த அள விலே இருக்கிறது என்பதை இப்பொழுது என்னால் சொல்ல இயலாது. ஆனால் ஒரு நியாயத்தின் அடிப்படையில் அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்குத் தர வேண்டுமென்பதைப் பற்றி ஆராயலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்பொழுதே பல இடங்களிலே 21,000 போலி கார்டுகளை நாம் பிடுங்க வேண்டியிருந்தது. நம்முடைய கணக்குப்படி 21,000-க்கு மேல் குடும்ப அட்டைகளை நாம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நம்முடைய கண்ணுக்கு எட்டாமல், காதுக்கு எட்டாமல், கருத்துக்கும் படாமலே இருப்பது எவ்வளவு இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ள வேண்டும். 1 கோடியே 18 இலட்சம் குடும்ப அட்டைகள் தருகிறோம் என்று சொன்னால் ஒரு குடும்பத்திற்கு 4 பேர்கள், 5 பேர்கள் என்று வைத்துக் கொண்டாலும் 5 கோடியைத் தாண்டித்தான் நிற்கிறது. தமிழகத்தினுடைய மக்கள் கிட்டத்தட்ட $4\frac{3}{4}$ கோடிக்குத்தான் நிற் கிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கார்டுகளில் இருப் பதைக் கணக்கிட்டு பார்த்தால் $5\frac{3}{4}$ கோடிக்குமேல் வருகிறார்கள் மக்கள் தொகையே $4\frac{3}{4}$ கோடி இருக்கும்போது, கார்டில் $5\frac{3}{4}$ கோடி ஆகியிருக்கிறது. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேட வேண்டிய அவசியம் கூட ஏற்பட்டது. அதற்குப் பிறகுதான், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு, கார்டுகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் வந்தது, அதிலேயும் சில பல இடங்களிலே முறைகேடுகள் நடக்கின்றன என்று அவைகளை யெல்லாம் சீர்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இஸ்மாயில அவர்கள் பேசுகின்ற பொழுதுகூட ஓரளவுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். வெளிச் சந்தையில் தாராளமாக கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும், அதைத் திட்ட வட்டமாக, அரசே ஏற்று நடத்துகிறது என்கிற அளவுக்கு ஒரு கட்டுப்பாடான சூழ்நிலையே இல்லை. அரிசி என்றால், நியாய விலைக் கடைகளின் மூலமாக விற்கப்படுகின்ற நிலையிருக்கும்போது, வெளிச் சந்தையிலும் விற்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல் சிமென்ட்—அடக்கவிலைக்கே, கட்டுபடியாகக்கூடிய விலைக்கே விற்கின்ற நிலைமை இருக்கும்போது, வெளிச் சந்தையில் விற்கின்ற நிலைமையிருக்கிறது. அதைப் போன்று, மைதா, ரவை போன்றவையும் கூட கட்டுப்பாட்டு விலையில் விற்கின்றபோது

வெளிச் சந்தையிலும் விற்கப்படுகிறது. சர்க்கரைக் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படுகின்றபோது, வெளிச் சந்தையிலும் விற்கின்றது. இப்படி இரண்டையும் வைத்திருப்பதன் காரணமாக, வெளிச் சந்தையை ஓரளவிற்குக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கும் மக்களுடைய இன்றியமையா தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்றுகின்றோம். இதைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்ற உறுப்பினர்களுடைய எண்ணங்களை அரசு உணருகிறது என்றாலும் இதனுடைய இருப்பு கொஞ்சம் அதிகம் ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது அதற்கான ஒரு வழியை, ஒரு உதவியை மத்திய அரசு செய்கின்றபொழுது அதை கவனிக்கலாம் என்று இருக்கின்றோம். ஏற்கெனவே என்ன நிலை என்று கேட்டால் சாதாரணமாக மாதம் ஒன்றுக்குக் கூட 20,000 டன் 30,000 டன்தான் நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. காரணம், வெளிச் சந்தையிலே விற்பதற்கும் நியாய விலைக் கடைகளிலே விற்பதற்கும் 30 காசு, அல்லது 40 காசு, அல்லது 45 காசுதான் வித்தியாசம் இருந்தது. எல்லோரும் வெளிச் சந்தையிலே வாங்குகிற நிலைமை இருந்தது. இப்பொழுது என்ன நிலைமை என்றால், நம்முடைய நியாய விலைக் கடைகளில் நாம் ரூ. 1-75க்கு விற்கும்போது வெளிச் சந்தையில் ரூ. 3-40, ரூ. 3-30, சில இடங்களில் ரூ. 4, ஏன் ரூ. 4-40 என்று விற்பதன் காரணமாக, 1 கோடியே 18 லட்சம் கார்டுக்காரர்களும் நியாய விலைக் கடைகளிலே வாங்க வேண்டுமென்று வந்துவிட்டதன் காரணமாக, எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதன் காரணமாக, ஓரளவுக்கு இருப்பதைப் பகிர்ந்து தருகின்ற தன்மை ஏற்படுகிறது. அதை ஓரளவுக்குக் கூட்ட வேண்டுமென்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. வாய்ப்பு ஏற்படும்போது செய்யலாம்.

ஓட்டல் பண்டங்களுடைய விலையைப்பற்றியெல்லாம் மாண்புமிகு சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் நான் குறிப்பிடுவேன். விலையைக் கூடுமான அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று நாம் முயற்சியை எடுத்துவருகிறோம். பெங்களூர், பம்பாய், கல்கத்தா, அகமதாபாத், டெல்லி ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகத்திலே முழுச் சாப்பாடு சாதாரண ஓட்டலிலே ரூ. 3-க்குத்தான் கிடைக்கிறது. அங்கே எல்லாம் ரூ. 7, ரூ. 7½, ரூ. 8, ரூ. 10-க்குத்தான் கிடைக்கிறது. ஆனாலும் கூட, இங்கே இன்னும் குறைக்க வேண்டும், எல்லா இடங்களிலும் கிடைக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். விலையைப் பார்த்தால், கூடுமான அளவுக்குக் கட்டுபடியாகின்ற அளவுக்குத்தான் போடுகிறார்கள். இப்பொழுது கூட ஆந்திராவிலே ஓரளவுக்குச் சட்டத்தின் மூலம் கட்டுப் படுத்தினார்கள். சட்டத்தின் மூலம் கட்டுப் படுத்தினார்களே தவிர, இட்டிலிக்கு ஒரு விலை. தனியாக வைத்திருக்கிறார்கள். சாம்பாருக்கு தனியாக, சட்னிக்குத் தனியாக விலை வைத்திருக்கிறார்கள். இங்கே 5 காசு



கூடுதலாக வாங்கினாலும், இட்லி எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். சாம்பார் எவ்வளவு வேண்மானாலும் வாங்கலாம். இட்டிலிக்குத்தான் காசு என்று வைத்திருக்கிறார்கள். ஓட்டல்காரர்களைக் கேட்டால், இட்டிலியை சாம்பாரிலே மிதக்க விடுகிறார்கள் பல பேர்கள். அந்த அளவுக்குப் பருப்பைச் சேர்த்து நாங்கள் போட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனாலும், கட்டுப்படுத்துவதிலே ஒன்றும் கடினம் இல்லை. கூடுமான வரையில் ஒரு நியாயத்தின் அடிப்படையில் போக வேண்டுமென்ற அடிப்படையில் தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் திரும்பவும் நம்மிடத்திலே என்ன கேட்கிறார்கள் என்றால், நீங்கள் அரிசி மற்றவைகளை, நியாய விலையில், கட்டுப்படியாகக்கூடிய விலையில் கொடுத்து விடுங்கள் நாங்களும் ஓரளவுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையிலே விற்க முடியும். நாங்களும் போட்டி போட்டுக் கொண்டு வெளிச் சந்தையிலே அதிக விலைக்கு வாங்கி, சம்பளம் ஊதியம், கொடுப்பதன் காரணமாக, இந்த அளவுக்குத்தான்முடிகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். யாராவது சமூக நலத் தொண்டர்கள் சமூக அமைப்பினர் முன் வந்து இப்பொழுதிருக்கிற விலைவாசியின் அடிப்படையில், இட்டிலியையோ, அல்லது தோசையையோ, மற்றவற்றையோ, குறைத்துக் காட்டுகிற அளவுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, 4, 5 ஓட்டல்களையாவது வைத்து நடத்திக்காட்டுவார்களானால், நாங்கள் அவர்களைக் காட்டியாவது அவர்க[illegible] குறைத்துக் கொடுக்க முடியும்போது, உங்களால் ஏன் குறைத்துக் கொடுக்க முடியவில்லை என்று நாம் கேட்க முடியும்.

(பிற்பகல் 1-10)

அப்படிப்பட்ட சமூக நலத் தொண்டர்கள், சமூக நல அமைப்புகள் முன் வருவார்களேயானால் மிக மிக நல்லது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது விதவைகளாக இருப்பவர்களுக்கு நாங்கள் உதவி செய்து அதிக எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜஸ் ஆகாத அளவிற்கு நீங்கள் இட்லி, தோசை போன்றவைகளை குறைந்த விலைக்கு விற்பீர்களானால் அதன் மூலமாக ஓட்டல்களை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியுமா என்பதை அறிய இயலும். அதற்காக தாராளமாகத் தருகிறோம். அந்த அளவிற்கு 40, 50 இடங்களில் சென்னையில கொடுக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது மேலும் வளருமேயானால் மிக மிக நல்லது. இப்போது சட்டம் கொண்டு வந்து விடலாம். அதிலே என்ன சங்கடம் வருமென்றால், இவ்வளவு கிராம் இருக்கவேண்டுமென்று சொல்லலாம்; அதற்கு பிறகு அதிகாரிகளை நாம் சமாளிக்க வேண்டும், ஓட்டல்காரர்களை நாம் சமாளிக்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே,
நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் ஏனைய மாநிலங்களில்
இருக்கிற பெரிய நகரங்களைச் சுட்டிக்காட்டி தமிழகத்தில்,
சென்னையில் குறைந்த விலைக்கு உணவு தருகிறோம் என்று
சொன்னார்கள். அதோடு ஏனைய நகரங்களில் இருக்கிற கூலி
அல்லது சம்பளத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய
நிலையில் இருக்கிறோம். நான் உங்கள் மூலமாக கேட்டுக்
கொள்ள விரும்புவது நாட்டில் அவசர நிலைமை அமலில் இருந்த
போது ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு வழங்க முடிந்தது ;
அப்படியென்றால் ஏன் இப்பொழுது கொடுக்க முடியவில்லை ?
அப்போது ஒரு ரூபாய் என்றால் இப்போது 1½ ரூபாய் வைத்துக்
கொள்ளட்டும். ஆகவே சட்டம் போட்டு நாம் சரியான நட
வடிக்கை எடுத்தால் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஜனதா
சாப்பாடு போட்ட கராணத்தால் எத்தனை ஓட்டல்காரர்கள்
மூடிவிட்டு போய் விட்டார்கள் ? ஒருவரும் போகவில்லை.
ஆகவே அரசாங்கம் கொஞ்சம் கெடுபிடியாக இருக்க வேண்டும்.
அவர்கள் இலாபத்தில் குறைத்துக் கொள்வார்களானால் ஒன்றும்
குடி மூழ்கி போய்விடாது. அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை
எடுத்தால் விலைவாசிகளைக் குறைக்க முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, திவிரமான நடவடிக்கை எடுப்பதைப்
பற்றி ஆட்சேபணை இல்லை என்று சொன்னேன். அதிலே வரு
கிற சங்கடங்களையும் நான் சொன்னேன். நாளைக்கே கூட
சட்டம் கொண்டு வந்து விடலாம். இந்தப் பிரச்சினை சுப்ரீம்
கோர்ட்டிற்கே போய் சுப்ரீம் கோர்ட் இப்படி விலைவாசிகளைக்
கட்டுப்படுத்துவது சட்ட விரோதமாகாது என்று ஒரு தீர்ப்பு
அளித்து இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இப்போது
ஆந்திராவிலே சொல்லி இருக்கிறார்கள். நாமும் கொண்டு வந்து
விடலாம். கொண்டு வந்ததற்குப் பிறகு இதற்கென்று மேற்
பார்வையாளர்களைப் போட வேண்டும். அதற்கு பிறகு போண்
டாவின் எடை என்ன? இட்லியின் எடை என்ன? என்று நிறுக்கிற
போது 85 கிராம் என்று சொல்வார்கள் ; அதற்கு பிறகு ஏதாவது
நடக்கும் ; 90 கிராமிற்கு உயரும் அந்த இட்லி. இப்படிப்பட்ட
சூழ்நிலை ஏற்படாத அளவிற்கு தடுக்க வேண்டுமென்றால், நல்ல
தொரு சூழ்நிலை வரவேண்டும்.

1960-ல் 100 புள்ளிகள் என்றால் விலைவாசி மற்றவைகள்
இப்போது 582 புள்ளிகளாக ஏறி இருக்கின்றன. 5¾ மடங்கு
ஏறி இருக்கின்ற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்
கின்றன. ஆகவே இன்னென்ன வகையிலே கட்டுப்படுத்த முடி
யம் என்று சூழ்நிலை இருக்குமானால், எடுத்துச் சொல்வார்க



ளானால் அதைக் கட்டுப்படுத்த ஆயத்தமாக இருக்கிறோம்.
யாரையும் வளர விடவேண்டுமென்று எங்களுக்கு தனிப்பட்ட
ஆசை கிடையாது. அவர்கள் சம்பாதிப்பவர்கள் அதிகம் சம்
பாதிக்கிறார்கள் என்று குறை சொன்னால் அதற்கு எடுத்துக்
காட்டாக சிலபேர் அதை நடத்திக் காட்டுவார்களானால் அதை
வைத்து மற்றவர்களை நாம் கட்டுப்படுத்த முடியும். அதையும்
அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

நியாய விலைக் கடைகளில் வேலை பார்ப்பவர்களுடைய
சம்பளத்தை அதிகமாக்க வேண்டுமென்று இஸ்மாயில் அவர்கள்
கூட குறிப்பிட்டார்கள். இதை ஒரு பகுதி நேர வேலையாக
வைத்திருக்கிறோம். இதற்குகூட ஆண்டு ஒன்றுக்கு நான்கு
கோடி சில்லரை ரூபாய் கூடுதலாக நமக்கு செலவாகிறது. இதிலே
பாதியையாவது மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுபல
தடவைகள் எடுத்துச் சொல்லியும் மத்திய அரசு அதற்கு இணங்க
வில்லை. அவர்கள் செலவு முழுவதையும் நாம்தான் ஏற்றுக்
கொண்டிருக்கிறோம். கிட்டதட்ட 4 கோடி சில்லரை ரூபாய்
அந்த வகையில் போகிறது. இப்போது இன்றைக்கு மானியக்
கோரிக்கையில் 98 கோடி சில்லரை ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று
நான் கேட்கிறேன் என்றால் இதன்மூலம் சலுகைகள், வசதிகள்
மற்றவைகள் செய்வதற்கும் உணவுத்துறையில் நாம் பணி ஆற்று
கிறோம் என்று பொருள். அவர்களுடைய சம்பளத்தை கொஞ்
சம் அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் அடிக்
கடி வைக்கிறார்கள். இப்போது கொடுக்கிற பண்டங்கள் அதிக
மான இலாபத்தோடு விற்கிற பண்டங்கள் இல்லை. விலை
குறைத்துக் கொடுக்கிற அளவிற்கு அவை இருக்கின்றன. அரிசி,
கோதுமை, சர்க்கரை இப்படி எதுவாக இருந்தாலும் விலை
குறைந்தே இருப்பதால் இலாபத்தை இந்தக் கடைகள் சம்
பாதிக்க முடியவில்லை. இந்த நேரத்தில் நாம் ஒன்றை யோசித்
துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கடைகளில் வேறு பல பொருள்
களையும் வைத்து இலாபம் சம்பாதிக்கிற வகையிலே, சோப்பு
போன்ற மக்களுக்கு இன்றியமையாதப் பொருள்களை அங்கே
விற்கச் செய்து, அதில் வருகிற இலாபத்தை இதிலே ஈடுசெய்ய
முடியுமா என்று பார்த்து, அதன் மூலம் பணியாளர்களுக்கு கொஞ்
சம் சம்பளத்தைக் கூட்டலாமா என்று அரசு எண்ணிக் கொண்
டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லா நாட்களிலும் ரேஷன் கொடுக்க வேண்டுமென்று
யசோதா அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையில் மட்டும்
என்று சொன்னதற்குக் காரணம், நினைத்த நேரத்தில் வருவதன்
காரணமாக கடைகளில் பெரிய கியூ இருந்தது. இப்போது ஓரள
விற்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது. வாரத்திற்கு ஒரு நாள் என்று
இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு நாளில் வாங்கா

விட்டால் அவர்கள் கடைசி நாளில், ஆறாவது நாளில் வாங்கிக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறது. அதன் காரணமாக இப்போது ஓரளவிற்கு அதிக தொல்லைகள் இல்லை. அங்கே இருக்கிற ஒன்று அல்லது இரண்டு பேரை வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான மக்கள் கியூவிலே நிற்கிறபோது, 2 மணி, 3 மணி நிற்க வேண்டிய நிலைமை இருப்பதால்தான் ஸ்டாகரிங் என்ற முறையை சென்னையில் கொண்டு வரப்பட்டு அது பெருமளவில் வரவேற்கப்பட்டிருக்கிறது. பிற இடங்களுக்கும் இத்தகைய வினியோக முறையை ஒழுங்குபடுத்திக் கொண்டுவரவேண்டும் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு சங்கடங்கள் உண்டாக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் சேதுராமன் பேசுகிறபோது மில்களை நவீனமயமாக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு யோசனைகளைத் தெரிவித்தார்கள். நவீனமயமாக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி அதற்காக மத்திய அரசும் மாநில அரசும் வங்கிகள் மூலமாகவும் கடன் உதவிகளை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதிலே அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவிகளை ஏற்பாடு செய்து தரலாம் என்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே வியாபாரிகளுக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்ற வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் தான் நம்முடைய நோக்கம் நிறைவேறும். அப்போதுதான் சங்கடமில்லாமல் பொது வினியோக முறை சிறப்புற நடைபெற முடியும். நாம் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களை தண்டிக்க வேண்டுமென்பதற்கோ, அவர்களுக்கு பிரச்சனைகளை உண்டாக்குவதற்கோ நாம் அவைகளைக் கொண்டு வரவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே. குறிப்பிட்ட தேதியில் நுகர்பொருள் வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். ஒழுங்குபடுத்துவதற்காகக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். ஆனால் நான் தெரிவிக்க விரும்புவது, குறிப்பிட்ட தேதியில் ரேஷன் கடைகளுக்குச் சென்றால், பொருள்கள் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைக்காத காரணத்தால், அடுத்த வாரம் வரச்சொல்கிறார்கள். அடுத்த வாரம் செல்வதற்கு பணம் இல்லாத காரணத்தால் பலருக்கு வாங்க முடிவதில்லை. ஆகவே குறிப்பிட்ட தேதியில் அந்தப் பொருள்கள் கிடைப்பதற்கு நிச்சயமாக வழிவகை செய்யப்படவேண்டும். எனக்குக்கூட ரேஷன் கார்டுக்கு இந்த வாரம்தான் கிடைத்தது. இதுவரையில் கிடைக்கவில்லை.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, திருமதி யசோதா சொல்கிற கருத்து சரியானதுதான். குறிப்பிட்ட அந்த நாளில் எல்லாப் பொருட்களும் கிடைக்க வேண்டும். அல்லது தேவையான நேரத்தில் அவர்கள் வாங்கிக் கொள்ள வழிவகை செய்யவேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு, இந்தக் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசால் இயலுமா என்பதைப் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

சோயாபீன்ஸ் எண்ணையைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பாமாயிலை மலேசியாவில் இருந்து வரவழைத்துக் கொண்டிருந்தோம். அங்கே இருந்து வரத்து இப்போது நின்றுவிட்டது. மத்திய அரசு நமக்கு எழுதியிருக்கிறார்கள்: உலகத்தில் பல நாடுகளில் சோயாபீன்ஸ் எண்ணெயை பயன்படுத்துகிறார்கள். நம்முடைய நாட்டிலும் அதைப் பயன்படுத்துவதற்கு பழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். அதற்கு மாநில அரசுகள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

சோயாபீன்ஸ் எண்ணெயை அதிகமான அளவிற்கு சூடுபடுத்தினால் அந்த சூடு ஏற, ஏற, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னதைப் போல, நாற்றம் வரும் நிலை இருக்கிறது. இதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதை விஞ்ஞானிகள்தான் கண்டறிந்து சொல்ல வேண்டும். பாமாயில் இறக்குமதி மலேசியாவில் இருந்து அறவே நின்றுவிட்டது. ஆகவே மத்திய அரசு என்ன சொல்கிறது என்றால், ஒரு நாட்டையே நம்பி நாம் இருந்தால், அவர்களிடமே நாம் அதிகமாக வாங்கிவந்தால், விலையை ஏற்றிக்கொண்டே போகிறார்கள். ஆகவே, உலகத்தின் பல நாடுகளிலிருந்து நாம் வாங்கி வந்தால் அதிகப்படியான அளவிற்கு விலையேற்றம் இருக்காது. மேலும் போதுமான அளவுக்கு பாமாயில் இல்லையென்றும் சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துக்களை மத்திய அரசுக்கு நாம் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ரூ. 19, 20, 30, என்று விலை கொடுத்து வாங்குவதால் சாதாரண மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளாகவேண்டியிருக்கிறது. இந்த ஆயில் ரூ. 10 அளவிற்கு கிடைப்பதால் ஓரளவிற்கு சமாளித்துக் கொண்டு வருகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இதைத் தூய்மைப் படுத்தி நாற்றமே வராமல் செய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பதற்கு ஆராய்ச்சிகள் செய்யச் சொல்லியிருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 ஏப்ரல் 11

வேறுபல கருத்துக்களையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நுகர்வோருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதை முதன்முதலாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. பல நாடுகளில் இந்த இயக்கம் வலுவாகக் காலூன்றி சிறப்பாகப் பணியாற்றுகிறது. சாதாரணமாக நுகர்வோருக்குப் பாதுகாப்பு அளிக்க சட்டத்திலே வழிவகை இல்லை. ஆகவே, உற்பத்தியாளர், வணிகர் ஆகியோருடன் நுகர்வோர்களுக்குள்ள உரிமைகளை நிலைநாட்டும் ஒரு இயக்கமே நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம். நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிக்க இந்த அரசு சிலபல முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(பிற்பகல் 1.20)

அந்த வகையிலேதான் இப்போது 'உணவுத்துறை' என்று செயல்பட்டு வரும் துறை 'உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை' (ஃபுட் அண்ட் கன்ஸ்யூமர் புரொடக்ஷன் டிபார்ட்மெண்ட்) என்று மாற்றப்பட்டு நுகர்வோருக்குப் பாதுகாப்பு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. என்னவென்று கேட்டால் இப்போது சாதாரணமாக ஒருவர் பண்டங்கள் வாங்குகிறபோது, பழுதுபட்டிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுக்கவோ அல்லது வழக்கு தொடுக்கவோ இப்போது சட்டத்தில் இடமில்லை. ஒருவர் ஒரு ரேடியோ வாங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். வீட்டுக்குப் போன பின்னால் அது சரியாகச் செயல்படவில்லை என்று தெரிந்தால், அதை திருப்பிக் கொண்டு போனால் ''நீங்கள்தான் கெடுத்து விட்டீர்கள், எங்கள் தப்பு இல்லை'' என்று சொல்லிவிடுகிறார்கள். சிலபல பண்டங்கள் வாங்கப்பட்டப் பின்னால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்றால் அது சம்பந்தமாக நாம் வழக்குத் தொடரவோ, வேறு நடவடிக்கை எடுக்கவோ இப்போது இருக்கிற சட்டத்தில் வழிவகை இல்லை. ஆனால் இன்றைக்கு பல நாடுகளில் நுகர்வோரை பாதுகாக்க சட்டங்கள் இருக்கின்றன. அதைப்போன்று நம்முடைய மாநிலத்திலும் செய்வதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்து வருகிறது. அந்த அடிப்படையில் நுகர்வோர் நலன் காக்க தலைமைச் செயலக அளவில் உணவுத்துறை செயல்படும். இத்துறையின் பெயரும் ''உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை'' என மாற்றப்படும். துறைத்தலைவர் அளவில் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் ''உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர்'' என அழைக்கப்படுவார். மாவட்ட அளவில் மாவட்ட வழங்கு அலுவலர் நுகர்வோர் பாதுகாப்புக்கு பொறுப்பேற்பார். மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றில் மாதர் சங்கங்கள் குழு அளவில் ஈடுபட ஊக்குவிக்கப்படும்.



1984 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த இயக்கத்திற்கு சட்டபூர்வ ஆதரவு தர இந்த அரசு உத்தேசித்துள்ளது. இது சயபந்தமாக விரைவிலே ஒரு சட்டத்தை அரசு கொண்டுவர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு சட்டம் வரும்போது வாங்குவோர் நலன்கள் சட்டத்தின் மூலமாகப் பெரிதும் பாதுகாக்கப்படும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகும்போது உற்பத்தியாளர்கள் அலட்சியமாக அல்லது ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு செயல்பட மாட்டார்கள்; எத்திப் பிழைக்க வேண்டுமென்ற எண்ணத்தை விட்டுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக நாம் 132 ரூபாய் கொடுத்து கொள்முதல் செய்கிற நெல்லாக இருந்தாலும் நமக்கு அடங்குகிற விலை 2 ரூபாய் 71 காசு ஆகிறது என்றாலும் நாம் ஒரு ரூபாய் 75 காசுக்குப் போடுகிறோம். 35 ரூபாய் கூடுதல் கொடுத்து கொள்முதல் செய்தால் ஒரு கிலோ 3 ரூபாய் 29 காசு வருகிறது. அப்படி இருந்தாலும் நாம் 1 ரூபாய் 75 காசுக்குத் தான் போடுகிறோம். மத்திய அரசு கையிருப்பில் இருந்து கொடுத்தாலும் 2 ரூபாய் 8 காசு வருகிறது. இருந்தாலும் நாம் 1 ரூபாய் 75 காசுக்குத்தான் கொடுக்கிறோம். அதற்காக நாம் பல கோடி ரூபாயை மானியமாகக் கொடுத்து, மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

இதையெல்லாம் எத்தற்காக நான் சொல்கிறேன் என்றால் சில பல குறைபாடுகள் இருந்தாலும், சில பல குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்றாலும் அவற்றை சீர்படுத்தி, செம்மைப்படுத்திக் கொண்டுவர அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதற்காகத்தான். ஆனால் பொதுவாக பார்க்கும்போது கூடுதலாக நாம் என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறோம் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டை மட்டும் எடுத்துச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மென்ட் என்று பெங்களூரில் ஒரு ஆராய்ச்சி நிலையம். இருக்கிறது. அந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பி. பாஸ்கரன் என்பவர் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த ஆராய்ச்சி எதைப்பற்றி என்றால் தமிழ்நாட்டில் பொது விநியோகம் எப்படி நடக்கிறது என்பதைப்பற்றியது. அதுபற்றி ஆராய்ச்சி நடத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதுதான் இந்த அறிக்கை. இதில் T e public distribution sys.em in Tamil N du எப்படி நடக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஆராய்ச்சிக்கு ஒரு மாநகராம் என்ற அடிப்படையில் சென்னை மாநகரையும், ஒரு நகரம் என்ற அடிப்படையில் சேலம் நகரையும், ஒரு ஒன்றியம் என்ற அடிப்படையில் கொங்கணாபுரம் ஒன்றியத்தையும் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவர் கொடுத்திருக்கிற அறிக்கையைப் பார்க்கும்போது நாம் செய்கின்ற முயற்சிகளுக்கு அதுவே ஒரு சான்றாக இருக்கிறது. அவர் நம்முடைய ஆணைக்கு உட்பட்டவர் அல்ல. இருந்தபோதிலும் நடுநிலையோடு இருக்கின்ற நன்மைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, தன்னுடைய கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் சொல்லியிருக்கிறார்,

Looking at the system in terms o' its operation and Management, it can be said that Tamil Nadu is probably one of the States where the Public D str bution System is well organised and is made accessible to all persons and at the same time is discharged from the clutches of the private trade'

''செயல்முறை – நிருவாகம் ஆகியவற்றின் அடிப்படையில் கூர்ந்து நோக்கும்போது பொது விநியோக முறை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலங்களில் தமிழகம் சிறந்த ஒன்று என்று குறிப்பிடப்பட வேண்டும். எல்லா மக்களும் எளிதாக அணுகக்கூடிய வகையில் பொது விநியோக முறை அமைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தனியார் வாணிகத்தின் இடுக்கி பிடிகளிலிருந்து மக்களைத் தப்பிக்க வைத்துள்ளது''. என்று சொல்லியது மட்டுமல்லாமல் மற்றும் அவர் தன்னுடைய அறிக்கையிலே சொல்லுகின்றபோது.

the major problem faced by the State in the distribution of commoditie is due to shortage in the supply of these commodities by the Centre.

''பண்டங்களை பொது விநியோகம் செய்யும் முறையில் மாநிலம் எதிர்நோக்க வேண்டியிருக்கிற மிகப் பெரிய பிரச்சினைகளாக இருப்பது மத்திய அரசு பண்டங்களை வழங்குவதில் மிகப் பற்றாக்குறைகள் அமைந்திருப்பதே ஆகும்''. ஆகவே ஒவ்வொன்றிலும் ஓரளவிற்கு முயன்றளவு, இயன்றளவு மத்திய அரசு தருகிற அந்தப் பற்றாக்குறை அடிப்படையில் விநியோகம் இருப்பதன் காரணமாகத்தான் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அவர் சுட்டிக் காட்டியிருப்பதோடு மேலும் அவர் சுட்டிக்காட்டுகின்ற போது சிறப்பாக சொல்லியிருக்கிறார்.





" the data at the agg egate level suggested that out of the majority of the ration card holders, nearly 75 % had not to spend more than an hour w iting for their rations. This means that the present arrangements are fairly satisfactory*

''ஒட்டு மொத்தமாக வைத்துப் பார்க்கும்போது புள்ளி விவரம் என்ன உணர்த்துகிறது என்றால், குடும்ப பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்பவர்களில் பெரும்பாலோர் அதாவது 75 சதவீதம் மேல் உள்ளவர்கள் ஒரு மணி நேரத்திற்குள் பண்டங்களை பெற்றுக் கொள்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படவில்லை. இதன் பொருள் என்னவென்றால் இப்போதுள்ள ஏற்பாடுகள் திருப்திகரமாக அமைந்திருக்கின்றன என்பதாகும்.'' ஆனால், சில பல இடங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்தது போன்று இதிலே சங்கடங்கள் நேரத்தாழ்வுகள், காலத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இப்படியே, ஆராய்ந்து சொல்கின்றபோது கூட அவர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்

"When asked to comment on the quality of the services rendered by the ration shops on a five point scale ranging from "execellent" to "hopeless", 60% of the sample rated these services as 'good' 27% s fair and 4% as excellent. Thus, only the remaining 9% rated the services as 'poor'.

என்று சொல்லுகின்றபோது பெரும்பான்மையான கடைகளில் மிகச் சிறப்பான முறையில் தான் பணிகள் ஆற்றப்படுகின்றன என்று அவர்கள் ஆராய்ச்சி மூலமாக எடுத்துச் சொல்லியிருப்பதிலிருந்து ஓரளவிற்கு இந்த முறையை சீர்படுத்தி செம்மைப்படுத்தி வருவதிலே நாம் வெற்றி கண்டிருக்கிறோம். இதிலே இருக்கிற குறைபாடுகளையும், மற்றவைகளையும் தொடர்ந்து தீர்க்க வேண்டும் என்பதிலே நாம் ஆர்வம் கொண்டிருக்கிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்ற சீரிய யோசனைகளும், பரிந்துரைகளும் இந்த அரசிற்கு மிகவும் பயன்படும் என்று எடுத்துச் சொல்லி இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதிலே அரசு முனைந்து பாடுபடும் என்று எடுத்துக் கூறி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டும் வெட்டுத் தீர்மானங்களையும் வற்புறுத்தாமல் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு விளக்கங்களை நான் உங்கள் மூலமாக உணவு அமைச்சரிடமிருந்து பெற விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னதாக ஒரு இலட்சம் டன் அரிசியை

(முற்பகல் 1-30)

வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்போகிறோம் என்று உணவு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கோரிக்கையை மத்திய அரசிற்கு அனுப்பிவிட்டீர்களா ? மத்திய அரசிடமிருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஓரளவிற்குக் கொடுத்துக் கொண்டு வருகிற தன்மையும், நமக்கு இருக்கிற கொள்முதல் தன்மையும் குறைந்தது இந்த ஆண்டு நவம்பர் திங்கள் வரையிலும் நாம் இழுத்துக் கொண்டு போக வேண்டிய நிலை இருப்பதன் காரணத்தாலே இப்போது விலை குறைவாக இருக்கும்போது, அறுவடையாகும் போது வாங்கி விட்டால் தான் ஓரளவிற்கு நாம் சமாளிக்க முடியும் என்பதற்காக நாம், பிற மாநிலங்களில் கொள்முதல் செய்வதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். மத்திய இருப்பில் இருந்தும் தர வேண்டும். எங்களால் முடிந்த அளவிற்கு நாங்கள் கொள்முதல் செய்வோம், தஞ்சை மாவட்டத்தில், அதை ஒட்டியுள்ள தாலுக்காக்களில் முழு கொள்முதலை நாம் ஏகபோக கொள்முதலை நாமே மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் வைத்திருந்தோம். கிட்டத் தட்ட, 5, 6 மாதங்கள் வரை கொள்முதல் வைத்திருந்தோம். இப்போது பழைய முறைப்படி, மறுபடியும் 50 : 50 சதவீதம் லெவி 50 பர்சன்ட் அரசாங்கத்திற்குக் கொடுப்பது என்ற அளவிற்கு, 1—4—1984-ல் இருந்து, அது அமுலுக்கு வந்து விட்டது. மத்திய அரசில் நாம் கேட்டு இருப்பதன் காரணமாக பின்னால், 374, 375, 395 ரூபாய்க்கு ஒரு குவிண்டாலுக்கு போய்விடுகிற நிலைமை ஏற்படுகிறது. இப்போது, அதற்கு மத்திய அரசு அனுமதி தந்து விடுமானால், 290, 295, 310 ரூபாய்க்கு வாங்கலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். மத்திய அரசிடம் இருந்து பதில் வரவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தொழிலாளர்கள் சில நியாயமான கோரிக்கைகளை அரசுக்கு வைத்திருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டிலேயிருந்து . அதிலே பணியாற்றுபவர்கள் இன்னும் நிரந்தரம் ஆக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏற்கனவே அனுபவம் மிக்கவர்கள் இருக்கும் போது, நேரடியாக ஆட்களை நியமனம் செய்து விடுகிறார்கள். எனவே அந்த முறையில் அவர்களுக்கு தற்போது இருக்கின்ற ஊதியம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அதை உயர்த்திக்



கொடுக்க வேண்டும் என்றுசொல்லி, நியாயமான கோரிக்கையை அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அதை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறதா, பரிசீலனை செய்கிறதா ? என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளிலே பணியாற்றுகிறவர்கள் அத்தனை பேரும் பகுதி நேர ஊழியர்களாகத் தான் வைத்திருக்கிறோம். அவர்களை நிரந்தரமாக்க முடியாது தற்காலிகமாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களைத் நிரந்தரம் ஆக்க வேண்டும் என்றால் அந்தக் கடைகள் எல்லாம் இலாபகரமானதாக ஆக்க வேண்டும். அவைகளை இலாபகரமாக ஆக்க வேண்டும் என்றால்,—ந...டத்திலோ அல்லது சப்சிடி ரேட்டிலோ கொடுக்கிற பண்டகளை மட்டும் வைத்துக் கொண்டு, அந்தக் கடை அதிக லாபம் சம்பாதிக்கும் என்று சொல்ல முடியாது, நஷ்டத்தைத் தான் ஈடுகட்ட முடியுமே தவிர, லாபத்தைப் பெற முடியாது. லாபம் பெறுவதற்கு மேற் கொண்டு ஒரு 30, 40 சரக்குகளை விற்போமானால், மேற்கொண்டு லாபம் பெறுவதற்கு, ஓரளவு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் 2 ஆயிரம் ரூபாய் வருகிற .சூழ்நிலை ஏற்பட்டால், இவர்களை நிரந்தரம் ஆக்க முடியும். இவர்களுடைய சம்பளத்தையும் அதிகமாக்க முடியும். அதைத் தான் துறையினர் பரிசீலிக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதை பரிசீலித்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன்,திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. டி. மணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,04,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12-4-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

116. கோரிக்கை எண். 35— தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு— 1984–85. (தமிழ், ஆங்கிலம்).

117. 15–2–1984 அன்று பேரவையில் வினா எண். 40 விடையளிக்கப் பெறும்போது திரு. த. வேணுகோபால், எம். எல். ஏ., அவர்களின் துணை வினாவிற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விடையையொட்டி வைக்கப்பெற்ற விவர அறிக்கை வருமாறு.

### விவர அறிக்கை

உடுக்குறியிட்ட வினா எண். 40 (18037) 15–2–1984-ல் அவையில் பதிலளிக்கப்பெற்றபோது எழுந்த துணை வினாவினை யொட்டி அவைக்கு அளிக்கப்பெற்ற விவரம்.

தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், பெரியார், திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, செங்கல்பட்டு, இராமநாதபுரம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் முசுக்கொட்டை செடி வளர்ப்புத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, கல்ராயன் மலை, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலையில் முசுக்கொட்டைச் செடி வளர்ப்புத் திட்டம் அமல்செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முசுக்கொட்டைச் செடி வளர்ப்புத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

1984 ஜனவரி முடிய தமிழ் நாட்டில் இத் திட்டங்களின் மூலமாக 61,242 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டு உள்ளது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

மாவட்ட வாரியாக பட்டு வளர்ப்புத் திட்டங்கள் மூலம் ஜனவரி 1984 முடிய முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்டுள்ள பரப்பு.

| வரிசை எண். | மாவட்டம். | 31-1-1984 முடிய உள்ள பரப்பளவு (ஏக்கரில்.) | | |
|---|---|---|---|---|
| | | மானாவாரி நிலத்தில் நடப்பட்டு உள்ளது. | நீர்ப் பாசனம் வசதியுள்ள நிலத்தில் நடப்பட்டு உள்ளது. | மொத்த பரப்பளவு. |
| 1 | தர்மபுரி .. .. | 1,429 | 14,560 | 15,989 |
| 2 | சேலம் .. .. | .. | 6,304 | 6,304 |
| 3 | புதுக்கோட்டை .. | .. | 980 | 980 |
| 4 | திருச்சிராப்பள்ளி .. | .. | 2,156 | 2,156 |
| 5 | கோயம்புத்தூர் .. | .. | 7,580 | 7,580 |
| 6 | பெரியார் .. | 7,073 | 1,781 | 8,854 |
| 7 | மதுரை .. .. | .. | 4,463 | 4,463 |
| 8 | இராமநாதபுரம் .. | .. | 1,276 | 1,276 |
| 9 | திருநெல்வேலி .. | .. | 3,176 | 3,176 |
| 10 | கன்னியாகுமரி .. | .. | 380 | 380 |
| 11 | வட ஆற்காடு .. | .. | 5,717 | 5,717 |
| 12 | செங்கற்பட்டு .. | .. | 1,230 | 1,230 |
| 13 | தஞ்சாவூர் .. | .. | 1,762 | 1,762 |
| 14 | தென் ஆற்காடு .. | .. | 1,257 | 1,257 |
| 15 | நீலகிரி .. .. | .. | 118 | 118 |
| | மொத்தம் .. | 8,502 | 52,740 | 61,242 |



மாநில திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகள் விவரம்.

மற்றும்
1. தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார் பட்டுத்
வட ஆற்காடு மாவட்டங்களில் தொன்றுதொட்டு மதிப்புள்ள
தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ரூ. 100.00 விவ
மல்பரி விதைக் குச்சிகளும் மற்றைய மாவட்டங்களிலுள்ள குச்சிகளும்
சாயிகளுக்கு ரூ. 250.00 மதிப்புள்ள மல்பரி விதைக் புதிதாக
இலவசமாக வழங்கப்படுகிறது. இதர மாவட்டங்களில் ஊக்குவிக்கப்படு
முசுக்கொட்டை சாகுபடி செய்ய விவசாயிகள்
கின்றனர்.

2. புதியதாக பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபடும் விவசாயி
களுக்கு மாதம் ரூ. 150.00 வீதம் உதவித் தொகை அளித்து 3
மாதங்களுக்கு பட்டு வளர்ப்பு தொழிலில் பயிற்சி அளிக்கப்படு
கிறது.

3. பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி பெற்ற விவசாயிகட்கு
ரூ. 150.00 மதிப்புள்ள தளவாட சாமான்கள் இலவசமாக
அளிக்கப்படுகிறது.

4. பட்டு வளர்ப்பு தளவாட சாமான்கள் வாங்க விவசாயி
களுக்கு ரூ. 2,000-ல் 25 விழுக்காடு தொகையான ரூபாய் 500.00
மான்யமாக வழங்கப்படுகிறது. இத் தொகை வங்கியில் கடன்
பெறும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஈடு செய்யப்படுகிறது.

5. பட்டு வளர்ப்பு கூடம் கட்ட விவசாயிகட்கு ரூ. 3,000-ல்
25 விழுக்காடு தொகையான ரூ. 750.00 மான்யமாக வழங்கப்
படுகிறது. இத் தொகை வங்கியில் கடன் பெறும் விவசாயிகளின்
வங்கிக் கணக்கில் ஈடு செய்யப்படுகிறது.

## இணைப்பு II.

(68 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழகத்தில் உணவு நிலைமை

**I. அரிசி நிலைமை**

பொய்த்ததின்
கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை சங்கடமான
காரணமாக தமிழகத்தின் உணவு முனையில் ஒரு பருவ மழை
நிலை உருவானதை இம்மாமன்றம் நன்கு அறியும். சம்பா
தவறியதின் காரணமாக குறுவை 1982 பட்டத்திலும், பாதிக்கப்பட்டது.
1983 பட்டத்திலும் நெல் உற்பத்தி கணிசமாக

அதைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டில் தென் மேற்கு பருவ காற்று மழை பொய்த்ததின் காரணமாக பெரும்பாலான நீர்த் தேக்கங்களுக்கு போதிய அளவு நீர் வரத்து இல்லாத காரணத்தி னால் குறுவை சாகுபடிக்கு உரிய காலத்தில் பாசனத்திற்காக நீர் விடப்படவில்லை. பல நீர்த் தேக்கங்களில் போதிய அளவுக்கு தேக்கமும் இல்லை.

2. சாதாரணமாக தமிழகத்தில் 26.500 இலட்சம் ஹெக் டேர்களில் நெல் பயிரிடப்படும். குறுவை. கார்ப்பட்டங்களில் சுமார் 3.330 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். ஆனால் நடப்பு பயிராண்டில் 1.350 இலட்சம் ஹெக்டேர்களில் தான் குறுவை, கார் சாகுபடி செய்யப்பட்டது. சம்பா பட்டத் தில் சாதாரணமாக 15.740 லட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப்படும். ஆனால் இந்த ஆண்டு 16.695 லட்சம் ஹெக் டேர்களில் நெல் பயிர் செய்யப்பட்டது தாளடி, பிசானம் பட்டத்தில் 3.020 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் பயிரிடப் படும். ஆனால் இந்த ஆண்டு 1.791 இலட்சம் ஹெக்டேர்களில் தான் பயிரிடப்பட்டது. நவரைப் பட்டத்தில் 3.600 இலட்சம் ஹெக்டேர்களிலும், சொர்னவாரி பட்டத்தில் 0.810 இலட்சம் ஹெக்டேர்களிலும் நெல் பயிரிடப்படும். இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் 3.052 இலட்சம் ஹெக்டேர்களிலும், சொர்னவாரி பட்டத்தில் 0.810 இலட்சம் ஹெக்டேர்களிலும் நெல் பயிரிடப் படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே நடப்பு ஆண் டில் மொத்தத்தில் 26.500 இலட்சம் ஹெக்டேர்களுக்கு பதிலாக 24.298 இலட்சம் ஹெக்டேர்களில்தான் நெல் பயிரிடப்படும். குறைவுபடும் விஸ்திரணம் 2·202 இலட்சம் ஹெக்டேர்கள்.

3. அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை 1983-84 ஆம் ஆண்டில் மொத்த அரிசி உற்பத்தி 53·93 இலட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் டிசம்பர் 1983 மாதத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பி னாலும், பிப்ரவரி 1984 ல் காலந் தவறி பெய்த மழையின் பாதிப்பின் காரணமாகவும் உற்பத்தியில் ஏறக்குறைய 4 இலட் சம் டன்கள் அளவிற்கு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இந்த ஆண்டு நிகர அரிசி உற்பத்தி சுமார் 50 இலட்சம் டன்களாக இருக்கும்.

4. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 4·25 இலட்சம் ஏக்கர்களில் குறுவை பயிரிடப்படும். சாதாரணமாக மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜூன் மாதம் 12-ம் தேதி திறக்கப் படும். ஆனால் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந் தேதி தான் திறக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் நிலத்தடி நீரைமட்டும்



பயன்படுத்தி ஏறக்குறைய 1·25 இலட்சம் ஏக்கர்களில்தான் குறுவை நெல் பயிரிடப்பட்டது. இதன் காரணமாக கணிச மான அளவு குறுவை நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

5. பெரும்பாலான நீர்த் தேக்கங்களுக்கு போதிய அளவு நீர்வரத்து இல்லாததின் காரணமாக நீண்டகால நெல் பயிருக்கு பதிலாக நடுத்தர கால நெல்லை பயிர் செய்து மாநிலத்தில் அரிசி உற்பத்தி பாதிக்காவண்ணம் தக்க முனைப்பான நடவடிக்கை களை விவசாயத் துறை மேற்கொண்டது. மாநிலம் முழுவதி லும் விவசாயிகளுக்கு நடுத்தர கால நெல்லை பயிரிடுமாறு ஆலோசனை கூறப்பட்டது. அதற்குத் தேவையான விதை களை விநியோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் சாதாரணமாக 7 இலட்சம் ஏக்கர் களில்தான் சம்பா நெல் பயிரிடப்படும். ஆனால் கடந்த ஆண்டு குறுவைப் பட்டத்தில் ஏறக்குறைய 3 இலட்சம் ஏக்கர்களில் குறுவை பயிரிடப்படவில்லை. ஆனால் சம்பா பட்டத்தில் அதை நிறைவு செய்யும் வகையில் 10 இலட்சம் ஏக்கர்களில் நீண்டகால நெல்லுக்குப் பதிலாக நடுத்தரகால நெல் பயிரிடப்பட்டது. டிசம்பர் மாதம் பெய்த மழையினால் தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிருக்குக் கணிசமான சேதம் ஏற்பட்டது. அது போன்று தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இல பகுதிகளில் வெள்ளத்தால் நெற்பயிர் பாதிக்கப்பட்டது.

6. தஞ்சை மாவட்டத்தில் அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தை அறிவித்த நேரத்தில் அத்திட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் விவசாயிகள் பலர் வழக்கு தொடர்ந்து அந்த ஆணைக்கு இடைக்கால தடை பெற்று நெல்லை தஞ்சை மாவட்டத்திலிருந்து பல்வேறு மாவட்டங் களுக்கு எடுத்துச் சென்ற காரணத்தினால் கொள்முதல் பெரிதும் பாதிக்கப்பட்டது. பிறகு சென்னை உயர்நீதிமன்றம் அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தையும் ஏகபோக கொள்முதல் திட்டப் பகுதிகளை விட்டு நெல்லை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையும் சரியானதென்று தீர்ப்பு அளித்தது. அந்த தீர்ப்பை எதிர்த்து நாட்டில் உச்ச நீதி மன்றத்திலும் மாநில அரசுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. உச்சநீதி மன்றமும் தமிழக அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு அளித்துள்ளது.

7. பருவ மழை தவறியதினால் தமிழகத்தில் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையிலும், வெளிசந்தையில் அரிசியின் விலையை நிதானமாகவும் கட்டுப்பாட்டிற்குள்ளும் வைத்துக் கொள்வதற்கு போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை களை மேற்கொண்டது. இதர மாநிலங்களில் வெளிச் சந்தை யில் அரிசியை வாங்கும் பணியை தமிழ்நாடு நுகர்பொருள்

வாணிபக் கழகம் மேற்கொண்டது. பஞ்சாப், ஹரியானா உத்திரப்பிரதேசம், ஆந்திரா போன்ற பிற மாநிலங்களில் 1.52 இலட்சம் டன்கள் அரிசியை கொள்முதல் செய்து குடும்ப அட்டைகளுக்கு வழங்கியது. மாநில முழுவதும் 18,000 க்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு குறைந்த விலையில் அரிசி வழங்கியதன் மூலம் வெளிச்சந்தையில் அரிசி விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்ததை இந்த அரசின் சிறந்த சாதனை என்பதை இம்மாமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகின்றேன்.

8. வெளி மாநிலங்களில் வெளிச் சந்தையில், அதிக விலை கொடுத்து வாங்கியும், தமிழகத்திற்குள் ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படும் பகுதிகளில் கொள்முதல் விலைகளுக்கு மேலாக கூடுதலாக விலை கொடுத்து நெல்லை வாங்கியதாலும் அரிசியின் அடக்க விலை உயர்ந்தது. அதனால் ஏறக்குறைய 110 கோடி ரூபாய் அளவிற்கு நட்டத்தை அரசு ஏற்க வேண்டியுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

9. தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததின் காரணமாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் பொது விநியோகத்திற்கு அதிக, அரிசி ஒதுக்கீடு செய்யும்படி நாம் மத்திய அரசை கோரியிருந்தோம். 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து மார்ச் 1983 வரை மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. இது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரையும், மத்திய உணவுத்துறை அமைச்சரையும் நேரில் சந்தித்து நெருக்கடியான நேரத்தில் தமிழகத்திற்கு அரிசி கொடுத்து உதவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மாநில அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கொண்டு அரிசியை ஒதுக்கீடு செய்தது.

மத்திய அரசு ஒதுக்கீடு செய்த அரசியின் அளவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. —

| மாதம்/வருடம். (1) | மாத ஒதுக்கீடு. (2) (டன்களில்). |
| --- | --- |
| ஏப்ரல், மே 1983 .. .. .. | 15,000 |
| ஜூன், ஜூலை ஆகஸ்டு 1983 .. .. | 25,000 |
| செப்டம்பர், அக்டோபர் 1983 .. .. | 30,000 |
| நவம்பர், டிசம்பர் 1983 மற்றும் சனவரி 1984. | 40,000 |
| பிப்ரவரி, மார்ச் 1984 .. .. .. | 35,000 |





1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கொண்டு, மார்ச்
1984 வரை மத்திய அரசு 3·55 இலட்சம் டன்கள் அரிசியை
பொது விநியோகத் தேவைக்கென இம்மாநிலத்திற்கு வழங்கி
யுள்ளது. அதுமட்டுமின்றி ஏற்கெனவே மாதம் ஒன்றுக்கு 4,000
டன்கள் என்ற அளவிற்கு வழங்கப்பட்டு வந்த கோதுமை ஒதுக்
கீட்டை மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் என்ற அளவிற்கு
உயர்த்தி வழங்கியுள்ளது. மத்திய தொகுப்பிலிருந்து அரிசியை
யும், கோதுமையையும் நமது கோரிக்கையின் பேரில் ஒதுக்கீடு
செய்ததற்கு இச்சமயத்தில் மத்திய அரசுக்கு தனது நன்றியை
இந்த அரசு தெரிவித்துக் கொள்கிறது.

## பொது விநியோகத் தேவை.

10. தமிழகத்தில் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக
திட்டத்தின் கீழ் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 1983-ஆம்
ஆண்டு ஜனவரி மாதம் வரை வருமான பாகுபாடின்றி அனைத்து
குடும்ப கார்டுகளுக்கும் அரிசி வழங்கப்பட்டது. ஆனால் தமிழ
கத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக அரிசி உற்பத்தி
குறைந்த நிலையில் அரசின் கைவசம் இருந்த இருப்பு நிலைமை
களை கவனத்தில் கொண்டு, மாத வருமானம் 1,000 ரூபாய்க்கு
குறைவாக உள்ள குடும்பங்களுக்கு மட்டும் அரிசி விநியோகம்
செய்வது என்று அரசு முடிவு செய்து 1-2-1983 முதல் செயல்
படுத்தி வருகின்றது. அதுமட்டுமின்றி, சென்னை, மதுரை,
கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிப்பகுதிகளில் குடும்பகார்டு
களுக்கு வழங்கப்படும் அரிசியில் 60 விழுக்காட்டை அரிசியாக
யும், மீதி 40 விழுக்காட்டை கோதுமையாகவும் வழங்கப்பட்டு
வருகிறது.

11. பொது விநியோக திட்டத்தின்கீழ் தற்போதைய விலை
யில் குடும்ப கார்டுகளுக்கும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்
டத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 80,000 டன்கள்
அளவிற்கு அரிசி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒரு
ஆண்டுக்கு நமக்குத் தேவைப்படும் அரிசி ஏறக்குறைய 10 இலட்
சம் டன்களாகும். அதுமட்டுமின்றி குறைந்தது 2 இலட்சம்
டன்கள் அளவிற்காவது முடையிருப்பு வைத்துக் கொள்ள
வேண்டியது அவசியம். குறுவைப் பட்டத்தில் அதாவது
அக்டோபர் 1983 முதல் டிசம்பர் 1983 வரை 1.16 இலட்
சம் டன்கள், அரிசிக்கு ஈடான நெல்லும் அரிசியும் கொள் முதல்
செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சம்பா, நவரைப் பட்டங்
களில் 9 இலட்சம் டன்கள், அரிசி கொள்முதல் செய்ய இலக்கு
நிர்ணயிக்கப்பட்டு 6-3 1984 வரை ஏறக்குறைய 3 இலட்சம்
டன்களுக்கு ஈடான அரிசியும் நெல்லும் கொள்முதல் செய்யப்
பட்டது. மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல்

[1984 ஏப்ரல் 11

இலக்கை அடைவதற்கு தக்க முயற்சிகளை முனைப்பாக மேற்கொள்ளும்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## II. நெல், அரிசி கொள்முதல்.

12. நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்வதற்கும், கல்வி நிலையங்களுடன் இணைந்து உள்ள மாணவர் உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற நிறுவனங்களில் உள்ளவர்களுக்கு வழங்குவதற்கும், முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் தேவைப்படும் அரிசியை விவசாயிகளிடமிருந்து வர்த்தக லெவி முறையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.

13. கடந்த ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில், பொது விநியோகத்திற்குந் தேவைப்படும் அரிசியையும், எதிர் கால தேவைக்கு ஒரு கணிசமான முடை இருப்பை ஏற்படுத்திக் கொள்ளவும், காவிரி பாசனப் பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோவில், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி, திருச்சி மற்றும் லால்குடி ஆகிய வட்டங்களில் விவசாயிகளிடமிருந்து நெல்லை அரசே ஏகபோகமாக கொள்முதல் செய்வதென முடிவு எடுக்கப்பட்டு அத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இப்பகுதி களில் தனியார் மொத்த வியாபாரிகள் செயல்பட அனுமதிக்கப் படவில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்து அவற்றின் மூலம் விவசாயி களிடமிருந்து நெல்லை வாங்கியது மாநிலத்தின் இதர பகுதி களில் தொடர்ந்து 50 விழுக்காடு வர்த்தக லெவி மூலம் கொள் முதல் செய்யப்பட்டது.

14. 1983 ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில் 2·22 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. இதில் 1·49 இலட்சம் டன்கள் அரிசிக்கு ஈடான நெல் ஏகபோக கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கப் பட்டது.

15. 1983 ஆம் ஆண்டு குறுவை பட்டத்தின் போது அரசு ஏகபோக கொள்முதல் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையம், அரியலூர் வட்டங்களுக்கும், புதுக் கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, ஆவுடையார் கோவில் ஆகிய வட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு குறுவை பட்டத்தில் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு போதிய நீர் வரத்து இல்லாத காரணத்தினால் குறுவை சாகு



1984 ஏப்ரல் 11]

படிக்கு காவிரி கழிமுகப் பகுதிகளுக்கு (Delta) உரிய காலத்தில்
பாசனத்திற்காக நீர் விடப்படவில்லை. இதனால் இப்பகுதிகளில்
குறுவைச் சாகுபடி கணிசமான அளவுக்குப் பாதிக்கப்பட்டது.
தென் மேற்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக மாநிலத்
தில் உள்ள இதர நீர்ப்பாசன தேக்கங்களுக்கும் போதிய அளவு நீர்
வரத்து இல்லாததினால் பொதுவாக குறுவை கார் பயிர் விவ
சாயம் பாதிக்கப்பட்டு நெல் உற்பத்தியும் கணிசமாகக் குறைந்தது.
ஆயினும் அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரண
மாகவும், ஏகபோக கொள்முதல் திட்டப் பகுதிகளில் விவசாயி
களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் கொள்முதல் விலை
களுக்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35 அரசு வழங்கியதன்
காரணமாகவும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1-10-1983
முதல் 31-12-1983 வரை 1.63 இலட்சம் டன்கள் நெல்லை
கொள்முதல் செய்தது ஒரு சாதனையாகும். மாநிலம் முழு
வதிலும் 1983 குறுவை பட்டத்தில் மொத்தத்தில் 1.16 இலட்சம்
டன்கள் அரிசிக்கு ஈடான நெல்லும், அரிசியும் ஏகபோக கொள்
முதல் திட்டம் மற்றும் வர்த்தக லெவியின் மூலம் கொள்முதல்
செய்யப்பட்டது.

16. 1984 ஆம் ஆண்டு சம்பா பட்டத்திலும் அதே கொள்
முதல் கொள்கையை பின்பற்றுவது என அரசு முடிவு செய்து
செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்தி
லிருந்து பாசனத்திற்கு காலந்தாழ்ந்து ஆகஸ்டு மாதத்தில்தான்
நீர் விடப்பட்டதால் நெல் விவசாயமும் காலந்தாழ்ந்து தான்
செய்யப்பட்டது. எனவே ஏற்கெனவே எதிர்பார்த்தது போல,
சம்பா நெல் அறுவடை சனவரி மாதத்திற்குள் முடியவில்லை.
மேலும் டிசம்பர் மாத இறுதியில் எதிர்பாராத முறையில் பெய்த
அதிக மழையின் காரணமாக அறுவடையும் பெருமளவில் பாதிக்
கப்பட்டது. எனவே ஏகபோக கொள்முதல் திட்டத்தை
31-3-1984 வரை அரசு நீட்டித்துள்ளது. இதன் விளைவாக,
50 சதவீத வாணிபர் லெவி முறை 1-4-1984 முதல் இப்பகுதி
களில் அமலில் இருக்கும். 1984 ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில்
மாநிலம் முழுவதிலும் 6-3-1984 முடிய 3.00 இலட்சம்
டன்கள் அளவுக்கு அரிசியும், நெல்லும் கொள்முதல்
செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவ மழை
பொய்த்ததைத் தொடர்ந்து வட கிழக்கு பருவ மழையும் உரிய
காலத்தில் பெய்யாமல் இருந்த ஒரு சூழ்நிலையிலும் ஏறக் குறைய
3 இலட்சம் டன்கள் அரிசி அளவுக்கு இதுவரையில் நெல்லும்
அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதிலிருந்து அரசு
கொள்முதலில் எத்தகைய முனைப்பான நடவடிக்கைகளை மேற்
கொண்டுள்ளது என்பதை இம்மாமன்றம் உணரும் என்று நம்பு
கிறேன்.

[1984 ஏப்ரல் 11

17. அரசு ஏகபோக கொள்முதல் திட்டத்தின் கீழ் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலைகளுக்கு மேலாகக் கூடுதல் விலை கொடுப்பதன் காரணமாக இத் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. ஆனால் விளையும் நெல் அனைத்தையும் அரசே கொள்முதல் செய்வது என்ற ஒரு நிலையை மேற்கொண்டால் வெளிச் சந்தையில் அரிசியின் வரத்து கணிசமாகக் குறையும். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசி அதிக மான அளவில் வழங்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அத் தேவையை பூர்த்தி செய்ய கொள்முதல் அதிக அளவில் செய்ய வேண்டிய கட்டாய நிலைமையும் உருவாகும். எனவேதான் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்தபின் ஏகபோக கொள்முதல் திட்டத்தை காவிரி பாசனம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதி களில் மட்டும் அமல்படுத்தினால் போதுமானது என்று அரசு முடிவு செய்தது.

கொள்முதல் விலைகள்.

18. கடந்த ஆண்டு நெல் கொள்முதல் விலைகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது :—

| ரகம். | | | | விலை. (குவிண்டாலுக்கு.) ரூ. |
|---|---|---|---|---|
| சாதாரண ரகம் | .. | .. | .. | 122.00 |
| சன்ன ரகம் | .. | .. | .. | 126.00 |
| மிகச் சன்ன ரகம் | .. | .. | .. | 130·00 |

அரசு ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்த பகுதிகளில் வறட்சி அலவன்சாக ஒரு குவிண்டாலுக்கு கொள்முதல் விலைகளுக்கு மேலாக ரூ. 15, 7-9-1983 வரை வழங்கப்பட்டது.

19. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்குக் கட்டுப்படியாகும் விலையைத் தர வேண்டுமென்பதை இந்த அரசு வற்புறுத்தி வருகின்றது. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 150 அல்லது குறைந்தது கோதுமைக்குத் தரப்படும் கொள்முதல் விலையா கிலும் தர வேண்டுமென்று விவசாய விளைபொருள்கள் விலை கள் ஆணைக் குழுவிற்கு இந்த அரசு பரிந்துரைத்தது. ஆனால் நெல் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது என்பது பற்றி பல



1984 ஏப்ரல் 11]

மாநிலங்களின் கருத்தையும் கேட்டபின், விவசாய விளைபொருள் கள் விலைகள் ஆணைக்குழு தன்னுடைய பரிந்துரையை மத்திய அரசுக்குத் தெரிவிக்கின்றது. மத்திய அரசு அவற்றை எல்லாம் பரிசீலித்தபின் கொள்முதல் விலைகளை நிர்ணயித்து அறிவிப்பு செய்கின்றது. மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைகளுக்கும் மேலாக கூடுதலாக விலை தரக் கூடாதென்று மத்திய அரசு கண்டிப்பாக தெரிவித்துள்ளது.

20. 1983-84 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு நெல் கொள் முதல் விலையை கடந்த ஆண்டு விலைகளுக்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 10 என்று உயர்த்தி கீழ்க்கண்டவாறு அறி வித்தது—

| ரகம். | | | | விலை. (குவிண்டாலுக்கு.) ரூ. |
|---|---|---|---|---|
| சாதாரண ரகம் | .. | .. | .. | 132.00 |
| சன்ன ரகம் | .. | .. | .. | 136.00 |
| மிகச் சன்ன ரகம் | .. | .. | .. | 140.00 |

தஞ்சை மாவட்டம், திருச்சி, தென்னாற்காடு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் அரசு ஏகபோக கொள் முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து உரிய காலத்தில் விவசாயத்திற்கு நீர் விடாத காரணத்தால் மின்சார/டீசல் மோட்டார் இவற்றைக் கொண்டு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, கூடுதலாக செலவு செய்தும், பருவ மழை தவறிய நிலையில் துணிச்சலாக, பயிர் பாதிக்கப்படக் கூடிய ஒரு அபாயத்தையும் எதிர் நோக்கி நெல் விவசாயத்தில் ஈடுபட்ட காரணத்தினால் அந்தப் பகுதிகளில் ஏற்கனவே கொள் முதல் விலைகளுக்கு மேலாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 கொடுத்து வந்ததை 8-9-1983 முதல் ரூ. 35 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டது. ஏகபோக கொள்முதல் திட்டம் செயல்படுத்தும் பகுதிகளில் விவசாயிகள் அரசாங்கத்திற்கு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்கும் சாதாரண நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 167, சன்ன ரக நெல்லுக்கு ரூ. 171, மிகச் சன்ன ரக நெல்லுக்கு ரூ. 175 தரப்படுகின்றது. பொதுவாக நெல்லுக்கு கொள்முதல் விலைகளுக்கு மேலாக மாநில அரசுகள் கூடுதலான விலை கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு நிலையை மேற்கொண்டு இருந்த போதிலும் தமிழகத்தி

லுள்ள சூழ்நிலையில் இத்தகைய கூடுதலான விலை கொடுக்க வேண்டுமென்ற அவசியத்தை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டி இதற்கு ஒப்புதல் அளிக்கும்படியும், ரிசர்வ் வங்கி மூலமாக நெல் கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் நிதியை சகாய வட்டியில் வழங்க ஆணையிடும்படியும் மாநில அரசு கேட்டுக் கொண்டது. மத்திய அரசு நிதியினை வழங்க ஒப்புக்கொண்ட போதிலும், இந்திய ரிசர்வ் வங்கி நெ வாங்குவதற்கு சகாய வட்டியை அளிக்கவில்லை. வழக்கமான 12.5 சதவீத வட்டிக்குப் பதிலாக 18 சதவீதம் நாம் தருகிறோம்.

## III பொது விநியோக முறை.

21. தமிழகம் முழுவதிலும் பொது விநியோக முறை செயல் படுத்தப்பட்டு வருகிறது. 18,009 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் நகரப் பகுதிகளில் 1,956 நியாய விலைக் கடைகளும், கிராமப் பகுதிகளில் 16,053 நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் அனைத்தும் தமிழ்நாடு நுகர் பொருள வாணிபக்கழகம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர ஏஜென்சிகள் தான் நடத்தி வருகின்றன என்பதும், தனியார் வியாபாரிகளிடம் பொது விநி யோக திட்டம் ஒப்படைக்கப்படவில்லை என்பதும் தமிழகத்தில் செயல்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 5,036 நியாய விலைக் கடைகளையும், கூட்டுறவு சங்கங்கள் 12,905 நியாய விலைக் கடைகளையும், இதர ஏஜென்சிகள் 68 நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.

22. தமிழகம் முழுவதிலும் பொதுக் கணக்கெடுப்பு செய்த பின் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாலின், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

அரிசி :

23. நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சி நிலைமை ஏற்பட்டு அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதே நேரத்தில் பொது விநி



யோகத் திட்டத்தின் கீழ் அரிசியின் தேவையும் கணிசமாக உயர்ந் தது. இதன் காரணமாக அரிசியின் கையிருப்பு குறைந்து வரக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. இவையெல்லாம் அரசு உன்னிப் பாக பரிசீலனை செய்தபின் மாத வருமானம் ரூ. 1,000-க்கு குறைவாக உள்ள குடும்பங்களுக்கு மட்டும் அரிசி வழங்குவதென்று முடிவை மேற்கொண்டு 1-2-1983 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்திலுள்ள 118.88 லட்சம் குடும்ப அட்டை களில் மாத வருமானம் ரூ. 1,000-க்கு மேலாக உள்ள அட்டைகள் 5.48 லட்சமாகும். மீதியுள்ள 113.40 லட்சம் குடும்பங்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

24. 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்பு வயது வந்த நபருக்கு வாரம் ஒன்றுக்கு 1 கிலோவும், குழந்தைக்கு ½ கிலோ வும் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 20 கிலோ இவற் றில் எது குறைவோ அந்த அளவிற்கு அனைத்து மாவட்டங்களி லும் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. நீலகிரி மாவட் டத்தைப் பொறுத்தவரையில் அரிசி உற்பத்தி குறைவு என்ற காரணத்தினால் அம்மாவட்டத்தில் வயது வந்த நபர் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1½ கிலோவும், குழந்தைக்கு ½ கிலோவும் ஒரு மாதத்திற்கு ஒரு குடும்ப அட்டைக்கு 28 கிலோ இவற்றில் எது குறைவோ அது வழங்கப்பட்டு வந்தது. ஆனால் வறட்சி நிலைமை ஏற்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கூடுதலாக அரிசி தேவைப்பட்ட காரணத்தினால் அந்த அளவிற்கு வழங்குவதற்கு இருப்பு நிலைமை இடம் கொடுக்காத காரணத்தினாலும், மத்தியத் தொகுப்பிலிருந்து நாம் கோரிய அளவிற்கு அரிசி கிடைக் காத நிலையிலும் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவு பற்றி மீள் பரிசீலனை செய்து 1-6-1983 முதற் கொண்டு புதியதொரு திட்டத்தை வகுத்தது. அந்த திட்டத்தின் படி சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் நெல்/அரிசி உற்பத்தி இல்லாததால், அப்பகுதிகளில் ஏற்கெனவே உள்ளது போல் தொடர்ந்து அதே அளவில் அரிசி விநியோகம் செய்வது என்று முடிவு செய்தது. ஆனால் பொது விநியோகத்தில் மத்திய அரசு கூடுதலாக கோதுமை ஒதுக்கீடு செய்த சூழ்நிலையில் ஒரு குடும்பத்திற்கு வழங்க வேண்டிய, மொத்த அளவில் 60 விழுக்காட்டை அரிசியாகவும், மீதி 40 விழுக்காட்டை கோதுமையாகவும் வழங்குவது என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ வழங்க வேண்டுமென்றால், அதில் 12 கிலோவை அரிசி யாகவும் மீதி 8 கிலோவை கோதுமையாகவும் வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு அதிக பட்சம் 28 கிலோ உணவு தானியங்கள் வழங்கப்படுகிறது. அதில் 60 சதவிகிதம் அரிசியாகவும் 40 சதவிகிதம் கோதுமையாக

ளம் வழங்கப்படுகிறது. மாநிலத்தின் இதர பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 6 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரை பொது விநியோகத் திட்டத்தின் கீழும், சத்துணவு திட்டத்திற்கும் மொத்தத்தில் 8.66 லட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

**அரிசியின் சில்லறை விற்பனை விலை —**

25. நியாய விலைக் கடைகள் மூலம் சாதாரண ரக அரிசி ஒரு கிலோ ரூ. 1.75, சன்ன ரக அரிசி ரூ. 2.00, மிகச் சன்ன ரக அரிசி ரூ. 2.15 என்ற விலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விலைகள் 1-2-1981 முதற்கொண்டு அமலில் உள்ளது. ஆனால் அதற்குப்பின் மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலைகளை உயர்த்திய போது மத்திய தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையையும் உயர்த்தியது. நம மாநிலத்தில் உயர்த்தப்பட்ட விலைகளைக் கொடுத்து நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த போதிலும் அரிசியின் சில்லறை விலையை இந்த அரசு உயர்த்தவில்லை. இதர மாநிலங்களில் வெளிச் சந்தையில் ஒரு குவிண்டால் அரிசி சராசரி ரூ. 310 முதல் ரூ. 370 வரை என்ற அளவிற்கு அதிக விலை கொடுத்து நாம் கொள்முதல் செய்தபோதிலும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலேயே அரிசி விநியோகம் செய்யப்பட்டது. இதன் காரணமாக கடந்த ஆண்டு ஏறக்குறைய 110 கோடி ரூபாய் அளவிற்கு அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியமாக வழங்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆயினும், நுகர்வோரின் நலனைத் கருத்திற் கொண்டு அரிசியின் சில்லறை விலைகளை உயர்த்தாமல் இந்த அளவிற்கு நட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசியை வழங்கி வருவதை இம்மன்ற உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

லெவி கோதுமை —

26. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்கு மத்திய அரசு லெவி கோதுமையை ஒதுக்கீடு செய்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் என்ற அளவில் கோதுமையை ஒதுக்கீடு செய்து வந்தது. இதை மே மாதத்தில 20,000 டன்களாகவும், ஜூன் முதல் ஆகஸ்டு மாதம் வரை மாதம் ஒன்றுக்கு 25,000 டன்களாகவும், செப்டம்பர் மாதம் முதற் கொண்டு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களாகவும் உயர்த்தி வழங்கி வருகின்றது. பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தின்



அரிசித் தேவை அதிகரித்த நிலையில் கூடுதலாக கோதுமையை
ஒதுக்கீடு செய்யும்படி மாநில அரசு கேட்டுக் கொண்டது. அந்த
கோரிக்கையை ஏற்று மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 4,000 டன்
கள் என்ற அளவில் வழங்கி வந்ததை 30,000 டன்கள அளவிற்கு
உயர்த்தி வழங்கி வருகிறது. வறட்சி காலங்களில் வெளிச்சந்தை
யில் அரிசியின் விலை கணிசமாக உயரும்போது மக்கள் சோது
மையை நியாய விலைக் கடைகளில் வாங்குகின்றனர். மத்திய
அரசு அதிக அளவு கோதுமையை இருப்பில் வைத்துள்ளது.
மேலும் அது அதிக கோதுமையை இறக்குமதி செய்யும் நிலையில்
உள்ளது. ஆகவே, கோதுமையின் உபயோகத்தினை பழங்காலந்
தொட்டு அரிசி உபயோகித்து வரும் இடங்களில் அதிகப்படுத்து
வது முக்கிய தேவையாகும். அரிசியையே நம்பியிருத்தல் பாது
காப்பாகாது. தற்போது நகர்ப்புறங்களில் ஒரு குடும்ப அட்
டைக்கு ஒரு மாதத்திற்கு 15 கிலோ கோதுமையும், கிராமப்
புறங்களில் ஒரு மாதத்திற்கு 10 கிலோ கோதுமையும் வழங்கப்
பட்டு வந்ததை 20 கிலோவாகவும் மலைப் பிரதேசங்களில் 30
கிலோவாகவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.
நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்ட கோதுமை ஒரு கிலோ
ரூ. 1.75 என்ற விலையில் 20-4-1983 வரை வழங்கப்பட்டு
வந்தது. மத்திய அரசு கோதுமையின் கொள்முதல் விலையை
உயர்த்தியதை யொட்டி, பொது விநியோகத்திற்கு வழங்கப்படும்
கோதுமையின் விலையையும் உயர்த்தியது. அதன் அடிப்படையில்
கோதுமையின் விலை 1 கிலோ ரூ. 1.87 என நிர்ணயிக்கப்பட்டு
21-4-1983 முதல் அமலில் இருந்து வருகிறது.

27. 1983 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நியாய விலைக் கடை
கள் மூலமாக குடும்பக் கார்டுகளுக்கும் மொத்த நுகர்வோருக்கும்
2,04,811 டன்கள் கோதுமை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கோதுமைப் பொருட்கள்:

28. நியாயவிலைக் கடைகள் மூலமாக மைதா, ரவை ஆகிய
கோதுமைப் பொருட்கள் குடும்ப அட்டைக்ளுக்கு விநியோகம்
செய்யப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்
றுக்கு நகர்ப்புறங்களில் 10 கிலோ மைதாவும் கிராமப் புறங்களில்
5 கிலோ மைதாவும், தரப்படுகிறது. எல்லா இடங்களிலும்
5 கிலோ ரவையும் தரப்படுகிறது. ரொட்டி, சேமியா தயாரிப்
போர் போன்ற மொத்த நுகர்வோருக்கு மைதாவை அரசு நிர்
ணயித்த விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
வழங்கி வந்தது. ஆனால் வெளிச்சந்தையில் மைதா தாராளமாக
கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் மொத்த நுகர்வோர் அதிக
அளவில் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்
திடம் மைதா வாங்குவதில்லை.

29. தமிழகத்தில் 1982-83-ஆம் ஆண்டில் 35 உருளை மாவு
ஆலைகள் இருந்தன. 1983-84-ஆம் ஆண்டில் மத்திய அரசு
நான்கு புதிய உருளை மாவு ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்கி
யுள்ளது. தற்போது தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்
தைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உருளை மாவு
ஆலை உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் உருளை
மாவு ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக அந்தந்த.
மாவட்டங்களுக்குத் தேவையான கோதுமைப் பொருட்களை
அந்தந்த மாவட்டத்திலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி
ஏற்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் புதிய உருளை மாவு ஆலை கட்டப்பட்டு வருகிறது.
தமிழகத்தில் தற்போது மொத்தத்தில் 39 உருளை மாவு ஆலை
கள் உள்ளன. அவற்றின் மொத்த அரவைத் திறன் மாதம் ஒன்
றுக்கு 73,370 டன்களாகும். ஆனால், மத்திய அரசு டிசம்பர்
1983 வரை மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களை ஒதுக்கீடுசெய்து
வந்தது. ஜனவரி 1984 முதல் இதை 38,000 டன்களாக உயர்த்தி
வழங்கி வருகிறது. உருளை மாவு ஆலைகளுக்கு மத்திய அரசு
ஒதுக்கீடு செய்யும் கோதுமையை மாநில அரசு ஆலைகளுக்கு
பிரித்துக் கொடுக்கிறது.

30. கோதுமை உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும்
மைதா, ரவையில் 60 விழுக்காட்டை தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகமும் கூட்டுறவு சங்கங்களும் எடுத்து நியாய விலைக்
கடைகள் மூலமாகவும், மொத்த நுகர்வோருக்கும் விநியோகம்
செய்து வருகின்றன. மீதி 40 விழுக்காட்டை உருளை மவு
ஆலைகள் வெளிச்சந்தையில் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளன.
மைதா, ரவை ஆகிய இரண்டு பொருட்களுக்கு மட்டும் அரசு
சட்டபூர்வமாக விலைகளை நிர்ணயித்துள்ளது. தவிடு, ஆட்டா
ஆகிய இதர பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு எதுவும் கிடை
யாது. மைதா, ரவையின் சில்லறை விலை 1 கிலோ ரூ. 3.05.

31. கோதுமை உருளை மாவு ஆலைகள் தரமான கோது
மைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனவா என்பதைக் கண்
காணிப்பதற்கு உதவி ஆணையாளர் ஒருவரும், தொழில் நுட்ப
உதவியாளர்களும் உணவுத்துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ள
னர். உதவி ஆணையர், உணவுப் பொருள் வழங்கு துறை ஆணை
யர் அலுவலகத்திலிருந்துகொண்டு செயல்பட்டு வருகின்றார்.
மேலும், உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் கோதுமைப்
பொருட்கள் தரமானவைதானா என்பதைச் சோதனை செய்
வதற்கு ஒரு ஆய்வுக்கூடமும் ஆணையர் அலுவலகத்தில் அமைக்
கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்திற்கு அங்கீகாரம் பெறுவதற்கு
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது
கோதுமை உருளை மாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் பொருள்



களின் மாதிரி எடுக்கப்பட்டு அவை மத்திய ஆய்வகத்திற்கு டெல்
லிக்கு அனுப்பப்பட்டு அங்கே ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள்
பெறப்படுகின்றன. 1983ஆம் ஆண்டில் கோதுமை உருளை மாவு
ஆலைகளுக்கு மத்திய தொகுப்பிலிருந்து 3,60,000 டன்கள்
கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

லெவி சர்க்கரை :

32. குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகளின்
மூலம் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
குடும்ப அட்டைகளுக்கு நபர்களின் அடிப்படையில் நபர்
ஒன்றுக்கு 425 கிராம் வீதம் வழங்கப்பட்டு வந்தது. மத்திய
அரசு 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை இந்த
மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 20,531 டன்கள் லெவி
சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வந்தது. அதை நவம்பர்
மாதம் முதற்கொண்டு 21,289.9 டன்களாக உயர்த்தி மாதம்
ஒன்றுக்குக் கூடுதலாக 758 டன்கள் சர்க்கரையை தற்போது
ஒதுக்கீடு செய்து வருகிறது. இதன் காரணமாக குடும்பக்கார்டு
களுக்கு வழங்கப்பட்டு வந்த சர்க்கரையின் அளவு நபர்
ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 425 கிராம் என்பதை 450
கிராம் என உயர்த்தி 1-1-1984 முதற்கொண்டு வழங்கப்
பட்டு. வருகிறது. லெவி சர்க்கரை நாடு முழுவதிலும் ஒரே
விலையில் விற்கப்பட்டு வருகிறது. 1984ஆம் ஆண்டு ஜனவரி
மாதம் வரை லெவி சர்க்கரை ஒரு கிலோ ரூ. 3.75 என்ற விலை
யில் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. மத்திய அரசு
இந்த விலையை 1-2-1984 முதற் கொண்டு ரூ. 4.00 என
மாற்றியமைத்ததால் தற்போது நியாய விலைக் கடைகளில் லெவி
சர்க்கரை ஒரு கிலோ ரூ. 4.00 என்று விற்கப்பட்டு வருகிறது.
1983ஆம் ஆண்டில் 2,35,811 டன்கள் லெவி சர்க்கரை நியாய
விலைக் கடைகள் மூலமாகக் குடும்ப அட்டைகளுக்கும், அரசு
மருத்துவமனைகள், கல்வி நிலையங்களுடன் இணைந்த உணவு
விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற மொத்த நுகர்வோ
ருக்கும் வழங்கப்பட்டது. பண்டிகைக் காலங்களில் கூடுதலாக
வும் சர்க்கரை வழங்கப்பட்டது.

மண்ணெண்ணெய் :

33. தமிழகத்தில் நியாய விலைக் கடைகள் மூலமாக மண்
ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மத்தியஅரசு
மாநில அரசுகளுக்கு மண்ணெண்ணெய்யை ஒவ்வொரு மாத
மும் ஒதுக்கீடு செய்து வருகிறது. தமிழகத்திற்கு ஒரு மாதத்திற்கு
சுமார் 69,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படு

கிறது. ஆனால், மத்திய அரசு சுமார் 45,000 கிலோ லிட்டர்
கள் என்று அளவில்தான் ஒதுக்கீடு செய்து வருகின்றது. சமீபத்
தில் சென்னை, தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம் போன்ற
மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது அப்
பகுதிகளில் கூடுதலாக மண்ணெண்ணெய் தேவைப்பட்டது. மத்
திய அரசு கூடுதலாக 3,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்யை
ஒதுக்கீடு செய்தது.

34. நியாய விலைக் கடைகளைத் தவிர கைவண்டிக்காரர்கள்
மூலமாகவும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வரு
கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் 964 கைவண்டிக்
காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தினம் ஒன்றுக்கு 100 லிட்டர்
வீதம் பொது மக்களுக்கு வழங்குவதற்காக மண்ணெண்ணெய்
வழங்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலுள்ள 1,812 கைவண்
டிக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தினம் ஒன்றுக்கு 50 லிட்டர்
மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. குடும்ப அட்
டைகளின் தேவையைப் பூர்த்தி செய்த பின் மண்ணெண்ணெய்
மீதம் இருக்குமானால் நிலைமையை அனுசரித்து மாவட்டகளி
லுள்ள கைவண்டிக்காரர்களுக்கு தினம் ஒன்றுக்கு 100 லிட்டர்
கள் அளவிற்கு உயர்த்தி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்
களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்படி வழங்கப்படும்
மண்ணெண்ணெய்யை இவர்கள் வீதிதோறும் எடுத்துச் சென்று
பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றனர். இவர்களைத் 'தவிர
மண்ணெண்ணெய் தொழிலையே வாழ்க்கைக்கு நம்பியிருக்கக்
கூடிய சில்லரைப் பதிவுச் சான்றிதழ் பெற்ற 2,547 தனியார்
வியாபாரிகளுக்கும் அரசு மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றது.
அவர்கள் ஒவ்வொருவருக்கும் 500-க்கு அதிகப்படாத அளவில்
குடும்ப அட்டைகளை இணைத்து அவற்றிற்கு மண்ணெண்ணெய்
விநியோகம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில்
சில்லரைப் பதிவுச் சான்றிதழ் பெற்ற 7,227 மண்ணெண்ணெய்
வியாபாரிகள் உள்ளனர். அவர்கள் பல்வேறு பொருட்களையும்
விற்பனை செய்கின்றனர். மண்ணெண்ணெய் தொழிலை மட்டும்
வாழ்க்கைக்கு நம்பியிருக்கும் தனியார்களுக்கு மண்ணெண்ணெய்
வழங்குவது போலவே தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று
சில வியாபாரிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்
தனர். அந்த வழக்கில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ்
மண்ணெண்ணெய் விநியோகத்தை அரசு செய்வதை ஏற்றுக்
கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் தனியார் வியாபாரிகளைப்
பொறுத்தவரையில் வித்தியாசம் எதுவும் காட்டக்கூடாது என்றும்
மண்ணெண்ணெய் தொழிலையே வாழ்க்கைக்கு நம்பியிருந்த வியா
பாரிகளுக்கு மட்டும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்ற
ஆணையை ரத்து செய்து தீர்ப்பு அளித்தது. ஆனால், பொது
விநியோக முறையில் குடும்ப அட்டைகளுக்கும் பதிவுச்சான்றிதழ்



பெற்ற அனைத்து தனியார் வியாபாரிகளுக்கும் வழங்கும் அள
விற்கு மத்திய அரசின் ஒதுக்கீடு இல்லை. அனைத்து தனியார்
வியாபாரிகளுக்கும் மண்ணெண்ணெய் தரவேண்டுமென்றால்
பொது விநியோகத் திட்டம் பாதிக்கப்படும். நாம் அனைத்து
குடும்பங்களுக்கும் அட்டைகளை வழங்கிவிட்டு மண்ணெண்ணெய்
வழங்குவோம் என்ற உறுதியும் தந்தபின் நியாய விலைக் கடை
கள் மூலம் வழங்குவதற்கு போதிய அளவு மண்ணெண்ணெய்
கிடைக்காவிடில் பொது விதியோக திட்டத்தை நாம் செயல்
படுத்த முடியாமல் போய்விடும். நியாய விலைக் கடைகள் மூலம்
அரசு நிர்ணயித்த விலையில் அரசு நிர்ணயித்த அளவுக்கு மண்
ணெண்ணெய் வழங்குவதை நம்மால் உறுதிபடுத்திக் கொள்ள
முடிகின்றது. அதே நேரத்தில் தனியார் வியாபாரிகள் மூலம்
மண்ணெண்ணெய் சில்லரை விநியோகம் இருக்குமானால் ஆயிரக்
கணக்கான தனியார் வியாபாரிகளைக் கண்காணிப்பது மிகச்சிரம
மானதொரு காரியமாகும். சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்
பின்மீது நாட்டின் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்
பட்டுள்ளது.

35. சென்னை மாநகராட்சியிலும் மாவட்ட தலைமையகத்தி
லுள்ள நகராட்சிப் பகுதிகளிலும் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு
மாதத்திற்கு 10 லிட்டர்கள் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு
வருகிறது. இதர நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகளில் ஒரு
குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 6 லிட்டர் வீதமும், நகர
பஞ்சாயத்துப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 5 லிட்டர் வீதமும்,
கிராமப்பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்
ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு ஒதுக்
கீடு செய்யப்படும் மண்ணெண்ணெயில் மீதம் இருக்குமானால்
நகரியம் மற்றும் நகராட்சிப் பகுதியிலுள்ள குடும்ப அட்டை
களுக்கு மாதமொன்றுக்கு 10 லிட்டர் அளவிற்கு உயர்த்தி வழங்
கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்
டுள்ளது.

36. மத்திய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மண்
ணெண்ணெய் விநியோகத்தில் இருவிலைக் கொள்கையைக்
கொண்டுவந்தது பற்றி கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்
பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், பரிசீலனைக்குப்பின்,
அந்தத் திட்டத்தை மத்திய அரசு 16—3—1983 முதல்கொண்டு
கைவிட்டு விட்டது. தற்போது மண்ணெண்ணெய் ஒரே
விலையில்தான் மத்திய அரசு வழங்கி வருகிறது.

37. மண்ணெண்ணெயின் மொத்த வியாபார விலை, சில்லரை விலை சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு லிட்டர் மண்ணெண்ணெயின் சில்லரை விலை ரூ. 1.88 முதல் ரூ. 2.17 வரை உள்ளது.

**வனஸ்பதி :**

38. வெளிச்சந்தையில் வனஸ்பதியின் விலை உயரும்போது பொதுமக்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அங்காடிகளிலும், கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் அங்காடிகளிலும் வனஸ்பதி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வனஸ்பதியை உற்பத்தி செய்யும் ஆலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் வனஸ்பதியில் 70 விழுக்காட்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால், வெளிச்சந்தையில் வனஸ்பதி கிடைக்கும்போது பொதுமக்கள் இந்த நிறுவனங்கள் நடத்தும் கடைகளுக்கு வந்து வனஸ்பதியை வாங்குவதில்லை. ஆயினும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு வனஸ்பதியை எடுத்து விநியோகம் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பாமாலின் :**

39. நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்ய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் எண்ணெய்யை மத்திய அரசு வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டு துவக்கத்தில் மாதம் ஒன்றுக்கு 2,930 டன்கள் எண்ணெயை ஒதுக்கீடு செய்து வந்தது. ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 1 கிலோ வழங்கவேண்டுமென்றால் கூட சுமார் 12,000 டன்கள் தேவைப்படும். எனவே, ஒதுக்கீட்டை கணிசமாக உயர்த்தி வழங்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வந்தது. மத்திய அரசும் நம் கோரிக்கையை ஏற்று ஒதுக்கீட்டை படிப்படியாக உயர்த்தி செப்டம்பர் 1983-லிருந்து மாதம் ஒன்றுக்கு 7,500 டன்கள் வீதம் நவம்பர் மாதம் வரை வழங்கியது. டிசம்பர் 1983 இல் 6,500 டன்களும், ஜனவரி 1984-இல் 7,000 டன்களும் ஒதுக்கீடு செய்தது. பிப்ரவரி மாதத்திற்கு 7,500 டன்களை ஒதுக்கியபோதும் 4,000 டன்களை பாமாலின் எண்ணெயாகவும், மீதி 3,500 டன்களை சோயாபீன் எண்ணெயாகவும் வழங்க ஆணையிட்டுள்ளது.



40. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யை, மத்திய அரசு நிறுவனமான ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்து விநியோகம் செய்கின்றது. சென்னை துறைமுகத்தில் இந்த எண்ணெய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு வழங்கப்படுகிறது. இதை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துச்சென்று தான் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கும், கூட்டுறவுச்சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கும் வழங்கி வருகின்றது. மத்திய அரசு செய்யும் ஒதுக்கீடு முழுவதையும் அந்த மாதத்திலேயே பெற இயலவில்லை. காரணம், வெளிநாடுகளிலிருந்து பாமாலின் எண்ணெய் எந்த அளவுக்கு வருகின்றதோ அதைப் பொறுத்துத்தான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வழங்குகின்றது. சென்னையிலிருந்து தமிழகம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யை மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வழங்கி வருகிறது. வெளிநாடுகளிலிருந்து போதிய அளவுக்கு எண்ணெய் வந்து சேராவிட்டால் ஒதுக்கீடு முழுவதும் நமக்கு வழங்கப்படுவதில்லை. இந்தநிலைமை பற்றி மத்திய அரசுக்கும் தெரிவித்துள்ளோம். 1982-83 ஆம் எண்ணெய் ஆண்டில் (நவம்பர், 1982 முதல் அக்டோபர் 1983வரை) மத்திய அரசு தமிழகத்திற்கு 55,530 டன்கள் ஒதுக்கீடு செய்தது. அந்த எண்ணெய் முழுவதையும் எடுத்துப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

41. சமையல் எண்ணெய் வரத்து ஒதுக்கீட்டைவிடக் குறைவாக இருப்பதன் காரணமாக ஒவ்வொரு மாதமும் கையிருப்பை அனுசரித்து குடும்ப அட்டைகளுக்கு எவ்வளவு பாமாலின் எண்ணெய் வழங்கவேண்டும் என்பதை அரசு முடிவு செய்கின்றது. தற்போது சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ என வழங்கப்பட்டு வருகிறது. இதர நகரப் பகுதிகளில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறை ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது. தற்போது பாமாலின் சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 9.00. நுகர்வோரின் நலனைக் கருதி நாம் மாநிலத்தில் பாமாலின் எண்ணெய் மற்ற மாநிலங்களில் உள்ள விலைகளைவிட குறைவான சில்லரை விலையில் விற்கப்படுகிறது.

42. பாமாலின் எண்ணெயை டின்களில் அடைத்து சென்னையில் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. டின்களில் அடைக்கப்பட்ட பாமாலின் எண்ணெய்யை

மத்திய அரசு நிறுவனம் (Ganesh Flour Mills) வழங்குகிறது. இந்த
நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 1,000 டன்கள் எண்
ணெயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது. இது 2 கிலோ.
4 கிலோ டின்களில் விநியோகம் செய்யப்படுகிறது. விநியோக
மும் சீராக நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தில் டின்களில்
அடைக்கப்பட்ட பாமாலின் எண்ணெய் நியாய விலைக் கடைகள்
மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்குத்தான் வழங்கப்பட்டு வரு
கின்றது. இருப்பு நிலையை அனுசரித்து இது குடும்ப அட்டை
களுக்கு வழங்கப்படுகிறது. தற்போது மாதம் ஒன்றுக்கு குடும்ப
அட்டைக்கு 2 கிலோ டின் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு
ஒரு முறை ஒரு 4 கிலோ டின் என்ற முறையில் விநியோகம்
செய்யப்பட்டு வருகிறது.

## IV. பொது விநியோகத்திட்டத்தை சீரமைத்தல்-கண்காணித்தல்.

43. பொது மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் அரசு
நிர்ணயித்த விலையில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்
தான் நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தகைய பண்டங்
கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவை குடும்ப அட்டை
தாரர்களுக்குச் சேராமல் சில சமயங்களில் தவறான முறையில்
சுயநல நோக்கத்தோடு கள்ளச்சந்தையில் விற்கப்படுகிறதுபோன்ற
புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. மேலும், நியாய
விலைக்கடைகள் செயல்படுவதில் சில குறைபாடுகள் உள்ளன
என்பது பற்றியும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்
ளது. பொது விநியோகம் சீராக செம்மையாக நடைபெற
வேண்டும் என்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் இருப்பதற்கு
நியாயமில்லை. அத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது நடை
முறையில் காணப்படும் குறைபாடுகளையும் தவறுகளையும்
களையவேண்டியது மிக அவசியம் என்பதை இந்த அரசு நன்கு
உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்
அறிவிப்பின்றி சென்னை நகரிலும், மாவட்டங்களின் சுற்றுப்
பயணத்தின்போதும் நியாய விலைக் கடைகளைப் பார்வையிடுவதி
லிருந்து இத்திட்டத்தின் பயன் முழுமையாகப் பொதுமக்களுக்கு
கிடைக்கவேண்டுமென்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு
அக்கறை கொண்டுள்ளது என்பதை உணரலாம்.

44. நியாய விலைக்கடைகளின் செயல்முறையைச் சீராக்கவும்
அவற்றை உன்னிப்பாக்க் கண்காணிக்கவும் பல்வேறு நடவடிக்கை
களை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. நியாயவிலைக் கடைகள்
திட்டம் செயல்படுவதை ஆய்வு செய்வதற்கு மாநில அளவில்
தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்
டுள்ளது. அதில் அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லா
தவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட அளவில் அரசு



அலுவலர்களையும், அரசு அலுவலர்கள் அல்லாதவர்களையும்
உறுப்பினர்களாகக்கொண்ட குழு அமைப்பதற்கு நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரைப் பொறுத்தவரை
யில் இந்த ஆலோசனைக் குழு உணவு பொருள் வழங்குதுறை
ஆணையரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. வட்டஅளவி
லும், இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் உணவு விவாதத்தின்போது
நியாய விலைக்கடைகளைக் கண்காணிக்க ஒவ்வொரு கடைக்கும்
ஒருகுழுவை அமைக்க வேண்டியதின் அவசியத்தை அங்கத்தினர்
கள் தெரிவித்தனர். அரசு இக்கருத்தைப் பரிசீலனை செய்து தமிழ
கத்திலுள்ள ஒவ்வொரு நியாயவிலைக்கடைக்கும் ஒரு குழுவை
நியமிக்க ஆணையிட்டது. நகர பகுதிகளில் உள்ள கடைகளைப்
பொறுத்தவரையில் 9 அங்கத்தினர்களைக்கொண்ட குழு ஒன்று
அமைக்கப்பட்டுள்ளது. அதில் 2 அல்லது 3 உறுப்பினர்கள் மகளி
ராக இருக்க வேண்டும் என்றும், அந்தப் பகுதியில் வசிக்கும்
மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களை நியமிக்க
வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. கிராமப் பகுதி
களைப் பொறுத்தவரை அந்தக் குழுவில் 5 அங்கத்தினர்கள்
இருக்க வேண்டும் என்றும் அவற்றில் ஒருவர் மகளிராகவும் ஒருவர்
அரசு அலுவலராகவும், மீதி 3 உறுப்பினர்கள் மருத்துவர்கள்
வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்களாக இருக்கவேண்டும் என்
றும் ஆணை பிறப்பித்துள்ளது. மாநில அளவில் ஒரு குழுவும்
வட்ட அளவில் 166 குழுக்களும், 189,00 நியாய விலைக் கடை
களுக்கு விழிப்புக் குழுக்களும் இயங்கிவருகின்றன. நியாயவிலைக்
கடைகளுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் அங்கு சேர்வ
தில்லை யென்றும், இடையிலேயே அவை விற்கப்படுவதாக புகார்
கள் வந்தன. இத்தகைய தவறுகள் நடக்காவண்ணம் தடுக்க
நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள்
வந்து சேர்ந்துவிட்டனவா என்பதை கடையின் விழிப்புக் குழுவின்
அரசு அலுவலர் உறுப்பினர் நேரில் பார்த்து, இருப்புப் புத்தகத்
தில் ஒப்பமிட்டபின்தான் உணவுப்பொருட்களை வழங்க வேண்டு
மென்று ஆணையிடப்பட்டுள்ளது.

45. நியாயவிலைக் கடைகளின் மூலமாக அரிசி, கோதுமை,
சர்க்கரை போன்ற பொருட்கள் மட்டும் வழங்கினால் போதாது
என்றும், இதர அத்தியாவசியப் பண்டங்களான புளி, மிளகாய்,
மஞ்சள், வெல்லம், பருப்பு வகைகள் ஆகியவற்றையும் பொது
மக்களுக்கு விற்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஆயினும் இன்னும் தீவிரமாக செயல்படுத்தும் வகையில் அனைத்து
பொருட்களையும் வைத்து விற்பனை செய்யவேண்டும் என்று
கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்
கழகத்திற்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

46. நியாயவிலைக் கடைகள் சரியான முறையில் இயங்கு
கின்றனவா, அவற்றில் குடும்ப அட்டைகளுக்கு உணவுப்பொருட்
கள் வழங்கப்படுகின்றனவா அல்லது போலி பில்கள் தயாரித்து

அப்பொருட்களை குடும்ப அட்டைகளுக்கு வழங்காமல் தவறான வழியில் எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு விழிப்புப் பணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வட்டாட்சியர் ஒரு துணை வட்டாட்சியர் மற்றும் இதர அலுவலர்கள் கொண்ட ஒரு விழிப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில், துணை ஆணையாளர் (நகரம்) அலுவலகத்தில் 1 கண்காணிப்பாளரும் 5 தணிக்கை ஆய்வாளர்களும் கொண்ட நான்கு விழிப்புப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விழிப்பு பணிக்குழுக்கள் நியாய விலைக் கடைகளைத் தணிக்கைக்கு எடுத்துக் கொண்டு கணக்குகளைத் தீவிரமாக சோதனை செய்து அக்கடைக்கு வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இருப்புக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளதா, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டனவா என்பதைச் சோதனை செய்கின்றனர். அதுமட்டுமின்றி பொருட்கள் வழங்கப்பட்டதற்கு பட்டியல் தயாரித்ததை வீடுதோறும் சென்று அப்பொருட்களை உண்மையில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றனரா என்றும் விசாரணை செய்யப்படுகிறது. இத்தகைய சோதனைகளில் உண்மையில் பொருட்களை வழங்காமல் வழங்கியதாக போலி பட்டியல்கள் தயாரித்த விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பணியாளர்களில் 8 நபர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 48 நபர்கள் தற்காலிகமாக பணியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். 12 பணியாளர்களின் ஊதிய உயர்வை நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற பணியாளர்கள் மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன.

47. மேலும், வீடுதோறும் சென்று குடும்ப அட்டைகளை சோதனை செய்வதன்மூலம் போலி அட்டைகளைக் கண்டுபிடித்து நீக்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் 27,450 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கம் செய்யப்பட்டு உள்ளன.

48. அதேபோன்று, மாவட்டங்களிலும் நியாயவிலைக் கடைகளில் விநியோகம் சரியான முறையில் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கும்படி வட்ட வழங்கு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி ஆய்வாளரும் 750 குடும்ப அட்டைகளைத் தணிக்கை செய்ய வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 1983 முதல் நவம்பர் 1983 வரை மாவட்டங்களில் 2,756 நியாயவிலைக் கடைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் பதியப்பட்டு இருந்த அட்டைகளில் 17.45 இலட்சம் குடும்ப அட்டைகள் தணிக்கை செய்யப்பட்டன. அதில் 29,408 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டன. அது மட்டுமின்றி ஒரே



சேர்ந்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப
குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப
அட்டைகள் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு 5,164 குடும்ப
அட்டைகள் நீக்கம் செய்யப்பட்டன.

நியாயவிலைக் கடைகளின் கணக்குகளைத் தீவிரமாக
49. நியாயவிலைக் கடைகளின் மூலமும், வீடுதோறும் சென்று குடும்ப
சோதனை செய்ததின் மூலமும், வீடுதோறும் சென்று குடும்ப
அட்டைகளுக்கு, உண்மையிலேயே பொருட்கள் வழங்கப்பட்டதா
என்பதை சோதனை செய்வதன் மூலமாகவும், போலி பில்கள்
தயாரித்தும், ஒரு குடும்ப அட்டைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட
பில்கள் தயாரித்தும் பொருட்கள் தவறான வழியில் எடுக்கப்
பட்டுள்ளதைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடு
பட்டுள்ளதைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடு
களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை அந்த
நியாயவிலைக்கடைகளை நடத்திவரும் நிறுவனங்கள் எடுத்து
வருகின்றன.

விழிப்புப் பணிக் குழுக்கள் ஆற்றுகின்ற பணியை ஒவ்
50. விழிப்புப் பணிக் குழுக்கள் ஆற்றுகின்ற பணியை ஒவ்
வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்து அந்த
ஆய்வினை உணவுப்பொருள் வழங்குதுறை ஆணையாளருக்கு
அனுப்பி வைக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு
பெறப்படும் அறிக்கையை உணவுப்பொருள் வழங்குதுறை ஆணை
யாளர் மீள் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு
அறிவுரைகளை வழங்கி வருகின்றார்.

நியாயவிலைக் கடையில் தவறுகள் ஏதேனும் காணப்
51. நியாயவிலைக் கடையில் அவற்றை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு
பட்டால் உடனடியாக தெரிவிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்
தொலைபேசி மூலம் தெரிவிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரைப் பொறுத்தவரையில்
கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளருக்கும் தமிழ்நாடு நுகர்ப்
பொருள் வாணிபக்கழக முதுநிலைமண்டல மேலாளருக்கும் குறை
பாடுகளை தொலைபேசி மூலம் தெரிவிக்கலாமென பொது மக்க
ளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இத்தகைய புகார்
களைத் தெரிவிக்க உணவுப்பொருள் வழங்குதுறை ஆணையாளர்
அலுவலகத்திலும் ஒரு தனி தொலைபேசி எண் 842807 அமைக்
கப்பட்டுள்ளது. அதன் விவரமும் பொது மக்களுக்கு தெரிவிக்
கப்பட்டுள்ளது.

## V. கிராமந்தோறும் நியாய விலைக் கடைத் திட்டம்.

நகரப் பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளில்
52. நகரப் பகுதிகளிலுள்ள பண்டங்களும் கிடைப்பது போலவே
அனைத்து அத்தியாவசியப் பண்டங்களும் இந்த வசதிகள் கிடைக்க
கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கும் இந்த வசதிகள் கிடைக்க
வேண்டும் என்ற நோக்கத்தில் கிராமந்தோறும் நியாய விலைக்
கடைகள் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

தஞ்சாவூர், தென் ஆற்காடு, தர்மபுரி, திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இந்த 4 மாவட்டங் களிலும் சேர்ந்து மொத்தத்தில் 4,277 நியாயவிலைக் கடைகளை இந்த நிறுவனம் நடத்தி வருகிறது. சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை கூட்டுறவுச்சங்கங்கள் செயல் படுத்தி வருகின்றன. கூட்டுறவுத் துறையில் இத்திட்டத்தின்கீழ் 11,577 கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

53. கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை, பாமாலின், மண்ணெண் ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசியும், கோதுமையும் வழங்கியதின் மூலம், பருவமழை தவறியதன் காரணமாக தமிழகத்தின் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டிருந்த நிலைமையில் வெளிச்சந்தை யில் அரிசியின் விலை உயராமல் தடுக்க இவை பெரிதும் பயன் பட்டது என்பதை எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளேன். அதிகக் கடைகளை திறக்கவேண்டும் என்ற அவசியமில்லை, இருப்பினும் சிறப்பான இனங்களில், அதன் தகுதி மற்றும் தேவைக்கேற்ப கடைகள் திறப்பது ஆய்வு செய்யப்பட்டு தேவைப்பட்டால் கடைகள் திறக்கப்படும்.

## VI. வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

54. அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் அனைவருக்கும் கிடைக்க வகை செய்யும் முறையிலும், அப் பொருள்களில் தனியார் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தவும், அத்தி யாவசிய பண்டங்கள் சட்டம் 1955-ன்பிரிவு 3-ன்கீழ், கீழ்க்கண்ட வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளை தமிழக அரசு பிறப்பித் துள்ளது :—

1. தமிழ்நாடு நெல் அரிசி வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

2. தமிழ்நாடு கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

3. தமிழ்நாடு வனஸ்பதி வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

4. தமிழ்நாடு மண்ணெண்ணெய் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1973.



5. தமிழ்நாடு நிலக்கடலை மற்றும் நிலக்கடலை பொருட் கள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1974.

6. தமிழ்நாடு பருப்பு வகைகள் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1978.

7. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை, 1981.

55. இந்த வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின்கீழ், குறிப் பிட்ட அளவுக்கு மேல் ஒரு வணிகர் இருப்பு வைத்திருந்தாலும், வியாபாரம் செய்தாலும் அதற்கு உரிமம் பெற வேண்டும் என்ற விதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வர்த்தகக் கட்டுப் பாடு ஆணைகளின் கீழ் உரிமம் பெறுவதும் அவற்றைப் புதுப்பிப்ப தும் சங்கடமாக உள்ளது என்பதால் அனைத்து பொருட்களை யும் வியாபாரம் செய்ய ஒரே உரிமம் வழங்க வேண்டும், என்ற கோரிக்கையை வியாபாரிகள் அரசின் முன் வைத்தனர். அக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மண்ணெண்ணெய், சர்க்கரை நீங்கலாக மற்ற அனைத்து அத்தியாவசியப் பண்டங்களுக்கும் ஒரே வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை ஒன்றை வெளியிட, மத்திய அரசின் இசைவை அரசு பெற்றுள்ளது. அந்த ஆணை 1-4-1984 முதல் அமல் செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளும் மேல்முறையீடுகளும்.

56. அத்தியாவசியப் பண்டங்கள் பொதுமக்களுக்கு நியாய மான விலையில் சீராக கிடைக்கவும், பதுக்கலை வெளிக்கொணர வும், கள்ளச் சந்தையை ஒழிக்கவும், மத்திய அரசு 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ் இந்த அரசு பல கட்டுப்பாடு ஆணைகளை பிறப்பித்துள்ளது. இந்த கட்டுப்பாடு ஆணைகளை மீறி, அத்தியாவசியப் பண்டங்களை வியாபாரிகள் அல்லது மற்றவர்கள் கையிருப்பு வைத்திருந்தால் அல்லது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்து சென் றால், கட்டுப்பாடு ஆணைகளை செயல்படுத்த அனுமதிக்கப் பட்டுள்ள அலுவலர்கள் கைப்பற்றுகை செய்து மாவட்ட ஆட்சி யர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற கூடுதல் மாவட்ட ஆட்சியர், அல்லது மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். அந்த அறிக்கை பெற்றபின் மாவட்ட ஆட்சி யர் அல்லது அவர் அனுமதி பெற்ற அலுவலர் சட்டத்தில் கூறப் பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி, கைப்பற்றுகை செய்யப் பட்டுள்ள பண்டங்களை பொறுத்தமட்டில் கட்டுப்பாடு ஆணை களின் விதிகள் மீறப்பட்டிருப்பதாக அவர் நம்பினால், அப் பண்டங்களை பறிமுதல் செய்தும் அப்பண்டங்களை கொண்டு

செல்ல உபயோகிக்கப்பட்ட கோணிப்பைகள், பெட்டிகள் வண்டிகள், லாரிகள் முதலியவற்றை பறிமுதல் செய்தும், ஆணை வெளியிடலாம். அந்த ஆணைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் 1—9—1982-க்கு முன் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களில் மேல்முறையீடுகள் சமர்ப்பித்தனர். இம்மேல் முறையீடுகளை விரைவில் விசாரித்து தீர்ப்பளிக்கவும், கள்ளச் சந்தை, பதுக்கல், கொள்ளை லாபம் அடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு 1955-ம் ஆண்டின் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தில் சில திருத்தங்களை 1981 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. அத்திருத்தங்களின்படி அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்து இடப்படும் ஆணைகள் மீது மேல் முறையீடுகளை மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களுக்கு மாறாக மாநில அரசே விசாரித்து தீர்ப்பளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநிலத்தில் முன்பு 16 மாவட்ட குற்றவியல் நீதி மன்றங்களில் கவனிக்கப்பட்டு வந்த அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் சம்பந்தப்பட்ட மேல்முறையீடுகள் 1—9—1982 முதல் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன. 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய கிட்டத்தட்ட 900 மேல்முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அவற்றில் 400 மேல்முறையீடுகள் வரை விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டன.

உணவுப் பொருள் வழங்கு துறை, குற்றப் புலனாய்வுப் பிரிவு.

57. உணவுப் பொருள் வழங்கு துறை, குற்றப் புலனாய்வு பிரிவு ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறையில் 3-காவல் துறை கண்காணிப்பாளர்கள், 8-துணை கண்காணிப்பாளர்கள், 22-ஆய்வாளர்கள், 20-உதவி ஆய்வாளர்கள், 14-தலைமைக் காவலர்கள், 22 முதல் நிலைக் காவலர்கள், 110-இளநிலைக் காவலர்கள் மற்றும் 52 ஓட்டுநர் காவலர்கள் ஆகியவர் நிர்வாகப் பணியாளர்களாக உள்ளனர். இப்பிரிவிடம் நெல், அரிசி, சர்க்கரை, கோதுமை, சிமெண்ட், நிலக்கடலை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள பலவகைப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவிர, அத்தியாவசியப் பண்டங்களைப் பொது மக்களுக்கு விநியோகம் செய்வது சரியாக நடைபெற்று வருகிறதா என்பதைக் கண்காணிப்பதிலும் உணவு பொருள் வழங்கு துறையினருக்கு இப்பிரிவு உதவி வருகிறது.



58. சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், மற்றும் சேலம் ஆகிய 6 நகரங்களில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் கீழ் நடைபெறும் குற்றங்களை விசாரிக்கப்பதற்காகவே, சிறப்பு நீதிமன்றங்கள் தனியாக 1—9—1982 முதல் இயங்கி வருகின்றன.

59. 1983 ஆம் ஆண்டு 1,221 வழக்குகளை இப்பிரிவு பதிவு செய்தது. இவைகளில் பதுக்கலுக்காக 546 வழக்குகள், கள்ளக் கடத்தலுக்காக 323 வழக்குகள், கள்ளச் சந்தையின் கீழ் 71 வழக்குகள், மற்றும் 281 இதர வழக்குகளும் உள்ளடங்கும்.

60. பதிவு செய்யப்பட்ட 1,221 வழக்குகளில், 98 வழக்குகளில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில், 25-வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டன. 3 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டன. 70 வழக்குகள் இன்னும் விசாரணையில் உள்ளன. 121 வழககுகளில் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 797 வழக்குகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், சென்னை நகர துணை ஆணையாளர்களிடமும் விசாரணையில் உள்ளன.

61. 1983 ஆம் ஆண்டில் ரூ. 1.28 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் ரூ. 29.93 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் அரசுக்குப் பறிமுதல் செய்யப்பட்டன. மற்றும் 167 லாரிகள் 12 வேன்கள், 5 டேங்கர்கள், 2 டிராக்டர்கள், 3 கார்கள் உள்பட ரூ. 2 கோடி மதிப்புள்ள மொத்தம் 264 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

62. பெட்ரோலியம் பொருட்களில் அமைப்பாக நடந்துவந்த பல்வேறு குற்றங்களை மே 1983-ல் கண்டுபிடித்தது இப்பிரிவின் சாதனையாகும். இப்பிரிவு பல்வேறு திடீர் சோதனைகளைச் செய்து, 8,820 லிட்டர் டீசல், 600 லிட்டர் பெட்ரோல், 10,650 லிட்டர் மண்ணெண்ணெய் 2,600, லிட்டர் கறுப்பு எண்ணெய் (Black Oil) மற்றும் 150 லிட்டர் சோப் எண்ணெய் (சுமார் ரூ. 70,000 மதிப்புள்ளவை) கைப்பற்றியது, மற்றும் 19 நபர்கள் கைது செய்யப்பட்டனர். தவிர, 27,000 லிட்டர் டீசல், 24,000 லிட்டர் பெட்ரோல் ஒரு காலியான லாரி மற்றும் ஒரு பியகார்க் (மொத்த மதிப்பு ரூ. 14 லட்சம்) கலப்படம் மற்றும் திருட்டு குற்றங்களில் ஈடுபட்டிருந்த போது பிடிக்கப்பட்டன. மேற்கூறிய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

## VII அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

63. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தினை மத்திய அரசு 1970-ல் அறிவித்தது. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கினால், கூடுதல் அரிசி கண்டுமுதல், குருணை தவிர்ப்பு, நல்ல தரமுள்ள தவிடு பெறுதல் ஆகிய நன்மைகளை அடையலாம். தேவையற்ற தீட்டுதல் இம்முறையில் தவிர்க்கப்படுவதால், நல்ல சத்துள்ள அரிசி கிடைக்கிறது. நல்ல தரமுள்ள தவிட்டினை உபயோகித்து விலை மதிப்புள்ள சமையல் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. அரைவை ஆலைகளில் தயாரிக்கப்படும் உமியை அடுப்புகளை எரிக்கப் பயன்படுத்தலாம் என்பதால், வேகவைப்பதற்கான செலவு கணிசமாக குறைகிறது.

64. தமிழ்நாட்டில் 17,005 அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றில் 16,959 ஆலைகள் ஒற்றை அல்லர் ஆலைகள். மீதமுள்ளவை அல்லர், அல்லர் மற்றும் ஷெல்லர், ஷெல்லர் வகையைச் சேர்ந்தவை. எல்லா வகையான அரிசி ஆலைகளுக்கும் நவீனமயமாக்க வேண்டிய காலக்கெடு 1984, ஜூலை 31-ம் தேதியாகும், இதுவரை 381 அல்லர் மற்றும் ஷெல்லர் மல்டிபிள அல்லர் ஷெல்லர் ரக ஆலைகளும் 1,078 ஒற்றை அல்லர் ஆலைகளும் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

65. நவீனமயமாக்கும் திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய அரசு மாநிலத்திலுள்ள ஒற்றை அல்லர் அரிசி ஆலைகளை நவீனமயமாக்க, ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | வழங்கப்பட்டுள்ள தொகை. |
|---|---|
| | ரூபாய். |
| (1) ஒவ்வொன்றும் ரூபாய் 10,000 வீதம் 15 செய்முறைப் பிரிவுகள் அமைக்க. | 1,50,000 |
| (2) ரூ. 10,000 வீதம் 10 கருத்தரங்குகள் நடத்த | 1,00,000 |
| (3) 450 அரிசி ஆலைகளுக்கு மான்யம் வழங்குவது | 22,50,000 |
| மொத்தம் .. | 25,00,000 |



66. மேலே இனம் 3-ல் உள்ள மான்யத்தொகையில் நவீனமயமாக்கத் தேவையான இயந்திரங்கள் வாங்கும் செலவில் 50 விழுக்காடு அளவினை மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடு பணத்தை அரிசி அரைவை ஆலை உரிமையாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் ஏற்கவேண்டும் அல்லது வங்கி அல்லது பிற நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுக்கொள்ள வேண்டும்.

67. மத்திய அரசு இதுவரை 15 செய்முறைப் பிரிவுகள் அமைக்கவும் 6 கருத்தரங்குகள் நடத்தவும் ரூ. 2,10,000 தந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டச் செயலாக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. செய்முறைப் பிரிவுகள் அமைப்பதற்கான இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இதுவரை 5 கருத்தரங்குகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டுள்ளன :—

| மாவட்டத்தின் பெயர். | கருத்தரங்கு நடந்த நாள் |
|---|---|
| தென்னார்க்காடு .. .. .. | 21—10—1983 |
| மதுரை .. .. .. | 20—11—1983 |
| வடஆர்க்காடு .. .. .. | 27—12—1983 மற்றும் 28—12—1983 |
| செங்கற்பட்டு .. .. .. | 29—1—1984 |
| பெரியார் .. .. .. | 17—2—1984 |

68. இக்கருத்தரங்குகளில் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நவீனமயமாக்குவதினால் ஏற்படும் நன்மைகள் விளக்கிக் கூறப்படுகின்றன. இதனால் அவர்கள் இத்திட்டத்தை மேற்கொள்ளச் செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. இவ்வரசு இத்திட்டத்தை செயல்படுத்தி இதன்மூலம் கிடைக்கும் முழுநன்மைகளையும் அடைய வழிவகை செய்யும்.

## VIII. விலைவாசி நிலைமை.

அரிசி விலை :—

69. தமிழகத்தில் பெரும்பாலும் மக்கள் அரிசி உணவையே சாப்பிடுகின்றனர். வெளிச் சந்தையில் சாதாரண ரக அரிசியின் சில்லறை விலை இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 1 கிலோ ரூ. 2.60 லிருந்து ரூ. 4.10 வரை இருந்தது. கடந்த ஆண்டு அதே காலத்தில் சாதாரண ரக அரிசியின் விலை ஒரு கிலோ

ரூ. 2.40 லிருந்து ரூ. 4.20 வரை இருந்தது. இந்த ஆண்டு விலை உயர்வுக்கு காரணம் தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக நெல் விளைச்சல் கணிசமாக பாதிக்கப்பட்டதாகும். ஆனால் வெளிச்சந்தையில் அரிசி கிடைக்கவில்லை என்ற புகார் கள் இல்லை. தமிழகத்தில் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்ட தால் வெளி மாநிலங்களிலிருந்து அதிக அளவில் அரிசியை கொண்டு வந்து விற்க தனியார் வியாபாரிகள் ஊக்குவிக்கப் பட்டனர்.

**புஞ்சை தானியங்கள்:**

70. பிப்ரவரி 1984-ல், சோளம், கம்பு, ராகி, போன்ற புஞ்சை தானியங்கள் சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.70 லிருந்து ரூ. 2.60 வரை நிலவி வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இவற்றின் விலை ரூ. 1.55 லிருந்து ரூ. 2.25 வரை இருந்தது. இந்த விலை உயர்வுக்கு காரணம் பருவ மழை தவறியதன் காரணமாக சிறு தானியங்களின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது தான். வெளிச் சந்தையில் விலை ஏற்றம் காணப்பட்டபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ராகியை வெளிச் சந்தையில் வாங்கி 1 கிலோ ரூ. 1.70-க்கு நியாயவிலைக் கடை களின் மூலம் விநியோகம் செய்தது.

**கோதுமை:**

71. கோதுமையைப் பொறுத்தவரை தமிழகத்தின் தேவைக்கு வடமாநிலங்களிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. வெளிச் சந்தையில் பிப்ரவரி 1984-ல் கோதுமையின் சில்லரை விலை 1 கிலோ ரூ. 2.50 என்ற அளவில் இருந்தது. கடந்த ஆண்டு 1 கிலோவின் விலை ரூ. 2.70.

**பருப்பு வகைகள்:**

72. பருப்பு வகைகளைப் பொறுத்தவரை தமிழகம் ஒரு பற்றாக்குறை மாநிலமாகும். நம்முடைய ஓராண்டு தேவை ஆறு லட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தின் மொத்த உற்பத்தி சுமார் 65,000 டன்களாகும். எனவே, மீதி 5.35 லட்சம் டன்கள் பருப்பு வகைகளுக்கு வட மாநிலங்களான ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரம் மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங் களைத்தான் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

துவரம் பருப்பைப் பொறுத்தவரையில் பிப்ரவரி 1984-ல சராசரி சில்லரை விலை 1 கிலோ ரூ. 8.05 ஆக இருந்தது. சென்ற ஆண்டில் சில்லரை விலை 1 கிலோ ஒன்றுக்கு ரூ. 6.15 ஆக இருந்தது.



உளுத்தம்பருப்பின் சராசரி சில்லரை விலை பிப்ரவரி 1984-ல் கிலோ ஒன்றுக்கு ரூ. 6.75 ஆக இருந்தது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ. 5.25 ஆக இருந்தது.

பச்சைப் பருப்பின் சில்லரை விலை 1 கிலோ ரூ. 6.05 ஆக இருக்கிறது. இது கடந்த ஆண்டு ரூ. 4.65 ஆக இருந்தது. பிப்ரவரி 1984-ல் கடலைப் பருப்பின தற்போதைய சராசரி சில்லரை விலை ஒரு கிலோ ரூ. 5.25 ஆக இருந்தது. கடந்த ஆண்டு இதன் விலை 1 கிலோ ரூ. 3.65 ஆக இருந்தது. இவ்வாறு அனைத்து பருப்பு வகைகளிலும் விலைகளில் ஏற்றம் காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உற்பத்தியாகும் வட மாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்த காரணத்தினால், அம்மாநிலங்களிலிருந்து வரத்து மிகவும் குறைவாக உள்ளது. மேலும், உற்பத்தியாகும் மாநிலங்களி லேயே விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் தமிழகத் திலும் பருப்பு வகைகளின் விலைகள் அதிகமாக உள்ளன. தமி ழகத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் துறையினர் தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். தமி ழகத்தில் நமது தேவையின் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்கும் வரை, பிற மாநிலங்களைத் தான் நாம் நம்பியிருக்க வேண்டி யுள்ளது.

**வெளிச் சந்தை சர்க்கரை:**

73. பிப்ரவரி 1984-ல் வெளிச் சந்தையில் சர்க்கரையின் சில்லரை விலை ஒரு கிலோ ரூ. 4.60 லிருந்து ரூ. 5.00 வரை நிலவி வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் அதன் விலை ரூ. 4.20 லிருந்து ரூ. 4.70 வரை இருந்தது. 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது, 1982-83-ம் ஆண்டில் கரும்பு உற்பத்தி சுமார் 22 விழுக்காடு குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வெளிச் சந்தை சர்க்கரையை சர்க்கரை ஆலைகள் விற்பதற்கு மத்திய அரசு அனுமதிக்கும் அளவைப் பொறுத்தே வெளிச் சந்தையின் சர்க்கரை விலை அமையும்.

**சமையல் எண்ணெய்:**

74. நிலக்கடலைப் பயிர் உற்பத்தியைப் பொறுத்தவரை தமிழகம் சாதாரண ஆண்டில் தன் தேவைக்குப் போதுமான அளவிற்கு உற்பத்தி செய்யும் மாநிலமாகும். ஆனால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு நிலக்கடலை மற்றும் நிலக்கடலைப் பொருட்களை எடுத்துச் செல்ல தடை ஏதும் இல்லையென்ற காரணத்தினால், தமிழகத்தில் உற்பத்தி யாகும் நிலக்கடலை முழுவதும் நம் தேவைக்கே பயன்படுகிறது

எனக் கூற முடியாது. வெளி மாநிலங்களில் விலை உயர்ந்துக் காணப்படும்போது இங்கிருந்து அம்மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அதே போன்று தமிழகத்தில் நிலவும் விலையை அனுசரித்து, மற்ற மாநிலங்களிலிருந்து கடலை எண்ணெய் வரக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

1982-83 ஆம் ஆண்டில் குளிர்கால பயிரின் உற்பத்தி, 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 32 விழுக்காடு குறைவாக உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. கோடை மற்றும் குளிர் காலம் ஆகிய இரு பருவ காலங்களில் நிலக்கடலையின் உற்பத்தி, 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது, 1982-83 ஆம் ஆண்டில் 22 விழுக்காடு அளவிற்கு உற்பத்தி குறைந்துள்ளது மதிப்பிடப்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் தேவை, உற்பத்தி, பற்றாக்குறை, கீழ்க்கண்ட வாறு அமைந்துள்ளன :—

| எண்ணெய் வகை. | ஆண்டுக்கான தேவை. | ஆண்டு உற்பத்தி. | பற்றாக் குறை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (இலட்சம் டன்களில்.) | | |
| 1 கடலை எண்ணெய் .. | 1.74 | 1.44 | 0.30 |
| 2 நல்லெண்ணெய் .. | 0.96 | 0.59 | 0.37 |
| 3 தேங்காய் எண்ணெய் | 0.30 | 0.15 | 0.15 |
| மொத்தம் .. | 3.00 | 2.18 | 0.82 |

கடலை எண்ணெயைப் பொறுத்த வரையில் பிப்ரவரி 1984 இல் 1 கிலோ ரூ. 14.30 முதல் ரூ. 16.70 வரை இருந்து வந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 1 கிலோ ரூ. 13.40 முதல் ரூ. 16.35 வரை இருந்தது. நல்லெண்ணெய்யின் விலை பிப்ரவரி 1984 இல் 1 கிலோ ரூ 17.50 முதல் ரூ. 20.00 வரை நிலவி வந்தது. நல்லெண்ணெய்யைப் பொறுத்தவரையில், தமிழகம், ஆந்திரம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களையே தன் தேவைக்கு நம்பியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் என் உற்பத்தி 1981-82 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 29 விழுக்காடு அள விற்கு குறைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.



தேங்காய் எண்ணெய்யின் தேவைக்கு தமிழகம் கேரள மாநிலத்தையே முழுவதும் நம்பியுள்ளது. ஆனால், வறட்சியின் காரணமாகவும், தென்னை மரங்களுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாகவும் அம்மாநிலத்திலேயே விலை மிகவும் உயர்ந்துள் ளது. அதன் காரணமாக தமிழகத்திலும் தேங்காய் எண்ணெய் யின் விலை உயர்ந்து காணப்படுகிறது.

75. மிளகாய் வற்றலின் விலை பிப்ரவரி 1983 இல் 1 கிலோ ரூ. 6.00லிருந்து ரூ. 11.00 வரையில் இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இதன் விலை ரூ. 7.00லிருந்து ரூ. 12.00 வரை இருந்தது. தற்போது வெளிச் சந்தையில் புதிய சரக்கு வரத்து வருவதன் காரணமாக அதன் சில்லரை விலை கணிசமான அளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

76. புளியைப் பொறுத்தவரையில் சில்லரை விலை 1 கிலோ விற்கு ரூ. 3.50 முதல் ரூ. 9.00 வரை பிப்ரவரி 1984-ல்இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூ. 5.00-லிருந்து ரூ. 8.50 வரை நிலவி வந்தது. தனியாவின் சில்லரை விலை 1 கிலோவிற்கு ரூ. 5-லிருந்து ரூ. 7.00 வரை இருந்தது. கடந்த ஆண்டு இதன் விலை ரூ. 4.75-லிருந்து ரூ. 7.50 ஆக இருந்தது.

77. அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளில் ஏற்றம் காணப்படும் போது, உணவுத் துறை அலுவலர்கள் அந்த பொருட் களை வாணிபம் செய்யும் வர்த்தக சங்கங்களையும், வர்த்தகர் களையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்கும் வகையில் வழி செய்யவும், நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றனர்.

நாம் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலமாக பாமாயின் எண்ணெய்யை விநியோகம் செய்கின்ற காரணத்தால் வெளிச் சந்தையில் சமையல் எண்ணெய்யின் விலை ஏற்றத்தை நிதானத்திற்குள்ளும் கட்டுப்பாட்டிற்குள்ளும் வைத்துக் கொள்ள முடிந்தது.

மேலும், பல்வேறு வர்த்தக கட்டுப்பாடு ஆணைகளை செயல் படுத்துவதன் மூலமும் வர்த்தகர்கள் ஒரு சமயத்தில் தாங்கள் வைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப் பட்டிருப்பதாலும் உணவுப்பொருள் வழங்குதுறை அலுவலர்களும் உணவு வழங்குதுறை குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களும் வியாபாரிகளின் வியாபார தலங்களைப் பார்வையிட்டு வருவ தாலும், அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைக்காமல் கண்காணிக்கப்படுகிறது.

[1984 ஏப்ரல் 11

78. அண்மையில், வெளிச் சந்தையில் தேயிலையின் விலை மிகவும் உயர்ந்து காணப்பட்டதையொட்டி, தேயிலை வாணிபம் செய்யும் முக்கிய நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து உணவுத்துறை செயலாளர் அவர்களுடன் கலந்துரையாடினார். 1 கிலோ தேயிலை ரூ. 30-க்கு அதிகப்படாமல் விற்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். உணவு விடுதி உரிமையாளர்களுடன் உணவுத் துறை அதிகாரிகள் அடிக்கடி பேச்சு வார்த்தைகள் நடத்து வருகிறார்கள். இதன் பயனாக தமிழ்நாட்டில் உணவுப் பண்டங்களின் விலை ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கிறது என்றால் மிகையாகாது. அரசு இதனை கவனமாக கண்காணித்து வரும். உணவு விடுதி உரிமையாளர்கள் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏழை மக்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்களை ஒன்று ரூ. 1 என்ற விலையில் விற்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதனால் ஏழை மக்கள் ஒரு வேளையாவது மலிவான உணவருந்தும் வாய்ப்பை உருவாக்கலாம் என்று நம்புகிறோம்.

## IX. நுகர்வோர் பாதுகாப்பகம்

நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் பல நாடுகளில் வலுவாகக் காலூன்றி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. உற்பத்தியாளர், வணிகர் ஆகியோருடன் நுகர்வோருக்குள்ள உரிமைகளை நிலைநாட்டும் ஒரு இயக்கமே நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம். நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிக்க இந்த அரசு சில முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. நுகர்வோர் நலன் காக்க தலைமைச் செயலக அளவில் உணவுத் துறை செயல்படும். இத்துறையின் பெயரும் "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என மாற்றப்படுகிறது.

2. துறைத்தலைவர் அளவில் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் "உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர்" என அழைக்கப்படுவார்.

3. மாவட்ட அளவில் மாவட்ட வழங்கு அலுவலர் நுகர்வோர் பாதுகாப்புக்கு பொறுப்பேற்பார்.

4. மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றில் மாதர் சங்கங்கள் குழு அளவில் ஈடுபட ஊக்குவிக்கப்படும்.



1984 ஏப

5. இந்த இயக்கத்திற்கு சட்ட பூர்வ ஆதரவு தர இந்த அரசு உத்தேசித்துள்ளது.

## X. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழக
79. தமிழ்நாடு நுகர்பொருள் சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். இது
அரசுக்கு முழுவதும் ஜூலை மாதம் முதற் கொண்டு செயல்பட்டு
1972-ஆம் ஆண்டு தமிழக அரசின் முகவராக நெல்
வருகிறது இந்த நிறுவனம் கொள்முதல் செய்த நெல்லை அரிசி
கொள்முதல் செய்வதும், சேமித்து வைத்து பொது விநி
யாக்கி அதைக் கிடங்குகளில் சமூக நலத் திட்டங்களுக்கும்
யோகத்திற்கும் அரசின் மற்ற அதுமட்டுமின்றி தமி
வழங்கி வரும் பணியில் ஈடுபட்டுள்ளது. மத்திய அரசு ஒதுக்கீடு
முக்கிற்கு மத்திய தொகுப்பிலிருந்து பாமாயின்
செய்யாத அரிசி, லெவி கோதுமை, லெவி சர்க்கரை, கழகத்திலிருந்தும்,
ஆகிய பொருட்களை இந்திய உணவு வர்த்தக நிறுவனங்களிலிருந்தும்
ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போன்ற பொறுப்பை ஏற்றுள்ளது.
எடுத்து அவற்றை விநியோகம் செய்யும் திட்டத்தின் கீழ்
கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் தர்மபுரி ஆகிய
தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கடைகளை நடத்தி
மாவட்டங்களில் 4,277 நியாய விலைக் 618 நியாய விலைக்
வருகின்றது. தவிர, நகரப் பகுதிகளிலும்
கடைகளை நடத்தி வருகின்றது.

தமிழ்நாடு நுகர் பொருள்
80. தமிழக அரசின் முகவராக கொள்முதல் செய்கின்றது.
வாணிபக் கழகம நெல், அரிசியை கொள்முதல் நிலையங்
வர்த்தக லெவி திட்டத்தின் கீழ் லெவி செலுத்தும் லெவியை
களை ஏற்படுத்தி வர்த்தகர்கள் அரசுக்கு ஏகபோக கொள்
பெற்று வருகின்றது. அதுமட்டுமின்றி அரசு தென்னாற்காடு,
முதல் திட்டம் அமலில் இருக்கும தஞ்சாவூர், மாவட்டங்களில் நேரடி
திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய விவசாயிகளிடமிருந்து
கொள்முதல் நிலையங்களை திறந்து மாவட்டத்தில் ஏறக்
நெல்லை வாங்குகின்றது. தஞ்சாவூர் கொள்முதல் நிலையங்களை
குறைய 500-க்கு மேற்பட்ட நேரடி மற்ற மாவட்டங்களிலும்,
திறந்து செயல்படுத்தி வருகின்றது. நிர்ணயித்துள்ள கொள்
வெளிச்சந்தையில் நெல்லின் விலை அரசு அதனால் விவசாயிகள்
முதல் விலைகளுக்கு கீழாக சரியுமானால் ஆதரவு திட்டத்தின்
பாதிக்கப்படாமல் தடுக்கும் முறையில் விலை திறந்து அவற்றின்
கீழ் நேரடி கொள்முதல் நிலையங்களைத் விலைகளில் விவசாயி
மூலம் அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் வாங்க ஏற்பாடுகள்
கள் தாமாக முன்வந்து அளிக்கும் நெல்லை பட்டத்தில் நேரடி
செய்துள்ளது. 1983-ஆம் ஆண்டு குறுவைப் டன்கள் அரிசிக்
கொள்முதல் நிலையங்களில் 1.13 இலட்சம்

[1984 ஏப்ரல் 11

கிடான நெல்லையும், லெவி திட்டத்தின் கீழ் 2,458 டன்கள் அரிசியும் ஆகமொத்தம் 1·16 இலட்சம் டன்கள் அரிசிக்கிடான நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்துள்ளது. சம்பா 84 பட்டத்தில், 6—3—1984 வரை 3 இலட்சம் அரிசி டன் களுக்கிடான நெல்லையும் அரிசியையும் கொள்முதல்செய்துள்ளது.

81. குறுவை நெல் சாதாரணமாக வட கிழக்கு பருவ காற்று மழை தொடங்கும் நேரத்தில் அறுவடைக்கு வருகின்ற காரணத் தினால் ஈரப்பதம் அதிகமாக இருக்கும். ஈரமாக உள்ள நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதில் வர்த்தகர் தயக்கம் காட்டு வார்கள் அல்லது விலைகளை மிகவும் குறைத்து வாங்குவார்கள். ஆனால், இந்நிறுவனம் 25 விழுக்காடு வரை ஈரமுள்ள நெல்லை யும் விவசாயிகளிடமிருந்து வாங்கியது. எதிர்பாராத முறையில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மழை பெய்த காரணத்தினால் நெல்லில் ஈரப்பசை மிகவும் அதிகமாக இருந்தது. இதன் காரண மாக விவசாயிகள் பாதிக்கப்பட கூடாது என்ற ஒரு அக்கறை யினால் அந்த நெல்லையும் வாங்கலாமென்று மாநில அரசு அனு மதித்ததின் பேரில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஈர நெல்லையும் விவசாயிகளிடமிருந்து நேரடி கொள்முதல் நிலையங்களில் வாங்கியது.

82. மத்திய அரசு தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யும் அரிசியை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தான் அரசின் சார்பாக எடுத்து வருகின்றது. 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதற் கொண்டு அரசு மத்திய தொகுப்பி லிருந்து தமிழ்நாட்டிற்கு பிப்ரவரி 1984 வரை 3,20,000 மெட்ரிக் டன்கள் அரிசியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. அந்த அரிசி முழுவதையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் எடுத்து பொது விநியோகத்திற்கு பயன்படுத்தியுள்ளது.

83. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததின் காரணமாக தமிழகத்தில் நெல் விளைச்சல் கணிசமாக பாதிக்கப்பட்டது. பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் அரிசியை வெளிச்சந் தையில் கொள்முதல் செய்ய அரசு அனுமதித்ததின் பேரில் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து பஞ்சாப், அரியானா, ஆந்திரம், மத்திய பிரதேசம், உத்திரப்பிரதேசம், டெல்லி போன்ற பிற மாநிலங்களில் 1·52 இலட்சம் டன்கள் அரிசியை வாங்கியது. இதன் மதிப்பு சுமார் ரூ. 50 கோடியாகும்.

84. பொது விநியோக திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு குடும்ப கார்டுகளுக்கு வழங்குவதற்கு தேவைப்படும் அரிசியை இந்த நிறுவனம் தான் கூட்டுறவு சங்கங்



1984 ஏப்ரல் 11]

களுக்கும், இதர நிறுவனங்களுக்கும் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் வறட்சி நிலவிய காரணத்தினால் பொது விநியோகத் தேவை மிகவும் அதிகரித்தது. இந்த ஆண்டில் மொத்தத்தில் 8.66 இலட்சம் டன்கள் அரிசியை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகத்திற்காக இந்த நிறுவனம் வழங்கி யுள்ளது.

85. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அரசாங் கத்தின் மொத்த வியாபார முகவராக செயல்பட்டு வருகின்ற போதிலும், நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றது. கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் திட்டத்தின் கீழ் ஏற் கெனவே குறிப்பிட்டுள்ளது போல் 4,277 நியாய விலைக் கடை களை நடத்தி வருகின்றது. இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்ப கார்டுகளுக்கு வழங்கும்பொருகள் தவிர மற்ற இன்றியமையாப் பொருட்களையும் இந்த நிறுவனம் விற்பனை செய்து வருகின்றது. இந்த கிராம நியாய விலைக் கடைகளின் மொத்த விற்பனை 1980—81 ஆம் ஆண்டில் ரூ.20.22 கோடியாக வும் 1981—82-இல் ரூ. 37.97 கோடியாகவும், 1982—83-இல் ரூ. 32.50 கோடியாகவும் இருந்தது.

86. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் நெல்லை அரைவை செய்து அரிசியை இட்டங்களில் வைத்திருந்து பொது விநியோகத்திற்கு வழங்குகின்றது. தமிழ கத்திற்குள் அரசு நிர்ணயித்துள்ள விலைகளில் கொள்முதல் செய்த நெல்லிலிருந்து தயாரிக்கப்படும் அரிசியின் அடக்க விலைகள் குவிண்டாலுக்கு கீழ்க் கண்டவாறு அமைகின்றது.

| | ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 271.55 |
| சன்ன ரகம் .. .. .. .. | 278.55 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. | 284.95 |

ஏகபோக கொள்முதல் திட்டத்தின்கீழ் வாங்கும் நெல்லுக்கு கொள்முதல் விலைகளுக்கு மேலாக ரூ. 35 கூடுதலாக கொடுக் கின்ற காரணத்தினால் அப்பகுதிகளில் கொள்முதல் செய்யும் நெல்லிலிருந்து தயாரிக்கப்படும் அரிசியின் அடக்க விலைகள் குவிண்டாலுக்கு கீழ்க்கண்டவாறு அமைகின்றது :—

| | ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 329.60 |
| சன்ன ரகம் .. .. .. .. | 336.10 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. | 342.50 |

மத்திய தொகுப்பிலிருந்து இந்திய உணவுக் கழகம் கீழ்க்கண்ட விலைகளில் அரிசியை வழங்குகின்றது :—

| | குவிண்டாலுக்கு ரூ. |
|---|---|
| சாதாரண ரகம் .. .. .. .. | 208 |
| சன்ன ரகம் .. .. .. .. | 220 |
| மிகச் சன்ன ரகம் .. .. .. | 235 |

வெளிச் சந்தையில் இந்த நிறுவனம் வாங்கும் அரிசியின் விலை ஒரு குவிண்டாலுக்கு சராசரி ரூ. 310 முதல் ரூ. 370 என்று அடக்கமாகிறது. ஆனால் நியாய விலைக் கடைகளில் சாதாரண ரக அரிசி ஒரு கிலோ ரூ. 1.75 சன்ன ரக அரிசி ஒரு கிலோ ரூ. 2. மிகச் சன்ன ரக அரிசி ஒரு கிலோ ரூ. 2.15 என்ற விலைகளில் விற்பனை செய்வதால் ஏற்படக்கூடிய இழப்பை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது.

87. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தன்னுடைய நியாய விலைக் கடைகளுக்கும் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் இந்திய உணவு கழகத்திடமிருந்து 2.11 இலட்சம் மெட்ரிக் டன்கள் கோதுமையை எடுத்து அதில் 1.93 இலட்சம் டன்கள் கோதுமையை விநியோகித்துள்ளது. கோதுமை உருளை மாவு ஆலைகளில் தயாரிக்கப்படும் மைதா, ரவை ஆகியவற்றில் 60 விழுக்காடு அளவிற்கு பொது விநியோகத்திற்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தன்னுடைய நியாய விலைக் கடைகளில் குடும்ப கார்டுகளுக்கு வழங்குவதற்கு தேவைப்படும் மைதா, ரவையையும் ரொட்டி தயாரிப்போர் போன்ற மொத்த நுகர்வோருக்கு தேவைப்படும் மைதாவையும் எடுத்து இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 44,261 டன்கள் மைதாவையும், 11,632 டன்கள் ரவையையும் விநியோகம் செய்துள்ளது.

88. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையை தமிழக அரசின் முகவராக இந்த நிறுவனம்தான் கையாள்கிறது. 1983 ஆம் ஆண்டில் 2.28 இலட்சம் டன்கள் சர்க்கரையை இந்த நிறுவனம் சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்துள்ளது. கையிருப்பிலிருந்த சர்க்கரையை சேர்த்து இந்த ஆண்டில் மொத்தத்தில் 2.53 இலட்சம் டன்கள் சர்க்கரையை கூட்டுறவு சங்கங்களுக்கும் தன்னுடைய நியாய விலைக் கடைகளுக்கும் பொது விநியோகத்திற்கு வழங்கியுள்ளது. வெளிச்



சந்தையில் சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் த
வெளிச் சந்தை சர்க்கரையையும் 1 கிலோ ரூ. 4.75-க்கு இந்
நிறுவனம் வழங்கி வருகிறது.

89. மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் பாமா
லின் எண்ணெயை இந்நிறுவனம் தான் கையாள்கிறது.
சென்னை துறைமுகத்தில் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிட
மிருந்து அந்த எண்ணெயை எடுத்து பல்வேறு மாவட்டங்களுக்
கும் டேங்கர்கள் மூலம் அனுப்பி கூட்டுறவு நிறுவனங்களுக்கும்
நியாய விலைக் கடைகளுக்கும், முதலமைச்சரின் சத்துணவு
திட்டத்திற்கும் வழங்கி வருகின்றது.

90. மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் லெவி சிமெண்டின்
ஒரு பகுதியை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்
கையாள்கிறது. இந்நிறுவனம் எடுக்கும் சிமெண்டை பெரும்பா
லும் பர்மிட்தாரர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது. 1982
ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 38,085 மெ. டன்களை விற்
றுள்ளது.

91. தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமூகநலத் திட்டங்
களில் இந்நிறுவனம் பெரும்பங்கு கொண்டுள்ளது. முதலமைச்
சரின் சத்துணவு திட்டத்திற்கு தேவைப்படும் அரிசி, பருப்பு,
சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களை இந்நிறுவனம்தான்
வழங்கி வருகின்றது. ஒரு மாதத்திற்கு சுமார் 18,000 டன்கள்
அரிசியையும் 2,500 டன்கள் பருப்பு வகைகளையும் 900 டன்கள்
சமையல் எண்ணெய்யையும் சத்துணவு தயாரிப்பதற்காக வழங்கி
வருகின்றது. இந்நிறுவனம் 4 மாவட்டங்களில் சத்துணவு மையங்
களுக்கு இந்த பொருட்களை எடுத்துச் சென்று வழங்கும்
பொறுப்பை ஏற்றுள்ளது. பிற மாவட்டங்களில் உள்ள சத்
துணவு மையங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் பொருள்களை எடுத்
துச் சென்று வழங்குகின்றது. அவற்றிற்கு தேவைப்படும்
பொருள்களை இந்நிறுவனம்தான் வழங்கி வருகின்றது. சத்
துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் பருப்பு வகைகளை இந்
நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது. மொத்தத்தில் ரூ. 15·12
கோடி மதிப்புள்ள 32,649 டன்கள் பருப்பு வகைகளை இந்நிறு
வனம் 1983 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்துள்ளது.

காவல் துறை, தீயணைப்புத் துறையிலுள்ள அலுவலர்களுக்கு
மான்ய உதவி திட்டத்தின்கீழ் உணவு பொருள்கள் வழங்கும்
திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது. அதே
போன்று சமுதாயத்தில் வயது உற்றோருக்கும், வயதானவர்
களுக்கும் வழங்கும் அரிசியை இந்த நிறுவனம்தான் வழங்கி
வருகின்றது.

92. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கொள்
முதல் செய்யும் நெல்லை அரைத்து அரிசியாக்க வேண்டியுள்
ளது. இந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக 13 நவீன அரிசி
அரைவை ஆலைகள் உள்ளன. இவற்றில் 6 ஆலைகள்
தஞ்சாவூர் மாவட்டத்திலும், மீது ஆலைகள் பிற மாவட்டங்களி
லும் அமைந்துள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்
கழகம் இந்த நவீன அரிசி அரைவை ஆலைகளை ஏற்றுக்கொண்ட
பின்பு அவற்றை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைக் காரணமாக
1981-82 ஆம் ஆண்டில் 1.10 லட்சம் டன்களிலிருந்து 1.45 லட்
சம் டன்களாக அரைவைத்திறன் உயர்ந்துள்ளது. அதுமட்டு
மின்றி 1977 ஆம் ஆண்டில் உமியைக் கொண்டு செயல்படும்
உலைக்கலன்களை அமைத்ததன் காரணமாக உலைக்கலன்
எண்ணெய்யை உபயோகப்படுத்துவது தவிர்க்கப்பட்டது. அதன்
காரணமாக 1977 ஆம் ஆண்டு முதல் 1983 டிசம்பர் மாத இறுதி
வரை இந்த நிறுவனத்திற்கு 3.14 கோடி ரூபாய் சேமிப்பு ஆகி
யுள்ளது. இந்த நவீன அரிசி அரைவை ஆலைகள் தொடர்ந்து மின்
வசதி பெறும் வகையில் தனி வசதிகள் 9 அரைவை ஆலை
களில் 1983–84 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
1982–83 ஆம் ஆண்டில் அரிசி அரைவை ஆலைகளில் 1.37
லட்சம் டன்கள் நெல் அரைவை செய்யப்பட்டுள்ளது.
1983–84 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரை 1.50 லட்சம்
டன்கள் நெல் அரைவை செய்யப்பட்டுள்ளது. 1982–83 ஆம்
ஆண்டோடு ஒப்பிடும்போது ஏறக்குறைய 37,000 டன்கள் அள
விற்கு கூடுதலாக நெல் அரைவை செய்யப்பட்டுள்ளது.

ரூ. 200 லட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி
வட்டத்தில் எருக்கூரில் ஒரு நவீன அரிசி ஆலை அமைப்பதற்கு
திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலை அமைக்கப்பட்டபின்
அரிசி தயாரிப்பதோடு, அரிசி தவிட்டிலிருந்து சமையல் எண்
ணெய் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நவீன அரிசி
ஆலையில் நாளொன்றுக்கு 100 மெ. டன்கள் நெல் அரைவை
செய்யப்படும். 15 முதல் 20 டன்கள் எண்ணெய்யை அரிசி
தவிட்டிலிருந்து எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு
எடுக்கப்படும் எண்ணெய்யிலிருந்து நாளொன்றுக்கு 5 டன்கள்
அளவிற்கு தவிடு எண்ணெய் சுத்திகரிப்பு செய்யப்படும். இந்த
ஆலையை அமைப்பதற்காக தேவைப்படும் நிலத்தை கையகப்
படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

93. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரிசி,
கோதுமை, சர்க்கரை போன்ற அனைத்து பொருள்களையும்
சேமித்து வைத்து விநியோகம் செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தினால்
இதற்குத் தேவையான கிட்டங்கிகளை அமைத்து
வருகின்றது. இதுவரையில் 13 நவீன அரைவை அரிசி ஆலைகளில்
1,51,000 டன்கள் அளவிற்கு சேமிப்பு கிட்டங்கிகளை ரூ. 3.59



கோடி செலவில் கட்டியுள்ளது. அதுமட்டுமின்றி 43 வட்ட
தலைமையகங்களில் 3.34 கோடி ரூபாய் செலவில் 1.25 லட்சம்
டன்கள் அளவிற்கு சேமிப்பு கிட்டங்கிகளை கட்டியுள்ளது. தற்
போது 19 இடங்களில் 44,350 டன்கள் சேமிப்பு வசதி கொண்ட
கிட்டங்கிகள் ரூ.180 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

94. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இறக்குமதி
செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யை கையாள்கிறது. இதை
சென்னையிலிருந்து மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் எடுத்துச்
சென்று விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் மாவட்டங்
களில் இந்த எண்ணெய்யை சேமித்து வைக்க வசதியில்லை.
எனவே, சென்னை நகரத்தில் 5 இடங்களிலும், மற்ற மாவட்
டங்களில் 15 இடங்களிலும் சுமார் 4,000 டன்கள் அளவுக்கு
சமையல் எண்ணெய்யை எடுத்து வைக்கக் கூடிய சேமிப்பு
வசதியை சுமார் ரூ. 72 லட்சம் செலவில் அமைப்பதற்கு
திட்டம் தீட்டப்பட்டு 12 இடங்களில் 1,400 டன்கள் அளவுக்கு
சேமிப்பு வசதியை ஏற்படுத்த வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.
அது மட்டுமின்றி சென்னை துறைமுகத்தில் சமையல் எண்
ணெய்யை சேமித்து வைப்பதற்கு 3,000 டன்கள் சேமிப்பு
வசதியை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதற்கு சென்னை துறைமுக அபிவிருத்தி நிலையத்திற்குள்
நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XI தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

95. தமிழ்நாடு மாநில சேமிப்புக்கிடங்கு நிறுவனம் 1957 ஆம்
ஆண்டு நிறுவப்பட்டு 1958–59 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு
வருகின்றது. இந்நிறுவனம் விஞ்ஞான ரீதியில் விவசாய விளை
பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், உரங்கள் மற்றும் ஏனைய
விளை பொருள்களை தமிழகம் முழுவதும் சேமித்து வைப்பதற்கு
நவீன முறையில் கிடங்குகளை கட்டியுள்ளது. இவற்றில் தனி
நபர்கள், கூட்டுறவு இயக்கங்கள், தமிழக அரசு சார்பு நிறுவனங்
கள், மத்திய அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் இதர தனியார்
நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை நவீன முறையில் சேமித்து
வைக்க உதவி வருகிறது. இந்நிறுவனம், இதன் கிடங்குகளில்
சரக்கு வைப்பவர்களுக்கு உதவியாக சரக்குகளை வாங்கி அடுக்க
ஆவனசெய்து வருகின்றது. இந்நிறுவனம், கூட்டுறவு சங்க கிடங்கு
கள், அரிசி, ஆலை கிடங்குகள், மற்றும் தனி நபர் கிடங்கு
களுக்கு சென்று சரக்குகளுக்கு மருந்து அடித்தல், மற்றும்
புகை மருந்து அடித்தல் போன்ற பணியையும் ஆற்றி வருகின்றது.

96. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 6 கோடி. இந்நிறுவனத்திற்கு 31—3—1983 வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4.41 கோடி. இந்தத் தொகை தமிழக அரசாலும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும் சரிசமமாக செலுத்தப்பட்டு உள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்கான பங்குத் தொகை ரூபாய் நாற்பது லட்சம், இரு பங்குதாரர்களிடமிருந்து சமபங்காக பெறப்பட்டது. இதையும் சேர்த்து செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 4.81 கோடி ஆகின்றது.

97. இந்நிறுவனம் 31—3—1983 வரை 100 கிடங்குகளை 35 இடங்களில் கட்டியுள்ளது. இவற்றின் சேமிப்பு கொள்ளளவு 2.47 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். 1983–84 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மேலும் 31,900 டன்கள் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகளை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முடிவிற்குள் அவற்றில் 17,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 கிடங்குகள் கட்டி முடிக்கப்படும். மீதியுள்ள 5 கிடங்குகளின் கட்டுமானப் பணி தொடங்கப் பெற்று 1984–85-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். இவற்றின் கொள்ளளவு 14,500 மெட்ரிக் டன்கள் ஆகும். 1984–85-ல் 26,100 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட 9 கிடங்குகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டு முடிவில் இந்நிறுவனத்தின் வசமுள்ள கட்டப்பட்ட கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 3.05 லட்சம் மெட்ரிக் டன்களாக இருக்கும். இந்நிறுவனம் 35 இடங்களில் சொந்த கிடங்குகளையும், 20 இடங்களில் வாடகைக் கிடங்குகளையும் நடத்தி வருகின்றது.

98. கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய லாபத்தின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | லாபம் (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|
| 1. 1978–79 .. .. .. .. | 38.63 |
| 2. 1979–80 .. .. .. .. | 22.35 |
| 3. 1980–81 .. .. .. .. | 24.63 |
| 4. 1981–82 .. .. .. .. | 69.31 |
| 5. 1982–83 .. .. .. .. | 9<br>84.58 |



1982–83 ஆம் ஆண்டிற்கான லாப ஈவுத்தொகை செலுத்தப்பட்ட மூலதனமான ரூ. 220.50 இலட்சத்தில் ஆறு சதவிகிதம் என அறிவிக்கப்பட்டு அதற்குரிய தொகை தமிழக அரசுக்கும் மத்திய கிடங்கு நிறுவனத்திற்கும் ரூ. 12.10 லட்சம் வழங்கப்பட்டு விட்டது.

இந்நிறுவனத்தின் 1982–83 ஆம் ஆண்டின் கணக்குகள் தணிக்கைக்கு பின்பு இயக்குநர் குழுவின் முன் 30—8—1983 அன்று வைக்கப்பட்டு பின்பு 26—9—1983 அன்று பங்குதாரர் கூட்டத்தில் வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136254
சென்னை-600 008.